www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தோஸ்த்

தமிழ் உரை

பன்னிரண்டாம் வகுப்பு

(இது ஓர் ஆடியோ - வீடியோ - ஆன்லைன் - டிஜிட்டல் வழிகாட்டி நூல்)

12

ஆன்லைனில் இந்தப் புத்தகத்தை இலவசமாகப் படிக்க
ஸ்கேன் செய்யவும் !

எண்ணமும் எழுத்தும்
தமிழகத் தொழில்நுட்பப் புலவர்க் குழு
TAMILNADU TECHNICAL & DIGITAL SCHOLORS ASSOCIATION

தமிழ்ப்பாடம்

பார்க்கலாம்	படிக்கலாம்	கேட்கலாம்	எழுதலாம்
dhosth.org	ONLINE DIGITAL BOOK	DHOSTH TV YOU-TUBE CHANNEL	examport.in
			EXAM PORT FREE ONLINE MOCK TEST

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

DHOSTH PUBLICATIONS

TUTICORIN-PALAYANKOTTAI-CHENNAI

CONTACT.NO. - 8144447811

PUBLISHERS

SRI.SANKARANARAYANAN & SRI.V. MUTHUKUMAR CHOZHAGAR

ADDRESS	E-MAIL ID- WEBSITE	WHATS APP
SAKTHI COPIER NO.36A, II STREET SUBBIAHPURAM TUTICORIN-628003	dhosthassociation@gmail.com www.dhosth.org www.examport.in	To get the Digital & physical copy of competitive exam materials 6385524257

BANK DETAILS

NAME	DHOSTH ASSOCIATION
BANK NAME	KARUR VYSA BANK
ACCOUNT NO	1202115000014363
IFSC CODE	KVBL00010202
MICR CODE	6270530041

Warning

All Rights reserved. No part of this publication may be reproduced, stored in retrieval system or transmitted, in any form or by any means, without the prior permission in writing of **Dhosth Publications** or as expressly permitted by law, by license or under terms agreed with the appropriate reprographics rights organisation. Enquiries concerning reproduction outside the scope of the above should be sent to the rights department, **Dhosth Publications**. You must not circulate this work in any other form and you must impose this same condition on any acquirer.

Price - Rs. 399/-

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பொதுப்பாயிரம்

அன்பிற்கினிய மாணாக்கர்களே! நீங்கள் நிறைந்த அறிவும் நீடுபுகழும் ஆயுள் வளமும் அதிக மதிப்பெண்களும் பெற்று, சிறந்து விளங்க "தோஸ்த் நிறுவனம்" சார்பாக மனம் நிறைந்த வாழ்த்தையும் பாராட்டையும் முதற்கண் தெரிவிக்கின்றோம். பள்ளிக்கல்வி பயிலும் மாணவர்களின் நிலை உணர்ந்தும், நலன் விரும்பியும், மொழிப்பாடத்தில் அவர்கள் உயர்ந்த நிலை எய்த தலைசிறந்த ஆசிரியர்கள் - தொழில்நுட்ப வழிகாட்டிகள் - வானொலி வர்ணனையாளர்கள் ஆகியோர் இணைந்து கடுமையாக உழைத்ததன் விளைச்சலே இந்நூல், தமிழகத்தில் முதன்முறையாகப் புதிய தொழில்நுட்ப முறையில் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. பெரும் இலக்கியக் கூடங்களில் பாராட்டுகளைப் பெற்றது. பரிசுகளுக்கு இந்நூல் முன்மொழியப்பட்டது. காரணம் இதுவரை வந்த நூல்கள் அனைத்தும் பருப்பொருள் நிலையிலேயே நின்று பாடங்களை உணர்த்த, இந்நூல் மட்டும் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் விளங்குகின்ற பேராற்றலைப் பெற்றுள்ளது. கையடக்கத்தில் கண்டும், காதுகளால் கேட்டும், கைப்பேசியால் தேய்த்தும், இணையதளத்தில் இணைந்தும் இந்தப் பெருநூலைப் பயின்று பயன்பெறலாம் என்பது திண்ணம். இவ்வகையில் இந்நூல் உருவாகக் காரணமாயிருந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நன்றிப் படையல் விரித்துக் காணிக்கையாக்குகின்றோம்.

இந்நூலை நீங்கள் வாங்குவதால் பயன்பெறுவோர்

1. விழிமாற்றுத்திறனாளிகள் (கண்பார்வையற்றோர்)
2. செவிமாற்றுத்திறனாளிகள் (காது கேளாதோர்)
3. உடல் மாற்றுத்திறனாளிகள். (ஊனம் உற்றோர்)
4. மொழிசார்கற்றல் குறைபாடுடையோர்
5. மெல்லக் கற்கும் திறனுடையோர்
6. அன்புமிகு. திருநங்கையர்
7. வீடில்லா மாணவர்கள்
8. H I V / பெரு நோயால் பாதிக்கப்பட்டோரின் பிள்ளைகள்
9. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ளோர்.
10. சீர்திருத்த பள்ளி மாணவர்கள்
11. சிறைச்சாலையில் பொதுத் தேர்வு எழுதுவோர்கள்
12. உண்டி உறைவிடப் பள்ளி மாணவர்கள்
13. ஆதரவற்றோர் பெண்கள் விடுதிகளில் தங்கியுள்ளவர்கள்
14. ஆதரவற்றோர் ஆண்கள் விடுதிகளில் தங்கியுள்ளவர்கள்
15. பள்ளிச் செல்ல இயலா தனித்தேர்வர்கள்
16. இன்னும் பலர்.

இந்நூல் கட்டணமின்றி உங்கள் உதவியால் வழங்க உள்ளதால் வளமான பாரதம் வலிமையான தமிழகம் உருவாக நாம் அனைவரும் இணைந்து நற்செயல் ஆற்றுவோம்!

வாழ்க பாரதம்! **வாழ்க பாரத மக்கள்!**

நன்றியுடன்
தோஸ்த் நிறுவனம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தோஸ்த் தமிழ் உரை

பன்னிரண்டாம் வகுப்பு

(இது ஓர் ஆடியோ - வீடியோ - ஆன்லைன் - டிஜிட்டல் வழிகாட்டி புத்தகம்)

சிறப்புப் பாயிரம்

முதன்மைச் சிறப்பு - விடை அமைத்தல்

★ புதிய பாடத்திட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ளது

★ அரசு அறிவித்த வினாத்தாள் வடிவமைப்பு. (NEW MODEL BLUE PRINT)

★ எளிய விளக்கங்கள். ★ தேர்வு நோக்கில் வினா விடைகள்.

★ அரசு விடைக்குறிப்பின் அடிப்படையில் விடைகள்

★ இயல் அடிப்படையில் விடைகள்.

★ தொழில் நுட்ப வகையில் உரைப் பயன்பாடு

பாட வகைப்பாடு

★ கவிதைப்பேழை (செய்யுள்) ★ உரைநடை உலகம்

★ கற்கண்டு (இலக்கணம்) ★ விரிவானம் (துணைப்பாடம்)

★ மொழித்திறன் பயிற்சி

கூடுதல் வினா விடைகள்

★ ஒரு மதிப்பெண் ★ இரண்டு மதிப்பெண் ★ நான்கு மதிப்பெண்

★ ஆறு மதிப்பெண் ★ வினாத்தாள்கள்

தோஸ்த் தமிழ் உரை மூலம்

பார்க்கலாம் - படிக்கலாம் - கேட்கலாம் -- எழுதலாம் - வெல்லலாம்

அப்துல் கலாம் ஆகலாம்

★ பொதுத்தேர்வு - போட்டித்தேர்வு நோக்கில் வினாத்தாள்கள்.

★ நீங்களும் ஆசிரியராகலாம் அரசுப்பணியாளராகலாம் IAS/IFS/IRS ஆகலாம்.

★ இரட்டைச் சிறப்பு - தொழில்நுட்பப் பயன்பாடு QR CODE BENEFITS

காணொளிப் பாடப் பதிவுகள் (VIDEO CLASSES)

★ DHOSTH.in (கற்றலுக்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது)

★ DHOSTH.in வழியாக அறிவியல்முறை கையெழுத்துப் பயிற்சி (Scientific cursive writing)

★ தேர்வை எவ்வாறு எதிர் கொள்வது? ஆசிரியர்களின் இணையவழி வழிகாட்டுதல்.

★ IIT - தமிழ்வழிக் கற்றல்

www.Padasalai.Net

QR CODE மூலம் கிடைப்பன. (ஆண்டுதோறும் மாற்றம் பெறுவன)

★ இயல் அடிப்படையில் அடைவுத்தேர்வு வினாத்தாள்கள்.
★ மாதத்தேர்வு வினாத்தாள்கள் (ஆண்டுதோறும் மாறும் வினாத்தாள்) .
★ காலாண்டு வினாத்தாள் ★ அரையாண்டு வினாத்தாள்
★ முழு ஆண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் - விடைகள்.
★ அரசுப் பொதுத்தேர்வின் வினாத்தாளுக்கான விடைக்குறிப்புகள்

கேட்கலாம்

இந்த உரையை இலவசமாக VIP TV வழியாக ஆன்லைனில் கேட்கும் வசதி

★ கேட்பொலிப் பாடப் பதிவுகள் (AUDIO LESSONS)
★ தோஸ்த் உரையின் அனைத்துப்பாடங்களையும் கேட்கலாம்
(கற்றலின் கேட்டல் நன்று)
★ மனப்பாடப் பாடல்களையெல்லாம் பாடலாகக் கேட்கலாம்.

தேர்வுச்சூரன் பகுதி

★ இணையவழியில் ஒரு மதிப்பெண் தேர்வுகளை எழுதி வெற்றி பெற்றுப் பரிசு பெறுதல் (www.examport.in)
★ வருங்கால ஆன்லைன் தேர்வுகளை எதிர்கொள்ள முன்னோடியாக எழுதிப்பார்க்கலாம்.
★ IAS/ IFS / IRS மாதிரித் தேர்வு
★ TET ஆசிரியர் தகுதித் தேர்வு
★ TNPSC
★ மருத்துவ நுழைவுத்தேர்வு
★ I I T மாதிரித் தேர்வுகள் எழுதுதல்

அப்துல் கலாம் ஆகலாம்

இந்த உரையைப் பயன்படுத்தும் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தோஸ்த் அமைப்பின் வருங்காலத்திட்டங்கள்

★ DDS & (DHOSTH DIGITAL SCHOOLS) தோஸ்த் டிஜிட்டல் பள்ளி.
★ தோஸ்த் இணையவழி வகுப்புகளை webinar மூலம் கற்றல்.
★ ஐயங்கள் தீர்க்கும் மாலை நேரப் பாடச்சாலை
★ WHATS APP வகுப்புகள்
★ தமிழ்வழியில் IAS/IFS/IRS போன்ற தேர்வுகள் எழுதுவதற்கான வழிகாட்டல்.
★ தமிழ்ப்புலவன் தேர்வுகள்.

www.Padasalai.Net

பொதுத் தேர்வு வினாத்தாள் திட்ட வரைவு
BLUE PRINT

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

பொதுத் தமிழ் வினாத்தாள்

கால அளவு : 15 + 3.00 மணி நேரம் **மொத்த மதிப்பெண்கள்: 90**

I . பலவுள் தெரிக.

(அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

(ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

வினா. எண். 1 முதல் 6 வரை - (செய்யுளும் உரைநடையும்) **6x1=6**

செய்யுள் பகுதி

- ★ ஆசிரியர் பெயர் ★ நூல் பெயர் ★ முக்கிய வரிகள்
- ★ பாட்டுடைத் தலைவன், தலைவி - பெயர்கள் ★ யார் கூற்று ?
- ★ சொல்லும் பொருளும் ★ திருக்குறள் - படம் கொடுத்துக் குறள் கண்டறிதல்
- ★ இணையான பாடல்/ கவிதை வரிகள் கொடுத்துக் குறள் கண்டறிதல்
- ★ குறளின் முக்கிய வரிகள் கொடுத்து பொருளை அறிதல்

உரைநடை

- ★ பாடத்தலைப்பு ★ ஆசிரியர் பெயர் ★ ஆசியரின் சிறப்பு
- ★ பாடப்பகுதிக்குள் வரும் முக்கிய வரிகள் ★ கூற்றுகள்
- ★ நுழையும் முன் ★ பெட்டிச் செய்திகள்

வினா. எண், 7 முதல் 14 வரை **8x1=8**

(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி)

இலக்கணம்

- ★ இலக்கணக்குறிப்பு ★ புணர்ச்சி விதி ★ பகுபத உறுப்புகள் ★ பாடல்-பாவகை

துணைப்பாடம்

- ★ பாடத் தலைப்பு ★ ஆசிரியர் பெயர் ★ பாடத்தின் மையக்கருத்து
- ★ நுழையும் முன் ★ பெட்டிச் செய்திகள் ★ கதை மாந்தர் பெயர் ★ கதை

மொழிப்பயிற்சி

- ★ பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல் ★ பிறமொழிச்சொற்களைத் தமிழாக்குதல்
- ★ வேர்ச்சொல் - வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றுதல் ★ கலைச்சொல் எழுதுதல்
- ★ ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்றுதல் ★ மயங்கொலிச் சொற்கள்
- ★ பொருள் பொருத்துதல் ★ மரபுத் தொடருக்குப் பொருள் தேர்தல்
- ★ நிறுத்தற்குறிகள் இடுதல்

II. இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்

அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

வினா எண்.15 முதல் 18 (செய்யுள் பகுதி குறுவினாக்கள்) **3x2=4**

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2x2=4**

வினா எண். 19 முதல் 21 வரை (உரைநடைப் பகுதி குறுவினாக்கள்)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

வினா எண். 22 முதல் 30 வரை (இலக்கணம், மொழிப்பயிற்சி)

இலக்கணம்

★ இலக்கண வினாக்கள் ★ பிரித்து எழுதி புணர்ச்சி விதி தருக
★ பகுபத உறுப்பிலக்கணம் தருக

மொழிப்பயிற்சி

★ பொருள் வேறுபாடு அறிந்து தொடரில் அமைக்க
★ மயங்கொலிச் சொற்களை ஒரேதொடரில் அமைக்க
★ மரபுப்பிழை நீக்கி எழுதுக
★ தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக
★ வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
★ பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச்சொல் எழுதுக
★ உரிய நிறுத்தற்குறியிட்டு எழுதுக
★ விடைக்கேற்ற வினா அமைக்க
★ சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் எழுதி, பொருளை அறிந்து தொடரமைக்க

III. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க

அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

வினா எண். 31 முதல் 33 வரை (செய்யுள்)

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

வினா எண். 34 - 36 (உரைநடை)

இ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12

வினா என். 37 முதல் 40 வரை (மொழித்திறன் பயிற்சிகள்)

(மாற்றுவினா) குறிப்பு - காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.

மொழித்திறன் பயிற்சிகள்

★ இலக்கிய நயம் பாராட்டல் ★ மொழிப்பெயர்ப்பு (பழமொழிகள்/பத்தி)
★ அணி இலக்கணம் ★ திணை அல்லது துறை விளக்கம்
★ கவிதை எழுதுதல் ★ பத்தி வினா விடை ★ பழமொழிக்கேற்ற வாழ்க்கை விளக்கம்

IV. இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க

அ) கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வினாக்களில் ஒன்றனைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3x6=12

வினா எண். 41 - செய்யுள்

வினா எண். 42 - உரைநடை

வினா எண். 43 - துணைப்பாடம்

(நாடக வடிவம், கதையும் கருப்பொருளும் சிதையாமல் சுருக்குதல்)

V. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

வினா எண். 44

அ) மனப்பாடப் பாடல்

ஆ) தொடங்கும் அல்லது முடியும் திருக்குறள்

XXX**********XXX

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12ஆம் வகுப்பு பொதுத்தமிழ்

பொருளடக்கம்

வ. எண்	பாடத்தலைப்பு	பக்க எண்
1.	மனப்பாடப் பாடல்கள்	1
	நம்மை அளப்போம்	
2.	இயல் 1	6
3.	இயல் 2	18
4.	இயல் 3	29
5.	இயல் 4	47
6.	இயல் 5	56
7.	இயல் 6	65
8.	இயல் 7	87
9.	இயல் 8	96
	சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்	
10.	உரைநடை உலகம்	106
11.	கவிதைப்பேழை	154
12.	இலக்கணம்	176
13.	விரிவானம் - நாடக வடிவம்	189
	ஒருவரிச் செய்திகள் கவிதைப்பேழை	
14.	நூற்பெயர் - ஆசிரியர் பெயர்	195
15.	நூல்வெளி	195
16.	நுழையும்முன்	204
17.	முக்கிய வரிகள்	207
18.	சொல்லும் பொருளும்	211
19.	பாடல் - பாவகை	213
	உரைநடை உலகம்	
20.	நூற்பெயர் - ஆசிரியர் பெயர்	214
21.	நூல்வெளி	214
22.	முக்கிய வரிகள்	215
23.	பெட்டிச் செய்திகள்	225
	விரிவானம்	
24.	நூற்பெயர் - ஆசிரியர் பெயர்	228
25.	பாடத்தின் மையக்கருத்து	228
26.	நூல்வெளி	229
27.	பெட்டிச் செய்தி	231
28.	கதை மாந்தர்கள்	233

www.Padasalai.Net

	இலக்கணக் குறிப்பு	
29.	இலக்கணக் குறிப்பு	234
30.	புணர்ச்சி விதி	236
31.	பகுபத உறுப்பிலக்கணம்	238
	மொழிப்பயிற்சி	
32.	பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல்	240
33.	பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள்	243
34.	கலைச்சொற்கள்	246
35.	சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க	250
36.	மயங்கொலிச் சொற்கள் - பொருளும் தொடரும்	252
37.	மரபுச்சொற்கள் - சொல்லும் பிழை நீக்கி எழுதுதலும்	258
38.	மரபுத்தொடர்கள் - பொருளும் தொடரும்	262
39.	தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக	265
40.	வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக	266
41.	விடைக்கேற்ற வினா அமைக்க	271
42.	தொகைச்சொல்லை விரித்தெழுதுக	274
43.	உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைக்க	275
44.	நிறுத்தற்குறியிட்டு எழுதுக	278
45.	வேற்றுமை உருபுகளைச் சேர்த்தெழுதுக	283
46.	சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக	284
47.	இரண்டு தொடர்களாக்குக	284
48.	தொடர் மாற்றம்	285
49.	பழமொழிகளை ஒழுங்குபடுத்துக	285
	மொழித்திறன் பயிற்சி	
50.	இலக்கிய நயம் பாராட்டுக	287
51.	அணி இலக்கணம்	296
52.	திணை மற்றும் துறை விளக்கம்	299
53.	பழமொழிக்கேற்ற வாழ்க்கை நிகழ்வு எழுதுதல்	306
54.	கவிதை எழுதுதல்	316
55.	ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்க	318
	மொழியோடு விளையாடு	
56.	சான்றோர் சித்திரம்	328
57.	எண்ணங்களை எழுத்தாக்குக	336
58.	கருத்துப்படத்தைப் பத்தியாக மாற்றுக	340
59.	வினாக்களை உருவாக்குக	340
60.	அந்தாதி	340
61.	கட்டுரை எழுதுக	342
62.	உரை எழுதுக	347
63.	கடிதம் எழுதுக	349
64.	குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க	351

www.Padasalai.Net

65.	அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக	351
66.	செய்தி உருவாக்குக	352
67.	சுழிக்குளம்	353
68.	நான்காரைச் சக்கர வடிவம்	354
69.	பத்தியைச் சுருக்கி எழுதுக	355
70.	மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிக்க	356
71.	துளிப்பா	356
72.	வெட்டியும் ஒட்டியும் பேசுதல்	357
73.	விண்ணப்பத்தை நிரப்புக	358
74.	கதையை நிறைவு செய்க	361
75.	படித்துப் பார்த்துப் படைக்க	361
76.	புதிர்கள்	362
77.	குறுக்கெழுத்துப் புதிர்	362
78.	பட்டிமன்றம்	363
79.	நிற்க அதற்குத் தக	366
80.	அறிவை விரிவு செய்	369
81.	விரைவுக் குறியீட்டுச் செய்திகள்	370
82.	நேர மேலாண்மை	370
83.	பொதுத் தேர்வு வினாத்தாள்	371

சிறப்பம்சங்கள்

- எளிய விளக்கங்கள்
- தேர்வு நோக்கில் விடைகள்
- ஒற்றை வரிச் செய்திகள்
- ஒன்று, இரண்டு, நான்கு, ஆறு மதிப்பெண் வினா - விடைத் தொகுப்பு
- இயல் அடிப்படையில் அடைவுத்தேர்வு வினாத்தாள்கள்
- பொதுத்தேர்வு - போட்டித்தேர்வு நோக்கில் வினாத்தாள்கள்
- நீங்களும் IAS/IFS/IRS/அரசுப்பணியாளராகலாம்.
- மெல்லக் கற்போருக்கான சிறப்பு விடைகள்
- கடந்த ஆண்டு அரசுப் பொதுத் தேர்வின் வினாத்தாளுக்கான விடைக்குறிப்பு
- விடை அமைக்கும் முறைகள்
- நேர மேலாண்மை
- முழு மதிப்பெண் எடுக்க வைக்கும் வழிமுறைகள்
- தன்னம்பிக்கைத் தொடர்கள்
- நினைவாற்றல் பயிற்சிக் குறிப்புகள்
- யோகா
- QR Code Facilities

மனப்பாடப் பாடல்களை ஒலி (Audio) வடிவில் கேட்க இங்கு Scan செய்யவும்.

www.Padasalai.Net

மனப்பாடப் பாடல்கள்

தன்னேர் இலாத தமிழ்

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!"

பா வகை: நேரிசை வெண்பா ஆசிரியர்: தண்டி

நெடுநல்வாடை

"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க"

பா வகை: நேரிசை ஆசிரியப்பா ஆசிரியர்: நக்கீரர்
திணை: வாகை துறை: கூதிர்ப்பாசறை

கம்பராமாயணம்

"துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்"

பா வகை: கலி விருத்தம் ஆசிரியர்: கம்பர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

"குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை"

பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆசிரியர்: கம்பர்

திருக்குறள்

இல்வாழ்க்கை

1) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

2) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

செய்ந்நன்றி அறிதல்

3) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

4) நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

5) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

வெஃகாமை

6) அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

வெகுளாமை

7) செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்?

8) மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

9) நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

11) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

ஊழ்

12) நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

அறிவு உடைமை

13) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

14) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

15) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

சிற்றினம் சேராமை

16) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

வினைத்திட்பம்

17) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

18) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

19) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

தூது

20) கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

உட்பகை

21) வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

சூது

22) பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இதில் வெற்றிபெற

"விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண் வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு"

பா வகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆசிரியர்: சுரதா

புறநானூறு

"அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
கவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே"

பா வகை: நேரிசை ஆசிரியப்பா ஆசிரியர்: ஔவையார்

திணை: பாடாண் துறை: பரிசில் துறை

தெய்வமணிமாலை

"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்"

பா வகை: பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆசிரியர்: இராமலிங்க அடிகள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிலப்பதிகாரம்

இசைக்கருவிகள் ஒலித்த முறை

"குழல் வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை"

பா வகை: ஆசிரியப்பா ஆசிரியர்: இளங்கோவடிகள்

புறநானூறு

"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்"

பா வகை: நேரிசை ஆசிரியப்பா ஆசிரியர்: பிசிராந்தையார்

திணை: பாடாண் துறை: செவியறிவுறூஉ

இரட்சணிய யாத்திரிகம்

இறைமகனின் எளியநிலை

"பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி"

பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆசிரியர்: எச்.ஏ. கிருட்டிணனார்

சிறுபாணாற்றுப்படை

நல்லியக்கோடன்

".....என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடைய நோன்தாள்....."

பா வகை: நேரிசை ஆசிரியப்பா ஆசிரியர்: நத்தத்தனார்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 1

மொழி

உயிரினும் ஓம்பப்படும்

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர். ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது. ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

விடை- **இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**

2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

விடை- **அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**

3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

★ ஏழைகளுக்கு உணவினை நம்மால் **முடிந்தால் தரலாம்**.

★ பணியாளருக்குப் பணத்தை பணியை **முடித்தால் தரலாம்**.

4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்

★ **தமிழ்மொழியின் இயல்பை உணர்ந்தும் இலக்கணவிதிகளை அறிந்தும்** கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.

★ ந, ண, ன / ற, ர / ல, ள, ழ ஆகிய எழுத்துகள் பற்றி **ஒலிப்புமுறை, வேறுபாடுகள்** போன்றவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

★ மேல்விலங்கு (ீ) கீழ்விலங்கு (ூ) கொம்புகள் (ெ - ே) துணைக்கால் (ா) போன்றவற்றைப் பயன்படுத்தும் போது கவனம் தேவை.

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

விடை - **இ) தொல்காப்பியம்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

i) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது ii) பொதிகையில் தோன்றியது

iii) வள்ளல்களைத் தந்தது

அ) i மட்டும் சரி ஆ) i, ii இரண்டும் சரி இ) iii மட்டும் சரி ஈ) i, iii இரண்டும் சரி

விடை- **ஈ) i, iii இரண்டும் சரி**

3."மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

விடை- **இ) அடி எதுகை - சீர் மோனை**

4.கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2: தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

விடை - **இ) இரண்டு கருத்தும் சரி**

5.பொருத்துக.

அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர் ஆ) நிலவுப்பூ - 2) தி.சு. நடராசன்

இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

விடை - **ஈ) 2, 3, 4, 1**

குறுவினா

1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

நடை பற்றி தொல்காப்பியம் கூறும் தொடர்கள்

★ **'நடைபெற்றியலும்' 'நடைநவின்றொழுகும்'**

★ பொருள் - நடை அழகியல் யென்பது **பாக்களின் ஓசைத்திறம்** ஆகும்.

★ நடை அழகியலுக்குச் சான்றாக, 'தொல்காப்பியம்' கூறும் தொடர்கள்:

➔ **"ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை**
வெண்பா நடைத்தே கலி"

பொருள்

★ **ஆசிரியப்பா**வின் ஓசை அடி (ஒலி அழகியல்) ஒட்டியே **வஞ்சிப்பா** வரும்.

★ **வெண்பா**வின் ஓசை அடி (ஒலி அழகியல்) ஒட்டியே **கலிப்பா** வரும்.

2."படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக" - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

ஓசை நயமிக்க அளபெடைச் சொற்கள்	இலக்கணக்குறிப்பு
★ படாஅ ★ கெடாஅ ★ கடாஅ	செய்யுளிசை அளபெடை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3.கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

★ சிவந்த சூரியன் மலையுச்சியில் மாலைநேரத்தில் மறையும்.

★ அவ்வேளையில், சூரிய ஒளிகீற்றால் பச்சை நிறப் பூக்காடு சிவப்பு நிறமாக மாறி விடும்.

★ காலைமுதல் மாலைவரை உழைக்கும் உழைப்பாளிகளின் கைகளும் சூரியனைப்போல சிவந்துள்ளது.

★ **உழைப்பாளிகளின் உடலில் வியர்வைவெள்ளம் முத்துமுத்தாகப் பூத்திருக்கும்**.

★ அந்த **வெள்ளைமுத்துகள்** ஒவ்வொன்றும் **தமிழின் புகழைப் பாட** வேண்டும்.

★ அதற்குத் '**தமிழே நீ துணை வேண்டும்**' என்கிறார் கவிஞர் **சிற்பி.**

4.விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

★ காலை **விடியலின் வனப்பைக்** கவிதையில் வடிப்பவன் கவிஞன்.

★ வைகறை **விடியலின் வனப்பும்** வானத்து வண்ணங்களின் தொகுப்பும் மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

கூடுதல் தொடர்கள்

➔ புதிய **விடியலின் வனப்பு** மனிதனுக்குத் தரும் புதியதொரு பிறப்பு.

சிறுவினா

1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்கம்

ஒலிக்கோலங்கள்

மொழியின் தோற்றம்

★ அனைத்துத் **தொன்மையான மொழி**களும் **சமிக்ஞை**யிலிருந்தும் (சமிக்ஞை = SIGNALS) **இசை**யிலிருந்தும்தான் தோன்றின.

கவிதையின் தோற்றம்

★ ஒரு மொழிசார்ந்த **கவிதை இசையோடும் இசைக்கருவியோடும்**தான் பிறக்கின்றது.

ஒலிப்பின்னல்

★ கவிதையின் **ஓசையும் பொருளும் இணைந்து** ஒரு **கலைவடிவம்** கொள்கின்றன.

★ இதை அந்தக் கவிதையின் **ஒலிப்பின்னல்** **(Sound Texture)** என்கின்றோம்.

எடுத்துக்காட்டுப் பாடல்கள்

வல்லின ஒலியில் உணர்ச்சிப் பாடல்

➔ **"கற்க கசடற கற்பவை கற்றபின்**
நிற்க அதற்குத் தக" - திருக்குறள்

★ கல்வியைக் கட்டாயம் கற்க வேண்டும். அதுவும் பிழையில்லாமல் கற்கவேண்டும்! என்பது வள்ளுவரின் வன்மையான வேண்டுகோள்.

★ **வன்மையான உணர்ச்சி**யைக் காட்ட வள்ளுவர் '**க ச ட த ப ற**' என்னும் **வல்லின எழுத்து**களைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

★ சொல்லின் வன்மை **எழுத்திலும் ஒலிப்பது** ஒலிக்கோலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடில் எழுத்து ஒலிகள் பாடல்

➔ **"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
கடாஅ யானைக் கலிமான் பேக"

★ இப்பாடலில் **நெடில் ஒலி**கள், குறிப்பாக உயிர் ஒலிகள் திரும்பத் திரும்ப வந்துள்ளன.

சொல்லும் ஒலியும் திரும்பவரல் பாடல்

➔ **"நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை"**

★ இச் செய்யுளில் **சொல்**லும் அதன் **ஒலி**யும் திரும்ப வந்துள்ளன.

★ அவற்றோடு சொல்விளையாட்டும் (உன் அப்பனின் அப்பனுக்கு இவனுடைய அப்பனுக்கு அப்பன்) வந்துள்ளது சிறப்புக்குரியது.

2. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்" தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

தமிழின் சிறப்பை உணர்த்தும் இயற்கை அழகியல் வெளிப்பாடு

உவமை

➔ **"செம்பரிதி (சிவந்த சூரியன்) மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்"**

★ சிவந்த சூரியன் மாலைநேரத்தில் மலையுச்சியில் சென்று மெல்ல மெல்ல மறைவான்.

★ இதனைக் கவிஞர் அழகியல் தன்மையோடு **"மலைமேட்டில் தலைசாய்ப்பான் சூரியன்"** என்கிறார்.

➔ **"செந்நிறத்துப் பூக்காடாம் வனமெல்லாம்"**

★ அவ்வாறு செக்கச் சிவந்த **சூரியனின் மாலை நேரக் கதிர்கள்**(கைகள்) பட்டதால் **காடெல்லாம் சிவந்து சிவப்பு நிறத்துப் பூங்கா** போல் மாறிவிட்டது.

உவமேயம்

➔ **"தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத்**
தாமுழைக்கும் தொழிலாளர்"

சூரியனின் சிவந்த கதிர்கள்போல் தொழிலாளர்களின் கைகள்

★ சூரியனின் கைகள் சிவந்ததுபோல் காலைமுதல் மாலைவரை உழைத்த தொழிலாளர்களின் கைகளும் சிவந்து உள்ளன என்று உவமைப்படுத்துகின்றார்

தொழிலாளர்களின் வியர்வை முத்துகள் தமிழை வியந்து பாடும்

★ மாலைநேரத் தொழிலார்களின் கைகள் சிவந்தும் வியர்வை முத்துகள் வெள்ளிமணிபோல் உடலெங்கும் முத்துமுத்தாய்ப் பூத்திருக்கும்.

★ பூத்திருக்கும் வெள்ளை முத்துக்கள் தமிழின் புகழை வியந்துபாடும்.

★ "இத்தகைய சிறப்பு வாய்ந்த அருமையான செந்தமிழே உன்னைவிட எனக்கு உற்ற துணை வேறு உண்டா?" என அழகியல் தன்மையோடு தமிழின் பெருமையைக் கூறுகின்றார் கவிஞர் **சிற்பி.**

காட்சி நயம்

★ செம்பரிதியின் கதிர்கள் - தொழிலாளர்களின் கைகளாகவும், தொழிலாளர்களின் வியர்வை வெள்ளி முத்துகளாகவும் - வெள்ளி முத்துகள் தமிழ்ப்பாடும் கவிஞர்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

பாடலின் இடம் சுட்டுதல்

★ பாடல்வரிகள் இடம் பெற்ற இலக்கியம் - **தண்டியலங்காரம்** (உரைமேற்கோள் பாடல்)

★ பாடலின் ஆசிரியர் - **தண்டி**

பாடல் எழுதியதன் காரணம்

★ அணி இலக்கணத்தைக் கூறும் இந்த இலக்கியத்தில் பொருள்வேற்றுமை அணியை விளக்க உரைமேற்கோள் பாடலாக இயற்றப்பட்டது.

கூடுதல் தகவல்கள்

★ பாடலில் பயின்று வந்துள்ள அணி - **பொருள் வேற்றுமை அணி** ஆகும்.

★ பாடலின் பாவகை - **நேரிசை ஆசிரியப்பா**

பாடல் வரியின் பொருள்

★ "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - **கடலால் சூழப்பட்ட உலகத்தின் இருளை அகற்றும்**

பாடல் விளக்கம்

கதிரவன்	தமிழ்
உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றுபவன்.	உயர்ந்த பொதிகைமலையிருந்து தோன்றியவள்.
கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுபவன்.	உலகத்தில் வாழும் மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றுபவள்.
மக்களால் போற்றப்படுபவன்.	சான்றோரால் தொழப்படுபவள்.
ஒளிர்கின்ற கதிரவனாக இருக்கின்றான்.	தனக்கு நிகரில்லாத தமிழாக இருக்கின்றாள்.

4.பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

பாடல் வரிகள்

பவணந்தி முனிவரின் பாடல்	கவிஞர். சிற்பி பாலசுப்பிரமணியம் பாடல்
"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" - நன்னூல்	**"மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!"** - நிலவுப்பூ

இரு பாக்களின் கருத்துகளில் உள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுதல்

இலக்கணப்பாடல்	இலக்கியப் பாடல்
"பழையன கழிதலும் புதியன புகுதலும்" ★ தமிழ் மொழிக்கு இலக்கணக் கருத்துகள் ஆயிரம் இருந்தாலும் காலத்திற்கு ஏற்ப பயன்பாட்டில் இல்லையென்றால் அதை விட்டுவிட வேண்டும். ★ சொற்களும் மரபுகளும் பயன்படவில்லை எனில் காலத்திற்குத் தகுந்தாற்போல் கழித்துவிட வேண்டும். ★ நாள்தோறும் தமிழ்மொழியில் ஏற்படும் மொழி வளர்ச்சிக்கு ஏற்ப இலக்கணம் புதிது புதிதாக இயற்றப்பட வேண்டும் என்கின்றார்.	**"மீண்டும் அந்தப் பழமை நலம்"** ★ முற்காலத்தில் முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் பாண்டிய மன்னர் ★ அந்த தமிழ்ச் சங்கத்தின் அரசி நீதான். ★ தமிழ் ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி வளர்ந்தது. பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய் ★ கடையேழு வள்ளல்களான பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி ஆகியோர் தமிழ் வளர்த்தனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

"வழுவல கால வகையி னானே"	"மெய்ச் சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா!"
★ புதிய இலக்கணம் வருவது குற்றமில்லை ★ காலத்தின் வேற்றுமையே இதற்குக் காரணம் என்கிறார் நன்னூலார்.	★ இத்தகைய சிறப்புடைய தமிழே! மீண்டும் அந்தப் பழமையான மரபு இலக்கியங்களுடன் வா! வா! என்று கூக்குரல் இடுகின்றார் கவிஞர்
★ புதுக்கவிதைக்கு வழிவிட்டது.	★ மரபுக்கவிதையை வரவேற்கின்றது.
★ புது இலக்கண நூல் தோன்றக் காரணமானது.	★ மரபுக்கவிஞர்கள் தோன்ற காரணமாகிறது.

நெடுவினா

1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

குறிப்புப்பெட்டகம்

கற்றதன் நோக்கம்	**என்னுரை**	**நடையியல்**	**அழகியல்**
நடைஅழகியலைக் கட்டமைக்கும் கூறுகள்		**ஒலிக்கோலங்கள்**	**சொற்புலம்**
தமிழின் சொல்வளம்	**தொகை மொழிகள்**	**தொடரியல்போக்குகள்**	**முடிவுரை நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ மொழி வெளிப்படுத்தும் நடையியல் கூறுகளைப் படித்துணர்ந்து தமிழ்மொழியின் நுட்பத்தை ஆசிரியர் தி. சு நடராஜன் எழுதிய **'தமிழ் அழகியல்'** நூல் வழி அறிவதற்கே!

என்னுரை

★ தமிழ்மொழியில் **கவிதைநடையியலும் அழகுணர்வும்** மலரும்மணமும் போல் இணைந்தவை.

★ இதயம் கனியும் வகையில் அழகியலை வெளிப்படுத்துவதும் தமிழ்க் கவிஞர்களின் இயல்பாகும்.

★ அத்தகைய சிறப்பு வாய்ந்த கவிதையின் நடைஅழகியல் கூறுகளை இக் கட்டுரையில் காண்போம்.

நடையியல்

★ **கவிதையின் இயங்காற்றல்**தான் (Powerful Telling Style) **'நடை'** எனப்படும்.

★ அதாவது **கவிதையைச் சொல்லுகின்ற ஆற்றலும் அழகும்**தான் நடையியல் ஆகும்.

★ ஒரு மொழியின் தனிச்சிறப்புக் கூறுகளைக் கையாளும் முறையில்தான் அம்மொழிக் கவிதையின் உந்துச் சக்தி இருக்கின்றது.

★ கவிதை நடையியலுக்கு **ஒலிக்கோலங்கள், சொற்புலம், தொடரியல் போக்குகள்** போன்றவை மிக முக்கியமானவை.

★ **'நடைபெற்றியலும்'** **'நடைநவின்றொழுகும்'** என்ற சொற்றொடர்களைத் தொல்காப்பியம்பதிவு செய்கின்றது.

அழகியல்

★ அழகியல் என்பது **'இரசனை'** என்றே வழங்கப்படுகின்றது.

★ கவிதை**சொல்லுகின்றமுறை** ★ கவிதையின்**உணர்ச்சியை** கற்பவரின் உள்ளத்தில்**பாய்ச்சும்விதம்**

★ இதயம் கனியும் வகையில் வெளிப்படுத்துவது போன்றவை அழகியல் கூறுகளாகும்.

★ அழகியலை உருவாக்குவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் **தொல்காப்பியர்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நடை அழகியலைக் கட்டமைக்கும் கூறுகள்

★ ஒலிக்கோலங்கள் ★ சொற்புலம் ★ தொடரியல் போக்குகள்

ஒலிக்கோலங்கள்

★ அனைத்துத் **தொன்மையான மொழிகளும் சமிக்ஞை**யிலிருந்தும் (சமிக்ஞை = SIGNALS) **இசை**யிலிருந்தும்தான் தோன்றின.

★ ஒரு மொழிசார்ந்த **கவிதை இசையோடும் இசைக்கருவியோடும்**தான் பிறக்கின்றது.

★ கவிதையின் **ஓசையும் பொருளும்** இணைந்து ஒரு **கலைவடிவம்** கொள்கின்றன.

★ இதை அந்தக் கவிதையின் ஒலிப்பின்னல் **(Sound Texture)** என்கின்றோம்.

★ **வன்மையான உணர்ச்சி**களைக் காட்ட **வல்லின எழுத்துகளைப்** பயன்படுத்த வேண்டும்.

சொற்புலம்

★ சொல்லில்தான் **உணர்வும் பொருளும் கலையும் பண்பாடும் அரசியலும்** பொதிந்துள்ளன.

★ சொல்வளம் என்பது **ஒருபொருளைக் குறிக்கும் பல சொல்**லாகவும், **பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்**லாகவும் வரும்.

★ பல வகையான துறைகளுக்கும் சூழலுக்கும் புனைவுகளுக்கும் உரிய உணர்வும் தெளிவும் கொண்ட சொற்கள் சங்க இலக்கியத்தில் அதிகம் உண்டு.

★ முல்லைக்கலியில் **87 வகை காளை** இனங்களைக் குறிப்பிடும் சொற்கள் உள்ளன.

★ **'கிடை'** என்னும் நூலில் கி. ராஜநாராயணன் **ஆடுகளின் அடையாளப் பெயர்**களைக் கூறுகின்றார்.

தமிழ்ச்சொல் வளம்

★ சொல்வளம் **பண்பாட்டின் அடையாளமாக** உள்ளது.

★ சொல்வளம் தனிச்சொற்களாக நிறைந்தோ, அல்லது ஒன்றிற்கு மேற்பட்டும் பிரியாதது.

★ **'கவவுக்கை நெகிழாமல்'** அதாவது கைக்குள் வைத்த கை பிரியாமல் முயங்கிக் கிடப்பதைப் போல் **சொல்லுக்குள் சொல் பிரியாமல்** இருப்பதைக் குறிக்கும்.

தொகை மொழிகள்

★ தொகைமொழிகள் **(Compound Words)** சங்க இலக்கியத்தின் **அடையாளப் பண்பு**.

★ தொகைமொழி என்பது **செறிவாக்கப்பட்ட வடிவமைப்பு** ஆகும்.

★ தொகைமொழி **சொற்றொடரில் ஒரு சொல்போலவே இயங்கும்**.

★ தொல்காப்பியத்தின் எச்சவியல் தொகைமொழியை தெளிவாக எடுத்துரைக்கின்றது.

தொகைநிலை மொழிகள்	தொகா நிலைச் சொற்கள்
★ வைகுறுவிடியல் , கன்னி விடியல்	★ நீர் படுகின்ற
★ புல்லென் மாலை, நள்ளென் யாமம்	★ நீர் பட்ட
★ கவினுறு வனப்பு, காமர் வனப்பு	★ பசுமையான கலம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தொடரியல் போக்குகள்

★ ஒலிக்கோலமும் சொற்புலமும் தமிழ் நிலத்தின் ஏர் எனில் சொற்றொடர் அதன் பாத்தியாகும்.

★ உரைநடையிலும் பேச்சிலும் **எழுவாய்** + **செயப்படுபொருள்** + **பயனிலை** என்றே இயல்பாக மொழிநடை அமையும்.

★ ஆனால், சங்க இலக்கியத்தில் இவை பிறழ்ந்து (மாறி) மறுதலைத் தொடராக வருகின்றது.

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"இருக வென்றோ, சுருகவொன்றோ;**
படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே" - பேரெயின் முறுவலார்

★ மன்னனின் 18 சிறப்பான பண்புகளை வரிசைப்படுத்திய பிறகு, ஒரு தொடர்மட்டும் ஒரு கருத்தைத் தொகுத்து மறுதலைத் தொடராகச் சொல்கின்றது.

முடிவுரை

★ நடையியல் என்பது சொல்வடிவமைப்புப் பகுதிகளின் முழுமையினைச் சார்ந்தே அமைகின்றது.

★ தமிழ் அழகியல் கட்டமைப்பிற்கு **சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்**.

நூற்பயன்

★ சங்க இலக்கியம், கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளிலும் தனித்துவம் மிக்க தமிழ்ச் சமூக - பண்பாட்டுத் தளத்திலும் தனக்கென குறிபிட்ட சில பண்புகளையும் போக்குகளையும் தனி மரபுகளையும் அமைத்துக் கொண்டது என்பதை அறிகின்றேன்.

2.பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

குறிப்புச் சட்டகம்

கற்றல் நோக்கம்	**என்னுரை**	**பாரதி யார்?**	**பரலி சு. நெல்லையப்பர்**
பாரதியின் மொழிப்பற்று	**பாரதியின் சமூகப்பற்று**	**முடிவுரை**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ பாரதியின் கடித இலக்கியத்தின் மூலமாக மொழியுணர்வையும் சமூக உணர்வையும் வெளிப்படுத்தும் திறன் வளர்ப்பதற்காகவே கற்றேன்!

என்னுரை

★ பார்போற்றும் தமிழ்ப்புலவன் பாரதியைக் கவிஞராக மட்டுமே அனைவரும் நினைக்கின்றனர்.

★ உண்மையில் அவர், தமிழ் இலக்கியத்தளத்தின் அனைத்துப் பகுதிகளையும் அறிந்தவர், தெளிந்தவர், புரிந்தவர், புதுமையைப் புகுத்தியவர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அவரின் கடித இலக்கியம் மொழிப் பற்றையும் சமூக அக்கறையையும் வெளிப்படுத்தும் தன்மையை இக்கட்டுரையில் நாம் காணவிருக்கின்றோம்.

பாரதி யார்?	பரலி சு. நெல்லையப்பர் யார்?
★ இந்திய விடுதலையின் விடிவெள்ளி.	★ விடுதலைப் போராட்ட வீரர்.
★ தமிழ்க் கவிதை உலகின் அக்கினிப் பிழம்பு.	★ கவிஞர், எழுத்தாளர், இதழாளர்.
★ புதுக்கவிதையின் தந்தை.	★ பாரதியின் படைப்புகளைப் பதிப்பித்தவர்.
★ பெண்மை போற்றும் பெருந்தகை.	★ பாரதியின் இதழ்களில் துணையாசிரியர்.
★ மகாகவி.	★ பாரதியின் அருமைத் தம்பி.

பாரதி தன் தம்பியிடம் மொழிப்பற்றையும் சமூகப்பற்றையும் வெளிப்படுத்தும் தன்மை

பாரதியாரின் மொழிப்பற்று	பாரதியாரின் சமூகப் பற்று
★ **தமிழ் தமிழ் தமிழ்** என்று எப்போதும் தமிழ் வளர்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்	★ தமிழ் நாட்டில் நோய்கள் தீர வேண்டும். நோயின்றி மக்கள் நலமுடன் வாழ வேண்டும்.
★ வட நாட்டு மொழிகளில் ஏற்பட்ட புதுமை தமிழ்மொழியிலும் ஏற்பட வேண்டும்.	★ **'ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள்'** எனவும் **'அவை ஒன்றிலொன்று தாழ்ந்ததில்லை'**, என்ற உணர்வு வேண்டும்.
★ தமிழில் புதிய செய்தி, புதிய புதிய சிந்தனை, புதிய உண்மை, புதிய இன்பம் உருவாகிக் கொண்டே போக வேண்டும்.	★ 'பெண்ணைத் தாழ்மை செய்தவன் தன் கண்ணைக் குத்திக்கொண்டவன்' 'பெண்ணை அடைத்தவன் தன் கண்ணை அடைத்தவன்'
★ **'தமிழ்நாடு வாழ்க'** என்று எழுத வேண்டும்.	★ எங்கும் தொழில்கள் பெருகி தமிழ்நாடு வளர வேண்டும்
★ தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அதிகம் பெருக வேண்டும்	★ வியாபாரம் பெருகி, எந்திரங்களின் உற்பத்தி பெருகி, தமிழ்நாடு வளர்ச்சி பெற வேண்டும்.
★ 'தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகள் பயிற்சி அளிக்க வேண்டும்.	★ **இசை, சிற்பம், எந்திரம், பூமி, வானம், இயற்கை** குறித்த நூல்கள் தமிழ்நாட்டில் வளர வேண்டும்.

முடிவுரை

★ கடிதத்தின் மூலமாகத் தன் சமூக உணர்வுகளை ஆழமாகப் பதித்தவர் பாரதி என்பதை உணர்ந்தேன்.

நூற்பயன்

★ காலத்தை வென்ற கவிஞர் பாரதியின் கனல் தெறிக்கும் கருத்துகளைத் தெளிந்தேன்.

★ சமூக அக்கறையுடன் நானும் மொழியையும் சமூகத்தையும் காப்பேன்.

3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	என்னுரை	தமிழின் சிறப்பை உணர்த்தும் இயற்கை அழகியல் வெளிப்பாடு	உவமை அணி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

காட்சி நயத்தின் வெளிப்பாடு	கடையேழு வள்ளல்கள்	மீண்டும் அந்தப் பழமை நலம்
தமிழ்க்குயிலே கூவி வா வா	முடிவுரை	நூற்பயன்

கற்றதன் நோக்கம்

★ சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிஞர் சிற்பி. பாலசுப்பிரமணியம் அவர்களின் பாடல்வழியே மொழிப்பற்றை நானும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்தவே கற்றேன்.

என்னுரை

★ தமிழ்மொழி நம் அடையாளம். பல்லாயிரம் ஆண்டுகளாக பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்ற மொழி.

★ **பண்பாட்டின் நீட்சி**. காலந்தோறும் தன்னைப் **புதுப்பித்துக் கொண்ட மொழி**.

★ இன்றும் **இளமை உயிர்ப்பு**டன் இருக்கின்றது. என்றும் **வாழத் தகுந்த மொழி**.

★ இத் தமிழின் பெருமை பேசும் மரபுக்கவிஞர் சிற்பியின் வழியே தமிழ்ப்புகழ் அறிவோம்! வருக!

தமிழின் சிறப்பை உணர்த்தும் இயற்கை அழகியல் வெளிப்பாடு

➔ **"செம்பரிதி (சிவந்த சூரியன்) மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்."**

★ சிவந்த சூரியன் மாலை நேரத்தில் மலையுச்சியில் சென்று மெல்ல மெல்ல மறைவான்.

➔ **"செந்நிறத்துப் பூக்காடாம் வனமெல்லாம்"** (உவமை)

★ அவ்வாறு செக்கச் சிவந்த சூரியனின் மாலைநேரக் கதிர்கள்(கைகள்) பட்டதால் காடெல்லாம் சிவந்து சிவப்பு நிறத்துப் பூங்கா போல் மாறிவிட்டது.

★ தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோக உழைக்கும் தொழிலாளர்.

➔ **"சூரியனின் சிவந்த கதிர்கள்போல் தொழிலாளர்களின் கைகள்"** (உவமேயம்)

★ சூரியனின் கைகள் சிவந்ததுபோல் காலைமுதல் மாலைவரை உழைத்த தொழிலாளர்களின் கைகளும் சிவந்து உள்ளது என்று உவமைப்படுத்துகின்றார்.

உவமை அணி

★ **சிவந்த பூக்காட்டைப்** போல் உள்ளது உழைக்கும் **தொழிலாளர்களின் கை** என உவமையணி தோன்ற பாடியுள்ளார்.

★ **தொழிலாளர்களின் வியர்வை முத்துகள்** தமிழை வியந்து பாடும்

★ மாலை நேரத்தில் தொழிலாளர்களின் கைகள் சிவந்தும் வியர்வை முத்துகள் வெள்ளிமணி போல் உடலெங்கும் முத்துமுத்தாய்ப் பூத்திருக்கும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ பூத்திருக்கும் **வெள்ளை முத்துக்கள் தமிழின் புகழை வியந்துபாடும்**.

★ "இத்தகைய சிறப்பு வாய்ந்த அருமையான செந்தமிழே! உன்னைவிட எனக்கு உற்ற துணை வேறு உண்டா?" என அழகியல் தன்மையோடு தமிழின் பெருமையைப் கூறுகின்றார் கவிஞர் சிற்பி.

காட்சி நயத்தின் வெளிப்பாடு

★ செங்கதிர்களால் காடு செந்நிறத்துப் பூக்காடாகவும்,

★ செந்நிறத்துப் பூக்காடு தொழிலாளர்களின் கைகளாகவும்,

★ தொழிலாளர்களின் வியர்வை வெள்ளி முத்துகளாகவும்,

★ வெள்ளி முத்துகள் தமிழ்ப்பாடும் கவிஞர்களாகவும் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கடையேழு வள்ளல்கள்

★ கடையேழு வள்ளல்களான **பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி** ஆகியோர் தமிழ் வளர்த்தனர்.

மீண்டும் அந்தப் பழமை நலம்

★ மூண்டுவரும் எங்கள் **கவிதைக்கு உணவாய்** முத்தமிழே நீ இருக்கின்றாய்!

★ முற்காலத்தில் முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் பாண்டிய மன்னர்.

★ அந்தச் **தமிழ்ச் சங்கத்தின் அரசி** நீதான்.

★ உன் ஆட்சியில் தமிழ் ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி வளர்ந்தது.

தமிழ்க்குயிலே! கூவி வா!

★ மீண்டும் அந்தப் பழமையான மரபு இலக்கியங்களுடனும் மரபுக்கவிஞர்களுடனும் வா! வா!

★ சிங்கம்போல் தென் தமிழே சீறி வா! வா!

★ பொதிகைமலைத் தென்தமிழே உன்னை அடைத்து வைத்தது யார்?

★ கூண்டை உடைத்தெழுந்த சிங்கம் போல் முழங்கிக்கொண்டு சீறி வா! வா!

★ என்று கூக்குரல் இடுகின்றார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

முடிவுரை

★ கவிதையில் தமிழ்மொழியின் அழகியல்நடை சிறப்பானமுறையில் இடம்பெற்றுள்ளது.

நூற்பயன்

★ சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதை வாயிலாக மொழிப்பற்றை அறிந்துக்கொண்டேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. "சொல்லோவியங்கள் (கவிதை)" என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.

'சொல்லோவியங்கள்' கவிதைநூல் வெளியீட்டு விழா

நாள்: *20.02.2020* **நிகழ்ச்சி நிரல்** **கிழமை:** வெள்ளிக்கிழமை

நிகழ்ச்சி	நேரம்	பங்கு பெறுவோர்
தமிழ்த்தாய் வாழ்த்து	*எற்பாடு 02.00 மணி*	**11 ஆம் வகுப்பு மாணவியர்**
வரவேற்புரை	*02.02 - 02.10*	திருமதி. **செல்வ அமுதா** அம்மையார் தமிழ்த்துறைத் தலைவர் விருகம்பாக்கம் பெண்கள் மேனிலைப்பள்ளி சென்னை
முன்னிலை	*02.11 - 02.25*	திரு. **நற்றமிழ் வளவன்** தமிழ்ப்பண்பாட்டுப் பேரியக்கத்தின் தலைவர்
வாழ்த்துரை	*02.26 - 02.36*	திரு. **நம்பி** தமிழகத் தொழில் நுட்பப் புலவர்குழுத் தலைவர் **(தோஸ்த் தமிழ் உரை)**
சிறப்புரை	*02.37 - 03.10*	கவிஞர். **எழுஞாயிறு** (உதயணன்) அரசுக் கல்லூரிப் பேராசிரியர், பருகூர்
ஏற்புரை	*03.11 - 03.21*	கவிஞர். **முத்துக்குமரச் சோழன்** நூலாசிரியர்
நன்றியுரை	*03.22 - 03.25*	தமிழ்ப்புலி**. கோவர்த்தனன்** *12* ஆம் வகுப்பு மாணவர்
நாட்டுப்பண்	*03.26 - 03.28*	**பள்ளி இசைக்குழு மாணவர்கள்**
சிற்றுண்டி	*03.30*	முக்கனிச்சாறும் முறுக்கும் அடையும் வடையும்

நன்றியுரை

இந்த மகிழ்ச்சிமிகு மாலைவேளையில் தாமரைமலர் போல் விரிந்த அவையின் நடுநாயகமாக வீற்றிருந்து தமிழின் பெருமையை நாடறிய போற்றிய நற்புலவர். பெருந்தகை. ஐயா நற்றமிழ் வளவனார் அவர்களே! கவிதைத் தேனை அள்ளிக் கொடுத்து எம்மைத் தமிழ்க் கடலிலே மூழ்கடித்த விழாத் தலைவர் முத்துக்குமரச்சோழன் அவர்களே! தமிழ்நாடுதோறும் பள்ளி மாணவர்கள் போற்றும் தமிழ் உரை(தோஸ்த்) எழுதியும் எங்களுக்கு வாழ்த்துரை வழங்கி அமர்ந்திருக்கும் நம்பி அவர்களே! கவிதைப் பலாச் சுவையைச் சுளைதோறும் சுளைதோறும் போற்றிய கவிஞர் எழுஞாயிறு அவர்களே! இடி தாமரை இதழ்விரித்ததும் அதன் தேனுண்டு மயங்கி அமர்ந்திருக்கும் கவிச்சுவைஞர்களாகிய ஆசிரிய பெருமக்களே! பெற்றோர்களே! மாணவ மணிகளே! இந்த நிகழ்ச்சியை இதுவரை மகிழ்ச்சியாகக் கண்டுகளித்து அமர்ந்திருந்து இந் நிகழ்ச்சி மாபெரும் வெற்றிபெற துணை-புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும். என் நன்றியை இருகரம் கூப்பித் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! நன்றி! நன்றி!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 2

இயற்கை - வேளாண்மை - சுற்றுச்சூழல்

பெய்யெனப் பெய்யும் மழை

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. தமிழில் திணைப்பாகுபாடு -------- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

விடை - **அ) பொருட்குறிப்பு**

2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அ·்றிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ---------

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

விடை - **இ) தொல்காப்பியம்**

3. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே --------

அ) அ·்றிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அ·்றிணை

இ) விரவுத்திணை, அ·்றிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

விடை **ஆ) உயர்திணை, அ/றிணை**

4.பொருத்தி விடை தேர்க.

அ) அவன் அவள் அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்

அ) 4,1,2,3 ஆ) 2,3,4,1 இ) 3,4,1,2 ஈ) 4,3,1,2

விடை - **அ) 4,1,2,3**

5.மொழியின்சொற்றொடர்அமைப்பைவிளக்கிக்கொள்வதற்கும்பயன்படுத்துவதற்கும்உதவுவனயாவை?

மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன

★ திணை ★ பால் ★ எண் ★ இடம்

★ நால்வகைப் பொருத்தங்கள் சிறப்பாக அமைய வேண்டும்.

எ.கா சொற்கள்	திணை	பால்	எண்	இடம்
முருகன் சென்றான்	உயர்திணை	ஆண்பால்	ஒருமை	படர்க்கை
பசுக்கள் பால் தந்தன	அ·்றிணை	பலவின்பால்	பன்மை	படர்க்கை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. உயர்திணைப்பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

★ ஆசிரியர்கள் பாடம் கற்பித்தனர் ★ பெண்கள் விளையாடினர்

★ பன்மைப்பெயர்கள் - (கள்) ஆசிரியர்கள், பெண்கள்

★ பன்மை விகுதி - (அர்) கற்பித்தனர், விளையாடினர்

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. பொருத்துக.

அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1,3,4,2 ஆ) 3,1,2,4 இ) 3,2,1,4 ஈ) 2,1,3,4

விடை - **ஆ) 3, 1, 2, 4**

2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர் நிலைகள்

விடை - **இ) மழைத்துளிகள்**

3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

விடை - **ஆ) மணல் அள்ளுதல்**

4. "பொய்யா வானம் புதுப்பெயர் பொழிந்தென" - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

விடை - **ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

5. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதல் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

விடை - **அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**

குறுவினா

1. "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

"ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் - அதை
எந்நாளும் நீருற்றிக் காப்போம்" முழக்கத்தொடர் வாயிலாக நான் வலியுறுத்துவது

★ பிறவிப்பயனைப் பெற்றவனாய் மரம் வளர்க்க வேண்டும்.

★ பிறகொரு நாள் **மரம் நமக்கு வரமாகும்** மனிதா உனக்கு நீயே தெய்வமாவாய்!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கூடுதல் தகவல்

★ ஒவ்வொரு மனிதனும் இந்தப் பூமியில் விதைக்க வேண்டும்.

★ மனிதன் ஒருவன் தனிமரம் ஒன்றை வளர்க்கவேண்டும்.

★ அந்த மரத்தை மனிதன் பெயரிட்டு அழைக்கவேண்டும்.

★ அதன் ஒவ்வொரு பயனையும் உணரவேண்டும் பிறருக்கு உணர்த்த வேண்டும்.

2. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

சொல் பிரிப்பு - இனநிரை = இனம் + நிரை

➔ விதி - **"மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்"** (மகரம் கெட்டது) ★ இன + நிரை = இனநிரை

3. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.

★ மனிதன் தன் பேராசையால் இயற்கை வளங்களைச் சேதப்படுத்தினான்.

★ இயற்கையைச் சேதப்படுத்தியன் விளைவை மனிதன் இன்றி சந்தித்துக் கொண்டிருக்கின்றான்.

4. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" - விளக்கம் தருக.

நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது.

★ இவ்வரிகள் இடம்பெற்ற இலக்கியம் - **'அய்யப்ப மாதவன் கவிதைகள்'**

★ கவிதையின் தலைப்பு - **'பிறகொரு நாள் கோடை'** ★ கவிதை ஆசிரியர் - **அய்யப்ப மாதவன்**

வரிகள் சொல்லும் வர்ணனை

★ பெருமழைக்காலத்தில் நகரங்களின் உயர்ந்த கட்டிடங்கள் நனைந்தன.

★ வாகனப் புகையால் படிந்த அழுக்குகள் மழைச்சாரலால் தூய வெண்மையாக மாறின.

★ மழைக்கால இடைவெளியில் தீடீரென ஒருநாள் தோன்றியது சூரியன்.

★ கட்டிடங்கள் மழையால் பட்டைத் தீட்டப் பட்டு சூரியனின் பொன்கதிர்களால் வெள்ளை வைரமாகக் காட்சியளிக்கின்றது.

சிறுவினா

1. "நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து; உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்" - இக்கவிதையின் அடி, "தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக. **ஏற்றப்பாடல்**

➔ **"மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே**

தூங்கும் பனி நீரை வாங்கும் கதிரோனே

ஈச்ச மணல் ஓடை... இருபுறமும் சம்போடை...

தாழை மணல் ஓடை... தனிப்புறமும் சம்போடை..." என்பது நாட்டுப்புறப்பாடல்.

★ மூங்கிலின் மீது இருக்கும் பனித்துளியைக் கதிரவன் வாங்கிக்கொள்கிறான்.

★ நீர் நிலைகளில் உள்ள தண்ணீரை ஒளிக்கதிர்கள் உறிஞ்சிக்கொள்கின்றன.

★ பனித்துளியை உறிஞ்சியபின் நீர் நிலைகளை உறிஞ்ச வந்துவிட்டான் கதிரவன் என்பது நாட்டுப் புறப்பாடலின் தொடர்ச்சியாக இங்கு அமைந்துள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

குளிர்கால நள்ளிரவு

★ மேகம் தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்தது.

★ உலகமே குளிரும்படி புதிய மழையைப் பூமியெங்கும் பொழிந்தது.

★ **தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது**. இதனைக் **கோவலர் வெறுத்தனர்**.

★ எருமைகள், பசுக்கள், ஆடுகள் போன்றவற்றை மேடான நிலத்தில் மேய விட்டனர்.

கோவலர்களின் துன்பம்

★ வழக்கமாக தாம் பழகிய இடத்தை விட்டுப் பிரிந்து வேறு இடத்திற்குச் சென்றனர்.

★ பிரிவுத் துன்பம் கோவலர்களை வாட்டியது.

★ கோவலர்களின் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களுடைய காந்தள் மலர் கசங்கியது.

★ கோவலர்கள் ஒன்றுசேர்ந்து கொள்ளி நெருப்பால் கைகளுக்குச் சூடேற்றினர்.

★ கைகள் சூடேறினாலும் அவர்களின் பற்கள் நடுங்கின.

குளிரினால் விலங்குகளுக்கு ஏற்பட்ட துன்பம்.

★ விலங்குகள் **மேய்ச்சலை மறந்தன**. ★ மரங்களிலிருந்து **பறவைகள் வீழ்ந்தன**.

★ குரங்குகள் **குளிரால் நடுங்கின**. ★ பசுக்கள், பால் குடிக்க வந்த **கன்றுகளைத் தவிர்த்தன**.

3. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

மழைவெள்ளப் பேரிடர் ஏற்படும்போது செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

பேரிடர் ஏற்பட்ட போது மேற்கொள்ள வேண்டியவை

★ பேரிடரின் தன்மையைப் பதற்றமடையாமல் உணரவேண்டும்.

★ புயல், மழை பற்றி வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் தகவல்களைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

★ வானிலைத் தகவல்களுக்கு ஏற்ப மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

★ தீயணைப்புத்துறை, காவல்துறை ஆகியவற்றுடன் ஒத்துழைக்க வேண்டும்.

★ தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை மக்களுடன் ஒன்றிணைக்க வேண்டும்.

★ சமூக ஊடகங்களை நற்செயலுக்காக சரியாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

கூட்டுமுயற்சியால் செய்ய வேண்டியவை

★ பாதுகாப்பு மையங்கள் அமைத்தல் ★ மீட்புப் பணிகளில் ஈடுபடுதல்

★ மருத்துவக் குழுக்களை அனியாக (தயாராக) வைத்திருத்தல்

★ மருத்துவ முகாம்கள் அமைப்பது ★ உணவு உடை ஏற்பாடுகள்

★ அடிப்படை வசதிகள் செய்தல் (மருந்து முதலியவை)

செய்யக்கூடாதவை

★ இளைஞர்கள், மாணவர்கள் தான்தோன்றித் தனமாக மீட்புப் பணியில் செயல்படக்கூடாது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ யாரும் வதந்திகளை நம்பக்கூடாது. பொதுமக்களிடையே பரப்பவும் கூடாது.

★ சமூக ஊடங்களில் நிகழ்வுகளைப் பற்றிய தவறான செய்திகளைப் பரப்பக்கூடாது.

வருங்காலங்களில் செய்ய வேண்டியவை

★ வருங்காலங்களில் பேரிடரைத் தாங்கும் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.

★ நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட வேண்டும்.

★ அவ்வாறு அமைத்த நீர்வழிப்பாதைகளை நாம் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

★ **'சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை'** ஓர் இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்.

★ கடற்கரை ஓரங்களில் **சதுப்பு நிலக் காடு**களை வளர்க்க வேண்டும்.

5. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

பேரிடர் மேலாண்மை ஆணையம்

★ இந்திய நடுவண் அரசு பேரிடர் மேலாண்மை ஆணையத்தை வடிவமைத்தது.

★ பேரிடர் மேலாண்மை **2005** ஆம் ஆண்டு **டிசம்பர் 23** ஆம் தேதி அமைத்தது.

பேரிடகள் என நடுவண் அரசு அறிவித்தவை

★ புயல் ★ வெள்ளம் ★ நில நடுக்கம் ★ வறட்சி ★ சுனாமி

★ நிலச்சரிவு ★ தீ விபத்து ★ சூறாவளி ★ பனிப்புயல் ★ வேதி விபத்துகள்

பேரிடர் மேலாண்மை அமைப்பின் பணிகள்

★ பேரிடர் காலங்களில் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றும்.

★ இந்த அமைப்பிற்காக பல்வேறு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்து செயலாற்றும்.

நெடுவினா

1. "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

"நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் ஐயாவுடன் கலந்துரையாடல்

★ ஐயா! என் பணிவான முதல் வணக்கம்!

➔ **கேள்வி** - ஐயா நெகிழி பற்றி உங்கள் கருத்து என்ன?

பசுமைதாசனார்

★ என் நெஞ்சில் தைத்த முள் நெகிழி "பகுத்தறிவும் பட்டறிவும் பண்பறிவும் கொண்டு, பழகுதற்கினிய பாரத மக்களே! இன்றைய நாள் நம் நெஞ்சில் தைத்த முள்ளாக இருப்பது நெகிழி! இந்த முள் நம் நெஞ்சிலிருந்து என்று நீங்கும் என உள்ளம் ஓலமிட்டுக் கொண்டே இருக்கின்றது."

➔ **கேள்வி** - இந்திய நாடு நெகிழி பற்றி விழிப்புணர்வு பெற்றுள்ளதா?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பசுமைதாசனார்

★ இந்தியாவே நெகிழி ஒழிப்பிற்காகக் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கின்றது. பலகோடிகளைச் செலவழித்து நெகிழிகளை மறுசுழற்சிக்குட்படுத்துகின்றது. பல நூறு நிறுவனங்களுக்குத் தடை விதித்து பல விழிப்புணர்வுகளைக் ஏற்படுத்துகின்றது.

➔ **கேள்வி** - இந்திய மண்ணில் நெகிழிக்கு எதிராக உங்களைப் போராடத்தூண்டியது எது?

பசுமைதாசனார்

★ நான் கண்ட விளம்பரங்களும் விழிப்புணர்வு பொம்மலாட்டமும்

➔ **கேள்வி** - விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா!

பசுமைதாசனார்

★ எல்லாம் நெகிழியில் அடைக்கப்பட்டுவிட்டன. மனித உயிரும் அப்படித்தான் அடைக்கப்படும் என்ற உலகத் தத்துவத்தையும்

★ பசுமாடுகளின் வயிற்றில் பத்துக் கிலோ(நெகிழிப்பைகள்) பிளாஸ்டிக் பொருட்கள் எடுத்ததும்.

★ பச்சிளங்குழந்தைகளின் பால்புட்டியால் புற்று நோய் வந்ததும்.

★ பள்ளிச்செல்லும் குழந்தைகளின் தண்ணீர் புட்டியால் ஆஸ்துமா வந்ததும் அனைத்திற்கும் காரணம் நெகிழி! நெகிழி!

★ அடிப்படைப் பொருள்கள் அனைத்தும் நெகிழியில் செய்யப்பட்டு நெகிழியில் அடைக்கப்பட்டும் அதை நாம் நெகிழ்ந்துண்ணும் அவலத்தையும்.

➔ **"என்று தணியும் நம் இயற்கையின் தாகம்**
என்று ஒழியும் இந்த நெகிழியின் மோகம்!" என்னும் அருமையான பொம்மலாட்டப் பாடலின் மூலம் பெரும் விழிப்பை ஏற்படுத்தியது.

★ இயற்கைக்கும்மனிதனுக்கும்விலங்குகளுக்கும்பெரும்அறைகூவலை விடுத்திருக்கின்றது இந்த நெகிழி!

பொதுமக்களுக்கும் விழிப்புணர்வூட்டும் அழகான ஓர் பொம்மலாட்டம்

★ இராமகிருஷ்ணா மிஷன் அமைப்பினர் நம் பள்ளி வளாகத்தில் சிறப்பாகச் செய்தனர்.

★ அவர்களை உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

➔ **கேள்வி** - பொம்மலாட்டத்தில் உங்கள் மனம் கவர்ந்தது எது?

பசுமைதாசனார்

★ நெகிழிக்கு எதிரான அறைகூவல் விடுத்த பொம்மலாட்டப் பாடல்

➔ **கேள்வி** - பாடமுடியுமா?

பசுமைதாசனார் - (பாடுகின்றார்)

மண்ணுக்குள் மக்காது எரித்தாலும் எரியாது !
மண்ணையே மலடாக்கும் ஓசோனை ஓட்டையாக்கும்!
அனைத்தையும் அழித்துவிட்டு அதுமட்டும் நிலைத்திருக்கும் - நெகிழி
அரக்கனை ஒழிக்க அவதாரம் எடுப்போம் !

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **கேள்வியாளர்** - நெகிழே! எம் உயிருள்ளவரை உன்னைத் தொடமாட்டோம்!

➔ நெகிழே! உன் உயிர் எங்கிருந்தாலும் அதை விடமாட்டோம்! நெகிழை ஒழிப்போம்! நெஞ்சம் உயர்த்துவோம்! நன்றி ஐயா!

★ **பசுமைதானர்** - நன்றி! வாழ்க வளத்துடன்!

2. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

நெடுநல்வாடை காட்டும் மழைக்கால வருணனை

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**குளிர்கால நள்ளிரவு**		**கோவலர்களின் துன்பம்**
விலங்குகளின் துன்பம்	**திணை**	**துறை**	**முடிவுரை**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ பருவ மாற்றத்திற்கான காரணங்களை அறிந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு பெறுதல்.

முன்னுரை

★ ஓர் ஆண்டை **ஆறு பருவங்களாகப்** பிரித்து வாழ்ந்தவர் தமிழர்.

★ **ஐப்பசி**யிலும் **கார்த்திகை**யிலும் **அடைமழை** என்றனர்.

★ அடைமழைக்காலத்தில் முல்லை நில மக்களின் இயல்பு வாழ்கையில் ஏற்படும் மாற்றத்தை இக்கட்டுரையில் காண்போம்.

சிறப்புச் செய்தி

நெடுநல்வாடை

➔ **"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென" - நக்கீரர்

குளிர்கால நள்ளிரவு

★ மேகம் தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்தது.

★ உலகமே குளிரும்படி புதிய மழையைப் பூமியெங்கும் பொழிந்தது.

★ தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது. இதனைக் கோவலர் வெறுத்தனர்.

★ **எருமைகள்**, **பசுக்கள்**, **ஆடுகள்** போன்றவற்றை மேடான நிலத்தில் மேய விட்டனர்.

சிறப்புச் செய்தி

நெடுநல்வாடை

➔ **"ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்**
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்" - நக்கீரர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கோவலர்களின் துன்பம்

★ வழக்கமாக தாம் பழகிய இடத்தை விட்டுப் பிரிந்து வேறு இடத்திற்குச் சென்றனர்.

★ பிரிவுத் துன்பம் கோவலர்களை வாட்டியது.

★ கோவலர்களின் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களுடைய காந்தள் மலர் கசங்கியது.

★ கோவலர்கள் ஒன்றுசேர்ந்து கொள்ளி நெருப்பால் கைகளுக்குச் சூடேற்றினர்.

★ கைகள் சூடேறினாலும் அவர்களின் பற்கள் நடுங்கின.

சிறப்புச் செய்தி

நெடுநல்வாடைப் பாடல்

➔ **"மாமேயல் மறப்ப மந்திக் கூரப்**
பறவை படிவன வீழ கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசி
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்" - நக்கீரர்

குளிரினால் விலங்குகளுக்கு ஏற்பட்ட துன்பம்.

★ விலங்குகள் **மேய்ச்சலை மறந்தன** ★ மரங்களிலிருந்து **பறவைகள் வீழ்ந்தன**

★ குரங்குகள் **குளிரால் நடுங்கின** ★ பசுக்கள் பால் குடிக்க வந்த **கன்றுகளைத் தவிர்த்தன**.

★ பெருமழையும் குளிரும் மலையையே குளிரச்செய்தன.

திணை - வாகைத்திணை

★ வெற்றி பெற்ற அரசனும் வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத்திணையாகும்.

துறை - கூதிர்ப் பாசறை

★ போருக்குச் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடு.

முடிவுரை

★ மழைக்காலக் காட்சியை நெடுநல்வாடை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

★ சங்க இலக்கியத்தின் சிறப்பும் காட்சிபடுத்திய பாங்கும் இலக்கியம் படைக்க இயம்புகின்றது.

நூற்பயன்

★ பருவகால மாற்றம் மக்களின் இயல்பு தன்மையை மாற்றும் என்பதை முல்லை நில மக்களின் வாழ்வு மூலம் அறிந்தேன். பருவகாலத்திற்கேற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

3. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**மருதனின் மன வருத்தம்**	**ஊர்மக்களின் பொறுப்பற்ற தன்மை**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

காளியப்பனின் கழட்டல்	பிரேம்குமாரின் பிதற்றல்	தூங்கச் சென்றான் துவளவில்லை	களமிறங்கிய காளை
அள்ளிமுடித்தாள் அல்லி	மாரியின் மனம் மாறியது	ஊர்ப்பயணம் தவிர்த்து ஊருக்கு உழைத்த பெரியவர்	
ஊர்கூடி தேர் இழுத்தது போல	மகிழ்ச்சியில் மருதன்	முடிவுரை	நூற்பயன்

கற்றதன் நோக்கம்

★ தன் பொறுப்புணர்ச்சியால் ஊர் மக்களை ஒன்றிணைத்த மருதனின் செயலை அறிந்துக்கொள்ளவே!

முன்னுரை

★ தஞ்சை சிறுகதைத் தொகுப்பின் மைல்கல் இந்த 'முதல்கல்'

★ பூனைக்கு யார் மணி கட்டுவது? என்றில்லாமல் நானே புலியாய்ப் பாய்ந்து பூவுலகில் புதுமையைப் படைப்பேன் என்னும் இளைஞனின் கதை.

மருதனின் மன வருத்தம்

★ வளவனாற்றங்கரையில் நின்று வடக்கே பார்த்த மருதனுக்கு மனம் 'திக்' என்றது.

★ இன்னும் ஒரு நாள் மூழ்கினால்போதும் பயிர் முழுவதும் அழுகிவிடும் அபாயம்.

★ ஐயகோ! மறுபடி புதிதாக நாற்றுவிட்டு புதிய சாகுபடிதான் செய்ய வேண்டும்.

★ இந்தப் பயிருக்கே, அங்கே இங்கே பிடுங்கி ஏகப்பட்ட அல்லாடல்கள் அளவுக்கு மீறிய செலவுகள்.

★ மறுபடியும் சாகுபடியா? மருதனின் மனம் குமுறியது. காரணம் என்னவென ஆயிரம் சிந்தனைகள் ஓடியது.

★ ஊரைச் சுற்றி **3 கிலோ மீட்டர்** தூரத்திற்கும், நெய்வேலி **காட்டாமணக்குச் செடி**யால் மண்டிக் கிடக்கும் **வடிகால் மதகை** - **கீழ்க்குமிழி** - **வடிவாய்க்கால்** போன்றவைதான் என்பதை உணர்ந்தான்.

★ இந்த மலைப்பிற்கும் ஒரு சில நிமிட யோசனைக்குப் பிறகு வழி தெரிந்தது.

★ உற்சாகமாக நடக்கத் தொடங்கினான், மருதன்.

ஊர்மக்களின் பொறுப்பற்ற தன்மை - மாரியப்பனின் மறுப்பு

★ வடிவாய்க்காலில் மீன்பிடி வலை போட்டிருந்த மாரியப்பனிடம் மருதன் உதவி கேட்டான்.

★ "ஏதாவது நடக்கறக் காரியமா சொல்லு!" என்று அலட்சியப்படுத்தினான் மாரியப்பன்.

காளியப்பனின் கழட்டல்

★ ஊரில் பெரிய மிராசுதாரர் காளியப்பனிடம் மருதன் உதவி கேட்டான்.

★ சற்றே யோசித்த பெரியவர் 'இவன் சொல்லுவதைக் கேட்டால் நமக்குத்தான் ஆயிரம் இரண்டாயிரம் செலவு' என்றெண்ணினார்.

★ வெளியூர் போவதாகச் சொல்லி நாசுக்காகத் தன்னைக் கழட்டிக்கொண்டார்.

பிரேம்குமாரின் பிதற்றல் (அ) நாகூர் பிச்சையின் நழுவல்

★ கிராமத்தின் முதல்பட்டதாரியான பிரேம் குமார் என்னும் நாகூர்பிச்சையிடம் உதவி கேட்டான் மருதன்.

★ "அண்ணே இது ஒரு பெரிய வேலையா? இதைச் செய்யத்தான் **பி டபள்யூ டி டிப்பார்ட்மெண்ட்** இருக்கு! நாளைக்கு இஞ்சினரைப் பார்த்து நான் மனுகொடுக்கிறேன்" என்று நழுவி விட்டான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தூங்கச்சென்றான் - துவளவில்லை

★ ஏமாற்றத்தில் உடலும் மனமும் சோர்வாகவும் நடைபிணமாக நகர்ந்து வந்தான்.

★ அன்றிரவே அனைத்தையும் அறிந்த அல்லி ஆறுதல்மொழி கூறினாள்.

களமிறங்கிய காளை

★ தளும்புகின்ற வடிவாய்க்காலில் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியாக மண்டிக்கிடந்த காட்டாமணக்குச் செடிகளைச் சரக் சரக் என்று அறுத்து மேலே எறிந்து கொண்டிருந்தான் மருதன்.

அள்ளிமுடித்தாள் அல்லி

★ வைகறைப் பொழுதில் கணவனைத் தேடினாள் அல்லி. மருதன் அருகில் இல்லை.

★ அல்லியின் கணக்கு தப்பவில்லை வாய்க்கால் களத்தில் இருந்தான் மருதன். அள்ளி முடித்தால் கூந்தலை கணவனைக் கண்டவுடனே களத்தில் இறங்கினாள்.

மாரியின் மனம் மாறியது

★ வலைபோட்டுக்கொண்டே நடந்ததையெல்லாம் கவனித்த மாரிக்கு என்ன தோன்றியதோ என்னவோ? வலையை மடக்கி கரையில் போட்டான்.

★ 'நாசமா போன செடிங்க' என்று முணுமுணுத்தபடி வேட்டியை அவிழ்த்து முண்டாசு கட்டியபடி வாய்க்காலுக்குள் இறங்கிவிட்டான் மாரி.

ஊர்ப்பயணம் தவிர்த்து ஊருக்குழைத்த பெரியவர்

★ மருதன், அல்லி, மாரி மூவரும் மும்மரமாய் செடிகளை அறுத்தபடி இருந்ததைக் கண்டு அனிச்சையாக வண்டியிலிருந்து குதித்தார் பெரியவர்.

★ "வண்டியை வீட்டுக்குத் திருப்பிப் போடா எனக்கு இங்கக் கொஞ்சம் வேலை இருக்கு" என்று கூறிக்கொண்டே உடைகளைக் கழட்டிவிட்டார்.

★ துண்டைக் கட்டிக்கொண்டு வாய்க்காலில் துள்ளிகுதித்தார் பெரியவர்.

ஊர்கூடி தேர் இழுத்தது போல

★ இந்தச் செய்தி வண்டிக்காரன் மூலம் ஊருக்குள் பரவியது.

★ டீக்கடை, மாரியம்மன் கோவிலடி, என்று வெட்டிக்கதை பேசுபவர்களெல்லாம் உறுத்தல் தாங்காமல் வாய்க்காலில் கூடிவிட்டனர்.

மகிழ்ச்சியில் மருதன்

★ இனி மருதன் பணி இலகுவாக முடிந்திருக்கும் மருதன் மகிழ்ந்திருப்பான்.

★ மருதனின் பொறுப்புணர்வு ஊரையே மாற்றியது.

முடிவுரை

★ நம் மக்கள் நல்லவர்கள்தாம் ஆனால், நாம் முதலில் செய்ய வேண்டும் என்னும் தன்முனைப்பு இல்லாததால் முன்னேறாமல் வாழ்கின்றனர் என்பதை முதல்கல் மூலம் அறிந்தோம்.

நூற்பயன்

★ தன் பொறுப்புணர்வால் ஊரைத் திருத்திய மருதனைச் செயலைத் தெரிந்து கொண்டேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4.புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.

விடுநர்

வ. கிள்ளிவளவன்,
முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் - 610001.

பெறுநர்

மதிப்பிற்குரிய மின்வாரியப் பொறியாளர்,
தமிழ் நாட்டரசு மின்வாரியம், திருத்துறைப்பூண்டி வட்டம்,
திருவாரூர் - 610001.

பொருள் - 'கஜா' புயல் தாக்கத்தினால் எங்கள் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின்-இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி வேண்டல்.

மதிப்பிற்குரிய ஐயா,

மாபெரும் வருத்தத்துடன் வணக்கத்தைத் தெரிவிக்கின்றோம். எங்கள் ஊர் முத்துப்பேட்டையில் கஜா புயலினால் மாபெரும் பாதிப்புக்குள்ளாகி இன்னல்களைச் சந்திக்கின்ற ஊர்.

கஜாபுயலின் கொடூரம்

★ எங்கள் முத்துப்பேட்டைப் பகுதியில் ஏறத்தாழ 115 கிலோமீட்டர் வேகத்தில் புயல் தாக்கியது.
★ அதிக பட்சமாக 46 மனித உயிர்களும் 731 கால் நடைகளும் உயிர் இழந்தனர்.
★ 1,70,474 மரங்கள் வேரோடுப் பிடுங்கி எறியப்பட்டு மின்கம்பிகள் தொங்கின.

மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

★ 88,000 ஹெக்டார் பரப்பளவில் நெற் பயிர்கள், வாழை, தென்னை மரங்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டன.
★ 6,942 குடிசைவீடுகள் முற்றிலுமாகச் சேதமடைந்தன. 30,404 குடிசைவீடுகள் பகுதியாகச் சேதமடைந்தன.

கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள்

★ மொத்தமாக ,13,533 மின் கம்பங்கள் சேதமடைந்தன. 802 மின் வினியோக மின்மாற்றிகள் சேதமடைந்தன.

பாதிப்புகள்

★ கடந்த 15 நாட்களாக மின்சாரம் இல்லாததால், தகவல் தொடர்பு முற்றிலும் அற்றுவிட்டது.
★ நீர் இல்லாமல் உணவில்லாமல் அன்றாட வாழ்வாதரம் வலுவிழந்துள்ளது.
★ உண்ணல் உறங்கல் இருத்தல் தூங்கல் முதல் அனைத்துமானுட இயல்புவாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.
★ அலுவல் செல்லும் பணியாளர்கள் முதல் பிணியாளர்கள் வரை நடைபிணங்களாகவே வாழ்கின்றனர்.
★ மின்கம்பிகளில் சிக்கி பறவைமுதல் மனிதர் வரை அனைவருடைய பிணவாடையைச் சகிக்க இயலவில்லை.
★ மின்கம்பிகளில் சிக்கி மீதமுள்ள உயிரினங்களும் ஆங்காங்கே இறக்கின்றன.
★ புயலில் மின்கம்பிகளாக இருந்தவை கொன்றன. புயலுக்குப்பின் அறுந்தவை கொல்கின்றன.
★ உதவும் மனம் கொண்ட பெரியோரே மிக விரைவில் முதன்மைப் பணியாக அறுந்துகிடக்கும் மின்கம்பிகளைப் பழுதுநீக்கிச் சரிசெய்யுமாறு அருள்கூர்ந்து வேண்டுகின்றேன்.

நாள் - **20.11.2018**
இடம் - **திருவாரூர்**

நன்றியுடன்
ஊர்பொதுமக்கள் சார்பாக
வ. கிள்ளிவளவன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 3

பண்பாடு

சுற்றத்தார் கண்ணே உள

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

விடை - **இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.

ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத் திணை பாடினான்

அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 இ) 4,3,1,2 ஈ) 2,4,1,3

விடை - **இ) 4,3,1,2**

3. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க

மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

விடை - **அறிவியல் மாணவர்கள் வரிசையில்நின்று கண்காட்சியைக் கண்டனர்.**

4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

முன்	★ அவன் முன்வந்து கூறினான்	★ அவன்முன் வந்து கூறினான்
தானே	★ அவள் தானே சென்றாள்	★ அவள்தானே சென்றாள்
கொண்டு	★ புத்தகத்தை, கொண்டு சென்றான்.	★ புத்தகத்தைக்கொண்டு எழுதினான்.
விட்டான்	★ அவன் பாலைக் குடித்துவிட்டான்	★ அவன் பாலைக்குடித்து விட்டான்

5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.

காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கம்

★ தொடர்களில் காற்புள்ளி இடாமல் எழுதினாலோ இடம் மாற்றி இட்டாலோ பொருள் மாறிவிடும்.

➔ (எ.கா.) அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.

★ **பொருள்** - ஒரு பெண் தன் அக்காளின் வீட்டிற்குச் சென்றாள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ (எ.கா.) அவள் அக்கா, வீட்டிற்குச் சென்றாள்.

★ **பொருள்** - ஒரு பெண்ணின் அக்காள் தன் வீட்டிற்குச் சென்றாள்.

6. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதும் முறை

★ இரட்டைக்கிளவித் தொடர்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

இரட்டைக் கிளவித் தொடர்கள்

★ சலசல - அருவியில் நீர் **சலசல** எனக் கொட்டியது. ★ கலகல - கலா **கலகல** எனச் சிரித்தாள்.

7. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

சரியான தொடர்

★ **திருவளர்செல்வன்** ★ இத்தொடர் ஒரு **வினைத்தொகை**த் தொடராகும்.

இலக்கண விதி

★ வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் **வல்லினம் மிகக்கூடாது**.

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை -------

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

விடை - **ஆ) திருமணமும் குடும்பமும்**

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர் ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி

இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

விடை - **இ) 2,4,1,3**

3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவைஅனைத்தும்

விடை - **ஈ) இவை அனைத்தும்**

4. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

விடை - **இ) இராமன், சுக்ரீவன்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

விடை - **ஈ) தந்தைவழிச் சமூகமுறை**

குறுவினா

1. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.

புக்கில்

★ **தற்காலிகமாகத் தங்குமிடம்** **'புக்கில்'** எனப்படும்.

தன்மனை

★ திருமணத்திற்குப் பிறகு **கணவனும் மனைவியும்** பெற்றோரிடமிருந்து பிரிந்து **தனியாக வாழுமிடம்** **'தன்மனை'** ஆகும்.

2. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து

★ இராமனிடம் மிகுதியான **அன்பும் பக்தியும்** கொண்டவள் சவரி.

★ இராமனைக் கண்டதால், தன் பொய்யான **உலகப்பற்று அழிந்தது.**

★ தான் நீண்ட காலம் மேற்கொண்டிருந்த **தவம் பலித்தது.**

★ தன் **பிறவி ஒழிந்தது** என்று **'நிலையாமை'** குறித்துச் சவரி உரைக்கின்றாள்.

3. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி உருவகப்படுத்தும் முறை

★ **ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு** ஆகியவை எதிர்பாராத நிகழ்வுகள்.

★ எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி **'விருந்தாளிகள்'** என்று உருவகப்படுத்துகிறார்.

4. "துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது" என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?

அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்

பொருந்தும் பழமொழி ★ அ. **நிழலின் அருமை வெயிலில் தெரியும்**

காரணம்

★ ஒருவனுக்குத் துன்பம் ஏற்பட்டால்தான், இன்பம் என்ற ஒன்று உள்ளதை உணர முடியும் என்பது இராமனின் கூற்றுக்கான பொருள்.

★ ஒருவன் கடும்வெயிலில் அவதிப்படும்போதுதான் நிழலின் தேவை தெரியும் என்பது பழமொழியின் பொருள்.

★ எனவே, இவை இரண்டும் இணையான வரிகள் ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.

விரிந்த குடும்பம்

★ சங்க காலத்தில் **தனிக்குடும்ப அமைப்பு** விரிவுபெற்றது.

★ கணவன், மனைவியுடன் யாரேனும் ஒருவரின் தந்தையும் சேர்ந்து வாழ்ந்தனர்.

★ இவ்வகையான குடும்பமுறை **'விரிந்த குடும்பமுறை'** ஆகும்.

★ சங்க காலத்தில் செவிலித்தாயும்(வளர்ப்புத்தாய்), தோழியும் (செவிலித்தாயின் மகள்) குடும்பத்தில் முதன்மையான இடம் பெற்றிருந்தனர்.

குடும்ப வாழ்வின் பயன்

★ குடும்ப வாழ்வின் இறுதிக் காலத்தில் தலைவனும் தலைவியும் (கணவனும் மனைவியும்) இணைந்து,

★ தன் பிள்ளைகளுடனும் அறத்தினை விரும்பிய உறவினரோடும் சேர்ந்து, மனையறம் காத்து வந்தனர்.

★ **மனையறம் காத்தலே** குடும்ப வாழ்வின் பயன் எனக் கருதினர்.

கூட்டுக்குடும்பம்

★ சங்க காலத்தில் பிள்ளைகளோடும் உறவினரோடும் வாழ்ந்த நிலையே **விரிந்த குடும்பம்**.

★ இன்றைய காலக்கட்டத்தில், கணவன், மனைவி, பிள்ளைகள், தாத்தா, பாட்டி என அனைவரும் இணைந்து வாழ்கின்றனர். ★ இவ்வாறு, இணைந்து வாழும் குடும்பம் **கூட்டுக்குடும்பம்** ஆகும்.

★ சங்க காலத்தில் இருந்த விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாகக் **கூட்டுக்குடும்பம்** உள்ளது.

2. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

பிறப்பால் நால்வர்

★ அயோத்தியின் அரசன் **தசரதனின் மகன்** இராமன். ★ இராமனுக்கு உடன்பிறந்த தம்பிகள் மூன்று பேர்.

★ எனவே, **பிறப்பால் இராமன் நால்வர்** ஆனவன்.

குகனோடு ஐவர்

★ இராமன், கங்கை கரையில் **வேடர் குலத் தலைவன்** குகனைக் காண்கிறான்.

★ இராமன், குகனின் அன்பிற்கு ஆட்பட்டான்.

★ குகனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்டு, **குகனோடு ஐவர்** ஆனான்.

சுக்ரீவனுடன் அறுவர்

★ கிட்கிந்தையில், **வானரங்களின் தலைவன்** சுக்ரீவனைக் காண்கிறான்.

★ சுக்ரீவனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்டு, **சுக்ரீவனுடன் அறுவர்** ஆனான்.

வீடணனோடு எழுவர்

★ இலங்கை வேந்தன் **இராவணனின் தம்பி** வீடணன்.

★ சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என வீடணன் இராவணனிடம் கூறுகின்றான்.

★ இராவணன் ஏற்க மறுக்கவே, அவனைவிட்டு நீங்கி இராமனுடன் சென்று சேர்கிறான்.

★ இராமன், வீடணனையும் ஏற்றுக்கொண்டு, **வீடணனோடு எழுவர்** ஆனான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. "வருபவர் எவராயினும்

நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம்

★ **ஜலாலுத்தீன் ரூமியின் கவிதை**யின் தமிழாக்கத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதையை **'தாகங்கொண்ட மீன்கள்'** என்ற பெயரில் தமிழாக்கம் செய்தவர் **என். சத்தியமூர்த்தி**.

பொருள்

★ நம் வீட்டிற்கு விருந்தினராக வருகின்றவர்கள் நல்லவரோ கெட்டவரோ, யாராக இருந்தாலும் வரவேற்க வேண்டும்.

★ ஒவ்வொருவரும் நமக்கு ஏதேனும் ஒருவகையில் வழிகாட்டுகின்றனர்.

விளக்கம்

★ **ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு** ஆகியவை நம் வீட்டிற்கு வரும் எதிர்பாராத விருந்தாளிகள் என்கிறார் கவிஞர்.

★ **வக்கிரம், அவமானம், வஞ்சனை** ஆகியவை வீட்டிற்கு வருகின்றன.

★ வருபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

★ ஏனெனில், இவை அனைத்தும் நம் வாழ்வில் ஏதேனும் ஓர் அனுபவத்தை ஏற்படுத்தக் கூடியவை.

4.தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நான் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள்

★ வீட்டில், என்னால் செய்ய முடியும் வேலைகளை நானே செய்வேன்.

★ என் உடைகளை நானே துவைப்பேன். ★ தம்பி, தங்கைகளைப் பாதுகாப்பேன்.

★ வீட்டில் பெற்றோர் இல்லாதபோது, வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்வேன்.

★ காலை சிற்றுண்டியை நானே தயாரித்துக் கொள்வேன்.

★ வீட்டிற்குத் தேவையான பொருட்களைக் கடைக்குச் சென்று வாங்கி வருவேன்.

5.சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

சடாயு

★ இராவணன் சீதையைச் சிறையெடுத்து, இலங்கைக்குக் கொண்டுச் சென்றான்.

★ **சடாயு** என்னும் **கழுகு வேந்தன்** இராவணனை இடையில் தடுக்க முயற்சி செய்தான்.

★ சடாயு, இராவணனுடன் சண்டையிட்டுக் காயப்பட்டான்.

இராமனைச் சந்தித்தல்

★ சடாயு, இராமனிடம் நடந்தவற்றைக் கூறி இறந்துவிட்டான்.

★ இராமனின் **தந்தைக்கு** நண்பன் **சடாயு**.

★ எனவே, சடாயு தனக்கும் தந்தைதான் என்று எண்ணி அவனுக்கான இறுதிச் சடங்குகளை இராமனே செய்தான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இறுதிச் சடங்கு

★ இராமன், விறகிற்கு **அகில், சந்தனக் கட்டை**களைக் கொண்டு வந்தான்.

★ **தருப்பைப் புற்களை** ஒழுங்குபட அடுக்கினான். ★ பூக்களைக் கொண்டுவந்து தூவினான்.

★ நன்னீரைக் கொண்டுவந்தான். ★ மணலினால் மேடை அமைத்தான்.

★ மேடைக்கு தன் தந்தையாகிய சடாயுவைக் கொண்டு வந்து இறுதிச் சடங்கு செய்தான்.

நெடுவினா

1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**சமூகத்தின் படிநிலை**	**திருமணம்**
மணந்தகம்	**தாய்வழிக் குடும்பம்**	**தனிக்குடும்பம்**	**விரிந்த குடும்பம்**
இல்லற வாழ்வின் பயன்	**முடிவுரை**	**நூற்பயன்**	

கற்றதன் நோக்கம்

★ குடும்பம் என்னும் அமைப்பிலிருந்தே மனிதச் சமூகம் என்னும் அமைப்பு கட்டமைக்கப்படுவதை அறிந்து கொள்ளவே!

முன்னுரை

★ குடும்பம் என்பது சிறிய அமைப்பு.

★ குடும்பத்திலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.

★ சமூகத்தின் ஓர் அலகாக விளங்குவது குடும்பம் ஆகும்.

சமூகத்தின் படிநிலை

★ மனித சமூகம் குடும்பம் என்னும் அமைப்பில் தொடங்குகிறது.

★ **குலம்** ★ **கூட்டம்** ★ **பெருங்குழு**

★ சமூகம் என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது.

★ எனவே, குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படையாகும்.

திருமணம்

★ குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.

★ குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து செயல்படுகின்றன.

★ **'குடும்பு'** என்னும் சொல்லுக்குக் **'கூடி வாழுதல்'** என்று பொருள்.

மணந்தகம்

★ கணவனும் மனைவியும் சேர்ந்து வாழக் கூடிய இடம் **மணந்தகம்**.

★ முதல்குழந்தை பிறக்கும்வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது.

★ தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தாய்வழிக் குடும்பம்

★ தாய்வழிக் குடும்பத்தில், பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்கள்.

★ எனவே, பெண்குழந்தைகள் பிறப்பதை அனைவரும் விரும்பினர்.

★ தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்து பெண்களுக்குச் சென்று சேர்ந்தது.

தனிக்குடும்பம்

★ தாய், தந்தை, குழந்தை மூவரும் உள்ள குடும்பம் **தனிக்குடும்பம்** ஆகும்.

★ தனிக்குடும்பம் தோன்றுவதற்கு முந்தைய நிலை **தொடக்கநிலைக் குடும்பங்கள்** ஆகும்.

★ தொடக்கநிலைக் குடும்பங்கள் பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விரிந்த குடும்பம்

★ சங்கக் காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்றது.

★ கணவன், மனைவியுடன் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்ந்தனர்.

★ இத்தகைய குடும்பமுறை **'விரிந்த குடும்பமுறை'** எனப்படுகிறது.

இல்லற வாழ்வில் பயன்

★ கணவனும் மனைவியும் இணைந்திருந்து அறச் செயல்களில் ஈடுபட்டனர்.

★ அன்புமிக்க சுற்றத்தோடு சேர்ந்து வாழ்ந்தனர்.

★ இல்லற வாழ்வில் கணவனும் மனைவியும் மனையறம் காத்தனர்.

★ மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகக் கருதினர்.

முடிவுரை

★ சங்ககாலச் சமூகம், குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்தது.

★ இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கின்றது.

★ இக்குடும்ப அமைப்புமுறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகும்.

நூற்பயன்

★ பண்டைத் தமிழரின் குடும்ப, சமூக அமைப்புகளைப் பற்றி அறிந்துக்கொண்டேன்.

2. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	முன்னுரை	வேடுவர் தலைவனுடன் கொண்ட உறவு
சடாயுவைத் தந்தையாக ஏற்றல்	சவரியைத் தாயாக ஏற்றல்	வானரத் தலைவன் சுக்ரீவன்
வீடணனை உடன்பிறந்தவனாகக் கொள்ளல்	முடிவுரை	நூற்பயன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கற்றதன் நோக்கம்

★ இராமனின் பண்பு நலன்களைப் பற்றி அறிந்துக்கொண்டு அதன்படி வாழவதற்காகவே!

முன்னுரை

★ கம்பர்தன் காவியத்தில் இராமனைப் பண்பின் படிமமாகப் படைத்துள்ளார்.

★ இராமன், அனைத்து உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பு கொண்டவனாகத் திகழ்கிறான்.

★ இராமன் பிறஉயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையை இங்குக் காண்போம்.

வேடுவர் தலைவனுடன் கொண்ட உறவு

★ **வேடுவர் தலைவன் குகன்**. ★ இராமன், கங்கையைக் கடக்க குகன் உதவுகிறான்.

★ குகன், இராமனிடம் அளவுக் கடந்த அன்பு கொண்டிருந்தான்.

★ இராமன் இளவரசனாக இருந்தாலும், வேடனான குகனைத் தன் உடன்பிறப்பாக ஏற்றுக் கொண்டான்.

★ குகனைத் தன் உயிருக்கு இணையானவன் என்கிறான், இராமன்.

➔ **"என்உயிர் அனையாய் நீ**
இளவல் உன் இளையான்" - கம்பராமாயணம்

சடாயுவைத் தந்தையாக ஏற்றல்

★ இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் செல்கிறான்.

★ **சடாயு** என்னும் **'கழுகு வேந்தன்'** இராவணனைத் தடுத்துச் சண்டையிட்டான்.

★ சண்டையில் காயப்பட்டு சடாயு இறந்து போகிறான்.

★ சடாயு, இராமனின் தந்தையான தசரதனின் நண்பன்.

★ எனவே, சடாயுவையும் தன் தந்தையாக எண்ணி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

சவரியைத் தாயாக ஏற்றல்

★ இராமனிடம் மிகுந்த **அன்பும் பக்தியும்** கொண்டிருந்தவள், **சவரி.**

★ இராமன் சீதையைத் தேடிச் சென்றபோது, சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளச் செய்தவள், சவரி.

★ இராமன், சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினாள்.

★ இராமனுக்கும் இலக்குவனுக்கும் விருந்தளித்து வழியனுப்பினாள், சவரி.

➔ **"வேண்டிய கொணர்ந்து நல்க**
விருந்து செய்து இருந்த வேலை" - கம்பராமாயணம்

வானரத் தலைவன் சுக்ரீவன்

★ சீதையைத் தேடிவரும் இராமன், கிட்கிந்தையில் **வானரத் தலைவன் சுக்ரீவனை**க் காண்கிறான்.

★ சுக்ரீவன், இராமன் சீதையை மீட்டுவருவதற்குப் பெரும் உதவி செய்கிறான்.

★ இராமன், சுக்ரீவனைத் தன் உயிர் நண்பனாக ஏற்றுக் கொள்கிறான்.

➔ **"சுற்றம் உன் சுற்றம் நீ என்**
இன் உயிர்த் துணைவன் என்றான்" - கம்பராமாயணம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வீடணனை உடன்பிறந்தவனாகக் கொளல்

★ சீதையைக் கவர்ந்துச் சென்ற **இராவணனின் தம்பி வீடணன்**.

★ சீதையைக் கவர்ந்தது தவறு என்று வீடணன் இராவணனிடம் கூறுகின்றான்.

★ எனினும், இராவணன் அவன் பேச்சைக் கேட்க மறுத்துவிடுகிறான்.

★ வீடணன், இராமனிடம் வந்து அடைக்கலம் அடைந்தான்.

★ இராமன் அவனைத் தன் உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொண்டான்.

➔ **"அகன் அமர் காதல் ஐய**
நின்னொடும் எழுவர் ஆனோம்"

முடிவுரை

★ இராமன் சிறந்த நண்பனாக, மகனாக, சகோதரனாக படைக்கப்பட்டுள்ளான்.

★ மனிதர்களிடம் மற்றுமின்றி, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்டினான், இராமன்.

★ எனவே, **இராமன் பண்பின் படிமமாக** விளங்குகின்றான்.

நூற்பயன்

★ **இராமனின் பண்பு நலன்களைப் பற்றி அறிந்துக் கொண்டேன்.**

3. "உரிமைத்தாகம்" கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்தால்" கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

குறிப்புச் சட்டகம்

முன்கதை	**தம்பியை வெறுத்த அண்ணன்**	**அண்ணணிடம் சண்டையிட்ட தம்பி**	
தம்பியின் நிலம் பறிபோனது	**தம்பியின் குடும்பம் பிரிந்தது**	**நண்பன் முத்தரசு அறிவுரை**	**நாட்டாமை நம்பிராசன்**
உண்மை உணர்ந்தான் முத்தையன்	**முடிவுரை**	**நூற்பயன்**	**நன்றி**

கதை மாந்தர்கள்

உரிமைத் தாகம் கதையின் கதை மாந்தர்கள்

➔ **முத்தையன்** - அண்ணன்; **வெள்ளைச்சாமி** - தம்பி; **மூக்கம்மா** - முத்தையாவின் மனைவி; **பங்காரு சாமி** - வட்டிக் கடைக்காரர்

என் கதையில் வரும் கதை மாந்தர்கள்

➔ நண்பன் **முத்து**; நாட்டாமை **நம்பிராசன்**; **ஊர்ப் பொதுமக்கள்**

சொல்வதன் நோக்கம்

★ "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்னும் பாரதியின் பாடல் 'நிலத்தொடு ஒன்றிய எளிய மக்களின் உணர்வுகளின் மூலம் பிரதிபலிப்பதை மெய்ப்பிக்கவே சொல்கின்றேன்'.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

முன்கதை சுருக்கம்

★ முத்தையனுக்குத் தெரியாமல் அவன் தம்பி வெள்ளைச்சாமி, தன் நிலத்தை வட்டிக்காரர் பங்காரு சாமியிடம் இரண்டாண்டுகளுக்கு முன்பே அடமானம் வைத்துவிட்டான்.

★ வெள்ளைச்சாமி முறையாக வட்டி கட்டியும் பங்காரு சாமி நிலத்தை அபகரிக்க முயன்றான். இதை அறிந்த தம்பியின் மனைவி சண்டையிட்டதை, முத்தையனின் மனைவி மூக்கம்மா அவனிடம் சொன்னாள்.

தம்பியை வெறுத்த அண்ணன்

★ இதைக் கேட்டு அண்ணன் முத்தையன் **"அவனுக்குத் தேவைதான் அன்று நிலத்தை பாகம் போட்டபோது என்னவெல்லாம் பேசி என்னை அவமானப்படுத்தினான்?"** என்று சொன்னான்.

★ உடனே அதைப் பேசும் நேரமில்லை இது, எனக் கூறிய முத்தையன் மனைவி வெள்ளைச்சாமிக்கு உதவும்படி வேண்டினாள்.

★ **"அப்பன் முகத்தை அவன் பார்த்திருப்பானா? ஆனால், நான் ஓர் அப்பனாக இருந்து அவனுக்குச் செய்த உதவியை அவன் மறந்து பேசிய நன்றிகெட்ட சொற்களுக்கு அவனுக்கு இது தேவை தான்"** என்று மனைவியிடம் சொல்லி தன் தம்பியை வெறுத்தான்.

அண்ணணிடம் சண்டையிட்ட தம்பி

★ இதையெல்லாம் வீட்டிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த தம்பி "உன்னுடைய உதவியை நம்பி நானில்லை நான் அடகு வைத்த நிலத்தை, எப்படி மீட்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும்"

★ "யாரையும் நம்பி நான் பிறக்க வில்லை! நீயும் வேண்டாம் நீ கொடுத்த நிலமும் வேண்டாம்! நீ எனக்கு உதவ வேண்டாம் உன் உறவும் வேண்டாம்" எனக் கூறிச் சண்டையிட்டு, அண்ணனை உதறித் தள்ளினான்.

★ ஊர்ப் பொதுமக்கள் இவர்களைக் கண்டு ஏளனமாகப் பேசினார்கள்.

தம்பியின் நிலம் பறிபோனது

★ இந்தச் செய்தியெல்லாம் பங்காரு சாமியின் காதுகளுக்கு தேனாகப் போய்ச் சேர்ந்தது.

★ இதுதான் சமயம் எனக் கருதி கோயில்பட்டிக்குப் போய் வக்கிலிடம் நோட்டைக் கொடுத்து நோட்டீஸ் விட்டு பயமுறுத்தி வெள்ளைச்சாமியின் நிலத்தை எழுதி வாங்க முற்பட்டார்.

★ அண்ணன் மீதிருந்த கோபத்தில் நிலத்தை பங்காரு சாமிக்கே எழுதிக் கொடுத்துவிட்டான் வெள்ளைச்சாமி.

தம்பியின் குடும்பம் பிரிந்தது

★ தன் கணவன் வெள்ளைச்சாமி செய்த மதிகெட்ட செயலை அறிந்து **"இனி உணவுக்கும் உறவுக்கும் உழைப்புக்கும் எங்கே இடம்?"** எனக் கேட்டு அவனிடம் நாள்தோறும் சண்டையிட்டாள்.

★ பதிலுக்கு தம்பியும் சண்டையிட்டான் அவளை கடுமையாகக் கண்டிக்கவே, அவள்தன் தாய்வீடு நோக்கிப் புறப்பட்டுவிட்டாள்.

நண்பன் முத்தரசு அறிவுரை

★ நடந்ததைக் கேள்வியுற்ற முத்தையாவின் நண்பன் முத்தரசு மிகவும் மனம் வருந்தினான். நேரடியாக முத்தையாவின் வீட்டிற்கு வந்தான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ "சிறியவன் தவறு செய்திருந்தால் நீதான் திருத்த வேண்டும் நீயே அவனை வெறுத்தால் எப்படி? தாய்தந்தை இல்லாதபோது தலைமகன்தான் வீட்டுக்குத் தந்தையாவான். ஏன் இப்படி நடந்து கொண்டாய்? என்று அன்பாகக் கடிந்துகொண்டு அவனுக்கு இனிமேலாவது உதவிசெய்!" என்று அறிவுரை வழங்கினான்.

நாட்டாமை நம்பிராசன்

★ இவற்றை கேட்டுக்கொண்டே முத்தையன் வீட்டுக்கு உள்ளே நுழைந்த நாட்டாமை நம்பிராசனைக் கண்டவுடனே, முத்தையா, மூக்கம்மா, முத்தரசு மூவரும் எழுந்து வணங்கினார்கள்.

★ "நடந்ததைவையெல்லாம் கேள்விபட்டேன் தம்பி முத்தையய்யா!

★ **"ஆற்றில் ஒடும்தண்ணீரை அடி அடியென அடித்தாலும் தண்ணீர் இரண்டாக உடையாது"**

★ அண்ணன்தம்பி உறவுகளும்அப்படித்தான்என்ன ஆயிரம்சண்டை வந்தாலும்இரத்தபந்தம்இரண்டாகாது.

★ **'ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'** என்பதுபோல் வீடு ரெண்டுபட்டதால் பங்காரு சாமிக்குக் கொண்டாட்டம் வந்துவிட்டது. இனி நீ தான் உன் தம்பியைக் காப்பாற்ற வேண்டும். என அறிவுரை வழங்கினார்.

உண்மையை உணர்ந்தான் முத்தையன்

★ ஒரே வாரத்தில் இவையெல்லாம் நடந்து, தம்பி வீடே இரண்டானது.

★ முத்தையன் சற்று அமர்ந்து சிந்தித்தான் **"ஐயோ அவன் சிறியவன், பெரிய மனம் வைத்து நாம் அவனுக்கு உதவியிருக்கலாமே"** என்று மனம் வெதும்பினான்.

★ **"நண்பர்களும் நாட்டாமையும் வந்து அறிவுரை வழங்கும் அளவுக்குத் தவறு செய்து விட்டோமே!"** என்று மனம் வெதும்பினான் அண்ணன் முத்தையன்.

முடிவுரை

★ **"ஒருவருக்கொருவர் வெறுப்பை உமிழாமல் அன்பால் இணைந்து வாழ்வதே வாழ்க்கை"** என்பதை இக் கதை நமக்கு நன்கு அறிவுறுத்தும் என்று நான் நம்புகின்றேன்.

கதைப்பயன்

★ அண்ணன் தம்பி உறவில் விட்டுக்கொடுக்கும் தன்மையால் விளையும் நன்மைகளை உணர்ந்தேன். நானும் அவ்வாறே விட்டுக்கொடுத்து வாழ்வேன்.

வாழ்வியல்

திருக்குறள்

கற்பவை கற்றபின்

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.

அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விடை - **இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்.**

2.கடலின் பெரிது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

விடை - **ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

3.பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

"நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்"

அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும் நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று சூழினும் தான்முந்து உறும்

விடை - **அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு.**

4.கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகளை விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்

விரைகிறது மனம்
பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
"போ அந்தப் பக்கம்"
உதறிச் செல்கிறேன் குழந்தையை.

பொருந்தும் திருக்குறள்

★ "செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்?" - திருவள்ளுவர்

பொருள்

★ தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடம் சினம் கொள்ளாமல் இருப்பவரே உண்மையில் சினம் காப்பவர்.

★ வலியவரிடத்தில், சினத்தைக் காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

5.இலக்கணக்குறிப்புத் தருக.

அன்பும் அறமும், நன்கலம், மறத்தல், உலகு

★ அன்பும் அறமும் - **எண்ணும்மை**
★ நன்கலம் - **பண்புத்தொகை**
★ மறத்தல் - **தொழிற்பெயர்**
★ உலகு - **இடவாகுபெயர்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6.பொருள் கூறுக. வெகுளி, புணை, ஏமம், திரு

★ வெகுளி - சினம் (கோபம்) ★ புணை - படகு

★ ஏமம் - பாதுகாப்பு ★ திரு - செல்வம்

7. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி

விடை **- செய்யாமல் செய்த உதவி**

8.பகையும் உளவோ பிற? - பொருள் கூறுக

பகையும் உளவோ பிற

★ சினம் ஒருவரின் முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் கொன்றுவிடும்.

★ எனவே, சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.

சிறப்புச் செய்தி

➔ **"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**

பகையும் உளவோ பிற?"

9.செல்லிடத்து - புணர்ச்சி விதி கூறுக.

செல்லிடத்து - செல் + இடத்து

★ விதி 1 - 'தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' செல்ல் + இடத்து

★ விதி 2 - 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' செல்லிடத்து

10. பொருத்துக.

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2) ஞானத்தின் மாணப் பெரிது

இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது

அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 1,2,3,4 ஈ) 2,3,4,1

விடை **- ஆ) 3,4,1,2**

குறுவினா

1. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

முயல்வாருள் தலை

★ அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ வேண்டும்.

★ அவ்வாறு வாழ்பவர் முயற்சிச் சிறப்புடையோரைவிட மேம்பட்டவர்.

2.ஞாலத்தின் பெரியது எது?

ஞாலத்தின் பெரிது

★ உரிய காலத்தில் ஒருவர் சிறிய உதவி செய்திருப்பார்.

★ அவர் செய்த உதவி உலகத்தைவிட பெரியதாகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3.மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?

மறக்கக் கூடாதது ★ ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறக்கக் கூடாது.

மறக்கக் கூடியது ★ ஒருவர் நமக்குச் செய்த தீமைகளை உடனே மறந்துவிட வேண்டும்.

4.செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?

செல்வம் இருப்பதற்கான வழி

★ ஒருவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாமல் இருக்க வேண்டும்.

★ அவ்வாறு இருப்பதே ஒருவருடைய செல்வம் குறையாமல் இருப்பதற்கான வழியாகும்.

5.சினத்தை ஏன் காக்க வேண்டும்?

சினத்தைக் காக்க வேண்டும்

★ ஒருவர் சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும்.

★ சினத்தைக் காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

சிறுவினா

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் வரும் அணியை விளக்குக.

அணி - ★ **நிரல்நிறை அணி**

அணி விளக்கம்

★ ஒரு சொல் ஒரு வரிசையில் நிறுத்தி, அவற்றோடு பொருள் தொடர்புடைய வேறு சொல்லை அடுத்த வரிசையில் நிறுத்துவது நிரல்நிறை அணி ஆகும்.

சிறப்புச் செய்தி

➔ **"நிரல் நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே"** - தண்டி, 67

குறட்பா

★ **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"**

பொருள்

★ அன்புடன் வாழ்வதே வாழ்க்கையின் பண்பு. ★ அறத்தோடு வாழ்வதே வாழ்க்கையின் பயன்.

அணி பொருத்தம்

★ இக்குறட்பாவில், முதலடியில் **அன்பு**, **அறன்** ஆகிய சொற்கள் அமைந்துள்ளன.

★ அதற்கு இணையாக இரண்டாவது அடியில் **பண்பு**, **பயன்** ஆகிய சொற்கள் அமைந்து பொருள் தருகின்றன. எனவே, இது **நிரல்நிறை அணி** ஆகும்.

கூடுதல் தகவல்

★ நிரல்நிறை அணி இரண்டு வகைப்படும். அவை

★ **நேர் நிரல்நிறை அணி** ★ **எதிர் நிரல்நிறை அணி**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவம்

★ அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. ★ அறத்தோடு வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன்.

➔ **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது."**

★ அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ வேண்டும்.

★ அவ்வாறு வாழ்பவர் முயற்சிச் சிறப்புடையோரைவிட மேம்பட்டவர்.

★ இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம் தலை.

★ ஒருவர் உலகத்தில் வாழ வேண்டிய நெறியோடு வாழ வேண்டும்.

★ அவ்வாறு வாழ்பவர் வானத்தில் உறையும் தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவார்.

➔ **"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்."**

3. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.

மண்ணுலகும் விண்ணுலகும் ஈடாகாது

★ ஒருவர் தனக்கு எந்தவித உதவியும் செய்யாத நிலையில், தான் அவருக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் ஈடாகாது.

➔ **"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்ற லரிது."**

உலகைவிட பெரியது

★ உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி சிறிதாக இருக்கும்.

★ ஆனால், அவர் செய்த உதவி உலகத்தைவிட பெரியதாகும்.

➔ **"காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும் ஞாலத்தின் மாணப் பெரிது."**

கடலைவிட பெரிது

★ எந்தவித பயனும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவி கடலைவிட பெரியது.

➔ **"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது."**

4. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

சினத்தால் வரும் கேடுகள்

★ சினத்தால் **தீமையான விளைவு**கள் ஏற்படும். ★ முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் அழித்துவிடும்.

★ சினமே ஒருவருக்குக் **கொடிய பகை**யாகும். ★ சினம் நம்மையே அழித்துவிடும்.

★ **தன்னையே அழிக்கும்** நெருப்பு போன்றது சினம்.

★ ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்பைச் சினம் அழித்துவிடும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5.கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.

➔ சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

அணி - ★ ஏகதேச உருவக அணி

அணி விளக்கம்

★ கவிஞர் எடுத்துக்கொண்ட இரண்டு ஒப்பீடுகளில் **ஒன்றை மட்டுமே** உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.(ஏகம் - ஒன்று, தேசம் - பக்கம்)

குறட்பா

➔ **"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
ஏமப் புணையைச் சுடும்."

பொருள்

★ தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு **'சினம்'** ஆகும்.

★ சினம் ஒருவரது சுற்றம் என்னும் **பாதுகாப்புத் தெப்பத்தையும் அழிக்கும்**.

அணி பொருத்தம்

இனத்தைப் 'பாதுகாப்புப் படகு' என உருவகப்படுத்திவிட்டு **பிறவியைக் 'கடல்'** என உருவகப்படுத்தாது விட்டுவிட்டதால் இ்.து ஏகதேச உருவக அணிக்குப் பொருத்தமாக அமைந்து விட்டது.

நெடுவினா

1. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**ஈடில்லா உதவி**	**உலகைவிட பெரிது**	**கடலைவிட பெரிது**
உதவியின் அளவு	**தீதும் நன்றும்**	**உய்வில்லாதவர்**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ செய்ந்நன்றியறிதல் குறித்துத் திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துகளை அறிந்து கொள்ளவே!

ஈடில்லா உதவி

★ தான் ஒருவருக்கு எந்த உதவியும் செய்யாத நிலையில், அவர் செய்த உதவி சிறந்ததாகும்.

★ அவ்வாறு, உதவியவருக்கு **வீண்ணுலகையும் மண்ணுலகையும்** கொடுத்தாலும் ஈடாகாது.

➔ **"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
வானகமும் ஆற்ற லரிது."

உலகைவிட பெரியது

★ ஒருவர் உரிய காலத்தில் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலத்தைவிட பெரியதாகும்.

➔ **"காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்**
ஞாலத்தின் மாணப் பெரிது."

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கடலைவிட பெரியது

★ ஒருவர் எந்தப் பயனும் எதிர்பாராமல் செய்த உதவியை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிட மிகப் பெரியதாகும்.

➔ **"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
நன்மை கடலிற் பெரிது."

உதவியின் அளவு

★ ஒருவர் தினையளவு சிறிய உதவியைச் செய்தாலும்,

★ அதன் பயனைத் தெரிந்தவர் பனையளவாகக் கொள்வார்.

➔ **"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
கொள்வார் பயன்தெரி வார்"

தீதும் நன்றும்

★ ஒருவர் நமக்குச் செய்த உதவியை மறப்பது நன்றன்று.

★ ஒருவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது நல்லது.

➔ **"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
அன்றே மறப்பது நன்று"

உய்வில்லாதவர்

★ ஒருவர் எந்த அறத்தை அழித்தாலும் அதிலிருந்து தப்பிக்க வழி உண்டு.

★ ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்குத் தப்பிக்க வழியே இல்லை.

➔ **"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

நூற்பயன்

★ செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் வழி அறிந்துக்கொண்டேன்.

2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**சினம் காப்பவர்**	**சினத்தின் விளைவு**
சினம் தரும் பகை	**தன்னையே கொல்லும் சினம்**		
உறவினரை அழிக்கும் சினம்		**முடிவுரை**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ சினத்தினால் ஏற்படும் கேடுகளை அறிந்து கொள்வதற்காகவே!

முன்னுரை

★ ஒருவரின் மனத்தில் உள்ள அன்பை அழிக்கக் கூடியது சினம் ஆகும்.

★ எனவே, சினத்தைக் காத்திருப்பதே ஒருவரின் வாழ்வை மேன்மைப்படுத்தும்.

★ சினத்தைக் காக்க வேண்டியதற்கான காரணத்தை முப்பால்வழி இங்குக் காண்போம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சினம் காப்பவர்

★ ஒருவர் தன்னினும் **வலிமைக்குன்றியவரிடம் சினம் கொள்ளாமல் இருக்க வேண்டும்**.

★ அவ்வாறு இருப்பவரே உண்மையில் சினம் காப்பவர் ஆவார்.

★ தன்னினும் வலிமையானவரிடம் சினத்தைக் காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

➔ **"செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்**
காக்கின்என் காவாக்கால் என்?"

சினத்தின் விளைவு

★ ஒருவருக்குத் **தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும்**.

★ எனவே, யாரிடமும் சினம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

➔ **"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய**
பிறத்தல் அதனான் வரும்."

சினம் தரும் பகை

★ சினம் ஒருவரின் **முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொன்றுவிடும்**.

★ அத்தகைய சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.

➔ **"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
பகையும் உளவோ பிற?"

தன்னையே கொல்லும் சினம்

★ ஒருவர் தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வாராமல் தடுக்க வேண்டும்.

★ அவ்வாறு தடுக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

➔ **"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்**
தன்னையே கொல்லும் சினம்."

உறவினரை அழிக்கும் சினம்

★ சினம் தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பாகும்.

★ சினம் ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

➔ **"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
ஏமப் புணையைச் சுடும்."

முடிவுரை

★ சினம் நம்மையே கொல்லும் கொடிய ஆயுதம் ஆகும்.

★ எனவே, நாம் சினம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

★ **சினத்தைக் காப்பதனால், உறவுகள் பெருகும்: முகமலர்ச்சியும் அகமகிழ்ச்சியும் உண்டாகும்.**

★ **வாழ்க்கை மேன்மை அடையும்.** எனவே, **சினம் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்**.

நூற்பயன்

★ சினத்தைக் காத்தல் வாழ்வை மேம்படுத்தும் என்பதை அறிந்து கொண்டேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நம்மை ஆளும்போம்

இயல் 4

கல்வி

செல்வத்துள் எல்லாம் தலை

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

அ) அன்பே ---------- (ஆர்வமாய் / தகளியாய்)

ஆ) வான்மழை ---------- (தூறலில் / பொழிந்திடின்)

இ) கண்ணிரண்டும் ---------- (இலாதார் / இல்லார்)

ஈ) வெண்ணிலவு ---------- (காய்கிறது / ஒளிர்கிறது)

உ) வெய்யோன் ---------- (காய்ந்திட / ஒளிர்ந்திட)

விடை

அ) தகளியாய் ஆ) தூறலில் இ) இல்லார் ஈ) காய்கிறது உ) ஒளிர்ந்திட

2. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.

அ) கல்வி கரையில ---------- ஆ) கல்லாரே ஆயினும் ----------

இ) நல்லவை செய்யின் ---------- ஈ) அவமதிப்பும் ஆன்ற ----------

உ) உண்ணாது நோற்பார் ----------

விடை -

3. பொருத்துக.

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம் ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய் ஈ) ஓரசைச்சீர்- 4) தேமா, புளிமா

அ) 1,2,3,4 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3,4,2,1

விடை - **ஆ) 4,3,1,2**

4. கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீராகக் கொண்டு குறள் வெண்பா / நேரிசை வெண்பா / இன்னிசை வெண்பா எழுத முயற்சி செய்யவும். கடல், வாள், மழை, தேன், மரம்

★ விண்துஞ்சும் மண்துஞ்சும் நாழிகையும் கண்துஞ்சா
மீனினம் வாழும் **கடல்**.

★ கல்தோன்றி மண்தோன்றா முன்தோன்றும் தாய்மொழிச்
சொல்இன் பத்தமிழ்த் **தேன்**.

★ உணவாக்கும்; உணவாகும்; மண்ணுயிரை எந்நாளும்
கைம்மாறு வேண்டா **மரம்**.

★ விண்ணின் சிறுதுளி வீழ்ந்திடின் மண்ணின்
உயிர்களுக்குத் தேனாம் **மழை**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ தூயகாற்றும் தந்தான் நனிநிழலும் தந்தான்
மழைக்கும் முதல்வன் **மரம்**.

★ கொற்றமும் சுற்றமும் செங்கோலும் இம்மூன்றும்
நற்றமிழ ரின்வீர **வாள்.**

5.வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

வெண்பாவிற்குரிய தளைகள்

★ இயற்சீர் வெண்டளை (மாமுன் **நிரை**, விளம்முன் **நேர்**)

★ வெண்சீர் வெண்டளை (காய்முன் **நேர்**)

எடுத்துக்காட்டுப்பாடல்

அக/ர	முத/ல	எழுத்/தெல்/லாம்	ஆ/தி	பக/வன்	முதற்/றே	உல/கு
நிரை+நேர்	**நிரை**+நேர்	**நிரை** +நேர்+நேர்	**நேர்**+நேர்	**நிரை** +நேர்	**நிரை**+நேர்	**நிரை**பு
(புளிமா)	(புளிமா)	(தேமாங்**காய்**)	(தேமா)	(தேமா)	(புளிமா)	(பிறப்பு)

6.ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

ஒரு விகற்பம்

★ ஒரு செய்யுளின் அனைத்து அடிகளிலும் **ஒரே ஒரு தொடை மட்டுமே** அமையவருவது **ஒரு விகற்பம்** ஆகும்.

எடுத்துக்காட்டுப்பாடல்

➔ அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

★ அ**க**ர - ப**க**வன் **எதுகை மட்டுமே** பயின்று வந்துள்ளதால் ஒரு விகற்பம்

பல விகற்பம்

★ ஒரு செய்யுளின் அடிகளில் **ஒன்றுக்கு மேற்பட்ட தொடைகள்** அமைந்திருப்பது **பல விகற்பம்** ஆகும்.

➔ கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

சீர்மோனை

★ **க**ற்க **க**சடற **க**ற்பவை **க**ற்றபின்

அடி எதுகை

★ கற்க நிற்க ★ **மோனையும் எதுகையும்** பயின்று வந்துள்ளது எனவே இது **பலவிகற்பம்**.

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

விடை - **இ) இசைக்கருவி**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. சூரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

விடை - **ஆ) காவியம்**

3. "விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள்.

அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு

இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு

ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

விடை - **ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு**

4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

விடை - **இ) கடுக்காய்**

5. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

விடை - **ஆ) கணிதம்**

குறுவினா

1. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

இடையீடு கவிதையில் உள்ள குறியீடு

★ எண்ணம் ★ வெளியீடு ★ கேட்டல்

2. வசனம், கவிதை வேறுபாடு தருக.

வசனம்	கவிதை
★ சொற்கள் தொடராக அமைந்திருக்கும்.	★ யாப்பிலக்கண நெறிகளுக்கு உட்பட்டு அமையும்.
★ தொடை நயங்கள் (எதுகை, மோனை) இடம்பெறா.	★ தொடை நயங்கள் (எதுகை, மோனை) இடம்பெறும்.
★ அடி வரையறை இல்லாமல் இருக்கும்.	★ இலக்கணத்திற்கு உட்பட்ட அடி வரையறை இருக்கும்.

3. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யார்க்கு?

எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்

★ கலைத்தொழிலில் சிறந்தவர்களுக்கு எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்.

விளக்கம்

★ மரம் வெட்டும் தச்சன் காட்டிற்குச் சென்றால், அவனுக்குக் கட்டாயம் மரம் கிடைக்கும்.

★ அதுபோல, கலைகளில் சிறந்தவர்கள் எந்த நாட்டிற்குச் சென்றாலும், அவர்கள் வறுமை நீங்கும்.

5. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

★ மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் ★ அடிப்படையான நூல்கள் மனனப் பயிற்சிக்கு உதவும்.

★ நிகண்டு ★ நன்னூல் ★ காரிகை (யாப்பருங்கலக்காரிகை)

★ தண்டியலங்காரம் ★ நீதி நூல்கள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

1. மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.

★ இவ்வரிகள் இடம்பெற்ற இலக்கியம் - **இடையீடு** (இதுவரை என்னும் கவிதைத் தொகுப்பு நூலாகும்.)

★ ஆசிரியர் - **சி. மணி**

மூன்றான காலம் போல் ஒன்றானவை

★ **எண்ணம் - வெளியீடு - கேட்டல்** இவை இணைதல் என்பது முக்காலமும் ஒன்றானது போலாகும்.

விளக்கம் - முடியாமை

★ சிலவற்றை நாம் சொல்ல விரும்புவோம். ஆனால், ஏனோ அதைச் சொல்ல நமக்குச் சொல் வராமல் தவித்துச் சொல்ல முடியாமலே விடுகின்றோம்.

மனப்புழுக்கம்

★ நாம் எதிர்பார்க்காமலேயே திடீரென மாற்றங்கள் பல நடந்துவிடுகின்றன.

★ நாம் ஒன்றைக் குறிவைக்க அது ஏதோ ஒன்றாக மாறி ஏமாற்றத்தைத் தரும்.

★ இதுபோன்ற **மனப் புழுக்கம்** ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் பல உண்டு.

ஏமாற்றம்

★ குதிரை வரைய முயன்றால் **குதிரையே வராது**; அது **கழுதையாகவும் வரலாம்**. இரண்டும் கலந்து ஒரு விலங்காக வந்து ஏமாற்றமும் தரலாம்.

துன்பமும் இன்பமும்

★ எலியைப் பிடிக்க பொறிவைத்தால் சில நேரங்களில் எலிப்பொறியில் நம்விரலே மாட்டிக் கொண்டு நசுங்கிவிடத்தான் செய்கிறது.

★ தண்ணீராவது கிடைக்குமா? என ஏக்கத்துடன் ஒரு பாதையில் நடந்து செல்லும்போது, சிலர் இன்சொல் பேசி இளநீர் கொடுப்பதும் உண்டு.

மூன்றான காலம் ஒன்றாகுமா?

★ **எண்ணம் - வெளியீடு - கேட்டல்** இவை மூன்றும் ஒரே நேரத்தில் சரியாகப் பொருந்துவதில்லை.

★ அவ்வாறு பொருந்தினால் அது இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் மூன்றும் ஒரேகாலமாக மாறியது போலாகும்.

2. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

★ நான் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் மட்டுமே கட்டுப்படுத்துவேன்.

★ மாணவினின் **குடும்பச் சூழலை முதலில்** சூழல் அறிவேன்.

★ மாணவனின் தன்மை, அவன் கடந்து வந்த பாதை, வீட்டின் சூழல், பெற்றொர் அல்லது உற்றோர் நிலை மனவெழுச்சி, மனஉரம் அனைத்தையும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்து உதவிட முனைவேன்.

மாணவன் பற்றி என்னுடைய பார்வை

★ மாணவன் என்பவன் சமுதாயம் என்னும் தோட்டத்தில் பூக்கத் துடிக்கும் பூச்செடி.

★ கல்வி என்னும் தண்ணீரை மென்மையாக அதன் வேருக்குப் பாய்ச்சுவேன்.

★ அன்பு என்னும் ஞானத்தைத் தென்றல் போல் வருடி உணர்த்துவேன்.

★ செடி வளர வளர அதைப் பார்த்து மகிழ்வதுபோல் மாணவன் கல்வியறிவால் சிறந்து விளங்குவதைக் கண்டு மகிழ்வேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ புயலாலும், கடும் காற்றாலும், பெருமழையாலும் வீழ்ந்துவிடாமல் காக்கும் பற்றுக்கொம்புபோல் சமூகத்தீமைகளில் வீழ்ந்து விடாமல் காப்பேன்.

★ மாணவனை நான், நாளையச் சமூகத்தில் மலரும் மலராக நினைத்துப் போற்றுவேன்.

★ அன்பால் வளரும் மாணவர்களை அன்பால் மட்டுமே திருத்தி அன்பை மட்டுமே அவர்கள் உள்ளத்திலிருந்து பூக்கச் செய்வேன்.

3. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

எழுதும் முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்

மணல் எழுத்து

★ முதன்முதலில் பிள்ளைகள் **மணலில்தான் எழுதிப் பழகினார்கள்**.

★ ஆசிரியர் முதலில் தன்விரலினால் மணலில் எழுத, மாணவர்கள் அதன்மேல் எழுதிப் பழகி, பின்பு தாமாகவே மணலில் எழுதிப் பழகினர்.

★ இம்முறையில் எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்தது.

ஓலைச் சுவடி எழுத்து

★ இளம் பிள்ளைகளுக்கு **உபாத்தியாயர்** ஓலையை ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்துத் தருவார்.

★ ஆசிரியர்கள் முதலில் தாங்கள் எழுதிய ஓலைச்சுவடி எழுத்தின்மீது மாணவர்களை எழுதச் செய்வர்.

★ மெல்லிய எழுத்தாணிகள் கொண்டு ஏட்டில் மாணவர்கள் எழுதிப் பழகினர்.

கையெழுத்து

★ எழுத்துகள் ஒன்றோடு ஒன்று படாமல் எழுதவேண்டும். ★ வரிகோணாமல் எழுத வேண்டும்.

★ **புள்ளி, கால், கொம்பு, விலங்கு** முதலியவை வரிஎழுத்தின் உறுப்புகள்.

★ சுவடிகளின் வகைகள் - **பனையோலை, சீதாளப் பத்திரம்**

★ எழுத்தாணிகளின் வகைகள் - **மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி**

இக்காலத்தில் எழுதும் முறை

★ இக்காலத்தில் காகிதத்தில் பேனா என்னும் எழுதுகோலையும் பென்சில் என்னும் கரிக்கோலையும் கொண்டே பெரும்பாலும் எழுதுகின்றனர்.

★ காகிதங்களும் எழுதுகோல்களும் பல வண்ணங்களில் உள்ளன.

கணினியில் எழுதும் முறை

★ காகிதப் பயன்பாட்டைக் குறைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாலும் சிக்கனம் கருதியும் பெரும்பாலானோர் **கணினியில் இன்று விசைப்பலகை** மூலம் எழுதி வருகின்றனர்.

இணையதள பேச்செழுத்து முறை எழுத்து (Google Voice Typing)

★ இணைய தளத்தில் சிலர் பேசுவதே எழுத்தாக மாற்ற இயலும் அவ்வாறே பேச்செல்லாம் எழுத்தாகவும் நூலாகவும் மாறிவரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

வாயிலோயே எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் பாடாண்திணைக்கு உரியது என்பதை நிறுவுதல்

பாடாண் திணை

★ பாடு + ஆண் + திணை = பாடாண்திணை

★ ஒரு ஆண்மகனின் **புகழ், வலிமை, கொடை, அருள், கல்வி, செல்வம்** போன்றவற்றைப் புகழ்ந்து பாடுவது **பாடாண் திணை** ஆகும்.

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து**
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?" - ஔவையார்

பொருத்தம்

★ ஔவையார் இப்பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைச் சிறப்பையும் வீரத்தையும் புகழ்ந்து பாடியுள்ளார்.

★ எனவே, இப்பாடல் பாடாண் திணைப் பாடலாகும்.

நெடுவினா

1. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

குறிப்புச் சட்டகம்

சொல்வதன் நோக்கம்	**முன்னுரை**	**உரைநடை**	**கவிதை எழுதும் முறை**
கவிதையில் அமைய வேண்டியவை		**முடிவுரை**	**நூற்பயன்**

சொல்வதன் நோக்கம்

★ தமிழ்மொழி இலக்கியம் கவிதைமொழியிலிருந்து தோன்றியது. அதன் கவிதையின் தன்மைகளை உணரவே கற்றேன்.

முன்னுரை

★ **உரைநடைக்கும் கவிதைக்கும் இடையே வேறுபாடு** உள்ளது.

★ சிலர் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு தெரியாமல் எழுதுகின்றனர்.

★ அவ்வாறு எழுதுகின்றவர்களுக்காக, சுரதா கவிதையை எழுதும்முறை பற்றிக் கூறுகின்றார்.

உரைநடை

★ உரைநடை என்பது எளிய சொற்கள் தொடர்களாக அமைவது.

★ **எதுகை, மோனை போன்ற தொடைகள்** இன்றி வரும். ★ **அடி வரையறையின்றி** வரும்.

கவிதை எழுதும் முறை

★ சொற்கள் யாப்பிலக்கண நெறிகளுக்குட்பட்டு அமைவது கவிதை

★ எழுத்துகள் இணைந்து அசை தோன்றும். ★ அசைகள் இணைந்து சீராகும்.

★ இரண்டு சீரின் இடைவெளியில் தளைகள் அமையும். ★ தளைகள் சேர்ந்து அடிகள் தோன்றும்.

★ அடிகளில், எதுகை மோனை போன்ற தொடைகள் அமையும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ தொடைகள் நல்ல முறையில் அமைந்திருந்தால் பாக்கள் சிறப்பாக இருக்கும்.

★ இதுவே, கவிதை எழுதும் நெறி ஆகும்.

கவிதையில் அமைய வேண்டியவை

★ இலக்கண நெறிகளுக்குட்பட்டு, கவிதை இருக்க வேண்டும்.

★ சிறந்த முறையில் பாடல் இயற்றுபவர் புகழ் அடைவார்.

★ கவிதையில் அறக்கருத்துகள் இடம்பெற்றிருக்க வேண்டும்.

★ எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் கருத்துகள் இருக்க வேண்டும்.

முடிவுரை

★ யாப்பிலக்கண நெறிகளை அறியாமலும் அறக்கருத்துகள் இன்றியும் சிலர் கவிதை எழுதுகின்றனர்.

★ அவ்வாறு கவிதை எழுதுபவர்கள், புகழை அடையமாட்டார்கள் என்கிறார் சுரதா.

நூற்பயன்

★ கவிதைக்கானக் கட்டுப்பாடுகளையும் கட்டமைப்புகளையும் கற்றேன் நானும் சிறந்த கவிதைகளைப் படைப்பேன்.

2. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

குறிப்புச் சட்டகம்

சொல்வதன் நோக்கம்	**முன்னுரை**	**கல்வித் தொடக்கம்**	**முறைவைப்பு**
எழுத்துப்பயிற்சி	**மனனப்பயிற்சி**	**வாதம் புரிதல்**	**சிறப்புச் செய்தி**
ஆசிரியர் மாணவர் உறவு		**முடிவுரை**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ பண்டையக் கல்வி முறைகளைப் பண்பட உரைப்பதற்கே கற்றேன்.

முன்னுரை

★ கல்விமுறை காலத்திற்கு ஏற்ப மாற்றம் அடைந்து வருகிறது.

★ பண்டைக்காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான கற்றல், கற்பித்தல் முறையைப் பற்றி இங்கு காண்போம்.

கல்வித் தொடக்கம்

★ பிள்ளைகள் **ஐந்து வயதில் கல்வி கற்கத் தொடங்கினர்**.

★ கல்வி கற்க, பெற்றோர்கள் பிள்ளைகளை ஆசிரியரிடம் அடைக்கலமாகக் கொடுத்தனர்.

★ பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

★ ஏட்டில் மஞ்சள் பூசி பையனிடம் கொடுத்து வாசிக்கச் சொல்லுவார்கள்.

முறை வைப்பு

★ ஆசிரியர் **நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுப்பார்**.

★ மாணவர்கள் ஆசிரியர் சொல்லுவதைப் பின்பற்றிச் சொல்லுவார்கள்.

★ இவ்வாறு ஆசிரியர் சொல்லுவதைத் திரும்பச் சொல்லுவது **'முறை வைப்பு'** எனப்படும்.

எழுத்துப் பயிற்சி

★ மாணவர்கள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள்.

★ முதலில், ஆசிரியர் மணல் தரையில் எழுதுவார்.

★ மாணவர்கள் ஆசிரியர் எழுதியதன்மேல் எழுதிப் பழகுவார்கள்.

★ ஓர் எழுத்து மற்றோர் எழுத்தின்மீது படாமல் எழுதினார்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மனனப் பயிற்சி

★ அடிப்படை நூல்களை மாணவர்கள் மனப்பாடம் (மனனம்) செய்தனர்.

★ தமிழில் **நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள்** பாடமாக இருந்தன.

★ கணிதத்தில் **கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று** போன்ற பலவகை வாய்பாடுகள் பாடமாக இருந்தன.

★ வியாபாரம் செய்வதற்கும் கோவிலில்பணி செய்வதற்கும் ஏற்ற கணிதமுறை கற்பிக்கப்பட்டது.

வாதம் புரிதல்

★ கல்வியில், **வாதம் செய்தல்** முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது.

★ கல்வியில் சிறந்தவர்கள் அரசவையில் வாதம் செய்து, தம் கல்வித் திறமையை நிலைநாட்டினர்.

★ **வாதம் செய்யும் பழக்கம்** பள்ளிக்கூடத்திலிருந்தே தொடங்குகிறது.

சிறப்புச் செய்தி

★ **நன்னூல்** என்னும் இலக்கண நூல் மாணவர்கள் கல்விகற்கும் முறையைப் பற்றிக் கூறுகின்றது.

நன்னூல்

➔ **"வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை**
கடனாக் கொளினே மடநனி இகக்கும்"

ஆசிரியர் மாணவர் உறவு

★ தவறு செய்யும் மாணவர்களுக்குக் கொடிய தண்டனைகள் இல்லை.

★ ஆசிரியர்கள் மாணவர்களை அன்பால் வழிப்படுத்தினர்.

★ மாணவர்கள் ஆசிரியர்களிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்துக் கொண்டனர்.

முடிவுரை

★ கல்விமுறைகளில் சிறந்தது நம் பாரதக் கல்விமுறை.

★ இத்தகைய கல்விமுறை மீண்டும் கிட்டாதா? என்னும் ஏக்கத்தைக் காட்டுகின்றது இக் கட்டுரை.

நூற்பயன்

★ பண்டையக் கல்விமுறையின் மாண்புகளை உணர்ந்தேன். பண்பட்ட மனிதனாக இருப்பேன் ஆசிரியரை மதிப்பேன்.

3. "சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு" - இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?

குறிப்புச் சட்டகம்

சொல்வதன் நோக்கம்	**முன்னுரை**	**சாலைவசதிகளும் விபத்துகளும்**
சாலைவசதிகளைத் தடுப்பதற்கான வழிகள்		**சாலைப் பாதுகாப்பு விதிகள்**
முடிவுரை	**பாதுகாப்பான பயணத்தின் பயன்**	

செய்வதன் நோக்கம்

★ பிறவிகளில் சிறந்தது மனிதப் பிறவி அதைத் துச்சமாக நினைத்துச் சாலைகளில் பயணிக்காமல் பாதுகாப்பாகப் பயணிக்கவே செய்வேன்.

முன்னுரை

★ நம் நாட்டில் சாலை விபத்துக்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன.

★ இந்நிலையில், சாலை விபத்தில்லாத் தமிழ்நாடே அனைவரின் நோக்கமாக உள்ளது.

★ இக்கூற்றை நனவாக்க நாம் செய்ய வேண்டியவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சாலை வசதிகளும் விபத்துகளும்

★ நம் நாடு உலகில் அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது நாடு ஆகும்.

★ நம் நாட்டில் 55 இலட்சம் கி.மீ. சாலைகள் உள்ளன.

★ 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் உள்ளன.

★ ஓர் ஆண்டில் சுமார் 5 இலட்சம் விபத்துகள் ஏற்படுகின்றன.

★ இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவு சாலை விபத்துகள் ஏற்படுகின்றன.

சாலை விபத்துகளைத் தடுப்பதற்கான வழிகள்

★ சாலை விதிகளை மீறுவதே விபத்திற்குக் காரணமாக அமைகிறது.

★ சாலை விதிகளைப் பின்பற்றுவதன்மூலம் சாலை விபத்துகளைத் தடுக்கலாம்.

★ இருசக்கர வாகனம் **(Bike)** மகிழுந்து **(car)** போன்றவற்றை இயக்குபவர்கள் முறையான பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

★ பயிற்சி பெற்று, **ஓட்டுநர் உரிமம்** உள்ளவர்கள் மட்டுமே இருசக்கர வாகனங்களை ஓட்ட வேண்டும்.

★ மகிழுந்தில் பயணம் செய்பவர்கள் **பாதுகாப்புப் பட்டை**யை அணிய வேண்டும்

★ இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் **தலைக்கவசம்** அணிந்து செல்ல வேண்டும்.

★ ஒரே வண்டியில், இரண்டு பேருக்குமேல் பயணிக்கக் கூடாது.

★ **கைபேசியில்** பேசிக் கொண்டே செல்லக் கூடாது.

★ சாலையில் வண்டியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்கக் கூடாது.

★ மக்கள் செல்லும் பாதையில் அதிக வேகத்தில் பயணிக்கக் கூடாது.

சாலை பாதுகாப்பு விதிகள்

பன்னாட்டுச் சாலை அமைப்பு மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சாலை பாதுகாப்பு விதிகள்:

★ சாலையின் வகைகள், மைல்கற்களின் விவரங்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

★ போக்குவரத்துக் குறியீடுகளைப் **(Signals)** பின்பற்ற வேண்டும்.

★ நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக் கூடாது.

★ சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும்.

★ கடந்து செல்ல முற்படும் **ஊர்திகளுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும்**.

★ சாலைப் பயிணிகளை நண்பராக எண்ண வேண்டும்.

முடிவுரை

★ வாகனம் ஓட்டுபவர்கள் கட்டாயம் **சாலை விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்**.

★ சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

★ இவ்வாறு செய்வதன்மூலம், **நம் நாடு சாலை விபத்தில்லாத நாடாகத் திகழும்**.

பாதுகாப்பான பயணத்தின் பயன்

★ உயிர்களைப் பாதுகாக்க அரசும் பயணிகளும் எவ்வளவு எச்சரிக்கையுடன் செயல்படுகிறார்கள் என்பதை அறிந்தேன். பாதுகாப்பான பயணத்தையே மேற்கொள்வேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 5

நாகரிகம் - தொழில் - வணிகம்

நாடென்ப நாட்டின் தலை

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

விடை - **இ) காட்சி**

2. "காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்" இக்கவிதையில் ------- பயின்று வந்துள்ளது.

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

விடை - **ஆ) வினைப்படிமம்**

3. கூற்று: உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

காரணம்:எவ்வகையானபடிமமாகஇருந்தாலும்அதுகாட்சிவழியேகருத்தினைவிளக்குவதில்லை.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

விடை - **அ) கூற்று சரி, காரணம் தவறு**

4.மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு ..... ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது ....

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் ..... ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப ....

விடை - **இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் ....**

5. "மாந்தோப்புவசந்தத்தின்பட்டாடைஉடுத்தியிருக்கிறது"-இதில்எவ்வகைப்படிமம்வெளிப்படுகிறது?

படிமம் வெளிப்படும் விதம்

★ வசந்தகாலத்தில், மாந்தோப்பு பசுமையாக உள்ளது.

★ மாந்தோப்பில் பூக்களும் தளிர்களும் தோன்றி பசுமையாக உள்ளது.

★ கவிஞர் **மாந்தோப்பைப்** **பெண்**ணாகவும்,

★ **வசந்தகால**த்தைப் **பட்டாடை**யாகவும் காட்சிப்படுத்துகிறார்.

★ பட்டாடையை உடுத்திய பெண்ணின் தோற்றத்தையும், மாந்தோப்பில் வசந்தகாலத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் ஒப்பிடுகிறார்.

★ இக் கவிதையில் உள்ளார்ந்த ஒப்பீடு, **படிமமாக** வெளிப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம் -

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

விடை - **ஈ) அ, ஆ, இ - அனைத்தும்**

2. கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி

விடை - **ஈ) கூற்று சரி, காரணம் சரி**

3. பொருத்துக.

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2) கல் கோடரி

இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம் ஈ) எழும்பூர் - 4) கூவம்

அ) 1,2,4,3 ஆ) 4,2,1,3 இ) 4,1,2,3 ஈ) 2,4,3,1

விடை - **இ) 4, 1, 2, 3**

4. "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்" - இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

விடை - **இ) முரண் பண்பு**

5. "விளியறி ஞமலி" - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

விடை - **இ) நாய்**

குறுவினா

1. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

கலிவிழா

★ திருமயிலையில் பல்வேறு வகையான விழாக்கள் நடைபெறுகிறது.

★ விழாக்கள் மக்களுக்கு எழுச்சிமிக்கதாக அமைந்துள்ளது.

★ எழுச்சிமிக்க விழா என்பதால் **கலிவிழா** எனப்படுகிறது.

ஒலிவிழா

★ மயிலையில் கோவில்கொண்டிருக்கும் இறைவனுக்குப் பங்குனி உத்திரத்தில் திருவிழா நடைபெறுகிறது.

★ பங்குனி உத்திரவிழா **ஒலிவிழா**வாக (ஆரவார விழாவாக) உள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

★ கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் **1869**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

★ **காலின் மெக்கன்சி** என்பவர் நூல்கள், ஓலைச்சுவடிகள், நாணயங்கள் ஆகியவற்றைத் தொகுத்தார்.

★ காலின் மெக்கன்சி தொகுத்தவற்றைக் கொண்டு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் உருவாக்கப்பட்டது.

★ அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

3. "தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே" - தொடருக்குப் பதவுரை எழுதுக.

பதவுரை

★ தருமமிகு சென்னையில் - அறம் செய்வோர் நிறைந்துள்ள சென்னையில்

★ கந்த கோட்டத்துள் - கந்தகோட்டத்துக் கோவிலில்

★ வளர் தலமோங்கு - எழுந்தருளியிருக்கும் ★ கந்தவேளே - முருகனே

4. "பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்" - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

முரண் நயம்

★ ஒரே அடியில் முரண்பட்ட (எதிர்மறையான) பொருள் தரும் சொல் இடம்பெற்றிருப்பது முரண் நயம் ஆகும். ★ பெருங்கடல் - சிறுகுடி

★ இவ்வடிகளில் **பெரிய - சிறிய** என்றும் முரண்பட்ட சொற்கள் அமைந்துள்ளன.

★ எனவே, இது முரண்நயம் ஆகும்.

சிறுவினா

1. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பன

★ சாரசனிக் கட்டடங்கள் ★ ஆவணக் காப்பகம் ★அருங்காட்சியகங்கள் ★ நூலகங்கள்

சென்னையின் பண்பாட்டு அடையாளங்கள்

★ சென்னை நகரம் **பண்பாட்டு அடையாளம்** மிக்க நகரம் ஆகும்.

★ இந்திய **சாரசனிக் கட்டக்கலை** முறையில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன.

★ பழமையான கட்டங்கள் சென்னையின் பண்பாட்டு அடையாளமாக உள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

★ ஆங்கிலேயர்கள், ஆவணங்களை முறையாகப் பாதுகாத்தனர்.

★ ஆவணங்களைப் பாதுகாக்க **'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்'** கட்டப்பட்டது.

★ மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ் **சாரசனிக் கட்டட முறை**யில் கட்டப்பட்டது.

★ இது இன்று **'தமிழ்நாடு ஆவணக் காப்பகம்'** என்று வழங்கப்படுகிறது.

★ தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிவதற்கான முதன்மைத் தரவுகள் இங்கு உள்ளன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அருங்காட்சியகங்கள்

★ தென்னிந்திய வரலாற்றையும் பண்பாட்டையும் அறிவதற்கு அருங்காட்சியகங்கள் உதவுகின்றன.

★ சென்னையில் இரண்டு அருங்காட்சியகங்கள் உள்ளன.

★ **எழும்பூர் அருங்காட்சியகம்** ★ **கோட்டை அருங்காட்சியகம்**

★ அருங்காட்சியகங்கள் சென்னையின் அடையாளத்தைக் காட்டுகின்றன.

நூலகம்

★ சென்னையில் கன்னிமாரா நூலகம் அமைந்துள்ளது.

★ இந்தியாவின் முதல் பொதுநூலகம் **கன்னிமாரா நூலகம்** ஆகும்.

2. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

இராமலிங்க அடிகள் வேண்டும் உறவு

★ இராமலிங்க அடிகள் கந்தக்கோட்டத்திலுள்ள முருகனிடம் தனக்கு வேண்டிய உறவினைப் பற்றி வேண்டுகிறார்.

வேண்டும் உறவு

★ சிறந்தவர்கள் ஒருநெறிப்பட்ட மனத்துடன் முருகனின் திருவடிகளை நினைத்திருப்பார்கள்.

★ அத்தகைய சிறந்தவர்களின் உறவு வேண்டும் என்கிறார் இராமலிங்க அடிகளார்.

சிறப்புச் செய்தி

➔ **"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற**
உத்தமர்தம் உறவுவேண்டும்" - வள்ளலார்

வேண்டாத உறவு

★ வஞ்சகர்கள் மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு, வெளியில் மற்றொன்றைப் பேசுவார்கள்.

★ அத்தகைய வஞ்சகர்களின் உறவுகள் தன்னை நெருங்காமல் காக்கும்படி வேண்டுகிறார்.

சிறப்புச் செய்தி

➔ **"உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவோர்**
உறவுகல வாமைவேண்டும்" - வள்ளலார்

3. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

பங்குனி உத்திரத் திருவிழா

★ திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் **திருமயிலை** (மயிலாப்பூர்)

★ மயிலையில் எழுச்சிமிக்க விழாக்கள் **(கலிவிழா, ஒலிவிழா)** நடைபெறும்.

★ இளம்பெண்கள் ஆரவாரத்தோடு திருவிழாக்களைக் கொண்டாடுவார்கள்.

★ மயிலையில் கோவில் கொண்டிருக்கும் இறைவனுக்குப் பங்குனி உத்திரத்தில் விழா நடைபெறுகிறது.

★ பங்குனி உத்திர விழா ஆரவாரம்மிக்க விழாவாக உள்ளது.

★ **"பூம்பாவாய் இவ்விழாவைக் காணாமல் சென்றது முறையாகுமோ?"** என்கிறார் திருஞானசம்பந்தர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. "நெல்லின் நேரே வெண்கல் உப்பு" - இத்தொடரின் வழி பண்டமாற்று வாணிகத்தை விளக்குக.

"நெல்லின் நேரே வெண்கல் உப்பு" - இத்தொடரின் வழி பண்டமாற்று வாணிகத்தை விளக்குதல்.

"நெல்லின் நேரே வெண்கல் உப்பு" - இத்தொடரின் பொருள்

★ **நெல்**லுக்கு இணையாக **கல் உப்பு** கொடுத்தல் என்பதே ஆகும்

பண்டமாற்று வாணிகம்

★ இன்றைய காலத்தில் நாம் பொருட்களை வாங்குவதற்கு பணத்தைப் பயன்படுத்துகிறோம்.

★ பணம் ஒரு இடைநிலை பொருளாக இருக்கிறது.

★ பணம் பொருட்களை வாங்கவும் விற்கவும் பயன்படுகிறது.

★ பழங்காலத்தில் பொருட்களை வாங்கவும் விற்கவும் பணம் பயன்பாட்டில் இல்லை.

★ பணத்திற்குப் பதிலாக, தங்களிடமுள்ள பொருட்களைக் கொடுத்து, தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டனர்.

★ **ஒரு பொருளைக் கொடுத்து, மற்றொரு பொருளை வாங்குவது 'பண்டமாற்று முறை'** எனப்பட்டது.

நிலமும் பொருளும்

★ ஒவ்வொரு நிலத்தில் வாழ்ந்த மக்களும் தங்களிடம் உள்ள பொருளைக் கொடுத்து வேறு பொருளை வாங்கிக் கொண்டனர்.

நிலம்	கொடுத்த பொருள்கள்
★ குறிஞ்சி (மலை)	★ தேன், தினை, கிழங்கு
★ முல்லை (காடு)	★ வரகு, சாமை, பால்பொருட்கள்
★ மருதம் (வயல்)	★ நெல்,
★ நெய்தல் (கடல்)	★ மீன், உப்பு

நெடுவினா

1. "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த (அல்லது) வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

நான் வாழும் நகரம் மதுரை

குறிப்புச் சட்டகம்

என்னுரை	மதுரையின் தொன்மை	மதுரையும் தமிழும்	கோவில் நகரம்	
திருவிழா நகரம்	தூங்கா நகரம்	வடிவழகு	முடிவுரை	கட்டுரையின் பயன்

என்னுரை

★ தமிழர்களின் பழம்பெருமையையும் பண்பாட்டுச் சிறப்பையும் உணர்த்தக் கூடிய நகரம் **மதுரை**.

★ மதுரையின் சிறப்புமிக்க வரலாற்றையும் வடிவழகையும் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

மதுரையின் தொன்மை

★ தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான நகரங்களுள் ஒன்று மதுரை ஆகும்.

★ மதுரை **வைகை ஆற்றங்கரை**யில் அமைந்துள்ள நகரம் ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய சிறப்பிற்குரியது மதுரை.

★ **மல்லிகை மாநகர், கூடல் நகர், மதுரையம்பதி, கிழக்கின் ஏதென்ஸ்** என்று பல பெயர்களில் மதுரை போற்றப்படுகிறது.

மதுரையும் தமிழும்

★ சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமைக்குரிய நகரம் மதுரை ஆகும்.

★ **மதுரை** என்னும் சொல்லுக்கு **இனிமை** என்பது பொருள்.

★ தமிழ் என்றால் மதுரை; மதுரை என்றால் தமிழ் என்னும் அளவிற்குத் தமிழோடு நெருங்கிய தொடர்புடைய நகரம் ஆகும்.

★ மதுரையையும் தமிழையும் சேர்த்தே புலவர்கள் போற்றியுள்ளனர்.

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"தமிழ்கெழு கூடல்"**

சிறுபாணாற்றுப்படை

➔ **"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை"** - நல்லூர் நத்தத்தனார்

கோவில் நகரம்

★ மதுரை நகரம் கோவில்கள் மிகுந்த நகரமாக விளங்குகிறது.

★ **மீனாட்சியம்மன் கோவில்**, வண்டியூர் தெப்பக்குளம் **மாரியம்மன் கோவில்**, திருப்பரங்குன்றம் **முருகன் கோவில்**, **அழகர் கோவில்**, **பாண்டிமுனி கோவில்** ஆகியவை மதுரையில் உள்ள புகழ்பெற்ற கோவில்களாகும்.

திருவிழா நகரம்

★ மதுரை திருவிழாக்கள் நிறைந்த நகரமாகும்.

★ மதுரை மீனாட்சி சொக்கநாதர் கோவிலில் நடைபெறும் **சித்திரைத் திருவிழா** உலகப் புகழ்பெற்றதாகும்.

★ மீனாட்சி **திருக்கல்யாணம், முடிசூடல், தேரோட்டம்** ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

★ சித்திரைத் திருவிழாவில் **அழகர் வைகை ஆற்றில் இறங்குவதை**க் காண்பதற்காக இலட்சக்கணக்கான மக்கள் மதுரைக்கு வருகின்றனர்.

தூங்காநகரம்

★ எப்பொழும் **திருவிழாக்கள்**, **இரவுச் சந்தைகள்**, **வணிகம்** என்று தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும் நகரம் மதுரை ஆகும்.

★ உலகமே உறங்கிக்கொண்டிருக்கும் வேளையிலும் விழித்திருக்கும் ஒரே நகரம் மதுரை.

★ எனவே மதுரை **தூங்காநகரம்** என்று பெருமையோடு அழைக்கப்படுகிறது.

வடிவழகு

★ மதுரை நகரத்தின் வடிவமைப்பு **'தாமரைப் பூவை'** ஒத்திருக்கின்றது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய **பரிபாடல்** மதுரை நகரின் அமைப்பை விவரிக்கின்றது.

★ **மதுரை** நகரமானது திருமாலின் உந்தியின் அலர்ந்த **தாமரை** மலரை ஒத்திருக்கும்.

★ மதுரை நகரத்திலுள்ள **தெரு**க்கள் அம்மலரின் **இதழ்**களை ஒத்திருக்கும்.

★ பாண்டிய மன்னனது **அரண்மனை**, அம்மலரின் நடுவில் உள்ள **பொகுட்டை** ஒத்திருக்கும்.

★ அந்நகரில் வாழும் **தமிழ்க் குடிமக்கள்** அத்தாமரை மலரின் **தாதுக்களை** ஒத்திப்பர்.

★ அந்நகரில் உள்ள மன்னனிடம் **பரிசில் பெறத் தேடி வருபவர்கள்** தாது உண்ண வரும் **வண்டு**களை ஒத்திப்பர்.

★ மதுரை நகர மக்கள் பறை முழக்கத்தின் ஒலி கேட்டு நாள்தோறும் துயிலெழுவார்கள்.

சிறப்புச் செய்தி

பரிபாடல்

➔ **"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்**
பூவொடு புரையும் சீரூர் பூவின்
இதழ்கத் தனைய தெருவம் இதழகத்
தரும் பொகுட் டணைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த"

முடிவுரை

★ வரலாற்றுச் சிறப்புகளையும் வடிவழகு சிறப்புகளையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் உடைய மதுரையே நான் வாழும் நகரம் ஆகும்.

கட்டுரையின் பயன்

★ நான் வாழும் மதுரை மாநகரின் அழகினையும் பெருமையினையும் இக் கட்டுரையின் வழியாகப் பகிர்ந்துக் கொண்டேன்.

2. கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

"கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து என் கருத்து

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**என்னுரை**	**வேளாண்மை பொய்த்தது**	
வேலையில்லா திண்டாட்டம்	**நகரமயமாதல்**	**முடிவுரை**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ கிராமங்களின் இன்றைய நிலையைக் குறித்து என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்காகவே!

என்னுரை

★ இயற்கை எழில் கொஞ்சும், அமைதியான சூழலை உடையவை கிராமங்கள்.

★ கிராமங்கள் தங்கள் பசுமையையும் இயற்கை எழிலையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ கிராமங்கள் தங்களின் அடையாளங்களை இழந்ததற்கான காரணங்களைப் பற்றி என் கருத்தை விவரிக்கின்றேன்.

வேளாண்மை பொய்த்தது

★ **கிராமங்களின் தனிப்பெரும் அடையாளம்** வேளாண்மை ஆகும்.

★ 'பசுமைப் புரட்சி' என்ற பெயரில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக செயற்கை உரங்களை இட்டோம்.

★ அதன்விளைவு,**மண்தன்தன்மையைஇழந்தது.** ★ வேளாண்மை பொருட்களின்உற்பத்திகுறைந்தது.

★ போதுமான அளவு **பருவ மழையும் பெய்யாததால் வேளாண்மை கடுமையாக பாதித்தது.**

வேலையில்லாத் திண்டாட்டம்

★ கிராமங்களின் முதன்மைத் தொழில் **வேளாண்மை**

★ வேளாண்மை பொய்த்ததால், பலரும் **வேலையில்லா நிலைக்குத்** தள்ளப்பட்டனர்.

★ வேலை தேடுவதற்காக கிராமங்களைவிட்டு, நகரங்களை நோக்கி செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது.

★ சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் கடந்துவிட்டது. இன்றும் **பல கிராமங்களில் அடிப்படை வசதிகள்கூட செயல்படுத்தப்படவில்லை.**

நகரமயமாதல்

★ நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்பது அனைவரின் நோக்கமாக உள்ளது.

★ எனவே, **கிராமங்கள் அனைத்தும் நகரங்களாக மாறி வருகின்றன.**

★ **விளைநிலங்கள் யாவும் வீட்டு மனைகளாக்கி விற்பனை செய்யப்படுகின்றன**.

★ விவசாயிகளும் தங்கள் வருவாய்க்காக வேறு வழியின்றி தங்கள் நிலங்களை விற்பனை செய்கின்றனர்.

முடிவுரை

★ கிராமங்கள் வெறும் வாழ்விடங்கள் இல்லை. கிராமங்கள் **நம் பண்பாட்டின் அடையாளங்கள்**, **இயற்கையின் அங்கங்கள்** என்பதை நாம் உணர வேண்டும்.

★ **"இந்தியாவின் வளர்ச்சி என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வளர்ச்சி"** என்ற காந்தியடிகளின் பொன்மொழியைப் பின்பற்றி வாழ வேண்டும்.

நூற்பயன்

★ தங்கள் முகவரியை இழந்துவரும் கிராமங்களின் நிலையைப் பற்றி அறிந்துக்கொண்டேன்.

3. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**மயிலாப்பூர்**
கந்த கோட்டம்	**முடிவுரை**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ சிங்காரச் சென்னையின் சிறப்பை எடுத்துக் கூறுவதற்கே கற்றேன்!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தோஸ்த் தமிழ் உரை +2

முன்னுரை

★ ஓர் ஊரின் பெருமைக்குரிய **அடையாளங்களுள் ஒன்று கோவில்**.

★ மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் **நாகரிகத்தின் வெளிப்பாடு 'திருவிழா'**.

★ சென்னை மாநகரில் **'மயிலாப்பூரும், கந்த கோட்டமும்'** பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களாகும்.

★ மயிலாப்பூரில் நடைபெறும் திருவிழாக்களைப் பற்றியும்,

★ கந்த கோட்டத்தின் கோவிலைப் பற்றியும் செய்யுள் அடிகள்வழி காண்போம்.

மயிலாப்பூர்

★ **திருவிழாக்கள் நிறைந்த வீதி**களை உடைய பெரிய ஊர் திருமயிலை

★ இளம்பெண்கள் ஆரவாரத்தோடு விழாக்களைக் கொண்டாடுவார்கள்.

★ திருமயிலையில் **எழுச்சிமிக்க விழாக்கள்** நடைபெறும்.

★ மயிலை **கபாலீச்சரம்** என்னும் கோவிலில் **இறைவன்** வீற்றிருக்கிறான்.

★ மயிலையில் உள்ள இறைவனுக்குப் **பங்குனி உத்திரத்தில்** ஆரவாரத்தோடு திருவிழா நடைபெறும்.

சிறப்புச் செய்தி

தேவாரம்

➔ **"மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்**
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்" - திருஞானசம்பந்தர்

கந்த கோட்டம்

★ அறம் செய்வோர் நிறைந்திருக்கும் நகரம் **சென்னை**.

★ சென்னை கந்த கோட்டத்தில் எழுந்தருளி இருப்பவன் **முருகன்.**

★ குளிர்ந்த முகத்தை உடையவன் முருகன். ★ தூய மாணிக்க மணியைப் போன்றவன் முருகன்.

★ முருகன் கோவில் கொண்டு அருள் வழங்கும் இடம் **கந்த கோட்டம்**.

சிறப்புச் செய்தி

தெய்வமணி மாலை

➔ **"தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்**
தலமோங்கு கந்தவேளே
தன்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே" - வள்ளலார்

கூடுதல் தகவல்

★ ஆன்மிகத்தில் சீர்திருத்தச் சிந்தனையை உருவாக்கியவர் **வள்ளலார்**.

★ சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மிக மையத்தை உருவாக்கியவர் வள்ளலார்.

★ வள்ளலார் வழிபட்டு அருள்பெற்ற கோவில் கந்த கோட்டம்.

நூற்பயன்

★ திருமயிலையையும் கந்தக்கோட்டத்தையும் நேரில்கண்ட அனுபவத்தைப் பெற்றேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நம்மை ஆளும்போம்

இயல் 6

கலை - அழகியல் - புதுமைகள்

சிறுகை அளாவிய கூழ்

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

விடை - **ஆ) மயிலைநாதர்**

2. கூற்று 1: காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

விடை - **அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

3. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

அ) காதை	- 1) கந்தபுராணம்	ஆ) சருக்கம்	- 2) சீவகசிந்தாமணி
இ) இலம்பகம்	- 3) சூளாமணி	ஈ) படலம்	- 4) சிலப்பதிகாரம்

அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 3,4,2,1 ஈ) 4,3,1,2

விடை - **அ) 4,3,2,1**

4. தவறான இணையைத் தேர்க

அ) விருத்தப்பா - நாலடியார் ஆ) ஆசிரியப்பா - அகநானூறு

இ) கலிவெண்பா - தூது ஈ) குறள்வெண்பா - திருக்குறள்

விடை - **அ) விருத்தப்பா - நாலடியார்**

குறுவினா

1. காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

காப்பியத்தின் வகைகள் :-

★ காப்பியம் இரண்டு வகைப்படும். அவை - ★ **பெருங்காப்பியம்** ★ **சிறுங்காப்பியம்**

2. காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?

காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள்

★ கதைச் செய்யுள் ★ அகலக்கவி ★ தொடர்நடைச் செய்யுள்

★ விருத்தச் செய்யுள் ★ மகாகாவியம் ★ உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3.காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக?

காப்பியச் சிற்றுறுப்புகள்

★ காதை ★ சருக்கம் ★ இலம்பகம் ★ படலம்

4.பாவிகம் - விளக்குக.

பாவிகம் - விளக்கம்

★ **காப்பியத்தின் பண்பு** பாவிகம் ஆகும். ★ கவிஞர் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்து பாவிகம்.

எடுத்துக்காட்டு

➔ **"பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடும்"** என்பது கம்பராமாயணத்தின் பாவிகம்

➔ **"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்,**
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்" என்பது சிலப்பதிகாரத்தின் பாவிகம்

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. ஆர்ப்பரிக்கும் கடல்

அதன் அடித்தளம்

மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது

அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்

இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது.

விடை - **ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது.**

2.ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் '..

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

விடை - **ஈ) 1 சரி 2 சரி**

3.பொருத்துக.

அ) ஆமந்திரிகை - 1) பட்டத்து யானை ஆ) அரசு உவா - 2) மூங்கில்

இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம் ஈ) கழை - 4) எடை அளவு

அ) 3,1,4,2 ஆ) 4,2,1,3 இ) 1,2,3,4 ஈ) 4,3,2,1

விடை - **அ) 3,1,4,2**

4.வேறுபட்டதைக் குறிப்பிடுக.

அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு

இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

விடை - **ஈ) காட்சி மறைவு**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறுவினா

1. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

எண்வகை மெய்ப்பாடுகள்

தொல்காப்பியம் எட்டு வகையான மெய்ப்பாடுகளைக் கூறுகிறது. அவை

★ நகை (சிரிப்பு) ★ அழுகை ★ இளிவரல் (சிறுமை) ★ மருட்கை (வியப்பு)

★ அச்சம் (பயம்) ★ பெருமிதம் (பெருமை) ★ வெகுளி (கோபம்) ★ உவகை (மகிழ்ச்சி)

2. பின்னணியிசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

பின்னணி இசை

★ திரைப்படத்தில் **கதைக்கு உயிரூட்டுவது** பின்னணி இசை ஆகும்.

★ பின்னணி இசைச் சேர்ப்பும், மௌனமும் திரையில் **உணர்வுகளை வெளிப்படுத்த உதவுகின்றன.**

சான்று

★ கதைநாயகி சன்னல் வழியாகத் தெருவைச் சோகத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

★ அச்சமயம் ஒரு மகிழுந்துப் புறப்படும் ஒலி மட்டும் கேட்கிறது.

★ அவள் விருப்பமில்லாமல் யாரோ ஒருவர் செல்கிறார் என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது.

3. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.

ஒருமுக எழினி

★ மேடையின் ஒரு பக்கத்தின் **இறுதியிலிருந்து**, மற்றொரு பக்கத்தின் **இறுதி**க்குச் செல்லுமாறு அமைக்கப்படும் திரை **'ஒருமுக எழினி'** ஆகும்.

பொருமுக எழினி

★ மேடையின் **நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்தும்படி இரு பக்கத்திலிருந்தும்** வருமாறு அமைக்கப்படும் திரை **'பொருமுக எழினி'** ஆகும்.

4. "மூச்சு நின்று விட்டால்
பேச்சும் அடங்கும்" - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

★ எரிவதைப் **பிடுங்கினால்** கொதிப்பது **அடங்கும்**

கூடுதல் பழமொழி

★ இளரத்தம் **பேச்சு** சத்தம் போடும்; கிழரத்தம் பேச்சு **மூச்சு** போகும்.

★ **காச்சிமூச்சினு** கத்துகிற கடன்காரனை நம்பலாம்;
பேச்சுமூச்சு இல்லாத போக்கிலிய நம்பக்கூடாது.

சிறுவினா

1. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு

★ சிற்ப நூலாசிரியர்கள் கூறிய இயல்புகள் மாறாத நன்னிலத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.

★ **'பொதிகை மலை'** போன்ற உயரிய மலையிலிருந்து **மூங்கிலை**க் கொண்டு வந்தார்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ மூங்கிலில் **ஒரு சாண் அளவு** இடைவெளியுள்ள **கணுக்கள்** இருந்தன.

★ நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி அரங்கம் அமைத்தனர்.

★ தம் கைப்பெருவிரலில் **இருபத்து நான்கு அளவி**னைக் கொண்டதாக மூங்கிலை வெட்டினர்.

★ அதை அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டு அதில் **ஏழுகோல் அகலமும், எட்டுக் கோல் நீளமும் ஒரு கோல் உயரமும்** உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.

★ அரங்கின் தூணிற்கு மேல் **உத்திரப் பலகை**யை வைத்தனர்.

★ உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடையே **நான்கு கோல் அளவு** இருந்தது.

★ அரங்கின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் **இரு வாயில்கள்** அமைக்கப்பட்டன.

★ மேல்நிலை மாடத்தில் **ஐம்பூதங்களை வரைந்து** வைத்தனர்.

★ தூண்களின் நிழல் அரங்கில் விழாதபடி, **விளக்குகளை** ஏற்றினர்.

★ ஓவிய வேலைப்பாடுமிக்க **மேல் விதானத்தை (மேற்கூரை)** அமைத்தனர்.

★ சிறந்த **முத்துகளால் செய்யப்பட்ட மாலை**களை அரங்கம் முழுவதும் தொங்க விட்டனர்.

★ இவ்வாறு, சிறப்பான வேலைப்பாடுகளுடன் அரங்கம் அமைக்கப்பட்டது.

2. எவையேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலைகள்

(சென்னை அடுக்குமாடிக் கட்டிடத்தில் மேல்வீட்டுக்காரரும் கீழ்வீட்டுக்காரரும்)

★ மேல்வீட்டுக்காரர் - ஏன் டா! எத்தன தடவை சொல்லிக்கொடுத்தாலும் உனக்குச் சூரியனுக்கும் சந்திரனுக்கும் வித்தியாசமே தெரியாதா? நீயெல்லாம் ஏன் டா எனக்கு மகனா பொறந்த!

(எனக் கூறிச் சிறுவனை அடித்துத் துவைத்துக் கொண்டு இருக்கிறார். சத்தத்தில் ஊரே கூடிவிட்டது)

★ கீழ்வீட்டுக்காரர் - ஏங்க! ஏங்க ! ஏன் புள்ளைய போட்டு இந்த அடி அடிக்கிறீங்க உங்களுக்கு மனசாட்சி இருக்கா?

★ மேல்வீட்டுக்காரர் - எனக்கு மனசாட்சியெல்லாம் இருக்குங்க ஆன என் மகனுக்குத்தான் சுத்தமா அறிவே இல்லை. எத்தன நாள் சொல்லிக்கொடுத்தும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் வித்தியாசம் தெரியலை.

★ கீழ்வீட்டுக்காரர் - அடப்பாவி! அவனுக்காவது சூரியனுக்கும் சந்திரனுக்கும்தான் வித்தியாசம் தெரியலை. உனக்கு உன் புள்ளைக்கும் என் புள்ளைக்குமே வித்தியாசம் தெரியலை.

நீ அடிக்கிறது என் புள்ளையடா !

(சிறுவன் நிமிர்ந்து முகத்தைக் காட்டினான். எல்லோரும் சிரித்துவிட்டனர் மேல்வீட்டுக்காரர் முகம் அச்சத்தில் வியர்த்துவிட்டது)

★ ஊர்மக்களுக்கு **'நகை'** என்னும் மெய்ப்பாடு தோன்றியது.

★ மேல்வீட்டுக்காரருக்கு - **'அச்சம்'** என்னும் மெய்ப்பாடு தோன்றியது.

★ கீழ்வீட்டுக்காரருக்கு - **'வெகுளி'**(சினம்) என்னும் மெய்ப்பாடு தோன்றியது.

★ சிறுவனுக்கு **'அழுகை'** என்னும் மெய்ப்பாடு தோன்றியது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3.திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துதல்

காட்சியின் ஆற்றல்

★ கதை நகர்வுக்கு உதவுவது காட்சி ஆகும்.

★ திரைப்படத்தில் வசனத்தைக் காட்டிலும் காட்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

★ காட்சிகள் அடுத்தடுத்து வைப்பதன்மூலம் கதை சொல்லப்படுகிறது.

எடுத்துக்காட்டு

★ முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள்.

★ அடுத்த காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.

★ எண் 7, வீரையா தெரு.... என்று ஒருவர் முகவரியைச் சொல்லும்போதே காட்சி அந்த முகவரியில் சென்று நிற்கும்.

காட்சி மறைவு, காட்சி உதயம்

★ காட்சிகள் மாறுவதை உணர்த்த ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக **மங்கலாகக் காட்டி இருள் ஆக்கி**க் காட்டுவர். ★ இது **'காட்சி மறைவு'** எனப்படும்.

★ அடுத்த காட்சி தொடங்கும்போது இருட்டாக இருந்த பகுதி சிறிது சிறிதாக **வெளிச்சமாக மாறி முழுக்காட்சியும் தெரியும்**. ★ இது **'காட்சி உதயம்'** எனப்படும்.

கலவை, அழிப்பு

★ ஒரு காட்சி **மறையும்போதே அடுத்த காட்சி** தெரியத் தொடங்குவது **'கலவை'** ஆகும்.

★ பழைய காட்சியை **அழித்துக் கொண்டே அடுத்த காட்சி** தோன்றுவது **'அழிப்பு'** ஆகும்.

4. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.

"கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் - சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நிறுவுதல்"

★ மனிதன் தான் வாழும் நாட்களிலே ஏதேனும் ஒரு துறையிலோ, இடத்திலோ, வாழ்க்கையிலோ நான் இப்படி இருக்க வேண்டும்.

★ நான் அப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம்தான் கனவு காண்கிறான். காரியம் ஆற்றுகின்றான்.

★ ஆனால், எப்படியெல்லாம் இருக்க நினைக்கின்றானோ அத்துறையிலோ அவ்விடத்திலோ அவன் வாழ்க்கையிலோ அப்படியெல்லாம் அவன் கனவு நிஜமாவதில்லை.

★ அதைத்தான் கவிஞர் எளிமையாக நான்கு சொற்களில் அமைத்துவிடுகின்றார்.

நகுலன் கவிதை

★ **"இருப்பதற்காகத்தான்**

வருகிறோம்

இல்லாமல்

போகிறோம்."

★ இக்கவிதை நகுலன் கண்முன் நிகழ்ந்ததையும் மனதில் நிகழ்ந்ததையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைத்த முயற்சியாக நான் காண்கிறேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

1. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

குறிப்புச் சட்டகம்

சொல்வதன் நோக்கம்	**முன்னுரை**	**திரைப்படம்**	**திரைப்படத்தின் வகைகள்**
திரைக்குப் பின்னால்	**உழைப்பின் சங்கமம்**	**திரைப்படத்தின் இன்றைய நிலை**	
முடிவுரை	**திரைப்படப் பயன்**	**வாழ்க**	**திரைப்படக்கலை!**

சொல்வதன் நோக்கம்

★ கனவுத் தொழிற்சாலையான திரைப்படத் துறையின் சிறப்புகளை இருவகை நோக்கத்தில் எடுத்து இயம்புவதற்காகவே!

முன்னுரை

★ திரைப்படத் துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழில்தான் என்பதைக் காரணக் காரியங்களுடன் உள்ளடக்கி உங்கள்முன் திரையாக விரிக்கின்றேன்.

திரைப்படம்

★ தொடக்கக் காலத்தில் பொழுதுபோக்காக இருந்த **நாடகக் கலையே** பிற்காலத்தில் **திரைப்படமாக** விரிந்தது.

★ ஒரே இடத்தில் நடித்த செயல்பாடு பல்வேறு இடங்களில், படக்கருவிமூலம் பதிவு செய்யப்பட்டு, ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் ஒலிபரப்பு செய்யும் தொழில் நுட்பமாக வளர்ந்தது.

★ திரைப்படத்தில் **பொழுதுபோக்கு**, **விழிப்புணர்வு**, **விடுதலை உணர்வு**, **சமூக அவலங்களைச் சாடுதல்**, **தனிமனித ஆளுமை**, **பகுத்தறிவு**, **பட்டறிவு** எனப் பலவகைக் கூறுகள் விரிந்துகிடக்கின்றன.

திரைப்பட வகைகள்

★ தற்காப்புக்கலைப் படம் ★ நகைச்சுவைத் திரைப்படம் ★ நாடகத் திரைப்படம்
★ பயண ஆவணப்படம் ★ மசாலாப்படம் ★ பேய்ப்படம்
★ முழு நீளத் திரைப்படம் ★ வரலாற்றுப்படம் ★ மொழிமாற்றுத் திரைப்படம்

திரைப்படத்துக்கு பின்னால்

★ இயக்குதல் ★ நடித்தல் ★ கதை எழுதுதல்
★ திரைக்கதை எழுதுதல் ★ வசனம் எழுதுதல் ★ குரல் கொடுத்தல்
★ நடன இயக்கம் ★ திரைப்படத் தயாரிப்பு ★ ஒளிப்பதிவு
★ திரையரங்க மேற்பார்வை ★ ஒலிப்பதிவு ★ ஒலிப்பொறியியல்
★ படத் தொகுப்பு ★ மொழிமாற்றம் செய்தல் ★ படம் பதனிடுதல்
★ தயாரிப்பு மேற்பார்வை ★ மக்கள் தொடர்பு ★ பாடல் எழுதுதல்
★ திரைப்பட விநியோகம் ★ ஒரு திரைப்படத்திற்காக இத்தனை துறைகள் இயங்குகின்றன.
★ ஒவ்வொரு துறையிலும் பல்வேறு நபர்கள் பணியாற்றுகின்றனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ ஒவ்வொரு நபரும் தனக்குக் கீழே துணையாளர்களையும் குற்றேவல் புரிபவர்களையும் துணைக்குக் கொண்டே இயங்குகின்றனர்.

★ **ஏறத்தாழ 300 பேர் ஒரு திரைப்படத்திற்காக இயங்குகின்றனர்**.

★ 300 பேர் சார்ந்த குடும்பங்களும் ஒரு திரைப்படத்தால் வாழ்கின்றன.

உழைப்பின் சங்கமம்

★ 300 தொழிநுட்பக் கலைஞர்களும் இணைவதாலேயே ஒரு திரைப்படம் வெளிவருகின்றது.

★ **இடம், நேரம், காலம்**, போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவருடைய உழைப்பின் சங்கமம்தான் ஒரு திரைப்படம்.

திரைப்படத்தின் இன்றைய நிலை

★ 1990கள் வரை போட்டியற்ற பொழுதுபோக்கு ஊடகமாக இருந்த தமிழ்த் திரைப்படத்துறை, **செயற்கைக் கோள், தொலைக்காட்சி, கணினி, இணையதளச் சேவை, யூடியூப் ஊடகம், வெப் சீரியல்** எனப்படும் **இணையவழி நாடகம்** ஆகியவற்றின் வருகையால் ஆட்டம் கண்டிருக்கின்றது.

★ தொழில்நுட்ப முன்னேற்றங்கள் திரையரங்குக்கு வராமலேயே எளிதாக திருட்டுத் தனமாக வீட்டிலிருந்தே படங்களைப் பார்க்க வழி செய்கின்றன.

★ உலகத் திரைப்படங்களுடனான மக்களின் பரிச்சயம், தமிழ்த் திரைப்படத் தயாரிப்புத் தரத்தில் எதிர்பார்க்க வைத்தது.

★ நாள்தோறும் ஒளிபரப்பாகும் **தொலைக்காட்சி நாடகத் தொடர்களில்** பெண்களின் கவனம் திரும்பியதாலும், உயர்ந்து வந்த **திரையரங்குச் சீட்டுக் கட்டணங்களாலும்**, போக்குவரத்து நெரிசல்களாலும் குடும்பத்துடன் திரையரங்குக்கு வரும் போக்கு குறைந்தது.

★ **கூடி வரும் தயாரிப்புச் செலவுகள், கணிக்க இயலாத மக்களின் இரசனை, அதிக ஊழியம் வாங்கும் நடிகர்கள், திருட்டுத் திரைப்பட வட்டுப்புழக்கம், விலை உயர்வான திரையரங்குச் சீட்டுகள், தரமற்ற திரையரங்குகள்** ஆகியவை தற்போதைய தமிழ்த் திரைப்படத் துறையின் பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றன.

முடிவுரை

★ இன்றைய கலைகளில் சிறந்து விளங்குவது திரைப்படக் கலை. பல்வேறு குடும்பங்கள் திரைப்படத் தொழிலால் வாழ்கின்றன என்பது இதன் மூலம் விளங்கும்.

திரைப்படப் பயன்

★ திரைப்படங்கள் பெரும்பாலும் சமூக மாற்றத்திற்கான விடிவெள்ளி, எனவே நானும் திரைப்படத்தின் நன்மைகளை மட்டும் நன்குணர்ந்து செயல்படுவேன்.

2. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**முதல் சந்திப்பு**	**சிவாஜி கணேசன் வீட்டில்**	
வீட்டின் தோற்றம்	**சிவாஜியின் வேடங்கள்**	**சிவாஜியின் தோற்றம்**	**முடிவுரை**	**நூற்பயன்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கற்றதன் நோக்கம்

★ மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை வெளிப்படுத்துவதற்காகவே!

முன்னுரை

★ ஒரு வேளை சாப்பாட்டிற்காகவும் **ஐந்து ரூபாய் பணத்திற்காகவும் சினிமா விளம்பரம் செய்த இளைஞன், பாலசந்திரன்**.

★ பாலசந்திரன் **கேரள மாநிலம் சுள்ளிக்காடு** பகுதியைச் சேர்ந்தவர்.

★ பாலசந்திரன், **மகாநடிகர் சிவாஜிகணேசனைக்** கண்டபோது ஏற்பட்ட மனவோட்டத்தை இங்கு காண்போம்.

முதல் சந்திப்பு

★ 1986ஆம் ஆண்டு **'ருதுபேதம்'** என்ற திரைப்படத்தின் ஐம்பதாம் நாள் விழா நடைபெற்றது.

★ திரைப்பட நிகழ்ச்சிக்கு சிவாஜி கணேசன் தலைமை ஏற்றிருந்தார்.

★ அந்த நிகழ்ச்சியில்தான் பாலசந்திரன் முதன்முறையான சிவாஜிகணேசனை நேரில் சந்தித்தார்.

சிவாஜி கணேசன் வீட்டில் - பாலச்சந்திரனுக்கு ஏற்பட்ட மனமகிழ்ச்சி

★ வி.பி.கே. மேனன் எடுக்கும் படத்தில் சிவாஜி கணேசன் நடிக்க இருந்தார்.

★ படத்தின் திரைக்கதை **ஜான்பால்**, இயக்குநர் **ராஜீவ்நாத்** ஆவர்.

★ திரைப்படம் குறித்து நேரில் பேசுவதற்காக ராஜீவ்நாத் சிவாஜி கணேசன் வீட்டிற்குச் சென்றார்.

★ ராஜீவ்நாத்துடன் ஜான்பாலும் பாலசந்திரனும் சிவாஜி கணேசன் வீட்டிற்குச் சென்றனர்.

வீட்டின் தோற்றம் - பாலச்சந்திரனுக்கு மாபெரும் வாய்ப்பு கிடைத்தது

★ சிவாஜி கணேசனின் **வீடு ஓர் அரண்மனையைப்போல** இருந்தது.

★ சிற்ப வேலைப்பாடுகள் செய்த மிகப் பெரிய கதவுகள். ★ உள்ளே விசாலமான ஒரு தளம்.

★ தங்கத்தால் இழைத்த யானைத் தந்தங்கள் இரண்டு அழகிற்காக வைக்கப்பட்டிருந்தது.

★ இடப்புறத்தில் மேலே செல்ல, பெரிய மாடிப்படிகள் இருந்தன.

சிவாஜியின் வேடங்கள் - வியப்பில் ஆழ்ந்த பாலச்சந்திரன்

★ மூவரும் மாடிப்படியில் ஏறி மேலே சென்றனர்.

★ படியின் ஒரு திருப்பத்தில், **வீரபாண்டிய கட்டபொம்மன் வேடத்தில் சிவாஜியின் ஆயில் பெயிண்ட்** செய்யப்பட்ட படம் இருந்தது.

★ அதைக் கண்டதும், பாலசந்திரன் நடுங்கி, கையெடுத்துத் தலைகுனிந்து வணங்க போனார்.

★ **உடைவாள் உருவின நிலையில் சத்ரபதி சிவாஜி**.

★ **மீசையை முறுக்கியபடி, ராஜராஜசோழன்.**

★ பிரெஞ்சு அரசு வழங்கிய **செவாலியர் விருதுடன் கூடிய வெள்ளைக் குதிரை** ஆகியவற்றைக் கண்டனர்.

சிவாஜியின் தோற்றம்

★ மூவரும் மேலே சென்று அமர்ந்திருந்தனர். ★ சிவாஜி அவர்களைப் பார்க்க வந்துகொண்டிருந்தார்.

★ சிவாஜி மெல்ல மெல்லச் சிங்க நடை நடந்து வந்தார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ சிவாஜியைக் கண்ட பாலசந்திரன் துள்ளி எழுந்தார்.

★ ராஜீவ்நாத்தும் பாலசந்திரனும் சிவாஜி காலில் விழுந்து வணங்கினர்.

முடிவுரை

★ ராஜீவ் நாத்தும் சிவாஜியும் கதை குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

★ பாலசந்திரன் சிவாஜியின் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தார்.

★ சிவாஜிகணேசனின் கதாபாத்திரங்கள் பாலசந்திரனின் மன அடுக்குகளில் ஒவ்வொன்றாகத் தோன்றிக் கொண்டிருந்தன.

நூற்பயன்

★ நடிகர் திலகம் சிவாஜியைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை அறிந்துக்கொண்டேன்.

3. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

குறிப்புச் சட்டகம்

பேட்டியின் நோக்கம்	**முன்னுரை**	**அன்பும் உபசரிப்பும்**	**பாரம்பரியமிக்க கலைக்குழு**
கனவும் ஆசையும்	**முடிவுரை**	**பேட்டியின் பயன்**	

பேட்டியின் நோக்கம்

★ இயற்கையிலேயே கிராமியக்கலைகளை விரும்புகின்றவன் நான் அக்கலையின் தூண்களான கலைஞர்களை நேரில் சந்தித்து அனுபவங்களைப் பெறவே பேட்டி கண்டேன்.

முன்னுரை

★ நான் என் ஊர் திருவிழாவிற்குச் சென்றிருந்தபோது, திருவிழாவில் தெருக்கூத்து நடத்தப்பட்டது.

★ தெருக்கூத்து கலைக்குழுவில் சுமார் **15 பேர்** இடம்பெற்றிருந்தனர்.

★ தெருக்கூத்துக் கலைக்குழுவின் தலைவராக இருந்தவர் **காளீஸ்வரன் ஐயா**.

★ தெருக்கூத்துக் கலைஞர் காளீஸ்வரன் ஐயாவை நேரில் பார்த்த அனுபவத்தை இக்கட்டுரையில் பகிர்ந்துகொள்கிறேன்.

அன்பும் உபசரிப்பும்

★ ஒருமுறை கலைஞர் காளீஸ்வரன் ஐயாவைக் காண்பதற்காக அவரது வீட்டிற்குச் சென்றேன்.

★ வீட்டிற்குச் சென்ற என்னை அவர் அன்போடு வரவேற்றார்.

★ பகல் வெயிலில் சென்றதால் எனக்குக் குளிர்ந்த மோர் கொடுத்தார்.

★ அவர் கொடுத்த மோர், அமிழ்தம் போன்று இருந்தது.

★ பின்பு அவருடன் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தேன்.

★ அவர்தம் வாழ்க்கைப் பாதையைப் பற்றி என்னுடன் பகிர்ந்துகொண்டார்.

பாரம்பரியமிக்க கலைக்குழு

★ காளீஸ்வரன் ஐயாவின் அப்பா, தாத்தா என்று பல தலைமுறைகளாக அந்தக் கலைக்குழுவை நடத்திவந்துள்ளனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ காளீஸ்வரன் ஐயா சிறு வயது முதலே தன் அப்பாவும் தாத்தாவும் தெருக்கூத்தில் நடிப்பதைப் பார்ப்பார்.

★ அப்பொழுதிலிருந்தே அவருக்கும் அக்கலையின்மீது ஆர்வம் ஏற்பட்டது.

★ திருவிழாக்களில், காளியம்மன் கதை, சுடலைமாடன் கதை, அரிச்சந்திரன் கதை போன்றவற்றைக் கூத்தாக நடித்துக் காட்டுவார்கள்.

★ கிராமப்புறங்களில் மட்டுமின்றி, பல வெளிநாடுகளிலும் இவர்கள் கூத்தை நிகழ்த்திக் காட்டுகிறார்கள்.

கனவும் ஆசையும்

★ சிறு வயதிலிருந்தே கலையின்மீது ஆர்வம் கொண்டிருந்த கலைஞர் காளீஸ்வரன் ஐயா தற்போது அறுபது வயதைக் கடந்துள்ளார்.

★ சுமார் 35 ஆண்டுகளாக அக்கலைக்குழுவைத் தலைமையேற்று நடத்திவருகின்றார்.

★ அவரிடம் உங்களுடைய ஆசை என்னவென்று கேட்டபோது,

★ "என் உடலில் உயிர் உள்ளவரை நான் இந்த கலையை நிகழ்த்தி மக்களை மகிழ்விக்க வேண்டும். என் வருங்கால தலைமுறையினருக்கும் இந்த கலையைக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்" என்றார்.

முடிவுரை

★ கலைகளைத் தன் உயிருக்கு இணையாக நினைத்து, அக்கலைக்காக தன் உயிர் உள்ளவரை பாடுபடுபவர்கள் கலைஞர்கள்.

★ அத்தகைய கலைஞர் ஒருவரை நேரில் சந்தித்தது என் வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான தருணமாக இருந்தது.

பேட்டியின் பயன்

★ தான் சார்ந்த கலையை உயிரோட்டமாக நடத்துவதற்காகவே உயிர்வாழும் ஓர் உண்மைக் கலைஞனனைப் பார்த்தேன். கிராமியக் கலைகளையும் கலைஞர்களையும் போற்றுவேன்!

வாழ்வியல்

கற்பவை கற்றபின் — **திருக்குறள்**

1. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

விடை - **ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2.கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

"மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக
நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு"

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு

இ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்.

விடை - **ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு**

3.பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

"சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு"

அ) பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை கேடு தரும்

ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை அதிர வருவதோர் நோய்

இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின் அல்லல் படுப்பதூஉம் இல்

விடை - **இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின் அல்லல் படுப்பதூஉம் இல்**

4.அல்லல் படுப்பதூம் இல் - எவரோடு பழகினால்?

அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர் இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

விடை - **ஈ) தீயினத்தார்**

5.திண்ணியர் என்பதன் பொருள்

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

விடை - **ஆ) மன உறுதியுடையவர்**

6. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

விடை - **இ) தூதுவர்**

7.பொருத்துக.

அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வார்

ஆ) செத்தார் - 2) சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்

அ) 1,2,3,4 ஆ) 2,3,4,1 இ) 4,1,3,2 ஈ) 4,3,2,1

விடை - **ஈ) 4,3,2,1**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர் ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர் ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

விடை **- அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளக் கூடியவர்**

9. எளியது, அரியது என்பன

அ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது

இ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு ஈ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

விடை **- ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது**

குறுவினா

1. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது

★ மனத்தை அதன்போக்கில் செல்லவிட்டால், தவறான பாதையில் செல்ல நேரிடும்.

★ எனவே, மனத்தை அதன்போக்கில் செல்லவிடாமல், நல்ல வழியில் செல்ல வேண்டும். அதுவே அறிவுடைமை என்கின்றார் வள்ளுவர்.

திருக்குறள்

➔ **"சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
நன்றின்பால் உய்ப்பது அறிவு" - திருவள்ளுவர்

2. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

உவமை

★ தேர் மிகப்பெரியதாக இருந்தாலும் அதன் அச்சாணி சிறிதாகவே இருக்கும்.

★ **அச்சாணி - உருவத்திற்கும்** ★ **பெரிய தேர் - செயல்களுக்கும்** உவமைப்படுத்தப்பட்டுள்ளன.

பொருள்

★ **ஒருவர் உருவத்தில் சிறியதாக இருந்தாலும், அவரால் மிகப்பெரிய செயல்களைச் செய்ய இயலும்.**

★ எனவே, ஒருவரின் தோற்றத்தைக் கண்டு எள்ளி நகையாடக் கூடாது.

திருக்குறள்

➔ **"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
அச்சாணி அன்னார் உடைத்து" - திருவள்ளுவர்

3. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?

மன உறுதியின் தேவை

★ ஒருவரின் மனம் உறுதியாக இருந்தால் மட்டுமே ஒரு செயலை நல்ல முறையில் செய்து முடிக்க இயலும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ எண்ணியவர் மனஉறுதி உடையவராக இருந்தால், அவர் எண்ணிய எல்லாவற்றையும் செய்து முடிக்க முடியும்.

★ எனவே, ஒரு செயலுக்கு மனம் உறுதியாக இருப்பது கட்டாயமாகும்.

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
திண்ணியர் ஆகப் பெறின்" - திருவள்ளுவர்

4. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

நஞ்சுண்பவர்

★ **'கள் உண்பவரை'**, வள்ளுவர் **நஞ்சுண்பவர்** என இடித்துரைக்கிறார்.

★ கள் உண்பவர் தாம் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் நிலை தடுமாறுவார்.

★ எனவே, **கள் உண்டவரை இறந்தவர்** என்கிறார் வள்ளுவர்.

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் எஞ்ஞான்றும்**
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்" - திருவள்ளுவர்

5. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?

செய்யத்தகாதன

★ அரசருக்கு நீண்ட நாள் நண்பராகவும், நட்புப் பாராட்டுபவராக நீங்கள் இருக்கலாம்.

★ ஆனால் அதற்காகத் **தகுதி அல்லாதவற்றைச் செய்யக் கூடாது**.

★ அவை **மன்னருக்கும் உங்களுக்கும் கேடு தரும்**.

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்**
கெழுதகைமை கேடு தரும்" - திருவள்ளுவர்

6. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

பகைவராலும் அழிக்க முடியாத அரண் அறிவு ஆகும்

★ ஒருவருக்கு அழிவு வராமல் காக்கும் கருவி அறிவே ஆகும்.

★ பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாக அமைவது அறிவு ஆகும்.

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
உள்ளழிக்கல் ஆகா அரண்" - திருவள்ளுவர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?

அஞ்சத் தகாதன

★ வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்சத் தேவையில்லை.

அஞ்சத் தகுந்தன

★ உறவுடையோர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக**
கேள்போல் பகைவர் தொடர்பு" - திருவள்ளுவர்

8. வறுமையும் சிறுமையும் தருவது எது?

வறுமையும் சிறுமையும் தருவது

★ ஒருவருக்கு வறுமையும் சிறுமையும் தருவது **சூதாட்டம்** ஆகும்.

★ சூதாட்டம் ஒருவரின் புகழைக் கெடுத்து, துன்பத்தைக் கொடுக்கும்.

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
வறுமை தருவதுஒன்று இல்" - திருவள்ளுவர்

9. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.

எனக்குப் பிடித்த குறள்

★ **"சொல்லுதல் யார்க்கும் எளிய; அறியவாம்**
சொல்லிய வண்ணம் செயல்" - - திருவள்ளுவர்

பொருள்

★ ஒரு செயலை எவ்வாறு செய்யலாம் என சொல்லுவது எல்லாருக்கும் எளிமையானது.

★ ஆனால் சொல்லிய வண்ணம் செய்வது கடினமானது.

குறள் பிடித்ததற்கான காரணம்

★ சிலர் தன்னால் எல்லாவற்றையும் செய்துவிட இயலும் என்று கூறுவர்.

★ அவர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக மட்டுமே இருப்பார்கள்.

★ அவ்வாறு இருப்பவர்களை இடித்துரைக்கும் வகையில் இக்குறள் அமைந்துள்ளதால் எனக்கு இக்குறளைப் பிடிக்கும்.

10. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

சிறந்த துணை ★ நல்ல இனமே (நற்குணம் உடையவர்கள்) ஒருவருக்குச் சிறந்த துணை ஆகும்.

பகை ★ தீய இனமே (தீயகுணம் உடையவர்கள்) ஒருவருக்குத் துன்பத்தைத் தரும் பகை ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்**
அல்லல் படுப்பதூஉம் இல்" - திருவள்ளுவர்

11. இலக்கணக் குறிப்புத் தருக.

ஒரீஇ, படுப்பதூஉம், சொல்லுதல்

★ ஒரீஇ - **சொல்லிசை அளபெடை** ★ படுப்பதூஉம் - **செய்யுளிசை அளபெடை**

★ சொல்லுதல் - **தொழிற்பெயர்**

12. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - பொருள் கூறுக.

பொருள்

★ நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது

விளக்கம்

★ கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்ல சொற்களைச் சொல்லித் திருத்த முயல்வது, நீரில் மூழ்கிய ஒருவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றதாகும்.

கூடுதல் தகவல்

திருக்குறள்

➔ **"களித்தானை காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
குளித்தானைத் தீத்துரீஇ யற்று" - திருவள்ளுவர்

13. பெருந்தேர் - புணர்ச்சி விதி கூறுக.

புணர்ச்சி விதி

பெருந்தேர் - பெருமை + தேர்

★ விதி 1 - **"ஈறுபோதல்"** (மை கெட்டது) பெரு + தேர்

★ விதி 2 - **"இனமிகல்"** (ந் மிகுந்தது) பெரு + ந் + தேர் = பெருந்தேர்

சிறுவினா

1. "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

பயின்று வந்துள்ள அணி

★ இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி **'தொழில் உவமை அணி'** ஆகும்

★ **அணிகளின் அரசி உவமையணி** ஆவாள்.

அணி விளக்கம்

★ ஒரு பொருளின் தொழிலை, மற்றொரு பொருளின் தொழிலுக்கு உவமை கூறுவது **'தொழில் உவமை அணி'** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சான்றுப் பாடல்

➔ **"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்" - திருவள்ளுவர்

பாடலின் பொருள்

★ தீயில் குளிர் காய்பவர் மிகவும் நெருங்கியும் செல்லாமல், விலகியும் செல்லாமல் குறிப்பிட்ட தொலைவிலேயே இருப்பார்.

★ அதுபோல, அரசனுடன் பழகுபவர் மிகவும் நெருங்காமலும், விலகிச் செல்லாமலும் இருக்க வேண்டும்.

அணிப் பொருத்தம்

★ இக்குறட்பாவில், தீக்காய்பவரின் தொழிலுக்கு, அரசனோடு பழகுபவரின் தொழில் உவமை கூறப்பட்டுள்ளதால், இது **'தொழில் உவமை அணி'** ஆகும்.

★ **தீ** - அரசன் ★ **தீக்காய்பவர்** - அருகில் இருப்பவர் ★ **அகலாமை, நெருங்காமை** - தொழில்.

2. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள்வழி நீவிர் கருதுவன யாவை?

அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள்வழி நான் கருதுவன.

★ ஒருவருக்கு **அழிவு வராமல் காக்கும் கருவி** அறிவு ஆகும்.

★ பகைவரால் அழிக்க முடியாத **பாதுகாப்பு அரண்** அறிவு ஆகும்.

➔ **"அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
உள்ளழிக்கல் ஆகா அரண்" - திருவள்ளுவர்

★ பின்னர் வரும் துன்பத்தை முன்னரே அறிந்துக் காத்துக் கொள்பவருக்கு நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

➔ **"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
அதிர வருவதோர் நோய்" - திருவள்ளுவர்

கூடுதல் தகவல்

★ மனம் அது போகும் வழியில் செல்லவிடாமல், நல்ல வழியில் செலுத்துவது அறிவு.

★ எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும் அதன் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு.

★ உலகம் எத்தகைய நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் செல்வதே அறிவு.

3. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.

"துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்"

எடுத்துக்காட்டு உவமையணி

அணி விளக்கம்

★ உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு மறைந்து வருவது **'எடுத்துக்காட்டு உவமையணி'** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சான்று

➔ **"துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்"

பொருள்

★ உறங்குகின்றவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்.

★ அதுபோல, கள் உண்பவரும் நஞ்சுண்பவரே ஆவார்.

பொருத்தம்

★ உவமை - உறங்குகின்றவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்

★ உவமேயம் - கள் உண்பவர் நஞ்சுண்பவரே

★ இக்குறட்பாவில் உவமையும் உவமேயத்தையும் இணைக்கும் 'போல' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

★ எனவே, இது 'எடுத்துக்காட்டு உவமையணி' ஆகும்.

4. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.

மனத்திட்பத்தின் அவசியம்

★ ஒரு செயலைச் செய்வதற்கு மன உறுதி இன்றியமையாததாகும்.

★ மன உறுதியைத் தவிர மற்ற எதுவும் பயன்படாது.

திருக்குறள்

➔ **"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
மற்றைய எல்லாம் பிற" - திருவள்ளுவர்

★ ஒருவர் மனஉறுதி உடையவராக இருந்தால், நினைத்த செயலை நினைத்தப்படியே நடத்தி முடிப்பார்

திருக்குறள்

➔ **"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
திண்ணியர் ஆகப் பெறின்" - திருவள்ளுவர்

கூடுதல் தகவல்

★ ஒரு செயலை நான் எளிதாகச் செய்துவிடுவேன் என்று கூறுவது அனைவருக்கும் எளிதானது.

★ ஆனால், மன உறுதி உள்ளவரால் மட்டுமே அச்செயலைச் செய்து முடிக்க இயலும்.

5. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.

சிற்றினம் சேராமை

★ மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும்.

★ ஒருவரை உலகத்தார் மதிக்கும் சொல் யாரோடு சேர்க்கிறாரோ அவரின் தன்மையைப் பொருத்தே சொல்லப்படும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

துணையும் துன்பமும்

➔ **"மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான்ஆம்**
இன்னான் எனப்படும் சொல்" - திருவள்ளுவர்

★ ஒருவருக்குச் சிறந்த துணை நல்ல இனத்தோடு சேருதல்

★ ஒருவருக்குத் துன்பத்தைத் தரும் பகை தீய இனத்தோடு சேருதல்

திருக்குறள்

➔ **"நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்**
அல்லல் படுப்பதூஉம் இல்" - திருவள்ளுவர்

6. வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?

★ வாளையும் பாம்பையும் பகைக்குச் சான்றாக வள்ளுவர் கூறும் அதிகாரம் **'உட்பகை'** ஆகும்.

வாள்

★ வாளைப்போல வெளிப்படையாகத் துன்பம் செய்பவர்களுக்கு அஞ்சத் தேவையில்லை.

★ உறவுடையோர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

திருக்குறள்

➔ **"வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக**
கேள்போல் பகைவர் தொடர்பு" - திருவள்ளுவர்

பாம்பு

★ உள்ளத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடிவாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றதாகும். அது நமக்குத் தீமையே செய்யும்.

திருக்குறள்

➔ **"உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
பாம்போடு உடன்உறைந் தற்று" - திருவள்ளுவர்

7. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விளக்குக.

சூது

★ ஒருவருக்குத் துன்பத்தை உருவாக்கி, புகழைக் கெடுத்து, வறுமையைத் தருவது சூதாட்டம் ஆகும்.

★ சூதாடுமிடத்தில் ஒருவருடைய காலம் கழியுமானால், அது அவருடைய பரம்பரைச் செல்வத்தையும் நற்பண்புகளையும் கெடுக்கும்.

திருக்குறள்

➔ **"சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்**
வறுமை தருவதுஒன்று இல்" - திருவள்ளுவர்

கள்

★ உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர், அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே ஆவார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லன சொல்லித் திருத்த முயல்வது, நீரில் மூழ்கிய ஒருவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றதாகும்.

திருக்குறள்

➔ **"களித்தானை காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
குளித்தானைத் தீத்துரீஇ யற்று" - திருவள்ளுவர்

நெடுவினா

1. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

குறிப்புச் சட்டகம்

குறள் கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**பாதுகாப்பு அரண் அறிவு**
தீமையிலிருந்து காக்கும் அறிவு	**மெய்ப்பொருள் காட்டும் அறிவு**	
உலகத்தோடு ஒத்துவாழும் அறிவு	**எதிர்காலத்தைக் கணிக்கும் அறிவு**	
முடிவுரை	**நூற்பயன்**	**வாழ்க வள்ளுவம்!**

குறள் கற்றதன் நோக்கம்

★ ஒரு மனிதனுக்கு உலகின் சிறந்த செல்வம் அறிவு ஒன்றேதான் அறிவே வாழ்வின் உயர்விற்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவர் வழி அறிவதற்கே கற்றேன்.

முன்னுரை

★ உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் நூல் திருக்குறள்.

★ அறிவுடைமை அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகள் வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை இக் கட்டுரையில் காண்போம்.

பாதுகாப்பு அரண் அறிவு

★ ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவி அறிவே ஆகும்.

★ அறிவு, பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாகவும் உள்ளது.

➔ **"அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
உள்அழிக்கல் ஆகா அரண்"

தீமையிலிருந்து காக்கும் அறிவு

★ மனத்தைத் தீயவழியில் செல்லவிடாமல்,

★ நல்லவழியில் செலுத்துவது அறிவு ஆகும்.

➔ **"சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

மெய்ப்பொருள் காட்டும் அறிவு

★ எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத்தன்மையை அறிந்துக்கொள்ள செல்வது அறிவு ஆகும்.

➔ **"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உலகத்தோடு ஒத்துவாழும் அறிவு

★ உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ,

★ அந்நெறியில் தானும் செல்வதே அறிவாகும்.

➔ **"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
அவ்வது உறைவது அறிவு"

எதிர்காலத்தைக் கணிக்கும் அறிவு

★ எதிர்காலத்தில் தனக்கு நேர இருப்பதை முன்கூட்டியே அறிந்துக் காத்துக்கொள்பவரே அறிவுடையவர்.

★ அறிவுடையவருக்கு அதிர்ச்சித் தரக்கூடிய துன்பம் எதுவும் ஏற்படாது.

➔ **"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
அதிர வருவதோர் நோய்"

முடிவுரை

★ பாதுகாப்பு அரணாகவும் , தீமையிலிருந்து காக்கும் கருவியாகவும்

★ மெய்ப்பொருளைக் காட்டுவதாகவும், உலகத்தோடு செல்ல செய்வதாகவும்

★ துன்பத்தை எதிர்க்கொள்ளும் வலிமையைத் தரக்கூடியதாகவும் இருப்பது அறிவாகும்.

★ அத்தகைய அறிவுடையவர் வாழ்வின் மிக உயர்ந்த நிலையை அடைவார் என்பதை வள்ளுவர்தன் குறள்வழி கூறுகின்றார்.

நூற்பயன்

★ அறிவின் ஆழத்தை வள்ளுவர்வழி அறிந்தேன் வாழ்வில் அறிவுடையவனாக இருப்பேன்.

2. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

குறிப்புச் சட்டகம்

நிறுவுவதன் நோக்கம்	**முன்னுரை**	**தெய்வப் புலவன் திருவள்ளுவன்**	
வாழ்வியலுக்கு நன்மையும் தீமையும் பயப்பன	**வாழ்வியலுக்கு வள்ளுவன் காட்டும் நெறி**	**முடிவுரை**	**நூற்பயன்**

நிறுவுவதன் நோக்கம்

★ வள்ளுவன் வாய்மொழிந்த குறள்கள் வாழ்வியலுக்குச் சிறந்த வழிமுறைகள் என்பதை நிறுவுவதற்காகவே!

முன்னுரை

★ நீதி நூல்களில் சிறந்த நூலான திருக்குறளில் வாழ்வியலுக்கு நன்மை பயப்பன தீமை பயப்பன குறித்து எளிமையாக உணர்த்தப் பட்டுள்ளது.

★ வாழ்வின் நன்மை தீமைகளை வள்ளுவன்வழி உள்ளதை உள்ளவாறு படம்பிடித்துக் காட்டுவதற்காகவே இக்கட்டுரை.

தெய்வப்புலவன் திருவள்ளுவர்

★ வள்ளுவர் ஒரு தெய்வப் புலவர்.

★ வள்ளுவன்தன் வாழ்வில் கண்டு, கேட்டு, உண்டு, உற்றுணர்ந்த வாழ்வியல் சிறப்புகளைத் தெள்ளத் தெளிவாக நமக்கு முப்பாலாகப் பிரித்து இரண்டடியில் உரைக்கின்றார்.

★ உலகில் தோன்றி நீதி நூல்களிலேயே தலை சிறந்தது உலகப்பொதுமறை எனலாம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வாழ்வியலுக்கு நன்மையும் தீமையும் பயப்பன

வாழ்வியலுக்கு நன்மை பயப்பன

★ இல்வாழ்க்கை ★ வாழ்க்கைத் துணை நலம் ★ அறிவுடைமை
★ வினைத்திட்பம் ★ செய்நன்றி அறிதல் ★ வெ.ஃகாமை
★ வெகுளாமை ★ சிற்றினம் சேராமை ★ கள் உண்ணாமை ★ சூது

இல்வாழ்க்கை

★ அன்பும் அறமும் கொண்டு இல்வாழ்க்கையைப் பண்புடனும் பயனுடனும் நடத்த வேண்டும்.

➔ **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
பண்பும் பயனும் அது"

★ அறத்தின் இயல்போடு, உலகில் வாழவேண்டிய நெறியோடு நின்று வாழ்பவர் வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவர்.

➔ **"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
தெய்வத்துள் வைக்கப் படும்"

வாழ்க்கைத் துணை நலம்

★ வாழ்க்கைத் துணைவியான மனைவியைவிட உலகத்தில் ஓர் ஆண்மகனுக்குச் சிறந்த செல்வம் ஏதுமில்லை.

★ தன் கணவனையே தெய்வமெனவும் வீட்டையே கோயிலாகவும் போற்றும் பெண்கள் 'பெய்'! என்றால் மழை பெய்யும்.

அறிவுடைமை

★ உலகத்தில் அழிவிலிருந்து காக்கும் பெருங்கருவி அறிவு. பகைவராலும் அழிக்கமுடியாத ஒன்றாகும்.

➔ **"அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
உள்ளழிக்கல் ஆகா அரண்"

★ அறிவை அது போகும் போக்கில் செல்லவிடாமல் தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

★ எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

➔ **"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

★ உலகம் எத்தகைய உயர்ந்த வழியில் செல்கின்றதோ அதே வழியில் செல்வதே அறிவுடைமை ஆகும்.

★ பின்னால் வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் திறமையே அறிவுடைமை ஆகும்.

➔ **"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
அதிர வருவதோர் நோய்"

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வினைத்திட்பம்

★ நல்ல செயலுக்கு மன உறுதியே வேண்டும் மற்றவை எவையும் பயன்படாதவையே ஆகும்

➔ **"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
மற்றைய எல்லாம் பிற"

செய்நன்றி அறிதல்

★ தான் எந்த உதவியும் செய்யாத போது பிறர் நமக்குச் செய்யும் உதவிக்கு இந்த பூமியையும் அந்த வானத்தையும் கொடுத்தாலும் ஈடாகா.

➔ **"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
வானகமும் ஆற்றல் அரிது"

★ ஒருவர் ஆபத்துக் காலத்தில் செய்த நன்றியை மறக்கக் கூடாது.

★ எந்தப்பயனையும் எதிர்பார்க்காமல் நமக்கு ஒருவர் செய்த உதவி கடலைவிடப் பெரியது.

★ தினையளவு சிறிய உதவியை ஒருவர் செய்திருந்தாலும் அதை நாம் பெரிதாக நினைத்துப் போற்ற வேண்டும்.

★ ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அன்றே மறப்பது நன்று.

➔ **"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
அன்றே மறப்பது நன்று"

★ ஆகவே எந்த நன்றியை நாம் மறந்தாலும் செய் நன்றியை ஒரு நாளும் மறக்கக் கூடாது. அந்த நன்றியை மறந்தவர்க்கு உய்வே இல்லை.

வாய்வியலுக்குத் தீமை பயப்பன

வெ∴காமை

★ பிறர் பொருளுக்கு ஆசைபடக் கூடாது; அது நம்மிடம் உள்ள செல்வத்தையும் குறைத்து விடும்.

வெகுளாமை

★ கோபம் பேராபத்தாகும். கோபத்தைக் காக்க வேண்டும் இல்லையேல் நம்மை நாமே கொல்வதற்குச் சமம்.

புலால் மறுத்தல்

★ பிற உயிர்களைக் கொன்று தின்று; தன் உயிரைக் காக்கக் கூடாது.

சிற்றினம் சேராமை

★ தீய பழக்கம் உடையவர்களிடம் நட்பு கூடாது;

★ நல்ல நண்பர்களைப்போன்ற உற்ற துணையும் நமக்கு என்றும் தேவை.

கள் உண்ணாமை

★ மது உண்டு மயக்கத்தில் வாழ்வதென்பது; தானாகச் சென்று சாவதாகும்.

சூது

★ சூது, ஒருவருக்கு மனத் துன்பத்தை உருவாக்கி, அவருடைய புகழையும் செல்வத்தையும் கெடுக்கும்.

முடிவுரை

★ திருவள்ளுவர் உரைத்த குறட்பாக்களை ஆராயும்போது திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியமே என்பது புலனாகின்றது.

நூற்பயன்

★ வள்ளுவன் சொன்ன வாழ்வியல் கருத்துகளைக் கடைபிடித்து வாழ்வேன் என்று உறுதியளிக்கின்றேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நம்மை ஆளும்போம்

இயல் 7

நாடு - அரசு - சமூகம் - நிருவாகம்

அருமை உடைய செயல்

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ. ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு. ஈ) இந்தா போறான் தருமன்.

விடை - **ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி**

2. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.

அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்.

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

விடை - **ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.**

3. "சாபவிமோசனம்", "அகலிகை" கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

விடை - **ஆ) புதுமைப்பித்தன்**

4. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.

அ) அறம் - 1) கர்ணன் ஆ) வலிமை - 2) மனுநீதிச்சோழன்

இ) நீதி - 3) பீமன் ஈ) வள்ளல் - 4) தருமன்

அ) 3,2,1,4 ஆ) 4,3,2,1 இ) 2,4,3,1 ஈ) 4,3,1,2

விடை - **ஆ) 4,3,2,1**

5. தொன்மம் - விளக்கம் தருக.

தொன்மம்

★ தொன்மம் குறித்த பல்வேறு வகையான விளக்கங்கள் வழங்கப்படுகிறது.

★ **பழங்கதை, புராணம்** என்று பொருள்.

★ தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் ஒன்று.

★ காலம் காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்கள்.

★ பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவது.

6. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

தொன்மம் வெளிப்படும் தொடர்கள்

★ கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான் ★ இந்தா போறான் தருமன்

★ இவன் பெரிய அரிச்சந்திரன் ★ கர்ணன் தோற்றான்போ ★ நான் ஏகலைவன்டா!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. உள்மனம் ஒரு பாற்கடல்
அதைக் கடைந்தால்
அமுதம் மட்டுமல்ல
ஆலகாலமும் வெளிப்படும் என்பதை
நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?
கவிதையில் வெளிப்படும் தொன்மம்:-

★ பாற்கடல் ★ அமுதம் ★ ஆலகாலம்

தொன்மக் கதை

★ தேவர்கள் அமுதம் பெறுவதற்காக பாற்கடலைக் கடைந்தனர்.
★ பாற்கடலில் அமுதம் வருவதற்குமுன் ஆலகாலம் என்னும் நஞ்சு (விஷம்) வந்தது.
★ அந்த விஷத்தைச் சிவபெருமான் அருந்தினார் என்பது தொன்மக் கதை.

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

விடை - **ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்**

2. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

விடை - **ஈ) அனைத்தையும்**

3. முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது.
கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1,2 சரி
இ) கூற்று 1,2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

விடை - **அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

4. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

விடை - **இ) வளர்ந்த**

5. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

விடை - **ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறுவினா

1. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

பருவத்தே பயிர் செய்

★ உழவுத்தொழிலில், விதை விதைத்தல், நாற்று நடுதல், அறுவடை செய்தல் என பலநிலைகள் உள்ளன.

★ உழவுத்தொழிலில், ஒவ்வொரு நிலையையும் ஏற்ற பருவத்தில் செய்ய வேண்டும்.

★ அவ்வாறு செய்வதால் உழவுத்தொழிலில் வெற்றியடைய இயலும்.

★ நம் வாழ்விலும் எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துச் செய்ய வேண்டும்.

★ இவ்வாறு செய்வதால் நாம் வாழ்வில் வெற்றியடைய இயலும்.

2. எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.

தேநீருக்குப் பின்னால் உள்ள மனித உழைப்பு

★ நாம் ஒரு பொருளைப் பயன்படுத்தும்போது அதற்குப் பின்னால் உள்ள உழைப்பைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

★ தேநீர் தேயிலையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. ★ தேயிலைகள் மலைப்பகுதியில் விளைகின்றன.

★ தேயிலைத் தோட்டத்தில் மலைவாழ் மக்கள் தினக்கூலிகளாக வேலை செய்கிறார்கள்.

★ மலைவாழ்மக்கள் இயற்கைப் பேரிடர்களாலும், காட்டுவிலங்குகளின் தாக்குதல்களாலும் பாதிக்கப்படுகின்றனர்.

★ இத்தகைய மனிதர்களின் ஆபத்தான உழைப்பிலிருந்தே நமக்குத் தேநீர் கிடைக்கின்றது.

3. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

அறிவுடை வேந்தனின் நெறி

★ குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லாக இருந்தாலும், அதை அறுத்து யானைக்கு வழங்கினால், ஒரு மாதம் வரை வழங்க இயலும்.

★ அதுபோல, அறிவுடை வேந்தன் தன் நாட்டு மக்களிடம் முறைப்படி வரி வசூலித்தால், நாட்டின் செல்வம் நீண்ட காலத்திற்குக் கிடைக்கும்.

4. செவியறிவுறூஉத் துறையை விளக்குக.

செவியறிவுறூஉத் துறை (செவி + அறிவு + உறு = செவியறிவுறு)

★ "அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன **காதுகள் ஏற்கும் வகையில்** கேட்க அறிவுறுத்துவது, **செவியறிவுறூஉ துறை** ஆகும".

சிறுவினா

1. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

வேளாண் மேலாண்மை குறித்து நான் பரித்துரைப்பன

★ வேளாண்மையிலும் மேலாண்மையைக் கடைப்பிடிப்பது கட்டாயமாகும்.

★ மண்ணிற்கு ஏற்ற பயிர்வகையைத் தேர்ந்தெடுத்தல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ நிலத்தைச் சரியான முறையில் உழுது பக்குவப்படுத்துதல் ★ விதை விதைத்தல்

★ நீர் பயன்பாட்டை நெறிப்படுத்துதல் ★ களை எடுத்தல் ★ உரமிடுதல்

★ அறுவடை செய்தல் ★ பதப்படுத்தி, பாதுகாத்தல் போன்ற அனைத்துச் செயல்பாடுகளையும் குறித்த நேரத்தில், சரியான முறையில் செய்தால் மட்டுமே வேளாண்மையில் வெற்றி பெற இயலும்.

2. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?

அதிசய மலரின் பூச்செடி முளைக்கும் விதம்

★ போர் மூண்டது; குண்டுமழை பொழிந்தது; நிலங்கள் அழிக்கப்பட்டன.

★ அளவிட முடியாத துயரமும், மனிதர்கள் சிலர் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

★ குண்டுகளால் தாக்கப்பட்டதால் மரங்கள் அனைத்தும் அழிந்தன.

★ மனிதர்களின் நினைவுகளில் மட்டுமே மரங்கள் இருந்தன.

★ அத்தகைய நிலையில் போரின் குழந்தைப் போல அதிசய மலர் தோன்றியது.

மலர் தோன்றக் காரணம்

★ மலரின் விதை யானையின் எச்சத்திலிருந்து வந்திருக்கலாம்!

★ யார்மீதோ ஒட்டியிருந்த விதை உயிர் பெற்றிருக்கலாம்! என்கிறார் கவிஞர்.

அதிசயமலர் வருகையால் நிகழ்ந்தவை

★ அதிசய மலரை நோக்கி **வண்ணத்துப்பூச்சிகள் வரத் தொடங்கின**.

★ செடியிலிருந்து **காடுகள் உருவாகும்**. ★ **காடுகள் மழையைப் பொழியச் செய்யும்**.

கவிதை உணர்த்தும் செய்தி

★ போரினாலும் பேரழிவுகளினாலும் மனித இனம் அழிந்துக் கொண்டிருக்கிறது.

★ எத்தகைய அழிவுகள் நேரிட்டாலும் மனிதனுக்குச் சிறிதளவேனும் தன்னம்பிக்கை இருந்தால் போதும்.

★ தன்னம்பிக்கையின்மூலம் **விடாமுயற்சி செய்து மீண்டும் மகிழ்ச்சியான நிலையை அடைய இயலும்** என்பதை இக் கவிதை உணர்த்துகிறது.

3. எங்கிருந்தோ வருகிறது

வண்ணத்துப்பூச்சியொன்று

பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம்

★ கவிஞர் **தமிழ்நதி** எழுதிய **'அதிசய மலர்'** என்னும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

பொருள்

★ போரில் அழிந்த இடத்தில் ஒரு மலர் புதிதாகத் தோன்றுகிறது.

★ அந்த மலரை நோக்கி எங்கிருந்தோ வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன.

★ நாளை பறவைகளும் வரக் கூடும் என்கிறார் கவிஞர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விளக்கம்

★ போரினால் ஏற்பட்ட அழிவுகளில் மக்கள் வருத்தத்தில் இருக்கிறார்கள்.

★ அந்நிலையில், மக்கள் மனத்தில் தோன்றும் நம்பிக்கை மீண்டும் மகிழ்ச்சியான வாழ்வைத் திருப்பி அளிக்கும் என்பது பொருள்.

★ இக்கவிதையில், மனிதனின் நம்பிக்கை மலராகப் படிமப்படுத்தப்பட்டுள்ளது.

4. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

உவமை

★ யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே

பொருள்

★ ஒரு சிறிய நிலப்பரப்பில் விளைந்த நெல்லாக இருந்தாலும் அதனை அறுத்து யானைக்கு இட்டால் **ஒரு மாதம்வரை யானைக்கு உணவு வழங்க இயலும்**.

★ ஆனால், **யானை விளைநிலத்திற்குள் புகுந்தால் அது உண்பதைவிட காலில் மிதிப்பட்டு வீணாவது அதிகமாகும்**.

விளக்கம்

★ ஒரு மன்னன்தன் நாட்டு மக்களிடம் சரியான அளவில் வரிவசூல் செய்தால் அதிக அளவு வரி வசூலிக்க இயலும்.

★ மன்னன்தன் பேராசையால் மக்களிடம் அதிகப்படியான வரிவசூல் செய்ய நினைத்தால் **'யானை புகுந்த நிலம்போல வீணாகும்'.**

நெடுவினா

1. எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக. (அல்லது)

தேயிலைத் தோட்டப் பாடல் வழியாக எளியவர்களின் வலிகளை படம்பிடித்துக் காட்டுக!

குறிப்புச் சட்டகம்

நிறுவுவதன் நோக்கம்	முன்னுரை	எளிய மக்களின் வலிகள்	எடுத்துக் கொண்ட பாட்டு	
தேயிலைத் தோட்டப் பாட்டு	நாட்டுச் சிறப்பு	நாசகர்கள் வருகை	நாயாக நம்மை மிதித்தனர்	
ஏமாற்றம்	தீவுகளில் நடந்த தீமைகள்	கல்வியே கரை	முடிவுரை	நூற்பயன்

நிறுவுவதன் நோக்கம்

★ புலம்பெயர்த் தமிழ் மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கியங்களின் மூலம் பதிய முற்படுவதற்கே!

முன்னுரை

★ 19 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினாலும், வெள்ளையர்கள் வஞ்சத்தினாலும் ஆங்கிலேயர் அடிமைப்படுத்தி வைத்திருந்தனர்.

★ குடியேற்ற நாடுகளில் விளிம்புநிலைத் தமிழர்கள், கரும்புத் தோட்டத் தொழிலாளர்களாகவும், தேயிலைத் தோட்டத் தொழிலாளார்களாகவும் புலம்பெயர்ந்தனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ தாய் மண்ணை விட்டு, துன்பக்கேணியில் விழுந்து, விம்மி விம்மி அழுது அவர்கள் பட்ட துன்பத்தை இக் கட்டுரை படம் பிடித்துக் காட்டுகின்றது.

எளிய மக்களின் வலிகள்

★ நாட்டுப்புற இலக்கியங்களில் இழப்புப் பாடல்களே எளிய மக்களின் வலிகளை பட்டியலிட்டுக் காட்டுகின்றன.

★ வறுமை ★ காதல் ★ ஏக்கம் ★ கணவன் மனைவி சண்டை ★ இறப்பு

★ குழந்தையின்மை ★ இழப்பு ★ புலம்பெயர் துன்பம் ★ ஏமாற்றம் போன்றவையே ஆகும்.

எடுத்துக் கொண்ட பாட்டு

★ பாடல்-**நாட்டுப்புறப்பாடல்;** பாடல் வகை-**கும்மிப்பாடல்வகை;** பாடலின் பாடுபொருள்-**வறுமையின் வலி;** பாடல் தொகுப்பு-**பாரதமக்களின்பரிதாபச்சிந்து;** பாடல் தலைப்பு-**தேயிலைத்தோட்டப்பாட்டு.**

தேயிலைத் தோட்டப் பாட்டு

★ புலம்பெயர் மக்களின் துன்பத்தை இந்தத் தேயிலைத் தோட்டப்பாட்டு நமக்குத் தெளிவாக உணர்த்தவிருக்கின்றது.

நாட்டுச் சிறப்பு

★ ஆதிகாலத்தில் **இந்தியா மிகவும் செல்வச் செழிப்புடன்** இருந்தது.

★ கைத்தொழில்களால் **மக்கள் சிறப்புடன்** வாழ்ந்து வந்தனர்.

★ மக்கள் **நாகரீகத்திலும் மிகுந்தும் அரசாட்சியைக் கொண்டாடியும்** வாழ்ந்தனர்.

நாசகர்கள் வருகை

★ வெள்ளையர்கள் நம் நாட்டில் நுழைந்து நாட்டைப் பிடிக்கத் திட்டமிட்டனர்.

★ எளிய மக்களின் **கைத்தொழில்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அழித்து விட்டனர்.**

நாயாக நம்மை மிதித்தனர்

★ பிறந்து வளர்ந்து, மனைவி மக்களுடன் இனிமையாக வாழ்ந்து வந்த நம் குடும்பங்களின் வாழ்வாதார வேலைகளைப் பறித்தனர்.

★ பார்த்தாலே பேயைப் போலவும், நடந்தாலே நாயைப்போலவும் விரட்டினர்.

ஏமாற்றம்

★ வேலையில்லாததால் நோட்டீஸ் கொடுத்து, வெள்ளையர்கள் வேலைக்கு அழைத்தனர்.

★ கடன் வாங்கச் சொல்லி, ஒன்றுக்குப் பத்து நூறாக ஏமாற்றிக் கணக்கு எழுதி வைத்தனர்.

★ பற்றுவரவுக் குறிப்பேட்டில் எப்போதும் பாக்கி இருப்பதுபோலவே கணக்கு வைத்தனர்.

★ ஏழைகளின் வறுமையைப் பயன்படுத்திச் சாகும்வரை தலைக்குச் சுமையை ஏற்றி வைத்தனர்.

தீவுகளில் நடந்த தீமைகள்

★ கடன் கணக்கு அதிகமானதாகக் காட்டி, இலங்கைத்தீவுக்கும், அந்தமான் தீவுக்கும் மக்களை நாடு கடத்தினர்.

★ தீவுகளில் வெள்ளையர்களுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றச் சொல்லி அடிமைப்படுத்தினர்.

★ உண்ண உணவுமின்றி, செலவுக்குப் பணமுமின்றி, **மண்ணுக்குள் மறைந்து வாழும் மண்ணுளிப் பாம்பைப் போல்** ஒவ்வொரு நாளும் துன்பத்தை அனுபவித்தோம்.

★ இனியேனும் அந்த வெள்ளையர்களிடம் சிக்காமல் வாழுங்கள்!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கல்வியே கரை

★ இந்த இழிநிலைக்கு இந்தியர்கள் துன்பப்படக் காரணம் நம்மிடம் கல்வியறிவு இல்லாமைதான்.

★ இனியேனும் நம் பிள்ளைகள் ஒற்றுமையுடன் கல்வி கற்று, இந்தத் துன்பக் கடலிலிருந்து கரையேறுங்கள் !

முடிவுரை

★ அக்கால ஏழை மக்களின் அவலங்களை அழகாய்ப் படம் பிடித்துக் காட்டுகின்றது தேயிலைத் தோட்டப் பாடல்.

நூற்பயன்

★ வறுமையில் வலியை உணர்ந்தேன் . வறுமைக்குக் கல்வியின்மைதான் காரணம் என்பதைத் தெளிந்தேன். கல்வி கற்பேன்! வறுமையை ஒழிப்பேன்!

2.சங்ககாலவரலாற்றைஅறிந்துகொள்ள,புகளூர்க்கல்வெட்டுஎவ்வகையில்துணைபுரிகிறது-விளக்குக.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**புகளூர் கல்வெட்டு**
அறிக்கையில் இருந்த செய்தி	**தமிழ்ப்பிராம்மிக் கல்வெட்டுகள்**	**சங்கக் கால வரலாறு**
முடிவுரை	**நூற்பயன்**	

கற்றதன் நோக்கம்

★ சங்ககால வரலாற்றை அறிந்துக்கொள்ள புகளூர் கல்வெட்டு துணைபுரிவதை விளக்குவதற்காகவே!

முன்னுரை

★ சங்ககாலத்தைப் பற்றி அறிவதற்குக் கல்வெட்டுகள் துணைநிற்பதை முதன்முதலில் அறிந்தவர் **'ஐராவதம் மகாதேவன்'**.

★ சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, **'புகளூர்க் கல்வெட்டு'** எவ்வகையில் துணைபுரிகிறது என்பதை இங்கு காண்போம்.

புகளூர்க் கல்வெட்டு

★ கரூர் மாவட்டம் புகளூரில் உள்ளது **ஆறுநாட்டான் குன்று**.

★ ஆறுநாட்டான் குன்றில் **சேரல் இரும்பொறை மன்னரின் கல்வெட்டுகள்** கிடைத்துள்ளன.

★ இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் **1927-28**ஆம் ஆண்டு ஓர் அறிக்கை வெளியிட்டது.

★ அவ்வறிக்கையில்தான் புகளூர்க் கல்வெட்டுப் பற்றிய செய்தி முதன்முறையாகக் கிடைக்கிறது.

அறிக்கையில் இருந்த செய்தி

★ ஆறுநாட்டான் குன்றிலுள்ள குகைகளுள் சில கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

★ ஒரு கல்வெட்டில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருந்தது.

★ அந்தக் கல்வெட்டில் **'ஆதன்'** என்னும் சொல் இருந்துள்ளது.

★ எனவே, அது **சேர மன்னர்**களைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள்

★ **'தமிழ்ப் பிராம்மி'** கல்வெட்டுகள் மிகச் சுருக்கமாக இருக்கும்.

★ ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்கள் மட்டுமே இருக்கும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ ஆறுநாட்டான் குன்றில் இருந்த கல்வெட்டு, மிக நீளமான கல்வெட்டு.

★ அக்கல்வெட்டு நாற்பது ஆண்டுகளாக வாசிக்கபடாமல் இருந்துள்ளது.

சங்ககால வரலாறு

★ கல்வெட்டின் முதல் வரியில், **"யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் உறையுள் இது"** என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

★ இரண்டாவது வரியில், **'கோ'** என்னும் சொல் இருந்தது.

★ கோ என்னும் சொல் அக்கல்வெட்டுச் சங்ககாலத்தைச் சேர்ந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது.

★ இரண்டாவது வரியில், **"கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்"** என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

★ மேலும், **'பெருங்கடுங்கோன்', 'இளங்கடுங்கோ', 'இளங்கோ'** என்ற பெயர்களும் இடம்பெற்றிருந்தன.

★ இப்பெயர்கள் அனைத்தும் சங்க இலக்கியங்களில் மட்டுமே உள்ளன.

★ அக் கல்வெட்டு, சேரல் இரும்பொறை மன்னன் பொறித்தது.

★ சேரல் இரும்பொறை கரூவூரிலிருந்து ஆட்சி செய்த மன்னன்.

★ அக் கல்வெட்டுகள் ஏறத்தாழ **கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச்** சேர்ந்தது.

சிறப்புச் செய்தி

புகளூர்க் கல்வெட்டில் இருந்த முழு வாசகம்

➔ **"..... அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறையப்**
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்
கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்"

முடிவுரை

★ சங்ககால வரலாற்றைப் பற்றி அறிந்துகொள்வதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டுமே கிடைத்திருந்தன.

★ ஆனால், முதல்முறையாக புகளூர்க் கல்வெட்டில்தான் சங்ககால வரலாற்றைப் பற்றிய செய்தி கிடைத்துள்ளது.

★ அவ்வகையில், புகளூர்க் கல்வெட்டு சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள மிகவும் துணைபுரிகின்றது.

நூற்பயன்

★ புகளூர் கல்வெட்டுகளும் ஈரடி வெண்பாவும் கீழடி தொல்பொருளும் எம் தமிழின் சிறப்பையும் தமிழர்களின் பெருமையும் நிலை நாட்டுவதை உணர்கின்றேன்.

3. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

குறிப்புச் சட்டகம்

கட்டுரையின் நோக்கம்	**முன்னுரை**	**இருவகை அறிவு**	**வரவும் செலவும்**
சேக்ஷ்பியர் கூறும் நிதி மேலாண்மை		**முடிவுரை**	**நிதி நிருவாகத்தின் பயன்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கற்றதன் நோக்கம்

★ மதிப்பிற்குரிய ஐயா. இறையன்பு (இ.ஆ.ப) அவர்களின் வழி நிருவாகத்திறனை அறிவதற்காகவே!

முன்னுரை

★ மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் தோன்றிவிட்டது.

★ நாட்டின் முன்னேற்றம் மேலாண்மை சிந்தனையிலிருந்துத் தொடங்குகிறது.

★ நிருவாகத்தில் கடைப்பிடிக்கப்படும் மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைக் காண்போம்.

இருவகை அறிவு

★ ஒரு நிர்வாகத்தில் உயர் பதவியில் இருப்பவரால் எல்லா துறையிலும் திறமைசாலியாக விளங்க முடியாது.

★ ஆனால், அவர் திறமைசாலிகளைத் தன் அருகில் வைத்துக் கொள்ள வேண்டும்.

★ ஒரு துறையைப் பற்றி **தெரிந்திருப்பது ஒருவகை அறிவு**,

★ **யாருக்குத் தெரியும் என்பதைத் தெரிந்து வைத்திருப்பது மற்றொரு அறிவு**.

★ இக்கருத்தையே நாலடியாரும் வலியுறுத்துகிறது.

சிறப்புச் செய்தி

★ **"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்" - நாலடியார் (139)

வரவும் செலவும்

★ நிருவாகத்தில் **வரவிற்கு ஏற்றபடியே செலவு** செய்ய வேண்டும்.

★ சிலர் **வரவைவிட அதிகமாகச் செலவு** செய்கின்றனர்.

★ அவ்வாறு செய்பவர்கள் **பணத்திற்காக அடுத்தவரை எதிர்ப்பார்க்க நேரிடும்**.

ஷேக்ஸ்பியர் கூறும் நிதி மேலாண்மை

★ டைமன் பற்றிய ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்று நிதி மேலாண்மையை விளக்குகின்றது.

★ டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான்.

★ டைமன் **வரவைக் காட்டிலும் மிகுதியாகச் செலவு** செய்தான்.

★ சில காலத்தில், கடன் கொடுத்தவர்கள் கடனைத் திருப்பிக் கேட்டனர்.

★ டைமன் கடனைத் திருப்பித் தர இயலாமல், நாட்டைவிட்டுச் சென்றான்.

★ தலைமறைவாக வாழத் தொடங்கினான்.

★ மனித இனத்தையே வெறுக்கத் தொடங்கினான்.

முடிவுரை

★ எவனொருவன் நிருவாக மேலாண்மையில் சிறந்து விளங்குகின்றானோ, அவனே வாழ்வின் உயர்ந்த நிலையை அடைவான்.

நிதி நிருவாகத்தின் பயன்

★ காலத்தின் அருமையை உணர்ந்தேன். காலமறிந்து கடமையாற்றுவேன்! காலத்தை வெல்லும் காளையாவேன்!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 8

மனிதம் - ஆளுமை

எல்லா உயிரும் தொழும்

இலக்கணத் தேர்ச்சி கொள்

1. குறியீடுகளைப் பொருத்துக.

அ) பெண் - 1) சமாதானம் ஆ) புறா - 2) வீரம்

இ) தராசு - 3) விளக்கு ஈ) சிங்கம் - 4) நீதி

அ) 2,4,1,3 ஆ) 2,4,3,1 இ) 3,1,4,2 ஈ) 3,1,2,4

விடை - **ஈ) 3,1,2,4**

2. கூற்று: 19ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.
காரணம்:பொதலேர்,ரைம்போ,வெர்லேன்,மல்லார்மேமுதலானவர்கள்குறியீட்டியத்தைவளர்த்தார்கள்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடை - **ஆ) கூற்று சரி, காரணம் சரி**

3. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்

அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

விடை - **ஈ) உள்ளுறை உவமை**

4. "திட்டம்" என்னும் தலைப்பில் "வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?" என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் "வரம்" எதற்குக் குறியீடாகிறது?

அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

விடை - **இ) திட்டம்**

5.மறைத்துச்சொல்லவும்மிகுத்துச்சொல்லவும்அழுத்திச்சொல்லவும்பயன்படும்இலக்கியஉத்திஎது?

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

விடை - **அ) குறியீடு**

குறுவினா

1. குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.

கவிதை - 1

★ இரவில் வாங்கினோம்
இன்னும்
விடியவேயில்லை

★ குறியீட்டு உத்தி - சுதந்திரம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.

வியர்வை கவிதை

★ **"இந்த**

ஆதிரைப் பருக்கைகள்

வீழ்ந்ததும்

பூமிப்பாத்திரம்

அமுதசுரபி"

வெளிப்படும் குறியீடு

★ ஆதிரைப்பருக்கை - வியர்வைத்துளி ★ அமுதசுரபி - உலகச் செழிப்பு

பொருள்

★ **ஆதிரையிட்ட பருக்கை**யால் (சோறு) அமுதசுரபியில் **உணவு பெருகி**க் கொண்டே இருந்தது.

★ அதுபோல, உழைப்பாளர்களின் **வியர்வை பூமியில் வீழ்வதால், உலகம் செழித்து வளர்கிறது**.

3. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணம்

★ **சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் தொடர்பு** இருக்க வேண்டும்.

★ சுட்டும் பொருள் அனைவரும் அறிந்த ஒன்றாக இருக்க வேண்டும்

★ தொடர்பின் வாயிலாகக் குறியீட்டுப்பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

நம்மை அளப்போம்

பலவுள் தெரிக

1. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

விடை - **இ) திண்டிவனம்**

2. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார்

ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி. வேங்கடசாமி

இ) தமிழ்த் தென்றல் - 3. திரு.வி.க

ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப் பாவாணர்

விடை - **அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார்**

3. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

விடை - **ஈ) கிறித்தவமும் தமிழும்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. நான் வெற்றுவெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை

இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

விடை - **இ) தமது அடையாளத்தை**

5. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

விடை - **ஆ) நல்லியக்கோடனும் குமணனும்**

குறுவினா

1. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" நூல் பற்றிக் குறிப்பு வரைக.

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் - நூல் குறிப்பு

★ தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூலை இயற்றியவர் **மயிலை சீனி. வேங்கடசாமி**

★ **தமிழரின் கலைத்திறனை**ப் பற்றிக் கூறும் நூல் தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

★ இது **கவின்கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முதல் நூல்** ஆகும்.

★ இது **தமிழக அரசின் பரிசு** பெற்ற நூல்.

2. "விரிபெரு தமிழர் மேன்மை

ஓங்கிடச் செய்வ தொன்றே

உயிர்ப்பணியாகக் கொண்டோன்" - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

★ மயிலை சீனி. வேங்கடசாமியின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி **பாவேந்தர் பாரதிதாசன்** கூறியுள்ளார்.

3. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

முகம் முகவரியற்றுப் போனதற்குக் காரணம்

★ **தனக்குள்ளே தன்னைத் தொலைத்ததால்** முகம் முகவரியற்றுப் போனதாக சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார்.

4. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் புலம்பிய விதம்

★ "இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் **இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!**

★ **வானம் இடிந்து விழவில்லையே!** ★ **கடல்நீர் வற்றிப் போகவில்லையே!**

★ இந்த **உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ?"** என்று மக்கள் புலம்பினர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

1. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

நினைவுச் சிறப்பிதழுக்கான செய்தி

தமிழ்ப்பேரவைச் செம்மல்

இதழ்களில் தமிழ் வளர்த்த இமயம்

★ குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச் செல்வி, ஆரம்பாசிரியன், இலட்சுமி போன்ற இதழ்களில் தமிழ் வளர்த்து தமிழரின் இதயம் நிறைந்தவர்.

சமயத்தமிழைச் சாமானியனுக்குக் கொடுத்தவர்

★ பௌத்தம் வளர்த்த தமிழைப் பக்குவமாய் பருகக் கொடுத்தவர்!

★ கிறுத்தவத் தமிழைக் கிள்ளிவளவன்போல் அள்ளிக்கொடுத்தவர்!

★ சமணத் தமிழைச் சாமானியனுக்கும் கொண்டு சேர்த்தவர்!

★ இருண்ட காலத்தின் வரலாற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தவர்!

★ **மகேந்திரவர்மன் நரசிம்ம வர்மன், நந்திவர்மன் கொங்கு நாட்டு மன்னர், துளு நாட்டு மன்னர்**-களைப் பற்றி ஆய்ந்தறிந்தவர்!

★ **'களப்பிரர்கள் ஆட்சியில் தமிழகம்'** களப்பிரர்களின் ஆட்சியை புதிய கண்ணோட்டத்துடன் நோக்கியவர்!

பன்மொழி ஆய்வில் பைந்தமிழ்ப் புலமையைப் பாடியவர்.

★ **மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம்** ஆகிய மொழியறிந்த மேதை.

★ **துளு** மொழியையும் **தமிழ்** மொழியையும் **ஒப்பிட்டு ஆய்ந்தவர்**.

★ மறைந்துபோன தமிழ் நூல்களில் பரந்துகிடந்த தமிழை வரைந்து கொடுத்தவர்.

சொல்லாராய்ச்சியைச் சொல்லிக் கொடுத்தவர்

★ செந்தமிழ்ச் செல்வியில் **சொல்லாய்வுப் பணி**யைச் செய்தவர்.

★ **'அஞ்சிறைத் தும்பி'** என்னும் தொகுப்பே சொல்லாய்வுக்கு சிறந்த வகுப்பாக அமையும்.

அழகுக் கலைகளை ஆய்ந்த அறிஞன்

★ கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகிய அழகுக்கலைகளை ஆய்ந்தவர்

★ **'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்'** ஆழ்ந்தறிந்து தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றவர்.

ஆய்வியல் பேரறிஞர்

★ சாசனச் செய்யுள் மஞ்சரியில் தமிழைச் சிம்மாசனத்தில் ஏற்றியவர்.

★ **'பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ்நூல்கள்'** என்னும் நூல் படைத்து தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட **மானுடப்போராளி**.

★ வீறுகொண்டு தமிழாய்ந்த **ஆராய்ச்சிப் பேரறிஞர்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

கடையெழு வள்ளல்களும் அவர்கள் செய்த செயல்களும்

வள்ளல்கள்	செயல்கள்
பேகன்	காட்டில் குளிரில் நடுங்கிய **மயிலுக்குத்** தன்னுடைய **ஆடையைக் கொடுத்தவன்**.
பாரி	பற்றுக் கொம்பின்றி இருந்த **முல்லைக்குத் தன் தேரைக் கொடுத்தவன்**.
மலையமான் திருமுடிக் காரி	குதிரைகளையும் பிற செல்வங்களையும் **இரவலர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுத்தவன்.**
ஆய் ஆண்டிரன்	**நீல வண்ணக் கல்லையும்** நாகம் கொடுத்த **ஆடையினையும் இறைவனுக்குக் கொடுத்தவன்**.
அதிகமான் நெடுமான் அஞ்சி	இறவாத தன்மையைக் கொடுக்கக் கூடிய **நெல்லிக்கனியைத்** தான் உண்ணாது **ஔவைக்குக் கொடுத்தவன்**.
நள்ளி	தன்னிடம் உள்ள **செல்வங்களை** இல்லையென்னாது **அனைவருக்கும் கொடுத்தவன்**.
வல்வில் ஓரி	மலை **நாட்டைக் கூத்தர்க்குப்** பரிசாகக் **கொடுத்தவன்**.

3. "ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் ★ **இரட்சணிய யாத்திரிகம்**, குமாரப் பருவம், இரட்சணிய சரிதப் படலம்

ஆசிரியர் ★ **எச்.ஏ. கிருட்டிணனார்**

பொருள்

★ இறைமகன் மக்கள்மீது மிகவும் அன்புக்கொண்டிருந்தார்.

★ எனவே, அவர்கள் தன்னைக் கயிற்றால் கட்டும்போதும் அமைதியாக இருந்தார்.

★ அந்தக் கட்டிலிருந்து விடுபட இயலாமல் ஓர் ஏழையைப் போல இறைமகன் இருந்தார், இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள் என்கிறார் கவிஞர்.

4. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

கொடை வழங்குதலில் நான் பின்பற்ற விரும்புவன

★ மனிதனுக்குரிய **மேன்மையான பண்புகளுள் ஒன்று** கொடைப்பண்பாகும்.

★ கொடை வழங்குவது என்பது வெறும் **பணமாகத்தான் வழங்க வேண்டும் என்பதில்லை**.

★ பிறரிடம் கையேந்த மனமில்லாமல், **சாலைகளில் பேனா, புத்தகம் போன்றவற்றை விற்பவர்களிடம் பொருட்கள் வாங்குவதும்** ஒருவித கொடைதான்.

★ வேகமான வாழ்க்கை முறையில் நாளுக்கு நாள் விபத்துகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

★ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவும் வகையில் கொடை வழங்க வேண்டும்.

★ **வாழும்போது குருதிக் கொடை**யும் (இரத்ததானம்),
வாழ்ந்த பிறகு உடல் கொடையும் (உடல் உறுப்பு தானம்) வழங்கலாம்.

★ பிறந்த நாள் போன்ற நன்னாளில் நாம் மட்டும் மகிழ்ச்சியுடன் கொண்டாடாமல், ஆதரவற்றோருக்கு நம்மால் முடிந்த பொருளைக் கொடுத்து அவர்களையும் மகிழ்ச்சி அடைய செய்யலாம்.

★ **'மகிழ்ச்சியில் பெரிய மகிழ்ச்சி அடுத்தவரை மகிழ்வித்து பார்ப்பது'** என்பதற்கு ஏற்ப கொடை வழங்க வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

1. மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்	**முன்னுரை**	**தொடக்ககால ஆய்வுகள்**		**பல்துறை ஆய்வு**
வரலாற்று ஆய்வு	**கலையியல் ஆய்வு**	**இலக்கிய ஆய்வுகள்**	**முடிவுரை**	**நூற்பயன்**

கற்றதன் நோக்கம்

★ தமிழாய்வின் முன்னோடியாகத் திகழ்ந்தவரான மயிலை சீனி. வேங்கடசாமி ஐயாவின் பன்முகத் தன்மையை அறிந்து ஆய்வுச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளவே கற்றேன்.

முன்னுரை

★ தமிழர்களின் பெருமைமிக்க வரலாற்றை வெளியிட்டு மிகச்சிறந்த ஆய்வறிஞராக விளங்கியவர் மயிலையார்.

★ மயிலையார் வெளியிட்ட ஆய்வுக்கருத்துகள் அனைத்தும் தமிழின் பெருமைக்கு அரண் சேர்ப்பதாக அமைந்திருந்தது.

★ மயிலையார் ஓர் **'ஆராய்ச்சிப் பேரறிஞர்'** என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் இக்கட்டுரையில் காண்போம்.

தொடக்ககால ஆய்வுகள்

★ மயிலையார், ஒருமுறை ச.த. சற்குணர் என்பவரின் உரையைக் கேட்டு **'கிறித்துவமும் தமிழும்'** என்னும் நூலை எழுதினார்.

★ அதுவே மயிலையாரின் முதல் நூல் ஆகும்.

★ மயிலையார் **தமிழின் தொல் இலக்கியம், கலை, எழுத்து** ஆகியவற்றில் **ஈடுபாடு** கொண்டிருந்தார்.

★ பௌத்தம், சமணம் ஆகிய சமயங்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை,**'பௌத்தமும் தமிழும்'**, **'சமணமும் தமிழும்'** ஆகிய நூல்களில் விவரித்துள்ளார்.

பல்துறை ஆய்வு

★ **சமயம், மானுடவியல், வரலாறு, தொல்பொருள், மொழியாய்வு** போன்ற பல துறைகளிலும் மயிலையார் கவனம் செலுத்தினார்.

★ தமிழ் **எழுத்துகளின் வளர்ச்சி**யை நன்குணர்ந்தவர்.

★ **வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி** ஆகியவற்றில் **புலமை** பெற்றிருந்தார்.

வரலாற்று ஆய்வு

★ மயிலையார், **கி.பி. 3**ஆம் நூற்றாண்டிற்கும் **9**ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் **ஆட்சி புரிந்த மன்னர்**களைப் பற்றி ஆய்வு செய்துள்ளார்.

★ **மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன்** ஆகிய பல்லவ மன்னர்களைப் பற்றி ஆய்வு செய்துள்ளார்.

★ மேலும், **சங்க கால மூவேந்தர்கள், கொங்குநாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், -களப்பிரர், இலங்கை** குறித்த வரலாற்றையும் எழுதியுள்ளார்.

★ களப்பிரர் காலத்தை இருண்ட காலம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அவர்கள் கருத்தை முறியடிக்கும் வகையில், **'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'** என்னும் நூலை வெளியிட்டுள்ளார்.

கலையியல் ஆய்வு

★ மயிலையார் **பல்துறை அறிவும் ஓவியப் பயிற்சியும்** பெற்றிருந்தார்.

★ அவரது பல்துறையறிவு **கட்டடம், சிற்பம், ஓவியம்** தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்வதற்குப் பெருந்துணையாக இருந்தது.

★ தமிழரின் கலைத்திறனை **'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்'** என்னும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

இலக்கிய ஆய்வுகள்

★ மயிலையார் தமிழ் **இலக்கியங்கள் சார்ந்த ஆய்விலும்** ஈடுபட்டுள்ளார்.

★ **பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு** போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

முடிவுரை

★ தம் வாழ்வை முழுமையாக ஆய்விற்கு ஒதுக்கியவர் மயிலையார்.

★ நமது அடையாளங்களை மீட்டெடுத்தவர் மயிலையார்.

★ நமது பெருமைகளை ஆய்வுநோக்கில் விரித்துரைத்தவர் மயிலையார்.

நூற்பயன்

★ பன்முகத்தன்மையோடு விளங்கிய மயிலையார் குறித்து அறிந்துக்கொண்டேன்.

2. எச்.ஏ. கிருட்டிணனார் 'கிருத்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

குறிப்புச் சட்டகம்

நிறுவுவதன் நோக்கம்	முன்னுரை	புலவர்களின் பொதுவான ஒற்றுமைகள்
இலக்கிய ஒற்றுமை	முடிவுரை	நூற்பயன்

நிறுவுவதன் நோக்கம்

★ எச். ஏ. கிருட்டிணனார் கல்வியில் பெரியவர் கம்பர் போன்றே சிறந்த புலவர் என்பதை இரட்சணிய யாத்திரிகம் வழியே மெய்ப்பிக்கவே!

முன்னுரை

★ காலந்தோறும் சிறந்த புலவர்கள் உருவாகிக்கொண்டே இருப்பார்கள். புலவர்களுக்குச் சாதி சமய பேதமில்லை.

★ கம்பனைப் போலவே எச். ஏ கிருட்டிணனாரும் தம் சமயம் சார்ந்து அழகான கவிதைகளை வடித்துள்ளனர் என்பதை ஒற்றுமைப் படுத்துகின்றது இக்கட்டுரை

கம்பருக்கும் கிருட்டிணனாருக்கும் உள்ள பொதுவான ஒற்றுமைகள்

கம்பர்	எச். ஏ. கிருட்டிணனார்
★ **கல்வியில் பெரியவர்** கம்பர்.	★ கல்வி கேள்விகளில் சிறந்தவர் எச். ஏ. கிருட்டிணனார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ கம்பராமாயணம் **வடமொழியிலிருந்து தமிழில் எழுதப்பட்டது.**	★ இரட்சணிய யாத்திரிகம் **ஆங்கிலத்திலிருந்து தமிழில்** எழுதப்பட்டது.
★ வடமொழிலிருந்து தமிழுக்கு வளம் சேர்த்த இலக்கிய நூல்	★ ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு வளம் சேர்த்த இலக்கியம்.
★ கதைத் தலைவன் இறைவன் **இராம பிரான்**.	★ கதைத் தலைவன் இறைமகன் **இயேசு பெருமான்**
★ இராம அயனம் என்றால் இறைவன் இராமன் சென்ற **அன்பு வழி** எனப் பொருளாகும்.	★ இரட்சணிய யாத்திரிகம் என்றால் உயிர் செல்லும் **உண்மை வழி** எனப் பொருள்படும்
★ இறைவன் **இராமன் எவ்விடத்தும் சலனப்பட்டதிலை**.	★ இறைமகன் **இயேசு எவ்விடத்தும் அமைதியாகவே இருந்தார்.**
★ மரபுப் கவிதை வடித்தவர் கம்பர்.	★ மரபுக் கவிதை வடித்தவர் கிருட்டிணனார்.
★ கம்பனின் **யாப்பு வண்ணங்கள் மொத்தம் தொண்ணூற்றாறு**	★ கிருட்டிணனாரும் **பல்வகை யாப்பு வண்ணங்களை** ஆங்காங்கே இடையிடையே புனைந்துள்ளார்
★ இராமாயணத்தில் **சந்த நயங்கள் கொண்ட பாடல்களைப்** புனைந்தார்.	★ இரட்சணிய யாத்திரிகத்தில் **'தேவாரம்'** என்னும் இசைப்பாடல்களை இயற்றியுள்ளார்.
★ **மாபெரும் உவமைகளைக்** கையாண்டவர்	★ **அழகான உவமைகளை** அடுக்கிச் சொல்லியுள்ளார்.
★ எளிமையும் புரியும் வண்ணமும் இருக்கும்	★ எளிமையும் புரிதலும் தெளிவும் இருக்கும்
★ கம்பர்தம் நூலில் **பெரும்பிரிவுகளைக் காண்டங்களாகப் பிரித்திருப்பார்**.	★ எச். ஏ கிருட்டிணனாரும் நூலின் **பெரும் பிரிவுகளைப் பருவம்** எனப் பிரித்தார்.
★ **ஆறுகாண்டங்கள்** உடையது.	★ **ஐந்து பருவங்கள்** உடையது.
★ **உவச்சர் (காளி கோயில் பூசாரி) மரபில்பிறந்து வைணவ மரபில்** இராமனுக்கு இலக்கியம் படைத்தார்.	★ **இந்து மதத்திலிருந்து கிறுத்துவ மதம் தழுவி** ஏசுபெருமானுக்காக இலக்கியம் படைத்தார்
★ கம்பராமாயணம் **படிக்க படிக்க சுவை கூட்டுவது போல்.**	★ இரட்சணிய யாத்திரிகமும் **படிக்க படிக்க ஆர்வமூட்டும்.**
★ கம்பரும் தமிழுக்கு வளம் சேர்க்கும் விதமாக **சரசுவதி அந்தாதி, சடகோபன் அந்தாதி** போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்	★ **கிறுத்துவக் கம்பரும் இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள்** போன்ற நூல்களைப் படைத்துள்ளார்

இலக்கிய ஒற்றுமை

கம்பராமாயணம்	இரட்சணிய யாத்திரிகம்
★ தனக்கு அனைத்துத் தகுதிகள் இருந்த போதும், காட்டுக்குச் செல்ல வேண்டிய போது அரசனையை ஏற்பதுபோலே வன வாசத்தையும் ஏற்றார் இராமன். உவமை-**'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையை வென்ற தம்மா'**	★ தான் எந்த ஒரு துன்பமும் செய்யாத போதும் தன்மீது பிறர் குற்றம் சுமத்தி குற்றவாளியாக்கிய போதும் ஓர் உதவியும் பெற இயலாத ஏழை போல் அமைதியாக நின்றார் இயேசுபெருமான் உவமை **'ஈசன்மகன் நின்றார் ஓர் ஏழையென ஓர்மின்'**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ கைகேயியும், மந்தாரை சூது செய்த காடேகச் செய்த போதும் பணிவுடன் அவர்களிடம் **ஆசிர்வாதம் வேண்டினான் இராமன்.**	★ கொடியோர் ஒன்று கூடி இகழ்ச்சி செய்த போதும் **அமைதி காத்தார் இயேசு பெருமான்.**
★ **"இதைவிடச் சிறந்த பேறு எனக்கு உண்டோ?" இன்றே காடு ஏகுகின்றன்; விடையும் கொண்டேன்** என்று கூறி வருத்தம் சிறிதும் காட்டாமல் இராமன் கைகேயியை விட்டு அகன்றான். ★ கம்பன் வரிகள் - **"மன்னவன் பணியன்று ஆகின், நும்பணி மறுப்பனோ? என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ?"** மக்கள் மயங்கி வீழ்தல்	★ பிலாத்து என்னும் மன்னன் முன் கொண்டு சென்று குற்றவாளியாக நிறுத்தியபோது **"வற்றிய கிணறு தனக்குள் கடலை அடக்கிக் கொள்ள முடியுமா?"** என்கிறார். ★ கிறுத்துவக் கம்பர் உவமை - **"ஒண்ணுமோ வறுங் கூவலுக்கு உததியை ஒடுக்க"!**
★ வசிஸ்டர் மக்களிடம் "இராமன் கொடுமையான காடு செல்கின்றான். பதினான்கு ஆண்டுகள் இனி காட்டில்தான் வாழவேண்டும் இது மன்னனின் ஆணை" என்கின்றார்.	★ இறைமகன் கையிலிருந்த கோலினைப் பிடுங்கினர். முள் முடியைத் தலையில் அடித்தனர். அவருடைய திருமுகத்தில் எச்சிலை உமிழ்ந்தனர். கேலி செய்தனர்.
★ இதைக்கேட்ட மக்கள் "உடலில் தீ பட்டதுபோல அனல் மூச்சு விட்டு, அரண்டு புரண்டு சோர்ந்து வீழ்ந்தனர். கிளிகளும் பறவைகளும் பூனை களும் குழந்தைகளும் அனைவரும் அழுதனர்.	★ இதைக் கண்ட மக்கள் "இக்கொடுமைகளுக்குப் பிறகும் இன்னும் இந்த உலகம் அழியாமல் இருப்பதேனோ என்று அழுது புலம்பினர்.
★ இதற்குப் பிறகு **இராமன் மரவுரியைத் தரித்-துக் கொண்டு தம்பியுடனும் சீதையுடனும் அமைதியாகக் காட்டுக்குச் சென்றான்.**	★ யூதர்களும் சேவகர்களும் இகழ்ந்து பேசினர், **அவர்கள் செய்த பொல்லாங்குகளைப் பொறுத்திருந்தார் இறைவன் இயேசு பெருமான்.**

முடிவுரையும் நூற்பயனும்

★ இருவேறு இலக்கியங்களையும் பொதுத்தன்மைகளையும் ஒப்பிட்டு நோக்கும்போது இவர்கள் கையாண்ட சொற்கள், உவமைகள், இறை நிலைப்பாட்டின் வெளிப்படைத் தன்மை ஆகியவை **எச். ஏ கிருட்டிணனார் கிறுத்துவக் கம்பரே என்பதை உறுதி செய்கின்றது.**

3. கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

குறிப்புச் சட்டகம்

முன்னுரை	**தனிமை வாழ்க்கை**	**ஆறுமுகத்தின் கவலை**
ஆறுமுகத்தின் முடிவு	**மனிதநேயம்**	**முடிவுரை - நூற்பயன்**

முன்னுரை

★ மனிதநேயப் பண்புதான் மனிதச் சமூகத்தை வழிநடத்தக் கூடியதாகும்.

★ மனிதன் தன் வாழ்வில் சோர்ந்து போகும்போது மனிதநேயப் பண்புதான் சோர்விலிருந்து மீட்கிறது.

★ சாந்தா தத் இயற்றிய **'கோடை மழை'** கதை மனிதநேயப் பண்பைப் பற்றி கூறுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தனிமை வாழ்க்கை

★ கதையின் முதன்மை பாத்திரம் **ஆறுமுகம்**.

★ ஆறுமுகத்தின் **மருமகள் காய்ச்சலில் இறந்துவிட்டாள்**.

★ மகனும் மனைவி இறந்த சோகத்தில் தற்கொலை செய்துக்கொண்டான்.

★ எனவே, **ஆறுமுகம் தம் பேரக்குழந்தையுடன் தனிமையில் வாழ்ந்து வந்தார்**.

ஆறுமுகத்தின் கவலை

★ ஒருநாள் பேரனுக்கு உடல்நிலை சரியில்லாததால், மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

★ மருத்துவமனையில் பிற குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் வந்திருப்பதைக் கண்டார்.

★ பெற்றவனையும் பிள்ளையையும் பார்த்துக் கொள்ளாமல், தனிமையில் விட்டுச் சென்ற தன் மகனை எண்ணி வருந்தினார்.

★ குழந்தைக்கு நெஞ்சு சளி இருப்பதால், மருத்துவர் ஊசி போட்டு, மருந்து எழுதிக் கொடுத்தார்.

ஆறுமுகத்தின் முடிவு

★ ஆறுமுகம் மருந்து வாங்குவதற்காக மருந்துக்கடைக்குச் சென்றார்.

★ மருந்துக்கடையில் உள்ள **பாபு** ஆறுமுகத்திற்கு முன்பே பழக்கமானவர்.

★ பாபு முன்பே ஒருமுறை **ஆறுமுகத்தின் பேரனைத் தத்துக்கொடுக்கும்படி** கேட்டிருந்தார்.

★ குழந்தையைப் பிரிந்திருக்க முடியாது என்று எண்ணி, ஆறுமுகம் மறுத்துவிட்டார்.

★ **"தன் பேரனுக்குப் பெற்றோரின் அரவணைப்பு கிடைக்க வேண்டும்"** என்று கருதினார் ஆறுமுகம்.

★ எனவே, தன் பேரனைத் தத்துக் கொடுக்க முடிவெடுத்தார்.

மனிதநேயம்

★ பாபு தத்தெடுக்கப் போகும் தம்பதியினரை அழைத்துக் கொண்டு வந்தார்.

★ அவர்களின் முகத்தில் **அன்பும் பாசமும் நிறைந்திருந்தது.**

★ ஆறுமுகம் தன் பேரன் பாதுகாப்பான இடத்திற்குத்தான் செல்கிறான் என்று எண்ணி மகிழ்ந்தார்.

★ எனினும், **தன் பேரனைவிட்டுப் பிரிய இருப்பதை நினைத்து வருந்தி அழுதார்**.

★ தத்தெடுக்க வந்தவர் **ஆறுமுகத்தையும் தன்னுடன் வந்துவிடும்படி** கூறினார்.

★ ஆறுமுகம் அதைக் கேட்டு அதிர்ந்து போனார்.

★ தன்னுடைய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஒரேநாளில் தீர்வு கிடைத்துள்ளதாக எண்ணி மகிழ்ந்தார்.

★ **அவர்களுடன் செல்வதற்கு ஆறுமுகம் சம்மதித்தார்.**

முடிவுரை

★ நாட்டில், **பிள்ளைகள் இல்லாத பெற்றோர்கள், பெற்றோர்கள் இல்லாத பிள்ளைகள்** என பலரும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

★ அவர்கள் ஒருவருக்கொருவர் அரவணைப்புடன் இருந்தால், மனித நேயப் பண்பு வளரும்.

நூற்பயன் **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

உரைநடை உலகம்

தமிழ்மொழியின் நடை அழகியல்

1. தமிழ்மொழி எதனைத் திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது?

தமிழ்மொழி திட்டவட்டமாகப் புரிந்து வைத்திருப்பது

★ தொல்காப்பியம் இலக்கியத்தையும் மொழியையும் பற்றிக் கூறுகின்ற இலக்கண நூல் ஆகும்.

★ தொல்காப்பியம் மற்ற கலைகளிலிருந்து கவிதை கலையை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

★ **கவிதை கலை மற்ற கலைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது** என்பதைத் தமிழ்மொழி திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது.

2. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை யாவை?

மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை

★ உவமம் ★ உருவகம் ★ எச்சம் ★ குறிப்பு ★ உள்ளுறை ★ இறைச்சி

3. கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்றால் என்ன?

கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் - விளக்கம்

★ இலக்கியம் ஒரு மொழிசார்கலை ஆகும்.

★ **இலக்கியம் மொழியின் தனித்துவமான பண்புகளைத் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.**

★ இது இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தருகிறது.

★ **இலக்கியத்தின் சிறப்புத்தன்மை**யே **கவிதைத்தனம்** (அ) **இலக்கியத்தனம்** எனப்படுகிறது.

4. இலக்கியத்தின் பயன் யாது?

இலக்கியத்தின் பயன்

★ அறம் ★ பொருள் ★ இன்பம் (அல்லது) ★ ஓர் உயர்ந்த குறிக்கோள்

5. தொல்காப்பியம், இலக்கியத்தின் பயன் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்கிறது?

(அல்லது) கலை முழுமை என்றால் என்ன?

இலக்கியத்தின் பயன் அமைந்திருக்க வேண்டிய முறை (அ) கலை முழுமை

★ **இலக்கியத்தின் பயன் இலக்கியம் படைக்கும்போதே இணைந்து உருவாக்கப்பட வேண்டும்.**

★ இயந்திரப் போக்காக, இலக்கியத்தோடு ஒட்டாமல், தனியாக இருக்கக் கூடாது.

★ இவ்வாறு உருவாக்கப்படும் கலைதான் கலை முழுமை எனப்படுகிறது.

6. நடையியல் - விளக்குக.

நடையியல் - விளக்கம்

★ **மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும்**, அவற்றைக் **கையாளுகின்ற வகைமைகளும்** கவிதையின் உந்துசக்தி ஆகும்.

★ **மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் இலக்கியத்திற்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.**

★ **கவிதையின்** இத்தகைய **இயங்காற்றல்தான்** **'நடை'** எனப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. மொழியும் கவிதையும் எவ்வாறு தோன்றுகின்றன?

மொழி, கவிதையின் தோற்றம்

★ அனைத்துத் **தொன்மையான மொழி**களும் **சமிக்ஞை**யிலிருந்தும் (சைகை), **இசை**யிலிருந்தும் தோன்றுகின்றன.

★ மொழி சார்ந்த **கவிதை**, **இசை**யோடும் **இசைக்கருவி**யோடும் தோன்றுகின்றன.

★ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.

8. சொல்வளம் என்றால் என்ன?

சொல்வளம்

★ **ஒரு பொருள் குறித்துவரும் பல சொல்**லும் ★ **பல பொருள் குறித்துவரும் ஒரு சொல்**லும்

★ **பல துறை**களுக்கும் ★ **பல சூழல்**களுக்கும்

★ **பல புனைவு**களுக்கும் உடையதாய் வரும்.

★ **உணர்வும் தெளிவும் கொண்ட** சொற்களாக அமைவது **சொல்வளம்** எனப்படும்.

9. தொகைமொழி என்றால் என்ன?

தொகைமொழி

★ தொகைமொழி என்பது **செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு** ஆகும்.

★ தொகைமொழி **வாக்கிய அமைப்பில் ஒரு சொல்** போலவே அமையும்.

★ சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு ஆகும்.

★ (எ.கா.) **'நீர்பட்ட பசுமையான கலம்'** என்பது **'நீர்படு பசுங்கலம்'** என வரும்.

10. தமிழிலுள்ள தொகைமொழிகள் சிலவற்றைப் பட்டியலிடுக.

தமிழிலுள்ள தொகைமொழிகள்

★ வைகுறு விடியல் ★ கன்னி விடியல் ★ புல்லென் மாலை

★ நள்ளென் யாமம் ★ காமர் வனப்பு ★ மாண்கவின் காண்டகு வனப்பு

★ கவினுறு வனப்பு ★ தீநீர் ★ நெடுநீர் ★ சின்னீர்

★ பனிநீர் ★ ஒலிவெள்ளருவி ★ பறைக்குரல் ★ எழிலி

★ பொய்படுசொல் ★ நகைக்கூட்டம் ★ ஓவச் செய்தி

சிறுவினா

1. மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக மாறும் தன்மையை விளக்குக.

மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக மாறும் தன்மை

★ தொல்காப்பியம் இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூலாகும்.

★ தொல்காப்பியம் **அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துக் கொடுக்கிறது.**

★ எழுத்துகளைப் பற்றிக் கூறும்போதே, செய்யுள் இயற்றும் முறையைப் பற்றியும் கூறுகின்றது.

★ தொல்காப்பியம் எழுத்தையும் சொல்லையும்போன்று, செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகக் கருதுகிறது.

★ **கவிதைக்கலை மற்ற கலைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது** என்பதைத் தமிழ் திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ இயல்பாக மனிதன் பேசுவதன்மூலம் மொழி காலந்தோறும் வளர்ந்து வருகிறது.

★ இயல்பாக மனிதன் பேசுவதை, இலக்கியம் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்றிக் கொள்கிறது.

★ **உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி** போன்றவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்காக மாற்றுகின்றன.

★ இலக்கியம், மொழியின் தனித்துவமானப் பண்புகளைத் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.

★ மொழியின் தனித்துவமானப் பண்பு இலக்கியத்திற்குச் சிறப்புத்தன்மையைத் தருகின்றது.

★ இத்தகைய தன்மையே **கவிதைத்தனம்** (அ) **இலக்கியத்தனம்** எனப்படுகிறது.

★ இந்தக் கவிதைத்தனம் மொழிசார்ந்த பொருளை, மொழிசார்ந்த கலையாக மாற்றிவிடுகிறது.

2. கலை முழுமை என்றால் என்ன? விளக்குக.

கலை முழுமை

★ இலக்கியத்தின் பயன் குறித்துத் தமிழ் இலக்கிய மரபில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ இலக்கியத்தின் பயன் **அறம், பொருள், இன்பமா**கவோ, வேறு ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ இருக்க வேண்டும்.

★ தொல்காப்பியம், இலக்கியத்தின் பயன் கலை உருவாக்கத்தின்போதே சரியாக இணைத்திருக்க வேண்டும் என்கிறது.

★ இத்தகையதொரு முழுமைதான், **கலைமுழுமை** எனப்படுகிறது.

★ சங்க இலக்கியத்தில் அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகள் பாடற்பொருளாக அமைந்துள்ளன.

★ தொல்காப்பியம், அகன் ஐந்திணைகளோடு, **அறம், பொருள், இன்பம்** ஆகியவற்றையும் இணைத்துவிடுகின்றது.

★ நான்கு வகையான பாக்களோடு **அறவியல் கருத்து**க்களையும் இணைத்துச் சொல்லிவிடுகிறது.

சிறப்புச் செய்தி

➔ **"அந்நில மருங்கின் அறமுதலாகிய**
மும்முதற் பொருட்கும் உரிய என்ப." *(தொல். செய். 105)*

★ தமிழ் இலக்கியத்தின் பெரும் பரப்பில் இத்தகைய கலை முழுமை எவ்விடத்தும் நிறைந்துள்ளது.

3. ஒரு மொழி சொல்வளம் மிக்கதாக அமைந்திருக்க வேண்டியதற்கான காரணத்தைக் கூறுக.

ஒரு மொழி சொல்வளம் மிக்கதாக அமைந்திருக்க வேண்டியதற்கான காரணங்கள்

★ சொல்லில்தான் உணர்வும் பொருளும் கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்துக் கிடக்கின்றன.

★ சொல்வளம் என்பது செழிப்பான தளத்தில் சொல், விளைச்சல் கண்டிருப்பதைக் குறிப்பது ஆகும்.

★ ஒரு பொருள் குறித்துவரும் பல சொல்லாகவும் ★ பல பொருள் குறித்துவரும் ஒரு சொல்லாகவும்

★ பல துறைகளுக்கும் ★ பல சூழல்களுக்கும் ★ பல புனைவுகளுக்கும் உரியதாக வரும்.

தமிழ்மொழியில் சொல்வளம்

★ சங்க இலக்கியத்தில் **சொல்வளம்** மலர்ந்தும் கனிந்தும் கிடக்கிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ முல்லைக்கலியில் பல இனக் காளைகளைக் குறிக்கும் பெயர்கள் உள்ளன.

★ கி. ராஜநாராயணன் **'கிடை'** எனும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.

★ சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு தொகைநிலை ஆகும்.

★ தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு.

★ தொகைமொழி வாக்கிய அமைப்பில், ஒரு சொல் போலவே நடைபெறும்.

★ (எ.கா.) **'நீர்படு பசுங்கலம்'** பொருள் - **'நீர் படுகின்ற** (அ) **நீர்பட்ட பசுமையான கலம்'** ஆகும்.

4. தொடரியல் போக்கு குறித்து விளக்குக.

தொடரியல் போக்கு

★ சொல்லுபவருடைய மொழித்திறன், கேட்போரின் உளப்பாடாக மாற்றம் பெற வேண்டும்.

★ பரிமாறிக் கொள்ளும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் பலவாறாக இயங்குகின்றன.

★ உரைநடை, பேச்சு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு

எழுவாய் + **செயப்படுபொருள்** + **பயனிலை** என்று வருவதே மரபு ஆகும்.

★ சங்கப் பாடல்கள் பலவற்றில் இது **பிறழ்ந்து (மாற்றம் பெற்று) வருகிறது**.

★ இது கவிதை **மறுதலைத் தொடர்** எனப்படுகிறது.

எடுத்துக்காட்டு

புறநானூறு

➔ **"இடுக வொன்றோ, சுடுகவொன்றோ**

படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே" - பேரெயின் முறுவலார்

★ இப்பாடலின், முதல் **20 அடிகளில்**, தொடர்கள் வரிசையாகவும் திட்டமிட்டும் அமைந்துள்ளன.

★ இறுதி அடி மட்டும் தொடரியல் பிறழ்வோடு அமைந்துள்ளது.

★ ஒரு **18 பண்பு**களை வரிசைப்படுத்திய பிறகு, தொகுத்துச் சொல்லி, **'என்னமோ செய்'** என்று அலுத்துக் கொள்வதுபோல அமைந்துள்ளது.

★ இவ்வாறு, முத்தாய்ப்பாக முடியும் பாடலின் இறுதியில்தான் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது.

நெடுவினா

1.மொழிசார்ந்த கலையின் தோற்றம் குறித்தும் கலை முழுமை குறித்தும் விரிவாகக் கூறுக.

குறிப்புச் சட்டகம்

கற்றதன் நோக்கம்		**முன்னுரை**	**அழகியல் உருவாகுவதற்கான அடித்தளம்**	
மொழிசார்ந்த கலையின் தோற்றம்		**இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை**		
கவிதைத்தனம்	**இலக்கியத்தின் பயன்**	**கலை முழுமை**	**முடிவுரை**	**நூற்பயன்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கற்றதன் நோக்கம்

★ மொழிசார்ந்த கலையின் தோற்றம் குறித்தும் கலை முழுமை குறித்தும் அறிந்துக் கொள்வதற்காகவே!

முன்னுரை

★ தமிழ் இலக்கியங்கள் தனக்கென ஒரு தனித்தன்மையையும் பயன்பாட்டையும் கொண்டு திகழ்கின்றன.

★ அத்தகைய இலக்கியங்களின் தோற்றம் குறித்தும் கலை முழுமை குறித்தும் விரிவாகக் காண்போம்.

அழகியல் உருவாகுவதற்கான அடித்தளம்

★ தொல்காப்பியம் இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூலாகும்.

★ தொல்காப்பியம் அழகியல் உருவாகுவதற்கான அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறது.

★ எழுத்துகளைப் பற்றிக் கூறும்போதே, செய்யுள் இயற்றும் முறையைப் பற்றியும் கூறுகின்றது.

★ தொல்காப்பியம் எழுத்தையும் சொல்லையும்போன்று, செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகக் கருதுகிறது.

★ கவிதைக்கலை மற்ற கலைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதைத் தமிழ் திட்டவட்டமாகப் புரிந்து வைத்துள்ளது.

மொழிசார்ந்த கலையின் தோற்றம்

★ இயல்பாக மனிதன் பேசுவதன்மூலம் மொழி காலந்தோறும் வளர்ந்து வருகிறது.

★ இயல்பாக மனிதன் பேசுவதை, இலக்கியம் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்றிக் கொள்கிறது.

இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்காக மாற்றுபவை

★ **உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி** போன்றவை ஆகும்.

★ இவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்காக மாற்றுகின்றன.

கவிதைத்தனம்

★ இலக்கியம், மொழியின் தனித்துவமானப் பண்புகளைத் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.

★ மொழியின் தனித்துவமானப் பண்பு இலக்கியத்திற்குச் சிறப்புத்தன்மையைத் தருகின்றது.

★ இத்தகைய தன்மையே **கவிதைத்தனம்** (அ) **இலக்கியத்தனம்** எனப்படுகிறது.

★ இந்தக் கவிதைத்தனம் மொழிசார்ந்த பொருளை, மொழிசார்ந்த கலையாக மாற்றிவிடுகிறது.

இலக்கியத்தின் பயன்

★ இலக்கியத்தின் பயன் குறித்துத் தமிழ் இலக்கிய மரபில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ இலக்கியத்தின் பயன் **அறம், பொருள், இன்பமாகவோ,** வேறு ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ இருக்க வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கலை முழுமை

★ தொல்காப்பியம், இலக்கியத்தின் பயன் கலை உருவாக்கத்தின்போதே சரியாக இணைத்திருக்க வேண்டும் என்கிறது.

★ இத்தகையதொரு முழுமைதான், **கலைமுழுமை** எனப்படுகிறது.

★ சங்க இலக்கியத்தில் அகத்திணை, புறத்திணை சார்ந்த செய்திகள் பாடற்பொருளாக அமைந்துள்ளன.

★ தொல்காப்பியம், அகன் ஐந்திணைகளோடு, **அறம், பொருள், இன்பம்** ஆகியவற்றையும் இணைத்துவிடுகின்றது.

★ நான்கு வகையான பாக்களோடு **அறவியல் கருத்து**க்களையும் இணைத்துச் சொல்லிவிடுகிறது.

சிறப்புச் செய்தி

➔ **"அந்நில மருங்கின் அறமுதலாகிய**
மும்முதற் பொருட்கும் உரிய என்ப." *(தொல். செய். 105)*

★ தமிழ் இலக்கியத்தின் பெரும் பரப்பில் இத்தகைய கலை முழுமை எவ்விடத்தும் நிறைந்துள்ளது.

முடிவுரை

★ கலைமுழுமை செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் ஆகும்.

★ தமிழ்மரபு சமூக - பண்பாட்டு மரபிற்கேற்ப, கலைப்படைப்பைப் பண்பாட்டின் இலச்சினையாகச் சித்தரித்துள்ளது.

நூற்பயன்

★ மொழிசார் கலையின் தோற்றம் குறித்தும், கலைமுழுமை குறித்தும் அறிந்து கொண்டேன்.

தோஸ்த் உரை வழங்கும்
சுயசிந்தனை - உயர்சிந்தனை
வினா - விடைகளை
ஆடியோவிலும் வீடியோவிலும்
படித்து சதம் அடிப்போம் !!!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பெருமழைக்காலம்

குறுவினா

1. மழையின் தேவையையும் பருவநிலை மாற்றத்திற்கான காரணத்தையும் கூறுக.

மழையின் தேவை:-

★ **உயிரினங்கள் வாழ்வதற்கு அடிப்படையானது** மழை.

★ **உழவுக்கு இன்றியமையாதது** மழை.

பருவநிலை மாற்றத்திற்கான காரணம்:-

★ இயற்கை சமநிலையோடு இருக்க வேண்டும்.

★ **மனிதர்கள் இயற்கையின் சமநிலையைச் சீர்குலைத்துவிட்டனர்**.

★ எனவே, பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது.

2. மழைக்காலங்களில் இயல்பான வாழ்க்கை வாழ முடிகிறதா? இல்லையெனில், அதற்கான காரணம் யாது?

மழைக்காலங்களில் வாழ்க்கை:-

★ மழைக்காலங்களில் **இயல்பான வாழ்க்கை வாழ முடிவதில்லை**.

★ மிகுதியாக பெய்யும் **மழைநீர் சாலைகளில் தேங்குகிறது**.

★ ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஊருக்குள் நீர் புகுந்துவிடுகிறது.

காரணம்:-

★ **பெருநகரங்கள்** உருவாக்கப்படும்போது **சரியான திட்டமிடுதல் இல்லை**.

★ **நீர் மேலாண்மையில் கவனம் செலுத்துவதில்லை**.

★ இத்தகைய காரணங்களால் மழைக்காலங்களில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

3. தமிழ் இலக்கியங்கள் மழையைப் போற்றியுள்ளன என்பதற்கான சான்றுகளைக் கூறுக.

தமிழ் இலக்கியங்கள் மழையைப் போற்றியுள்ளன என்பதற்கான சான்றுகள்:-

★ 'மாமழை போற்றுதும்' ★ 'நீரின்றி அமையாது உலகு' ★ 'மாரியல்லது காரியமில்லை'

4. இந்தியாவில் சமீப காலங்களில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், அப்பகுதிகளைத் தாக்கிய புயல்களின் பெயர்களையும் கூறுக.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள்:-

★ தமிழ்நாடு ★ ஜம்மு காஷ்மீர் ★ உத்தரகாண்ட் ★ கேரளா ★ பீகார்

தாக்கிய புயல்கள்:-

★ நிஷா ★ தானே ★ வர்தா ★ ஒக்கி ★ கஜா

5. நம்நாட்டில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்ட இயற்கை நிகழ்வுகள் குறித்தெழுதுக.

பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்ட இயற்கை நிகழ்வுகள்:-

★ பதினைந்து ஆண்டுகளில் **ஐந்துமுறை வறட்சி** ஏற்பட்டுள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ 2005ஆம் ஆண்டு மும்பையில் **ஒரே நாளில் 994 மி.மீ மழை** பெய்தது.

★ ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பகுதி **'லே'** ஆகும்.

★ 2010ஆம் ஆண்டு **'லே' பகுதியில் 30 நிமிடங்களில் 150 முதல் 250 மி.மீ வரை மழை** பெய்துள்ளது.

6. இயற்கை சமநிலையோடு இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கூறுக.

இயற்கை சமநிலையோடு இருக்க வேண்டியதன் அவசியம்:-

★ இயற்கை சமநிலையோடு இருந்தால்தான், **பருவநிலைக்கேற்ற நிகழ்வுகள் நடக்கும்**.

★ **சமநிலையை இழக்கும்போது பருவநிலையில் மாற்றம் ஏற்படும்**.

★ **புயல்**, **பெருமழை**, **பெருவெள்ளம்**, **புவி வெப்பமயமாதல்**, **வறட்சி** போன்றவை நிகழ்கின்றன.

★ இவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இயற்கை சமநிலையோடு இருக்க வேண்டும்.

7. பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?

பசுமைக்குடில் வாயுக்கள்:-

★ கார்பன் டை ஆக்சைடு ★ மீத்தேன் ★ நைட்ரஸ் ஆக்சைடு ★ ஓசோன் ★ நீர்வாயு

8. மாற்று ஆற்றல்கள் அல்லது கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?

மாற்று ஆற்றல்கள் அல்லது கார்பன் அற்ற ஆற்றல்கள்:-

★ சூரிய ஆற்றல் ★ காற்று ஆற்றல் ★ ஹைட்ரஜன் ஆற்றல் ★ தாவர ஆற்றல்

9. பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றுவதில் முன்னணியில் உள்ள நாடுகள் யாவை?

பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றுவதில் முன்னணியில் உள்ள நாடுகள்:-

★ சீனா ★ அமெரிக்கா ★ ரஷ்யா ★ ஜப்பான் ★ இந்தியா

10. உலகிலுள்ள நீரின் அளவு குறித்தெழுதுக.

உலகிலுள்ள நீரின் அளவு:-

★ உலகம் **மூன்றில் இரண்டு பங்கு** நீரால் சூழப்பட்டுள்ளது.

★ உலகிலுள்ள மொத்த நீரில் **1 விழுக்காடு** மட்டுமே **தூய்மையான நீராகும்**.

★ எனவே, **நாற்பது விழுக்காடு மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறை**யோடு வாழ்ந்து வருகிறார்கள்.

11. ஆற்றங்கரைப்படிவு என்றால் என்ன?

ஆற்றங்கரைப்படிவு:-

★ ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிவரும்.

★ **ஆற்று வெள்ளத்தில் மண், செடி, கொடி** போன்றவை **அடித்து வரப்படும்**.

★ அடித்து வரப்பட்ட பொருள்கள் **ஆற்றின் கரையில் படிந்துவிடும்**.

★ இது **ஆற்றங்கரைப்படிவு** எனப்படும்.

12. அடுக்குப் படிவம் உருவாகும் விதத்தைக் கூறுக.

அடுக்குப் படிவம்:-

★ வெள்ளக் காலங்களில் ஆற்றின் ஓரங்களில் ஆற்றங்கரைப்படிவு ஏற்படும்.

★ **ஆற்றங்கரைப்படிவில்** தொடர்ந்து **மணலும் சேறும் படியும்**.

★ இவ்வாறு **தொடர்ந்து படிந்து** **'அடுக்குப் படிவம்'** **உருவாகும்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. வெள்ளப் பெருக்குக் காலங்களில் இழப்புகளைத் தடுப்பதற்கான வழிகள் சிலவற்றைக் கூறுக.

இழப்புகளைத் தடுப்பதற்கான சில வழிகள்:-

★ **நீர்நிலைகளை முறையாகப் பராமரிக்க வேண்டும்**.

★ வெள்ளப் பெருக்கை எதிர்கொள்ள **விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்**.

★ **மழைநீர் வடிகால்களைத் திட்டமிட்டு கட்டுதல்** வேண்டும்.

14. பேரிடர் என்றால் என்ன?

பேரிடர்:-

★ இடர் - துன்பம்

★ **மக்களுக்கு பெரிய அளவிலான துன்பத்தைத் தரக் கூடிய நிகழ்வு** பேரிடர் ஆகும்.

★ **புயல்**, **வெள்ளம்**, **நிலநடுக்கம்**, **வறட்சி**, **சுனாமி**, **நிலச்சரிவு**, **தீ விபத்து**, **சூறாவளி**, **பனிப்புயல்**, **வேதி விபத்துகள்** போன்றவைப் பேரிடர்கள் ஆகும்.

15. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் - குறிப்பு வரைக.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்:-

★ **2005ஆம் ஆண்டு டிசம்பர் 23** அன்று நடுவண் அரசால் தொடங்கப்பட்டது.

★ பேரிடர் காலங்களில் **பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயல்படுகிறது**.

★ மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் இவ்வாணையம் செயல்படுகிறது.

16. பேரிடர்களிலிருந்து தற்காத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?

பேரிடர்களிலிருந்து தற்காத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:-

★ **பேரிடர்களைத் தாங்கும் வகையில் கட்டுமானங்களை** அமைக்க வேண்டும்.

★ **நீர்வழிப் பாதைகளைத்** தொடர்ந்து **பராமரிக்க வேண்டும்**.

★ **சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச்** செயல்படுத்த வேண்டும்.

★ **சதுப்பு நிலக் காடுகளை** வளர்க்க வேண்டும்.

17. பேரிடர் காலங்களில் மேற்கொள்ளும் செயல்கள் யாவை?

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளும் செயல்கள்:-

★ பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுத்தல் ★ முகாம்கள் அமைத்தல்

★ அடிப்படை வசதிகளை உண்டாக்குதல் ★ உணவு வழங்குதல் ★ மருத்துவ உதவிச் செய்தல்

18. வங்கக்கடலிலும் அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நாடுகள் யாவை?

வங்கக்கடலிலும் அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நாடுகள்

★ இந்தியா ★ பாகிஸ்தான் ★ இலங்கை ★ வங்கதேசம்

★ மாலத்தீவு ★ மியான்மர் ★ ஓமன் ★ தாய்லாந்து

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குறிப்பிடும் மழையைக் கணிக்கும் அறிகுறிகள் யாவை?

மழையைக் கணிக்கும் அறிகுறிகள்:-

★ கார் மேகங்கள், சூரிய உதயத்திற்கு 15, 20 நிமிடங்களுக்கு முன்னதாகத் தோன்றுதல்

★ செம்மை நிற மேகங்கள் ★ திடீர்ப் புயல் ★ காற்றின் திசை ★ இடி

★ மின்னல் ★ பலமான காற்று ★ வானவில் ★ பறக்கும் பருந்து

★ முட்டைகளைச் சுமந்திருக்கும் எறும்புகள் ★ சூரியனைச் சுற்றி ஒளிவட்டம்

★ வெப்பமும் ஈரப்பதமுமான வானிலை ★ தூசுப் பனிமூட்டம்

சிறுவினா

1. இயற்கைச் சமநிலை என்றால் என்ன? (அல்லது) இயற்கைச் சமநிலைக்கு மழை இன்றியமையாதது என்பதை உணர்த்துக.

இயற்கைச் சமநிலை:-

★ மழை பெய்வதால் நீர்நிலைகள் நிரம்புகின்றன.

★ செடி, கொடிகள் நன்கு வளர்கின்றன. ★ காய்கனிகள் காய்க்கின்றன.

★ நெல், தானியங்கள் விளைகின்றன. ★ ஆடு, மாடு போன்றவை தாவர உண்ணிகள் ஆகும்.

★ தாவர உண்ணிகள் செடி, கொடிகளை உண்கின்றன.

★ விலங்குகளை உண்ணும் உயிரினங்கள் ஊன் உண்ணிகள் ஆகும்.

★ புலி, சிங்கம் போன்றவை ஊன் உண்ணிகள்.

★ புலி, சிங்கம் போன்றவை ஆடு, மாடு, மான் முதலியவற்றை உண்கின்றன.

★ தாவரங்களைச் சிறுவிலங்குகளும், சிறுவிலங்குகளைப் பெரிய விலங்குகளும் உண்கின்றன.

★ இந்த **இயற்கையின் சுழற்சியே 'இயற்கைச் சமநிலை'** ஆகும்.

மழையின் அவசியம்:-

★ இயற்கைச் சமநிலையோடு இருப்பதற்கு, தாவரங்கள் முதல் அனைத்து உயிரினங்களும் வாழ வேண்டும்.

★ அனைத்து உயிரினங்களும் வாழ்வதற்கு மழை இன்றியமையாதது.

★ எனவே, இயற்கைச் சமநிலையோடு இருப்பதற்கு மழை அவசியமாகும்.

2. பசுமைக்குடில்வாயுக்களால்ஏற்படும்பிரச்சனைகளையும்அதற்கானமாற்றுவழிகளையும்கூறுக.

பசுமைக்குடில் வாயுக்கள்:-

★ கார்பன் டை ஆக்சைடு ★ மீத்தேன் ★ நைட்ரஸ் ஆக்சைடு

★ ஓசோன் ★ நீர்வாயு

பசுமைக்குடில் வாயுக்களால் ஏற்படும் பிரச்சனைகள்:-

★ பசுமைக்குடில் வாயுக்களை அதிக அளவு பயன்படுத்துகிறோம்.

★ பசுமைக்குடில் வாயுக்களின் அளவு அதிகரித்தால் **புவி வெப்பமடையும்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ புவி வெப்பமடைவதால், **பருவநிலை மாறுதல்கள் ஏற்படும்**.

★ **புவியின் இயக்கம் குறைந்துவிடும்.**

மாற்று வழிகள்:-

★ பசுமைக்குடில் வாயுக்களைப் பயன்படுத்துவதற்கு பதிலாக, **மாற்று ஆற்றல்களைப்பயன்படுத்தலாம்**.

★ மாற்று ஆற்றல்களைப் பயன்படுத்துவதால் புவி வெப்பமடைதல் உள்ளிட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு ஏற்படும்.

மாற்று ஆற்றல்கள்:-

★ சூரிய ஆற்றல் ★ காற்று ஆற்றல் ★ ஹைட்ரஜன் ஆற்றல் ★ தாவர ஆற்றல்

★ இவை மாற்று ஆற்றல்கள் அல்லது கார்பன் அற்ற ஆற்றல்கள் எனப்படுகின்றன.

3. காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையின் தோற்றம் மற்றும் பணிகள் குறித்து நீவிர் அறிந்தவற்றைக் கூறுக.

காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையின் தோற்றம் பற்றி நான் அறிந்தவை:-

★ தொடங்கப்பட்ட ஆண்டு - **1992** ★ தொடங்கிய அமைப்பு - **ஐக்கிய நாடுகள் அவை**

★ தொடங்கப்பட்ட இடம் - **ரியோடி ஜெனிரோ** ★ தொடக்கக் கால உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை - **50**

பணி:-

★ **பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது** குறித்துத் திட்டமிடுதல்.

4. 'புவி வெப்பமயமாதல் எதிர்காலத்தைப் பாதிக்கும்' என்னும் கருத்தைச் சான்றுகளுடன் நிறுவுக.

'புவி வெப்பமயமாதல் எதிர்காலத்தைப் பாதிக்கும்' என்னும் கருத்தை நிறுவுதல்:-

★ இந்திய வானிலை ஆய்வுத்துறை, **2009ஆம் ஆண்டினை மிகவும் வெப்பமான ஆண்டாக** அறிவித்துள்ளது.

★ 2001ஆம் ஆண்டிற்குப் பிறகு **புவியின் வெப்பம் அதிகரித்துக் கொண்டே போகிறது**.

★ புவியின் வெப்பம் உயர்ந்து கொண்டே போனால், **துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் உருகிவிடும்**.

★ பனிப்பாறைகள் உருகுவதால் **கடல்நீர் மட்டம் உயரும்**.

★ கடல்நீர் மட்டம் உயருவதால் **200 கோடி மக்கள் வெள்ளத்தால் சூழப்படுவர்** என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

★ இந்த எச்சரிக்கையின்மூலம் புவி வெப்பமயமாதல் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்னும் கருத்து உறுதியாகிறது.

5. "வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்குக் காரணம் மனிதர்களே!" என்பதை நிறுவுக. (அல்லது)

நீர்நிலைகளைப் பாழாக்குவதால் ஏற்படும் விளைவுகளைக் கூறுக.

பல்வேறு வகையான நீர்நிலைகள்:-

★ நம்நாட்டில் பழங்காலத்தில் மாதம் **மும்மாரி** (மூன்று முறை மழை) பெய்தது.

★ அந்த மழைநீரைச் சேமித்து வைப்பதற்குப் போதுமான அளவு நீர்நிலைகள் இருந்தன.

★ **ஆறு, ஏரி, குளம், குட்டை, வடிகால் வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள்** போன்றவை இயற்கையாகவும் மனிதர்களாலும் உருவாக்கப்பட்டிருந்தன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மனிதர்களின் கீழ்மையான செயல்கள்:-

★ வளர்ச்சி என்ற பெயரில் **நாம் நீர்நிலைகளை அழிக்கத் தொடங்கினோம்**.

★ குடியிருப்புகள் ★ தொழிற்சாலைகள்

★ கல்வி நிறுவனங்கள் போன்றவற்றை நீர்நிலைகளில் அமைத்தோம்.

★ நெகிழி மற்றும் **கழிவுகளைக் கொட்டி நீர்நிலைகளைப் பாழாக்கினோம்**.

விளைவுகள்:-

★ **மழைநீர் செல்லும் பாதைகள் குறுகி விட்டது**.

★ வெள்ளச் சமவெளிகளில் நீர் செல்ல இயலாமல் தடை ஏற்பட்டது.

★ **மழைநீர் சேகரிக்கும் இடங்கள் வறண்டுவிட்டன**.

★ வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரும் அழிவை ஏற்படுத்துகின்றது.

★ **மழைக்காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன**.

6. ஆற்றங்கரைப்படிவின் பயன்களை விவரிக்க. (அல்லது) அடுக்குப் படிவம் என்றால் என்ன? அதன் தேவையைக் கூறுக.

ஆற்றங்கரைப்படிவு:-

★ ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிவரும்.

★ **ஆற்று வெள்ளத்தில் மண்**, **செடி**, **கொடி** போன்றவை **அடித்து வரப்படும்**.

★ அடித்து வரப்பட்ட **பொருள்கள் ஆற்றின் கரையில் படிந்துவிடும்**.

★ இது **ஆற்றங்கரைப்படிவு** எனப்படும்.

அடுக்குப் படிவம்:-

★ ஆற்றங்கரைப்படிவில் **தொடர்ந்து மணலும் சேறும் படியும்**.

★ இவ்வாறு தொடர்ந்து படிந்து **அடுக்குப் படிவம்** உருவாகும்.

அடுக்குப் படிவத்தின் பயன்கள்:-

★ **வெள்ளப் பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சும்**.

★ வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைக் குறைக்கும்.

★ **நீர் மாசடைவதைத் தடுக்கும்**. ★ **மண் அரிப்பைத் தடுக்கும்**.

★ நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிடாமல் பாதுகாக்கும்.

நெடுவினா

1. பசுமைக்குடில் வாயுக்கள் குறித்து விரிவாக எழுதுக.

கற்றதன் நோக்கம்

★ பசுமைக்குடில் வாயுக்கள் குறித்து அறிந்துக் கொள்வதற்காகவே

முன்னுரை

★ பசுமைக்குடில் வாயுக்கள் பற்றியும் அவற்றால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றியும் அதற்கான தீர்வுகள் பற்றியும் விரிவாகக் காண்போம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பசுமைக்குடில் வாயுக்கள்

★ கார்பன் டை ஆக்சைடு ★ மீத்தேன் ★ நைட்ரஸ் ஆக்சைடு

★ ஓசோன் ★ நீர்வாயு போன்றவை பசுமைக்குடில் வாயுக்கள் ஆகும்.

பசுமைக்குடில் வாயுக்களை அதிகமாக வெளியேற்றும் நாடுகள்

★ சீனா ★ அமெரிக்கா ★ ரஷ்யா ★ ஜப்பான்

★ இந்தியா போன்ற நாடுகள் பசுமைக்குடில் வாயுக்களை அதிக அளவில் வெளியேற்றுகின்றன.

பசுமைக்குடில் வாயுக்களால் ஏற்படும் பிரச்சனைகள்

★ பசுமைக்குடில் வாயுக்களை அதிக அளவு பயன்படுத்துகிறோம்.

★ பசுமைக்குடில் வாயுக்களின் அளவு அதிகரித்தால் புவி வெப்பமடையும்.

★ பருவநிலை மாறுதல்கள் ஏற்படும். ★ புவியின் இயக்கம் குறைந்துவிடும்.

புவி வெப்பமடைவதால் ஏற்படும் பாதிப்புகள்

★ புவியின் வெப்பம் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

★ துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் உருகிவிடும்.

★ பனிப்பாறைகள் உருகுவதால் கடல்நீர் மட்டம் உயரும்.

★ சுமார் 200 கோடி மக்கள் வெள்ளத்தால் சூழப்படுவர்.

மாற்று வழிகள்

★ பசுமைக்குடில் வாயுக்களுக்குப் பதிலாக, மாற்று ஆற்றல்களைப் பயன்படுத்தலாம்.

★ மாற்று ஆற்றல்களைப் பயன்படுத்துவதால் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

மாற்று ஆற்றல்கள்

★ சூரிய ஆற்றல் ★ காற்று ஆற்றல் ★ ஹைட்ரஜன் ஆற்றல்

★ தாவர ஆற்றல் இவை மாற்று ஆற்றல்கள் (அ) கார்பன் அற்ற ஆற்றல்கள் எனப்படுகின்றன.

காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவை

★ காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவை ஐக்கிய நாடுகள் அவையால் தோற்றுவிக்கப்பட்டது.

★ இதன் முதன்மையான பணி, பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்தவது குறித்து திட்டமிடுவதாகும்.

முடிவுரை

★ பசுமைக்குடில் வாயுக்கள் பூமிக்கும் இயற்கை வளங்களுக்கும் மனிதர்களுக்கும் தீமை விளைவிக்கக் கூடியவை ஆகும்.

★ அவற்றின் பயன்பாட்டைத் தவிர்த்து, மாற்று ஆற்றல்களைப் பயன்படுத்துவோம்.

நூற்பயன்

★ பசுமைக்குடில் வாயுக்களால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்தும் அவற்றைத் தீர்க்கும் வழிகள் குறித்தும் அறிந்துக் கொண்டேன்.

2. மழையின் தேவை குறித்தும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான காரணம் குறித்து விவரிக்க.

கற்றதன் நோக்கம்

★ மழையின் தேவை குறித்தும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான காரணம் குறித்து அறிந்துக்கொள்வதற்காகவே!

முன்னுரை

★ நீர் உலக உயிர்கள் அனைத்திற்குமான தேவையாகும். ★ நீரை வழங்குவது மழையே ஆகும்.

★ மழையின் தேவை குறித்தும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான காரணம் குறித்து இங்குக் காண்போம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மழையின் தேவை

★ உயிரினங்கள் வாழ்வதற்கு அடைப்படையானது மழை. ★ உழவுக்கு இன்றியமையாதது மழை.

★ இயற்கைச் சமநிலையோடு இருப்பதற்குத் தேவையானது மழை.

இயற்கைச் சமநிலையும் மழையும்

★ மழை பெய்வதால் நீர்நிலைகள் நிரம்புகின்றன. ★ **செடி, கொடிகள்** வளர்கின்றன

★ காய்கனிகள் காய்க்கின்றன. ★ நெல், தானியங்கள் விளைகின்றன.

★ தாவரங்களைச் சிறுவிலங்குகளும், சிறுவிலங்குகளைப் பெரிய விலங்குகளும் உண்கின்றன.

★ இயற்கையின் இத்தகைய சுழற்சியே **'இயற்கைச் சமநிலை'** ஆகும்.

★ இயற்கைச் சமநிலையோடு இருப்பதற்கு, தாவரங்கள் முதல் அனைத்து உயிர்களும் வாழ வேண்டும்.

★ அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு மழை இன்றியமையாதது.

★ எனவே, இயற்கைச் சமநிலையோடு இருப்பதற்கு மழை அவசியமாகும்.

பல்வேறு வகையான நீர்நிலைகள்

★ நம்நாட்டில் பழங்காலத்தில் மாதம் மும்மாரி (மூன்று முறை மழை) பெய்தது.

★ மழைநீரைச் சேமிப்பதற்குப் போதுமான அளவு நீர்நிலைகள் இருந்தன.

★ **ஆறு, ஏரி, குளம், குட்டை, வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள்** போன்றவை நீரைச் சேமித்து வைக்கப் பயன்பட்டன.

நீர்நிலைகளின் அழிவு

★ வளர்ச்சி என்ற பெயரில் நீர்நிலைகளை அழிக்கத் தொடங்கினோம்.

★ **குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்களை** நீர்நிலைகளில் அமைத்தோம்.

★ நெகிழியையும் கழிவுகளையும் கொட்டி நீர்நிலைகளைப் பாழாக்கினோம்.

வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான காரணம்

★ நீர்நிலைகளை அழித்ததன் விளைவாக மழைநீர் செல்லும் பாதை குறுகிவிட்டது.

★ வெள்ளச் சமவெளிகளில் நீர் செல்ல இயலாமல் தடை ஏற்பட்டது.

★ **மழைநீர் சேகரிக்கும் இடங்கள் வறண்டுவிட்டன.**

★ மழைக்காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

தீர்வுகள்

★ நீர்வழிப் பாதைகளைப் பராமரிக்க வேண்டும். ★ நீர்நிலைகள் ஆக்கிரமிப்பதைத் தடுக்க வேண்டும்.

★ சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

★ சதுப்பு நிலக் காடுகளை வளர்க்க வேண்டும். ★ **நெகிழிப் பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும்**.

முடிவுரை

★ **"மாமழை போற்றுதும்"** என்றும், **"நீரின்றி அமையாது உலகு"** என்றும் மழையைப் போற்றி வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள்.

★ அவர்கள் வழியில் நாமும் மழையைப் போற்றி, வாழ்வில் வளங்களைப் பெறுவோம்.

நூற்பயன்

★ மழையின் தேவை குறித்தும் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்தும் அதற்கான தீர்வுகளையும் அறிந்து கொண்டேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தமிழர் குடும்ப முறை

குறுவினா

1. குடும்பம் என்ற அமைப்பின் தோற்றம் பற்றி குறிப்பு வரைக.

குடும்பம்:-

★ மனிதன் தொடக்கத்தில் காடுகளிலும் மலைகளிலும் தனித்தனியாக வாழ்ந்து வந்தான்.

★ பின்னர், **காட்டு விலங்கு போன்றவற்றிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக கூட்டம் கூட்டமாக வாழத் தொடங்கினான்**.

★ மனித இனம் தோன்றி பல ஆண்டுகள் கடந்த பின்பே குடும்பம் என்ற அமைப்பு ஏற்பட்டது.

★ **குடும்பம் என்ற அமைப்பின் மூலமே உலகச்சமூகம் இயங்குகின்றது**.

2. சங்க காலத்தில் குடும்பங்களின் நிலை குறித்து அறிய உதவும் சான்றுகள் யாவை?

சங்க காலத்தில் குடும்பங்களின் நிலை குறித்து அறிய உதவும் சான்றுகள்:-

★ சங்க காலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கி இருந்தது.

★ சங்க கால குடும்ப அமைப்பைப் பற்றி அறிய **இலக்கியங்கள் உதவுகின்றன**.

3. மனிதச் சமூகத்தில் குடும்பத்தின் தேவையைக் கூறுக.

மனிதச் சமூகத்தில் குடும்பத்தின் தேவை:-

★ மனிதச் சமூகம் **குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே கட்டமைக்கப்படுகிறது**.

★ குடும்பம், குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என மனிதச் சமூகம் விரிவடைகிறது.

★ மனிதச் **சமூகத்தின் அடிப்படை அலகாக** விளங்குவது **குடும்பமே** ஆகும்.

4. குடும்பத்திற்கும் திருமணத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

குடும்பத்திற்கும் திருமணத்திற்கும் உள்ள தொடர்பு:-

★ **குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படையாகத் திகழ்வது திருமணம்**.

★ குடும்பம், திருமணம் இரண்டும் **ஒன்றையொன்று சார்ந்து செயல்படுகின்றன**.

★ குடும்பமும் திருமணமும் **நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதாகும்**.

5. திருமணம்,குடும்பம்ஆகியசொற்கள்இலக்கியங்களில்பயன்படுத்தப்பட்டுள்ளஇடத்தைக்கூறுக.

இலக்கியங்களில் திருமணம், குடும்பம்:-

★ திருமணம், குடும்பம் ஆகிய சொற்கள் **தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் இடம்பெறவில்லை**.

★ குடும்பம் என்னும் சொல் **1029 ஆவது திருக்குறளில்** முதன்முதலில் இடம் பெற்றுள்ளது.

6. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள சொற்களில் குடும்பம் என்னும் சொல்லோடு தொடர்புடைய சொற்கள் யாவை?

குடும்பம் என்னும் சொல்லோடு தொடர்புடைய சொற்கள்:-

★ குடம்பை ★ குடும்பு ★ கடும்பு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. குடும்பு, குடும்பம் ஆகிய சொற்களுக்கிடையில் உள்ள தொடர்பு யாது?

குடும்பு, குடும்பம் ஆகிய சொற்களுக்கிடையில் உள்ள தொடர்பு:-

★ **'குடும்பு'** என்னும் சொல்லுக்கு **'கூடி வாழுதல்'** என்று பொருள்.

★ **'குடும்பு'** என்னும் சொல் **'அம்'** விகுதி பெற்று **'குடும்பம்'** என்றானது.

8. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வாழிடங்கள் யாவை?

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வாழிடங்கள்:-

★ இல் ★ மனை

9. சங்க இலக்கியத்தில் வாழிடத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்களைத் தொகுத்தெழுதுக.

சங்க இலக்கியத்தில் வாழிடத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்:-

★ இல் ★ மனை ★ குரம்பை ★ புலப்பில் ★ முன்றில்

★ குடில் ★ கூரை ★ வரைப்பு ★ முற்றம் ★ நகர் ★ மாடம்

10. மணந்தகம் குறிப்பு வரைக.

மணந்தகம்:-

★ குடும்பம் வாழ்க்கைச்சுழற்சியில் பல நிலைகளில் மாற்றம் பெறுகிறது.

★ திருமணமான பிறகு, **கணவனும் மனைவியும் இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே மணந்தகம்** ஆகும்.

★ இது **தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்கநிலை** ஆகும்.

★ மணந்தகம் எனும் குடும்ப அமைப்பு முதன்மை பெற்றிருந்ததைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது.

11. தாய்வழிக் குடும்பத்தில் பெண்கள் பெற்றிருந்த சிறப்பினைக் கூறுக.

தாய்வழிக் குடும்பத்தில் பெண்கள் பெற்றிருந்த சிறப்புகள்:-

★ தாய்வழிக் குடும்பத்தில் **பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக** இருந்தனர்.

★ **குடும்பத்தை வழிநடத்தும் பொறுப்பு** பெண்களிடமே இருந்தது.

★ ஒரு குடும்பத்தில் **பெண்குழந்தை பிறப்பதை அனைவரும் விரும்பினர்**.

★ சொத்துகளும் செல்வங்களும் பெண்களுக்கே சென்று சேர்ந்தன.

12. தந்தைவழிக் குடும்ப முறையின் தோற்றம் குறித்து எழுதுக.

தந்தைவழிக் குடும்ப முறையின் தோற்றம்:-

★ மனித இனம் தோன்றியபோது தாய்வழிக் குடும்ப முறையே நிலவியது.

★ சங்க காலம்வரை தமிழர்களிடையே தாய்வழிக் குடும்ப முறையே நிலவியது.

★ **சங்க காலத்தின் இறுதியில் தந்தைவழிக் குடும்ப முறை தோன்றியது**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ **தந்தைவழிக் குடும்ப முறையில் பெண் திருமணத்திற்குப் பிறகு தன் கணவனுடன் தந்தையகத்தில்** (கணவனின் இல்லத்தில்) **வாழ வேண்டும்**.

13. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்னும் அடிகள் உணர்த்தும் செய்தியைக் கூறுக.

"மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே":-

★ தந்தைவழிக் குடும்பத்தில் திருமணத்திற்குப் பிறகு பெண் தன் கணவன் வீட்டில் வாழ்ந்து வந்தாள்.

★ **தந்தைவழிக் குடும்பத்தில் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்தாள்.**

★ இச்செய்தி "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்னும் அடிகள் உணர்த்துகின்றன.

14. தனிக்குடும்பம் குறிப்பு வரைக.

தனிக்குடும்பம்:-

★ **சமூக வளர்ச்சியில் இறுதியாக ஏற்பட்ட நிலை தனிக்குடும்பம்** ஆகும்.

★ **தனிக்குடும்பத்தில் தாய்**, **தந்தை**, **குழந்தை** ஆகிய **மூவர் மட்டுமே** இருந்தனர்.

★ இன்றைய நெருக்கடியான காலக்கட்டத்தில் தனிக்குடும்ப முறையே காணப்படுகின்றது.

15. ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் காட்டும் குடும்ப முறையைக் கூறுக.

புறநானூறு காட்டும் குடும்ப முறை:-

★ சங்க காலத்தில் சில இடங்களில் **தனிக்குடும்ப அமைப்பு விரிவுபெற்றது**.

★ கணவன் மனைவியுடன் **பெற்றோரும் உடன் வாழ்ந்தனர்.**

★ இந்த குடும்ப முறை 'விரிந்த குடும்ப முறை' எனப்படுகிறது.

★ **விரிந்த குடும்ப முறை** குறித்து **ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல்** விளக்குகின்றது.

16. சங்க கால குடும்ப முறையில் செவிலித்தாய் பெற்றிருந்த சிறப்பினைக் கூறுக.

செவிலித்தாய் பெற்றிருந்த சிறப்பு:-

★ சங்க கால குடும்ப அமைப்பில் **செவிலித்தாயும் அவள் மகளும் முதன்மைப் பங்கு** பெற்றிருந்தனர்.

★ செவிலித்தாய் என்பவள் **தலைவியின்** (பெண்ணின்) **வளர்ப்புத் தாய்** ஆவாள்.

★ செவிலித்தாய் **சமூகத் தாயாக** விளங்கினாள்.

★ **தலைவியின் ஒவ்வொரு செயலுக்கும் செவிலித்தாயே பொறுப்பானாள்**.

17. இல்வாழ்வின் பயன் யாது?

இல்வாழ்வின் பயன்:-

★ பெருமைகள் நிறைந்த **மக்களுடன் நிறைந்து** ★ அறத்தினை விரும்பிய **சுற்றத்தோடு சேர்ந்து**

★ **மனையறம் காத்தலே** இல்வாழ்வின் பயனாகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

1. சங்க இலக்கியத்தில் 'மனை' என்னும் சொல் பல்வேறு வடிவத்தில் பயன்படுத்தப்பட்டது என்பதை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

சங்க இலக்கியத்தில் 'மனை' என்னும் சொல்:-

★ சங்க இலக்கியத்தில் **வாழிடத்தைக் குறிப்பதில் முதன்மைச் சொல்**லாக விளங்குவது மனை ஆகும்.

★ மருதத்திணைப் பாடல் ஒன்றில், 'தம்மனை', 'நும்மனை' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

★ **தம்மனை** - **பெண்ணின்** (மனைவி) இல்லம் ★ **நும்மனை** - **ஆணின்** (கணவன்) இல்லம்

★ புறநானூற்றுப் பாடலில் **தற்காலிகமாகத் தங்குமிடம்** **'புக்கில்'** என வழங்கப்படுகிறது.

★ திருமணத்திற்குப்பிறகு **கணவனும் மனைவியும் தனியாக வாழுமிடம்** **'தன்மனை'**

★ மனைவியைக் குறிக்கும் வகையில் 'மனையோள்' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மனை என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ள விதம்:-

★ நம்மனை ★ தம்மனை ★ எம்மனை ★ இம்மனை ★ உம்மனை ★ நின்மனை

★ நுந்தைமனை ★ நன்மனை ★ வறுமனை ★ வளமனை ★ கடிமனை

★ தாய்மனை என பல்வேறு வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையே நிலவியது என்பதை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

தாய்வழிக் குடும்பம்:-

★ **சங்க காலத்தில்** ஒரு குடும்பத்திற்குத் **தாயே தலைமை** ஏற்றிருந்தாள்.

★ **குலத்தொடர்ச்சி தாய்வழி**யாகவே அமைந்தது.

★ பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் **சேரநாட்டு மருமக்கள் தாய முறை** இதற்குச் சான்றாகும்.

இலக்கியச் சான்றுகள்:-

★ சங்க காலத்தில் தாய்வழிச் சமூகமுறை நிலவியதற்கு இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன.

★ **'சிறுவர்தாயே பேரிற் பெண்டே'** *(புறநானூறு, 270)*

★ **'செம்முது பெண்டின் காலஞ்சிறா அன்'** *(புறநானூறு, 276)*

★ **'வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்'** *(புறநானூறு, 277)*

★ **'முளரிமருங்கின் முதியோள் சிறுவன்'** *(புறநானூறு, 278)*

★ **'என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்'** *(கலி. பாலை. 8)*

★ இது போன்ற தொடர்களில் 'இவளது மகன்' என்று கூறப்பட்டுள்ளது.

★ இவை சங்ககாலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

குறுவினா

1. குருகுலம் என்றால் என்ன?

குருகுலம்:-

★ பழங்காலத்தில் **மாணவர்கள் ஆசிரியரின் வீடுகளிலேயே கல்வி கற்றனர்**.

★ இக்கல்விமுறை **குருகுலக் கல்விமுறை** எனப்படுகிறது.

★ **கணக்காயர்** என்பது **ஆசிரியரைக்** குறிக்கும் சொல்லாகும்.

2. மன்றம் என்பது யாது?

மன்றம்:-

★ ஊரில் ஒரு பெரிய மரத்தின் அடியில் மேடை அமைக்கப்பட்டிருக்கும்.

★ **மரத்தடியில் உள்ள மேடை**யே மன்றம் ஆகும்.

3. பள்ளிகள் - குறிப்பு வரைக.

பள்ளிகள்:-

★ **சமண மடங்களில் மாணவர்கள் கல்வி கற்றனர்.**

★ **சமண**(ஜைன) **மடங்கள்** '**பள்ளி**' என்னும் சொல்லால் குறிப்பிடப்பட்டன.

★ பின்னர், **கல்வி கற்கும் இடங்கள் அனைத்தும் பள்ளி** என்னும் சொல்லால் வழங்கப்பட்டது.

4. கல்வித்தொடக்கம் (வித்யாரம்பம்) குறித்தெழுதுக.

கல்வித்தொடக்கம்:-

★ பிள்ளைகள் **ஐந்து வயதில் கல்வி கற்க தொடங்கினர்.**

★ பெற்றோர்கள் **பிள்ளைகளை ஆசிரியரிடம் அடைக்கலமாகக் கொடுத்தனர்.**

★ பிள்ளைகளைப் **பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது**.

★ ஏட்டில் மஞ்சள் பூசி பிள்ளையைப் படிக்கச் சொல்வார்கள்.

5. முறை வைப்பது என்றால் என்ன?

முறை வைப்பது:-

★ ஆசிரியர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுப்பார்.

★ மாணவர்கள் ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததைப் பின்பற்றிச் சொல்வார்கள்.

★ இவ்வாறு,**ஆசிரியர்சொல்வதைமாணவர்கள்திருப்பிச்சொல்வது** '**முறைவைப்பது**' எனப்படுகிறது.

6. மையாடல் விழா என்றால் என்ன?

மையாடல் விழா:-

★ பிள்ளைகள் முதன்முதலில் கற்கத் தொடங்கும்போது சுவடிகளில் மை தடவுவார்கள்.

★ **மை தடவி சுவடிகளை வாசிக்கத் தொடங்குவது** '**மையாடல் விழா**' எனப்படும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. மையாடலில் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாவை?

மையாடலில் பயன்படுத்தப்படும் பொருள்கள்:-

★ வசம்பு ★ மஞ்சள் ★ தர்ப்பைக்கரி

★ மணத்தக்காளி இலைச்சாறு (அ) ஊமத்தை இலைச்சாறு ★ மாவிலைக்கரி

8. சுவடிகளில் மை தடவுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

சுவடிகளில் மை தடவுவதால் ஏற்படும் நன்மைகள்:-

★ சுவடிகளிலுள்ள **எழுத்துகள் தெளிவாகத் தெரியும்**.

★ படிப்பவர்களின் **கண்ணுக்குக் குளிர்ச்சி**யைத் தரும்.

9. இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மையாடல் குறித்த அடிகளை எழுதுக.

இலக்கியங்களில் மையாடல்:-

★ 'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' - சிந்தாமணி

★ 'மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்' - தமிழ்விடு தூது

10. மாணவர்கள் எழுதப் பழகும் முறை குறித்து விளக்குக.

மாணவர்கள் எழுதப் பழகும் முறை:-

★ **மாணவர்கள் முதலில் மணலில் எழுதி**ப் பழகுவார்கள்.

★ மணலில் எழுதுவதால், எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும்.

★ **ஆசிரியர் முதலில் தரையில் எழுதுவார்**.

★ **ஆசிரியர் எழுதியதன்மீது மாணவர்கள் எழுதப் பழகுவார்கள்.**

11. பழங்காலத்தில் இருந்த கையெழுத்து முறை குறித்தெழுதுக.

பழங்காலத்தில் இருந்த கையெழுத்து முறை:-

★ எழுத்துகள் ஒன்றோடொன்று ஒட்டாமல் ★ வரிகள் கோணாமல் எழுதினார்கள்.

★ பழைய ஏட்டுச்சுவடிகளைப் பார்த்தால் இது விளங்கும்.

12. வரியெழுத்தின் உறுப்புகள் யாவை?

வரியெழுத்தின் உறுப்புகள்:-

★ புள்ளி (்) ★ கால் (ா) ★ கொம்பு (ெ) ★ விலங்கு (ி)

13. எழுத்தின் வடிவங்கள் மாறாமல் இருந்ததற்கான காரணங்கள் யாவை?

எழுத்தின் வடிவங்கள் மாறாமல் இருந்ததற்கான காரணங்கள்:-

★ தமிழ் எழுத்துகளின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்துவருகின்றன.

★ **பெரியோர்கள் காலங்காலமாக எழுதிவந்துள்ளனர்**.

★ எனவே, பல நூறு ஆண்டுகள் ஆனாலும் எழுத்தின் வடிவங்கள் மாறாமல் இருந்துள்ளன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. அக்காலத்தில் தமிழில் பாடமாக இருந்த நூல்கள் யாவை?

தமிழில் பாடமாக இருந்த நூல்கள்:-

★ நிகண்டு ★ நன்னூல் ★ காரிகை

★ தண்டியலங்காரம் ★ நீதி நூல்கள்

15. கணிதத்தில் பயன்படுத்தப்பட்ட வாய்பாடுகள் யாவை?

கணிதத்தில் பயன்படுத்தப்பட்ட வாய்பாடுகள்:-

★ கீழ்வாயிலக்கம் ★ மேல்வாயிலக்கம் ★ குழிமாற்று

16. மாணவர்கள் செய்யுளை நினைவில் வைத்துக் கொள்வதற்கு உதவிய முறைகள் யாவை?

மாணவர்கள் செய்யுளை நினைவில் வைத்துக் கொள்ள உதவிய முறைகள்:-

★ அகராதி வரிசை முறை ★ அந்தாதி முறை ★ எதுகை மோனை முறை

17. மாணவர்களின் கல்வி எந்த நிலையிலும் தடைபடாமல் இருந்ததற்கான காரணங்களாக நீவிர் கருதுவனவற்றை எழுதுக.

மாணவர்களின் கல்வி தடைபடாமல் இருந்ததற்கான காரணங்கள்:-

★ மாணவர்கள் **தமக்குத் தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்தார்கள்.**

★ பலர் **ஒன்றாகக் கூடிக் கேள்விகள் கேட்டும் பதில் கூறியும் வந்தனர்**.

★ எனவே, அவர்களின் கல்வி எந்த நிலையிலும் தடைபடாமல் இருந்தது.

18. எழுத்தாணியின் வகைகளுள் சிலவற்றைக் கூறுக.

எழுத்தாணியின் வகைகள்:-

★ மடக்கெழுத்தாணி ★ வாரெழுத்தாணி ★ குண்டெழுத்தாணி

19. சட்டம், தூக்கு - குறிப்பு வரைக.

சட்டம்:-

★ மாணாக்கர்கள் ஓலைகளில் நன்கு எழுதுவதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ **ஆசிரியர் தனித்தனியே ஓலைகளின்மீது எழுதுவார்**.

★ **மாணவர்கள் ஆசிரியர் எழுதியதன்மீதே எழுத வேண்டும்**.

★ இதற்குச் **'சட்டம்'** என்று பெயர்.

தூக்கு:-

★ சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் பயன்படும் கருவி **தூக்கு** ஆகும்.

20.பண்டைக்காலபள்ளிக்கூடங்களில்ஆசிரியர்-மாணவர்களுக்குஇடையிலானஉறவுகுறித்தெழுதுக.

ஆசிரியர் - மாணவர்களுக்கு இடையிலான உறவு

★ **ஆசிரியர்** மாணவர்களை **அன்பினால் வழிப்படுத்தினார்**.

★ **மாணவர்கள் ஆசிரியர்களிடம் மரியாதையுடன் நடந்துக்** கொண்டனர்.

★ மாணவர்கள் தவறு செய்தாலும், அவர்களுக்குக் **கொடிய தண்டனைகள் வழங்கப்படவில்லை.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

21. மாணவர்களின் ஞாபக சக்தியை மேம்படுவதற்குச் செய்த செயலைக் கூறுக.

மாணவர்களின் ஞாபக சக்தியை மேம்படுத்த செய்த செயல்

★ ஒவ்வொரு நாளும் **மாணவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது ஒரு பெயர் சொல்லப்படும்.**

★ **பூ, விலங்கு, பறவை, ஊர்** ஆகியவற்றின் பெயர்களில் ஏதேனும் ஒரு பெயரை ஆசிரியர் சொல்லி அனுப்புவார்.

★ அந்தப் **பெயரை மாணவர்கள் மறக்காமல் மறுநாள் வந்து சொல்ல வேண்டும்**.

★ இவ்வாறு செய்வதால் மாணவர்களின் **ஞாபக சக்தி மேன்மை அடையும்**.

22.'வேத்தான்' - பொருள் கூறி, விளக்குக.

வேத்தான் - பொருள்

★ **'மற்றவர்களைவிட வேறான தனிப்பெருமை உடையவன்'** என்று பொருள்.

விளக்கம்

★ பண்டைக்காலத்தில், மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு ஐந்து மணிக்கே வந்துவிடுவார்கள்.

★ பிள்ளைகளைப் பெற்றோர்களே அழைத்து வருவார்கள்.

★ அவ்வாறு வரும் **மாணவர்களில் முதலில் வருபவனை வேத்தான்** என்பார்கள்.

சிறுவினா

1. சுவடிகள் குறித்து விளக்குக.

சுவடிகள்:-

★ மாணவர்கள் **எழுதிய ஏடுகளை ஒன்றிணைத்து வைப்பது சுவடி**யாகும்.

★ மாணவர்கள் **பனையேடு**, **சீதாள பத்திரம்** முதலியவற்றில் எழுதுவார்கள்.

★ தாங்கள் எழுதிய **ஓலைகளைச் சமமாக வெட்டி துளையிட்டுக் கயிறு கோர்ப்பார்கள்**.

★ ஒரு துளையிடுவதும் இரு துளையிடுவதும் உண்டு.

★ சுவடியின் மேலே பனைமட்டை, மரம், செப்புத் தகடு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றால் சட்டம் அமைப்பார்கள்.

★ **சட்டங்களின்மேல் ஓவியங்கள் வரைவார்கள்**.

★ இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள்.

2. பண்டைக்கால கல்வி முறையில் வாதம்புரிதல் இன்றியமையாத ஒரு கூறாக இருந்ததை நும் பாடப்பகுதிக் கொண்டு விளக்குக.

வாதம் புரிதல்

★ பள்ளிக்கூடங்களில் **வாதம் புரிதல் கல்வியின் ஒரு பகுதி**யாக இருந்தது.

★ மிகச் சிறந்த **நூற்பயிற்சியுடையவர்கள் அரசவையில் வாதம் புரிவர்.**

★ **வாதம் புரிந்தவர்கள் வென்று தம் கல்வித் திறமையை நிலைநாட்டுவர்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ வாதம் புரிந்து வெற்றிப் பெற்றவர்களைப் பற்றி **மதுரைக்காஞ்சி** குறிப்பிடுகின்றது.

★ வாதம் புரியும் பழக்கம் பள்ளிக்கூடங்களிலிருந்தே வளர்ச்சியுற்று வந்தது.

★ கல்வியில் வினா எழுப்புவதும் விடை கூறுவதும் ஒருபகுதி என்பதை **நன்னூல்** விளக்குகின்றது.

சிறப்புச் செய்தி

நன்னூல்

➔ **"வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை**
கடனாக் கொளினே மடநனி இகக்கும்" - நன்னூல்

3. "என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு" விளக்குக

சாந்துணையும் கற்றல்

★ மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் பல நூல்களையும் பயின்றனர்.

★ அவர்கள் பள்ளியில் பயின்றதோடு மட்டும் நின்றுவிடவில்லை.

★ தம் வாழ்நாள் முழுவதும் பல்வேறு நூல்களைப் பயின்றனர்.

★ பள்ளிக்கல்வி முடிந்த பிறகும், பல்வேறு இடங்களுக்குச் சென்று பல கலைகளைப் பயின்றனர்.

★ இதனை வள்ளுவர் 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு' என்கிறார்.

★ ஒருவன் இறக்கும்வரை படிக்கவேண்டும் என்கிறார், வள்ளுவர்.

4. உ.வே.சா - குறிப்பு வரைக.

உ.வே.சா குறிப்பு

★ உ.வே.சா. **தமிழ்த்தாத்தா** என்று அழைக்கப்படுகிறார்

★ உ.வே.சா, ஓலைச்சுவடியில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பித்தவர்.

பெற்ற பட்டங்கள்

★ மகாமகோபாத்தியாய ★ திராவிட வித்தியா பூஷணம் ★ தாக்ஷிணாத்திய கலாநிதி

பணியாற்றிய கல்லூரிகள்

★ கும்பகோணம் அரசு கலைக்கல்லூரி ★ சென்னை மாநிலக் கல்லூரி

சிறப்புகள்

★ சென்னைப் பல்கலைக்கழகத்தில் **டாக்டர் பட்டம்** பெற்றவர்.

★ சென்னை **மாநிலக் கல்லூரியில் உருவச் சிலை** நிறுவப்பட்டுள்ளது.

★ **திருவான்மியூரில் உ.வே.சா நூலகம்** அமைக்கப்பட்டுள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மதராசப்பட்டினம்

குறுவினா

1. இருவகை நகரங்கள் யாவை?

இருவகை நகரங்கள்:-

★ ஆற்றங்கரை நகரம் ★ கடற்கரை நகரம்

2. நகரத்தின் சிறப்பினைக் கூறுக.

நகரத்தின் சிறப்பு:-

★ சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது. ★ கடந்தகால வரலாற்றுக்கும்

★ நிகழ்கால வாழ்விற்கும் ★ எதிர்கால வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன.

3. கிழக்கிந்திய நிறுவனம் வருவதற்கு முன்பே சிறப்புற்றிருந்த பகுதிகள் யாவை?

கிழக்கிந்திய நிறுவனம் வருவதற்கு முன்பே சிறப்புற்றிருந்த பகுதிகள்:-

★ சேத்துப்பட்டு (சேற்றுப்பட்டு) ★ நுங்கம்பாக்கம் ★ வியாசர்பாடி

★ மாதவரம் ★ கோயம்பேடு ★ தாம்பரம்

4. சென்னையில் உள்ள ஆறுகள் யாவை?

பகுதி	ஆறு
வடசென்னை	கொற்றலையாறு
மத்திய சென்னை	கூவம்
தென்சென்னை	அடையாறு, பாலாறு

5. சென்னையிலுள்ள பெரிய கால்வாய்கள் ஏதேனும் நான்கனைக் கூறுக.

பெரிய கால்வாய்கள்:-

★ பக்கிங்காம் கால்வாய் ★ காட்டன் கால்வாய் ★ விருகம்பாக்கம் கால்வாய் ★ ஓட்டேரி நல்லா

6. வெள்ளையர் நகரம் - குறிப்பு வரைக.

வெள்ளையர் நகரம்:-

★ **செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி** **'வெள்ளையர் நகரம்'** என்று அழைக்கப்பட்டது.

7. கருப்பர் நகரம் - குறிப்பு வரைக.

கருப்பர் நகரம்:-

★ வெள்ளையர்களின் தேவைகளை நிறைவேற்றும் **பணியாளர்கள், வணிகர்கள்** ஆகியோர் **இருந்த பகுதி** **'கருப்பர் நகரம்'** என்று அழைக்கப்பட்டது.

8. வண்ணாரப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை போன்ற புதிய பகுதிகள் தோன்றியதற்கான காரணம் என்ன?

வண்ணாரப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை தோன்றியதற்கான காரணம்:-

★ கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் **துணி வணிகத்திலேயே** ஈடுபட்டது.

★ எனவே, இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னைக்கு வந்தனர்.

★ அவர்களால் **வண்ணாரப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை** போன்ற புதிய பகுதிகள் தோன்றின.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை எவை?

சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை

★ சென்னை நகரின் ஒவ்வொரு பகுதிக்கும் வரலாறு உண்டு.

★ சென்னையின் பண்பாட்டு அடையாளங்களை எண்ணிக்கையில் அடக்குவது கடினம்.

★ இந்திய சாரசனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் சென்னையில் உள்ளன.

★ அக்கட்டடங்கள் சென்னையின் பழமையைப் பறைசாற்றுகின்றன.

10. சென்னையில் உள்ள அருங்காட்சியகங்களைப் பற்றிக் கூறுக.

சென்னையில் உள்ள அருங்காட்சியகங்கள்

★ தென்னிந்திய வரலாற்றை அறிந்துகொள்வதற்கும்,

★ தென்னிந்தியர்களின் பண்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும் அருங்காட்சியகங்கள் உதவுகின்றன.

★ சென்னையில் இரண்டு அருங்காட்சியகங்கள் உள்ளன. அவை

1. எழும்பூர் அருங்காட்சியகம் **2. கோட்டை அருங்காட்சியகம்**

★ அருங்காட்சியகங்கள் சென்னையின் அடையாளத்தைப் பாதுகாக்கின்றன.

11. இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை குறித்தெழுதுக.

இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை

★ இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை, மூன்று வகையான கட்டடக்கலைகளைக் கலந்து உருவாக்கப்பட்டது.

அவை:- ★ **முகலாயக் கட்டடக்கலை**

★ **பிரித்தானியக் கட்டடக்கலை** ★ **இந்தியப் பாரம்பரிய பாணி**

12. இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்ட கட்டங்கள் யாவை?

இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்ட கட்டங்கள்

★ **இந்தோ சாரசனிக் கட்டடக்கலை** முறையில் கட்டப்பட்ட முதல் கட்டடம் 1768இல் கட்டப்பட்ட **சேப்பாக்கம் அரண்மனை** ஆகும்.

★ மத்தியத் தொடர்வண்டி நிலையம் ★ தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம்

★ எழும்பூர் தொடர்வண்டி நிலையம் ★ பொது அஞ்சல் அலுவலகம்

★ உயர்நீதிமன்றம் ★ சென்னைப் பல்கலைக்கழகம்

★ ரிப்பன் கட்டடம் ★ விக்டோரியா அரங்கு

13. சென்னையிலுள்ள முக்கியமான நூலகங்கள் யாவை?

சென்னையிலுள்ள முக்கியமான நூலகங்கள்

★ **சென்னை இலக்கியச் சங்கம்** ★ **கன்னிமாரா** நூலகம்

★ **கீழ்த்திசைச் சுவடிகள்** நூலகம் ★ **அண்ணா நூற்றாண்டு** நூலகம்

14. சென்னையிலுள்ள தமிழாய்வு நூலகங்கள் யாவை?

சென்னையிலுள்ள தமிழாய்வு நூலகங்கள்

★ உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம் ★ ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

★ மறைமலையடிகள் நூலகம் ★ செம்மொழித் தமிழாய்வு நூலகம் ★ உ.வே.சா. நூலகம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

1. சென்னையின் தொன்மை குறித்து விவரிக்க.

வரலாற்றுக்கு முந்தைய சென்னை:-

★ சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்துள்ளான்.

★ **குடியம், அத்திரம்பாக்கம்** போன்ற பகுதிகளில் அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ அகழாய்வின்படி **மனித நாகரிகத்தின் பழமை ஒரு லட்சம் ஆண்டு**களாகும்.

★ **கொற்றலையாற்றுப் படுகை** மனித நாகரிகத்தின் மிக பழமையான களங்களில் ஒன்றாகும்.

★ **பல்லாவரம், கூடுவாஞ்சேரி, புழல்** போன்ற பகுதிகளில் பல தொல்பழங்கால பொருட்கள் கிடைத்துள்ளன.

பழமையான கோவில்கள்:-

★ சென்னையில் பழமையான கோவில்கள் பல உள்ளன. அவை:-

★ திருவொற்றியூர் ★ திருவான்மியூர் ★ மயிலாப்பூர் ★ திருமுல்லைவாயில்

★ பல்லாவரத்தில் **முதலாம்மகேந்திரவர்மன்** காலத்தில் அமைக்கப்பட்ட **குடைவரைகோயில்கள்** உள்ளன.

★ திருவல்லிக்கேணியில் **நந்திவர்மன் கல்வெட்டுக்** கிடைத்துள்ளது.

2. சென்னையிலுள்ள நீர்நிலைகளையும் வடிகால்களையும் பற்றி விளக்குக.

சென்னையிலுள்ள ஆறுகள்:-

★ வடசென்னை - கொற்றலையாறு ★ மத்திய சென்னை - கூவம்

★ தென்சென்னை - அடையாறு, பாலாறு

வடிகால்கள்:-

★ சென்னையில் நான்கு ஆறுகள் இருந்தன.

★ பக்கிங்காம் கால்வாய் ★ காட்டன் கால்வாய் ★ விருகம்பாக்கம் கால்வாய்

★ ஓட்டேரி நல்லா என 18 பெரிய ஓடைகளும் ★ 540க்கும் மேற்பட்ட சிறிய ஓடைகளும் இருந்தன.

மழைநீர் வெளியேற்றம்:-

★ மழைநீர், சிறிய ஓடைகள் வழியாகப் பெரிய ஓடைகளைச் சென்றடையும்.

★ பெரிய ஓடைகள் ஆறுகளைச் சென்றடையும். ★ ஆறுகள் கடலைச் சென்றடையும்.

3. சென்னை அறிவின் நகரம் என்னும் கூற்றைச் சான்றுகளுடன் நிறுவுக.

முதல் கல்வி நிறுவனம்

★ சென்னையில் புகழ்பெற்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் உள்ளன.

★ 18ஆம் நூற்றாண்டில் சென்னையில் ஐரோப்பிய முறைக் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின.

★ 1715ஆம் ஆண்டு **'புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி'** ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறை பள்ளி ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கலை, அறிவியல் கல்லூரிகள்

★ **1812** - **சென்னைக் கோட்டைக் கல்லூரி** ★ **1837** - **கிறித்தவக் கல்லூரி**

★ **1840** - **பிரசிடென்சி கல்லூரி** (மாநிலக் கல்லூரி) போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.

★ சென்னைப் பல்கலைக் கழகம், **19ஆம் நூற்றாண்டில் அறிவுப் புரட்சி**யில் பெரும்பங்காற்றியது.

★ **1914**ஆம் ஆண்டு பெண்களுக்கென தனி கல்லூரியாக **இராணிமேரி கல்லூரி** தொடங்கப்பட்டது.

★ **ஆங்கிலேயரின் நிதி உதவி இன்றி** தொடங்கப்பட்ட கல்வி நிறுவனம் **பச்சையப்பன் கல்லூரி** ஆகும்.

பல்துறை கல்வி நிறுவனங்கள்

★ மருத்துவக் கல்லூரி ★ ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி

★ உடற்பயிற்சிக் கல்லூரி ★ கவின்கலைக் கல்லூரி

★ மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி என பல்வேறு துறை சார்ந்த கல்வி நிறுவனங்கள் சென்னையில் உள்ளன.

★ இவையாவும் சென்னை அறிவின் நகரம் என்னும் கூற்றிற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

நெடுவினா

1. மதராசப்பட்டினத்தின் சிறப்புகளை விளக்கி கட்டுரை வரைக.

முன்னுரை

★ சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானதாகத் திகழ்வது, நகரம்.

★ நகரங்கள் **கடந்தகால வரலாற்றுக்கும், நிகழ்கால வாழ்விற்கும்** எதிர்கால வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன.

★ இந்தியாவின் மிகப்பெரிய நகரங்களுள் ஒன்றாக விளங்கக்கூடிய சென்னையின் (மதராசப்பட்டினம்) சிறப்புகள் குறித்து இக் கட்டுரையில் காண்போம்.

சென்னையின் தொன்மை

★ சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்துள்ளான்.

★ **குடியம், அத்திரம்பாக்கம்** போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்படி, **ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்**பே இப்பகுதியில் **மக்கள் வாழ்ந்துள்ளனர்**.

★ கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் மிக பழமையான களங்களில் ஒன்றாகும்.

பழமையான கோவில்கள்

★ சென்னையில் **திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருமுல்லைவாயில்** போன்ற இடங்களில் பழமையான கோவில்கள் உள்ளன.

★ பல்லாவரத்தில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்ட **குடைவரை கோவில்கள்** உள்ளன.

★ **திருவல்லிக்கேணியில் நந்திவர்மன் கல்வெட்டு**க் கிடைத்துள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பழமையான கட்டடங்கள்

★ இந்திய சாரசனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் சென்னையில் உள்ளன.

★ அக்கட்டடங்கள் சென்னையின் பழமையைப் பறைசாற்றுகின்றன.

★ **சேப்பாக்கம் அரண்மனை, மத்தியத் தொடர்வண்டி நிலையம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம்** போன்றவை இந்திய சாரசனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்ட கட்டடங்கள் ஆகும்.

சென்னையிலுள்ள நீர் நிலைகள்

★ சென்னையில் **நான்கு முதன்மையான ஆறுகள்** உள்ளன. அவை

★ வடசென்னை - கொற்றலையாறு

★ மத்திய சென்னை - கூவம்

★ தென்சென்னை - அடையாறு, பாலாறு

★ மூன்று முக்கிய கால்வாய்களும், **18 பெரிய ஓடை**களும் **540க்கும் மேற்பட்ட சிறிய ஓடை**களும் இருந்தன.

அறிவின் நகரம்

★ சென்னையில் புகழ்பெற்ற **பல்வேறு கல்வி நிறுவனங்கள்** உள்ளன.

★ **சென்னைக் கோட்டைக் கல்லூரி, கிறித்தவக் கல்லூரி, இராணிமேரி கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி** போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் உள்ளன.

★ **மருத்துவக்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி** போன்ற பல்வேறு துறை சார்ந்த கல்லூரிகளும் உள்ளன.

★ பல்வேறு வகையான கல்வி நிறுவனங்களைக் கொண்டுள்ள **சென்னை அறிவின் நகரமாக**த் திகழ்கிறது.

முடிவுரை

★ **கல்வி, வணிகம், பழமை, பண்பாடு** என அனைத்து வகைகளிலும் சென்னை நகரம் சிறந்து விளங்குகிறது.

EXAM PORT
FREE ONLINE MOCK TEST
தோஸ்த் தமிழ் உரையின்
இணையவழித் தேர்வுகள் எழுத
இந்தக் குறியீட்டை விரவவும்!
பரிசுகளை வெல்லவும்!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

திரைமொழி

குறுவினா

1. லூமியர் சகோதரர்கள் திரையிட்டப் படங்களில் ஏதேனும் ஒன்று குறித்து எழுதுக.

ரயிலின் வருகை

★ **லூமியர் சகோதரர்கள்** திரையிட்ட துண்டுப் படங்களில் ஒன்று **ரயிலின் வருகை**.

★ திரையில் ரயில் முன்னோக்கி வேகமாக வருவதை மக்கள் கண்டனர்.

★ **மக்கள், ரயில் நம்மீது ஏறிக் கொல்லப்போகிறது என அச்சப்பட்டனர்**.

★ அச்சத்தால் **மக்கள் அரங்கைவிட்டு** அலறிக்கொண்டு **ஓடினர்**.

2. திரைப்படத்திற்குப் பெருமை சேர்த்த சில முக்கியமான கலைஞர்கள் குறித்தெழுதுக.

திரைப்படத்திற்குப் பெருமை சேர்த்த கலைஞர்கள்

★ திரைப்படத்திற்குப் பெருமை சேர்த்த கலைஞர்களில் முதன்மையானவர் **தாமஸ் ஆல்வா எடிசன்**.

★ **தாமஸ் ஆல்வா எடிசன் அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவி**யைக் கண்டுபிடித்தார்.

★ பிறகு, **லூமியர் சகோதரர்கள்** படப்பிடிப்புக் கருவியோடு **திரையிடும் கருவி**யையும் கண்டுபிடித்தனர்.

★ **ஜார்ஜ் மிலி**, **திரைப்படத்தில் கதை**யும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தார்.

3. காட்சி மறைவு என்றால் என்ன?

காட்சி மறைவு

★ திரையில் காட்சிகள் மாறுவதை உணர்த்த வேண்டும்.

★ **ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி இருள் ஆக்குவர்**.

★ இது காட்சி மறைவு எனப்படும்.

4. காட்சி உதயம் என்றால் என்ன?

காட்சி உதயம்

★ ஒரு காட்சி தொடங்கும்போது இருட்டாக இருக்கும்.

★ இருட்டாக இருந்த பகுதி சிறிது சிறிதாக வெளிச்சமாகி முழுக்காட்சியும் வெளிப்படும்.

★ இது காட்சி உதயம் எனப்படும்.

5. கலவை, அழிப்பு - குறிப்பு வரைக.

கலவை

★ திரையில், **ஒரு காட்சி மறையும்போதே அடுத்த காட்சி தெரியத் தொடங்கும்**.

★ இது கலவை அல்லது **கூட்டு** எனப்படும்.

அழிப்பு

★ **பழைய காட்சியை அழித்துக் கொண்டே அடுத்த காட்சி தோன்றும்**.

★ இது **அழிப்பு** எனப்படும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. திரைப்படம் முப்பரிமாணக் கலை என வழங்கப்படுவது ஏன்?

முப்பரிமாணக் கலை

★ திரைப்படத்தில், நடிப்பவர்கள் பல கோணங்களில் காட்டப்படுகிறார்கள்.

★ **நடிப்பவரின் முன், பின், மேல் என அனைத்துப் பகுதிகளும் காட்டப்படும்.**

★ இவ்வாறு காட்டப்படுவதால், **திரைப்படம் முப்பரிமாணக் கலை** என வழங்கப்படுகிறது.

7. காட்சிமொழியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

வேகத்தை வெளிப்படுத்தும் காட்சிமொழி

★ திரைப்படத்தில் ஒருவன் **வேகமாக ஓடி வருகிறான்**.

★ ஓடி வருபவனைப் பார்ப்பவன், 'ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்?' என்று கேட்கவேண்டியதில்லை.

★ **'என்னாச்சு?' என்று கேட்டால் போதும்.**

கோபத்தை வெளிப்படுத்தும் காட்சிமொழி

★ ஒருவன் **கட்டுப்படுத்த முடியாத கோபத்தில் இருக்கின்றான்**.

★ அவன் கோபத்தைக் காட்டுவதற்கு, கத்திக் கூச்சல் போடுவதைக் காட்ட வேண்டாம்.

★ **கையில் பிடித்திருக்கும் கண்ணாடி குவளையை இறுக்கி உடைப்பதைக் காட்டினால் போதும்.**

8. திரைக்கலையின் தன்மையைக் கூறுக.

திரைக்கலையின் தன்மை

★ படப்பிடிப்புக் கருவிமூலம் பல்வேறு கோணங்களில் காட்சிகள் எடுக்கப்படுகின்றன.

★ திரையரங்கில் நாம் காட்சியை ஒரே நேரத்தில் காண்கிறோம்.

★ **திரையில் காண்பதற்கு ஏற்ப காட்சிகளைத் தொகுத்து, மனதிற்குள் கதை உலகத்தைத் தோற்றுவிப்பது**தான் **திரைக்கலை** ஆகும்.

9. படத்தொகுப்பு என்றால் என்ன?

படத்தொகுப்பு

★ திரைப்படம் எடுக்கும்போது மிக நீளமாக எடுக்கப்படும்.

★ அவற்றில், **தேவையற்ற காட்சிகளை நீக்கி**,

★ **தேவையான காட்சிகளைப்** பொருத்தமாகச் **சேர்ப்பதே படத்தொகுப்பு** ஆகும்.

10. படத்தொகுப்பாளரின் பணியைக் கூறுக.

படத்தொகுப்பாளரின் பணி

★ **திரைப்படம்** எடுக்கும்போது **16 மணி நேரத்திற்கும் மேல் ஓடுவதாக எடுக்கப்படும்.**

★ அதை **2 மணி நேரம் ஓடும்படி தொகுப்பது** படத்தொகுப்பாளரின் பணி ஆகும்.

★ தொடர்வண்டி ஓர் ஊரை அடைவதற்கு ஒரு பாலத்தை இடமிருந்து வலமாகக் கடப்பதாகக் காட்டப்படுகின்றது.

★ அதே தொடர்வண்டி திரும்பி வரும்போது, பாலத்தை வலமிருந்து இடமாகக் கடப்பதாகக் காட்டப்பட வேண்டும்.

★ இவற்றைக் கவனமாக இணைக்க வேண்டியது படத்தொகுப்பாளரின் பணி ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. மாடர்ன் டைம்ஸ் திரைப்படத்தில் வரும் காட்சியை விளக்குக.

மாடர்ன் டைம்ஸ் திரைப்படத்தில் வரும் காட்சி

★ **மாடர்ன் டைம்ஸ்** திரைப்படத்தில், ஒரு காட்சியில் செம்மாறி ஆடுகள் முண்டியடித்துச் செல்கின்றன.

★ அடுத்த காட்சியில், மனிதர்கள் ஒரு தொழிற்சாலைக்குள் முண்டியடித்துச் செல்கின்றனர்.

★ தொழில்மயமாக்கப்பட்ட சமூகத்தில், மனிதர்கள் மந்தைகள் ஆவதை இக்காட்சி உணர்த்துகின்றது.

12. குலஷோவ் விளைவு என்றால் என்ன?

குலஷோவ் விளைவு (KULESHOV EFFECT)

★ **காட்சிகளை மாற்றி மாற்றி வைப்பதன்மூலம் வெவ்வேறு காட்சிகளை உருவாக்க முடியும்.**

★ இவ்வாறு காட்டுவது **'குலஷோவ் விளைவு'** எனப்படுகின்றது.

13. மூன்று காட்சிகளைக் கொண்டு மாற்றி வைப்பதன்மூலம் பொருள் மாறுவதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

மூன்று காட்சிகள்

★ **புன்னகைக்கிற மனிதன்**, **நீட்டப்பட்ட துப்பாக்கி**, **பதற்றமாகும் மனிதன்**

★ ஆகிய மூன்று காட்சிகளை மாற்றி வைப்பதன்மூலம் ஒருவன் மீது கோழை, வீரன் ஆகிய இரு பிம்பங்களை உருவாக்க இயலும்.

கோழை என்ற பிம்பம்

★ **புன்னகைக்கிற மனிதன்** ★ **நீட்டப்பட்ட துப்பாக்கி** ★ **பதற்றமாகும் மனிதன்**

★ இம்முறையில் காட்சிகள் வைக்கப்பட்டால், ஒருவன்மீது **கோழை** என்ற பிம்பம் உருவாகும்.

வீரன் என்ற பிம்பம்

★ **பதற்றமாகும் மனிதன்** ★ **நீட்டப்பட்ட துப்பாக்கி** ★ **புன்னகைக்கிற மனிதன்**

★ இம்முறையில் காட்சிகள் வைக்கப்பட்டால், ஒருவன்மீது **வீரன்** என்ற பிம்பம் உருவாகும்.

சிறுவினா

1. 'அதிசயம் பிறக்கிறது' என்னும் விளம்பரம் எதனைக் குறிக்கின்றது?

அதிசயம் பிறக்கிறது

★ 1895ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் நாள் காலை நாளிதழில் ஒரு சிறிய விளம்பரம் வந்திருந்தது.

★ விளம்பரத்தில், **'அதிசயம் பிறக்கிறது'** என்று தலைப்பிடப்பட்டிருந்தது.

★ அதிசயத்தைக் காண்பதற்காக மக்கள் பிரான்சின் தலைநகரான **பாரீசில் கிராண்ட் கபே விடுதி** முன் கூடியிருந்தனர்.

★ கொட்டும் மழையிலும் குடை பிடித்துக் காத்திருந்தனர்.

★ புதிய கலையான **திரைப்படத்தைப் பற்றித்தான் அப்படி விளம்பரம்** செய்திருந்தனர்.

★ உலகின் முதன்முதலில் அங்குதான் திரைப்படம் பிறந்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. ஒரு திரைப்படம் வெற்றிப் பெறுவதற்குத் திரைக்கதை இன்றியமையாதது என்பதை நிறுவுக.

திரைக்கதையின் தேவை

★ ஒரு **திரைப்படம் வெற்றிப் பெறுவதற்குக் காரணம், கதையும் அந்தக் கதையைச் சொல்லுகின்ற முறையும்** ஆகும்.

★ சில நேரங்களில், புகழ்வாய்ந்த நடிகர்களின் படங்கள் தோல்வியடைகின்றன.

★ சில நேரங்களில், புதுமுக நடிகர்களின் படங்கள் வெற்றிப் பெறுகின்றன.

★ இதற்குக் காரணம் அந்தப் படத்தின் கதையே ஆகும்.

★ உலகின் சிறந்த படங்கள், பார்வையாளர்களைத் திரையுடன் ஒன்றவைக்கும் திரைக்கதையைக் கொண்டவைகளாகும்.

★ திரைக்கதை பலமுறை எழுதி, படித்து, திருத்தி உருவாக்கப்படுகின்றன.

★ கடின உழைப்பு உள்ள படங்கள் மட்டுமே வெற்றிப் பெறுகின்றன.

3. திரைப்படத்தில் ஒலிக்குறிப்பின் பங்கினை விளக்குக.

திரைப்படத்தில் ஒலிக்குறிப்பின் பங்கு

★ திரைப்படத்தில் **உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு** ஒலிக்குறிப்புகள் உதவுகின்றன.

★ **பின்னணி இசைச் சேர்ப்பும் மௌனமும்** திரையில் உணர்வுகளை வெளிப்படுத்த உதவும்.

★ இசை, நடிப்பவர்களின் **மனக்கவலைகள், அலைக்கழிப்பு**களை **எதிரொலிக்கும்**.

★ நடிப்பவர்களின் உணர்வுகளுக்கு விரிவுரை வழங்குவதாக அமையும்.

★ மௌனம் உரையாடலைவிட அதிகம் பேசுவதாக இருக்கும்.

எடுத்துக்காட்டுக் காட்சி

★ ஒரு கதைநாயகி சன்னல் வழியாகத் தலையை நீட்டி வெளியில் வெறித்துப் பார்க்கின்றாள்.

★ அப்பொழுது ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது.

★ அவள் விருப்பத்திற்கு மாறாக ஒருவர் அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறார் என்பதை ஒலிக் குறிப்பின்மூலம் உணர முடிகிறது.

4. நல்ல திரைப்படத்தின் தன்மைகளைக் கூறுக.

நல்ல திரைப்படத்தின் தன்மைகள்

★ ஒரு நல்ல திரைப்படம் **முறையான காட்சிமொழி**யுடன் உருவாகும்.

★ நல்ல திரைப்படத்தில் **பொய்கள் இருக்காது**.

★ நம் மூளையை மழுங்கச் செய்யும் **கவர்ச்சிகள் இடம்பெறாது**.

★ நல்ல திரைப்படங்கள் **உண்மையைப் பேசும்**.

★ அந்தப் படத்தில் காண்பிக்கப்படும் வாழ்வியல் **நம் அனுபவத்தை மேம்படுத்தும்**.

★ நம் **வாழ்க்கையை வளமாக்கும்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

1. காட்சித்துணிப்பின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

காட்சித்துணிப்பு

★ நம் கண்கள் படப்பிடிப்புக் கருவிகள் செய்யும் பல வேலைகளைச் செய்கின்றன.

★ காணும் காட்சிக்கு ஏற்ப கண்களின் பார்வை நீண்டும் குறைந்தும் அமைகின்றது.

★ இது காட்சித்துணிப்பு எனப்படுகின்றது.

காட்சித்துணிப்பின் வகைகள்

★ காட்சித்துணிப்பு ஐந்து வகைப்படும். அவை:-

★ மீ சேய்மைக் காட்சித்துணிப்பு ★ சேய்மைக் காட்சித்துணிப்பு

★ நடுக்காட்சித்துணிப்பு ★ அண்மைக் காட்சித்துணிப்பு ★ மீ அண்மைக் காட்சித்துணிப்பு

மீ சேய்மைக் காட்சித்துணிப்பு

★ **மிக நீண்ட தூரத்திற்குப் பார்ப்பது**, **மீ சேய்மைக் காட்சித்துணிப்பு** ஆகும்.

★ கடற்கரையில் நின்றுகொண்டு, கடலைப் பார்க்கின்றோம்.

★ நம் கண்கள், மிக நீண்ட தூரத்திற்குப் பார்க்கின்றன.

★ இது மீ சேய்மைக் காட்சித்துணிப்பு எனப்படும்.

சேய்மைக் காட்சித்துணிப்பு

★ **நீண்ட தூரத்திற்குப் பார்ப்பது**, **சேய்மைக் காட்சித்துணிப்பு** ஆகும்.

★ சாலையைக் கடக்கும்போது, சாலையின் இரு பக்கங்களிலும் பார்க்கின்றோம்.

★ நம் கண்கள், சற்று சுருங்கி தொலைவில் பொருள்கள் அசைவதைப் பதிவுசெய்கின்றன.

★ இது சேய்மைக் காட்சித்துணிப்பு எனப்படும்.

நடுக்காட்சித்துணிப்பு

★ **இடைப்பட்ட தூரத்திற்குப் பார்ப்பது**, **நடுக்காட்சித்துணிப்பு** ஆகும்.

★ தெருவில் நடந்துச் செல்லும்போது, எதிரில் வருபவரை முழுவதுமாகப் பார்க்கின்றோம்.

★ ஆனால், எதிரில் வருபவரின் இடுப்பு அளவில் மட்டுமே கவனிக்கப்படுகின்றது.

★ இது **நடுக்காட்சித் துணிப்பு** எனப்படும்.

அண்மைக் காட்சித்துணிப்பு

★ **அருகில் இருப்பதைப் பார்ப்பது**, **அண்மைக் காட்சித்துணிப்பு** ஆகும்.

★ வீட்டிற்குள் நுழையும்போது அம்மாவின் முகத்தை மட்டுமே பார்ப்போம்.

★ இது **அண்மைக்காட்சித் துணிப்பு** எனப்படும்.

மீ அண்மைக் காட்சித்துணிப்பு

★ **மிக அருகில் இருப்பதைப் பார்ப்பது**, **மீ அண்மைக் காட்சித்துணிப்பு** ஆகும்.

★ செருப்பைக் கழற்றிவிடும்போது, செருப்பை மட்டுமே பார்ப்போம்.

★ இது **மீ அண்மைக் காட்சித்துணிப்பு** எனப்படும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. சார்லி சாப்ளினின் வாழ்க்கை குறித்தும் திரையுலகச் சாதனைகள் குறித்தும் விவரிக்க.

கற்றதன் நோக்கம்

★ சார்லி சாப்ளினின் வாழ்க்கை குறித்தும் திரையுலகச் சாதனைகள் குறித்தும் அறிந்துக் கொள்வதற்காகவே!

முன்னுரை

★ திரைப்படம் என்னும் வெள்ளித்திரை வானில் ஆயிரக்கணக்கான விண்மீன்கள் (Stars) தோன்றுகின்றன.

★ அதில் பல விண்மீன்கள் தோன்றிய சில காலத்திலேயே மறைந்துவிடுகின்றன.

★ சில விண்மீன்கள் மட்டுமே நீண்ட நெடுங்காலம் வரை மங்காமல் ஒளிர்கின்றன.

★ அவ்வாறு ஒளிரும் விண்மீன்களில் ஒருவரான சார்லி சாப்ளின் வாழ்க்கைக் குறித்தும் திரையுலகச் சாதனைகள் குறித்தும் விரிவாகக் காண்போம்.

பிறப்பும் இளமையும்

★ இலண்டனில் பிறந்த சாப்ளின் வறுமையின் மடியில் வளர்ந்தவர்.

★ சாப்ளினின் தாய், வறுமை வலியை மறக்கடிக்கக் கதைகள் சொன்னார்.

★ அதன்மூலம் ஒரு கலைஞனாக அவர் செதுக்கப்பட்டார்.

★ மேடையில் பாடிப் பிழைத்த அம்மாவின் குரல் கெட்டுவிட, சிறுவனான சாப்ளின் மேடையேறி ஆடிப்பாடி அசத்தினார்.

★ நடிகனாகிக் குடும்பத்தைக் காக்கக் கனவு கண்ட சாப்ளின் நாடக நடிகராகி, குழுவுடன் அமெரிக்கா சென்று திரை வாய்ப்பைப் பெற்றார்.

திரையுலக நுழைவு

★ தொள தொள கால்சட்டையும் இறுக்கமான கோட்டும் துண்டு மீசையும் புதுவிதமான சேட்டையும் கொண்ட **'லிட்டில் டிராம்ப்'** (Little Trump) என்று அவர் உருவாக்கிக் கொண்ட தோற்றம் அவரைப் பேசாப்பட நாயகனாக்கியது. ★ அவரது ஊதியமும் புகழும் உயர்ந்தது.

★ வறுமைமிக்க தன் இளமை வாழ்வை **'தி கிட்'** (The Kid) என்ற வெற்றிப் படமாக்கினார்.

★ ஷியுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ்' என்ற பட நிறுவனத்தைத் தொடங்கிப் பெரும் வளர்ச்சிக் கண்டார்.

★ அவரது மேதைமையும் திறமையும் **'தி கோல்டு ரஷ்'** (The Gold Rush) **'தி சர்க்கஸ்'** (The Circus) போன்ற காவியப் படங்களை உருவாக்கின.

எதிரிகளின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

★ மரபான கருத்துருவாக்கங்களைத் தன் படங்களில் சாப்ளின் உடைத்து நொறுக்கினார்.

★ பேசாப்படங்களில் சேட்டைகள் மூலம் புகழ்பெற்ற அவர் பேசும்படங்கள் உருவான காலத்தில், தோற்பார் என எதிர்பார்த்தனர்.

★ எதிர்பார்ப்புகளை முறியடித்து **'சிட்டி லைட்ஸ்' (City Lights)** என்ற படத்தை எடுத்ததன் வாயிலாக எதிரிகளின் வாய்களை அடைத்தார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பொதுவுடைமை சிந்தனையாளர்

★ மூன்று ஆண்டுகள் உழைப்பில் **'மாடர்ன் டைம்ஸ்'** (Modern Tiems) படத்தை வெளியிட்டார்.

★ இதில் அன்றைய தொழில்மய உலகின் கேடுகளை விமரிசனம் செய்தார்.

★ சாப்ளினுக்குப் பொதுவுடைமையாளர் என்ற முத்திரை விழுந்தது.

★ பல முதலாளிய நாடுகளில் படம் செய்யப்பட்டது.

★ இருந்தாலும் படம் வெற்றி பெற்றது.

சாதனைப்படம்

★ சாப்ளினின் சாதனைப்படமான **'தி கிரேட் டிக்டேட்டர்'** (The Great Dictator) 1940இல் வெளியானது.

★ ஹிட்லர் புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த காலத்தில் அவரை விமரிசித்து வந்த முதல்படம் ஆகும்.

★ **"மனிதகுலத்திற்குத் தேவை போரல்ல; நல்லுணர்வும் அன்பும்தான்"** என்பதைப்படம் உணர்த்தியது.

★ சாப்ளினுக்கு நல்ல வசனங்களுடன் படம் எடுக்கத் தெரியாது என்று கூறிவந்த விமர்சகர்களின் கூற்றைப் பொய்யாக்கும் வகையில் இப்படத்தை எடுத்தார். இக்கதையில் **ஹிட்லரை உருவகப்படுத்தி ஹென்கோல்** என்னும் கதைமாந்தரை உருவாக்கினார் சாப்ளின்.

★ அந்தப் படத்தின் ஒரு காட்சியில், ஒரு மாநாட்டில் மனிதகுல விடுதலை குறித்தப் பேரூரை ஆற்றுகிறார்.

★ அந்தப் பேருரைதான் இன்றுவரை திரைப்படங்களின் மிகச் சிறந்த வசனமாகப் போற்றப்படுகிறது.

★ வாழும் காலத்திலேயே **ஹிட்லரைக் கடுமையாக விமர்சித்து எடுத்த ஒரேபடம்** என்ற பெருமையும் இப்படத்திற்கு உண்டு.

★ இரட்டை வேடப் படங்களில் மிகச் சிறந்த திரைப்படம் என்ற பெயரும் இந்தப் படத்திற்கு உண்டு.

இறந்தும் வாழும் கலைஞன்

★ சாப்ளினுக்கு வாழ்நாள் சாதனையாளர் என்னும் வகையில் **ஆஸ்கார் விருது** வழங்கப்பட்டது.

★ இன்றும் உலகின் பல பகுதிகளில் **சாப்ளினின் டிராம்ப் உருவம், குழந்தைமை, மனிதமை** ஆகியவற்றின் குறியீடாக இடம் பெற்றுள்ளது.

★ சாப்ளின் உடல் இந்த உலகத்தைவிட்டு நீங்கினாலும், கலைவடிவில் இன்றும் வாழ்ந்தக் கொண்டிருக்கிறார்.

முடிவுரை

★ நடிகர்கள் பலரும் பணத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நடிக்கின்றனர்.

★ வெற்று கவர்ச்சிகள்மூலம் மக்களின் மூளைகளை மழுங்கடிக்கச் செய்துக் கொண்டிருக்கின்றனர்.

★ அத்தகைய நடிகர்களுக்கு நடுவில், சாப்ளின் சிறந்த கலைஞராகவும் பொதுவுடைமையாளராகவும் திகழ்ந்துள்ளார்.

நூற்பயன்

★ சாமானியரான சாப்ளின், சாதனையாளரான கதை என்னையும் வாழ்வில் சாதிக்கத் தூண்டுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இலக்கியத்தில் மேலாண்மை

குறுவினா

1. மனிதன் நாகரீக வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம் மேலாண்மையே என்பதை நிறுவுக.

மனிதன் நாகரீக வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம் மேலாண்மையே:-

★ மனிதன் தோன்றியபோதே மேலாண்மையும் துளிர்க்கத் தொடங்கியது.

★ **ஆதி மனிதனிடம் தலைமைப் பண்பு சிறந்து விளங்கியது**.

★ ஆதி மனிதனின் தலைமைப் பண்பே **இயற்கையோடு இணைந்து வாழ உதவியது**.

★ இடர்களைத் தாண்டி நீடிக்கவும் உதவியது.

★ இரண்டு கால்களில் நிமிர்ந்தபோது, **தன்னுடைய கட்டமைப்புகளைச் செழுமையாக்கினான்**.

★ ஆதி மனிதன் குழுவாகச் செயல்பட்டு **இயற்கையின் சீற்றங்களை எதிர்கொண்டான்**.

★ குழுவில் ஒருவன் முன்னின்று **குழுவை ஒழுங்குபடுத்தினான்**.

★ தனக்குப் **பொருத்தமான சுற்றுச்சூழலை**த் தானே **உருவாக்கிக் கொண்டான்**.

★ இவ்வாறு சிறந்த மேலாண்மைப் பண்புடன் விளங்கியதனாலேயே மனிதன் நாகரீக வளர்ச்சி அடைந்தான்.

2. திட்டமிடுவதன் தேவையைக் கூறுக.

திட்டமிடுவதன் தேவை:-

★ ஒவ்வொரு நாளும் **சரியான திட்டமிடுதலுடன் செயல்பட வேண்டும்**. ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய **பணிகளுக்கான நேரத்தை மனத்தில் வகுத்துக்கொள்ள வேண்டும்**.

★ சிறந்த நிருவாகியாக இருந்தாலும் **முறையான திட்டமிடுதல் இருந்தாலே வெற்றி பெற இயலும்**.

3. திருவள்ளுவர் காட்டும் நேர மேலாண்மை குறித்தெழுதுக.

திருவள்ளுவர் காட்டும் நேர மேலாண்மை:-

★ ஒரு செயலைச் செய்யும்முன் **ஏற்ற காலத்தையும் இடத்தையும்** அறிந்துச் செயல்பட வேண்டும்.

★ அவ்வாறுசெயல்பட்டால்**உலகத்தையேஅடையநினைத்தாலும்கைகூடும்** என்கிறார் திருவள்ளுவர்.

➔ **"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
கருதி இடத்தால் செயின்" - திருவள்ளுவர்

★ ஓர் அரசன் எவ்வாறு நேரத்தை ஒதுக்கிச் செயல்பட வேண்டும் என்பதை 'மடியின்மை' என்னும் அதிகாரத்தில் விளக்குகிறார்.

4. கோவூர்கிழார் வியப்பதற்கான காரணம் என்ன?

கோவூர்கிழார் வியப்பதற்கான காரணம்:-

★ புறநானூற்றின் இறுதிப் பாடலில் கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளியைப் பாடியுள்ளார்.

★ **சோழன் நலங்கிள்ளி இரவின் கடையாமத்தில் (நள்ளிரவில்) உறங்காமல் விழித்திருக்கிறான்**.

★ அதைக் கண்ட கோவூர்கிழார் மன்னனின் நேர பயன்பாட்டை எண்ணி வியப்படைகின்றார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறப்புச் செய்தி

➔ **"பலர் துஞ்சவும் தான் துஞ்சான்**
உலகு காக்கும் உயர் கொள்கை
கேட்டோன், எந்தை என் தெண்கிணைக் குரலே" - புறநானூறு

5. சீனத்தில் புழங்கும் உருவகக்கதை கூறும் நீதி யாது?

சீனத்தில் புழங்கும் உருவகக்கதை கூறும் நீதி:-

★ எது எந்த நேரத்தில் முக்கியம் என்று சரியான முடிவெடுப்பதில்தான் வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது.

6. வேளாண்மையில் உள்ள மேலாண்மைக் கூறுகள் யாவை?

வேளாண்மையில் உள்ள மேலாண்மைக் கூறுகள்

★ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல் ★ உரிய நேரத்தில் விதைத்தல்

★ நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல் ★ அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்

★ உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் போன்றவை வேளாண்மையில் உள்ள மேலாண்மைக் கூறுகள் ஆகும்.

7. தசரதன் ஆட்சி செய்த முறைக்குக் கம்பர் கூறும் ஒப்புமை யாது?

தசரதன் ஆட்சி செய்த முறைக்குக் கம்பர் கூறும் ஒப்புமை

★ தசரதன் தன் நாட்டை மிகவும் செப்பமாகவும் நுணுக்கமாகவும் ஆட்சி செய்தான்.

★ **'வறியவன் ஒருவன் தன் சிறுவயலைப் பாதுகாப்பது போல, இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து மிகச்சிறந்த முறையில் ஆட்சி செய்தான்'**

★ என்று ஒப்புமை கூறுகின்றார் கம்பர்.

சிறப்புச் செய்தி

கம்பராமாயணம்

➔ **"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்**
செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்" - கம்பர்

8. மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மையுடையதே என்பதை அறநெறிச்சாரம்வழி நின்று விளக்குக.

மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மையுடையதே

★ **இனிமையான சொற்களை விளைநிலமாக**க் கொண்டு,

★ பிறருக்கு **உதவும் பண்பை விதை**யாக விதைத்து,

★ **வன்மையான சொற்கள்** என்னும் **களை**கள் நீக்கி, ★ **வாய்மை** என்னும் **உரம்** இட்டு,

★ **அன்பு** என்னும் **நீர் பாய்ச்சி**,

★ **அறம்** என்னும் **கதிரை அறுவடை** செய்ய வேண்டும் என்கிறது அறநெறிச்சாரம்.

★ **மனத்தைநெறிப்படுத்துவதும்ஒருவகையானவேளாண்மை** போன்றதே என்கிறது, அறநெறிச்சாரம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. கடலைக் குறிக்கும் வேறு பெயர்களைப் பட்டியலிடுக.

கடலைக் குறிக்கும் வேறு பெயர்கள்

அரலை	ஆர்கலி	அரி	அலை	அழுவம்	அளம்	அளக்கர்
ஆழி	ஈண்டுநீர்	உவரி	திரை	பானல்	பெருநீர்	சுழி
நீராழி	புணர்ப்பு	தென்நீர்	பௌவம்	முந்நீர்	வரி	ஓதம்

10. அந்நிய நாடுகளுடன் வணிகம் செய்யும்போது, அடிப்படையாகத் தேவைப்படுபவை யாவை?

அந்நிய நாடுகளுடன் வணிகம் செய்யும்போது, அடிப்படையாகத் தேவைப்படுபவை

★ பரிமாறுவதற்கு ஏற்ற **உயர்தரப் பொருட்கள்**

★ அந்நிய நாடுகளின் **பண்பாடு குறித்த ஆழ்ந்த அறிவு**

★ **சிறந்த துறைமுகங்கள்**

★ இருமொழிகளையும் அறிந்த **மொழிபெயர்ப்பாளர்கள்**

11. வணிகத்தில் உள்ள மேலாண்மை விதியைப் பற்றிக் கூறுக.

வணிகத்தில் உள்ள மேலாண்மை விதி

★ நம்முடன் யாரும் போட்டி போடக்கூடாது.

★ தம்முடன் போட்டிக்கு வரும் அனைவரையும் அழித்துவிட வேண்டும் என எண்ணக் கூடாது.

★ **'போட்டியாளர்களே நமக்குள் உந்து சக்தியை உற்பத்தி செய்கிறார்கள்'** என்பது மேலாண்மை விதி ஆகும்.

12. நிருவாக மேலாண்மை குறித்து நாலடியார் கூறும் செய்தி யாது?

நிருவாக மேலாண்மை குறித்து நாலடியார்

★ உயர்பதவியில் இருப்பவர்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க முடியாது.

★ ஆனால், யார் திறமைசாலிகள் என்பதை அறிந்து, அவர்களை அருகில் வைத்துக்கொள்ளலாம்.

★ **எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பது ஒருவகை அறிவு**.

★ **யாருக்குத் தெரியும் என்பதைத் தெரிந்திருப்பது மற்றொருவகை அறிவு** என்கிறது நாலடியார்.

சிறப்புச் செய்தி

நாலடியார்

➔ **"கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு"

13. நிருவாகத்தில் வரவும் செலவும் எவ்வாறு இருக்க வேண்டும்?

நிருவாகத்தில் வரவும் செலவும்

★ நிருவாகத்தில் **வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும்**.

★ வரவைத் தாண்டிச் செலவு செய்யக் கூடாது.

★ வரவைத் தாண்டிச் செலவு செய்தால், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலை ஏற்படும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

1. அதிக நேரத்தை உருவாக்க முடிந்தவர்களே வரலாறு படைப்பார்கள் என்பதற்கான காரணத்தை விளக்குக. (அல்லது) ஓய்வு நேரத்தின் அவசியத்தைக் கூறுக.

பழங்கால மனிதனும் ஓய்வும்:-

★ **பழங்கால மனிதனின்** பொழுது உணவு தேடுவதிலும் வேட்டையாடுவதிலும் கழிந்தது.

★ அவனது பணிகளை எளிதாக்கக் கூடிய **இயந்திரங்கள் இல்லை**.

★ எனவே, பழங்கால மனிதனுக்கு **ஓய்வெடுப்பதற்கான நேரம் இல்லை**.

நேரத்தை உருவாக்குதல்:-

★ நேரத்தை உருவாக்குதல் என்பது நம்முடைய ஓய்வு நேரத்தைக் குறிக்கும்.

★ நம் வேலைகளைச் **சரியான திட்டமிடுதலுடன்** செய்வதால் நம்மால் நேரத்தை உருவாக்க இயலும்.

★ வேலையை எளிதாக்கக் கூடிய **இயந்திரங்கள்** நம்முடைய **ஓய்வு நேரத்தை அதிகரிக்கின்றன**.

ஓய்வு நேரத்தின் அவசியம்:-

★ ஓய்வு நேரத்தில் **நம் வாழ்க்கைக்குத் தேவையானவற்றைச் சிந்திக்க இயலும்**.

★ **வளமான வாழ்க்கைக் கூறுகளை உண்டாக்கிக் கொள்ள** வாய்ப்பாக அமையும்.

★ ஓய்வு நேரத்தின்மூலம் நம் **வாழ்க்கையை மேம்படுத்த** இயலும்.

★ வாழ்க்கையில் மேம்பட்டவர்களே வரலாற்றில் இடம்பெறுவார்கள்.

★ எனவே, அதிக நேரத்தை உருவாக்குபவர்களாலேயே வரலாறு படைக்க முடியும்.

2. சீனத்தில் புழங்கும் உருவகக்கதையைக் கூறி, நேர மேலாண்மையின் தேவையை நிறுவுக.

நீச்சல் வீரர்கள்:-

★ சீனாவில் யாங்சௌ பகுதியில் உள்ள இளைஞர்கள் நீச்சலில் சிறந்து விளங்கினர்.

★ நீச்சல் தன்னம்பிக்கையையும் வாழ்வில் வரும் எதிர்ப்புகளை எதிர்கொள்ளவும் கற்றுத் தருகிறது.

★ ஒருமுறை சில இளைஞர்கள் படகில் சென்று கொண்டிருந்தனர்.

★ ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டதால் படகு கவிழ்ந்தது.

★ படகில் சென்ற இளைஞர்கள் வெள்ளத்தில் நீந்தத் தொடங்கினர்.

★ அவர்களில் மிகச்சிறந்த நீச்சல் வீரன் ஒருவன் இருந்தான்.

★ அவன் அன்று சரியாக நீந்த முடியாமல் திணறினான்.

★ மற்ற இளைஞர்கள் அவனிடம் நீந்த முடியாமல் திணறுவதற்கான காரணத்தை வினவினர்.

★ நீந்த முடியாமல் திணறிய இளைஞன் தன் கச்சையில் (இடுப்பில் கட்டும் துணியில்) ஆயிரம் பொற்காசுகள் இருப்பதாலேயே நீந்த முடியவில்லை என்றுக் கூறினான்.

★ மற்ற இளைஞர்கள் அதைத் தூக்கி எறிந்துவிடும்படி கூறினர்.

★ ஆனால் அந்த இளைஞன் மறுத்துவிட்டான். ★ இறுதியில் நீரில் மூழ்கி இறந்துப்போனான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கதை உணர்த்தும் நேர மேலாண்மை:-

★ எது எந்த நேரத்தில் முக்கியம் என்று சரியான முடிவெடுப்பதில்தான் வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது.

★ அதுவே சிறந்த மேலாண்மை ஆகும்.

3. காவிரிப் பூம்பட்டினத்தில் நடைபெற்ற வணிகம் குறித்து பட்டினப்பாலை கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

காவிரிப் பூம்பட்டினத்தில் நடைபெற்ற வணிகம் குறித்து பட்டினப்பாலை கூறும் கருத்துகள்

★ காவிரிப் பூம்பட்டினத்தில், கடல்வழியே வேறு நாடுகளிலிருந்து **மரக்கலங்களில் வந்த பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன**.

★ வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய கணக்கிட இயலாத பொருள்கள் பண்டசாலை முற்றத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

★ இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்குச் **சுங்கம் வசூலிக்கப்பட்டது**.

★ சுங்க அதிகாரிகள் **பொருட்கள்மீது புலிச்சின்னத்தைப் பொறித்து** அனுப்பினர்.

★ சுங்க அதிகாரிகள், வரி கொடுக்காமல் ஏமாற்றுபவர்கள் அஞ்சும் வகையிலான தோற்றத்துடன் இருந்தனர்.

சிறப்புச் செய்தி

பட்டினப்பாலை

➔ **"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்**
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்
அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி"

4. பழந்தமிழர்கள் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளைப் பற்றி இலக்கியங்கள்வழி விளக்குக.

பழந்தமிழர்களின் வெளிநாட்டுத் தொடர்பு

★ சங்க காலத்தில், **முசிறி மிகப்பெரிய துறைமுகமாக** இருந்தது.

★ முசிறி **யவனர்களின் கப்பல்கள் நிறுத்தி வைக்கப்படும் இடமாக** இருந்ததை இலக்கியங்கள்மூலம் அறிய முடிகிறது.

★ **அகஸ்டஸ் சீசர்** என்பவரைப் **பாண்டியரின் தூதுக்குழு** ஒன்று கி.மு. 20ஆம் ஆண்டு **சந்தித்தது**.

★ **சீசர், பாண்டியரின் தூதுக்குழு** சந்திப்பைப் பற்றி, **ஸ்ட்ரேபோ** என்பவர் பதிவு செய்கின்றார்.

★ தமிழர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்களுக்கிடையே இருந்த வணிக உறவு இலக்கியம்மூலம் தெரிகிறது.

★ **புறநானூற்றின் 56ஆம் பாடலில் யவனர்களின் கப்பல்கள் பற்றிய குறிப்பு** இடம் பெற்றுள்ளது.

★ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக்கிக் கட்டுப்படுத்தினான்.

★ இச்செய்தி, **பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில்** இடம்பெற்றுள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. திருவள்ளுவர் வணிகம் செய்பவர்களை எவ்வாறு எச்சரிக்கின்றார்?

வணிகம் செய்பவர்கள்

★ பலர் வணிகம் செய்யும்போது அதிக இலாபம் கிடைத்துவிட்டால், தன்னைப் பற்றி உயர்ந்த பிம்பத்தை உருவாக்கிக் கொள்வார்கள்.

★ நாம் எந்தத் துறைக்குச் சென்றாலும் வெல்ல முடியும் என்று கருதுவர்.

★ தமக்குத் தெரியாத துறையில் வணிகம் செய்து தோல்வி அடைவர்.

திருவள்ளுவரின் எச்சரிக்கை

★ பலர் தம்முடைய வலிமையின் அளவு அறியாமல்,

★ **மனவெழுச்சியினால் தூண்டப்பட்டு ஒரு வியாபாரத்தைத் தொடங்கி** விடுகின்றனர்.

இடையில் அதனை முடிக்காமல் அழிந்துவிடுகிறார்கள் என்று திருவள்ளுவர் எச்சரிக்கின்றார்.

சிறப்புச் செய்தி

திருக்குறள்

➔ **"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**

இடைக்கண் முரிந்தார் பலர்" - திருவள்ளுவர்

6. நிதி மேலாண்மை குறித்து, 'டைமன்' பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் கூறுவது யாது?

நிதி மேலாண்மை குறித்து ஷேக்ஸ்பியரின் நாடகம் கூறுவது

★ ஏதென்ஸ் நகரில், டைமன் என்பவன் இருந்தான்.

★ அவன் வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது.

★ அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றிப் பேசவருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தான்.

★ ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள்.

★ அப்போதும் அவன் வருந்தவில்லை.

★ தான் அளித்த விருந்தை உண்டவர்கள் உதவுவார்கள் என்று எண்ணினான்.

★ அவனுடைய சேவகர்கள் நிதியுதவி கேட்டு, நான்கு திசைகளுக்கும் செல்கிறார்கள்.

★ ஆனால், உதவி கிடைக்காமல் வெறும் கையோடு திரும்புகிறார்கள்.

★ டைமன் ஊரைவிட்டு, வெளியில் சென்றுவிடுகிறான். ★ மனித இனத்தையே வெறுக்கிறான்.

★ 'டைமன்' பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் நிதி மேலாண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

7. வரவைத் தாண்டி செலவு செய்பவர்களின் நிலை குறித்து ஔவையார் கூறுவது யாது?

வரவைத் தாண்டி செலவு செய்பவர்களின் நிலை

★ **தன்மானத்தை இழப்பார்கள்**. ★ **அறிவிழந்துப் போவார்கள்**.

★ செல்லும் இடம் எல்லாம் **புறக்கணிக்கப்படுவார்**கள்.

★ ஏழு பிறவிகளுக்கும் **திருடனாக**வும் **தீயவனவாக**வும் வாழ நேரிடும்.

★ நல்லவர்களாளும் தீயவனாகக் கருதப்படுவான் என்கிறார் ஔவையார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறப்புச் செய்தி

நல்வழி

➔ **"ஆன முதலில் அதிகம் செலவானால்**
மானம் அழிந்து மதிகெட்டு - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"- ஔவையார்.

நெடுவினா

1. இலக்கியத்தில் காணப்படும் மேலாண்மைக் கூறுகளை விளக்கி எழுதுக.

கற்றதன் நோக்கம்

★ இலக்கியத்தில் காணப்படும் மேலாண்மைக் கூறுகளை அறிந்துக் கொள்ளவதற்காகவே!

முன்னுரை

★ மனிதன் தோன்றியக் காலந்தொட்டே அவனிடம் மேலாண்மைக் கூறுகள் துளிர்க்கத் தொடங்கிவிட்டன.

★ பழங்கால மனிதன் தன் மேலாண்மையால் தனக்குப் பொருத்தமான சுற்றுச்சூழலைத் தானே உருவாக்கிக் கொண்டான்.

★ மனிதனிடம் இயல்பாக அமைந்திருந்த மேலாண்மைக் கூறுகளை இலக்கியங்கள் வெளிப்படுத்தும் திறத்தை இங்குக் காண்போம்.

நேர மேலாண்மை

★ மனிதன் ஓய்வு நேரத்தை உருவாக்கத் தொடங்கியபோது மேலாண்மைப் பண்பு உருவாகியது.

★ அதிக நேரத்தை உருவாக்குபவரே வரலாற்றைப் படைப்பவராகத் திகழ்கின்றார்.

★ ஒவ்வொரு நாளும் செய்யும் பணிகளைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

★ **சரியான திட்டமிடுதலே பாதி வெற்றிக்குச் சமமாகும்**.

★ ஏற்ற காலத்தையும் ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால், இந்த உலகத்தையே அடைய நினைத்தாலும் கைக்கூடும் என்கிறார், வள்ளுவர்.

சிறப்புச் செய்தி

திருக்குறள்

★ **"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
கருதி இடத்தால் செயின்" - திருவள்ளுவர்

★ புறநானூற்றின் இறுதிப் பாடலில் **கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளி** இரவின் கடையாமத்திலும் உறங்காமல் விழித்திருந்த நிலையைப் பற்றிப் பேசி வியக்கின்றார்.

சிறப்புச் செய்தி

புறநானூறு

★ **"பலர் துஞ்சவும் தான் துஞ்சான்**
உலகு காக்கும் உயர் கொள்கை
கேட்டோன், எந்தை எண் தெண்கிணைக் குரலே" - கோவூர்கிழார்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ சீனத்தில் புழங்கும் உருவகக் கதையொன்று, நேர மேலாண்மை பற்றிக் கூறுகிறது.

★ **எது எந்த நேரத்தில் முக்கியம் என்று சரியான முடிவெடுப்பதில்தான் வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது**.

வேளாண் மேலாண்மை

★ **வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உள்ளன**.

★ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,

★ உரிய நேரத்தில் விதைத்தல், ★ நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்

★ அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்,

★ உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

★ தசரதன் தன் நாட்டைச் சிறப்பான முறையில் ஆட்சிச் செய்ததைக் கம்பர்,

★ **வறியவன் ஒருவன் தன் சிறுவயலைப் பாதுகாப்பதுபோல, இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து மிகச்சிறந்த முறையில் ஆட்சிச் செய்தான்** என்று குறிப்பிடுகிறார்.

சிறப்புச் செய்தி

கம்பராமாயணம்

★ **"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்**
செய் எனக் காத்து இனிதுஅரசு செய்கின்றான்" - கம்பர்

வணிக மேலாண்மை

★ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே **பன்னாட்டு வணிகம் நிகழும் இடமாகத் தமிழகம்** திகழ்ந்தது.

★ சங்க இலக்கியங்களில் தமிழரின் பண்டைய வணிகப் பரிமாற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

★ காவிரிப்பூம்பட்டினத்தில், ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் கணக்கிட இயலாத வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தச் செய்தியைப் பட்டினப்பாலை பதிவு செய்கிறது.

சிறப்புச் செய்தி

பட்டினப்பாலை

★ **"வான் முகந்த நீர் மலைப் பொழியவும்**
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்
அளந்து அறியாப் பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி"

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ **போட்டியாளர்களே நமக்குள் உந்து சக்தியை உற்பத்தி செய்கிறார்கள்** என்பது மேலாண்மை விதி.

நிருவாக மேலாண்மை

★ உயர்பதவியில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் சிறந்து விளங்க இயலாது.

★ **ஒன்றைத் தெரிந்திருப்பது ஒருவகை அறிவு**, **யாருக்குத் தெரியும் என்பதைத் தெரிந்திருப்பது மற்றொருவகை அறிவு** ஆகும்.

★ **நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும்**. வரவைத் தாண்டி செலவு செய்பவன் அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவான்.

★ **டைமன் பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் நிதி மேலாண்மை** பற்றிய மிகச் சிறந்த வாழ்வியல் விளக்கம்.

★ **வரவைத்தாண்டி செலவு செய்பவர்கள், தன்மானத்தை இழப்பார்கள், அறிவிழந்துப் போவார்கள்.**

★ செல்லும் இடம் எல்லாம் புறக்கணிக்கப்படுவார்கள், திருடனாகவும் தீயவனாகவும் வாழ நேரிடும் என்கிறார், ஔவையார்.

சிறப்புச் செய்தி

நல்வழி

★ **"ஆன முதலில் அதிகம் செலவானால்**
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" - ஔவையார்

முடிவுரை

★ அடுத்தவர் நலனுக்காக வாழ்பவரே தலைமைப் பண்புமிக்கவர்.

★ உலக இலக்கியங்கள் அனைத்திலும் மேலாண்மைக் கருத்துகள் பரவிக் கிடக்கின்றன.

★ இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள மேலாண்மைக் கருத்துகளைக் கற்று நாமும் வாழ்வில் மேன்மை அடைவோம்.

நூற்பயன்

★ தமிழ் இலக்கியங்களில் கூறியுள்ள நேர மேலாண்மை, வேளாண் மேலாண்மை, வணிக மேலாண்மை, நிருவாக மேலாண்மைகளைப் பற்றி அறிந்துக்கொண்டேன்.

தமிழில் ஐயமா?
தமிழ் வகுப்புகளைக் காண
இந்த விரைவுக் குறியீட்டை
விரவவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நமது அடையாளங்களை மீட்டவர்

குறுவினா

1. வரலாற்றை அறிந்துகொள்வதற்கான அடிப்படை தரவுகள் யாவை?

வரலாற்றை அறிந்துகொள்வதற்கான அடிப்படை தரவுகள்

★ இலக்கியம் ★ தொல்லியல் ★ கல்வெட்டு ★ பண்பாடு

2. மயிலை சீனி. வேங்கடசாமிக்கு தமிழின்மீது ஆர்வம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன?

மயிலை சீனி. வேங்கடசாமிக்கு தமிழின்மீது ஆர்வம் ஏற்பட்டதற்கான காரணம்

★ மயிலையாரின் **தந்தை** ஒரு **சித்த மருத்துவர்**.

★ மயிலையாரின் **தமையன்** (அண்ணன்) **தமிழாசிரியர்**.

★ எனவே, மயிலையாருக்கு இளமையிலிருந்தே தமிழின்மீது பற்றும் ஆர்வமும் ஏற்பட்டது.

3. மயிலையார் தொடர்புகொண்டிருந்த அறிஞர் பெருமக்கள் யாவர்?

மயிலையார் தொடர்புகொண்டிருந்த அறிஞர் பெருமக்கள்

★ விபுலானந்த அடிகள் ★ கா. சுப்பிரமணியர் ★ திரு.வி.க ★ தெ.பொ.மீ ★ ச.த. சற்குணர்

4. மயிலையாரின் ஆய்வுக்கட்டுரைகள் வெளியான இதழ்கள் யாவை?

மயிலையாரின் ஆய்வுக்கட்டுரைகள் வெளியான இதழ்கள்

★ குடியரசு ★ ஊழியன் ★ செந்தமிழ்ச்செல்வி ★ ஆரம்பாசிரியன் ★ லக்ஷ்மி

5. மயிலையார் ஆய்வின் அணுகுமுறைகளாகக் கொண்டிருந்தவை யாவை?

மயிலையார் ஆய்வின் அணுகுமுறைகளாகக் கொண்டிருந்தவை

★ புதிய செய்தி தருதல் ★ புது விளக்கமளித்தல்

★ இருண்ட பக்கங்களுக்கு ஒளியூட்டுதல் ★ தவறுகளை மறுத்து உண்மையை எடுத்துரைத்தல்

6. 'கிறித்துவமும் தமிழும்' - நூலின் தோற்றம் குறித்தெழுதுக.

'கிறித்துவமும் தமிழும்' - நூலின் தோற்றம்

★ 1934ஆம் ஆண்டு தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், சிந்தாதிரிப்பேட்டையில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்தினார்.

★ மாநாட்டில், ச.த. சற்குணர், கிறித்துவமும் தமிழும் என்ற பொருள் குறித்து உரையாற்றினார்.

★ அவரின் உரையைக் கேட்ட ஆர்வத்தில், மயிலையார் 'கிறித்துவமும் தமிழும்' என்ற நூலை இயற்றினார்.

7. பல்வேறு சமயங்கள் தமிழுக்குத் தொண்டாற்றியதை மயிலையார் எவ்வாறு பதிவு செய்துள்ளார்?

பல்வேறு சமயங்களின் தமிழ்த்தொண்டு

★ பௌத்த, சமண சமயத்தினர்கள் தமிழுக்கு அளப்பறிய தொண்டாற்றியுள்ளனர்.

★ அவர்களின் தமிழ்த்தொண்டினைக் காழ்ப்புணர்ச்சி இன்றி, நடுநிலையோடு மயிலையார் வெளிப்படுத்தியுள்ளார்.

★ **'பௌத்தமும் தமிழும்'**, **'சமணமும் தமிழும்'** ஆகிய நூல்களின் பௌத்த, சமண சமயத்தினரின் தமிழ்த் தொண்டினை விளக்குகின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. மயிலையார் எந்த எந்த துறைகளில் கவனம் செலுத்தினார்?

மயிலையார் கவனம் செலுத்தியத் துறைகள்

★ சமயம் ★ மானுடவியல் ★ தமிழக வரலாறு

★ தொல்பொருள் ஆய்வு ★ கலை வரலாறு ★ மொழியாய்வு

9. மயிலையார் பன்முகத்தன்மை கொண்டவர் என்பதை நிறுவுக.

மயிலையாரின் பன்முகத்தன்மை

★ மயிலையார் **கல்வெட்டு ஆய்வில் பயிற்சி**ப் பெற்றிருந்தார்.

★ **தமிழ் எழுத்தியலின் வளர்ச்சி**யை நன்கு உணர்ந்தவர்.

★ **வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி** ஆகியவற்றில் **புலமை** பெற்றிருந்தார்.

★ மயிலையார் சாசனங்களை எளிதாக வாசித்தவர்.

★ வரலாறு, இலக்கியம், கலையியல், சமயம் எனப் **பல துறைகளிலும் நூல்களை** எழுதியுள்ளார்.

★ இவை, மயிலையாரின் பன்முகத்தன்மையை விளக்குகின்றன.

10. 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' நூல் எழுதுவதற்கான காரணமாக மயிலையார் கூறியது யாது?

'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' நூல் எழுதுவதற்கான காரணம்

★ தமிழ்ச்சமூகம் தனது பழைய அழகுக் கலைச்செல்வங்களை மறந்துள்ளது.

★ தன்பெருமை அறியாத சமூகமாக இருக்கின்றது.

★ சினிமாவையும் இசையையும் மட்டுமே கலை எனக் கருதுகின்றனர்.

★ இலக்கியக்கலை குறித்துக்கூட அதிகமாகப் பேசுவதில்லை.

★ ஏனைய அழகுக்கலைகளைப் பற்றி அறவே மறந்துவிட்டனர்.

★ எனவே, மயிலையார் 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூலை எழுதுவதாகக் கூறினார்.

11. கலைகள் குறித்து மயிலையார் இயற்றிய நூல்கள் யாவை?

கலைகள் குறித்து மயிலையார் இயற்றிய நூல்கள்

★ தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் ★ எழுவகைத் தாண்டவம்

★ நுண்கலைகள் ★ இசைவாணர் கதைகள்

12. மயிலையாரின் ஆய்வுப்பயணம் இலக்கியம் நோக்கிச் செல்ல காரணம் யாது?

மயிலையாரின் ஆய்வுப்பயணம் இலக்கியம் நோக்கிச் செல்ல காரணம்

★ மயிலையார், 1962ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்தினார்.

★ அவரின் சொற்பொழிவுமூலம் ஆய்வுப்பயணம் இலக்கியங்களை நோக்கி நகர்ந்தது.

13. மயிலையாரின் இலக்கிய ஆய்வுகள்மூலம் தோன்றிய நூல்கள் யாவை?

மயிலையாரின் இலக்கிய ஆய்வுகள்மூலம் தோன்றிய நூல்கள்

★ சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்

★ பழங்காலத் தமிழர் வணிகம் ★ களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

★ கொங்கு நாட்டு வரலாறு ★ தமிழ்நாட்டு வரலாறு - சங்ககாலம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. ஆய்வுலகில் மயிலையாரின் பங்கினைச் சுருக்கமாகக் கூறுக.

ஆய்வுலகில் மயிலையாரின் பங்கு

★ மயிலையார், தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்தவர்.

★ **'தமிழ்நாட்டு வரலாறு'** என்னும் நூல் மயிலையாரின் ஆய்வுக்குச் சிறந்த சான்றாகும்.

★ இலக்கியங்களை ஆதாரங்களாகக் கொண்டு, வரலாற்று நூலை இயற்றியுள்ளார்.

★ **துளு மொழி**யையும் **தமிழ்மொழி**யையும் **ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்**.

★ குறைந்த ஆதாரங்களைக் கொண்டு, ஒரு பெரிய வரலாற்றையே உருவாக்கியவர் மயிலையார்.

15. மயிலையாரின் ஆவணப் பதிவு நூல்கள் யாவை?

ஆவணப் பதிவு நூல்கள்

★ சாசனச் செய்யுள் மஞ்சரி ★ மறைந்துபோன தமிழ்நூல்கள்

★ பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

16. 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' - நூல் குறித்தெழுதுக.

மறைந்துபோன தமிழ்நூல்கள்

★ **'மறைந்துபோன தமிழ்நூல்கள்'** என்னும் நூல் மயிலையாரின் ஆவணப்பணிகளில் ஒன்றாகும்.

★ **தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் ஊக்கம்** அளிப்பதாக அமைந்துள்ளது.

★ தமிழ் இலக்கிய, இலக்கணப் பரப்பில் உள்ள செய்திகளைத் தொகுத்தார்.

★ **மறைந்துபோன 333 நூல்கள்** தொடர்பான குறிப்புகளை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

17. மயிலையார் அறிந்திருந்த மொழிகள் யாவை?

மயிலையார் அறிந்திருந்த மொழிகள்

★ மலையாளம் ★ கன்னடம் ★ சமஸ்கிருதம் ★ பாலி ★ ஆங்கிலம்

18. மயிலையார் குறித்து சுவாமி விபுலானந்த அடிகள் கூறியது யாது?

மயிலையார் குறித்து சுவாமி விபுலானந்த அடிகள்

★ "மயிலை சீனி. வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர்.

★ நல்லொழுக்கம் வாய்ந்தவர்.

★ நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னேபோல் போற்றுபவர்" என்று விபுலானந்த அடிகள் மயிலையாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

நெடுவினா

1. மயிலையார் மேற்கொண்ட வரலாற்று ஆய்வுகள் குறித்து விவரிக்க.

பல்லவர்களின் வரலாறு

★ மயிலையார், **கி.பி. 3**ஆம் நூற்றாண்டுமுதல் **கி.பி. 9**ஆம் நூற்றாண்டுவரை **ஆட்சி செய்த மன்னர்**களைப் பற்றி ஆய்வு செய்துள்ளார்.

★ **மகேந்திரவர்மன்,நரசிம்மவர்மன்** ஆகிய பல்லவ மன்னர்களைப் பற்றிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

★ **மூன்றாம் நந்திவர்மன்** என்னும் பல்லவ மன்னனைப் பற்றி எழுதியுள்ளார்.

★ இது, மூன்றாம் நந்திவர்மன் பற்றி **தமிழில் தோன்றிய முதல் நூலாகும்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

களப்பிரர்களின் வரலாறு

★ சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர்கள்.

★ களப்பிரர் காலம் தமிழகத்தின் இருண்ட காலம் என்று மரபுவழிப்பட்ட வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

★ மயிலையார், களப்பிரர்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

★ **'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'** என்னும் நூல்வழி, களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்தினார்.

பிற வரலாறுகள்

★ சங்க கால மூவேந்தர்கள் ★ கொங்குநாட்டு மன்னர்கள்

★ துளு நாட்டு மன்னர்கள் ★ இலங்கை குறித்த வரலாறு

ஆய்வின் சிறப்பு

★ மயிலையார், மன்னர்களைப் பற்றிய வரலாற்றை மட்டும் எழுதவில்லை.

★ **அரசியல், பண்பாடு மற்றும் கலை வரலாறு**களையும் பதிவு செய்துள்ளார்.

2. மயிலையார் இயற்றிய பல்துறை நூல்களைப் பட்டியலிடுக.

மயிலையார் இயற்றிய பல்துறை நூல்கள்

சமயம் சார்ந்த நூல்கள்

★ கிறித்துவமும் தமிழும் ★ பௌத்தமும் தமிழும் ★ சமணமும் தமிழும்

வரலாற்று நூல்கள்

★ மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகிய பல்லவ மன்னர்கள் குறித்த நூல்கள்

★ சங்க கால மூவேந்தர்கள் ★ கொங்குநாட்டு மன்னர்கள்

★ துளு நாட்டு மன்னர்கள் ★ இலங்கை வரலாறு ★ களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

கலைகள் குறித்த நூல்கள்

★ தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் ★ எழுவகைத் தாண்டவம்

★ நுண்கலைகள் ★ இசைவாணர் கதைகள்

இலக்கிய ஆய்வு நூல்கள்

★ சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்

★ பழங்காலத் தமிழர் வணிகம் ★ களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

★ கொங்கு நாட்டு வரலாறு ★ தமிழ்நாட்டு வரலாறு - சங்ககாலம்

ஆவணப் பதிவு நூல்கள்

★ சாசனச் செய்யுள் மஞ்சரி ★ மறைந்துபோன தமிழ்நூல்கள்

★ பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

சொல்லாய்வுக் கட்டுரைத் தொகுப்பு

★ அஞ்சிறைத் தும்பி

மொழிபெயர்ப்பு நூல்

★ மகேந்திரவர்மன் இயற்றிய மத்த விலாசம் என்ற நாடக நூலை ஆங்கிலம் வழியாகத் தமிழாக்கம் செய்துள்ளார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

தன்னேர் இலாத தமிழ்

குறுவினா

1. தமிழ்மொழியைப் புலவர்கள் போற்றும் விதத்தைக் கூறுக.

தமிழ்மொழியைப் புலவர்கள் போற்றும் விதம்

★ வானம் அளந்தது, அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது.

★ நிலத்தினும் பெரிது. ★ வானினும் உயர்ந்தது. ★ கடலினும் ஆழமானது தமிழாகும்.

2. கதிரவனின் தன்மையைத் தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல்வழி கூறுக.

கதிரவனின் தன்மை

★ மக்களால் போற்றப்படுவது. ★ உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றுவது.

★ உலகத்தின் புற இருளை அகற்றுவது. ★ இருளைப் போக்கும் ஒளிர்கின்ற கதிரவன்.

3. தமிழின் தன்மையைத் தண்டியலங்கார உரைமேற்கோள் பாடல்வழி கூறுக.

தமிழின் தன்மை

★ பொதிகை மலையில் தோன்றியது. ★ சான்றோரால் தொழப்படுவது.

★ மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவது. ★ தனக்கு நிகரில்லாதது தமிழ்.

4. பொருள் வேற்றுமை அணி என்றால் என்ன?

பொருள் வேற்றுமை அணி

★ இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறி,

★ பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

5. தண்டியலங்காரம் குறிப்பு வரைக.

தண்டியலங்காரம் - குறிப்பு

★ தண்டியலங்காரம், **அணி இலக்கணத்தை**க் கூறும் நூல்.

★ **காவியதர்சம்** என்னும் **வடமொழி** இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது.

★ தண்டியலங்காரத்தின் ஆசிரியர் **தண்டி**.

★ இலக்கண நூலார், உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்றது.

★ தண்டியலங்காரம் **மூன்று பிரிவு**களை உடையது. அவை

★ பொதுவணியியல் ★ பொருளணியியல் ★ சொல்லணியியல்

சிறுவினா

1. 'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்...' எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடல் பொருள் வேற்றுமை அணி பாடல் என்பதை நிறுவுக.

பொருள் வேற்றுமை அணி

★ இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறி,

★ பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது **பொருள் வேற்றுமை அணி** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

எடுத்துக்காட்டுப் பாடல்

தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

➔ **"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"

எடுத்துக்காட்டு விளக்கம் - கதிரவன் - தமிழ் இடையிலான ஒற்றுமைகள்

கதிரவன்	தமிழ்
★ மக்களால் போற்றப்படும்.	➔ சான்றோரால் தொழப்படும்.
★ உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றும்.	➔ பொதிகை மலையில் தோன்றியது.
★ உலகத்தின் புற இருளை அகற்றும்.	➔ மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றும்.

தமிழின் தனித்தன்மை

★ தமிழ்மொழி தன்னேர் இல்லாதது.

அணிப் பொருத்தம்

★ இப்பாடலில், கதிரவனுக்கும் தமிழுக்கும் இடையே உள்ள பொதுவான ஒற்றுமைகள் முதலில் கூறப்பட்டுள்ளது. ★ பின்னர், தமிழ் தன்னேரில்லாதது என்று வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.
★ எனவே, இது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

பிறகொரு நாள் கோடை

குறுவினா

1. புது அழகு புலப்படுகின்ற தருணங்களைக் கூறுக.

புது அழகு

★ மாறுபட்ட இரண்டு இணைகின்றபோது புது அழகு புலப்படுகின்றது.

புது அழகு புலப்படும் தருணங்கள்

★ பகலும் இரவும் சந்திக்கும் அந்தி (மாலை) பொழுது

★ கரையும் கடலும் சேரும் ஓரம்

★ மழையின் இடையில் வெயில் வரும் வேளை ஆகியவை புது அழகு புலப்படும் தருணங்கள் ஆகும்.

2. அய்யப்ப மாதவனின் வெளியீடுகள் யாவை?

கவிதைக் குறும்படம் - ★ இன்று

கவிதை நூல்கள் - ★ மழைக்குப் பிறகும் மழை ★ நானென்பது வேறொருவன் ★ நீர்வெளி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுநல்வாடை

குறுவினா

1. வாகைத்திணை என்றால் என்ன?

வாகைத்திணை

★ போரில் வெற்றி பெற்ற அரசனும் வீரர்களும் வெற்றியைக் கொண்டாடுவார்கள்.

★ **வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடுவார்கள்**.

★ வாகைப்பூவைச் சூடி கொண்டாடுவது **வாகைத்திணை** ஆகும்.

2. கூதிர்ப்பாசறை - துறை விளக்கம் தருக.

கூதிர்ப்பாசறை

★ **போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு கூதிர்ப்பாசறை** ஆகும்.

★ **கூதிர்ப்பாசறையின் நிலையைக் கூறும் துறை** கூதிர்ப்பாசறை துறை ஆகும்.

3. ஆநிரைகளை வேறு இடத்திற்கு மேய சென்றதற்கான காரணத்தைக் கூறுக.

ஆநிரைகளை வேறு இடத்திற்கு மேய சென்றதற்கான காரணம்

★ மேகம் புதிய மழையைப் பொழிந்தது. ★ தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது.

★ எனவே, ஆநிரைகள் வேறு மேடான நிலத்திற்கு மேய சென்றன.

4. ஆயர்கள் வருந்துவதற்கான காரணம் யாது?

ஆயர்கள் வருந்துவதற்கான காரணம்

★ தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது. ★ ஆநிரைகள் வேறு இடத்திற்கு மேயச் சென்றன.

★ ஆயர்கள் தாம் பழகிய நிலத்தை விட்டுப் பிரிந்தனர்.

★ தம் இடத்தைவிட்டுப் பிரிந்து செல்வதால், ஆயர்கள் வருத்தம் அடைந்தனர்.

5. குளிரின் மிகுதியால் கோவலர்கள் செய்த செயல் யாது?

குளிரின் மிகுதியால் கோவலர்கள் செய்த செயல்

★ வாடைக் காலத்தில் குளிர் மிகுதியாக இருந்தது.

★ கோவலர்கள் சுள்ளிகளைக் கொண்டு நெருப்பு மூட்டினர்.

★ அனலில் கைகளைக் காட்டித் தங்கள் கன்னங்களில் வைத்துக்கொண்டனர்.

6. குளிர்காலத்தில் ஆநிரைகள், விலங்குகள், பறவைகளின் நிலையை நெடுநல்வாடை வழி விளக்குக.

ஆநிரைகளின் நிலை

★ மேகம் மழையைப் பொழிந்தது. ★ தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது.

★ ஆநிரைகள் வேறு மேடான நிலத்திற்கு மேயச் சென்றன.

சிறப்புச் செய்தி

நெடுநல்வாடை

➔ **"ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பி"** - நக்கீரர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விலங்குகளின் நிலை

★ விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. ★ குரங்குகள் நடுங்கின.

★ பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. ★ பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.

சிறப்புச் செய்தி

நெடுநல்வாடை

➔ **"மாமேயல் மறப்ப மந்தி கூரப்**
பறவை படிவன வீழ கறவை
கன்றுகோள் ஒழியக் ---------" - நக்கீரர்

7. குளிர்காலத்தில் விலங்குகளின் நிலையைக் கூறுக.

குளிர்காலத்தில் விலங்குகளின் நிலை

★ விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. ★ குரங்குகள் நடுங்கின.

★ பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. ★ பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.

8. நெடுநல்வாடை குறிப்பு வரைக.

நெடுநல்வாடை குறிப்பு

★ பாடியவர் - **மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்**

★ பாடப்பட்டவர் - **பாண்டியன் நெடுஞ்செழியன்** ★ அடிகள் - **108**

★ பாவகை - **ஆசிரியப்பா** ★ தொகுப்பு - **பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று**

பெயர் காரணம்

★ தலைவனைப் பிரிந்த **தலைவிக்கு நெடு** (துன்பம் மிக்க) **வாடை**யாகவும்

★ போர்ப் பாசறையில் உள்ள **தலைவனுக்கு நல்**(இன்பம்மிக்க)**வாடை**யாகவும் இருப்பதால், **நெடுநல்வாடை** எனப் பெயர் பெற்றது.

9. வாடைக் காலம் தலைவிக்கும் தலைவனுக்கும் எவ்வாறு அமைந்தது?

தலைவிக்கு வாடைக் காலம் அமைந்த விதம்

★ தலைவி தலைவனைப் பிரிந்து இருக்கின்றாள்.

★ தலைவனின் பிரிவால் துன்பமிகுதியில் இருக்கின்றாள்.

★ எனவே, **தலைவிக்கு** வாடைக்காலம் **நெடு** (துன்பம் நிறைந்த) **வாடை**யாக அமைந்தது.

தலைவனுக்கு வாடைக் காலம் அமைந்த விதம்

★ தலைவன் போர்ப் பாசறையில் இருக்கின்றான்.

★ தலைவன் வெற்றி பெறபப் போகும் மகிழ்ச்சியில் இருக்கின்றான்.

★ எனவே, **தலைவனுக்கு** வாடைக் காலம் **நல்** (இன்பம் நிறைந்த) **வாடை**யாக அமைந்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விருந்தினர் இல்லம்

குறுவினா

1. எதிர்பாராத விருந்தாளிகள் என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுபவை யாவை?

எதிர்பாராத விருந்தாளிகள்

★ **ஆனந்தம்** ★ **மனச்சோர்வு** ★ **அற்பத்தனம்** ★ **விழிப்புணர்வு**

★ ஆகியவற்றை எதிர்பாராத விருந்தாளிகள் என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுகின்றார்.

2. எதிர்பாராத விருந்தாளிகளின் இயல்புகளையும் அவற்றை எதிர்க்கொள்ளும் விதத்தையும் கூறுக.

எதிர்பாராத விருந்தாளிகளின் இயல்புகள்

★ துக்கங்கள் வீட்டை வெறுமைப்படுத்தும். ★ புதிய மகிழ்ச்சிக்காக நம்மைத் தயார்படுத்தும்.

எதிர்க்கொள்ளும் விதம்

★ எல்லா விருந்தாளிகளையும் வரவேற்க வேண்டும்.

★ ஒவ்வொரு விருந்தினரையும் கௌரவமாக நடத்த வேண்டும்.

3. வீட்டின் வாயிலுக்குச் சென்று வரவேற்கப்பட வேண்டியவை யாவை?

வீட்டின் வாயிலுக்குச் சென்று வரவேற்கப்பட வேண்டியவை

★ வக்கிரம் ★ அவமானம் ★ வஞ்சனை

★ ஆகியவற்றை வீட்டின் வாயிலுக்குக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

4. ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளின் மொழிபெயர்ப்பு குறித்தெழுதுக.

ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளின் மொழிபெயர்ப்பு

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளை **ஆங்கிலத்தில்** மொழிபெயர்த்தவர் **கோல்மன் பார்க்ஸ்**

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளை **தமிழில்** மொழிபெயர்த்தவர் **என். சத்தியமூர்த்தி**

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளின் **தமிழாக்கத்தின் தலைப்பு** **'தாகங்கொண்ட மீனொன்று'**.

5. ஜலாலுத்தீன் ரூமி குறிப்பு வரைக.

ஜலாலுத்தீன் ரூமி குறிப்பு

★ ஜலாலுத்தீன் ரூமி **ஆப்கானிஸ்தான்** நாட்டில் பிறந்தவர். ★ **கி.பி. 1207** ஆம் ஆண்டு பிறந்தார்.

★ ஜலாலுத்தீன் ரூமி, பாரசீகத்தின் மிகச் சிறந்த கவிஞர்களுள் ஒருவர்.

★ **மஸ்னவி**, **திவான்-ஈ-ஷம்ஸ்-ஈ-தப்ரீஸி** ஆகியவை ஜலாலுத்தீன் ரூமி இயற்றிய நூல்களாகும்.

6. மஸ்னவி குறித்தெழுதுக.

மஸ்னவி

★ **ஜலாலுத்தீன் ரூமி** இயற்றிய நூல் மஸ்னவி ஆகும்.

★ மஸ்னவி **சூஃபித்துவங்களை**க் கொண்ட நூலாகும். ★ மஸ்னவி **25,600** பாடல்களைக் கொண்டது.

★ மஸ்னவி **ஆன்மீகக் கருத்துகள்** நிரம்பிய இசைக்கவிதைகளின் தொகுப்பு.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கம்பராமாயணம்

குறுவினா

1. குகன் குறித்து நீவிர் அறிந்தனவற்றைக் கூறுக.

குகன் குறித்து நான் அறிந்தவை

★ குகன் **வேடுவர் குல தலைவன்**. ★ **கடுமையான தோற்றம்** கொண்டவன்.

★ **மென்மையான உள்ளத்தை** உடையவன். ★ இராமன், கங்கையைக் கடக்க உதவியவன்.

★ இராமனால் தன் உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன்.

2. "பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம்" - விளக்குக.

பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம்

★ இவ்வரிகள் வேடுவர் தலைவன் குகனைக் குறிப்பிடுகின்றன.

★ குகன் கடுமையான தோற்றத்தையும் ★ மென்மையான உள்ளத்தையும் உடையவன்.

★ எனவே, **தோற்றத்தை**க் குறிக்க **பாறை**யும்

★ **உள்ளத்தை**க் குறிக்க **பஞ்சு**ம் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

3. இராமன் குகனிடம் கூறியது யாது?

இராமன் குகனிடம் கூறியது

★ "என் உயிர் போன்றவனே! ★ நீ என் தம்பி. ★ இலக்குவன் உன் தம்பி.

★ அழகிய நெற்றியை உடைய சீதை உன் அண்ணி. ★ குளிர் கடலும் நிலமும் உன்னுடையது.

★ நான் உன்னுடைய ஏவலுக்கேற்பப் பணிபுரிபவன்" என்றான் இராமன்.

4. "துன்பு உளதுஎனின் அன்றோ சுகம் உளது" என வினவியவன் யார்? ஏன் அவ்வாறு வினவினான்?

வினவியவன்

★ "துன்பு உளதுஎனின் அன்றோ சுகம் உளது" என்று வினவியவன் **இராமன்**.

காரணம்

★ இராமன் காட்டில் வாழ்வதற்குச் சென்றான். ★ அதைக் கேட்ட குகன் வருந்தினான்.

★ இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே என்று வருந்தினான்.

★ குகனின் வருத்தத்தைப் போக்குவதற்காக இராமன் இவ்வாறு வினவினான்.

5. சடாயு குறித்து நீவிர் அறிந்தனவற்றைக் கூறுக.

சடாயு குறித்து நான் அறிந்தவை

★ **கழுகு வேந்தன்** சடாயு. ★ இராமனின் தந்தையாகிய **தசரதனின் நண்பன்**, சடாயு.

★ இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் சென்றான்.

★ **சடாயு, இராவணனைத் தடுத்துச் சண்டையிட்டு, காயப்படுகிறது**.

★ இராமனிடம் நடந்தவற்றைக் கூறிய பின்னர், இறந்துபோகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. சவரி குறித்து எழுதுக.

சவரி

★ **இராமனிடம்** மிகுதியான **அன்பும் பக்தியும்** கொண்டவள், சவரி.

★ இராமனைச் சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளச் செய்தவள்.

★ **காப்பியத்தின் போக்கில் ஒரு திருப்பத்தை உருவாக்குபவள்**.

★ இராமனால், தாயாகக் கருதப்பட்டவள், சவரி.

7. இராமன் சவரியிடம் வினவியது யாது?

இராமன் சவரியிடம் வினவியது

★ சவரியைக் கண்ட இராமன் இனிதாகப் பேசினான்.

★ **"இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?"** என்று வினவினான்.

8. இராமனைக் கண்டதால் ஏற்பட்டதாக சவரி கூறியன யாவை?

இராமனைக் கண்டதால் ஏற்பட்டதாக சவரி கூறியன

★ "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது.

★ அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது

★ என் பிறவி ஒழிந்தது" என்று கூறினாள்.

9. இராமனும் சுக்ரீவனும் இணைந்திருந்த காட்சியைக் கூறுக.

இராமனும் சுக்ரீவனும் இணைந்திருந்த காட்சி

★ ஆசையை அறவே அழித்தவன் இராமன் ★ வானரங்களின் தலைவன் சுக்ரீவன்.

★ அமாவாசைக் காலத்தில் **சந்திரனும் சூரியனும்** ஒன்றாக இணைந்திருக்கும்.

★ அதுபோல, **இராமனும் சுக்ரீவனும்** இணைத்திருந்தனர்.

10. இராமன் சுக்ரீவனிடம் காட்டிய அன்பை விளக்குக.

இராமன் சுக்ரீவனிடம் காட்டிய அன்பு

★ இராமன் சுக்ரீவனிடம் அளவுக்கடந்த அன்பு காட்டினான்.

★ **சுக்ரீவனின் பகைவர்**களைத் **தன் பகைவர்**களாகக் கருதினான்.

★ தீயவராக இருந்தாலும், **சுக்ரீவனின் நண்பர்**களைத் **தன் நண்பர்**களாக ஏற்றுக்கொண்டான்.

★ **சுக்ரீவனின் உறவினர்**களைத் **தன் உறவினர்**களாக ஏற்றுக்கொண்டான்.

★ இதன்மூலம், இராமன் சுக்ரீவனிடம் காட்டிய அன்பு விளங்குகின்றது.

11. வீடணன் இராமனிடம் வந்து அடைக்கலம் வேண்டிய நிலையை விளக்குக.

வீடணன் இராமனிடம் அடைக்கலம் வேண்டிய நிலை

★ இலங்கை வேந்தன் **இராவணனின் சகோதரன்**, வீடணன்.

★ இராவணனிடம், **சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என்று கூறுகின்றான்**.

★ இராவணன், வீடணன் கூறியதைக் கேட்க மறுக்கின்றான்.

★ எனவே, வீடணன் இலங்கையை விட்டுவந்து, இராமனிடம் அடைக்கலம் வேண்டினான்.

12. "நின்னொடும் எழுவர் ஆனேம்" விளக்குக.

"நின்னொடும் எழுவர் ஆனேம்" விளக்கம்

★ இராமனின் **உடன்பிறந்தவர்கள் நால்வர்**. ★ வேடுவர் தலைவன் **குகனுடன்** சேர்ந்து **ஐவர்** ஆனார்கள்.

★ வானரத் தலைவன் **சுக்ரீவனுடன் அறுவர்** ஆனார்கள்.

★ இலங்கை வேந்தன் இராவணனின், சகோதரன் **வீடணனுடன் எழுவர்** ஆனார்கள்.

திருக்குறள்

குறுவினா

1. வாழ்க்கையின் பண்பும் பயனும் எது?

வாழ்க்கையின் பண்பும் பயனும்

★ **அன்பு**டன் வாழ்வது, வாழ்க்கையின் **பண்பு** ஆகும்.

★ **அறத்தோடு** வாழ்வது, வாழ்க்கையின் **பயன்** ஆகும்.

2. தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுபவர் யார்?

தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுபவர்

★ உலகத்தில் வாழவேண்டிய **அறநெறியில் நின்று வாழ்கின்றவர்**.

★ வானுலகத்தில் உள்ள **தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவர்**.

3. வையகமும் வானகமும் ஆற்றலரிது - யாருக்கு?

வையகமும் வானகமும் ஆற்றலரிது

★ தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும், தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் ஈடாகா.

4. கடலைவிடப் பெரியது எது?

கடலைவிடப் பெரியது

★ எந்தவிதப் பயனும் எதிர்பாராமல் செய்தவரின் உதவியை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியது.

5. உய்வதற்கு வழி இல்லாதவர் யார்?

உய்வதற்கு வழி இல்லாதவர்

★ எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழியிருக்கும்.

★ **ஒருவர் செய்த உதவியை மறந்துவிட்டவர்க்கு** உய்வதற்கு வழியே இல்லை.

6. பழியான செயலைச் செய்யாதவர் யார்?

பழியான செயலைச் செய்யாதவர்

★ **நடுவுநிலைமையை விட்டுவிட நாணம் கொள்ளும் பண்பாளர்கள்**.

★ பெரும்பயன் கிடைத்தாலும், பிறர் பொருளைக் கவரும் பழியான செயலைச் செய்யமாட்டார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. பிறர் பொருளை விரும்பாதவர் யார்?

பிறர் பொருளை விரும்பாதவர்

★ **ஐம்புலன்களையும் வென்ற தெளிவுடையவர்**,

★ வறுமை காரணமாக பிறர் பொருளை விரும்பமாட்டார்.

8. சினத்தைக் காக்க வேண்டிய இடமாக வள்ளுவர் கூறுவது யாது?

சினத்தைக் காக்க வேண்டிய இடம்

★ தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில் சினத்தைக் காக்க வேண்டும்.

★ செல்லுபடியாகாத வலியவரிடம் சினத்தைக் காத்தாலும், காக்காவிட்டாலும் பயனில்லை என்கிறார் வள்ளுவர்.

9. சினத்தைக் காட்டிலும் கொடிய பகை வேறு இல்லை என்று வள்ளுவர் கூறுவது ஏன்?

சினத்தைக் காட்டிலும் கொடிய பகை வேறு இல்லை

★ சினம் ஒருவரின் **முகமலர்ச்சியை**யும் **அகமகிழ்ச்சியை**யும் **கொன்றுவிடும்**.

★ எனவே, சினத்தைக் காட்டிலும் கொடிய பகை வேறு இல்லை என்கிறார், வள்ளுவர்.

10. 'ஏமப் புணையைச் சுடும்' - எது?

'ஏமப் புணையைச் சுடும்'

★ **சினம்**, தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் **நெருப்பு**.

★ அது ஒருவரின் **சுற்றம்** என்னும் **பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்**.

11. 'உண்மை அறிவே மிகும்' - யாருக்கு?

'உண்மை அறிவே மிகும்'

★ ஒருவர் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றிருந்தாலும்,

★ அவருக்கு இயல்பாக உள்ளதாகும் அறிவே மேலோங்கித் தோன்றும்.

12.உலக இயல்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?

உலக இயல்பு

★ உலக இயல்பு இரு வேறு வகைப்படும். அவை

★ செல்வம் உடையவர் அறிவுடையவராக இருக்க மாட்டார்.

★ அறிவுடையவர் செல்வம் உடையவராக இருக்க மாட்டார்.

இடையீடு

குறுவினா

1. நாம் எதிர்பார்ப்பது எல்லாம் அப்படியே நடப்பதில்லை என்பதை இடையீடு கவிதை எவ்வாறு குறிப்பிடுகின்றது?

இடையீடு கவிதை குறிப்பிடுவது

★ ஒவ்வொருவரும் ஏதோ ஒருவித எதிர்பார்ப்புடன் செயல்படுகிறோம்.

★ ஆனால், நாம் எதிர்பார்ப்பது எல்லாம் அப்படியே நடப்பதில்லை.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்

★ குதிரை வரைய நினைத்தால், குதிரையே வராது.

★ சில நேரங்களில் கழுதையும் வரும். இரண்டும் கலந்தும் வரும்.

★ எலியைப் பிடிக்க பொறி வைத்தால், விரல்களும் மாட்டிக்கொள்வதுண்டு.

எதிர்பார்ப்பும் ஏற்றமும்

★ சில நேரங்களில் நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் சிறந்ததாக அமையும்.

★ தாகத்தில் நீர் தேடி அலைபவர்களுக்கு இளநீரும் கிடைக்கும்.

புறநானூறு

குறுவினா

1. பாடாண் திணை விளக்குக.

பாடாண் திணை

★ ஒருவருடைய **புகழ், வலிமை, கொடை, அருள்** போன்ற நல்லியல்புகளைச் **சிறப்பித்துக் கூறுவது** பாடாண் திணை ஆகும்.

2. பரிசில் துறை விளக்குக.

பரிசில் துறை

★ இரவலர்கள், வள்ளல்களைக் கண்டு பரிசு பெற செல்லுவர்

★ அவ்வாறு, செல்லும்போது **பரிசு வேண்டி வாயிலில் நிற்பது** **'பரிசில் துறை'** ஆகும்.

3. புலவர்களின் வலிமையாக ஔவையார் கூறுவது யாது?

புலவர்களின் வலிமையாக ஔவையார் கூறுவது

★ புலவர்கள் வள்ளல்களை நோக்கிச் செல்லுவர்.

★ **வள்ளல்களிடம் அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் கூறி எண்ணியதை முடிக்கும் வலிமையுடையவர்கள்**.

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்**
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து" - ஔவையார்

4. புலவர்களின் வருத்தமான நிலை என்று ஔவையார் எதனைக் குறிப்பிடுகின்றார்?

புலவர்களின் வருத்தமான நிலை என்று ஔவையார் குறிப்பிடுவது

★ புலவர்கள் வள்ளல்களிடம், அவர்களைப் புகழ்ந்து கவிதை இயற்றுவார்கள்.

★ **வள்ளல்கள் கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே** என நினைந்து புலவர்கள் வருந்துவார்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்**
பரிசிலர்க்கு அடையா ....." - ஔவையார்

5. புலவர்களின் வலிமையையும் வருத்தத்தையும் கூறுக.

புலவர்களின் வலிமை

★ புலவர்கள் வள்ளல்களை நோக்கிச் செல்லுவர்.

★ வள்ளல்களிடம்அறிவார்ந்தசொற்களைத்துணிச்சலுடன்கூறிஎண்ணியதைமுடிக்கும்வலிமையுடையவர்கள்.

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்**
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து" - ஔவையார்

புலவர்களின் வருத்தம்

★ புலவர்கள் வள்ளல்களிடம், அவர்களைப் புகழ்ந்து கவிதை இயற்றுவார்கள்.

★ வள்ளல்கள் கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைந்து வருந்துவார்கள்.

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்**
பரிசிலர்க்கு அடையா ....." - ஔவையார்

6. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" விளக்குக.

"காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - விளக்கம்

★ ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சியைக் கண்டு, பாடி பரிசில் பெற செல்கின்றார்.

★ **அதியமான்** அரசு வேலைகளின் காரணமாக **பரிசு தராமல் தாமதிக்கின்றான்**.

★ இதனை அறியாமல் **ஔவையார் வருத்தம்** கொள்கிறார்.

★ வருத்த மிகுதியால், அவ்விடத்தைவிட்டுச் **செல்ல முடிவு** செய்கிறாள்.

★ எனவே, அரண்மனை வாயில் காப்பவனிடம் தன் யாழினையும் கலப்பையையும் எடுத்துக் கொண்டு புறப்படுவதாகக் கூறுகிறாள்.

தெய்வமணிமாலை

குறுவினா

1. சென்னையில் தோன்றிய சீர்திருத்தச் சிந்தனைகள் யாவை?

சென்னையில் தோன்றிய சீர்திருத்தச் சிந்தனைகள்

★ **ஆன்மநேய ஒருமைப்பாடு** ★ **சமய ஒருமைப்பாடு**

★ **ஒளி வழிபாடு** போன்ற சீர்திருத்தச் சிந்தனைகள் சென்னையில் தோன்றியுள்ளன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. இராமலிங்க அடிகளார் கந்தக்கோட்டத்து இறைவனிடம் வேண்டுவனவற்றைப் பட்டியலிடுக.

இராமலிங்க அடிகளார் கந்தக்கோட்டத்து இறைவனிடம் வேண்டுவன

★ ஒருமனத்துடன் இறைவனின் திருவடிகளை நினைக்கின்றவர்களின் **உத்தமர் உறவு** வேண்டும்.

★ உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் **வஞ்சகர்களின் உறவு பற்றாமை** வேண்டும்.

★ **முருகனின் பெருமைகளையே பேச** வேண்டும். ★ **பொய் பேசாமலிருக்க** வேண்டும்.

★ சிறந்த வாழ்வியல் நெறிகளைப் பின்பற்ற வேண்டும்.

★ **மதமான பேய் அணுகாதிருக்க** வேண்டும். ★ **பெண்ணாசையை மனம் மறக்க** வேண்டும்.

★ என்றும் **முருகனை மறவாமல் இருக்க** வேண்டும்.

★ **அறிவும் இறைவனின் அருளும் நோயற்ற வாழ்வும்** உடையவனாக இருக்க வேண்டும்.

★ இவ்வாறு, இராமலிங்க அடிகளார் முருகனிடம் வேண்டுகின்றார்.

தேவாரம்

குறுவினா

1. மயிலாப்பூரின் சிறப்புகளைக் கூறும் வரிகளை எழுதுக.

மயிலாப்பூரின் சிறப்புகளைக் கூறும் வரிகள்

★ மடலார்ந்த தெங்கின் மயிலை ★ இருளகற்றும் சோதித் தென்மயிலை

★ கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் ★ கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்

★ கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் ★ மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்

★ ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை

2. மயிலைப்பதிகத்தில்காணப்பெறும்விழாக்களையும்அவைநடைபெறும்மாதங்களையும்பட்டியலிடுக.

மாதங்கள்	விழாக்கள்
➔ ஐப்பசி	★ ஓண விழா
➔ கார்த்திகை	★ விளக்குத் திருவிழா
➔ மார்கழி	★ திருவாதிரை விழா
➔ தை	★ தைப்பூச விழா
➔ மாசி	★ கடலாட்டு விழா
➔ பங்குனி	★ பங்குனி உத்திர விழா

அகநானூறு

குறுவினா

1. "பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்" எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலில் உள்ள உள்ளுறை பொருளைக் கூறுக.

அகநானூற்றுப் பாடலில் உள்ள உள்ளுறை பொருள்

★ **தலைவியைக் கண்டதனால் தனக்கு ஏற்பட்ட காதல் துன்பத்தைப் போக்குவதற்கு உரியவன் தன் நண்பன் என்று தலைவன் கூறுவது** அகநானூற்றுப் பாடலில் உள்ள **உள்ளுறை** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. "மாமுது அள்ளல் அழுந்திய சாகாட்டு

எவ்வந் தீர வாங்குந் தந்தை" - இவ்வடிகளில் உள்ள உள்ளுறை பொருளை விளக்குக.

பொருள்

★ உப்பு வணிகர் உப்பு மூட்டைகளை வண்டியில் ஏற்றிச் செல்கின்றார்.

★ உப்பு வண்டி சேற்றில் சிக்கிக் கொள்கிறது.

★ வண்டியைச் சேற்றிலிருந்து எடுக்க எருது துன்பத்துடன் முயற்சி செய்கிறது.

★ எருது வண்டியை எடுப்பதற்கு உப்பு வணிகர் உதவி செய்தார்.

உள்ளுறை

★ வண்டியை இழுக்கும் **எருதின் துன்பத்தை உப்பு வணிகர் போக்கினார்**.

★ அதுபோல, தலைவியைக் கண்டதால் ஏற்பட்ட காதல் துன்பத்தைப் போக்க உதவ வேண்டும் என்று தலைவன் நண்பனிடம் கூறுகின்றான்.

★ இதில், **எருதைத் தலைவனுக்கும்**, ★ **தந்தையைப் பாங்கனுக்கும்**,

★ **எருதுவருந்தும்நிலை**யை, **தலைவனின்காதல்வருத்தத்திற்கும்** உள்ளுறையாகக் கூறப்பட்டுள்ளது.

3. பரதவர்களின் செயல்களாக அகநானூறு கூறுவன யாவை?

பரதவர்களின் செயல்கள்

★ பரதவர், பெரிய கடல் பரப்பில் **மீன் வேட்டையாடுவர்**.

★ நிலப்பரப்பில் உப்பளங்களில் உழவு செய்யாமலே **உப்பு விளைவிப்பர்**.

சிறப்புச் செய்தி

அகநானூறு

➔ **"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**

இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த

வெண்கல் உப்பின் ....." - அம்மூவனார்

4. உப்பு வணிகரின் செயல்களை அகநானூறுவழி நின்று விளக்குக.

உப்பு வணிகரின் செயல்கள்

★ உப்பு வணிகர் வெண்ணிற **கல்உப்பை**, தங்களது **வண்டியில் ஏற்றிச் செல்வர்**.

★ வண்டியில் பூட்டிய எருதுகளை விரட்டக் கையில் **தாழ்கோல் வைத்திருப்பர்**.

★ குன்றைக் கடந்து **தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்**.

சிறப்புச் செய்தி

அகநானூறு

➔ **"வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி**

என்றூழ் விடர குன்றம் போகும்" - அம்மூவனார்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

அகநானூற்றில் உள்ள பிரிவுகள்

★ அகநானூறு **மூன்று பிரிவு**களை உடையது. அவை -

★ **களிற்றியானை நிரை** (120 பாடல்கள்) ★ **மணிமிடை பவளம்** (180 பாடல்கள்)

★ **நித்திலக்கோவை** (100 பாடல்கள்)

6. பழங்காலத்தில் உப்பின் பயன்பாடு குறித்து எழுதுக.

பழங்காலத்தில் உப்பின் பயன்பாடு

★ பழங்காலத்தில் **சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக** உப்பு இருந்தது.

★ பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெறப்பட்டது.

7. உப்பங்கழி, உப்பளம் - குறிப்பு வரைக.

உப்பங்கழி

★ கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதி **உப்பங்கழி** ஆகும்.

உப்பளம்

★ கடல்நீரைப்பாத்திகளில்தேக்கி, உப்புப்படிவதற்குஏற்றவகையில்அமைக்கப்பட்ட இடம்**உப்பளம்** ஆகும்.

சிலப்பதிகாரம் - புகார்க் காண்டம் அரங்கேற்று காதை

குறுவினா

1. மாதவியின் தோற்ற அழகினைப் பற்றி எழுதுக.

மாதவியின் தோற்ற அழகு

★ மாதவி, அழகிய தோள்களை உடையவள்.

★ தேனும் தாதுவும் நிறைந்த பூக்களை அணிந்தவள். ★ சுருண்ட கூந்தலை உடையவள்.

★ ஆடல், பாடல், அழகு மூன்றிலும் குறைவுபடாமல் இருந்தவள்.

2. மாதவி ஆடற்கலையைப் பயின்ற நிகழ்வினைக் கூறுக.

மாதவி ஆடற்கலை பயின்ற நிகழ்வு

★ ஆடல், பாடல், அழகு மூன்றிலும் குறைவுபடாமல் இருந்தவள் மாதவி.

★ ஐந்தாண்டில் (ஐந்து வயதில்) ஆடல் கற்பதற்கான சடங்குகளைச் செய்தாள்.

★ **ஏழு ஆண்டுகள்** ஆடல் கலையைப் பயின்றாள்.

★ மாதவி, தன் பன்னிரண்டாவது வயதில் ஆடலை அரங்கேற்றம் செய்தாள்.

★ வீரக் கழல் பூண்ட சோழ மன்னனது அரசவையில் அரங்கேற்றம் நடைபெற்றது.

3. நாட்டிய அரங்கேற்றத்திற்கு மாதவியுடன் வந்தவர்கள் யாவர்?

அரங்கேற்றத்திற்கு மாதவியுடன் வந்தவர்கள்

★ ஆடல் ஆசான் ★ இசை ஆசான் ★ கவிஞன்

★ தண்ணுமை ஆசான் ★ குழல் ஆசான் ★ யாழ் ஆசான்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. யாருக்குத் தலைக்கோல் அளித்துச் சிறப்பிப்பர்?

தலைக்கோல் பெறுபவர்

★ அரங்கேற்றத்தை வெற்றிகரமாக முடிக்கும் ஆடல்மகளுக்குத் தலைக்கோல் அளித்துச் சிறப்பிப்பர்.

5. தலைக்கோலின் தோற்றம் குறித்து விளக்குக.

தலைக்கோலின் தோற்றம்

★ போரில் தோற்றுப் புறங்காட்டிய மன்னனிடம் இருந்து வெண்கொற்றக் குடையைக் கைப்பற்றுவர்.

★ அழகிய வெண்கொற்றக் குடையின் காம்பில் செய்யப்படுவது **'தலைக்கோல்'** ஆகும்.

★ காம்பின் கணுக்கள் முழுவதும் **'நவமணிகள்'** இழைக்கப்படும்.

★ கணுக்களுக்கு இடைப்பட்ட பகுதியில் **'சாம்பூநதம்'** எனும் பொன் தகடு சுற்றிக்கட்டப்பட்டு தலைக்கோல் உருவாக்கப்படும்.

6. மாதவி நாட்டிய அரங்கினுள் நுழைந்த நிகழ்வினைக் கூறுக.

மாதவி நாட்டிய அரங்கினுள் நுழைந்த நிகழ்வு

★ நாட்டிய மேடையில், இசைக் கருவிகளை வாசிப்பவர்கள் அவரவர்க்குரிய இடத்தில் நின்றனர்.

★ மாதவி அரங்கில் **வலக்காலை முன்வைத்து** ஏறினாள்.

★ பொருமுக எழினிக்கு நிலையிடனான வலத்தூண் அருகே சென்று நின்றாள்.

★ மாதவியுடன் ஆடும் பெண்கள், இடப்பக்கத்தூணின் அருகே சென்று நின்றனர்.

7. மாதவிப் பாடிய மங்கலப் பாடல்கள் யாவை? அவை பாடப்படுவதற்கான காரணம் என்ன?

மாதவி பாடிய மங்கலப் பாடல்

★ **ஓரொற்றுவாரம்** ★ **ஈரொற்றுவாரம்**

பாடப்படுவதற்கான காரணம்

★ **நன்மை பெருக**வும் **தீமை நீங்க**வும் வேண்டி மங்கலப் பாடல்கள் பாடப்பட்டன.

8. நாட்டிய அரங்கில் இசைக்கருவிகள் ஒலித்த முறையினைக் கூறுக.

இசைக்கருவிகள் ஒலித்த முறை

★ குழலின் வழியே யாழிசை நின்றது. ★ யாழிசைக்கு ஏற்ப மத்தளம் ஒலித்தது.

★ மத்தளத்தோடு இணைந்து முழவு ஒலித்தது. ★ முழவுடன் இடக்கை வாத்தியம் கூடிநின்று ஒலித்தது.

9. மாதவியின் நாட்டியத்தைப் போற்றி மன்னன் அளித்த பரிசு யாது?

மன்னன் மாதவிக்கு அளித்த பரிசு

★ மாதவி அனைவரும் வியக்கும் வகையில் நாட்டியம் ஆடினாள்.

★ மாதவியின் நாட்டியத்தைப் பாராட்டி, மன்னன் **'தலைக்கோல்'** பட்டம் வழங்கினான்.

★ மன்னன் மாதவிக்கு, **'ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் மாலை'** பரிசாக வழங்கினான்.

10. பல்வேறு வகையான யாழின் வகைகளைக் கூறுக.

யாழின் வகைகள்

★ **21** நரம்புகள் - **பேரியாழ்** ★ **17** நரம்புகள் - **மகரயாழ்**

★ **16** நரம்புகள் - **சகோடயாழ்** ★ **7** நரம்புகள் - **செங்கோட்டுயாழ்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறுவினா

1. தலைக்கோலை ஊர்வலமாகக் கொண்டு வந்த நிகழ்வினைக் கூறுக.

தலைக்கோலை ஊர்வலமாகக் கொண்டு வந்த நிகழ்வு

★ நதிகளிலிருந்து, கொண்டு வரப்பட்ட நன்னீரால் **தலைக்கோலை** நீராட்டினர்.

★ மாலைகளை அணிவித்து அலங்கரித்தனர்.

★ பட்டத்து யானை பொன்னாலான பூணினையும் முகபடாத்தையும் அணிந்திருந்தது.

★ பட்டத்து யானையின் கையில் தலைக்கோலைத் தந்தனர்.

★ முரசுகளும் பல்வேறு வகையான வாத்தியங்களும் ஒலித்தன.

★ அரசரும் அவரின் ஐம்பெருங்குழுவினரும் சூழ்ந்து வந்தனர்.

★ பட்டத்து யானை தேரை வலம் வந்தது.

★ தேரின்மேல் உள்ள கவிஞனிடம் தலைக்கோலைக் கொடுத்தது.

★ பின்பு அனைவரும் ஊர்வலமாக அரங்கிற்கு வந்தனர்.

★ கவிஞன் தலைக்கோலை ஆடலரங்கில் வைத்தான்.

2. சிலப்பதிகாரம் குறித்து நீவிர் அறிந்தனவற்றைக் கூறுக.

சிலப்பதிகாரம் குறித்து நான் அறிந்தன

★ சிலப்பதிகாரம், **தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு** முதலியவற்றை உள்ளடக்கிய கருவூலம்.

★ அரசர் அல்லாதவரைக் காப்பியத்தின் தலைமக்களாக கொண்டது.

★ சிலப்பதிகாரம் மூன்று வேந்தர்களைப் பற்றி கூறுகின்றது.

★ முதன்முதலாக பெண்ணை முதன்மை காப்பியமாகக் கொண்டு, அரசனை எதிர்த்து வாதாடிய காப்பியம்.

★ **இயல், இசை, நாடகம்** ஆகிய மூன்று கூறுகளைப் பெற்றது.

★ செய்யுளாகவும்உரைநடையாகவும்பாடலாகவும்பாடப்பட்டதால்'உரைநடையிட்டப்பாட்டுடைச்செய்யுள்'

உட்பிரிவுகள்

★ சிலப்பதிகாரம் **மூன்று காண்டங்களை** உடையது.

★ **புகார்க்காண்டம்** ★ **மதுரைக்காண்டம்** ★ **வஞ்சிக்காண்டம்**

★ சிலப்பதிகாரம் முப்பது காதைகளை உடையது.

வேறு பெயர்கள்

★ சிலப்பதிகாரம் அதன் சிறப்புக் கருதி பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. அவை -

★ குடிமக்கள் காப்பியம் ★ மூவேந்தர் காப்பியம் ★ புரட்சிக் காப்பியம்

★ முத்தமிழ்க் காப்பியம் ★ பொதுமைக் காப்பியம் ★ ஒற்றுமைக் காப்பியம்

★ வரலாற்றுக் காப்பியம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெடுவினா

1. நாட்டிய அரங்கின் அமைப்பினை விவரித்தெழுதுக.

நாட்டிய அரங்கின் அமைப்பு

★ சிற்ப நூலாசிரியர் சொல்லப்பட்ட இயல்புகள் மாறுபடாத நன்னிலத்தை ஆடல் அரங்கிற்குத் தேர்ந்தெடுத்தனர்.

★ மூங்கிலைக் கொண்டு அரங்கம் அமைத்தனர்.

★ **கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவில் மூங்கிலை** வெட்டினர்.

★ ஏழுகோல் அகலமும் எட்டுகோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக அரங்கத்தை அமைத்தனர்.

★ உத்திரப்பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடையே, **நான்குகோல் இடைவெளி** இருந்தது.

★ மேல்நிலை **மாடத்தில் ஐம்பூதங்களை** புகழும்படி சித்தரித்து வைத்திருந்தனர்.

திரையின் வகைகள்

★ மேடையின் ஒரு புறத்திலிருந்து மறுபுறத்திற்குச் செல்லுமாறு அமைக்கப்பட்ட **ஒரு முகத்திரை**.

★ மேடையின் இரு புறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்பட்ட **பொருமுகத்திரை**.

★ மேடையின் மேலிருந்து வேண்டும் போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்பட்ட **கந்துவரல் திரை** ஆகிய மூன்றையும் சிறப்புடன் அமைத்தனர்.

மேடை ஒப்பனைகள்

★ ஓவிய வேலைப்பாடு மிக்க **'மேல்விதானம்'** அமைக்கப்பட்டது.

★ முத்துகளால் செய்யப்பட்ட மாலை அரங்கம் முழுவதும் தொங்கவிடப்பட்டது.

★ நுட்பமான வேலைபாடுகளுடன் மேடை சிறப்பான முறையில் அமைக்கப்பட்டது.

மெய்ப்பாட்டியல்

குறுவினா

1. எண் வகை மெய்ப்பாடுகள் யாவை?

எண் வகை மெய்ப்பாடுகள்

★ சிரிப்பு ★ அழுகை ★ சிறுமை ★ வியப்பு

★ அச்சம் ★ பெருமை ★ சினம் ★ மகிழ்ச்சி

2. நகை என்னும் மெய்ப்பாட்டிற்கு எடுத்துக்காட்டு தருக.

நகை

★ புகழ்மிக்க தலைவனின் புகழ்பாடுவோனே!

★ அதைக் கேட்டு **என் தாய்**, **பேய்** என்றாள்.

★ **தோழி**, **நாய் குரைத்தது** என்றாள்.

★ நீ எங்கள் வீட்டின்முன் இரவு முழுவதும் பாடினாய்.

★ **பிறர்**, **நரி ஊளையிட்டது** என்றனர்.

★ இல்லை, **நீ என்றேன் நான்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறப்புச் செய்தி

நந்திக் கலம்பகம்

➔ **"ஈட்டுபுகழ் நந்தி பாண நீ! எங்கையர்தம்**
வீட்டிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும்
பேயென்றாள் அன்னை, பிறர் நரியென்றார், தோழி
நாயென்றாள்; நீ என்றேன் நான்"

3. அழுகை என்னும் மெய்ப்பாட்டிற்கு எடுத்துக்காட்டு தருக.

அழுகை

★ தலைவன் போரில் இறந்துபோகிறான்.

★ தலைவனின் உடலைக் கண்டு, தலைவி ஐயோ எனக் கதறினாள்.

★ காட்டில் உள்ள புலி வந்துவிடுமோ? என அஞ்சுகின்றேன்.

★ அகண்ட மார்புகளைக் கொண்ட உன்னைத் தூக்கிச் செல்லவும் முடியாது.

★ இவ்வாறு, துன்புறும் வண்ணம் செய்ததே கூற்றம்.

★ அக்கூற்றம் என்னைப்போல் துன்புறட்டும், என்கிறாள் தலைவி.

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"ஐயோ எனின் யான் புலி அஞ்சுவலே**
அணைத்தனள் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்
என்போல் பெருவிதிர்ப்பு உறுக, நின்னை
இன்னாது உற்ற அறனில் கூற்றே"

4. இளிவரல் என்னும் மெய்ப்பாடு தோன்றிய சூழல் ஒன்றனைக் கூறுக.

இளிவரல் தோன்றிய சூழல்

★ சேரன் கணைக்காலிரும்பொறை பகைவர்களால் சிறைபிடிக்கப்பட்டான்.

★ சிறையில் தாகம் தணிக்க தண்ணீர் கேட்டான்.

★ அவனை மதிக்காமல், தண்ணீரைக் காலம் தாழ்த்திக் கொடுத்தனர்.

★ சேரன் தண்ணீரை அருந்தாமல், தனக்கேற்பட்ட சிறுமையை (இளிவரல்) எண்ணி வருந்தினான்.

5. சேரன் கணைக்காலிரும்பொறை தனக்கேற்பட்ட சிறுமையை எண்ணி வருந்தி பாடியது யாது?

சேரன் தனக்கேற்பட்ட சிறுமையை எண்ணி வருந்தி பாடியது

★ "நாயைக் கட்டுவது போலச் சங்கிலியால் கட்டி வைத்தனர்.

★ என்னைத் துன்புறுத்திச் சிறையிலிட்டனர்.

★ சிறையிலிட்டவரின் உதவியால் எனக்குத் தண்ணீர் வந்தது.

★ அவ்வாறு வந்த நீரை இரந்து உண்ணுபவரை இவ்வுலகில் அரசர் என போற்றுவார்களா?" என்று தன் நிலையை எண்ணி வருந்தி பாடினான்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறப்புச் செய்தி

புறநானூறு

➔ **"தொடர்ப்படு ளுமலியின் இடர்ப்படுத்து இரீஇய**
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் உலகத் தானே"

சிறுபாணாற்றுப்படை

குறுவினா

1. தமிழ் இலக்கியத்திலுள்ள கொடைத்தன்மையைப் பற்றிக் கூறுக.

தமிழ் இலக்கியத்திலுள்ள கொடைத்தன்மை

★ தமிழ் இலக்கியங்கள் கொடைத்தன்மையை பெரிதும் போற்றுகின்றன.

★ எதிர்பார்ப்பு இல்லாமல் கொடுக்கும் தன்மையை வலியுறுத்துகின்றன.

★ கொடுப்பதில் மகிழ்ச்சி காணும் பண்பைப் போற்றுகின்றன.

2. பொதினி மலைக்குத் தலைவன் யார்? அவனின் சிறப்பு யாது?

பொதினி மலையின் தலைவன்

★ **பொதினி மலை**யின் தலைவன் **பேகன்**.

பேகனின் சிறப்பு

★ மலையில் வாழும் **மயிலுக்கு**த் தன்னுடைய **ஆடையைக் கொடுத்தவன்**.

★ வலிமை வாய்ந்த **ஆவியர் குல**த்தில் தோன்றியவன்.

★ பெரிய மலை நாட்டுக்கு உரியவன்.

★ **வலிமை**யும் **பெருந்தன்மை**யும் **நற்பண்பு**ம் கொண்டவன்.

★ பொதினி மலைக்குத் தலைவன்.

சிறப்புச் செய்தி

சிறுபாணாற்றுப்படை

➔ **"வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்**
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும் ....."

3. "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய" யார்? விளக்குக.

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கியவன்

★ சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கியவன் **பாரி**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விளக்கம்

★ மலர்கள் மிகுதியாக உண்ணும் தேனைக் கொண்டிருந்தன.

★ காட்டுவழியில், சுரபுன்னை மரங்கள் நிறைந்திருந்தன.

★ அத்தகைய காட்டில், **முல்லைக்கொடி ஒன்று படரக் கொம்பின்றி தவித்தது**.

★ **முல்லைக்கொடி படர தான் ஏறிவந்த தேரினை ஈந்தவன் பாரி**.

★ அவன், வெள்ளிய அருவிகளைக் கொண்ட **பறம்புமலையின் தலைவன்**.

4. காரியின் கொடைத்தன்மையையும் வீரத்தையும் கூறுக.

காரியின் கொடைத்தன்மை

★ குதிரைகள் வெண்மையான பிடரியுடன் தலையை ஆட்டுகின்றன.

★ அத்தகைய **குதிரைகளை**யும் ஏனைய **செல்வங்களை**யும் **இரவலர்க்கு** இல்லையென்னாமல் **கொடுப்பவன், காரி**.

சிறப்புச் செய்தி

சிறுபாணாற்றுப்படை

➔ **"..... கறங்குமணி**

வாலுளைப் புரவியொடு வையகம் மருள

ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த"

காரியின் வீரம்

★ நெருப்பைப் போல் சுடர்விடுகின்ற **நீண்ட வேலினை உடையவன்**.

★ **வீரக்கழலை அணிந்தவன்**. ★ தோள்வளையை அணிந்த **நீண்ட கைகளை** உடையவன்.

★ காரியைக் கண்டு பகைவர்கள் அஞ்சுகின்றனர்.

சிறப்புச் செய்தி

சிறுபாணாற்றுப்படை

➔ **"அழல்திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்**

கழல்தொடித் தடக்கைக் காரியும்....."

5. ஆய் என்னும் வள்ளலின் தன்மையைப் பற்றிக் கூறுக.

ஆய் என்னும் வள்ளலின் தன்மை

★ ஒளிமிக்க **நீல வண்ணக் கல்**லையும்

★ **நாகம் கொடுத்த ஆடை**யினையும் **இறைவனுக்குக் கொடுத்தவன்**.

★ **வில் ஏந்தியவன்**. ★ சந்தனம் பூசி, உலர்ந்த தோள்களை உடையவன்.

★ ஆர்வத்துடன் **இனிமையான மொழிகளைப் பேசுபவன்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறப்புச் செய்தி

சிறுபாணாற்றுப்படை

➔ **".....நிழல் திகழ்**

நீலம், நாகம் நல்கிய கலிங்கம்

ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த

சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்

ஆர்வ நன்மொழி ஆயும் ....."

6. அதிகனின் வள்ளல் தன்மையைப் பற்றி சிறுபாணாற்றுப்படை கூறும் செய்தி யாது?

அதிகனின் வள்ளல் தன்மை

★ நறுமணம் கமழும் பெரிய மலைச்சாரலில் அழகிய நெல்லி மரம் உள்ளது.

★ **நெல்லி மரத்தின் கனி, உயிர் நிலைபெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையை உடையது**.

★ அது தனக்குக் கிடைத்தபோது, அதனை **ஔவைக்கு வழங்கியவன்**, அதிகன்.

★ **வலிமை**யும் **சினமும்** ஒளியும்மிக்க **வேலினை உடையவன்**.

★ கடல் போன்று ஒலிக்கும் படையினையும் உடையவன்.

சிறப்புச் செய்தி

சிறுபாணாற்றுப்படை

➔ **".....மால்வரைக்**

கமழ்பூஞ்சாரல் கவினிய நெல்லி

அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கு ஈந்த

உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்

அரவக் கடல் தானை அதிகனும் ....."

7. நள்ளி என்னும் வள்ளலின் இயல்புகளை விவரிக்க.

நள்ளியின் இயல்புகள்

★ நள்ளி, தன்னிடம் உள்ள **செல்வத்தை இல்லையென்னாமல், பிறருக்குக் கொடுப்பவன்**.

★ வறியவர்களின் குறிப்பறிந்து தேவையானவற்றைக் கொடுப்பவன்.

★ பிறர்க்கு **வாரி வழங்கும் பெரிய கைகளை உடையவன்**.

★ காலம் தவறாமல் பெய்யும் **மழை போன்றவன்**.

★ **போர்த் தொழிலில் வல்லமை உடையவன்**.

★ மழைக்காற்று எப்போதும் இருக்கக்கூடிய உயர்ந்த **மலை நாட்டை உடையவன்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சிறப்புச் செய்தி

சிறுபாணாற்றுப்படை

➔ **"..... கரவாது**

நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்

முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்

துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு

நளிமலை நாடன் நள்ளியும் .....”

8. ஓரி - குறிப்பு வரைக.

ஓரி - குறிப்பு

★ மணம் வீசும் மலர்கள் நிறைந்த, சுரபுன்னை மரங்கள் சூழ்ந்தது சிறிய மலை நாடு.

★ அந்த **சிறிய மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாகக் கொடுத்தவன், ஓரி**.

★ காரியை எதிர்த்துப் போரிட்டவன். ★ வில்லாற்றலில் சிறந்து விளங்கியவன்.

★ **ஓரி என்னும் வலிமைமிக்க குதிரையைக் கொண்டவன்**.

சிறப்புச் செய்தி

சிறுபாணாற்றுப்படை

➔ **"..... நளிசினை**

நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்

குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த

காரிக் குதிரைக் காரியொடு மலைந்த

ஓரிக் குதிரை ஓரியும் .....”

தமிழில் முதல் மதிப்பெண் பெறுவோம்!

➔ தமிழ்ப்பாடம் எழுதும் மாணவர்கள், அழகிய கையெழுத்துடன், அடித்தல், திருத்தம் இல்லாமல் எழுதினால் நல்ல மதிப்பெண் பெறலாம்.

➔ முதலில், பக்கத் தலைப்புகள் கொடுப்பதுடன் செய்யுள் வரிகளை அடிக்கோடிட்டுக் காண்பிக்க வேண்டும்.

➔ திருக்குறளுக்கு முதன்மை தருவது அவசியம்.

➔ கற்றதன் நோக்கம், முன்னுரை, பொருளுரை, உட்தலைப்பு, முடிவுரை, நூற்பயன் என்ற முறையில் நெடுவினாக்கள் விடை இடம்பெற வேண்டும்.

➔ பகுபத உறுப்பிலக்கணம், இலக்கண குறிப்பு, புணர்ச்சி ஆகிய மூன்றையும் சரியாக எழுதினால் முழு மதிப்பெண் பெறலாம்.

➔ பத்திப் பத்தியாக எழுதாமல் தோஸ்த் உரையில் உள்ளதுபோல் கருத்துக்களாகப் பிரித்து எழுத வேண்டும்.

➔ முக்கிய சொற்களை அடிக்கோடிட்டு எழுதினால் முழுமதிப்பெண் வழங்க எளிதாக இருக்கும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இலக்கணம்

தமிழாய் எழுதுவோம்

1. எழுதும்போது மொழியில் ஏற்படும் பிழைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

எழுதும்போது மொழியில் ஏற்படும் பிழைகள்

★ எழுதும்போது மொழியில் ஏற்படும் பிழைகள் **நான்கு** வகைப்படும். அவை -

★ **எழுத்துப் பிழை** ★ **சொற்பொருட் பிழை** ★ **சொற்றொடர்ப் பிழை** ★ **பொதுவான பிழைகள்**

2. தமிழில் உள்ள எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

தமிழில் உள்ள எழுத்துகள் - 247

★ **உயிரெழுத்துகள் 12**. (**அ** முதல் **ஔ** வரை) ★ **மெய்யெழுத்துகள் 18**. (**க்** முதல் **ன்** வரை)

★ **உயிர்மெய் எழுத்துகள் 216** ★ **ஆய்த எழுத்து 1 (ஃ)**

3. உயிரெழுத்து, மெய்யெழுத்துகளின் வகைகளைக் கூறுக.

உயிரெழுத்தின் வகைகள்

★ உயிரெழுத்துகள் **இரண்டு** வகைப்படும். அவை -

★ **குறில்** எழுத்துகள் (**அ, இ, உ, எ, ஒ**) ★ **நெடில்** எழுத்துகள் (**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ**)

மெய்யெழுத்துகளின் வகைகள்

★ மெய்யெழுத்துகள் **மூன்று** வகைப்படும். அவை -

★ **வல்லின** மெய்கள் (**க், ச், ட், த், ப், ற்**) ★ **மெல்லின** மெய்கள் (**ங், ஞ், ண், ந், ம், ன்**)

★ **இடையின** மெய்கள் (**ய், ர், ல், வ், ழ், ள்**)

உயிர்மெய் எழுத்துகளின் வகைகள்

★ உயிர்மெய்க் குறில் *(90 எழுத்துகள்)* ★ உயிர்மெய் நெடில் *(126 எழுத்துகள்)*

4. எழுத்துப்பிழை ஏற்படுவதற்கு முதன்மையான காரணம் யாது?

எழுத்துப்பிழை ஏற்படுவதற்கு முதன்மையான காரணம்

★ பேச்சுத்தமிழை அப்படியே எழுத முடியாது. ★ சிலர், பேசுவதைப் போலவே எழுதுகின்றனர்.

★ அவ்வாறு எழுதுவதே எழுத்துப்பிழை ஏற்படுவதற்கு முதன்மையான காரணமாகும்.

5. எழுத்துப்பிழைகளைத்தவிர்க்கநம்மனத்துள்பதித்துவைத்துக்கொள்ளவேண்டியவையாவை?

எழுத்துப் பிழைகளைத் தவிர்க்க நம் மனத்துள் பதித்து வைத்துக் கொள்ள வேண்டியவை

★ எழுத்துகளின் **ஒலிப்புமுறை** ★ எழுத்துகளின் **வரிவடிவ வேறுபாடு**

★ **எழுத்துகள் சொல்லில் வரும் இடங்கள்** *(முதல், இடை, கடை)*

6. ந,ண,ன / ற,ர / ல,ள,ழ ஆகிய எட்டு எழுத்துகளும் சொல்லில் வரும் இடங்களைக் கூறுக.

சொல்லில் வரும் இடங்கள்

★ **'ந'** மட்டுமே சொல்லின் முதலில் வரும். ★ **'ற'** மெய்யெழுத்தாக(ற்) சொல்லின் இறுதியில் வராது.

★ மற்ற எழுத்துகள் சொல்லின் இடையிலும் இறுதியிலும் மட்டும் வரும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. க்ரீடம், ப்ரியா, க்ளிஷே - இவை தமிழ்ச் சொற்களா? இல்லை எனில் காரணம் கூறுக.

★ க்ரீடம், ப்ரியா, க்ளிஷே - இவை தமிழ்ச் சொற்கள் அல்ல.

காரணம்

★ தமிழில் மெய்யெழுத்துகள் சொல்லின் முதலில் வருவதில்லை.

★ க்ரீடம், ப்ரியா - வடமொழிச் சொற்கள் ★ க்ளிஷே - ஆங்கிலச் சொல்

8. வல்லின எழுத்துகள் சொல்லில் அமையும் முறைகளைக் கூறுக.

வல்லின எழுத்துகள் சொல்லில் அமையும் முறைகள்

★ வல்லின மெய் சொல்லின் இறுதியில் வராது.

➔ பார்க், பன்ச், பட், போத் - இவை தமிழ்ச் சொற்கள் அல்ல.

★ வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா.

➔ காட்ச்சி, முயற்ச்சி என்று எழுதுவது பிழை.

★ க், ச், த், ப் ஆகிய எழுத்துகளை அடுத்து, அவ்வெழுத்து வரிசைகளே வரும். பிற மெய்கள் வராது.

➔ காக்கை, பச்சை, பத்து, உப்பு

★ ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு, அவ்வெழுத்து வரிசைகளும் க, ச, ப என்னும் வரிசைகளும் வரும்.

➔ பாட்டு, வெட்கம், காட்சி, திட்பம், காற்று, கற்க, கற்சிலை, கற்பவை

★ ட, ற என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் வராது.

➔ டமாரம், றப்பர் - தமிழ்ச் சொற்கள் இல்லை.

9. ஆய்த எழுத்து சொல்லில் எவ்வாறு வரும்?

ஆய்த எழுத்து சொல்லில் வரும் முறை

★ ஆய்த எழுத்து சொல்லில் இடையில் மட்டுமே வரும். ★ தனிச்சொல்லாயின் மூவெழுத்தாக வரும்.

★ தனிக்குறிலை அடுத்தும் வரும். ➔ (எ.கா.) அ.ஃது, எ.ஃகு, க.ஃசு

10. ய், ர், ல், ழ், ள் ஆகிய எழுத்துகள் சொற்களில் இடம்பெறும் முறையைக் கூறுக.

ய், ர், ல், ழ், ள் ஆகிய எழுத்துகள் சொற்களில் இடம்பெறும் முறை

★ ய், ர், ல், ழ், ள் ஆகிய எழுத்துகளுக்குப் பின், ★ வியங்கோள் வினைமுற்று

★ கள் விகுதி ★ வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது, இயல்பாக நிற்கும்.

➔ தேய்க, ஊர்சூழ், கால்கள், தோள்கள், வாழ்தல்

11. ணகர, னகர ஒற்றினை அடுத்து வராத எழுத்துகள் யாவை?

ணகர, னகர ஒற்றினை அடுத்து வராத எழுத்துகள்

★ ணகர ஒற்றினை அடுத்து 'ற'கரம் வராது. ★ னகர ஒற்றினை அடுத்து 'ட'கரம் வராது.

★ கண்டு - சரி, கன்டு - தவறு ★ மன்றம் - சரி, மண்றம் - தவறு

12. ஞ், ந், வ் ஆகிய எழுத்துகளில் முடியும் சொற்களைக் கூறுக.

ஞ், ந், வ் ஆகிய எழுத்துகளில் முடியும் சொற்கள்

★ உரிஞ் ★ வெரிந் ★ பொருந் ★ தெவ்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் அமையும் முறையினைக் கூறுக.

தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் அமையும் முறை

★ தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வராது.

★ தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வந்தால், தமிழ் இயல்புக்கு ஏற்ப திருத்தி எழுத வேண்டும். ★ நிர்வாகம் - நிருவாகம், கர்மம் - கருமம்

14. ஒரு - ஓர், இரு - ஈர் வேறுபடுத்துக.

ஒரு - ஓர், இரு - ஈர்

★ மெய் எழுத்துச் சொல்லுக்குமுன் **ஒரு, இரு** என்றும்,

★ உயிர் எழுத்துச் சொல்லுக்குமுன் **ஓர், ஈர்** என்றும் வரும்.

➔ (எ.கா.) ஒரு பகல், ஓர் இரவு, இரு மன்னர், ஈராயிரம் (ஈர் ஆயிரம்)

15. அது, இது, எது - அஃது, இஃது, எஃது வேறுபடுத்துக.

அது, இது, எது - அஃது, இஃது, எஃது

★ மெய் எழுத்துச் சொற்களுக்குமுன் அது, இது, எது என்றும்,

★ உயிர் எழுத்துச் சொற்களுக்குமுன் அஃது, இஃது, எஃது என்றும் வரும்.

➔ (எ.கா.) அது பசு, அஃதிலார்க்கு (அஃது இலார்க்கு)

16. லகர, ளகர எழுத்துகளுக்கான புணர்ச்சி விதிகள் சிலவற்றைக் கூறுக.

லகர, ளகர எழுத்துகளுக்கான புணர்ச்சி விதிகள்

★ வேற்றுமைப்புணர்ச்சியில், லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வந்தால், லகரம் றகரமாகத் திரியும்.

➔ (எ.கா.) கல் + சிலை = **கற்சிலை**, கடல் + கரை = **கடற்கரை**

★ லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வந்தால், லகரம் னகரமாகத் திரியும்.

➔ (எ.கா.) பல் + முகம் = **பன்முகம்**

★ ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வந்தால், ளகரம் டகரமாகத் திரியும்.

➔ (எ.கா.) மக்கள் + பேறு = **மக்கட்பேறு**

★ ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வந்தால், ளகரம் ணகரமாகத் திரியும்.

➔ (எ.கா.) நாள் + மீன் = **நாண்மீன்**

★ வருமொழி தகரமாயின் லகரமும் தகரமும் றகரமாக மாறும்.

➔ (எ.கா.) சொல் + துணை = **சொற்றுணை**

★ வருமொழி நகரமாயின் லகரமும் நகரமும் னகரமாக மாறும்.

➔ (எ.கா.) பல் + நூல் = **பன்னூல்**

★ அல்வழியில், தனிக்குறிலை அடுத்த லகரம், தகரம் வரும்போது ஆய்தமாக மாறும், தகரம் றகரமாக மாறும்.

➔ (எ.கா.) அல் + திணை = **அஃறிணை**, பல் + துளி = **பஃறுளி**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. இயக்குநர், இயக்குனர் - இவற்றில் சரியானது எது? ஏன்?

இயக்குநர், இயக்குனர்

★ **இயக்குநர்** என்று எழுதுவதே **சரியானதாகும்.** ★ **இயக்குனர்** என்று எழுதுவது **தவறானது.**

★ இயக்கு, ஓட்டு, அனுப்பு போன்ற வினைகள் பெயரிடை நிலையான **'ந்'** என்பதைப் பெற்று இயக்குநர், **ஓட்டுநர், அனுப்புநர்** என்று பெயர்ச் சொல்லாகின்றன.

18. எழுதும்போது பிழைகளைத் தவிர்க்கச் சில குறிப்புகளைக் கூறுக.

எழுதும்போது பிழைகளைத் தவிர்க்கச் சில குறிப்புகள்

★ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்.

★ **ந,ண,ன - ல,ள,ழ - ற,ர** ஆகிய மயங்கொலி எழுத்துகளின் ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.

★ தமிழில் **மயங்கொலி எழுத்துகள்** வரும் முறையினையும், **பொருள் வேறுபாட்டையும்** அறிந்து கொள்ள வேண்டும்.

★ தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ, மனத்துக்குள் உச்சரித்தப்படியோ எழுதப்பழகுவது நல்லது.

★ வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும்.

★ **கெ,கே,கொ,கோ** போன்று கொம்புடைய **குறில், நெடில் வேறுபாட்டினைப் புரிந்து** எழுத வேண்டும்.

நால்வகைப் பொருத்தங்கள்

1. மொழியின் அடிப்படைப் பண்புகள் யாவை?

மொழியின் அடிப்படைப் பண்புகள்

★ திணை ★ பால் ★ எண் ★ இடம்

2. திணை, பால், எண், இடம் ஆகியவற்றின் பயனையும் அமையும் முறையினையும் கூறுக.

திணை, பால், எண், இடம் ஆகியவற்றின் பயன்கள்

★ திணை, பால், எண், இடம் ஆகியவை சொற்றொடர் அமைப்பைப் புரிந்துக் கொள்வதற்குப் பயன்படும்.

அமையும் முறை

★ பெயர்ச்சொற்களிலும் வினைச்சொற்களிலும் **திணை, பால், எண், இடம்** ஆகியவை இடம் பெற்றிருக்கும்.

★ எழுவாய் உள்ள தொடர்களில் வினைமுற்று **திணை, பால், எண், இடம்** ஆகியவற்றைக் காட்டும்.

3. எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு (தொடர்பு) இருப்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே உள்ள தொடர்பு

★ முருகன் நூலகம் சென்றான். ★ முருகன் - எழுவாய், சென்றான் - பயனிலை

★ முருகன் என்னும் எழுவாய் **திணை, பால், எண்** ஆகியவற்றைக் காட்டுகின்றது.

★ பயனிலை **உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை**யை உணர்த்துகின்றது.

★ இதன்வழி, எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதை நாம் அறியலாம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. திணை அடிப்படையில் பெயர்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

திணை அடிப்படையில் பெயர்ச் சொற்களின் வகைகள்

★ திணை அடிப்படையில் பெயர்ச் சொற்கள் **இரண்டு** வகைப்படும். அவை -

★ உயர்திணைப் பெயர் ★ அ.ஃறிணைப் பெயர்

5. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் ஏதேனும் இரண்டனைக் கூறுக.

இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள்

★ குழந்தை ★ கதிரவன்

★ இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது வினைமுடிபு உயர்திணையாகவும் அ.ஃறிணையாகவும் அமையும்.

★ குழந்தை சிரித்தான் - உயர்திணை ★ குழந்தை சிரித்தது - அ.ஃறிணை

★ கதிரவன் உதித்தான் - உயர்திணை ★ கதிரவன் உதித்தது - அ.ஃறிணை

6. பால் பகுப்பைக் காட்டும் விகுதிகள் யாவை?

பால் பகுப்பைக் காட்டும் விகுதிகள்

★ படர்க்கையில் வரும் பயனிலை விகுதிகள் பால் பகுப்பைக் காட்டும். அவை -

★ ஆன் ★ ஆள் ★ ஆர் ★ அது ★ அன்

7. பழந்தமிழிலும் இக்காலத்தமிழிலும் பலர்பால் சொல் இடம்பெறும் முறையைக் கூறுக.

பழந்தமிழில் பலர்பால் சொல் இடம் பெறும் முறை

★ பெரும்பாலும், பலர்பால் சொல் பலரைக் குறிக்கும் வகையிலும்

★ சில இடங்களில், உயர்வு கருதி ஒருவரைக் குறிக்கும் வகையிலும் அமைந்திருந்தது.

➔ (எ.கா.) மாணவர் வந்தனர் - பலரைக் குறித்தது.

★ ஆசிரியர் வந்தார் - ஒருவரைக் குறித்தது.

இக்காலத் தமிழில் பலர்பால் சொல் இடம் பெறும் முறை

★ இக்காலத் தமிழில், பலர்பால் சொல் ஒருவரை மட்டுமே குறிக்கும் வகையில் அமைகின்றது.

★ பலரைக் குறிப்பதற்கு 'கள்' என்னும் விகுதி பயன்படுகிறது.

➔ (எ.கா.) ஆசிரியர் வந்தார் - ஒருவரைக் குறித்தது.

➔ ஆசிரியர்கள் வந்தார்கள் - பலரைக் குறித்தது

8. 'ஒவ்வொரு' என்னும் சொல் பயன்படுத்தும் முறையைக் கூறுக.

'ஒவ்வொரு' என்னும் சொல் பயன்படுத்தும் முறை

★ ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது. - இவ்வாறு பயன்படுத்துவது தவறான முறையாகும்.

★ ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது என்று பயன்படுத்துவதே சரியான முறையாகும்.

9. இடம் எத்தனை வகைப்படும். அவை யாவை?

இடத்தின் வகைகள்

★ இடம் **மூன்று வகை**ப்படும். அவை -

★ தன்மை ★ முன்னிலை ★ படர்க்கை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ பேசுபவன் - தன்மை ★ முன்னிருந்து கேட்பவன் - முன்னிலை

★ பேசப்படுபவன் (அ) பேசப்படும் பொருள் - படர்க்கை

10. தன்மைப் பன்மை எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.

தன்மைப் பன்மையின் வகைகள்

★ தன்மைப் பன்மை **இரு வகை**ப்படும். அவை -

★ உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ★ உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

★ பேசுபவர் முன்னிலையில் உள்ளவரையும் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும். ➔ (எ.கா.) நாம் முயற்சி செய்வோம்

உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

★ பேசுபவர் முன்னிலையில் உள்ளவரைத் தவிர்த்து, தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத் தன்மைப் பன்மை ஆகும். ➔ (எ.கா.) நாங்கள் முயற்சி செய்வோம்

பொருள் மயக்கம்

1. இடைவெளிவிட்டும்விடாமலும்எழுதுவதால்ஏற்படும்பொருள்மாற்றத்திற்குஎடுத்துக்காட்டுத்தருக.

இடைவெளி விட்டும் விடாமலும் எழுதுவதால் ஏற்படும் பொருள் மாற்றத்திற்கு எடுத்துக்காட்டு

★ எம் மொழி யார்க்கும் எளிது	➔ **எம்மொழியார்க்கும் எளிது**
★ அப் பாவின் நலங் காண்க	➔ **அப்பாவின் நலங்காண்க**
★ ஐந்து மாடிவீடு	➔ **ஐந்துமாடி வீடு**
★ அன்றுமுதல் பாடல் கற்றோம்	➔ **அன்று முதல்பாடம் கற்றோம்**

2. வல்லினமெய்களைஇட்டும்நீக்கியும்எழுதுவதால்ஏற்படும்பொருள்மாற்றத்திற்குஎடுத்துக்காட்டுத்தருக.

வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுவதால் ஏற்படும் பொருள் மாற்றத்திற்கு எடுத்துக்காட்டு

★ பிட்டுத் தின்றான்	➔ **பிட்டு தின்றான்**
★ உள்ளக் கருத்து	➔ **உள்ள கருத்து**
★ ஈட்டிக் கொண்டு வந்தான்	➔ **ஈட்டி கொண்டு வந்தான்**

3. பொருள் மயக்கமின்றி எழுதுவதற்கு நினைவில் கொள்ள வேண்டியவற்றைப் பட்டியலிடுக.

பொருள் மயக்கமின்றி எழுதுவதற்கு நினைவில் கொள்ள வேண்டியவை

★ பண்புத்தொகை, வினைத்தொகை சொற்களைப் பிரித்து எழுதக் கூடாது.

➔ (எ.கா.) **செங்கடல், கத்துகடல்** - சரி; செங் கடல், கத்து கடல் - தவறு.

★ பெயர்ச்சொல், வினைச்சொல்லுக்கு இடையில் நின்று பொருளை உணர்த்தும் இடைச்சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

➔ (எ.கா.) **அணங்குகொல்** - சரி; அணங்கு கொல் - தவறு

★ இடைச்சொல்லுடன் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும். இல்லையெனில் பொருள் மாறிவிடும்.

➔ (எ.கா.) **பேசியபடி பணம் கொடுத்தான்**. (சொன்ன பணத்தைக் கொடுத்தான்)
பேசிய படி பணம் கொடுத்தான் (படி அளவு பணம் கொடுத்தான்)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ உடம்படுமெய்ச் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

★ (எ.கா.) **மணியடித்துச் சென்றான்** (ஒலி எழுப்பும் மணியை அடித்தான்)

மணி அடித்துச் சென்றான் (மணி என்பவன் யாரையோ அடித்தான்)

★ 'கள்' விகுதி உள்ள சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.

★ (எ.கா.) **ஈக்கள், குரங்குகள்** - சரி; ஈக் கள், குரங்கு கள் - தவறு

★ இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

★ (எ.கா.) **படபட, சடசட** - சரி; பட பட, சட சட - தவறு

★ சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யாகவும் வருமொழி முதலெழுத்து உயிராகவும் இருந்தால் சேர்த்து எழுத வேண்டும். ★ (எ.கா.) சுடர் + ஆழி = **சுடராழி**

★ உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும்போது சேர்த்தே எழுத வேண்டும்.

★ (எ.கா.) **கடிமணம்** - சரி; கடி மணம் - தவறு

★ உம்மைத்தொகை, நேரிணை, எதிரிணைச் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

★ (எ.கா.) **உற்றாருறவினர்** - உம்மைத்தொகை, **சீரும்சிறப்பும்** - நேரிணைச் சொற்கள், **மேடுபள்ளம்** - எதிரிணைச் சொற்கள்

பா இயற்றப் பழகலாம்

1. வெண்பா இலக்கியங்கள் பெருகத் தொடங்கிய காலம் எது? ஏன்?

வெண்பா இலக்கியங்கள் பெருகத் தொடங்கிய காலம்

★ சங்கம் மருவிய காலத்திலிருந்து **வெண்பா** இலக்கியங்கள் பெருகத் தொடங்கின.

வெண்பா இலக்கியங்கள் தோன்றியதற்கான காரணம்

★ சங்கம் மருவிய காலத்தில் அறக்கருத்துகளைக் கூறும் இலக்கியங்கள் படைக்கப்பட்டன.

★ **அறங்கள் மனிதர் மனத்தில் நிலையாக நிற்க வேண்டும்**.

★ **வெண்பா**வில் அறக்கருத்துகளைக் கூறினால், **நினைவில் ஆழமாகப் பதியும்**.

★ எனவே, அற இலக்கியங்கள் வெண்பாவில் இயற்றப்பட்டன.

2. வெண்பாவின் சிறப்புகள் யாவை?

வெண்பாவின் சிறப்புகள்

★ வெண்பா எழுதுவதற்கெனப் பொதுவான இலக்கணங்கள் உண்டு.

★ மற்ற பாக்களைவிட **வெண்பா இலக்கணக் கட்டுக்கோப்பு உடையது**.

★ எனவே, வெண்பா **'வன்பா'** எனப்படுகிறது.

★ வெண்பாவை இலக்கணக் கட்டுக் குலையாமல் (சிதையாமல்) எழுத வேண்டும்.

★ வெண்பா **வெண்டளையால் மட்டுமே அமைய வேண்டும்**.

3. வெண்டளை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வெண்டளையின் வகைகள்

★ வெண்டளை இரண்டு வகைப்படும். அவை -

1. **இயற்சீர் வெண்டளை** 2. **வெஞ்சீர் வெண்டளை**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. வெண்பாவிற்கு உரிய தளைகளையும் சீர்களையும் கூறுக.

வெண்பாவிற்கு உரிய தளைகள்

★ இயற்சீர் வெண்டளை - மா முன் நிரை, விளம் முன் நேர்

★ வெஞ்சீர் வெண்டளை - காய் முன் நேர்

வெண்பாவிற்கு உரிய சீர்கள்

★ மாச்சீர் - தேமா, புளிமா ★ விளச்சீர் - கூவிளம், கருவிளம்

★ காய்ச்சீர் - தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய்

5. வெண்பாவின் ஈற்றுச்சீர்களாக அமைபவை யாவை?

வெண்பாவின் ஈற்றுச்சீர்களாக அமைபவை

★ நாள் ★ மலர் ★ காசு ★ பிறப்பு

6. வெண்பாவில் நின்றசீரையும் வரும்சீரையும் கூறுக.

நின்றசீர்	வரும்சீர்
மாச்சீர்	புளிமா, கருவிளம், புளிமாங்காய், கருவிளங்காய், மலர், பிறப்பு
விளச்சீர், காய்ச்சீர்	தேமா, கூவிளம், தேமாங்காய், கூவிளங்காய், நாள், காசு

7. வெண்பாவிற்கான பொது இலக்கணத்தைக் கூறுக.

வெண்பாவிற்கான பொது இலக்கணம்

★ இயற்சீர் வெண்டளை, வெஞ்சீர் வெண்டளை மட்டுமே வரும்.

★ ஈற்றடி முச்சீராகவும் மற்ற அடிகள் நான்கு சீராகவும் இருக்கும்.

★ ஈரசைச்சீர்களில் மாச்சீரும் (தேமா, புளிமா) விளச்சீரும் (கூவிளம், கருவிளம்), மூவசைச்சீர்களில் காய்ச்சீரும் (தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய்) மட்டுமே வரும்.

★ ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

8. வெண்பாவின் வகைகளையும் அதன் அடி வரையறைகளையும் கூறுக.

வெண்பாவின் வகை	அடி வரையறை
குறள் வெண்பா	இரண்டடி
நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா	மூன்றடி
நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா	நான்கடி
ப.ஃறொடை வெண்பா	நான்கடி முதல் பன்னிரண்டு அடி வரை
கலிவெண்பா	பதின்மூன்று அடிகளுக்கு மேல்

நினைவாற்றல் அதிகரிக்க செய்ய வேண்டியவை...

அதிகாலை அமைதியாக அமர்ந்து 1 முதல் 100 வரை உள்ள எண்களை நேர்வரிசையிலும் தலைகீழ் வரிசையிலும் ஒருமுறை பயிற்சி செய்யவும். நாள்தோறும் பயிற்சி செய்தால், நீங்கள் நாளை சதாவதானி.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

படிமம்

1. படிமம் என்றால் என்ன?

படிமம் - விளக்கம்

★ படிமம் என்றால் காட்சி என்பது பொருள்.

★ ஒரு **காட்சி**யையோ, **கருத்தை**யோ **காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி**, **படிமம்** எனப்படும்.

2. படிமத்தின் பணிகள் மற்றும் அவற்றை உருவாக்கப் பயன்படுபவை யாவை?

படிமத்தின் பணிகள்

★ காட்சிக்குத் தெளிவு தருவதும்.

★ கருத்தைக் காட்சிப்படுத்துவதும் படிமத்தின் பணிகள் ஆகும்.

★ படிமத்தை உருவாக்க உவமை, உருவகம், சொல்லும்முறை போன்றவைப் பயன்படுகின்றது.

3. படிமம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

படிமம் பயன்படும் விதம்

★ உவமை, உருவகம் போலப் படிமமும் **வினை, பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்)** ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

★ எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்கும் ஓர் உத்தியாகவே பயன்படுகிறது.

4. வினைப்படிமம் சான்றுடன் விளக்குக.

வினைப்படிமம்

★ எல்லோரும் அறிந்த ஒரு செயலை மற்றொரு செயலோடு ஒப்பிட்டுக் கூறுவது வினைப்படிமம் எனப்படும்.

➔ **"காலை இளம் வெயில்**

நன்றாக மேய

தும்பறுத்துத்

துள்ளிவரும்

புதுவெயில்"

★ இணைத்துக் கட்டப்பட்ட தும்பிலிருந்து அறுத்துக்கொண்டு கன்று துள்ளிக் குதித்தல் என்பது எல்லோரும் அறிந்த ஒரு காட்சியாகும்.

★ இக்காட்சியைக் கொண்டு காலை இளம் வெயிலின் அழகை, கன்றின் செயலோடு ஒப்பிட்டுப் படிமப்படுத்துகிறது இக்கவிதை.

5. பயன்படிமம் எவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது?

பயன்படிமம் காட்சிபடுத்தப்படும் முறை

★ இனியவை செய்தல், இன்னா செய்தல் என்ற பயன்களை (இனிய) நெருஞ்சிப்பூ, (இன்னா) முள் என்ற காட்சிப்பொருள்களால் படிமப்படுத்துகிறது பின்வரும் கவிதை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ "நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே"

6. மெய்ப்படிமத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

மெய்ப்படிமம்

➔ "கோவைப்பழ மூக்கும்
பாசிமணிக் கண்ணும்
சிவப்புக்கோடுக் கழுத்தும்
வேப்பிலை வாலும்"

★ இதில் கோவைப்பழம் போன்ற மூக்கும் ★ பாசிமணி போன்ற கண்ணும்

★ சிவப்பு நிறத்தில் வளைந்த கழுத்தும், வேப்பிலை போன்ற வாலும் உள்ளதாக வடிவப்படிமம் (மெய்ப்படிமம்) அமைந்துள்ளது.

7. உருப்படிமம் அல்லது நிறப்படிமம் விளக்குக.

உருப்படிமம் அல்லது நிறப்படிமம் - விளக்கம்

★ பொருள்தேடி வரப் பிரிந்த தலைவன் சொல்லிச் சென்ற காலம் வந்தது. ★ தலைவன் வரவில்லை.

★ அந்நிலையில் மாலை வேளையில் தலைவி படும் துன்பமிகுதியைத் தலைமகனுக்குத் தோழி கூறுகிறாள்.

★ உலைக்களத்திலே நன்றாக வெந்து, பின் மெல்ல மெல்ல ஆறிக் கொண்டிருக்கும் பொன்னின் நிறம் போல், அந்தி வானம் விளங்கிய காட்சியை தோழி குறிப்பிடுகிறாள்.

➔ "வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப"

8. படிமம் ஒரு கருவி என்பதை விளக்குக.

படிமம் ஒரு கருவி - விளக்கம்

★ படிமம் பொருள் வளம் மிக்கது. ★ கருத்துச் செழிப்புடையது.

★ பாடலின் மொத்தப் பொருளையும் சிறப்புச் செய்வது.

★ இவ்வாறு இலக்கியங்களில் காட்சிகளையும் கருத்துகளையும் உண்மைகளையும் உணர்வுகளையும் வெளிக்கொணரும் கருவியாகிறது படிமம்.

காப்பிய இலக்கணம்

1. EPIC **-குறிப்பு வரைக.**

EPIC **-குறிப்பு வரைதல்**

★ காப்பியத்தை ஆங்கிலத்தில் **EPIC** என்பர்.

★ இது **EPOS** என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது.

★ **EPOS** என்பதற்குச் **சொல்** அல்லது **பாடல்** என்று பொருள்.

★ இது வடமொழியில் காவியம் என வழங்கப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. காப்பியம் பெயர்க்காரணம் தருக.

★ காப்பியம் என்னும் சொல்லைப் பிரித்தால், காப்பு+இயம் எனப்படும்.

★ **மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது** என்றும், **மொழியைச் சிதையாது காப்பது** என்றும் பொருள்படும்.

3. காப்பிய உறுப்புகளின் வகைகள் யாவை?

காப்பிய உறுப்புகளின் வகைகள்

★ காப்பியச் **சிற்றுப்பு**களாக **காதை, சருக்கம், இலம்பகம், படலம்** முதலானவை அமைந்திருக்கின்றன.

★ **காண்டம்** என்பது பல சிற்றுறுப்புகளின் தொகுதியாக உள்ள **பேருறுப்பை**க் குறிக்கிறது.

4. பெருங்காப்பியத்தின் பதினெட்டு உறுப்புகள் யாவை?

பெருங்காப்பியத்தின் உறுப்புகள்

★ மலை *(1)*, கடல்*(2)*, நாடு*(3)*, நகர்*(4)*, சிறுபொழுது*(5-10)*, பெரும்பொழுது*(11-16)*, கதிரவன் தோற்றம்*(17)*, சந்திரனின் தோற்றம்*(18)* ஆகிய பதினெட்டு உறுப்புகளும் பெருங்காப்பியத்தில் இயற்கை வருணனையாக அமைதல் வேண்டும்.

5. சிறுகாப்பியம் அமைப்பு முறையைக் கூறு?

சிறுகாப்பிய அமைப்பு

★ **அறம், பொருள், இன்பம், வீடு** ஆகிய நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறுகாப்பியம் ஆகும்.

6. தொடர்நிலை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

தொடர்நிலை - விளக்கம்

★ தொடர்நிலை என்பது ஒரு பாடலையும் மற்றொரு பாடலையும் சொல்லாலும் பொருளாலும் தொடர்பு ஏற்படுத்தும் செய்யுள்வகையைக் குறிக்கும்.

★ இது பொருள்தொடர்நிலை, சொல்தொடர்நிலை என்று இருவகைப்படும்.

7. காப்பியம் என்றால் என்ன?

காப்பியம் - விளக்கம்

★ காப்பியம் ஒருமொழியின் வளத்தைப் புலப்படுத்துகிறது.

★ **எளிய நடை, இனியகதை, அழகியல், கற்பனை** ஆகியவை ஒருசேர அமைந்த இலக்கிய வடிவமே காப்பியமாகும்.

8. இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட காப்பியங்கள் சிலவற்றைக் கூறு

இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட காப்பியங்கள்

★ பாரதியார் - **பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு.**

★ பாரதிதாசன் - **பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், வீரத்தாய், புரட்சிக்கவி.**

★ கவிமணி - **மருமக்கள் வழி மான்மியம்.**

★ கண்ணதாசன் - **ஆட்டனத்தி ஆதிமந்தி, மாங்கனி, ஏசுகாவியம் .**

★ கவியோகி சுத்தானந்த பாரதியார் - **பாரதசக்தி மகா காவியம்.**

★ புலவர் குழந்தை - **இராவண காவியம்.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. பெருங்காப்பிய அமைப்பு முறை குறித்து சிலவற்றை எழுதுக.

பெருங்காப்பிய அமைப்பு முறை

★ வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைக் கொண்டுத் தொடங்கும்.

★ அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் பெருங்காப்பியத்தின் திரண்ட பொருளாக அமைந்திருக்கும்.

★ தன்னிகர் இல்லாத் தலைவன் காப்பியத் தலைவனாக இருக்க வேண்டும்.

★ சந்தி எனப்படும் கதைப்போக்கு வரிசைப்படை அமைந்திருக்க வேண்டும்.

★ எண்வகைச் சுவையும் மெய்ப்பாட்டுக் குறிப்புகளும் கேட்போர் விரும்பும் வண்ணம் அமைக்கப்படிருக்க வேண்டும்.

தொன்மம்

1. தொன்மம் குறித்து தொல்காப்பியர் கூற்றும் இளம்பூரணர் உரையும் கூறுவது யாது?

தொன்மம் குறித்து தொல்காப்பியர் கூறுவது.

➔ "தொன்மை தானே சொல்லுங் காலை
உரையோடு புணர்ந்த பழமை மேற்றே" - இளம்பூரணர் உரை

★ தொன்மையாவது உரையோடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள் மேல் வருவன.

★ அவை இராம சரிதமும் பாண்டவசரிதமும் முதலாகியவற்றின் மேல்வருஞ் செய்யுள்.

2. தொன்மப் பயன்பாடு குறித்து எழுதுக.

தொன்மப் பயன்பாடுகள்

★ காப்பியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் தொன்மங்களை ஆண்டுள்ளனர்.

★ திரைப்படங்கள், நாடகங்கள், கதைகள் ஆகியவற்றில் தொன்மக் கதைகளையும் கதை மாந்தர்களையும் பயன்படுத்துப்படுகின்றனர்.

3. சங்க இலக்கியங்களில் முருகன் பற்றிய தொன்மச் செய்தியை எடுத்துக் கூறுக.

★ முருகனை அழகுக்கும் ஆற்றலுக்கும் வீரத்துக்கும் உவமையாக்கிப் பல தொன்மங்கள் உள்ளன.

★ யானை சினங்கொண்டு பேராற்றலுடன் போர்செய்த சிறப்பினை, முருகனின் வீரத்தோடு இணைத்துக் கூறியிருக்கிறது சங்க இலக்கியம்

➔ "முருகு உறழ் முன்பொடு
கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை" - நற்றிணை

4. முரண்பட்ட தொன்மத்தை அப்துல்ரகுமான் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

முரண்பட்ட தொன்மத்தை அப்துல்ரகுமான் குறிப்பிடும் முறை

➔ **"உன்மனம் ஒரு பாற்கடல்**
அதைக் கடைந்தாள்
அமுதம் மட்டுமல்ல
ஆலகாலமும் வெளிப்படும் என்பதை
நீ அறிவாய் அல்லவா?"

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ என்று தொன்மத்தைக் கொண்டு முரண்பாட்டை விளக்குகிறார்.

★ இங்கு **பாற்கடல், அமுதம், ஆலகாலம்** ஆகியன தொன்மங்கள் ஆகும்.

5. இந்திய, கிரேக்க தொன்ம ஒப்புமைகள் குறித்து எழுதுக.

இந்திய, கிரேக்க தொன்ம ஒப்புமைகள்

★ இந்திரன் - **சீயஸ்பிடர்** ★ வருணன் - **ஊரனாஸ்** ★ பலராமன் - **டயானிசிஸ்**

★ கார்த்திகேயன் - **மார்ஸ்** ★ சூரியன் - **சோல்** ★ சந்திரன் - **லூனஸ்**

★ விஸ்வகர்மன் - **வனகன்** ★ கணேசன் - **ஜோனஸ்** ★ துர்க்கை - **ஜீனோ**

★ சரஸ்வதி - **மினர்வா** ★ காமன் - **இராஸ்** என்று பல ஒப்புமைகள் உள்ளன.

குறியீடு

1. குறியீட்டியத்தை விளக்கி வளர்த்த வெளிநாட்டவர்கள் யாவர்?

குறியீட்டியத்தை விளக்கி வளர்த்த வெளிநாட்டவர்கள்

★ பொதலோர் ★ ரைம்போ ★ வெர்லேன் ★ மல்லார்மே

2. உள்ளுறை உவமத்தின் அடிப்படைய யாது?

உள்ளுறை உவமத்தின் அடிப்படை

★ உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக்கொள்ளுமாறு விட்டு உவமையை மட்டும் கூறுவது உள்ளுறை உவமத்தின் அடிப்படையாகும்.

3. குறியீட்டின் பயன்பாடுகள் யாவை?

குறியீடு - விளக்கம்

★ சொல்ல வந்ததை நேரடியாகச் சொல்லாமல் இன்னொன்றைக் கூறிக்**குறிப்பால்உணர்த்துவதுகுறியீடு**.

குறியீட்டின் பயன்பாடுகள்

★ இது புதிர் போல் அமைந்து இன்பம் அளிக்கிறது.

★ உணர்வளிக்கிறது, புரிதலை அளிக்கிறது

★ மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் குறியீடு பயன்படுகிறது.

4. புதுக்கவிதையில் குறியீடு ஒன்றை விளக்குக.

புதுக்கவிதையில் குறியீடு

➔ **"இந்த**
ஆதிரைப் பருக்கைகள்
வீழ்ந்ததும்
பூமிப்பாத்திரம்
அமுதசுரபி"

பொருள்

★ ஆதிரையிட்ட பருக்கையினால் அமுதசுரபியில் உணவு வளர்ந்துகொண்டே இருந்தது போல் உழைப்பால் உலகம் செழித்து வளர்கிறது என்ற கருத்து புலப்படுத்தப்படுகிறது.

★ வியர்வைத்துளிகள் ஆதிரைப் பருக்கை குறியீடாகிறது. செழிப்புக்கு **அமுதசுரபி** குறியீடாகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விரிவானம் - நாடக வடிவம்

முதல் கல்

காட்சி - 1

காலம்: மாலை **இடம்:** தோட்டம் **கதை மாந்தர்கள்:** மருதன், மாரிமுத்து

முன்கதை சுருக்கம்:

ஊரில் நன்றாக மழைப் பொழிந்து, வயல்களில் நீர் தேங்கியுள்ளது. அறுவடைக்குத் தயாரானப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துவிடும் நிலையில் உள்ளன. மருதன் இதைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். பயிர்கள் மூழ்கிவிட்டால், மீண்டும் புதிதாகதான் நாற்றுவிட்டு சாகுபடி செய்ய வேண்டும். அதிகமுள்ள நீர் வடிய வேண்டிய மதகுகளில் காட்டாமணக்குச் செடிகள் வளர்ந்திருந்ததனாலேயே நீர் வடியாமல் இருந்தது. அவற்றை எவ்வாறு அகற்றுவது என்ற யோசனையில் ஆழ்ந்தான், மருதன். அப்பொழுது, வாய்க்கால் வளைவில் நின்ற மாரிமுத்துவைப் பார்க்கின்றான்....

மருதன்: இந்தச் சனியன்பிடிச்ச காட்டாமணக்குச் செடியாலதான்டா தண்ணி வடிய மாட்டேங்குது

மாரிமுத்து: யாரு இல்லேன்னா?

மருதன்: நம்மூரு வடிமதகு வெள்ளைக்காரன் கட்டுனது. கடலே ஊருக்குள்ள வந்தாலும் அப்படியே முழுங்கிடும்

மாரிமுத்து: யாரு இல்லேன்னா?

மருதன்: ஊர்க்காரங்க எல்லோரும் ஒண்ணு சேந்து செடிய பிடுங்குனா, ஒரே நாள்ல வாய்க்கால் சுத்தமாகிடும்.

(மருதன் சொன்னத்தைக் கேட்ட மாரிமுத்து அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, தன் வேலையைத் தொடர்ந்தான். மருதன் பொறுமையிழந்தான்.)

மருதன்: ஏண்டா மாரி. நான் உங்கிட்டதான் சொன்னேன்.

மாரிமுத்து: தெரியுது! நடக்குற காரியத்த பேசு. போகாத ஊருக்கு வழி கேக்குற. நானென்ன சொல்ல முடியும்.

மருதன்: எதுடா நடக்காத காரியம்?

மாரிமுத்து: சரிசரி. எதுக்குக் கோபப்பட்ற? ஊரை ஒண்ணுக்கூட்டி வேலையை ஆரம்பி அப்ப தெரியும்.

மருதன்: ச்சே! நீயெல்லாம் ஒரு மனுசன்னு உன்ன கேட்டன் பாரு! என்னைச் சொல்லணும்!

(மருதன் அங்கிருந்து கோபமாகச் செல்கிறான்.)

காட்சி 1 முடிந்தது

காட்சி 2

காலம்: மாலை **இடம்:** குளக்கரை மேடு

கதை மாந்தர்கள்: முல்லையம்மா கிழவி, கிழவன் காளியப்பன், மருதன்

(மருதன், குளக்கரை மேட்டில் புல்லறுத்துக் கொண்டிருந்த முல்லையம்மா கிழவியைப் பார்க்கின்றான்.)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மருதன்: ஏ ஆத்தா! இந்த மழையிலக்கூட ஆட்டுக்குப் புல்லறுக்க வந்தியாக்கும்? நீ ஆடு, மாடு வளத்தாதான் வயத்துக்குச் சோறு கிடைக்குமாக்கும்?

கிழவி: போடா... போக்கத்தவனே! கையை, காலை மடக்கிட்டு வீட்டிலே கிடந்தா சோறு எப்படிடா வயத்துக்குள்ளே இறக்கும்?

மருதன்: சரி! சரி! உங்க வீட்டுக்காரரு எங்க?

கிழவி: அதோ அந்தப் பூவரச மரத்துல ஆட்டுக்குத் தழை ஒடைச்சிக்கிட்டிருக்காரு....

மருதன்: பெரியப்பா ....

கிழவன்: யாரது ...?

மருதன்: நான்தான்... மருதன்

கிழவன்: என்னடா?

மருதன்: வடக்கேயிருக்கும் எட்டூர் தண்ணியும் நம்ம ஊரு வழியாத்தான் வடிஞ்சாகனும்... ராத்திரிக்குள்ளே எல்லாத் தண்ணியும் வந்திடுச்சினா... பயிரெல்லாம் மூழ்கி போய்டும்.

கிழவன்: அதுக்கு என்ன என்ன பண்ணச் சொல்றே? என்ன பாவம் செஞ்சோமோ இந்த ஊர்ல வந்து பொறந்து தொலைச்சிட்டோம். அனுபவிக்க வேண்டியதுதான்....

மருதன்: முதல்காரியமா இன்னைக்கு நம்ம ஊர்க்காரர்களை ஒண்ணு கூட்டி ஒரு வார்த்தைச் சொன்னீங்கனா போதும்....

கிழவன்: என்னன்னு....?

மருதன்: வீட்டிக்கொரு ஆள் வடிவாய்க்காக்கரைக்கு வந்துடணும். ஒரு செடி பூண்டு இல்லாம அரிச்சு எறிஞ்சுட்டா பொட்டுத் தண்ணியில்லாம வடிஞ்சிடும்னு சொல்லணும்....

கிழவன்: ஏன்டா மருதா. நம்ம ஊரு பயலுவ எந்தக் காரியத்துக்காவது ஒண்ணு கூடியிருக்கானுங்களா?

மருதன்: சொல்ற விதத்திலே சொன்னா கேப்பாங்க.... உங்க சொல்லுக்கு மதிப்பு ஜாஸ்தி.

(கிழவர் சற்று நேரம் யோசித்தார். இதனால் தனக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமோ என்று கருதினார்.)

கிழவன்: ஏன்டா.. மருதா! நீ சொல்றது வாஸ்தவன்தான்.... ஆனா நாளைக்கு காலையிலேயே எம்மக வீட்டுக்குப் போகணும். அங்கே பேத்திக்குத் தலை சுத்துறாங்க திரும்ப வர மூணு நாளாகும்....

(கிழவரின் சாதுரியம் மருதனுக்குப் புரிந்துவிட்டது)

மருதன்: பரவாயில்லை பெரியப்பா.... நீங்க போயிட்டு வாங்க.

காட்சி 2 முடிந்தது

காட்சி 3

காலம்: மாலை **இடம்:** ஊர் எல்லை **கதை மாந்தர்கள்:** பிரேம்குமார் (நாகூர்பிச்சை), மருதன்

(பிரேம்குமார் கிராமத்தின் முதல் பட்டதாரி. எப்பொழுதும் மன்றம் அது, இது என்று என்னவென்னவோ செய்து கொண்டிருப்பவன். மருதன் முகம் மலர பிரேம்குமாரை வழி மறித்தான்.)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பிரேம்குமார்: என்னண்ணே.....

(மருதன் பிரேம்குமாரிடம் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான். அவனிடம் எதிர்பார்த்தபடி, எந்தப் பதிலும் வரவில்லை.)

பிரேம்குமார்: மருதண்ணே.... நீங்க சொல்றத செய்றதுக்கு கவர்மெண்ட்லே ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கு. நாளைக் காலையிலே அவங்களைப் பார்த்து ஒரு பெட்டி'ன் கொடுத்தீங்கனா செஞ்சுட்டுப் போறாங்க.

(மருதனின் முகம் சிறுத்துப் போய்விட்டது.)

பிரேம்குமார்: எங்க தலைவருக்குப் பிறந்தநாளு வருது. அதுக்கு எல்லா வேலையும் நான்தான் செய்ய வேண்டியிருக்கு. அதுக்குப் பிறகு வேணும்னா நானே வந்து ஏதாவது செய்றேன். வரட்டுமாண்ணே...?

காட்சி 3 முடிந்தது

காட்சி 4

காலம்: மாலை **இடம்:** மருதனின் வீடு **கதை மாந்தர்கள்:** மருதன், அல்லி (மருதனின் மனைவி)

(மருதன் ஊர்மக்கள் அனைவரிடமும் தன் கருத்தைச் சொன்னான். ஆனால் யாரும் அவனுக்கு உதவுவதற்கு முன்வரவில்லை. சோர்வுடன் வீடு திரும்பினான்.)

அல்லி: ஏன் என்னமோ மாதிரி இருக்கே மாமா. உடம்பு கிடம்பு சரியில்லையா?

(வடித்த சுடுகஞ்சியில் இரண்டுகல் உப்பைப் போட்டுக் கலக்கி எடுத்து வந்தாள், அல்லி.)

அல்லி: இதைக்குடி.... சூடா இருக்கு

(அதைக் குடித்துவிட்டு, எல்லாவற்றையும் சொல்லிவிட்டுக் கவலையாக உட்கார்ந்தான்.)

அல்லி: ஏன் மாமா! உனக்குன்னு இந்த ஊர்ல எத்தனை ஏக்கர் நிலம் இருக்கு? நமக்குன்னு சொந்தம் கொண்டாட நம்ம கையும் காலும்தான் இருக்கு. இந்த ஊரு இல்லேன்னா... இன்னொரு ஊரு...

(அல்லி வேகமாகப் பேசிவிட்டு, மருதனுக்கு சாப்பாடு போட்டாள். மருதன் எந்திரமாகச் சாப்பிட்டு, தூங்கினான்.)

காட்சி 4 முடிந்தது

காட்சி 5

காலம்: காலை **இடம்:** வாய்க்கால் **கதை மாந்தர்கள்:** மருதன், அல்லி, மாரிமுத்து, கிழவன், ஊர்மக்கள்

(பொழுது விடிந்ததும் தன் கணவனைக் காணாமல் திடுக்கிட்டாள், அல்லி. ஒருவேளை வாய்க்காலுக்குச் சென்றிருப்பாரோ? என்று எண்ணிக் கொண்டு வேகமாக அங்குச் சென்றாள். இடுப்பளவுத் தண்ணீரில் தனிமையில் நின்று காட்டாமணக்குச் செடிகளை அறுத்துக் கொண்டிருந்தான், மருதன். அவளையறியாமலேயே வாய்க்காலுக்குள் இறங்கினாள், அல்லி.)

அல்லி: நீ சொல்றது நிஜம்தான் மாமா. அதுக்காக இவ்வளவு பெரிய வாய்க்காலை நீயும் நானும் மட்டுமே சுத்தம் பண்ணிட முடியுமா?

மருதன்: முதல்லே நம்மாலே முடிஞ்சதை நாம செய்வோம்....

(சற்றுத் தொலைவில் வலைபோட்டுக் கொண்டிருந்த மாரிமுத்து இவர்களைப் பார்த்துவிட்டு, வலையை மடக்கிக் கரையில் போட்டு, வாய்க்காலுக்குள் இறங்கினான்.)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மாரிமுத்து: நாசமாப்போற செடிங்க, தரைகளிலேயும் மண்டுது, தண்ணியிலேயும் மண்டுது.....

(வில் வண்டியில் சென்றுக் கொண்டிருந்த கிழவர் காளியப்பன் இவர்கள் மூவரையும் கண்டார். உடனே வண்டிக்காரனிடம்....)

கிழவன்: வண்டியை வீட்டுக்குத் திருப்பிப் போடா... எனக்கு இங்கே கொஞ்சம் வேலையிருக்கு.....

(கிழவருக்கு வாய்க்காலுக்குள் இறங்கினார். வண்டிக்காரன்மூலமாக ஊருக்குள் செய்தி பரவியது. ஊர்க்காரர்கள் ஒவ்வொருத்தராகத் தயங்கித் தயங்கி வடிவாய்க்கால் நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.)

உரிமைத் தாகம்

காட்சி 1

காலம்: காலை **இடம்:** முத்தையன் வீடு **கதை மாந்தர்கள்:** முத்தையன், மூக்கம்மா (முத்தையன் மனைவி)

(முத்தையனின் தம்பி பங்காருசாமியிடம் தன் வீட்டைக் கிரயம் எழுதிக் கொடுத்த செய்தியை, தன் மனைவி சொல்லக் கேட்டு திடுக்கிட்டான், முத்தையன்.)

மூக்கம்மா: மேலக்காட்ல கீழத்தாருமேல நம்பிக்கக்கெரையம் எழுதியிருக்குதாமில்ல ஒங்க தம்பி.

முத்தையன்: என்ன இப்படிச் சொல்ற

மூக்கம்மா: மேலூரு பங்காருசாமிகிட்ட இருநூறு ரூபாய் வாங்கித் திருப்பிக் கொடுக்கமுடியாம அந்த ஒரு குறுக்கத்தையும் நம்பிக்கக்கெரையம் எழுதிக் கொடுத்துச்சாம்.

(முத்தையன் தன் தம்பியுடன் இருந்த காலங்களை எண்ணிப் பார்த்தான். சொத்து பாகம் பிரிக்கும்போது ஏற்பட்ட மனக்கசப்பையும் நினைத்துப் பார்த்தான். தம்பியின் வீடு பூட்டியிருப்பதைக் கண்டான்.)

முத்தையன்: வெள்ளப்பெய எங்கயோ போயிருக்கான் போலயிருக்கு. வீடு பூட்டிக் கெடக்குதே...

மூக்கம்மா: மேலூருக்குத்தான் போயிருப்பான். வெதப்பு நேரமில்லையா? எல்லாப் பணத்தையும் கட்டச் சொல்லிட்டாராம். இல்லனா அவரே நிலத்தை எடுத்துப்பாராம்.

முத்தையன்: கையில துட்டுல்லாமப் போய் என்ன செய்யப் போறான். அவருக்கென்ன இது பத்தோட ஒண்ணு. நமக்கு இதுதான் உசுரு.

(முத்தையன் பேசியதைக் கேட்டு மூக்கம்மா தன் நகைகளைக் கழற்றிக் கொண்டிருந்தாள்.)

மூக்கம்மா: இந்தாங்க இதக் கொண்டுபோய் வச்சி, பணத்தை வாங்கி அவர் கடனை அடைச்சிடுங்க...

காட்சி 1 முடிந்தது

காட்சி 2

காலம்: நண்பகல் **இடம்:** வெள்ளைச்சாமி வீடு

கதை மாந்தர்கள்: முத்தையன், வெள்ளைச்சாமி (முத்தையனின் தம்பி)

(வெள்ளைச்சாமி தன் வீட்டில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் மனைவி வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தாள். முத்தையனுக்கு அங்கு செல்ல மனமில்லை. இருந்தாலும், ஒரு வைராக்கியத்தில் சென்றான்.)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

முத்தையன்: வெள்ள இருக்கானா...?

(வெள்ளைச்சாமி எழுந்து உட்கார்ந்தான்.)

முத்தையன்: என்னடா ஊரு முழுக்க வெதப்பு மும்முரத்துல அலையிது. நீ பாட்டுக்கு உக்காந்துட்டிருந்தா எப்படி? எங்க போயிருந்த இன்னேரவரைக்கு?

வெள்ளைச்சாமி: மேலூரு பங்காருசாமிகிட்டப் போயிருந்தேன்

முத்தையன்: அவருகிட்ட என்ன சோலி

வெள்ளைச்சாமி: ஒரு இருநூறு தரணும். வாங்கி ரெண்டு வருசமாச்சு. ஆறு மாசத்துக்கு முன்னால மேலக்காட்டக் கெரையம் எழுதி வச்சேன்.

முத்தையன்: அப்படியென்னடா வந்துருச்சு பாடுபடுற நெலத்த எழுதிக் குடுக்கணும்னு. நான் ஒருத்தன் கெடக்கன்ல. என்கிட்ட சொல்ல வேண்டியதுதான?

(வெள்ளைச்சாமி அமைதியாக இருந்தான்)

முத்தையன்: சரிசரி அது போகட்டும். நெலத்த அறுதியா எழுதிக்கொடுத்துட்டியா? இல்ல நம்பிக்கையாவா? பத்தரம் முடிச்சாரா?

வெள்ளைச்சாமி: நம்பிக்கையாத்தான். வட்டிக்கீடா எழுதி வாங்குனாரு. கெராமுனுசுதான் எழுதுனாரு.

முத்தையன்: அம்புட்டுத்தானா? நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டிருந்தேன். நான் மேலூருவரைக்கும் போயித் திரும்புறென்.

(முத்தையன் புறப்பட்டான்.)

காட்சி 2 முடிந்தது

காட்சி 3

காலம்: மாலை **இடம்:** பங்காருசாமியின் வீடு **கதை மாந்தர்கள்:** முத்தையன், பங்காருசாமி

முத்தையன்: கும்புடுறென் சாமி

பங்காருசாமி: வாப்பா. என்ன முத்தையன் ஆளு இந்தப்பக்கம் தட்டுப்பட மாட்டயே. புதுசா வந்தாப்புலருக்கு என்ன சங்கதி.

முத்தையன்: எந்தம்பி என்னமோ பாக்கி குடுக்க வேண்டியதா கேள்விப்பட்டென். அவன் ஒரு சின்னப்பய. எனக்குத் தெரியாம நடந்து போச்சு. அதக் கணக்குப் பாத்துத் தீர்த்துகிறலாம்னுதான்

பங்காருசாமி: என்னப்பா இது ஒனக்கும் ஒந்தம்பிக்கும் மனக்கசப்பாச்சே. அவனுக்காக நீ வந்து நிக்கயே.

முத்தையன்: அண்ணன் தம்பிக்குள்ள ஆயிரம் இருக்கும் சாமி.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பங்காருசாமி: அது சரிதான்.... ஆமா கையேந்தி ரூவா வாங்குனவன் வெள்ளையனாச்சே. நானூறுக்குக் கெரையம் வேறு இருக்குது.

முத்தையன்: எரநூறுன்னுதான் சொன்னான். வட்டிவேற குடுத்துட்டானாம். அசலக் கொண்டு வந்துருக்கென்.

பங்காருசாமி: இந்தாப்பா ஒம்பாட்டுக்குப் பேசீட்டே போற. நானூறுக்குகு அறுதிக் கெரையம் எழுதியாச்சு.

முத்தையன்: நீங்க பாத்து அப்படிச் சொல்லலாமா? ஒங்க பணத்த ஆரும் இல்லன்னு சொல்லீட்டாகளா? வாங்குன கடனத் திருப்பிக் கொடுத்தா நோட்டக் கிழிச்செறியிறதுதான் மரியாத.

பங்காருசாமி: அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதுதான?

முத்தையன்: இந்தப் பேச்செல்லாம் வேணாம். எதுக்கு ஒரு அளவு வேணாமா? நாளைக்குப் பிஞ்ச வெதப்பு நடக்கும். ஓரெட்டு வந்து பாத்துட்டுப் போங்க.

(பங்காருசாமி விருட்டென்று உள்ளே போய்விட்டார்.)

காட்சி 3 முடிந்தது

காட்சி 4

காலம்: விடியற்காலை **இடம்:** வெள்ளைச்சாமியின் வயல்

கதை மாந்தர்கள்: முத்தையன், பங்காருசாமி, வெள்ளைச்சாமி

(விடியற்காலையில், ஏர் பூட்டியாகிவிட்டது. முத்தையன் நிலத்தைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு கயிற்றைப் பிடித்தான். பங்காருசாமி அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். வேகமாகப் புஞ்சைக்கு நடந்தார்.)

பங்காருசாமி: ஏ... முத்தையா ஒன்னத்தாம்பா... ரெண்டு பேருக்கும் போங்காலம் வந்துருச்சா? பேசாம உண்டான ரூவாயக் கெட்டீட்டுப் பிஞ்சைய உழுங்க.

(வெள்ளைச்சாமி கோவமாக, மட்டியைக் கடித்துச் சாட்டைக் கம்பை மாறிப்பிடித்தான்.)

முத்தையன்: அடே நீ சும்மாருடா... அவன நான் கவனிச்சுக்கிறேன். யோவ். என்ன சொன்ன? இப்ப ஆருக்கு வலிக்கப்போகுதுன்னு பாக்கயா?

(முத்தையன் கோவமாக பங்காருசாமியை நோக்கி ஓடினான். பின்னாடியே வெள்ளைச்சாமியும் சென்றான். காரியம் கெட்டுவிட்டதை எண்ணி, பங்காருசாமி தொபுதொபுவென்று மேலூரை நோக்கி ஓட ஆரம்பித்தார்.)

காட்சி 4 முடிந்தது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப்பேழை

நூற்பெயர் - ஆசிரியர் பெயர்

நூற்பெயர்	ஆசிரியர் பெயர்
இளந்தமிழே	**சிற்பி பாலசுப்பிரமணியம்**
தண்டியலங்காரம்	**தண்டி**
பிறகொரு நாள் கோடை	**அய்யப்ப மாதவன்**
நெடுநல்வாடை	**நக்கீரர்**
விருந்தினர் இல்லம்	**ஜலாலுத்தீன் ரூமி**
கம்பராமாயணம்	**கம்பர்**
திருக்குறள்	**திருவள்ளுவர்**
இதில் வெற்றிபெற	**சுரதா**
இடையீடு	**சி. மணி**
புறநானூறு	**ஔவையார்**
தெய்வமணிமாலை	**இராமலிங்க அடிகளார்**
தேவாரம்	**திருஞானசம்பந்தர்**
அகநானூறு	**அம்மூவனார்**
கவிதைகள்	**நகுலன்**
சிலப்பதிகாரம்	**இளங்கோவடிகள்**
மெய்ப்பாட்டியல்	**தொல்காப்பியர்**
அதிசயமலர்	**தமிழ்நதி**
தேயிலைத் தோட்டப் பாட்டு	**முகம்மது இராவுத்தர்**
புறநானூறு	**பிசிராந்தையர்**
முகம்	**சுகந்தி சுப்பிரமணியன்**
இரட்சணிய யாத்ரிகம்	**எச்.ஏ. கிருட்டிணனார்**
சிறுபாணாற்றுப்படை	**நத்தத்தனார்**

நூல்வெளிகள்

இளந்தமிழே

★ சிற்பி பாலசுப்பிரமணியின் கவிதைத் தொகுப்பு **நிலவுப்பூ**.

★ நிலவுப்பூ என்னும் கவிதைத் தொகுப்பில் இடப்பெற்றுள்ள கவிதை **இளந்தமிழே**.

★ பாலசுப்பிரமணியின் பன்முகத்தன்மை **கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர்**.

★ பாரதியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராகப் பணியாற்றியவர் **பாலசுப்பிரமணியம்**.

★ சாகித்திய அகாதமி விருது பெற்ற கவிதை **ஒரு கிராமத்து நதி**.

★ இருமுறை சாகித்திய அகாதமிப் பரிசு பெற்றவர் **சிற்பி பாலசுப்பிரமணியம்.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
ஒருவரிச் செய்திகள்
www.Padasalai.Net

★ சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழிகள் **ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி**.

★ அறிவில் ஆதவன் ★ வளவன் **அறிவில் ஆதவனாக**த் திகழ்கின்றான்.

5. தங்கை

★ தங்கை ★ எனக்கு ஒரு **தங்கை** இருக்கிறாள்.

★ தம் கை ★ **தம் கை**யே தனக்கு உதவி ஆகும்.

6. வைகை

★ வைகை ★ மதுரையில் **வைகை** ஆறு பாய்கிறது.

★ வை கை ★ முருகன், வேலனிடம் தன் தோள்மீது "**வை கை**" என்றான்.

7. நஞ்சிருக்கும்

★ நஞ்சிருக்கும் ★ மிகவும் பழுத்த பழம் **நஞ்சிருக்கும்**.

★ நஞ்சு இருக்கும் ★ தேளின் கொடுக்கில் **நஞ்சு இருக்கும்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8.அண்டங்காக்கை

★ அண்டங்காக்கை ★வானத்தில் **அண்டங்காக்கை** பறந்து செல்கின்றது.

★ அண்டம் கா கை - உலகத்தைக் காக்கும் கை ★**அண்டம் கா கை**களை உடையவன், இறைவன்.

9. அந்தமான்

★ அந்தமான் ★ என் நண்பன் **அந்தமானில்** உள்ளான்.

★ அந்த மான் ★ **அந்த மான்** மிகவும் அழகாக உள்ளது.

10. வெந்தயம்

★ வெந்தயம் ★**வெந்தயம்** என்னும் உணவுப் பொருள் உடல் சூட்டைக் குறைக்கும்.

★ வெந்து அயம் - வெந்த ஆடு ★ **வெந்த அயத்தை** மக்கள் விரும்பி உண்கின்றனர்.

11. பழங்கள்

★ பழங்கள் ★ நான் உண்ட **பழங்கள்** மிகவும் நன்றாக இருந்தது.

★ பழமை+கள் - பழமையான கள் ★ **பழைய கள்** குடித்தால் உடலுக்கு நல்லது.

12. சீரகம்

★ சீரகம் ★ உடலைப் பாதுகாக்க, உணவில் **சீரகம்** சேர்க்கப்படுகிறது.

★ சீர் அகம் - சிறந்த உள்ளம் ★ **சீரிய அகம்** கொண்டவள் தாய்.

13. பெருங்காயம்

★ பெருங்காயம் ★ **பெருங்காயம்** உணவில் வாசனையைக் கூட்டும்

★ பெரும் காயம் - பெரிய காயம் ★ விபத்தில் அடிபட்டவர்களுக்கு **பெரும் காயம்** ஏற்பட்டது.

14. நங்கை

★ நங்கை ★ ஒரு இளம் **நங்கை** நடந்து சென்றாள்.

★ நம் கை ★ இறைவன் கொடுத்த பரிசுகளில் ஒன்று **நல்ல கைகள்**.

15. நடைமுறை

★ நடைமுறை ★அனைவருக்கும் கல்வி என்ற கொள்கை **நடைமுறையில்** உள்ளது.

★ நடை முறை - நடக்கும் முறை ★ குழந்தையின் **நடை முறையற்று** இருக்கும்.

16. துதிக்கை

★ துதிக்கை ★ **துதிக்கை** உடைய விலங்கு யானை.

★ துதி கை - வணங்கும்போது ★ இறைவனைத் **துதி கை**யில் மனம் அமைதி அடையும்.

17. இரும்படி

★ இரும்படி ★ கந்தன் **இரும்படி**யையும் தாங்கும் வலிமை கொண்டவன்.

★ இரும் படி - இருக்கும்படி ★ வகுப்பில் **இரும் படி** ஆசிரியர் கூறினார்.

18. எழுவாய்

★ எழுவாய் ★ சொற்றொடரில் முதலில் அமைவது **எழுவாய்**.

★ எழு வாய் - எழுந்திருப்பாய் ★ ஆசிரியர் மாணவனை **எழு வாய்** என்றார்.

19. உருவகம்

★ உருவகம் ★ ஒப்பீட்டுச் செறிவு சிறப்பாக அமைவது உருவகம்.

★ உரு அகம் ★ உருவத்தின் முகத்தைக் காட்டிலும் உரு அகமே சிறந்தது.

20.கண்டுவந்தேன்

★ கண்டுவந்தேன் ★ நான் நேற்று என் நண்பனைக் **கண்டுவந்தேன்**.

★ கண்டு உவந்தேன் ★ குற்றாலத்தின் இயற்கை அழகைக் **கண்டு உவந்தேன்**.

21. பிடியானை

★ பிடியானை - பெண்யானை ★ **பிடியானை** களிற்றைத் தேடிச் சென்றது.

★ பிடி யானை ★அரசன் பாகனிடம் "**பிடி யானையை**" என்று கட்டளையிட்டான்.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மயங்கொலிச் சொற்கள்

ல, ள, ழ வேறுபாடு

சொல்	பொருள்
கலம்	பாத்திரம்
களம்	இடம்
பலம்	வலிமை
பழம்	கனி
குலம்	சாதி
குளம்	நீர்நிலை
விலங்கு	மிருகம்
விளங்கு	சிறப்புடன் இரு
விலக்கு	நீக்கு
விளக்கு	ஒளி, தெளிவாகக் கூறு
விலா	வயிற்றின் பக்கப் பகுதி
விளா	ஒரு வகை மரம்
விழா	திருவிழா
அலி	மூன்றாம் பாலினத்தவர்
அளி	கொடு
அழி	கெடு
ஒலி	ஓசை
ஒளி	வெளிச்சம்
ஒழி	அழி
வலி	வலித்தல்
வளி	காற்று
வழி	பாதை
புலி	ஒரு வகை விலங்கு
புளி	ஒரு வகை பழம்
காலை	காலைப்பொழுது
காளை	எருது
வலம்	வலப்பக்கம்
வளம்	செழிப்பு
வேலை	தொழில், கடல்
வேளை	நேரம்
வெல்லம்	இனிப்புப் பொருள்
வெள்ளம்	நீர்ப்பெருக்கு
கொல்	உயிரை எடு
கொள்	பெறுதல்

பல்லி	ஒரு வகை உயிரினம்
பள்ளி	கல்விக்கூடம்
ஆல்	ஒரு வகை மரம்
ஆள்	மனிதன்
ஆழ்	ஆழமான
கிலி	அச்சம்
கிளி	ஒரு வகை பறவை
கிழி	கிழித்தல்
விலை	பொருளின் மதிப்பு
விளை	உண்டாக்கு
விழை	விருப்பம்
வாலை	இளம்பெண்
வாளை	ஒரு வகை மீன்
வாழை	ஒரு வகை மரம்
கலை	வித்தை
களை	தேவையற்ற பயிர்
கழை	மூங்கில்
அலை	கடல் அலை
அளை	புற்று, தயிர்
அழை	கூப்பிடு
இலை	தாவரங்களின் ஓர் உறுப்பு
இளை	மெலிந்து போதல்
இழை	நூல் இழை
குலை	கொத்து
குழை	குழைதல்
மலை	பெருங்குன்று
மழை	மழை
சூலை	ஒரு வகை நோய்
சூளை	செங்கல் சூளை
வலை	மீன் பிடிக்கும் வலை
வளை	வளைவு
வழை	ஒரு வகை மரம்
தலை	உடலின் ஓர் உறுப்பு
தளை	கட்டுதல்
தழை	இலை, புல் போன்றவை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உலை	அடுப்பு உலை
உளை	பிடரி மயிர், சேறு
உழை	உழைத்தல், பாடுபடுதல்

தொலை	அழித்துவிடு, தூரம்
தொளை	சந்து, ஓட்டை
புல்	ஒரு வகை தாவரம்
புள்	பறவை
வால்	விலங்குகளின் ஓர் உறுப்பு
வாள்	ஒரு வகை ஆயுதம்
வாழ்	வாழ்தல்

ண, ந, ன வேறுபாடு

சொல்	பொருள்
கணம்	நேரம்
கனம்	பளு
ஆணி	கூரிய இரும்புத்துண்டு
ஆனி	தமிழ் மாதங்களில் ஒன்று
கணி	கணக்கெடுத்தல்
கனி	பழம்
தணி	அடங்கு
தனி	தனித்திருத்தல்
மணம்	வாசனை
மனம்	உள்ளம்
பாணம்	அம்பு, ஒரு வகை பட்டாசு
பானம்	நீர் உணவு
துணி	ஆடை, துணிவு
துனி	துன்பம், கோபம், அச்சம்
பணி	வேலை
பனி	உறைபனி
கணை	அம்பு
கனை	கனைத்தல்
திணை	பகுதி, பிரிவு
தினை	ஒரு வகை தானியம்
பணை	மூங்கில், முரசு
பனை	ஒரு வகை மரம்
மணை	உட்காரும் பலகை
மனை	வீடு
அண்ணம்	மேல்வாய்
அன்னம்	ஒரு வகை பறவை, உணவு

அரண்	மதில், கோட்டை, பாதுகாப்பு
அரன்	சிவன்
உண்	சாப்பிடு
உன்	உன்னுடைய
ஊண்	உணவு
ஊன்	மாமிசம்
எண்	எண்ணிக்கை, நினை
என்	என்னுடைய
எண்ண	நினைக்க
என்ன	வினா சொல்
காண்	பார்
கான்	காடு
தண்	குளிர்ந்த
தன்	தன்னுடைய
திண்மை	வலிமை
தின்மை	தீமை
நாண்	கயிறு, வெட்கப்படு
நான்	தன்னைக் குறிக்கும் சொல்

ர, ற வேறுபாடு

சொல்	பொருள்
அரம்	இரும்புக் கருவி
அறம்	தருமம்
இரத்தல்	பிச்சையெடுத்தல்
இறத்தல்	மரணித்தல்
அரன்	சிவன்
அறன்	தருமம்
அரி	வெட்டு, திருமால்
அறி	தெரிந்து கொள்
அரை	பாதி, அரைத்தல்
அறை	வீட்டின் பகுதி, அடித்தல்
இரை	உணவு
இறை	கடவுள்
உரை	சொல்
உறை	மூடி
கரி	அடுப்புக் கரி, யானை
கறி	காய்கறி, இறைச்சி
கருப்பு	பஞ்சம்
கறுப்பு	கரிய நிறம்
கோருதல்	வேண்டுதல்

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கோறுதல்	**கொல்லுதல்**
கூரிய	**கூர்மையான**
கூறிய	**சொல்லிய**
கூரை	**மேற்பரப்பு**
கூறை	**புதிய துணி**
சீரடி	**சிறந்த அடி**
சீறடி	**சிறிய அடி**
நிரை	**வரிசை**
நிறை	**எடை, நிறுத்தல்**
பரவை	**கடல்**
பறவை	**பறக்கும் உயிரினம்**
பொரி	**நெற்பொரி**
பொறி	**இயந்திரம்**
விரகு	**சூழ்ச்சி**
விறகு	**அடுப்பெரிக்கும் கட்டை**
மாரி	**மழை**
மாறி	**மாற்றம்**

மாரன்	**மன்மதன்**
மாறன்	**பாண்டியர் குலப்பெயர்**
ஏரி	**நீர்நிலை**
ஏறி	**மேலே சென்று**
குரங்கு	**ஒரு வகை உயிரினம்**
குறங்கு	**தொடை**
திரம்	**உறுதி**
திறம்	**வலிமை**
பரி	**குதிரை**
பறி	**பிடுங்கு**
அலரி	**ஒரு வகை பூ**
அலறி	**கதறி**
விரல்	**உடலின் ஓர் உறுப்பு**
விறல்	**வலிமை, வெற்றி**
துரவு	**கிணறு**
துறவு	**சந்நியாசம்**

பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க

(எ.கா.) களம், கலம்.

★ போர்க்**களத்தில்** புண்பட்ட வீரர்களுக்கு **கலத்தில்** நீர் தரப்பட்டது.

வலம், வளம்

★ ஆற்றின் **வலப்புறம்** உள்ள வயல்கள் நீர்**வளத்தால்** செழித்திருந்தன.

1. புல் - புள் புல் - புற்கள்; புள் - பறவை

★ **புல்தரையில்** **புட்கள்** இருந்தன.

2. உழை - உளை உழை - உழைப்பு; உளை - வருத்தம்

★ கடுமையாக **உழைத்தும்**, பணம் வரவில்லை என்று விவசாயியின் மனம் **உளைந்தது.**

3. கான் - காண் கான் - காடு; காண் - பார்

★ **கானகத்தில்** உள்ள விலங்குகளைக் **காண்பது** மகிழ்ச்சி அளிக்கும்.

4. ஊண் - ஊன் ஊண் - உணவு; ஊன் - இறைச்சி

★ சிங்கம், மானின் **ஊனை** **ஊணாகக்** கொள்ளும்.

5. தின்மை - திண்மை தின்மை - தீமை; திண்மை - வலிமை

★ **திண்மை** உடையவர்கள், பிறருக்குத் **தின்மை** செய்யக் கூடாது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

எ.கா. விலை, விளை, விழை (**பொருளின் விலை - பயிர் விளைச்சல் - விருப்பம்**)

★ கார் பருவத்தில் நன்றாக **விளைந்ததால்** தானியங்களின் **விலை** குறையாமலிருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள **விழைவதாக** அரசு அறிவித்தது.

1. தலை, தளை, தழை — தலை - **உடலின் ஓர் உறுப்பு;** தளை - **கட்டுதல்;** தழை - இலை **தழை**

★ சிறுவன் ஒருவன் **தழைகளைத்** **தளைத்து** **தலையில்** சூட்டிக் கொண்டான்.

2. கலை, களை, கழை — கலை - **வித்தை;** களை - **முகப்பொலிவு;** கழை - **மூங்கில்**

★ **களையான** முகத்துடன் இருந்த பெண் **கழையைக்** கொண்டு, **கலை** நிகழ்த்தினாள்.

3. அலை, அளை, அழை — அலை - **கடல் அலை;** அளை - **புற்று;** அழை - **கூப்பிடு**

★ கடற்கரை மணலில் **அளையைக்** கட்டி, **அலையில்** விளையாடிய தன் குழந்தையை **அழைத்தாள்** தாய்.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. வலி - நோய்; வளி - காற்று; வழி - பாதை

★ **வளிமண்டலத்தில்** **வழிதெரியாமல்** விமானத்தின்மீது மோதியபறவை **வலியால்** துடித்து இறந்தது.

2. கனை - குரல் ஒலி, கணை - அம்பு

★ போர்க்களத்தில் **கணையால்** அடிப்பட்ட குதிரை **கனைத்தது.**

3. குரை - ஒலி, குறை - சிறிது, சுருங்குதல்

★ எங்கள் வீட்டிற்கருகில் இப்போதெல்லாம் நாய்கள் **குரைக்கும்** ஓசை **குறைந்துவிட்டது.**

4. பொரி - நெல் பொரி, பொறி - இயந்திரம்

★ கண்ணன் **பொரியைத்** தின்று கொண்டே **பொறியில்** இருந்த பழுதைச் சரி பார்த்தான்.

5. பலம் - வலிமை; பழம் - கனி

★ நல்ல **பழங்களை** உண்டால், உடல் **பலம்** பெறும்.

6. விலக்கு - நீக்கு; விளக்கு - ஒளி

★ வீட்டில் ஏற்றிய **விளக்கு** இருளை **விலக்கியது.**

7. ஒலி - ஓசை; ஒளி - வெளிச்சம்

★ வான வேடிக்கை **வெடிக்கும்போது** ஒலியும் **ஒளியும்** தோன்றும்.

8. வளி - காற்று; வழி - பாதை

★ நான் சென்ற **வழியில்** **வளி** வேகமாக வீசியது.

9. புலி - ஒரு வகை விலங்கு; புளி - ஒரு வகை மரம்

★ ஊரின் எல்லையில் உள்ள **புளிய மரத்தின்** அடியில் ஒரு **புலி** இருந்தது.

10. காலை - ஒரு பொழுது; காளை - எருது

★ வேலன் **காலை** எழுந்ததும் **காளையைக்** குளிப்பாட்டினான்.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. பல்லி - ஒரு வகை உயிரினம்; பள்ளி - கல்விக்கூடம்

★ **பள்ளிக்கூடத்தின்** சுவரில் ஒரு **பல்லி** இருந்தது.

12. ஆல் - ஆலமரம்; ஆள் - மனிதன்

★ ஓர் **ஆள்** நிழலில் நிற்பதற்காக **ஆலமரத்தின்** அருகில் வந்தான்.

13. கிலி - அச்சம்; கிளி - ஒரு வகை பறவை

★ காட்டில் உள்ள **கிளிக்குக்** கழுகைப் பார்த்தால் **கிலி** ஏற்படும்.

14. மலை - பெருங்குன்று; மழை - மழை பெய்தல்

★ **மலைகள்** மேகங்களைத் தடுத்து **மழையைப் பொழியச்** செய்கிறது.

15. சூலை - ஒரு வகை நோய்; சூளை - செங்கல் சூளை

★ செங்கல் **சூளையில்** வேலை செய்யும் கந்தனுக்கு **சூலை** நோய் உள்ளது.

16. வலை - மீன் பிடிக்கும் வலை; வளை - வளையல்; வழை - ஒரு வகை மரம்

★ **வளையல்** அணிந்த பெண் **வழை** மரத்தின் அடியில் அமர்ந்து, **வலை** பின்னினாள்.

17. உலை - சமைக்கும் உலை; உளை - சேறு; உழை - பாடுபடு

★ வளவன் **உளையில்** கடினப்பட்டு **உழைத்தால்**தான் அவன்வீட்டில் **உலை** கொதிக்கும்.

18. கணம் - நேரம்; கனம் - பளு

★ **கனம்** மிகுதியான பொருள்களைக் கொண்டு செல்ல அதிக **கணம்** ஆகும்.

19. ஆணி - கூரிய இரும்புத் தண்டு; ஆனி - ஒரு தமிழ் மாதம்

★ **ஆனி** மாதம் புது வீட்டில் குடியேறுவதற்காக, சுவற்றில் **ஆணி** அடிக்கப்பட்டது.

20.கணி - கணக்கெடுத்தல்; கனி - பழம்

★ உழவர் தன் தோட்டத்தில் பறிக்கப்பட்ட **கனிகளைக் கணித்தார்**.

21. தணி - அடங்குதல்; தனி - தனித்திருத்தல்

★ சில நேரங்களில் **தனித்திருத்தலே** கோபத்தைத் **தணிக்கின்றது.**

22.மணம் - வாசனை; மனம் - உள்ளம்

★ மலர்களில் இருந்து வரும் **மணம் மனத்தை** நிம்மதியடையச் செய்கிறது.

23.துணி - துணிவு; துனி - துன்பம்

★ வாழ்வில் எத்தகைய **துன்பம்** வந்தாலும், எதிர்க்கொள்ளும் **துணிவு** வேண்டும்.

24.பணி - வேலை; பனி - பனி பொழிவு

★ **பனி** அதிகமாக இருந்தால், மலைப்பகுதிகளில் **பணி** செய்வது கடினம்.

25.கணை - அம்பு; கனை - கனைத்தல்

★ **கணையால்** அடிபட்ட குதிரை, வலியைத் தாங்க முடியாமல் **கனைத்தது.**

26.பணை - மூங்கில்; பனை - ஒரு வகை மரம்

★ **பணையும் பனையும்** உயரமாக வளரக் கூடிய தாவரங்கள் ஆகும்.

27. மணை - உட்காரும் பலகை; மனை - வீடு

★ அனைவரின் **மனைகளிலும்** உட்காருவதற்காக **மணை** இருக்கும்.

28.அரண் - பாதுகாப்பு; அரன் - சிவன்

★ **அரனை** வணங்கினால், **அரண்** கிடைக்கும் என்று கூறுவர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

29.உண் - உண்ணுதல்; உன் - உன்னுடைய

★ தாய் தன் மகனிடம், "**உன் விருப்பப்படி உண்**" என்றார்.

30. ஊண் - உணவு; ஊன் - மாமிசம்

★ ஆடு, கோழியின் **ஊன்** மனிதனுக்கு **ஊணாகிறது.**

31. காண் - பார்; கான் - காடு

★ ஆசிரியர் மாணவர்களிடம், "மரங்கள் நிறைந்த **கானைக் காணுங்கள்**" என்றார்.

32. தண் - குளிர்ந்த; தன் - தன்னுடைய

★ மாறன் **தன்** வீட்டைத் **தண்** என்று வைத்துக்கொள்ள எண்ணினான்.

33.திண்மை - வலிமை; தின்மை - தீமை

★ மனத்தில் **திண்மை** இல்லாதவிட்டால், **தின்மையைக்** கண்டு அச்சம் ஏற்படும்.

34.நாண் - கயிறு; நான் - தன்னைக் குறித்தல்

★ **நான்** நேற்று **நாண்** வாங்க கடைக்குச் சென்றேன்.

35.அரம் - இரும்புக் கருவி; அறம் - தருமம்

★ மரத்தை அறுப்பது **அரம்**; மரத்தை வளர்ப்பது **அறம்**.

36. இரத்தல் - பிச்சையெடுத்தல்; இறத்தல் - உயிரிழத்தல்

★ பிறரிடம் **இரந்து** வாழ்வதைக் காட்டிலும் **இறப்பதே** மேல்.

37. இரை - உணவு; இறை - கடவுள்

★ **இரைத்** தேடுவதோடு **இறையும்** தேடு என்பது ஆன்றோர் வாக்கு.

38.கரி - யானை; கறி - இறைச்சி

★ **கரி கறி** உண்ணாது.

39.கூரிய - கூர்மையான; கூறிய - சொன்ன

★ கந்தன் **கூறிய** சொற்கள், முருகன் மனத்தில் **கூரிய** அம்பைப் போல் காயத்தை ஏற்படுத்தின.

40. சீரடி - சிறந்த அடி; சீறடி - சிறிய அடி

★ திருக்குறள் **சீரடிகளையும் சீறடிகளையும்** கொண்ட நூல்.

41. பரவை - கடல்; பறவை - பறக்கும் உயிரினம்

★ **பறவை பரவைமீது** பறந்து சென்றது.

42. பொரி - நெற்பொரி; பொறி - இயந்திரம்

★ மகிழன் **பொரி** தின்றுக் கொண்டு **பொறியில்** வேலை செய்தான்.

43.மாரி - மழை; மாறி - மாற்றம்

★ நாட்டில் **மாரி** பொழிந்ததால், வறுமை **மாறி** வளம் கொழிக்கிறது.

44. ஏரி - நீர்நிலை; ஏறி - மேலே சென்று

★ குரங்கு **ஏரிக்கரையில்** உள்ள மரத்தின்மீது **ஏறிச் சென்றது.**

45. திரம் - உறுதி; திறம் - வலிமை

★ யானை **திரமும் திறமும்** உள்ள விலங்கு.

46. அலரி - ஒரு வகைப் பூ; அலறி - கதறி

★ தோட்டத்தில் **அலரி பறிக்கச் சென்ற** வானதி பாம்பைக் கண்டு **அலறிக் கொண்டு ஓடினாள்.**

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மரபுச்சொற்கள்

பறவை	ஒலி மரபு
ஆந்தை	அலறும்
காக்கை	கரையும்
கிளி	கொஞ்சும்
குயில்	கூவும்
குருவி	கீச்சிடும்
கூகை	குழறும்
கோழி	கொக்கரிக்கும்
சேவல்	கூவும்
மயில்	அகவும்
வாத்து	கத்தும்

விலங்கு	ஒலி மரபு
ஆடு	கத்தும்
கழுதை	கத்தும்
குதிரை	கனைக்கும்
சிங்கம்	முழங்கும்
நரி	ஊளையிடும்
நாய்	குரைக்கும்
பசு	கதறும்
புலி	உறுமும்
மாடு	எக்காளமிடும்
யானை	பிளிறும்

தாவரம்	இலையின் பெயர்
மா, வாழை, மூங்கில்	இலை
நெல், வெங்காயம்	தாள்
பனை	ஓலை
கேழ்வரகு, சோளம், கம்பு	தட்டை
தாழை	மடல்
வேம்பு	தழை
தென்னை	கீற்று

தாவரம்	அடிப்பகுதி பெயர்
நெல், கேழ்வரகு	தாள்
கீரை, வாழை	தண்டு
நெட்டி, மிளகாய்ச்செடி	கோல்
குத்துச்செடி, புதர்	தூறு
கம்பு, சோளம்	தட்டு
கரும்பு	கழி
மூங்கில்	கழை
புளி, வேம்பு	அடி

பெயர்	இளமைப் பெயர்
மான், பசு, யானை	கன்று
அணில், கீரி, கிளி	பிள்ளை
குருவி, எலி, கோழி	குஞ்சு
ஆடு, நாய், பூனை, குதிரை, குரங்கு	குட்டி
சிங்கம்	குருளை
புலி	பறழ்

தாவரத்தின் பெயர்	பிஞ்சு நிலை பெயர்
பூவோடு சூடிய இளம்பிஞ்சு	பூம்பிஞ்சு
இளம்காய்	பிஞ்சு
மாங்காய்	வடு
பலா	மூசு
எள்	கவ்வை
தென்னை, பனை	குரும்பை
தேங்காய்	இளநீர்
பாக்கு	நுழாய்
நெல்	கருக்கல்
வாழை	கச்சல்

தாவரப்பயிர்கள்	இளம்பயிர்
நெல் கத்தரி	நாற்று
மா, புளி, வாழைக் குருத்து	கன்று
தென்னை	பிள்ளை
விளா	குட்டி
பனை	மடலி/ வடலி
நெல், சோளம்	பைங்கூழ்

தாவரம்	கொழுந்தின் பெயர்
நெல், புல்	துளிர்
புளி, வேம்பு	முறி
சோளம், கரும்பு, தென்னை, பனை	குருத்து

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சொல்	பூவின் நிலை
அரும்பு	தோற்றநிலை
போது	விரியத் தொடங்கும் நிலை
அலர்	மலர்ந்த நிலை
வீ	கீழேவிழும் நிலை
செம்மல்	வாடிய நிலை

சொல்	தோலின் நிலை
தொலி	மிக மெல்லியது
தோல்	திண்மையானது
தோடு	வன்மையானது
ஓடு	மிக வன்மையானது
குடுக்கை	சுரையின் ஓடு
மட்டை	தேங்காய் நெற்றின் மேற்பகுதி
உமி	நெல்லின் மேற்பகுதி
கொம்மை	வரகின் மேற்பகுதி

தாவரம்	குலை பெயர்
அவரை, துவரை	கொத்து
முந்திரி	குலை
வாழை	தாறு
வாழைத்தாறின் பகுதி	சீப்பு
கேழ்வரகு, கதிர்	கதிர்
நெல், தினை	அலகு

தாவரங்கள்	தொகுப்பு பெயர்
மா, பலா, தென்னை, சவுக்கு, கொய்யா	தோப்பு
கரும்பு, வாழை, வெற்றிலை, தேயிலை, பூ	தோட்டம்
சோளம், கம்பு	கொல்லை
பனை, ஈச்சம், வேலம்	காடு
பூ	சோலை

பொருள்களின் தொகுப்பு			
பொருள்	தொகுப்பு பெயர்	பொருள்	தொகுப்பு பெயர்
ஆடு	ஆட்டுமந்தை	சாவி	சாவிக்கொத்து
பசு	பசுநிரை	பணம்	பணக்கட்டு
யானை	யானைக்கூட்டம்	விறகு	விறகுக்கட்டு
எறும்பு	எறும்புச் சாரை	திராட்சை	திராட்சைக்குலை
கல்	கற்குவியல்	வைக்கோல்	வைக்கோற்போர்

வினை மரபுகள்			
தீ **மூட்டு**	அம்பு **எய்**	வில்லை **வளை**	பழம் **தின்**
சோறு **உண்**	பால் **பருகு**	தயிர் **கடை**	ஏர் **உழு**
நீர் **குடி**	தேன் **நக்கு**	பழச்சாறு **அருந்து**	மாத்திரை **விழுங்கு**
களை **பறி**	செடி **நடு**	கல் **உடை**	கூரை **வேய்**
நார் **கிழி**	கதிர் **அறு**	நெல் **தூற்று**	சோறு **சமை**
விறகு **பிள**	பறை **கொட்டு**	விளக்கு **ஏற்று**	வீடு **கட்டு**
கோலம் **இடு**	மாவு **இடி**	சோறு **வடி**	பொருள் **ஈட்டு**

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தொடரிலுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
   ★ வாழைத்**தோப்பில்** குயில்கள் **கூவி**க்கொண்டும் காகங்கள் **கரைந்துக்**கொண்டும் இருந்தன.
2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
   ★ முருகன் சோறு **உண்டு**, பால் **பருகினான்**.
3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.
   ★ கோவிந்தன் குடியிருக்க சுவர் **எழுப்பிக்** கூரை **வேய்ந்தார்.**
4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.
   ★ வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் **குருளையும்** யானைக் **கன்றும்** கண்டேன்.
5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
   ★ ஆட்டுப்**பட்டியைச்** சுற்றிலும் எலிகள் **வளைகள்** அமைத்திருந்தன.
6. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
   ★ பனை **ஓலையால்** கூரை **வேய்ந்திருந்தனர்.**

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. யானை குஞ்சு உணவு உண்டது.
★ யானைக்**கன்று** உணவு உண்டது.

2. தாழைக்கீரை நன்கு மணம் வீசும்.
★ தாழை**மடல்** நன்கு மணம் வீசும்.

3. தென்னம் தட்டையில் கூரை வேயப்படுகிறது.
★ தென்னங்**கீற்றில்** கூரை வேயப்படுகிறது.

4. மாலையில் நறுமுகை விளக்கு மூட்டினாள்.
★ மாலையில் நறுமுகை விளக்கு **ஏற்றினாள்.**

5. சந்திரா அடுப்பை ஏற்றினாள்.
★ சந்திரா அடுப்பை **மூட்டினாள்**.

6. பாரி அம்பு தொடுத்தான்.
★ பாரி அம்பு **எய்தினான்**.

7. எழினி சோறு கடைந்து, தயிர் சமைத்தாள்.
★ எழினி சோறு**சமைத்து,** தயிர்**கடைந்தாள்.**

8. யாழினி மாவை வடித்தாள்.
★ யாழினி மாவை **இடித்தாள்**.

9. மகிழன் பறை அடித்தான்.
★ மகிழன் பறை **கொட்டினான்**.

10. பனங்கொல்லையில் நரிகள் உலாவும்.
★ **பனங்காட்டில்** நரிகள் உலாவும்.

11. காட்டில் யானை மந்தை சுற்றித் திரிந்தது.
★ காட்டில் யானைக்**கூட்டம்** சுற்றித் திரிந்தது.

12. தோட்டத்தில் வைக்கோற்குவியல் உள்ளது.
★ தோட்டத்தில் வைக்கோற்**போர்** உள்ளது.

13. கோழி தன் கன்றுக்கு உணவு ஊட்டியது.
★ கோழி தன் **குஞ்சுக்கு** உணவு ஊட்டியது.

14. குரங்கு தன் பிள்ளையுடன் மரத்திற்கு மரம் தாவியது.
★ குரங்கு தன் **குட்டியுடன்** மரத்திற்கு மரம் தாவியது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

15. சிங்கக் குட்டிகள் காட்டில் உலாவிக் கொண்டிருந்தன.

★ சிங்கக் **குருளைகள்** காட்டில் உலாவிக் கொண்டிருந்தன.

16. வாழை தாளில் உணவு உண்பது தமிழரின் பண்பாடு.

★ வாழை **இலையில்** உணவு உண்பது தமிழரின் பண்பாடு.

17. வெங்காய இலை உணவில் பயன்படுத்தப்படுகிறது.

★ வெங்காயத்**தாள்** உணவில் பயன்படுத்தப்படுகிறது.

18. திருவிழாக் காலங்களில் மா ஓலை கட்டப்படுகிறது.

★ திருவிழாக் காலங்களில் **மா இலை** கட்டப்படுகிறது.

19. வானதி பூப்பறிக்க பூக்காட்டிற்குச் சென்றாள்.

★ வானதி பூப்பறிக்க **பூஞ்சோலைக்குச்** சென்றாள்.

20.வேலன் தன் கடையின் சாவிக்குலையை எடுத்துச் சென்றான்.

★ வேலன் தன் கடையின் **சாவிக்கொத்தை** எடுத்துச் சென்றான்.

21. வங்கியில் பணம் குலை குலையாக இருக்கும்.

★ வங்கியில் பணம் **கட்டுக் கட்டாக** இருக்கும்.

22.செழியன் சோறு தின்று, பழம் பருகி, பால் உண்டு, உறங்கினான்.

★ செழியன் **சோறு உண்டு, பழம் தின்று, பால் பருகி,** உறங்கினான்.

23. உழவர் ஏர் பறித்து, விதை நட்டு, செடி விதைத்து, களை உழுதார்.

★ உழவர் **ஏர் உழுது, விதை விதைத்து, செடி நட்டு,களை பறித்தார்.**

24. மாறன் நெல் அறுத்து, கதிர் தூற்றினான்.

★ மாறன் **கதிர் அறுத்து**, **நெல் தூற்றினான்.**

25. இனியன் விறகை ஒடித்து, சுள்ளியைப் பிளந்து, அடுப்பை ஏற்றினான்.

★ இனியன் **சுள்ளியை ஒடித்து, விறகைப் பிளந்து**, அடுப்பை **மூட்டினான்**.

26. காட்டில் சிங்கம் கனைப்பதைக் கேட்ட யானைகள் உறுமின; குதிரைகள் ஊளையிட்டன; நரிகள் பிளிறின.

★ காட்டில் சிங்கம் **கர்ஜிப்பதைக்** கேட்ட யானைகள் **பிளிறின;** குதிரைகள் **கனைத்தன;** நரிகள் ஊளையிட்டன.

27. சோலையில் குயில்கள் கொஞ்சுகின்றன; மயில்கள் கத்துகின்றன; குருவிகள் அகவுகின்றன; கிளிகள் குழறுகின்றன; சேவல்கள் கொக்கரிக்கின்றன; கோழிகள் கூவுகின்றன.

★ சோலையில் குயில்கள் **கூவின**; மயில்கள் **அகவுகின்றன**; குருவிகள் **கீச்சிடுகின்றன**; கிளிகள் **கொஞ்சுகின்றன**; சேவல்கள் **கூவுகின்றன**; கோழிகள் **கொக்கரிக்கின்றன**.

28. வேலன் தன் ஊரிலுள்ள தென்னங்கொல்லை, வாழைத் தோப்பு, சோளக்காட்டைச் சுற்றிப் பார்த்தான்.

★ வேலன்தன் ஊரிலுள்ள **தென்னந்தோப்பு**, **வாழைத்தோட்டம்**, **சோளக்கொல்லையைச்** சுற்றிப் பார்த்தான்.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மரபுத் தொடருக்குப் பொருள் தேர்தல்

மரபுத் தொடர்	பொருள்
அதோ கதி	**கீழ்நிலை அடைதல்**
அவலை நினைத்து உரலை இடித்தல்	**ஒன்றை நினைத்து மற்றொன்றைச் செய்தல்**
ஆகாயத் தாமரை	**இல்லாத ஒன்றைக் கூறுதல்**
ஆயிரங்காலத்துப் பயிர்	**நீண்டகாலத்திற்கு உரியது**
இந்திர சாலம்	**மாயச் செயல்**
இமாலயத் தவறு	**மிகப்பெரிய தவறு**
இமாலய வெற்றி	**மிகப்பெரிய வெற்றி**
உலை வைத்தல்	**கேடு செய்தல்**
உலக்கைக் கொழுந்து	**எதற்கும் ஒத்துப் போகாத தன்மை**
ஊமை கண்ட கனவு	**வெளியில் கூற முடியாதது**
ஏட்டுச் சுரைக்காய்	**நடைமுறைக்கு ஒவ்வாதது**
ஓலை வந்து விட்டது	**கட்டளை வந்துவிட்டது**
சீட்டு கிழிந்தது	**வேலை போய் விட்டது**
கயிறு திரித்தல்	**பொய் கூறுதல்**
கங்கு கரை இல்லை	**அளவில்லை**
கோட்டை விட்டான்	**ஏமாந்தான்**
குட்டிச் சுவர்	**பயனற்றிருத்தல்**
குரங்குப் பிடி	**விடாப்பிடி**
கோயில் பெருச்சாளி	**பொதுச் சொத்தை அபகரிப்பவன்**
சிதம்பர ரகசியம்	**யாருக்கும் தெரியாதது**
தாளம் போடுதல்	**எது சொன்னாலும் சரி என்று கூறுதல்**
நீர்மேல் எழுத்து	**அழியக் கூடியது**
பழம் பெருச்சாளி	**பழமையில் ஊறியவர்**
பித்தலாட்டம்	**ஏமாற்றுதல்**
புத்தகப்புழு	**அனுபவ அறிவு இல்லாமை**
மலையேறி விட்டது	**இல்லாமல் போய் விட்டது**
முதலைக் கண்ணீர்	**போலி அழுகை**
வாய்ச்சொல் வீரன்	**வெற்று பேச்சு பேசுபவன்**
விழலுக்கு இறைத்த நீர்	**வீண் செயல்**
விசுவாமித்திரப் படைப்பு	**புதிய படைப்பு**

மரபுச் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக

1. **ஆற அமர (பொறுமையாக)**

➔ வாழ்க்கையில் எந்தவொரு செயலையும் **ஆற அமர** யோசித்துச் செய்ய வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. **ஆணி அடித்தாற் போல (நன்றாகப் பதித்தல்)**

➔ ஆசிரியர் கூறும் அறிவுரைகள் மனத்தில் **ஆணி அடித்தாற் போல** பதிந்தது.

3. **அகலக்கால் (எண்ணிச் செயல்படாமை)**

➔ தன்னுடைய திறமையை அறியாமல் சிலர் அகலக்கால் வைத்துத் துன்பப்படுகின்றனர்.

4. **வழிவழியாக (பரம்பரையாக)**

➔ என் குடும்பத்தினர் **வழிவழியாக** வேளாண் தொழில் செய்கின்றனர்.

5. **கண்துடைப்பு (ஏமாற்று வேலை)**

➔ முறையான திட்டமிடல் இல்லாததால், அரசின் பல திட்டங்கள் **கண்துடைப்பாக** உள்ளன.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. எதிர்நீச்சல் (வெற்றிக்காகப் போராடுதல்)

★ வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும் அவற்றைக் கடந்து **எதிர்நீச்சல்** போட்டு வெற்றி பெறவேண்டும்.

2. சொந்தக்காலில் நிற்றல் (யாருடைய உதவியும் இல்லாமல்)

★ முருகன் அடுத்தவர்களை எதிர்பார்க்காமல், உழைத்து தன் **சொந்தக்காலில்** நின்றான்.

3. தாளம் போடுதல் (ஆமாம் சாமி போடுதல்)

★ வேலன் எது கூறினாலும், கந்தன் அதற்குத் **தாளம் போட்டுக்** கொண்டே இருந்தான்.

4. மதில்மேல்பூனை (முடிவெடுக்கத் தெரியாமல் திகைத்தல்)

★ மாறன் எந்தக் கல்லூரியில் சேருவது என்று தெரியாமல் **மதில்மேல் பூனையாக** இருந்தான்.

5. நிறைகுடம் (முழுமையடைதல்)

★ வளவன் கல்வியில் **நிறைகுடமாக** விளங்கியதால், அனைவரும் அவனைப் போற்றினர்.

6. கைதூக்கிவிடுதல் (காப்பாற்றுதல்)

★ முத்து ஆதரவற்ற மக்களைக் **கைதூக்கிவிட்டான்**.

7. கண்ணாயிருத்தல் (முழுகவனத்தையும் செலுத்துதல்)

★ இனியன் எப்பொழுதும் பணத்திலேயே **கண்ணாயிருந்தான்**.

8. அவசரக்குடுக்கை (பொறுமையின்மை)

★ சேரன் நிதானத்துடன் செயல்படாமல், **அவசரக்குடுக்கையாக** இருந்தான்.

9. முதலைக்கண்ணீர் (பொய் அழுகை)

★ மாணிக்கம் தான்செய்த தவறுக்குத் திருந்தியவன்போல நடித்து **முதலைக்கண்ணீர்** வடித்தான்.

10. கானல்நீர் (இருப்பதுபோல் தோன்றும் ஆனால் இருக்காது)

★ மகிழ்ச்சியான வாழ்வு ஏழைகளுக்கு **கானல்நீராகவே** உள்ளது.

11. அதோ கதி (கீழ்நிலை அடைதல்)

★ சொல்புத்தியும் இல்லாமல் சுயபுத்தியும் இல்லாமல் யாரையும் மதிக்காமலும் வாழ்ந்த வேலவன் **அதோ கதி** அடைந்தான்.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. அவலை நினைத்து உரலை இடித்தல் (ஒன்றை நினைத்து மற்றொன்றைச் செய்தல்/ எண்ணமும் செயலும் ஒன்றிவாராமை)

★ வெளியூரிலிருந்து வாரமல் இருந்த கணவனை நினைத்து வருந்தி, **அவலை நினைத்து உரலை இடித்தாற் போல** பாலில் மிளகாய்த் தூளை அள்ளிக் கொட்டினாள் செல்வி.

13. ஆகாயத் தாமரை (இல்லாத ஒன்று)

★ நான் நிலவுக்குக் சென்று வந்தேன், நட்சத்திரத்தைப் பறித்து வீட்டில் வைத்திருக்கின்றேன் என்றெல்லமாம் **ஆகாயத்தாமரை உள்ளதைப் போல்** கூறுவான் என் நண்பன் குமணன்.

14. ஆயிரங்காலத்துப் பயிர் (நீண்ட காலத்திற்குரியது)

★ நல்லவர்களின் நட்பு **ஆயிரங்காலத்துப் பயிர் போன்று** நீண்ட காலம் தொடரும்.

15. இந்திர சாலம் (மாயச் செயல்)

★ இராமாயணத்தில் சீதையிடம் வந்த பொன்மான் **இந்திர சாலம்** செய்து ஏமாற்ற நினைத்தது.

16. இமாலய வெற்றி (மிகப்பெரிய வெற்றி)

★ இந்திய கிரிகெட் அணி 2019 ஆம் ஆண்டு **இமாலய வெற்றி** பெறும் என்று இந்தியர்கள் நம்பினார்கள்.

17. இமாலயத் தவறு (மிகப்பெரிய தவறு)

★ இந்தியாவிடமிருந்து பாகிஸ்தான் பங்களாதேஷ் போன்ற நாடுகளைப் பிரித்துக் கொடுத்தது **இமாலயத் தவறு** என்று இன்றைய இந்திய அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

18. உலை வைத்தல் (கேடு செய்தல்)

★ தன் கட்டளைக்குக் கீழ்ப்படியாத காரணத்தால், உயர் அதிகாரி மாறனின் **வேலைக்கு உலை** வைத்தார்.

19. உலக்கைக் கொழுந்து (எதற்கும் ஒத்துப் போகாத தன்மை)

★ வகுப்பறையில் புதிதாகச் சேர்ந்த பிரபு எல்லோரிடமும் **உலக்கைக் கொழுந்துபோல்** இருந்தான்.

20. ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்கு உதவாது. (நடைமுறைக்கு ஒவ்வாதது/பட்டறிவில்லாத படிப்பறிவு)

★ கண்ணன் சமையல் புத்தகங்களைப் படித்து சமையல் செய்த போது **ஏட்டுச்சுரைக்காய் கூட்டுக்கு உதவாது என்பதுபோல்** கறிகாய்கள் கரிந்துபோய் சமையல் பாழாய்ப் போனது.

21. ஓலை வந்து விட்டது (கட்டளை வந்துவிட்டது)

★ இராணுவத்திலிருந்து வீடு திரும்பிய அபிநந்தனுக்கு, "போர் மூள உள்ளதால் இந்திய எல்லைக்கு உடனடியாக வரவேண்டும்" என **ஓலை வந்தது.**

22. சீட்டு கிழிந்தது (வேலை போய்விட்டது)

★ வேலையில் கையூட்டு (இலஞ்சம்) வாங்கிய கந்தனின் **சீட்டு கிழிந்தது.**

23. கயிறு திரித்தல் (பொய் கூறுதல்)

★ சிலர் **கயிறு திரித்து** பிறரின் வீட்டில் சண்டை மூட்டுவதையே வேலையாகச் செய்கின்றனர்.

24. கங்கு கரை இல்லை (அளவில்லை)

★ உ.வே.சாமி நாதர் செய்த தமிழ்த்தொண்டிற்கு **கங்கு கரையே இல்லை.**

25. கோட்டை விட்டான் (ஏமாந்தான்)

★ கிரிக்கெட் விளையாட்டில் மூழ்கிக் கிடந்த மாறன் படிப்பில் **கோட்டை விட்டான்**.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக

(எ.கா.) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

★ நம் **மாநிலம்** இந்த ஆண்டு **வறட்சியால்** பாதிக்கப்பட்டது.

1. எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

★ விடை - எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட **அரசு** நிதி ஒதுக்கியது.

2. ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

★ விடை - ரங்கன் **வெண்கலப்** பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

3. மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

★ விடை - **வானம்** பார்த்த பூமியில் **பயறு** வகைகள் பயிரிடப்படுகின்றன.

4. ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

★ விடை - ஐப்பசி அடைமழையில் **ஊருணி** நிறைந்தது.

5. இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

★ விடை - **இன்றைக்குச் சாயுங்காலம்** கபடி போட்டி நடைபெறும்.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. இன்று, வண்டிகள் ஓடாது.	இன்று, வண்டிகள் **ஓடா.**
2. அவை இங்கே உளது.	அவை இங்கே **உள.**
3. அது பறவைகள் அல்ல.	அவை பறவைகள் **அல்ல.**
4. அது எல்லாம்	**அவை** எல்லாம்.
5. மக்கள் கிடையாது	மக்கள் **இல்லை.**
6. வருவதும் போவதும் கிடையாது	வருவதும் போவதும் **கிடையா.**
7. ஒன்றோ அல்லது இரண்டோ தருக	**ஒன்றோ இரண்டோ** தருக
8. சென்னை என்ற நகரம்	சென்னை **என்னும்** நகரம்
9. எனது மகள்	**என்** மகள்
10. ஏற்கத்தக்கது அல்ல	ஏற்கத்தக்கது **அன்று**
11. அவளது தந்தை	**அவள்** தந்தை
12. நான் மற்றும் அவன் சென்றோம்.	**நானும் அவனும்** சென்றோம்.
13. பத்துப் பழங்களில் ஒரு பழமே நல்லன.	பத்துப் பழங்களில் ஒரு பழமே **நல்லது.**
14. இங்குள்ளது எல்லாம் நல்ல பழமே.	இங்குள்ளவை எல்லாம் நல்ல **பழங்களே.**
15. விழாவில் பல அறிஞர்கள் பேசினர்.	விழாவில் **அறிஞர்கள் பலர்** பேசினர்.
16. இடதுபக்கம் இருப்பது கண்ணகி சிலை.	**இடப்பக்கம்** இருப்பது கண்ணகி சிலை.
17. கண்ணன் முருகன் மற்றும் வேலன் வந்தனர்.	**கண்ணனும் முருகனும் வேலனும்** வந்தனர்.
18. ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஊராட்சி உள்ளது.	ஒவ்வொரு **சிற்றூரிலும்** ஊராட்சி உள்ளது.
19. கந்தன் அரசினர் பள்ளியில் படிக்கின்றான்.	கந்தன் **அரசுப்பள்ளியில்** படிக்கின்றான்.

20.சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அன்று.

★ சென்னைக்கு **அருகில்** இருப்பது கன்னியாகுமரி அன்று.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

வல்லினம் மிகும் இடங்கள்

★ **இரண்டாம் வேற்றுமை உருபினை (ஐ)** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அவனை + கண்டேன் = அவனைக் கண்டேன்.

★ **நான்காம் வேற்றுமை உருபினை (கு)** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அவனுக்கு + கொடுத்தேன் = அவனுக்குக் கொடுத்தேன்.

★ **அ, இ** ஈற்று வினையெச்சத்தை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) போக + சொன்னான் = போகச் சொன்னான்.

ஆடி + களித்தான் = ஆடிக் களித்தான்.

★ **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தை** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) ஓடா + குதிரை = ஓடாக் குதிரை

★ **அ, இ, எ** ஆகிய எழுத்துகளை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அ + கடிதம் = அக்கடிதம் இ + பறவை = இப்பறவை

★ **அந்த, இந்த, எந்த** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அந்த + பையன் = அந்தப் பையன் இந்த + குழந்தை = இந்தக் குழந்தை

★ **அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, யாண்டு** ஆகிய இடப் பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அங்கு + கண்டேன் = அங்குக் கண்டேன்.

யாண்டு + சென்றது = யாண்டுச் சென்றது?

★ **அப்படி, இப்படி, எப்படி** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அப்படி + சொன்னான் = அப்படிச் சொன்னான்

எப்படி + கூறினான் = எப்படிக் கூறினான்

★ **மற்ற, மற்று, மற்றை** ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) மற்ற + பையன்கள் = மற்றப் பையன்கள்

★ **முன்னர், பின்னர்** ஆகிய இடைச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) முன்னர் + கூறினான் = முன்னர்க் கூறினான்

★ **நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரச்** சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) நாடு + பற்று = நாட்டுப் பற்று ஆறு + பாலம் = ஆற்றுப் பாலம்

★ **வன்றொடர்க் குற்றியலுகரத்தை** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) கருத்து + குவியல் = கருத்துக் குவியல்

பாக்கு + தின்றான் = பாக்குத் தின்றான்

★ **மென்றொடர்க் குற்றியலுகரத்தை** அடுத்து பெயர்ச்சொல் வந்தால் வல்லினம் மிகும்.

(எ.கா.) கன்று + குட்டி = கன்றுக்குட்டி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ **ஒரெழுத்து ஒருமொழியை** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) பூ + பறித்தான் = பூப்பறித்தான் கை + தட்டினான் = கைத்தட்டினான்

★ **ய், ர், ழ்** ஆகிய மெய்யெழுத்தை அடுத்து பெயர்ச்சொல் வந்தால், வல்லினம் மிகும்.

(எ.கா.) வாய் + சொல் = வாய்ச்சொல் மலர் + பந்தல் = மலர்ப்பந்தல்

தமிழ் + தென்றல் = தமிழ்த்தென்றல்

★ **எட்டு, பத்து** ஆகிய எண்ணுப் பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) எட்டு + தொகை = எட்டுத்தொகை பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

★ **இருபெயரொட்டுப் பண்புத்தொகையை** அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) முல்லை + பூ = முல்லைப்பூ சித்திரை + திங்கள் = சித்திரைத்திங்கள்

வல்லினம் மிகா இடங்கள்

★ எழுவாய்த் தொடரை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) தாய் + சொன்னாள் = தாய்சொன்னாள்

★ விளிப்பெயரை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) செல்வா + கூறு = **செல்வா கூறு!**

★ பெயரெச்சத்தை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) சென்ற + பையன் = **சென்ற பையன்**

★ உகர ஈற்று வினையெச்சத்தை அடுத்து வல்லினம் மிகாது

(எ.கா.) செய்து + பார்த்தான் = **செய்து பார்த்தான்**

★ எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களைத் தவிர்த்து பிற எண்ணுப் பெயர்களில் வல்லினம் மிகாது.

(எ.கா.) ஐந்து + தலை = **ஐந்துதலை**

★ மென்றொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து வினைமுற்று வந்தால் வல்லினம் மிகாது.

(எ.கா.) கரும்பு + தின்றான் = **கரும்பு தின்றான்**

★ வினைத்தொகையை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) ஊறு + காய் = **ஊறுகாய்**

★ சுட்டுப்பெயரை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அது + சென்றது = **அது சென்றது**

★ அவை, இவை, எவை, அத்தனை, இத்தனை, எத்தனை ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அவை + குரங்குகள் = **அவை குரங்குகள்**

★ 'படி' என்னும் இடைச்சொல் சேர்ந்த வினைச்சொல்லை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) வரும்படி + கூறினான் = **வரும்படி கூறினான்**

★ உயர்திணைப் பெயர்ச் சொல்லின் ஈற்றில் 'ர் ' வந்தால் வல்லினம் மிகாது.

(எ.கா.) மாணவர் + கற்றனர் = **மாணவர் கற்றனர்**

★ இரட்டைக் கிளவியை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) சல சல = **சல சல**

★ அடுக்குத் தொடரை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) பாம்பு + பாம்பு = **பாம்பு பாம்பு**

மொழிபயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

பாடநூலில் உள்ளவை

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

★ என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

★ எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

★ நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த கவனம் அறிவைப்பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.

4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

★ மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

★ ஆசிரியருக்குக் கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. தமிழ் பலப் புதிய உள்ளடக்கங்களால் தன்னை புதுப்பித்துகொண்டு பழஞ்சிறப்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுக் கவிஞர்களின் அவா.

★ தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பது கவிஞர்களின் அவா.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. எந்த தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. மொழிச் சார்ந்தக் கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.

★ எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது.

3. நிற்கும் நிலையிலிருந்துக் கீழே விழாதபடிக் கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டுப் பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களை கண்டு குடல் குலுங்க சிரி.

★ நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி.

4. மனிதன் தன் பேராசைக் காரணமாக இயற்கை வளங்களை கடுமையாக சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கின்றான்.

★ மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கின்றான்.

5. வளர்ந்த நாடுகளில் திட்டமிடப்பட்டக் கட்டமைப்புகள், வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளும் விழிப்புணர்வு பரப்புரை, நீர்நிலைகளை முறையாக பராமரித்தல் ஆகியச் செயல்பாடுகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தால் பெரிய அளவிற்கு பொருளிழப்பு ஏற்பட்டாலும் உயிரிழப்பு ஏற்படுவதில்லை.

★ வளர்ந்த நாடுகளில் திட்டமிடப்பட்ட கட்டமைப்புகள், வெள்ளப்பெருக்கை எதிர்கொள்ளும் விழிப்புணர்வுப் பரப்புரை, நீர்நிலைகளை முறையாகப் பராமரித்தல் ஆகிய செயல்பாடுகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தால் பெரிய அளவிற்குப் பொருளிழப்பு ஏற்பட்டாலும் உயிரிழப்பு ஏற்படுவதில்லை.

6. பேரிடர் காலங்களில் தாங்கக்கூடியவையாக புதியக் கட்டுமானங்களை அமைக்க வேண்டும். நீர்வழிப் பாதைகளுக்கானத் தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளை தொடர்ந்துப் பராமரிக்க வேண்டும்.

★ பேரிடர்க் காலங்களில் தாங்கக்கூடியவையாகப் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும். நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

7. பயிர்களை வாழவைப்பது மழை. அதுப் பெருமழையாகி வெள்ளமாக திரண்டுத் தேங்குகையில், தான் உயிர்ப்பித்தப் பயிர்களையே இல்லாமல் ஆக்கிவிடுகிறது.

★ பயிர்களை வாழவைப்பது மழை. அது பெருமழையாகி வெள்ளமாகத் திரண்டு தேங்குகையில், தான் உயிர்ப்பித்த பயிர்களையே இல்லாமல் ஆக்கிவிடுகிறது.

8. சங்ககாலத்தில் கணச் சமூகத்துக்கு தாயேத் தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவேக் குலத் தொடர்ச்சிக் குறிக்கப்பட்டது.

★ சங்ககாலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத் தொடர்ச்சி குறிக்கப்பட்டது.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. சங்க சமூகம் குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாக கொண்டிருந்த நிலையை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

★ சங்கச் சமூகம் குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

10. சீதையை தேடிவரும் இராம இலக்குவரை கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். சுக்ரீவனை நண்பனாக ஏற்று கொள்கிறான் இராமன்.

★ சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான் இராமன்.

11. நம்முடைய நாட்டில் மிக பழையக் காலத்தில் ஆசிரியருடைய வீடேப் பள்ளிக்கூடமாக இருந்தது. அதை குருகுலம் என்பார்கள்.

★ நம்முடைய நாட்டில் மிகப் பழைய காலத்தில் ஆசிரியருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பார்கள்.

12. மாணவர்கள் அந்தாதி முறையை கொண்டும் எதுகை மோனைகளை கொண்டும் செய்யுட்களை ஞாபகப்படுத்தி கொள்வார்கள்.

★ மாணவர்கள் அந்தாதி முறையைக் கொண்டும் எதுகை மோனைகளைக் கொண்டும் செய்யுட்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

13. பள்ளிக்கூட பிள்ளைகள் தமக்குத்தெரிந்தப் பாடங்களை அடிக்கடிச் சிந்தித்து வருவார்கள். பலர் ஒருங்குகூடி கேள்விகள் கேட்டும் விடை கூறியும் கற்று வருவார்கள்.

★ பள்ளிக்கூடப் பிள்ளைகள் தமக்குத்தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள். பலர் ஒருங்குகூடிக் கேள்விகள் கேட்டும் விடை கூறியும் கற்று வருவார்கள்.

14. சாலைவழி பயணம் மனதிற்கு இன்பத்தை அளிக்க கூடியது. அத்தகையப் பயணத்தை அனைவரும் பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும். சாலை விதிகளை தெரிந்துகொள்வதும் பிறருக்குச் சொல்வதும் விழிப்புணர்வுக் கொள்வதும் ஒருவகை கல்விதான்.

★ சாலைவழிப் பயணம் மனதிற்கு இன்பத்தை அளிக்கக் கூடியது. அத்தகைய பயணத்தை அனைவரும் பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும். சாலை விதிகளைத் தெரிந்து கொள்வதும் பிறருக்குச் சொல்வதும் விழிப்புணர்வு கொள்வதும் ஒருவகைக் கல்விதான்.

15. நடந்துச் செல்லும் பாதைகளாகவும் மாட்டுவண்டிகள் சென்றுகொண்டிருந்தப் பாதைகளாகவும் இருந்தவையெல்லாம் ஆங்கிலேயரின் குடியிருப்புகளை முன்னிட்டு சாலைகளாக மாறின.

★ நடந்து செல்லும் பாதைகளாகவும் மாட்டுவண்டிகள் சென்றுகொண்டிருந்த பாதைகளாகவும் இருந்தவையெல்லாம் ஆங்கிலேயரின் குடியிருப்புகளை முன்னிட்டுச் சாலைகளாக மாறின.

16. பேருந்தை பிடிக்க, சாலையை கடக்கும்போதுச் சாலைகளின் இருப் பக்கங்களிலும் பார்க்கிறோம். நம் கண்கள், பொருள்கள் அசைவதை தொலைவிலிருந்துப் பார்த்து பதிவுசெய்கின்றன.

★ பேருந்தைப் பிடிக்க, சாலையைக் கடக்கும்போது சாலைகளின் இரு பக்கங்களிலும் பார்க்கிறோம். நம் கண்கள், பொருள்கள் அசைவதைத் தொலைவிலிருந்து பார்த்துப் பதிவுசெய்கின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. வரலாற்று காலத்திற்கு முந்தைய மனிதனுக்கு ஓய்வு என்பதுக் கனவு. அவனதுப் பொழுது, உணவு தேடுவதிலேயேக் கழிந்தது.

★ வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதனுக்கு ஓய்வு என்பது கனவு. அவனது பொழுது, உணவு தேடுவதிலேயே கழிந்தது.

18. நிருவாகத்தில் வரவேச் செலவை தீர்மானிக்க வேண்டும். வரவை தாண்டி நிறைய செலவுச் செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவான்.

★ நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவான்.

19. சங்க நூல்களில் மட்டும் இதுவரைக் காணப்பட்டப் பண்டையத் தமிழ் மன்னர்களின் பெயர்களை தமிழகத்தில் முதல்முறையாக ஒருக் கல்வெட்டில் கண்டுவிட்டேன்.

★ சங்க நூல்களில் மட்டும் இதுவரை காணப்பட்ட பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதல்முறையாக ஒரு கல்வெட்டில் கண்டுவிட்டேன்.

20. திருமணமேச் செய்துகொள்ளாமல் இல்லற துறவியாக வாழ்ந்து, தம் வாழ்வை முழுமையாக தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்.

★ திருமணமே செய்துகொள்ளாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்து, தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்.

விடைக்கேற்ற வினா அமைக்க

வினா - குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

விடை - **குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?**

1. நடுவண்அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைத்தது.

★ **நடுவண்அரசு எந்த ஆண்டு தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைத்தது?**

2. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.

★ **சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகளின் பயன்கள் யாவை? (அ) போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுபவை யாவை?**

3. 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

★ **தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு? எப்பொழுது அமைக்கப்பட்டது?**

4. "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.

★ **ஆவணப்படம் குறித்த கிரியோர்சனின் கருத்து யாது?**

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நூல்கள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

★ **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நூல்கள் எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?**

2. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற தொல்காப்பியம், இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் ஆகும்.

★ **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் எது?**

3. நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தன்று, கடலினும் ஆழமானது என்றெல்லாம் தமிழின் பரப்பையும் விரிவையும் ஆழத்தையும் புலவர் போற்றுவர்.

★ **புலவர்கள் தமிழை எவ்வாறெல்லாம் போற்றுவர்?**

4. தாவரங்களை உண்ணும் பிராணிகள், தாவரங்களை உண்டு வாழ்கின்றன. விலங்குகளை உண்ணும் "ஊன் உண்ணிகள்" தாவரங்களை உண்ணும் விலங்குகளைப் பிடித்துச் சாப்பிடுகின்றன. இந்த இயற்கையின் சுழற்சியே இயற்கைச் சமநிலை ஆகும்.

★ **இயற்கைச் சமநிலை என்றால் என்ன?**

5. கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவற்றைத் தான் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறார்கள்.

★ **பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?**

6. ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும் காலங்களில் அடித்து வரப்படும் பொருள்கள் ஆற்றின் ஓரங்களில் படிந்துவிடும். இது ஆற்றங்கரைப்படிவு எனப்படும்.

★ **ஆற்றங்கரைப்படிவு எவ்வாறு உருவாகின்றது?**

7. குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது. ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது.

★ **மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது எது?**

8. தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை (அல்லது) எளிய நெருக்கமான குடும்பம் எனப்படும்.

★ **தொடக்கநிலை (அல்லது) எளிய நெருக்கமான குடும்பம் - வரையறுக்க.**

9. இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்பட்டான். இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான்; பின் இறந்துவிடுகிறான்.

★ **சடாயு - குறிப்பு வரைக.**

10. சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர்.

★ **தூக்கு என்றால் என்ன?**

11. கவிதை என்பது சொற்கள் எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம் முதலிய யாப்பிலக்கண

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெறிகளுக்கு உட்பட்டு அமைவது.

★ **கவிதை அமையும் முறை குறித்து எழுதுக.**

12. நகரம், சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானதாகும்.

★ **சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?**

13. சென்னை நகரத்தில் பழமையான கோயில்களான திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருமுல்லைவாயில் ஆகியவற்றில் உள்ள கோயில்கள் பாடல் பெற்ற, ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்களாக உள்ளன.

★ **சென்னையிலுள்ள பழமையான கோயில்களைப் பட்டியலிடுக.**

14. இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக் கலை, இந்தியப் பாரம்பரிய பாணி ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்பட்டது.

★ **இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை எவ்வாறு உருவாக்கப்பட்டது?**

15. வள்ளலார், சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மீக மையத்தை ஏற்படுத்தினார். அவரது சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது கந்தகோட்டம்.

★ **வள்ளலார் ஆன்மீக மையத்தை ஏற்படுத்திய இடம் எது?**

16. காட்சிகள் மாறுவதை உணர்த்த ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி இருள் ஆக்கிக் காட்டுவர். இதைக் காட்சி மறைவு என்பார்கள்.

★ **காட்சி மறைவு எனப்படுவது யாது?**

17. காட்சிகளை மாற்றி மாற்றி வைப்பதன்மூலம் வெவ்வேறு காட்சிகளை உருவாக்கிக் காட்டுவது குலஷோவ் விளைவு எனப்படும்.

★ **குலஷோவ் விளைவு என்றால் என்ன?**

18. கலை ஒரு சமூகத்தின் பண்பாடு, வரலாறு, அழகியல் போன்ற கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

★ **கலையின் முக்கியத்துவத்தைக் கூறுக.**

19. ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

★ **பாடாண் திணை - குறிப்பு வரைக.**

20. தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் 'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூல், கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும்.

★ **தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் நூலின் சிறப்பு யாது?**

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தொகைச்சொல்லை விரித்தெழுதுக

தொகைச்சொல்	விரிச்சொற்கள்
இருவினை	நல்வினை, தீவினை
இருதிணை	உயர்திணை, அஃறிணை
இரட்டைக் காப்பியம்	சிலப்பதிகாரம், மணிமேகலை
முக்கனி	மா, பலா, வாழை
முத்தமிழ்	இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்
முப்பால்	அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்
முக்காலம்	இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
முந்நீர்	ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர்
முக்கொடி	வில் கொடி, புலி கொடி, மீன் கொடி
மூவேந்தர்	சேரர், சோழர், பாண்டியர்
மூவினம்	வல்லினம், மெல்லினம், இடையினம்
மூவிடம்	தன்மை, முன்னிலை, படர்க்கை
நாற்றிசை	கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு
நாற்படை	தேர்ப்படை, குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை
நானிலம்	குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
நால்வகை பா	வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
ஐந்திணை	குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
ஐம்பூதம்	நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம்
ஐம்பொன்	பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்
ஐம்புலன்	மெய், வாய், மூக்கு, செவி, கண்
ஐந்திலக்கணம்	எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
ஐம்பெருங்காப்பியங்கள்	சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
அறுசுவை	இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு
ஏழு வள்ளல்கள்	பாரி, ஓரி, காரி, நள்ளி, ஆய், அதியன், பேகன்
எட்டுத்திக்கு	கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு
எட்டுத்தொகை	நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு
எண்வகை மெய்ப்பாடு	நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை
நவரத்தினம்	முத்து, மரகதம், மாணிக்கம், பவளம், வைரம், வைடூரியம், புட்பராகம், நீலம், கோமேதகம்
பத்துப்பாட்டு	திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைக்க

(தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளைபோல, எலியும்பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல)

1. தாமரை இலை நீர்போல ★ துறவிகள் **தாமரை இலை நீர்** போல வாழ்வார்கள்.
2. கிணற்றுத்தவளைபோல **(தான் கொண்ட கருத்தே சரி என்பவர்கள்)**
   ★ சிலர் நாட்டு நடப்புகளை அறிந்துகொள்ளாமல், **கிணற்றுத்தவளைபோல** இருக்கின்றனர்.
3. எலியும் பூனையும் போல **(பகை)**
   ★ வளவனும் வேலனும் **எலியும்பூனையும்** போல சண்டையிட்டுக் கொண்டு இருப்பார்கள்.
4. அச்சாணி இல்லாத தேர்போல **(அடிப்படைப் பாதுகாப்பு)**
   ★ தன் திறமையை வளர்த்துக்கொள்ளாதவனின் வாழ்க்கை **அச்சாணி இல்லாத தேர்போல** சரிந்துவிடும்.
5. உள்ளங்கை நெல்லிக்கனிபோல **(வெளிப்படைத் தன்மை)**
   ★ தமிழாசிரியர் கற்பித்த இலக்கணம் **உள்ளங்கை நெல்லிக்கனிபோல** தெளிவாகப் புரிந்தது.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. அடியற்ற மரம் போல (நிலை தடுமாறி)
★ தன் தந்தை இறந்த செய்தியைக் கேட்ட முருகன் **அடியற்ற மரம் போல** விழுந்தான்.

2. அத்தி பூத்தாற் போல (அதிசயமான நிகழ்வு)
★ நான் உதவி கேட்டதும், இராமன் **அத்தி பூத்தாற் போல** எனக்கு உதவினான்.

3. அனலிற்பட்ட மெழுகு போல (துன்பப்படுதல்)
★ மக்கள்படும் துன்பங்களைக் கேட்ட தலைவர் **அனலிற்பட்ட மெழுகு போல** மனம் உருகினார்.

4. அன்றலர்ந்த மலர் போல (புத்துணர்ச்சியுடன் இருத்தல்)
★ தேன்மொழி எப்பொழுதும் **அன்றலர்ந்த மலர் போல** இன்முகத்துடன் விளங்கினாள்.

5. ஆலை வாய்ப்பட்ட கரும்பு போல (துன்பப்படுதல்)
★ தொழிற்சாலை ஊழியர்கள் **ஆலை வாய்ப்பட்ட கரும்பு போல** துன்புறுத்தப்படுகிறார்கள்.

6. இடியோசை கேட்ட நாகம் போல (நடுங்கிப் போதல்)
★ திருடன், காவலர்கள் வரும் ஓசையைக் கேட்டு **இடியோசை கேட்ட நாகம்** போல நடுங்கினான்.

7. இருதலைக்கொள்ளி எறும்புப் போல (அறத்துன்பம் / தர்ம சங்கடம்)
★ என் நண்பன் செய்த தவறுக்காக நான் அவனுடைய பெற்றோரிடம் பொய் சொல்லவும் முடியாமல், மெய் சொல்லவும் முடியாமல், **இருதலைக்கொள்ளி எறும்புப் போல** தவித்தேன்.

8. இளவு காத்த கிளிபோல (ஏமாந்து போதல்)
★ தேர்வு நேரத்தில் நண்பனைப் பார்த்து எழுதலாம் என்று எண்ணியிருந்த வேலன், தேர்வாளர் வேலனைத் தனிஅறைக்கு மாற்றியதால் **இளவு காத்த கிளிபோல** ஏமாந்து போனான்.

9. உயிரும் உடலும் போல (ஒற்றுமையுடன் இருத்தல்)
★ நானும் என் நண்பன் கதிரவனும் **உயிரும் உடலும் போல** இணைந்தே இருக்கின்றோம்.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. ஊமை கண்ட கனவு போல (வெளியில் சொல்ல முடியாமை)

★ தன் மகன் செய்த தவற்றை அறிந்த தாய், தன் கணவரிடம் சொல்ல முடியாமல், **ஊமை கண்ட கனவு போல** தவித்தாள்.

11. எள்ளினுள் எண்ணெய் போல (உள்ளுக்கு ஒளிந்திருத்தல்)

★ **எள்ளினுள் எண்ணெய் இருப்பது போல**, படிப்பறிவு இல்லாத மகிழனுக்குள் பல திறமைகள் இருந்தன.

12. கண்ணை இமை காப்பது போல (பாதுகாத்தல்)

★ **கண்ணை இமை காப்பது போல** தாய் தன் பிள்ளைகளைக் காக்கின்றாள்.

13. கிணறு வெட்டப் பூதம் வந்தது போல (எதிர்பாராத அதிர்ச்சி)ஒன்றை நினைத்துச் செய்ய வேறொன்றாக முடிவது)

★ கீழேக் கிடந்த தங்கச் சங்கிலியைக் ஒப்படைக்கச் சென்ற கந்தனை, திருடன் எனக் காவலர்கள் குற்றம் சாட்டியது கந்தனுக்கு **கிணறு வெட்டப் பூதம்** வந்தது போல ஆயிற்று.

14. கீரியும் பாம்பும் போல (பகைமை)

★ கனிமொழியும் தேன்மொழியும் **கீரியும் பாம்பும் போல** எப்பொழுதும் எதிரிகளாகவே இருந்தனர்.

15. குடத்திலிட்ட விளக்கு போல (பிறர் அறியாமல் இருத்தல்)

★ ஏழைக் குடும்பத்தில் பிறந்ததால், கந்தனுக்குப் பல திறமைகள் இருந்தும் **குடத்திலிட்ட விளக்கு போல** அவன் ஒளி குன்றிப் போனான்.

16. கும்பிட போன தெய்வம் குறுக்கில் வந்தது போல (எண்ணியது உடனே நிறைவேறுதல்)

★ புத்தகம் தொலைந்த நேரத்தில், அவன் நண்பன் வேலன் வீட்டிற்கே வந்து புத்தகம் கொடுத்து உதவியது கண்ணனுக்கு **கும்பிட போன தெய்வம் குறுக்கில்** வந்தது போல இருந்தது.

17. குரங்கு கையில் அகப்பட்ட பூ மாலை போல (துன்பப்படுதல்)

★ தன் தாயை இழந்த பெண் குழந்தை மாற்றாந்தாயிடம் அகப்பட்டு, **குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை போல** துன்புற்றாள்.

18. குன்றின்மேலிட்ட விளக்கு போல (புகழுடன் விளங்குதல்)

★ வள்ளுவன் புகழ் **குன்றின்மேலிட்ட விளக்கு போல** ஒளிவீசியது.

19. சிலைமேல் எழுத்துப் போல (அழுத்தமாகப் பதிதல்)

★ நாம் இளமையில் கற்கும் கல்வி **சிலைமேல் எழுத்துப் போல** அழியாமல் நிலைத்து நிற்கும்.

20. சேற்றில் முளைத்த செந்தாமரை போல (தீய இடத்தில் நன்மை விளைதல்)

★ ஏழை வீட்டில் பிறந்த கந்தன் **சேற்றில் முளைத்த செந்தாமரைபோல** தன் சுய முயற்சியால் விளையாட்டுத் துறையில் முதலிடம் பிடித்தான்.

21. தவளை தன் வாயால் கெடுவதைப் போல (தன்னைத் தானே கெடுத்துக் கொள்ளுதல்)

★ **தவளைதன் வாயால் கெடுவது போல**, வில்லாளன் தன் தவறை மறைக்க மாற்றி மாற்றி பேசி காவலரிடம் மாட்டிக்கொண்டான்.

22. நகமும் சதையும் போல (ஒற்றுமையாக இருத்தல்)

★ பாரதிதாசன், பாரதியார்மீதுகொண்ட நட்பு **நகமும் சதையும் போல** பிரிக்க முடியாமல் இருந்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

23. நீர் மேல் எழுத்துப் போல (நிலைக்காமல் போதல்)

★ முன்முடிவுகளுடன் வாழும் சிலருக்குக் கூறும் அறிவுரைகள் **நீர் மேல் எழுத்துப் போல** அவர் மனதில் நிலைக்காமல் போகும்.

24. நெருப்பில் இட்ட புழு போல (துடி துடித்தல்)

★ எப்பொழுதும் உண்மையையே பேசும் பகலவன் தன் நண்பனைக் காப்பதற்காக பொய் கூறி **நெருப்பில் இட்ட புழு போல** துடித்தான்.

25. பகலவனைக் கண்ட பனி போல

★ வாழ்வில் எத்தனை துன்பங்கள் வந்தாலும் சோர்வடையாத மனமிருந்தால், துன்பங்கள் யாவும் **பகலவனைக் கண்ட பனிபோல** விலகும்.

26. பசுத்தோல் போர்த்திய புலி போல

★ அரசியல்வாதிகள் சிலர் **பசுத்தோல் போர்த்திய புலி போல** இருந்து மக்களை ஏமாற்றுகிறார்கள்.

27. பசுமரத்தாணிப் போல

★ சிறுவயதில் கற்கும் நல்ல பழக்கங்கள் **பசுமரத்தாணிப் போல** மனத்தில் நன்கு பதியும்.

28. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல

★ பல் மருத்துவத் துறையாவது கிடைக்குமா? என ஏங்கிய கலையரசிக்கு **பழம் நழுவி பாலில் விழுந்தது போல** பொதுமருத்துவத் துறையில் இடம் கிடைத்து மகிழ்ந்தாள்.

29. மடை திறந்த வெள்ளம் போல

★ ஜீவா மேடையில் **மடை திறந்த வெள்ளம் போல** பேசினார்.

30. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல

★ மகிழ்ந்து ஓட்டத் தெரியாத என் நண்பன் கதிரவனை நம்பி பயணித்ததால், **மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியது போல்** பாதியில் நின்றுவிட்டது.

31. மழைக் காணாத பயிர் போல (வாடியிருத்தல்)

★ சிலம்பு விற்கச் சென்ற கோவலன் வராததை நினைத்து கண்ணகி **மழைக்காணாப் பயிர் போல** வாடினாள்.

32. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல

★ கட்சித் தலைவர்கள் பலர் நாட்டிற்கு நன்மை செய்யவே நான் பிறந்தேன் என **முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கின்றனர்.**

33. வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல (மெல்ல மெல்ல முடித்தல்)

★ எங்கள் தமிழாசிரியர் திருமலை **வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல** நகைச்சுவையுடன் இலக்கணத்தைக் கற்றுத்தந்தார்.

34. விழலுக்கு இறைத்த நீர் போல

★ வேலனுக்கு கூறிய அறிவுரைகள் **விழலுக்கு இறைத்த நீர் போல** வீணானது.

35. வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற் போல (செயல் முடிவடையும் நேரத்தில் வீண் போதல்)

★ கிரிகெட் போட்டியில் கைக்கு வந்த பந்தைப் பிடிக்கத் தவறியதால் **வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற் போல** நியுஸிலாந்து அணி வெற்றி வாய்ப்பை இழந்தது.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நிறுத்தக்குறியீடுகள்

காற்புள்ளி (,) :-

➔ ஒவ்வொரு பொருளையும் பிரித்துக் காட்டுவதற்கு,

★ (எ.கா.) **இயல், இசை,** நாடகம் முத்தமிழ் ஆகும்.

➔ ஓர் எழுவாய் பல வினைமுற்றுகளைப் பெற்று வரும்போது,

★ (எ.கா.) காந்தியடிகள் இயற்கை **எய்தியபோது,** மக்கள் **கதறினர், விம்மினர்,** அழுதனர்.

➔ இணை மொழிகள் அடுக்கி வரும்போது

★ (எ.கா.)**செல்வர், வறியவர், உயர்ந்தோர்** தாழ்ந்தோர் என்று சான்றோர் வேறுபடுத்திப் பார்க்கமாட்டார்கள்.

➔ எச்சச் சொற்றொடரை அடுத்து,

★ (எ.கா.) நாம் விடா முயற்சியுடன் **உழைத்தால்,** வாழ்வில் தோல்வி என்பது இல்லை.

➔ இணைப்புச் சொற்கள் வரும்போது,

★ (எ.கா.) திருக்குறள் நீதிகள் நிறைந்தது. **ஆதலின்,** அனைவரும் விரும்பிக் கற்க வேண்டும்.

➔ மேற்கோள் குறி தொடங்குவதற்கு முன்னும், பின்னும்,

★ (எ.கா.) பேரறிஞர் **அண்ணா, 'சிந்தி, சீர்தூக்கு, செயல்படு',** என்று கூறினார்.

★ கடிதங்கள் எழுதும்போது, **'அன்புடையீர்', 'அன்புள்ள', 'நண்ப', 'ஐயா'** போன்ற விளிகளுக்கு அடுத்து காற்புள்ளி இட வேண்டும்.

அரைப்புள்ளி (;) :-

➔ தொடர் வாக்கியங்களில் அமையும்.

★ (எ.கா.) கல்வி கரையில, கற்பவர் நாள் **சில;** மெல்ல நினைக்கின் பிணி பல.

➔ ஓர் எழுவாயுடன் பல பயனிலைகள் வரும்போது,

★ (எ.கா.) திருவள்ளுவர், வாய்மையைக் **கூறியவர்;** கொல்லாமையை **விரும்பியவர்;** பிறர்க்கு இன்னா விரும்பாதவர்.

➔ எடுத்துக்காட்டு உவமைத் தொடர்களின் இடையில்,

➔ ஒரே தொடரில் இரு வேறுபட்ட கருத்துகள் வருமாயின் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துக் காட்ட இக்குறி இடவேண்டும்.

★ (எ.கா.) ஊசியைக் காந்தம் **இழுக்கும்;** உத்தமனை நட்பு இழுக்கும்.

முக்காற்புள்ளி (:) :-

➔ ஒருவரது கூற்றினை அறிமுகப்படுத்துவதற்கு,

★ (எ.கா.) திருவள்ளுவர் கூறிய நீதிகள் மூன்று. **அவை:** வாய்மை, தூய்மை, நேர்மை

➔ தொடரில் கூறியதொன்றை விரித்துக்கூறும்போது,

★ (எ.கா.) வாழ்வு இரு **திறத்தது:** ஒன்று உயிர் வாழ்வு; மற்றொன்று உடல் வாழ்வு. - திரு.வி.க.

➔ கட்டுரையின் இடையில் வரும் சிறு தலைப்புகளை அடுத்து,

★ (எ.கா.) **முன்னுரை:** **உடல்:** **முடிவுரை:**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

முற்றுப்புள்ளி (.) :-

➔ வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

★ (எ.கா.) திருக்குறளை இயற்றியவர் **திருவள்ளுவர்.**

➔ தந்தை பெயர்க் குறுக்கம் (தலைப்பெழுத்து), (எ.கா.) **மு.** வரதராசனார்

➔ பட்டப் பெயர்க் குறுக்கம், (எ.கா.) **ப.** சிவனார், **இ.ஆ.ப.**

➔ சொற் குறுக்கம், (எ.கா.) **கி.மு., கி.பி.**

➔ முகவரியின் இறுதி, (எ.கா.) **ப.** கதிரவன், அண்ணா வீதி, **தூத்துக்குடி.**

வினாக்குறி (?) :-

➔ வினா வாக்கியங்களின் இறுதியில் வினாக்குறி இடவேண்டும்.

★ (எ.கா.) உன் பெயர் **என்ன?**

உணர்ச்சிக்குறி (!) :-

➔ உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் இறுதியில் உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

➔ வியப்பு (எ.கா.) **ஆ!** எவ்வளவு **அழகு!** ➔ இரக்கம் (எ.கா.) **அந்தோ**! என்ன **கொடுமை**!

➔ மகிழ்ச்சி (எ.கா.) **வருக**! **வருக**! ➔ இழிவு (எ.கா.) **சீ**! **சீ**! இது ஒரு பிழைப்பா?

➔ ஒருவரை விழிக்கும் சொல்லை அடுத்து உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

★ (எ.கா.) **செல்வா**! இங்கு **வா**!

இரட்டை மேற்கோள் குறி ("-----") :-

➔ வாக்கியங்களில் மேற்கோள்கள் எடுத்தாளும்போது இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.

➔ ஆன்றோர் கருத்துகள் (எ.கா.) "**ஓர் இனத்தின் சிறப்பு மொழி**" என்று கூறினார் அறிஞர்.

➔ புலவர்களின் பொன்மொழிகள் (எ.கா.) "**இளமையில் கல்**" என்றார் ஔவையார்.

➔ நேர்க்கூற்றில் இரட்டை மேற்கோள் குறி இடவேண்டும்.

★ (எ.கா.) ஆசிரியர் மாணவரிடம், "**உன் பெயர் என்ன?**" என்று வினவினார்.

ஒற்றை மேற்கோள் குறி ('-----') :-

➔ தன்மைச் சுட்டும் போது (எ.கா.) '**அ**', '**இ**', '**உ**' ஆகியவை சுட்டெழுத்துகள்.

➔ சிறப்பு நிகழ்ச்சிகளைக் கூறும்போது (எ.கா.) '**கால்கோள்**', '**நீர்ப்படை**'

➔ நேர்கூற்றில் மேற்கோள் கூறும்போது

★ (எ.கா.) "மாணவர்கள் '**ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்**' என்ற ஔவையாரின் கூற்றைப் பின்பற்ற வேண்டும்" என்றார் ஆசிரியர்.

அடைப்புக்குறி ( ) :-

➔ அருஞ்சொல்லை விளக்கும்போது(எ.கா.) தமிழுக்கு அமுதென்று **(இனிமை)** பெயர்.

➔ சிறு பிரிவுகளை எண்ணும்போது

★ (எ.கா.) திருக்குறளில் உள்ள அதிகாரம் மூன்று **(அறம், பொருள், இன்பம்).**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம், "முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக" எனக் கேட்டார்.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. தமிழ்மொழி நம் அடையாளம் பண்பாட்டின் நீட்சி தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது

★ தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீட்சி; தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது.

2. நடைபெற்றியலும் கிளவியாக்கம் 26 என்றும் நடைநவின்றொழுகும் செய். 135 என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது

★ 'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26) என்றும் 'நடைநவின்றொழுகும்' (செய். 135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.

3. அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்

★ அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் "புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே" என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

4. ஆற்றங்கரைப்படிவம் வெள்ளப் பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது குறையும் நீர் மாசடைவதைத் தடுக்கும் மண் அரிப்பைத் தடுக்கும் வறட்சிக் காலங்களில் நீர்மட்டம் குறைந்துவிடாமல் பாதுகாக்கும்

★ ஆற்றங்கரைப்படிவம் வெள்ளப் பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது குறையும்; நீர் மாசடைவதைத் தடுக்கும்; மண் அரிப்பைத் தடுக்கும்; வறட்சிக் காலங்களில் நீர்மட்டம் குறைந்துவிடாமல் பாதுகாக்கும்.

5. ஐப்பசி அடை மழை கார்த்திகை கனமழை என்பது சொலவடை ஓராண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்திய பழந்தமிழர் ஐப்பசி கார்த்திகை மாதங்களைக் கூதிர்ப் பருவம் என்று அழைத்தனர்

★ 'ஐப்பசி அடை மழை! கார்த்திகை கனமழை!' என்பது சொலவடை, ஓராண்டை ஆறு பருவங்களாக வகைப்படுத்திய பழந்தமிழர் ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் கூதிர்ப்பருவம் என்று அழைத்தனர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. சரி இவ்வளவு நீளம் மண்டிக்கிடக்கும் செடிகளை அரித்து எறிவது லேசான காரியமா என்றான் மருதன்

★ "சரி இவ்வளவு நீளம் மண்டிக்கிடக்கும் செடிகளை அரித்து எறிவது லேசான காரியமா?" என்றான் மருதன்.

7. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் தம்மனை நும்மனை அகம். 346: 16-17 என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது

★ மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' (அகம். 346: 16-17) என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது.

8. மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே குறுந். 135 என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது

★ "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" (குறுந். 135) என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது.

9. யாவரும் கேளிர் என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி சிறியோரை இகழ்தல் இலமே என்பது அந்நற்பண்பின் மலர்ச்சி பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது அவ்வுயிர்ப்பண்பின் முதிர்ச்சி

★ 'யாவரும் கேளிர்' என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி; 'சிறியோரை இகழ்தல் இலமே' என்பது அந்நற்பண்பின் மலர்ச்சி; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது அவ்வுயிர்ப்பண்பின் முதிர்ச்சி;

10. குகன் கூறியவற்றைக் கேட்ட இராமன் என் உயிர் போன்றவனே நீ என் தம்பி இலக்குவன் உன் தம்பி அழகிய நெற்றியைக் கொண்ட சீதை உன் அண்ணி என்று கூறினான்

★ குகன் கூறியவற்றைக் கேட்ட இராமன், "என் உயிர் போன்றவனே! நீ என் தம்பி; இலக்குவன் உன் தம்பி; அழகிய நெற்றியைக் கொண்ட சீதை, உன் அண்ணி" என்று கூறினான்.

11. ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள் என்பது சிந்தாமணி

★ 'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்பது சிந்தாமணி.

12. கற்றோர் எந்நிலையிலும் சிறந்தே இருப்பர் தாழும் நிலை வரினும் கலங்காது அறிவால் உலகையே சொந்தமாக்கிக் கொள்வர் எங்குச் சென்றாலும் மற்றவர் மதிப்பைப் பெறுவர்

★ கற்றோர் எந்நிலையிலும் சிறந்தே இருப்பர்; தாழும் நிலை வரினும் கலங்காது, அறிவால் உலகையே சொந்தமாக்கிக் கொள்வர்; எங்குச் சென்றாலும் மற்றவர் மதிப்பைப் பெறுவர்.

13. கி.பி. 1647இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம் என்று காணப்படும் குறிப்பு குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறுகிறது

★ கி.பி. 1647இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில், "தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்" என்று காணப்படும் குறிப்பு, குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறுகிறது.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி வெள்ளையர் நகரம் என்று அழைக்கப்பட்டது

★ செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.

15. நான் பிறந்த மண்ணுடா என் அப்பன் வச்ச வீடு சும்மா கிடக்குடா அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன் என்றார் தந்தை

★ "நான் பிறந்த மண்ணுடா, என் அப்பன் வச்ச வீடு சும்மா கிடக்குடா, அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன்." என்றார் தந்தை.

16. நல்ல கலையாக உருவாகும் படத்தில் பொய்களும் இருக்க முடியாது நம் மூளையை மழுங்கச் செய்யும் கவர்ச்சிகளும் இடம்பெறாது இந்தக் கலைப்படைப்புகள் உண்மையைப் பேசும்

★ நல்ல கலையாக உருவாகும் படத்தில் பொய்களும் இருக்க முடியாது; நம் மூளையை மழுங்கச் செய்யும் கவர்ச்சிகளும் இடம்பெறாது; இந்தக் கலைப் படைப்புகள் உண்மையைப் பேசும்;

17. ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய் நீ அதிசிறந்த நீச்சல் வீரனாயிற்றே என்று மற்றொருவர் வினவினார்

★ "ஏன் இவ்வளவு பின்தங்குகிறாய்? நீ அதிசிறந்த நீச்சல் வீரனாயிற்றே" என்று மற்றொருவர் வினவினார்.

18. மேலாண்மையில் புலியைப் பூனையைப் போலத் தொடர்ந்து நடத்தினால் அது பூனையாகவே ஆகிவிடும் என்கிற பொன்மொழி உண்டு

★ மேலாண்மையில் 'புலியைப் பூனையைப் போலத் தொடர்ந்து நடத்தினால் அது பூனையாகவே ஆகிவிடும்' என்கிற பொன்மொழி உண்டு.

19. நான் அவர்முன் அமர்ந்தவுடன் சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள்தானா என்று கேட்டார்

★ நான் அவர்முன் அமர்ந்தவுடன், "சேரல் இரும்பொறை மன்னர்களின் கல்வெட்டைப் பற்றி எழுதியவர் நீங்கள்தானா?" என்று கேட்டார்.

20. சுவாமி விபுலானந்த அடிகள் மயிலை சீனி. வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர் நல்லொழுக்கம் வாய்ந்தவர் நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னே போல் போற்றுபவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்

★ சுவாமி விபுலானந்த அடிகள், 'மயிலை சீனி. வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர்; நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னே போல் போற்றுபவர்' என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வேற்றுமை உருபுகளைச் சேர்த்தெழுதுக

பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன்(இல்), அது(உடைய) ,கண்

எ.கா. குமரன் வீடு பார்த்தேன் - குமர**னை(ஐ)** வீட்**டில(இல்)** பார்த்தேன்.

1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்?

★ மாறனின் பேச்சுத்திற**னை** யா**ரால்** வெல்ல முடியும்?

2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.

★ போட்டி**யில்** வெற்றி பெற்ற கலைச்செல்வி**க்கு**ப் பாராட்டுகள் குவிந்தன.

3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

★ காலை**யில்** எழுந்து படித்**தால்** நமக்கு நன்மை ஏற்படும்.

4. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.

★ அனைவ**ரை**யும் அன்புடன் அழைத்தவனு**க்கு**த் துன்பத்**தை**த் தர யாரு**க்கு** மனம் வரும்.

5. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

★ விடை - சான்றோரு**க்கு** மதிப்பு கொடுத்**தால்** வாழ்வில் உயரலாம்.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. மொழி தனிச்சிறப்பான கூறுகளும் அவை கையாளுகின்ற வகைமைகளும் கவிதை உந்து சக்தியாக அமைகின்றன.

★ மொழி**யின்** தனிச்சிறப்பான கூறுகளும் அவற்**றைக்** கையாளுகின்ற வகைமைகளும் கவிதை**யின்** உந்துசக்தியாக அமைகின்றன.

2. சாலை வகைகள் மைல்கல் விவரங்கள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்

★ சாலை**யின்** வகைக**ளை**யும், மைல்கற்க**ளின்** விவரங்க**ளை**யும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

3. எதிர் வரும் ஊர்தி கடந்து செல்ல வழிவிட வேண்டும்.

★ எதி**ரில்** வரும் ஊர்தி**க்கு**க் கடந்து செல்ல வழி**யை**விட வேண்டும்.

4. ஒளி குன்று பாடல் இடம்பெற்றுள்ள நடைச்சிறப்பு தொகுத்து உரை வழங்குக

★ ஒளி குன்**றும்** பாட**லில்** இடம்பெற்றுள்ள நடைச்சிறப்பி**னை**த் தொகுத்து உரை வழங்குக

5. காலம் வென்ற மகாகவியான பாரதி கற்பனைக் கடிதம் ஒன்று எழுதுக.

★ காலத்**தை** வென்ற மகாகவியான பாரதி**க்கு** கற்பனைக் கடிதம் ஒன்றி**னை** எழுதுக.

6. வெளிநாடு பொதுஇடம் எச்சில் துப்பு தண்டனை வழங்குகின்றனர்.

★ வெளிநாட்**டில்** பொதுவிடத்**தில்** எச்சி**லை**த் துப்பி**னால்** தண்டனை**யை** வழங்குகின்றனர்.

7. வகுப்பு காகிதம் கிழித்துப் போடு தவறான பழக்கமாகும்.

★ வகுப்**பில்** காகிதத்**தைக்** கிழித்துப் போடு**வது** தவறான பழக்கமாகும்.

8. ஒவ்வொருவரும் வீடு பிள்ளைகள் நூலகம் அமைக்க வேண்டும்.

★ ஒவ்வொருவரும் வீட்**டில்** பிள்ளைகளுக்**கு** நூலகத்**தை** அமைக்க வேண்டும்.

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. ஒவ்வொரு பள்ளி சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ ஒவ்வொரு பள்ளியி**லும்** சுற்றுச்சூழ**லை**ப் பாதுகாப்ப**தை**க் குறித்த விழிப்புணர்**வை**த்தர ஏற்பாட்**டை**ச் செய்ய வேண்டும்.

10. சங்க காலம் தமிழர் வணிகமுறை அறிந்து இன்று நாம் செயல்பட வேண்டும்.

★ சங்க காலத்**தில்** தமிழரின் வணிகமுறையை அறிந்து இன்று நாம் செயல்பட வேண்டும்.

சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக

கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

(எ.கா.) வானம், பற, நிலவு, தொடு - **வானத்தில் பறப்போம். பறந்து நிலவைத் தொடுவோம்**

1. சருகு, விழு, மண், அலை ★**மரத்திலிருந்துமண்ணில்விழுந்தசருகு,அலையில்** அடித்துச்செல்லப்பட்டது.

2. விண்மீன், ஒளிர், எரி, விழு ★ **விண்ணில் ஒளிர்கின்ற விண்மீன் எரிந்து பூமியில் விழுந்தது.**

3. குதிரை, வேகம், ஓடு, தாவு ★ **ஓட்டப்பந்தயத்தில் குதிரை வேகமாக தாவி ஓடும்.**

4. குழந்தை, நட, தளிர்நடை, விழு ★ **பச்சிளங்குழந்தை தளிர்நடை நடந்து தரையில் விழுந்தது.**

5. திரை, காண், கைதட்டல், மக்கள்

★ **திரையில் நடிகனைக் காண்பதற்குக் காத்திருந்த மக்கள், அவனைக் கண்டதும் கைதட்டினர்.**

கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக (ஐ, ஆல், கு, இன்(இல்), அது(உடைய) ,கண்)

(எ.கா.) கபிலன் திறமையானவர் என்று ---------- (குமரன்) தெரியும்.

★ கபிலன் திறமையானவர் என்று **குமரனுக்குத்** தெரியும்.

1. நேற்று முதல் ---------- (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

★ நேற்று முதல் **அணையின்** நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

2. உங்களுக்கு ---------- (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

★ உங்களுக்கு **யாரால்** நன்மை என நினைக்கிறீர்கள்.

3. முருகன் ---------- (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

★ முருகன் **வேகமாகச்** சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

4. நம்முடைய ---------- (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

★ நம்முடைய **தேவையின்** அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக

1. பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.

★ **ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்** ★**கலைகள்எல்லாம்மகிழ்ச்சிதருபவை.**

2. நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

★ **தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது** ★ **மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. பிறர் செய்யாவிட்டால் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை

★ **பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது** ★ **நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது**

4. நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?

★ **நேற்று வந்த பையன் யார் தெரியுமா?** ★**ஏன் பக்கத்தில் இருக்கவில்லை?**

5. கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்

★ **கோசல நாடு ஒரு சிறந்த நாடு** ★ **மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்**

தொடர் மாற்றம்

1. மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்றுக)

★ மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை **என்பதால்,** மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

2.தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.
(வினாத் தொடராக்குக)

★ தஞ்சைக் கோவில் **எவ்வகை** கலைப்பணியில் கட்டப்பட்டது?

3.என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை. (செய்தித் தொடராக்குக)

★ மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் **கலை அழகானது.**

4.நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்.
(பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக)

★ நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் **செல்லாமல் இருக்கமாட்டேன்.**

பழமொழிகளை ஒழுங்குபடுத்துக

ஒழுங்கற்ற தொடர்கள்	ஒழுங்கான தொடர்கள்
1. கெடும் வாயால் தன் நுணலும்	★ **நுணலும் தன் வாயால் கெடும்**
2. புளிக்கும் பழகப் பாலும் பழகப்	★ **பழகப் பழகப் பாலும் புளிக்கும்**
3. போல உள்ளங்கை நெல்லிக்கனி	★ **உள்ளங்கை நெல்லிக்கனி போல**
4. மட்டு புத்தி ஆத்திரக்காரனுக்கு	★ **ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு**
5. அறியும் பாம்பின் கால் பாம்பு	★ **பாம்பின் கால் பாம்பு அறியும்**
6. பயம் இளங்கன்று அறியாது	★ **இளங்கன்று பயம் அறியாது**
7. ஐந்தில் வளையுமா? வளையாதது ஐம்பதில்	★ **ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
8. இழப்பான் அறிவை ஆத்திரக்காரன்	★ **ஆத்திரக்காரன் அறிவை இழப்பான்**
9. மேயலாமா? பயிரை வேலியே	★ **வேலியே பயிரை மேயலாமா?**

மொழிப்பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. உதவும் சிறு துரும்பும் பல் குத்த ★ **சிறு துரும்பும் பல் குத்த உதவும்**
11. பாதி கடின முயற்சியே வெற்றி ★ **கடின முயற்சியே பாதி வெற்றி**
12. வினை அறுப்பான் விதைத்தவன் வினை ★ **வினை விதைத்தவன் வினை அறுப்பான்**
13. கரையில நாள் சில கற்பவர் கல்வி ★ **கல்வி கரையில, கற்பவர் நாள் சில**
14. ஆடாவிட்டாலும் தான் தன் சதை ஆடும் ★ **தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்**
15. கல்லும் கரைப்பார் கரைத்தால் கரையும் ★ **கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்**
16. எண்ணெய் நெருப்பில் எரிகிற ஊற்றாதே ★ **எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே**
17. இருந்தால் ஏற்றம் இருக்கும் இறக்கமும் ★ **ஏற்றம் இருந்தால் இறக்கமும் இருக்கும்**
18. நீர் தளும்பாது நிறைகுடம் ★ **நிறைகுடம் நீர் தளும்பாது**
19. அமுதமும் அளவுக்கு நஞ்சு மிஞ்சினால் ★ **அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**
20. முதற்படி தோல்வியே வெற்றிக்குப் ★ **தோல்வியே வெற்றிக்கு முதற்படி**
21. வாங்கு மரியாதை கொடுத்து மரியாதை ★ **மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு**
22. குறைவற்ற நோயற்ற செல்வம் வாழ்வே ★ **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
23. பத்தும் பசி வந்தால் பறந்தோடும் ★ **பசி வந்தால் பத்தும் பறந்தோடும்**
24. புலி பாய்ந்தால் பார்த்தால் பசு ★ **பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி**
25. விடாதே ஆழம் காலை தெரியாமல் ★ **ஆழம் தெரியாமல் காலை விடாதே**
26. விடு வாழு வாழ ★ **வாழு வாழ விடு**
27. கதவைத் வாய்ப்பு தட்டும் ஒருமுறைதான் ★ **வாய்ப்பு ஒருமுறைதான் கதவைத் தட்டும்**
28. தூற்றிக்கொள் போதே காற்றுள்ள ★ **காற்றுள்ள போதே தூற்றிக்கொள்**
29. வாய்க்கு கைக்கு எட்டவில்லை எட்டியது ★ **கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை**
30. பிடுங்கியதுவரை வீட்டில் எரிகிற லாபம் ★ **எரிகிற வீட்டில் பிடுங்கியதுவரை லாபம்**
31. வாய்க்கால் வல்லான் வகுத்ததே ★ **வல்லான் வகுத்ததே வாய்க்கால்**
32. இல்லை உழைப்பின்றி ஊதியம் ★ **உழைப்பின்றி ஊதியம் இல்லை**
33. காசு விற்ற நாய் குரைக்குமா? ★ **நாய் விற்ற காசு குரைக்குமா?**
34. சுடுகாடு தொட்டில் மட்டும் பழக்கம் ★ **தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்**
35. பெரு நெருப்பு சிறுபொறி ★ **சிறுபொறி பெரு நெருப்பு**
36. வருமுன் அணை வெள்ளம் போடு ★ **வெள்ளம் வருமுன் அணை போடு**
37. செய் பருவத்தே பயிர் ★ **பருவத்தே பயிர் செய்**
38. உதவி தன் தனக்கு கையே ★ **தன் கையே தனக்கு உதவி**
39. ஓடும் நீர் அமைதியாக ஆழமான ★ **ஆழமான நீர் அமைதியாக ஓடும்**
40. படம் மனத்தை வெளிப்படுத்தும் பேச்சு ★ **மனத்தை வெளிப்படுத்தும் படம் பேச்சு**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இலக்கிய நயம் பாராட்டுக

இயல் 1

"முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!"

- **கண்ணதாசன்**

திரண்ட கருத்து:-

"பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல
திரண்ட கருத்தால் கவி நிமிரும்"

★ தமிழ்த்தாய் மூன்று சங்கங்களை அமைத்தாள்.
★ சங்கத்தில், அறிவில் சிறந்த புலவர்களை ஒன்று கூட்டி,
★ அளவிட முடியாத பொருள்களைக் கூட்டி, ★ எண்ணற்ற சொற்களைக் கூட்டி,
★ சுவைமிகுந்த கவிதைகளை உருவாக்கி,
★ ஒரே இடத்தில் இத்தகைய அற்புதங்களை ஏற்படுத்தினாள், தமிழ்த்தாய்.

மையக் கருத்து:-

"பையபைய எழுத கவிதை வரும் - நல்ல
மையக்கருத்து கவியின் ஆழம் தரும்"

★ தமிழ்த்தாய் முச்சங்களை அமைத்து, பல அற்புதங்களை ஏற்படுத்தியுள்ளாள்.

மோனைத் தொடை:-

"காட்டுக்கு அழகு யானை - நல்ல
கவிதைக்கு அழகு மோனை"

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

சீர் மோனை	
★ முச்சங்கங் முதுபுலவர்	★ அச்சங்கத் அளப்பரிய
★ சொற்சங்க சுவைமிகுந்த	★ அற்புதங்க அமைத்த

எதுகைத்தொடை:-

"யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல
கவிதையின் பலம் எதுகையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

அடி எதுகை	
★ முச்சங்கங் - அச்சங்கத்	★ சொற்சங்க - அற்புதங்

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயைபுத் தொடை:-

"காற்றசைவில் நடந்ததை வடிப்பதே கவிஞனின் இயல்புநடை - ஓரடியின்
ஈற்றசையில் முடிந்ததை முடிப்பதே கவிதையின் இயைபுத் தொடை

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ இக்கவிதையில், '**கூட்டி**' என்னும் சொல் அடிதோறும் இறுதி சீராகக வந்துள்ளதால், இ.ஃது இயைபுத் தொடை ஆகும்.

அணி நயம்:-

"வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்
நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு"

★ தமிழ்த்தாய் முச்சங்கத்தை வளர்த்ததைக் கவிஞர் இயல்பாகக் கூறியுள்ளதால் இ.ஃது '**இயல்பு நவிற்சி அணி**' ஆகும்.

இயல் 2

"வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!"

- **பாரதியார்**

திரண்ட கருத்து:-

"பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல
திரண்ட கருத்தால் கவி நிமிரும்"

★ மின்னல் மிகுந்த வெளிச்சத்துடன் அடிக்கின்றது.

★ கடலின் வீரம்மிக்க அலைகள் வானை இடிக்கின்றன. ★ மேகக்கூட்டம் கொட்டியிடிக்கிறது.

★ காற்று **கூ கூ** வென்று வானைக் குடைகிறது.

★ வானம் பல்வேறு வகையான தாளங்களை எழுப்புகின்றது.

★ எட்டுத்திசைகளிலும் இடி இடிக்கின்றது.

★ இத்தகைய நிகழ்வுகளுக்குப் பிறகு மழை எங்ஙனம் வந்தது என்று பாடுகிறார், பாரதியார்.

மையக் கருத்து:-

"பையபைய எழுத கவிதை வரும் - நல்ல
மையக்கருத்து கவியின் ஆழம் தரும்"

★ பாரதியார், மழைப் பொழியத் துவங்குவதற்கு முந்தைய காட்சியைப் பாடியுள்ளார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மோனைத் தொடை:-

"குயவனின் கைவண்ணம் பானையிலே - நல்ல
கவிஞனின் கைவண்ணம் மோனையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

சீர் மோனை	
★ வெட்டி - வீரத் - வின்னை	★ கொட்டி - கூவென்று - குடையுது - காற்று
★ சட்டச்சட - சட்டச்சட	★ எட்டுத்திசையும் - எங்ஙனம்

எதுகைத்தொடை:-

"தமிழின் பிறப்பு பொதிகையிலே - நல்ல
கவிதையின் சிறப்பு எதுகையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

சீர் எதுகை	அடி எதுகை
★ சுட்டச்சட - சுட்டச்சட - கொட்டிக்	★ வெட்டியடிக்குது கொட்டி சுட்டச்சட எட்டுத்திசையும்

சொல் நயம்:-

★ **கூ கூ வென்று**, **சட்டச்சட**, **இடிக்குது குடையுது** போன்ற ஓசையை உணர்த்தும் சொற்கள் பாடலுக்கு அழகூட்டுகின்றன.

அணி நயம்:-

"வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்
நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு"

★ மழையின் சிறப்புகளை உயர்த்திக் கூறியுள்ளதால் இ.ஃது **'உயர்வு நவிற்சி அணி'** ஆகும்.

இயல் 3

"பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்."

- **நாமக்கல் கவிஞர்**

திரண்ட கருத்து:-

"பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல
திரண்ட கருத்தால் கவி நிமிரும்"

★ பெற்ற தாயான தமிழ்த்தாயைப் பின்னுக்குத் தள்ளி, பிறமொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களின் பிழையை நீக்கியவன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அன்பு நிறைந்த உரைகளால் சிந்திக்க வைத்த தமிழ்மொழிக்கு இணையானது உலகில் இல்லை என்றவன்.

★ தமிழ்மொழியைக் கற்றுணர்ந்து அதன் இனிமையைக் காண்பாய் என்றவன்.

★ மூடிக்கிடந்த நம் அகக்கண்ணைத் திறந்து கம்பனையும் வள்ளுவனையும் சுட்டிக் காட்டியவன்.

★ இவற்றை எல்லாம் செய்த தெய்வக்கவியான பாரதியார் நமக்கெல்லாம் ஒரு நல்லாசிரியர் என்பது உறுதி.

மையக் கருத்து:-

"பையபைய எழுத கவிதை வரும் - நல்ல
மையக்கருத்து கவியின் ஆழம் தரும்"

★ தமிழ்மொழியின் சிறப்புகளை உணரச் செய்த பாரதியார் நல்லாசிரியர் என்பதை உணர வேண்டும் என்கிறார் கவிஞர்.

மோனைத் தொடை:-

"காட்டுக்கு அழகு யானை - நல்ல
கவிதைக்கு அழகு மோனை"

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

சீர் மோனை	அடி மோனை
★ பெற்றெடுத்த - பின்னால்	★ பெற்றெடுத்த பிறமொழிக்கு
★ பிறமொழிக்கு - பிழையை	★ ஊற்றெடுத்தே உலகத்தில்
★ ஊற்றெடுத்த - உலுங்க	★ கற்றுணர்ந்தே கம்பனொடு
★ உலகத்தில் - உண்டோ	★ தெற்றெனநம் தெய்வக்கவி
★ கற்றுணர்ந்தே - காண்பாய்	
★ கம்பனொடு - காட்டித்	
★ தெற்றெனநம் - திறந்து	
★ தெய்வக்கவி - திண்ணம்	

எதுகைத்தொடை:-

"யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல
கவிதையின் பலம் எதுகையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

சீர் எதுகை	அடி எதுகை
★ பிறமொழிக்கு - சிறப்பளித்த	★ பெற்றெடுத்த ஊற்றெடுத்தே கற்றுணர்ந்தே
★ சுட்டிக் - காட்டித்	தெற்றெனநம்

அணி நயம்:-

"வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்
நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு"

★ கவிதையில், பாரதியும் தமிழும் உயர்த்திக் கூறப்பட்டுள்ளதால், இ.ஃ.து **'உயர்வுநவிற்சி அணி'** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

"பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!"

- **கவிமணி தேசிய விநாயகம்**

திரண்ட கருத்து:-

"பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல
திரண்ட கருத்தால் கவி நிமிரும்"

★ மனிதராகப் பிறப்பதால் மட்டுமே ஒருவருக்குப் பெருமை வராது.

★ நல்ல செயல்களில் ஈடுபடுபவர்களுக்கே சிறப்புகள் வரும்.

★ மக்களுக்கு நன்மை செய்பவர்களே மேன்மையானவர்கள்.

★ மக்களுக்குத் தீமை செய்பவர்கள் தீண்டதகாதவர்கள் ஆவர்.

மையக் கருத்து:-

"பையபைய எழுத கவிதை வரும் - நல்ல
மையக்கருத்து கவியின் ஆழம் தரும்"

★ நன்மை செய்பவர்கள் மேன்மையானவர்கள், தீமை செய்பவர்கள் தீண்டதகாதவர்கள்.

மோனைத் தொடை:-

"காட்டுக்கு அழகு யானை - நல்ல
கவிதைக்கு அழகு மோனை"

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

சீர் மோனை	
★ பிறப்பினால் - பெருமை	★ சிறப்பு - செய்கை
★ நன்மை - நாடும்	★ தின்மை - தீண்ட

எதுகைத்தொடை:-

"யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல
கவிதையின் பலம் எதுகையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

அடி எதுகை	
★ பிறப்பினால் சிறப்பு	★ நன்மை தின்மை

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

"அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?"

- **பாரதிதாசன்**

திரண்ட கருத்து:-

"பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல
திரண்ட கருத்தால் கவி நிமிரும்"

★ மாலைப் பொழுதில் சூரியன் மறையும்போது கவிஞர், அழகான உலகத்தைக் காண்கிறார்.

★ வானத்தையும் நான்கு திசைகளையும் காண்கிறார்.

★ சூரியன் மறைவிற்குப் பிறகு இருள் சூழ்கிறது.

★ காரிருள் சிரித்ததுண்டா? ஆம். அதுதான் நிலவொளி.

★ நிலவு முத்துபோன்ற ஒளியைப் பரப்புகின்றது.

★ மொத்த அழகையும் சேகரித்து, குளிரேற்றி, ஒளியூட்டி, இயற்கை அன்னை நிலவைப் படைத்துள்ளாள்.

மையக் கருத்து:-

"பையபைய எழுத கவிதை வரும் - நல்ல
மையக்கருத்து கவியின் ஆழம் தரும்"

★ கவிஞர், மாலைப்பொழுதின் அழகையும் நிலவின் அழகையும் இயற்கையின் அழகையும் பாடியுள்ளார்.

மோனைத் தொடை:-

"காட்டுக்கு அழகு யானை - நல்ல
கவிதைக்கு அழகு மோனை"

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

சீர் மோனை
★ அந்தியிருளாற் - அவ்வாறே ★ பிந்தியந்தக் - பெருஞ்சிரிப்பின்
★ சிந்தாமல் - சிதறாமல் - சேகரித்து

எதுகைத்தொடை:-

"யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல
கவிதையின் பலம் எதுகையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

அடி எதுகை
★ அந்தியிருளாற் பிந்தியந்தக் சிந்தாமல் இந்தாவென்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயைபுத் தொடை:-

"காற்றசைவில் நடந்ததை வடிப்பதே கவிஞனின் இயல்புநடை - ஓரடியின்
ஈற்றசையில் முடிந்ததை முடிப்பதே கவிதையின் இயைபுத் தொடை"

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ **கண்டேன்** - **கண்டேன்** - **கண்டேன்** ★ காரிருள்**தான்** - நீ**தான்**

அணி நயம்:-

"வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்
நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு"

★ இயற்கையின் அழகை உள்ளது உள்ளபடிக் கூறியுள்ளதால் இ.ந்து **'இயல்பு நவிற்சி அணி'** ஆகும்.

இயல் 7

"பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன்"

- **நா. காமராசன்**

திரண்ட கருத்து:-

"பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல
திரண்ட கருத்தால் கவி நிமிரும்"

★ பாலை வனங்களை முத்து பூத்த கடல்களாக மாற்றுவேன்

★ கடும்புயலைக் கூறுபோட்டு, கோடி தென்றல்களாக மாற்றுவேன்

★ விண்மீன்களைக் காசுகளாக (பணமாக) மாற்றி, இல்லாதவர்களுக்குக் கொடுப்பேன்.

★ சுட்டெரிக்கும் சூரியனை, ஏழைகளின் வீட்டில் விறகாக்குவேன்.

மையக் கருத்து:-

"பையபைய எழுத கவிதை வரும் - நல்ல
மையக்கருத்து கவியின் ஆழம் தரும்"

★ கவிஞர், நாடெங்கும் கொடுமை நீங்கி, வளமை செழிக்க வேண்டும் என்கிறார்.

மோனைத் தொடை:-

"காட்டுக்கு அழகு யானை - நல்ல
கவிதைக்கு அழகு மோனை"

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சீர் மோனை	அடி மோனை
★ பூமிச்சருகாம் - பாலையை ★ புயலைக் - புதிய ★ இரவில் - இரவலரோடு ★ விறகெரிக்க - வீசுவேன்	★ பூமிச்சருகாம் புயலைக் ★ இரவில் இரவெரிக்கும்

எதுகைத்தொடை:-

"யானையின் பலம் துதிக்கையிலே - நல்ல
கவிதையின் பலம் எதுகையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

சீர் எதுகை	அடி எதுகை
★ இரவில் - இரவலரோடு	★ இரவில் இரவெரிக்கும்

இயைபுத் தொடை:-

"காற்றசைவில் நடந்ததை வடிப்பதே கவிஞனின் இயல்புநடை - ஓரடியின்
ஈற்றசையில் முடிந்ததை முடிப்பதே கவிதையின் இயைபுத் தொடை"

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ கடல்களாக்குவேன் - தென்றலாக்குவேன் - பேசுவேன் - வீசுவேன்

அணி நயம்:-

"வியப்புற கவிதை தொடுப்பது தனிச்சிறப்பு - அதில்
நயமுற கவிஞன் வடிப்பது அணிச்சிறப்பு"

★ இயற்கையின் அழகு உள்ளது உள்ளபடிக் கூறியுள்ளதால் இ.ஃது **'இயல்பு நவிற்சி அணி'** ஆகும்.

இயல் 8

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே."

- **திரிகூட ராசப்பக் கவிராயர்**

திரண்ட கருத்து:-

"பிரண்டைக் காயால் கூன் நிமிரும் - நல்ல
திரண்ட கருத்தால் கவி நிமிரும்"

★ ஆண்குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்து, பெண் குரங்குகளுக்குக் கொடுக்கின்றன.

★ அப்பெண்குரங்குகள் உண்டு சிதறும் பழங்களை உண்பதற்காக, வானுலகத்தில் உள்ள தேவர்கள் இரந்து நிற்பார்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ மலையில் தவம் செய்யும் முனிவர்கள், உற்று நோக்கி தேவர்களை அழைப்பார்கள்.

★ சித்தர்கள் வன மூலிகைகளை வளர்ப்பார்கள்.

★ தேன்போன்ற அருவி நீரானது, வானில் இருந்து விழுவதைப் போன்று வீழும்.

★ செந்நிற ஞாயிற்றின் தேர்க்காலும், குதிரையின் காலும் அருவி நீரில் வழுக்கும்.

★ சடையில் அழகிய பிறையைச் சூடியவன் சிவபெருமான்.

★ அந்தச் சிவபெருமான், குற்றாலநாதராக எழுந்தருளியிருக்கக் கூடிய குற்றாலமலை எங்கள் மலையே!

மையக் கருத்து:-

"பையபைய எழுத கவிதை வரும் - நல்ல
மையக்கருத்து கவியின் ஆழம் தரும்"

★ கவிஞர், குற்றாலமலையின் வளங்களைப் பாடியுள்ளார்.

மோனைத் தொடை:-

"காட்டுக்கு அழகு யானை - நல்ல
கவிதைக்கு அழகு மோனை"

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

சீர் மோனை
★ **வா**னரங்கள் - **வா**ன்கவிகள் ★ **கா**னவர்கள் - **க**வனசித்தர் - **கா**யசித்தி
★ **தே**னருவி - **தி**ரையெழும்பி - **தே**ர்க்காலும் ★ **கூ**னலிளம் - **கு**ற்றாலத்

எதுகைத்தொடை:-

"தமிழ் பிறந்தது பொதிகையிலே - நல்ல
கவிதை சிறப்பது எதுகையிலே"

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

சீர் எதுகை	அடி எதுகை
★ வா**ன**ரங்கள் - வா**ன்**கவிகள் ★ கா**ன**வர்கள் - வா**ன**வரை	★ வா**ன**ரங்கள் கா**ன**வர்கள்
★ தே**ன**ருவி - வா**னி**ன்	★ தே**ன**ருவி கூ**ன**லிளம்

இயைபுத் தொடை:-

"காற்றசைவில் நடந்ததை வடிப்பதே கவிஞனின் இயல்புநடை - ஓரடியின்
ஈற்றசையில் முடிந்ததை முடிப்பதே கவிதையின் இயைபுத் தொடை"

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ கொ**ஞ்சும்** - கெ**ஞ்சும்** ★ விளை**ப்பார்** - அழை**ப்பார்** ★ வ**ழுகும்** - ஒ**ழுகும்**

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அணி இலக்கணம்

பொருள் வேற்றுமை அணி

அணி விளக்கம்

★ இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

சிறப்புச் செய்தி:-

தண்டியலங்காரம்

➔ **"கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள் வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே"**

எடுத்துக்காட்டுப் பாடல்

★ **"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
ஏங்கொலிநீர் ஞாலனத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இல்லாத தமிழ்" **- தண்டியலங்காரம்**

எடுத்துக்காட்டு விளக்கம்

கதிரவன்	தமிழ்
உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றுபவன்	உயர்ந்த பொதிகைமலையிருந்து தோன்றியவள்
கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுபவன்	உலகத்தில் வாழும் மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றுபவள்
மக்களால் போற்றப்படுபவன்	சான்றோரால் தொழப்படுபவள்
ஒளிர்கின்ற கதிரவனாக இருக்கின்றான்	தனக்கு நிகரில்லாத தமிழாக இருக்கின்றாள்.

அணிப் பொருத்தம்

★ தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

நிரல்நிறை அணி

அணி விளக்கம்

★ ஒரு சொல் ஒரு வரிசையில் நிறுத்தி, அவற்றோடு பொருள் தொடர்புடைய வேறுசொல்லை அடுத்த வரிசையில் நிறுத்துவது நிரல்நிறை அணி ஆகும்.

எடுத்துக்காட்டுப் பாடல்

★ **"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
பண்பும் பயனும் அது"

சிறப்புச் செய்தி:-

தண்டியலங்காரம்

➔ **"நிரல்நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே"**

எடுத்துக்காட்டு விளக்கம்

★ அன்புடன் வாழ்வதே வாழ்க்கையின் பண்பு.

★ அறத்தோடு வாழ்வதே வாழ்க்கையின் பயன்.

அணிப் பொருத்தம்

★ இக்குறட்பாவில், முதலடியில் **அன்பு, அறன்** ஆகிய சொற்கள் அமைந்துள்ளன.

★ அதற்கிணையாக இரண்டாவது அடியில் **பண்பு, பயன்** ஆகிய சொற்கள் அமைந்து பொருள் தருகின்றன.

★ எனவே, இது **நிரல்நிறை அணி** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஏகதேச உருவக அணி

அணி விளக்கம்

★ கவிஞர் எடுத்துக்கொண்ட இரண்டு ஒப்பீடுகளில் ஒன்றை உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும். (ஏகம் - ஒன்று, தேசம் - பக்கம்)

எடுத்துக்காட்டுப் பாடல்

★ **"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
ஏமப் புணையைச் சுடும்."

எடுத்துக்காட்டு விளக்கம்

★ தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு சினம் ஆகும்.

★ சினம் ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் அழிக்கும்.

அணிப் பொருத்தம்

★ இப்பாடலில், "சுற்றம" **பாதுகாப்புத் தெப்பம்** என் மட்டுமே உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

★ ஆனால்,**வாழ்க்கையைத் துன்பக்கடலாகவோ**,வாழ்க்கைப் **பயணத்தைக் கடல் பயணமாகவோ** உருவகிக்கவில்லை. எனவே, **இ∴து ஏகதேச உருவக அணி** ஆகும்.

சொற்பொருள் பின்வரும் நிலையணி

அணி விளக்கம்:-

★ செய்யுளில் முன்னர் வந்த ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

எடுத்துக்காட்டுப் பாடல் 1:-

★ **"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

எடுத்துக்காட்டு விளக்கம்:-

★ எந்த ஒரு பொருளையும் யார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத்தன்மையைக் காண்பதே அறிவாகும்.

அணிப் பொருத்தம்:-

★ இக்குறளில் **'பொருள்'** என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து **"கருத்து"** என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது **'சொற்பொருள் பின்வரும் நிலையணி'** ஆகும்.

எடுத்துக்காட்டுப் பாடல் 2:-

★ **"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
திண்ணியர் ஆகப் பெறின்."

சிறப்புச் செய்தி:-

தண்டியலங்காரம்

➔ **"முன்வரும் சொல்லும் பொருளும் பலவயிற்**
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே"

எடுத்துக்காட்டு விளக்கம்:-

★ ஒரு செயலைச் செய்ய எண்ணியவர் மன உறுதி உடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவார்.

அணிப் பொருத்தம்:-

★ இக்குறளில் **'எண்ணிய'** என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து **"நினைத்தவை"**ஒரே பொருளைத் தருவதால் இது **'சொற்பொருள் பின்வரும் நிலையணி'** ஆகும்.

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உவமை அணி

அணி விளக்கம்:-

★ உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

சிறப்புச் செய்தி:-

தண்டியலங்காரம்

➔ **"பண்பும், தொழிலும், பயனும் என்று இவற்றின் ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்து ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை"**

எடுத்துக்காட்டுப் பாடல்:-

★ **"உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள் பாம்போடு உடன்உறைந் தற்று."**

எடுத்துக்காட்டு விளக்கம்:-

★ அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை

★ ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றது.

அணிப் பொருத்தம்:-

★ உவமை - **குடிசையில் பாம்புடன் வாழ்வது**

★ உவமேயம் - **அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் வாழும் வாழ்க்கை**

★ உவம உருபு - **அற்று (போல)**

★ இக்குறட்பாவில் உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வருவதால், இ.ந்து **உவமை அணி** ஆகும்.

தொழில் உவமையணி

அணி விளக்கம்

★ ஒரு பொருளின் தொழிலுக்கு மற்றொரு பொருளின் தொழிலைக் காரணம் காட்டி உவமைக் கூறுவது தொழில் உவமை அணி ஆகும்.

எடுத்துக்காட்டுப் பாடல்

★ **"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்."**

எடுத்துக்காட்டு விளக்கம்

★ மன்னர்களுடன் பழகுபவர், நெருப்பில் குளிர் காய்பவரைப்போல, நெருப்பிற்கு மிக அருகிலும் செல்லாமல், மிக தொலைவிற்கும் செல்லாமல் பக்குவமாக நடந்துக் கொள்ள வேண்டும்.

அணிப் பொருத்தம்

★ இப்பாடலில், மன்னருடன் பழகுபவரின் தொழிலுக்கு, நெருப்பில் குளிர் காய்பவரின் தொழில் உவமையாகக் கூறப்பட்டுள்ளதால் இது **தொழில் உவமை அணி** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

திணை மற்றும் துறை விளக்கம்

வாகைத்திணை

திணை விளக்கம்

★ வெற்றி பெற்ற அரசனும் வீரர்களும் **வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத்திணை ஆகும்.**

சிறப்புச் செய்தி:-

புறப்பொருள் வெண்பாமாலை

➔ **"இலைபுனை வாகைசூடி இகன்மலைந்து அலைகடல் தானை அரசட் டார்த்தன்று"**

எடுத்துக்காட்டுப் பாடல்

★ "வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழ கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசி
குன் குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்."

எடுத்துக்காட்டு விளக்கம்

★ தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்து மேகமாக உலகம் குளிருமாறு புதிய மழைப் பொழிந்தது.
★ தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த ஆயர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.
★ தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.
★ அவர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.
★ பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோது அவர்களின் பற்கள் நடுங்கின.
★ விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. ★ குரங்குகள் நடுங்கின.
★ மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.
★ பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.
★ மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

திணைப் பொருத்தம்

★ இப்பாடல், போர்மேற் சென்ற தலைவன் வெற்றி பெற்றுத் திரும்புவதைக் குறிக்கும் பாடலாகும்.
★ எனவே, இது **வாகைத்திணை** ஆகும்.

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடாண் திணை

திணை விளக்கம்

★ ஒருவருடைய **புகழ், வலிமை, கொடை, அருள், கல்வி, வீரம்** போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

சிறப்புச் செய்தி:-

புறப்பொருள் வெண்பாமாலை

➔ **"ஒளியும் ஆற்றலும் ஒம்பா வீகையும்**
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று"

எடுத்துக்காட்டுப் பாடல்

★

"வாயி லோயே! வாயி லோயே!	**அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,**
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்	**வறுந்தலை உலகமும் அன்றே அதனால்**
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து	**காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை**
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்	**மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்**
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!	**மழுவுடைக் காட்டகத்து அற்றே**
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி	**எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே!"**
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?	**- ஔவையார்**

எடுத்துக்காட்டு விளக்கம்

★ புலவர்கள், வள்ளல்களை அணுகி அவர்களிடம் அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் சொல்லி, தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையவர்கள்.

★ அதே நேரத்தில், **வள்ளல்கள் தம் கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைந்து வருந்தும் தன்மையைக் கொண்டவர்கள்.**

★ **நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ?**

★ **இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை.**

★ **எங்களை அறிந்து பரிசு தருவதற்குப் பல பேர் உள்ளனர்.**

★ அதனால், எம் யாழினை எடுத்துக்கொண்டோம். கருவிப்பையையும் சுருட்டிக் கொண்டோம்.

★ மரம் வெட்டும் தச்சன் காட்டிற்குச் சென்றால் அவனுக்கு மரங்கள் தவறாமல் கிடைக்கும்.

★ கலைத்தொழிலில் சிறந்த எங்களுக்கு எந்த திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும்.

திணைப் பொருத்தம்

★ இப்பாடலில் ஔவையார் அதியமானின் இரவலர்க்குப் பரிசு தரும் உயர்ந்த கொடைத்திறத்தினைப் பற்றிக் கூறியுள்ளதால், இது **பாடாண் திணை** ஆகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெய்தல் திணை

முதற்பொருள்:-

★ நிலம் - கடலும் கடல் சார்ந்த இடமும்

★ சிறுபொழுது - எற்பாடு

★ பெரும்பொழுது - ஆறு பெரும்பொழுது (முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில், கூதிர், கார்காலம்)

கருப்பொருள்:-

★ தெய்வம் - வருணன்

★ மக்கள் - பரதவர், பரத்தியர், நுளையர்

★ பூ - நெய்தல், தாழை

★ பண் - செவ்வழிப்பண்

★ தொழில் - மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்

உரிப்பொருள்:-

★ இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

எடுத்துக்காட்டுப் பாடல்:-

★ **"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய
விளியறி ஞமலி குரைப்ப, வெரீஇய
மதர்கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு,
இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமூது அள்ளல் அழுந்திய சாகாட்டு
எவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே."

எடுத்துக்காட்டு விளக்கம்:-

★ வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியதுபோல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன் என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறினான்.

திணைப் பொருத்தம்:-

★ இப்பாடலில், நெய்தல் நில மக்களான பரதவர், அவர்களின் தொழிலான உப்பு விளைத்தல் போன்றவை இடம்பெற்றுள்ளதால், இது நெய்தல் திணை பாடலாகும்.

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடாண் திணை

திணை விளக்கம்

★ ஒருவருடைய **புகழ், வலிமை, கொடை, அருள்** போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

சிறப்புச் செய்தி:-

புறப்பொருள் வெண்பாமாலை

➔ **"ஒளியும் ஆற்றலும் ஓம்பா வீகையும்**
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று"

எடுத்துக்காட்டுப் பாடல்

★ "காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே."

எடுத்துக்காட்டுப் விளக்கம்

★ அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு அதிகப்படியான செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

★ அரசன் அறிவில் குறைந்தவனாகி முறை அறியாமல், நாள்தோறும் வரியைத் திரட்ட விரும்புவது, யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் வீணாக்குவது போன்றது.

★ அரசன் தானும் பயனடைய மாட்டான் நாட்டு மக்களும் துன்புறுவர்.

திணைப் பொருத்தம்

★ இப்பாடலில், ஓர் அரசன் எவ்வாறு வரி வசூலிக்க வேண்டும் என்ற நெறிமுறைக் கூறப்பட்டுள்ளது.

★ எனவே, இது பாடாண் திணை பாடலாகும்.

கூதிர்ப்பாசறை

துறை விளக்கம்

★ போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீட்டின் இயல்புகளைக் கூறுவது **கூதிர்ப்பாசறை** ஆகும்.

சிறப்புச் செய்தி:-

புறப்பொருள் வெண்பாமாலை

"கூற்றனையான் வியன் கட்டூர்க் கூதிர்வான் துளிவழங்க
ஆற்றாமை நனிபெருகவும் அயில்வேலோன் அளிதுறந்தன்று"

எடுத்துக்காட்டுப் பாடல்

★ **"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழ கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசி
குன் குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்."

எடுத்துக்காட்டு விளக்கம்

★ தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்து மேகமாக உலகம் குளிருமாறு புதிய மழைப் பொழிந்தது.
★ தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த ஆயர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.
★ தாம் பழகிய நிலத்தை விட்டு பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.
★ அவர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.
★ பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோது அவர்களின் பற்கள் நடுங்கின.
★ விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. ★ குரங்குகள் நடுங்கின.
★ மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.
★ பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.
★ மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

துறைப் பொருத்தம்

★ இப்பாடலில், தலைவன் தங்கியுள்ள படைவீட்டின் இயல்புகள் சொல்லப்பட்டுள்ளது.
★ எனவே, இப்பாடல் கூதிர்ப்பாசறைத்துறை பாடல் ஆகும்.

பரிசில் துறை

துறை விளக்கம்

★ வள்ளலிடம் பரிசு பெற சென்ற புலவர் பரிசு வேண்டி வாயிலில் நிற்பது **பரிசில் துறை** ஆகும்.

எடுத்துக்காட்டுப் பாடல்

★ **"வாயி லோயே! வாயி லோயே!**
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே அதனால்

சிறப்புச் செய்தி:-
புறப்பொருள் வெண்பாமாலை
➔ **"மண்ணகங் காவன் மன்னன் முன்னர்**
எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று"

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே.”

எடுத்துக்காட்டு விளக்கம்

★ புலவர்கள், வள்ளல்களை அணுகி அவர்களிடம் அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் சொல்லி, தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையவர்கள்.

★ அதே நேரத்தில், வள்ளல்கள் தம் கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைந்து வருந்தும் தன்மையைக் கொண்டவர்கள்.

★ நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ?

★ இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை.

★ எங்களை அறிந்து பரிசு தர பல பேர் உள்ளனர்.

★ அதனால், எம் யாழினை எடுத்துக்கொண்டோம். கருவிப்பையையும் சுருட்டிக் கொண்டோம்.

★ மரம் வெட்டும் தச்சன் காட்டிற்குச் சென்றால் அவனுக்கு மரங்கள் தவறாமல் கிடைக்கும்.

★ கலைத்தொழிலில் சிறந்த எங்களுக்கு எந்த திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும்.

துறைப் பொருத்தம்

★ இப்பாடலில், ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசு எதிர்ப்பார்த்துப் பாடிய பாடல் ஆகும்.

★ எனவே, இப்பாடல் **பரிசில் துறை பாடல்** ஆகும்.

தலைமகன் பாங்கற்கு உரைத்தது

துறை விளக்கம்

★ தனக்கு ஏற்பட்ட காதல் துன்பத்தைப் போக்குதற்கு உரியவன் நீ என்று **தலைவன் பாங்கனிடம் (தோழனிடம்) உரைப்பது**.

எடுத்துக்காட்டுப் பாடல்:-

★ **“பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய
விளியறி ஞமலி குரைப்ப, வெரீஇய
மதர்கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு,
இதைமுயல் புனவன் புகைநிழல் கடுக்கும்
மாமுது அள்ளல் அழுந்திய சாகாட்டு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

எவ்வந் தீர வாங்குந் தந்தை
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே.”

எடுத்துக்காட்டு விளக்கம்:-

★ வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியதுபோல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன் என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறினான்.

துறைப் பொருத்தம்:-

★ இப்பாடலில், தலைவன் தன் காதல் துன்பத்தைப் போக்குவதற்கு ஏற்றவன் நீதான் என தன் தோழனிடம் கூறுவதால், இது **தலைமகன் பாங்கற்கு உரைத்தது** என்னும் துறை ஆகும்.

செவியறிவுறூஉ

துறை விளக்கம்

★ அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்துவது **செவியறிவுறூஉ** என்னும் துறையாகும்.

எடுத்துக்காட்டுப் பாடல்

★ “காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே.”

சிறப்புச் செய்தி:-
புறப்பொருள் வெண்பாமாலை
➔ **“மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி**
அறந்தெரி கோலாற்கறிய உரைத்தன்று”

எடுத்துக்காட்டு விளக்கம்

★ அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு அதிகப்படியான செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

★ அரசன் அறிவில் குறைந்தவனாகி முறை அறியாமல், நாள்தோறும் வரியைத் திரட்ட விரும்புவது, யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் வீணாக்குவது போன்றது.

★ அரசன் தானும் பயனடைய மாட்டான் நாட்டு மக்களும் துன்புறுவர்.

துறைப் பொருத்தம்

★ இப்பாடலில், ஓர் அரசன் எவ்வாறு வரி வசூலிக்க வேண்டும் என்ற நெறிமுறைக் கூறப்பட்டுள்ளது.

★ எனவே, இது **செவியறிவுறூஉத் துறை** பாடலாகும்.

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பழமொழிக்கேற்ற வாழ்க்கை நிகழ்வு எழுதுதல்

யானைக்கும் அடிசறுக்கும், தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான், குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை, எறும்பு ஊரக் கல்லும் தேயும், ஊழி பெயரினும் தாம் பெயரார்

பழமொழிக்கேற்ற வாழ்க்கை நிகழ்வு எழுதுதல்

குறிப்புகள்

- ★ பழமொழி விளக்கம் - கதை மாந்தர்கள் - நீ உணர்ந்த நீதி இவற்றைத் தெளிவாக உணர்த்த வேண்டும்.
- ★ முடிந்த வரை கதைகளை உங்களின் சொந்த நடையில் சுருக்கி எழுதவும்.
- ★ பத்துவரிகளுக்குள் அடக்கி எழுதப் பழகவும்.
- ★ மெல்லக் கற்கும் மாணவர்களுக்காகச் சிறப்பாகவும், தனித்தனித்தொடர்களாகவும் அளிக்கப்பட்டுள்ளன. பிரித்துப் படிக்க வேண்டுகின்றோம்.

யானைக்கும் அடிசறுக்கும்

பழமொழி விளக்கம்

- ★ யானையின் கால்கள் பலமானவை, பெரியவை பூமியில் ஒவ்வொரு அடியையும் பார்த்துப் பார்த்து வைக்கும். ஆனாலும் சில நேரங்களில் யானையின்அடி சறுக்கும். அதுபோல ஒருவர் எந்தத் துறையில் சிறந்திருந்தாலும் அத்துறையில் அவரும் பிழை செய்ய வாய்ப்புண்டு.

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது

பழமொழி விளக்கம்

- ★ என்னதான் ஒருவர் அவரையே உயர்ந்தவராக நினைத்தாலும் உழைப்புக்கும் தகுதிக்கு ஏற்பதான் ஒருவரின் நடத்தையும் நன்மையும் விளையும்.

(இரண்டு பழமொழிகளுக்கும் பொதுவான கதை)

என் வாழ்வில் நடந்த நிகழ்வு

கதை மாந்தர்கள்

- ★ நான் - (வளவன்)
- ★ திருக்குறள் தாத்தா
- ★ நண்பர்கள்

நேரம் - மாலை 4.00 மணி

இடம் - திருவண்ணாமலை

திருக்குறள் தாத்தா

எங்கள் ஊரில் திருக்குறள் தாத்தா என்று ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் முறையாகப் பள்ளி படிப்பைப் படித்தவர் இல்லை. ஆனால், திருக்குறள்மீது ஓர் ஈடுபாடு. மாலை 4.00 மணி அளவில் எங்கள் பள்ளியின் வாசலில் நின்றுகொண்டு, என்னையும் என் மாணவ நண்பர்களையெல்லாம் அழைப்பார். யாரொருவர் ஒரு திருக்குறளைப் பிழையில்லாமல் சொல்கிறார்களோ? அவர்களுக்கு இரண்டு தேன்மிட்டாய்களைப் பரிசாகக் கொடுப்பார். திருக்குறளுக்குப் பொருள் சொன்னால் தேன்மிட்டாயை ஒன்று கூடுதலாகக் கொடுப்பார். ஆண்டு இறுதித்தேர்வு நெருங்கிக்கொண்டிருந்தது ஒருநாள் நானும் என் நண்பர்களும் இனிப்புப் பொட்டலத்தை வாங்கி, தாத்தாவுக்குப் பரிசாகக் கொடுக்க ஒரு திட்டம் போட்டோம். ஆனால், தாத்தா பரிசாகக் கொடுத்தால் ஏற்கமாட்டார். ஆகவே, அவருக்கும் திருக்குறள் போட்டி வைப்போம் வெற்றி பெற்றால் இதைக் கொடுப்போம் என்றான் என் நண்பன். அதை அனைவரும் ஏற்றோம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தாத்தாவுக்குத் திருக்குறள் போட்டி

நாங்கள் கேட்ட எல்லாத் திருக்குறளையும் ஓரளவிற்குச் சரியாகச் சொன்ன தாத்தா 'யாகாவாராயினும் நாகாக்க' என்னும் குறட்பாவில் 'காவாக்கால்' என்னும் சொல்லை விட்டுவிட்டு மற்ற சீர்களைச் சொன்னார், அதன் பொருளையும் தவறாகச் சொன்னார். நாங்கள் மீண்டும் மீண்டும் கேட்டோம் அப்போதும் அதையே தவறாகச் சொன்னார். பிறகு தாத்தாவிடம் தவறை எடுத்துச் சொன்னோம் தாத்தாவும் தன் தவறை உணர்ந்தார். பரிசை அன்புடன் ஏற்றார்.

நான் உணர்ந்த நீதி

★ யானைக்கும் அடிசறுக்கும் என்பதுபோல சில நேரங்களில் துறைசார்ந்தவர்களும் தவறு செய்ய வாய்ப்புண்டு என்பதை உணர்ந்தேன்.

★ என்னதான் உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது என்பதுபோல் ஆசிரியர் அல்லாமல் கற்றால் கல்வி சிறக்காது என்றான் என் நண்பன்.

தினை விதைத்தவன் தினையறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான்

பழமொழி விளக்கம்

★ நன்மை செய்கின்றவனுக்கு நல்லவையே பரிசாக் கிடைக்கும். தீமை செய்கின்றவனுக்குத் தீமையே கிடைக்கும்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

பழமொழி விளக்கம்

★ ஒருவருக்கு ஒருகாலத்தில் நாம் செய்யும் நன்மையும் தீமையும் பிற்காலத்தில் அது நமக்குத் தாமாகவே வந்து சேரும்.

அரசன் அன்றுகொல்வான் தெய்வம் நின்று கொல்லும்

பழமொழி விளக்கம்

★ குற்றம் நிருபிக்கப்பட்டால் அந்நாட்டின் அரசன் அன்றே கொல்வான். குற்றத்தை மறைக்க குற்றவாளி திட்டம் தீட்டித் தப்பித்தால் தெய்வம் சில நாள்களில் கொன்றுவிடும்.

ஆபத்திற்குப் பாவமில்லை

பழமொழி விளக்கம்

★ ஒருவன் எவ்வளவு தீமை செய்திருந்தாலும் அவனுக்கென்று ஓர் ஆபத்து வந்து விட்டால் அவன்செய்த பாவங்களைப் பொறுத்து அவனுக்கு உதவி செய்யலாம். அதே நேரத்தில் ஆபத்துக் காலத்தில் நாம் செய்யும் எந்த உதவியும் பாவமில்லை.

பொறுத்தார் பூமி ஆள்வார்

பழமொழி விளக்கம்

★ பொறுத்தவருக்கு என்றுமே வெற்றி கிடைக்கும் என்பதே இதன் பொருளாகும்.

விட்டுக்கொடுப்பார் கெட்டுப்போவதில்லை கெட்டுப்போவார் விட்டுக்கொடுப்பதில்லை

பழமொழி விளக்கம்

★ நாம் பிறருக்கு எதையும் விட்டுக்கொடுப்போம் அதனால் நமக்கு நன்மையே விளையும் தீமை விளையாது.

(இந்தப் பழமொழிகள் அனைத்திற்கும் பொருத்தமான கதை இது)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

என் வாழ்வில் நடந்த கதை

கதை மாந்தர்கள் **நேரம் - மாலை .4.30**

★ நான் - நம்பி **இடம்** - பள்ளி வளாகம்

★ என் நண்பர்கள் - முல்லை வேந்தன் ★ குறும்புக்காரன் - அமுதன்

அன்று பள்ளி முடிந்து நானும் என் நண்பன் முல்லை வேந்தனும் மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தோம். எதிர்பாராத விதமாக ஒரு பெரிய கல் ஒன்று எங்கள் மிதிவண்டியைத் தாக்கியது. முன்சக்கரத்தின் கம்பிகள் நொறுங்கின. இருவரும் அதிர்ந்தோம். கல்வீசி அடித்தவனைக் கண்டுவிட்டோம். அவன் வேறுயாருமில்லை எங்கள் வகுப்பில் ஒருவனான அமுதன். அவனிடம் கேட்டால் 'நான் செய்ய வில்லை' என்றுதான் சொல்வான். மீறியும் மீண்டும் மீண்டும் கேட்டால் மிரட்டுவான் அடியாட்களுடன் அடிக்க வருவான். நாங்கள் அதைப் பலமுறை கண்டதுண்டு. அதனால் இதையும் பொறுத்துக்கொண்டோம். மிதிவண்டி தள்ளிக்கொண்டு பழுதுபார்க்கும் கடைக்குச் சென்று பழுதுக்கான பணம் எவ்வளவு என்று விசாரித்துக் கொண்டிருக்கையில் சாலையில் பெரும் சப்தம் ஒரு சைக்கிலும் ஈருளியும் மோதிக்கொ ண்டிருந்தன. சைக்கிள் சுக்கு நூறாகச் சிதறிக்கிடந்தது. சைக்கிளில் வந்தவனை மிதிவண்டியில் இருந்த தடிஆள்கள் தர்ம அடி அடித்துக் கொண்டிருந்தனர். யாரென்று சென்று பார்க்கையில் அவன் அமுதன் தான். இரத்தக் காயத்துடனும் அவர்கள் அடித்த இரத்த காயத்துடன் தெருவோரமாக அமர்த்தப்பட்டிருந் தான். ஆபத்திற்கு பாவமில்லை அவனை நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று முதலுதவி செய்து காப்பாற்றினோம். இவற்றையெல்லாம் கேள்வியுற்ற எங்கள் தலைமையாசிரியர் என்னையும் என் நண்பன் முல்லைவேந்தனையும் பாரட்டிப் பொழிந்தார்.

நீதி

★ அமுதன் தீமை செய்தான் தீமையே விளைந்தது. நாங்கள் நன்மை செய்தோம் நன்மையே விளைந்தது.

எறும்பு ஊரக் கல்லும் தேயும்

பழமொழி விளக்கம்

★ உழைக்க உழைக்க நாம் அடைய விரும்பியது கிடைக்கும். நாம் அடைய முடியாத உயரத்தை அடையலாம்.

முயற்சி திருவினையாக்கும்

பழமொழி விளக்கம்

★ கடுமையான முயற்சி ஒருவனுக்கு அதிக அளவு செல்வத்தையும் புகழையும் தரும்

ஒரு மலை அடிவாரத்தின்கீழ் ஒரு விவசாயி பயிர்த்தொழில் செய்துவந்தான். பயிர்த்தொழிலில் பெரிய வருமானம் கிடைக்காமல் அவதிப் பட்ட அவன் ஒருநாள் தீடீரென ஒரு முடிவு எடுத்தான் ஓர் ஆழ்துளை கிணறு ஒன்றை தோண்ட முயற்சி செய்தான் ஆட்களை வைத்து பணியைத் தொடங்கினான். ஊர்மக்கள் எல்லோரும் கிண்டல் செய்தார்கள் மலைக்கு கீழே மழை நீர் கிடைக்குமா? இவன் முட்டாள் என்றனர் சிலர்.அடிவாரத்திற்குக் கீழே ஆழ்துளை கிணறா? இவன் ஓர் அடிமுட்டாள் என்றனர் சிலர். 300 அடி போனபிறகும் முக்கால் குவளை நீர்கூட வரவில்லை ஊரே பார்த்துச் சிரித்தது. ஆனால் விவசாயி விடவில்லை, விடாமுயற்சி செய்தபோது 800 அடியில் தண்ணீர் அருவிபோல் கொட்டியது. ஊரே வியந்தது. அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம் என்று கூவியது. பலர் பொறாமையில் பொசுங்கினர். நீர் அருவிபோல் கொட்டியபோது அனைவரும் இவரிடம் நீரைக் கடன்கேட்டு பயிர்த்தொழில் செய்தனர். விவசாயி மிகப் பெரிய செல்வந்தர் ஆனார். விடாமுயற்சி விஸ்வரூப வெற்றியைத் தந்தது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஊழி பெயரினும் தாம் பெயரார்

பழமொழி விளக்கம்

★ விதியே மாற்ற முயற்சி செய்தாலும் தாம்கொண்ட கொள்கையில் பற்றுக்கொண்டு மாறாமல் இருப்பது

கதைமாந்தர்கள் **இடம் - சென்னை நூலகம்**

★ தேசத் தந்தை காந்தியடிகள் **நேரம்** - மாலை

★ காந்தியாரின் மனைவி - கஸ்தூரிபாய் ★ நான் - வளவன்

என் வாழ்க்கைக்குத் திருப்புமுனையாக நடந்த கதை

ஒருமுறை கன்னிமார நூலகத்தில் காந்தியடிகளாரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியைப் படித்துக் கொண்டிருந்தேன். அக்கதையில் கஸ்தூரிபாய் அம்மையார் உடல் நலம் குன்றிச் சாகும் நிலையிலிருந்த போது மருத்துவர்கள் காந்தியடிகளாரிடம் "மாட்டின் மாமிசச் சாறு" உடலில் செலுத்தினால் உயிர்பிழைக்க வாய்ப்புண்டு எனக் கேட்டு காந்தியடிகளிடம் கெஞ்சினார்கள். ஆனால், காந்தியடிகளோ அதை முற்றிலும் மறுத்துவிட்டார். எத்தகைய இன்னல்மிகுந்த காலத்திலும் தான்கொண்ட கொள்கையிலிருந்து காந்தியடிகள் மாறவேயில்லை. கஸ்தூரிபாய் அம்மையாரும் நாளைடைவில் இறந்துவிட்டார். உலகமே மாற்ற நினைத் தாலும் தான்மாறாமல் வாழ்ந்த காந்தியடிகளை அன்றுமுதல் நேசிக்கத் தொடங்கினேன். நானும் மாறினேன் மாமிச உணவையே உட்கொள்வதில்லை. வள்ளலாரின் நூல்களைப் படித்துப் படித்துப் பண்படுகின்றேன்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

பழமொழி விளக்கம்

★ சிறுவயதில் நமக்குள் வராத நற்பழக்கம் வயதான பிறகா வரப் போகின்றது?"

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்.

பழமொழி விளக்கம்

★ சிறிய வயதிலேயே நாம் ஏற்படுத்திக்கொள்ளும் நற்பழக்கங்களும் தீய பழக்கங்களும் வாழ்நாள் வரை நம்மை விட்டு நீங்கா.

தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சேலை.

பழமொழி விளக்கம்

★ பெற்றோர்கள் எவ்வழியோ அவ்வழியே பிள்ளைகளும் நடப்பார்கள்

என் வாழ்க்கை நிகழ்வு

கதை மாந்தர்கள்

★ நான் வளவன் ★ என் நண்பன் நம்பி ★ நம்பியின் அம்மா (அத்தை)

★ நம்பியின் அப்பா (மாமா)

என் நண்பன் நம்பியும் நானும் ஆருயிர் நண்பர்கள்.சிறுவயதிலிருந்தே பள்ளிக்கு இணை பிரியாமல் செல்வோம். சில நாள்களுக்குப் பிறகு அவனது நடத்தையில் மாற்றம் ஏற்பட்டது. அவன் பள்ளிக்குச் சரியான நேரத்தில் கிளம்புவதே இல்லை. சரியாக வீட்டுப்பாடம் செய்யாமல் அசிரியரிடம் அவப்பெயரும் வாங்கினான். இதற்கெல்லாம் காரணம் அதிகாலையில் அவன் எழாமல் உறங்குவதுதான் என்பதை உணர்ந்தேன். ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் ஆசிரியர்கள் சொன்ன தகவல்களையும் வீட்டுப்பாடக் குறிப்புகளையும் நம்பியிடம் கொடுக்க அவன் வீட்டுக்குச் சென்றேன். அவன் வீட்டின் உள்ளே தாழிட்டுக்கொண்டு அவர்கள் குடும்பமே உறங்கிக்கொண்டிருந்தது. நம்பியின்

அம்மாவை எழுப்பி 'வணக்கம் அத்தை என்றுகூறி நம்பியின் போக்கையும் பள்ளியில் அவனுக்கு நடக்கும் நிலையையும் எடுத்துக்கூறினேன்' ஏன் அவன் இப்போதெல்லாம் இப்படி நடந்து கொள் கின்றான் என்று வருத்தத்துடன் கேட்டேன். அவனுடைய செயல்களுக்கெல்லாம் நானும் உன் மாமாவும் தன் காரணம் என்று கூறினார் அத்தை. நான் இரவு 11.30 மணிவரை எல்லா நாடகத்தொடர்களையும் பார்ப்பேன் அதன்பிறகு அவனுடன் அவனுடைய அப்பா பொழுதுபோக்கு விளையாட்டுகள் (வீடியோ கேம்) விளையாடுவார். புதுப்புதுப் படங்களை இரவெல்லாம் தந்தையும் நம்பியும் பார்த்துவிட்டுதான் உறங்குவார்கள். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் தந்தையும் மகனும் கேட்பதே இல்லை . இப்படி படிப்புக்கு ஐந்தில் வளையவில்லையென்றால் ஐம்பதில் எங்கே வளையப்போகின்றது? என்று அழுதார். படிப்பின் அவசியத்தை அத்தை எனக்கு எடுத்துச் சொன்னார். நன்றி கூறி கிளம்பினேன். சில ஆண்டுகளில் நம்பி பள்ளியிலிருந்து வெளியேறினான். ஏறத்தாழ பத்து ஆண்டுகள் உருண்டோடின. ஒரு நாள், என் வண்டி எதிர்பாரத விதமாகப் பழுதடைய நான் பழுது நீக்கச் சென்ற போது அந்தக் கடையில் நம்பி அழுக்குத்துணியில் அமர்ந்திருந்தான். அதிகாலையில் வராமல் இருந்ததற்காக அவனைக் கடைமுதலாளி திட்டிக்கொண்டிருந்தார். நான் அதிர்ந்து போனேன்.அத்தை சொன்ன வார்த்தையை என் மனதில் ஏற்படுத்திய மாற்றம் இன்று நான் ஆசிரியர் கல்லூரியில் சேர இருக்கின்றேன். ஆனால் நம்பியோ?

நீதி:- நண்பர்களே சிறுவயது முதற்கொண்டே நற்பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்! நாளை பெற்றோராகும் நீங்கள் நல்ல பழக்கங்களை மட்டுமே உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்!

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

பழமொழி விளக்கம்

★ பிறரிடம் நாம் குற்றத்தைப் பார்க்க நினைத்தால் அவர்கள் குற்றம்தான் கண்முன் நிற்கும். பிறகு அவர்கள் நம் சுற்றமாகவும் இருக்க மாட்டார்கள்.

தனிமரம் தோப்பாகாது

பழமொழி விளக்கம்

★ தனித்து நின்று பல அரிய காரியங்களைச் சாதித்து விடலாம் என்று நினைத்து தோற்றுவிடுகின்றனர் பலர்.

★ இணைந்து செய்வோர் பெரும் வெற்றி பெருகின்றனர். பெரும்புயலில் தனித்து நிற்கின்ற மரம் வீழ்ந்துவிடும். தோப்புகள் வீழ்வதில்லை.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

பழமொழி விளக்கம்

★ ஒற்றுமையுடன் வாழ்ந்தால் சிறந்த வாழ்க்கையை வாழலாம்.

ஒற்றுமையே உயர்வு

பழமொழி விளக்கம்

★ ஒற்றுமையுடன் வாழ்ந்தால் உயர்ந்த வாழ்க்கையை வாழலாம்.

தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்

பழமொழி விளக்கம்

★ உதடுகள் வேண்டாம் என்றாலும் உள்ளம் துடித்து உதவிகள் செய்யும்.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு

பழமொழி விளக்கம்

★ மனதில் நான்தான் பெரியவன் மற்றவர் தாழ்ந்தவர் என்று எண்ணாமல். மனம் நினைத்தால் எல்லாச் சிக்கலுக்கும் வழி(மார்க்கம்) உள்ளது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

★ ஆயிரம் துன்பங்கள் பிள்ளைகள் தந்தாலும் பெற்றோர்கள் பிள்ளைகளை வஞ்சிக்க மாட்டார்கள்.

★ பெற்றோர்கள் மனம் பிள்ளைகள்மீது அன்பைப் பித்து(பைத்தியம்)போல் காட்டுவார்கள் பிள்ளைகளோ மனம் இளகாமல் கல் போல் இருப்பர் என்பதே இதன் பொருளாகும்.

(பழமொழிகள் 4,5,6,7,8,9,10 ஆகியவற்றிற்கான பொதுக்கதையாக இது வழங்கப்படுகின்றது)

என் வாழ்வில் நிகழ்ந்த கதை

கதை மாந்தர்

★ தந்தை - வளவன்; தாய் - சுடரொளி; மகன்கள் - கார்க்கண்ணன் - பொன்வண்ணன் - நீலவண்ணன் - செவ்வண்ணன்; நாட்டாமை - நலங்கிள்ளி; இவர்களுடன் நான் (வளவன்)

★ 'நல்லான் பிள்ளை பெற்றாள்' என்னும் ஊர் திருவண்ணாமலையில் உள்ளது.

★ அவ்வூர் என் சொந்த ஊராகும்.

★ அவ்வூரில் அனைவரும் ஆசிரியர்களாகவே(வரம்பெற்று) பிறந்தவர்.

★ வீட்டிற்கு ஓர் ஆசிரியர் அவ்வூரில் இருப்பார்.

★ அவ்வூரில் மிகச்சிறந்த குடும்ப பெரியவர் வளவன் குடும்பம்.

★ மனைவி சுடரொளி அன்பின் பிறப்பிடமாக இருந்தவர்.

★ வளவனாருக்கு நான்கு பிள்ளைகள்
(கார்க்கண்ணன் - பொன்வண்ணன் - நீலவண்ணன் - செவ்வண்ணன்)

★ நான்கு பிள்ளைகளையும் ஆசிரியர்களாக்கினார் பெரியவர் வளவன்.

★ நால்வரும் முதுகலை ஆசிரியர் போட்டித்தேர்வில் (TRB போட்டித்தேர்வு) எழுதி வெற்றி பெற்று அரசுப்பணி பெற்று வெவ்வேறு ஊர்களில் தங்களைத் தகவமைத்துக் கொண்டார்கள்.

★ நாளடைவில் பெற்றோருக்கும் வயதானது. அவர்கள் எவ்வளவோ மகன்களிடம் தங்களைப் பாதுகாக்கக் கெஞ்சினார்கள்.

★ பெற்றோர்களைப் பாதுகாக்க முன்வராத நால்வரும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர்.

★ இதைக்கண்ட பகைப்பங்காளிகள் பெரியவர் வளவனின் 30 குழி நிலத்தை அபகரிக்க நினைத்தனர்.

★ இதைக்கண்டு மனம் வெதும்பிய பெற்றோர். ஊர் நாட்டாமையிடம் முறையிட்டார்.

★ நாட்டாமை மகன்கள் நால்வரையும் அழைத்தார்.

★ மூங்கில் மரத்தில் ஒடித்த குச்சிகளை முறையே ஒவ்வோர் மகனிடமும் (ஆசிரியரிடமும்) தனித்-தனியே கொடுத்து "உங்கள் வலிமையால் இதை ஒடித்து விடுங்கள்" என்றார்.

★ நால்வரும் எளிமையாக ஒடித்தனர்.

★ பின்பு நாட்டாமை, நான்கு மூங்கிலால் நன்றாக இணைத்துக் கட்டிய அமைப்பைக் கொடுத்து நால்வரையும் ஒடிக்கச் சொன்னார்.

★ மிகவலிமை காட்டியும் நால்வராலும் குச்சியின் அமைப்பை ஒடிக்கவும் உடைக்கவும் இயலவில்லை.

★ நாட்டாமை பேசலானார் "பார்த்தீர்கள் ஆசிரியர்களே தனித்தனியாக இருந்தால் எதையும் ஒடித்து விடலாம். ஆனால் அதுவே கூட்டாக இருந்தால் ஒடிக்க இயலாது"

★ இந்தக் குச்சியைப்போலத்தான் நீங்களும் தனித்தனியாக இருக்கின்றீர்கள்.

★ உங்களைப் பகைப்பங்காளிகள் எளிதில் பிரித்து நிலத்தை அபகரித்து விடுவார்கள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ அதுவே நீங்கள் ஓர் அமைப்பைப்போல் ஒன்றுபட்டால் சிறந்த வாழ்க்கை உங்களுக்கு உண்டு.

★ ஒற்றுமையே உயர்வு என்பதை மறந்துவிடாதீர்கள்.

★ தனிமரம் தோப்பாகாது தம்பிகளே! பகைப்புயல் வந்தால் வீழ்ந்துவிடும்.

★ 'தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்' என்னும் பழமொழிக்கு ஏற்ப உங்கள் பெற்றோர் கடைசிகாலத்திலும் 'பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்பது போல் அவர்களுடைய நிலம் உங்களுக்கே சேரவேண்டும் என்று நினைக்கின்றனர்.

★ இனியாவது ஒற்றுமையாக வாழுங்கள்" என்றார்.

★ ஆசிரியர்களும் இணைந்தனர். ஒற்றுமையே வலிமையானது.

நீதி

★ நான் நாட்டாமை நலங்கிள்ளியின் பெயரன்(பேரன்). இதை உடனிருந்து கண்டேன் அன்றுமுதல் பெற்றோரைப் பாதுகாக்க வேண்டும் என்று உறுதி பூண்டேன்.

பதறிய காரியம் சிதறிப்போகும்

பழமொழி விளக்கம்

★ பொறுமையுடன் ஒரு செயலைச் செய்தால் அச்செயலை சரியாகச் செய்யலாம். பதற்றத்துடன் செய்தால் அச்செயல் சரிவராது.

என் வாழ்க்கையில் நடந்த கதை

கதை மாந்தர்

★ தந்தை - குறள்விரும்பி; மகன் - குறும்பன்; இவர்களுடன் நான் (வளவன்)

★ ஒரு முறை நல்லூரில் என் மாமா குறள்விரும்பியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

★ அன்று மாமா வெளியூர் சென்றிருந்தார்.

★ நானும் என் மாமன் மகன் குறும்பனும் விளையாட்டுத்திடலுக்குச் சென்றோம்.

★ மாலை நேரம் வந்தது. நானும் குறும்பனும் விளையாடிவிட்டு வீடு திரும்பினோம்.

★ அப்போது மாமா குறள்விரும்பி வெளியூரிலிருந்து வீட்டிற்குள் நுழைந்தார்.

★ மாமா என்னிடம் நலம் விசாரித்தார். என் பெற்றோரின் நலமும் கேட்டார்.

★ பின்பு குறும்பனைப் பார்த்து "குறும்பா வெளியே என் 'துணிப்பை' உள்ளது அதை நீ போய் எடுத்துக் கொண்டு வா!" என்று மாமா சொல்லி முடிப்பதற்குள் அவசரக்குடுக்கையாக குறும்பன் ஓடிவிட்டான்.

★ குறும்பன் பெயருக்கு ஏற்ப பெரிய குறும்பன்.

★ வெளியே இரண்டு பைகள் இருந்தன. பதற்றத்துடன் இரண்டு பையைத் தூக்கிக் கொண்டு வர முயற்சி செய்தான்.

★ ஒரு பையின் காது அறுந்து இருந்தது. பை கை நழுவி விழுந்தது.

★ பையிலிருந்த நாட்டுக் கோழி முட்டைகள் உடைந்து நொறுங்கின.

★ 'ஐயய்யோ' என்று அலறி மற்றொரு பையையும் விட்டுவிட்டான் அதிலிருந்த கோழி கொக்கரித்துக் கொண்டே ஓடியது.

★ கோழி போன இடம் தெரியவில்லை. ஒரு முட்டைகூட தேறவில்லை.

★ நாட்டுக்கோழிகளைத் தன் வீட்டில் வளர்க்க வேண்டும் என்று நினைத்தவர் மாமா.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ கோழியை ஒரு பையிலும் அதன் முட்டைகளை ஒரு பையிலும் மாமா ஆசையாக வாங்கி வந்தார்.

★ என் மாமாவின் கனவு குறும்பனின் பதற்றத்தால் அன்றுடன் சிதறிப்போனது.

நுணலும் தன் வாயால் கெடும்

பழமொழி விளக்கம்

★ ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும். தங்களைத் தாங்களே தத்தம் வாயால் கெடுத்துக் கொள்கின்றனர் சிலர்.

★ வாய்தான் நன்மைக்கும் தீமைக்கும் காரணம். நுணல் - தவளை வாயை வைத்துக்கொண்டு சும்மா இராமல் வாயால் கத்தி கத்தி, பாம்பை அழைத்து அதற்கு இரையாகும்.

வாய்மையே வெல்லும்

பழமொழி விளக்கம்

★ உண்மைதான் என்றும் வெற்றிபெறும். உண்மை வெற்றிபெற சில நாள்களாகும் ஆனால், நிச்சயம் ஒரு நாள் வென்றே தீரும்.

(இரண்டிற்கும் பொதுவான கதை)

கதை மாந்தர்

★ நண்பன் - அரவிந்தன்; தமிழ் ஆசிரியர் - வளவன்; வகுப்பாசிரியர் - பொன்னரசி; தலைமையாசிரியர் - கங்கா கௌரி; இவர்களுடன் நான் (நறுமுகை)

நான் 8 ஆம் வகுப்பு படித்த போது நடந்த கதை

★ என் நண்பன் அரவிந்தனை எனக்கு மிகவும் பிடிக்கும். அரவிந்தன் படிப்பில் சுட்டி.

★ எத்தகைய சிக்கலான கணக்கையும் துல்லியமாகக் கணக்கிடுவான்.

★ எத்தகைய ஐயத்தையும் எளிமையாகத் தீர்த்து வைப்பான்.

★ 'ஐயம் தீர்க்கும் அரவிந்தன்' என்றே பட்ட பெயர் அவனுக்கு உண்டு.

★ ஒரு நாள் அவன் பள்ளிக்கு வரவில்லை. வகுப்பாசிரியரும் "ஏன் அரவிந்தன் வரவில்லை" என எங்களிடம் கேட்க, காரணம் புரியாமல் விழித்தோம்.

★ பக்கத்துத் தெருவில்தான் நான் இருக்கின்றேன்.

★ என்னிடமும் சொல்லவில்லையே என வருந்தினேன்.

★ மறுநாள் பிறந்தது. வகுப்பறை மலர்ந்தது. வகுப்பாசிரியர் வந்தார்.

★ 'ஏன் அரவிந்தா நேற்று வரவில்லை' எனக் கேட்க உடனே பதிலுடன் எழுந்தவன்.

★ "என்னுடைய தாத்தா மொட்டை மாடியில் வழுக்கி விழுந்து விட்டார்" என்றான்.

★ எல்லொரும் சிரித்துவிட்டார்கள். ஆசிரியர் புன்முறுவலை அடக்கிக் கொண்டார்.

★ அவனுடைய தொனியும் பதற்றமும் பொய் சொல்வதை விவரித்தது.

★ மறுபாடவேளை தமிழ் ஆசிரியர் வளவன் ஐயா வந்தார். அரவிந்தனை விசாரித்தார்

ஐயம் தீர்க்கும் அரவிந்தா! நேற்று உன்
கையும் உண்டது பெருவிருந்தா?

★ ஏன் வரவில்லை நேற்று என்பதை இக் கவிதை நடையில் கேட்டார்.

★ ஐயாவின் காதருகில் சென்று "இல்லை ஐயா! என் தாத்தா கழிவறையில் (பாத் ரூமில்) வழுக்கி விழுந்துவிட்டார் என்றான்.

மொழித்திறன் பயிற்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ "ஐயோ பாவம்" என்றவர் தாத்தாவின் நலம் விசாரிக்க அரவிந்தன் அவர் இறந்துவிட்டார் என்றான்.
★ எல்லோரும் ஒரு நிமிடம் சோகத்தில் மூழ்கினோம்.
★ வளவன் ஐயா வகுப்பாசிரியரை அழைத்து அரவிந்தனுக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருந்தார்.
★ அப்போது வகுப்பாசிரியர் "என்னிடம் மொட்டை மாடி என்றான் உங்களிடம் பாத்ரூம் என்றானே" ஏன் என்று அரவிந்தனை விசாரித்தனர்.
★ அப்போது தலைமையாசிரியர் கங்கா கௌரியும் வந்துவிட்டார். நிகழ்ச்சியைக் கேட்டு அவர் விசாரித்தார். அரவிந்தா உன் தாத்தா விழுந்தது மொட்டை மாடியிலா? பாத் ரூமிலா? என்று கேட்க.
★ சற்று விழித்துவிட்டு "மொட்டைமாடியிலிருந்து வழுக்கி கீழே பாத்ரூமில் விழுந்துவிட்டார்" என்றான் அரவிந்தன்.
★ வகுப்பறையே மீண்டும் குலுங்கியது. அவன் பொய்யும் குட்டி போட்டுக் கொண்டே போனது.
★ இது எப்போது நடந்தது? என்று வினவினார்.
★ போன வருடம் அதே(நேற்றைய) நாள் என்றான் அரவிந்தன். எல்லோரும் அலறினார்கள்.
★ பின் ஏன் நேற்றுவரவில்லை? என தலைமையாசிரியர் கேட்க.
★ "தாத்தா நேற்றைக்கு முன்நாள் கனவில் வந்து "இன்று அதே இடத்தில் அதே நேரத்தில் அங்கு நான் இருப்பேன் வந்து பார்!" என்றார்.
★ அதனால்தான் நேற்று வரவில்லை என்றுகூற தலைமையாசிரியர் அதிர்ந்தார்.
★ அதே இடத்தில் நேற்று தாத்தாவைப் பார்த்தாயா ? என்று நகைச்சுவையுடன் கேட்க
★ அரவிந்தன் "எமலோகத்தில் நேற்று தேர்தல் நடந்ததாம் அவருக்கு விடுப்பு தரவில்லை என நேற்றைய இரவுக் கனவில் வந்து சொன்னார்" என்றவுடன் .
★ எமலோகத்தில் தாத்தா என்னவாக இருக்கின்றார் ? எனக் கேட்டார் தலைமையாசிரியர்.
★ எமலோகத்தின் என் தாத்தா ஆசிரியராக இருக்கின்றார். என்றான் அரவிந்தன்.
★ பதற்றமான வாக்குச்சாவடி என்பதால் பாதுகாப்புக்குச் முன்னாளே சென்றுவிட்டார் என்றான் அரவிந்தன்.
★ தலைமையாசிரியருக்குத் தலை சுற்றியது. பொய் என்று உணர்ந்தது வகுப்பு.
★ உண்மையைப் பெற, பெற்றோரை அழைத்து அவனிடம் கடுமையாக விசாரித்தார்.
★ அரவிந்தன் 'திரைப்படத்திற்குச் சென்றான்' என்னும் மெய் அவன் வாயிலிருந்து வெளியே வந்தது.
★ தலைமையாசிரியர் உண்மையின் சிறப்பை எடுத்துக் கூறினார்.
★ அரவிந்தனும் உண்மையில் மனம் மாறினான்.

நீதி

★ அன்றுமுதல் ஐயம் தீர்க்கும் அரவிந்தன், ஆயிரம் பொய் அரவிந்தன் ஆனான். தவளை தன் வாயால் கெடும் என்பது போல் பொய்யால் அவனுக்கு இருந்த நற்பெயர் கெட்டது.
★ அவன் வாய் மெய்யே (வாய்மையே) இறுதியில் வென்றது.

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை

★ நம் பெற்றோர் நமக்கு என்ன சொல்லித்தருகின்றார்களோ? எத்தகைய மனப்பான்மையை வளர்க்க வித்திடுகிறார்களோ அதுவே நாம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்

★ சிறுவயதில் நமக்குள் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் நற்பழக்கங்கள் இறுதிவரை வரும்.

என் கதை

கதை மாந்தர்கள்

★ நான்; என் அம்மா; என் அப்பா; என் தங்கை

கோயில்முன் கொடை

★ நாங்கள் சனிக்கிழமை தோறும் அதிகாலையிலேயே நல்லெண்ணையைத் தேய்த்து (சனி நீராடி) குளித்து விட்டு கோயிலுக்குச் செல்வோம்.

★ என் தந்தையும் தாயும் கோயிலுக்குச் செல்லும் போது வாசலில் உள்ள கொடை விரும்பிகளைக் (பிச்சைக்காரர்கள்) கண்டவுடன் தன் சட்டைப் பையில் உள்ள பணத்தாளை எங்களிடம் கொடுத்து அவருக்கு மரியாதையுடன் கொடையளிக்கக் கற்றுத் தருவார்.

★ புன்னகையுடன் அதைச் செய்யக் கற்றுத்தருவார்கள்.

★ கொடைவிரும்பிகளின் வாழ்த்துகள் என்னை மெய்சிலிர்க்க வைக்கும்.

★ புன்னகையே சிறந்த சமூக சேவை என்பார் என் தந்தை.

உணவுவிடுதிமுன் கொடை

★ உணவு விடுதிக்குச் செல்லும்போது வாசலில் இருப்பவர்கள் பலர்.

★ உணவுக்காக அவர்கள் இரந்து காத்திருப்பர்.

★ என் தங்கை அவர்களைக் கண்டவுடன் என் தந்தையிடம் பணத்தாள்களைப் பெற்று அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அளிப்பாள்.

★ நானும் அளிப்பேன். அவர்களின் புன்னகை எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

★ தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பார்கள்.

★ இன்றுவரை நானும் என் பெற்றோர்களிடம் கற்றுக்கொண்ட பழக்கத்தை மாற்றாமல் மாறாமல் செய்வேன் என்று நம்புகின்றேன்.

பூங்காவின்முன் கொடை

★ பூங்காவிற்குச் செல்லும்போது பெண்கள் பலர் கையில் குழந்தையுடன் நல்ல நல்ல நூல்களை விற்றுக்கொண்டிருப்பார்கள்.

★ அவர்களிடம் அன்பாகப் பேசி அவர்களின் குழந்தையின் பெயர், நலம் விசாரித்து அவர்களின் பிச்சை எடுக்காமல் உழைக்கும் தன்மான வாழ்வைப் போற்றி அவர்களிடம் உள்ள புத்தகங்களை வாங்கி எங்களுக்குத் தருவார் என் தாய்.

★ யாவரிடமும் நலம் கேட்டல் நனிசிறந்த பண்பு என்பார்.

★ நம் கருமமும் தருமுமே நம்மைக் காக்கும் என்பார் என் தாய்.

நீதி

★ **தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை** என்பார்களே நானும் என் தாயைப் போல இன்றும் பூங்காவிற்குச் செல்லும்போது அந்த வகையான உதவிகளைச் செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்! வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதை எழுதுதல்

கவிதை எழுதும் முறை:-

➔ எழுத்து, சீர், தளை, தொடை என்று எந்தவித யாப்பு கட்டுப்பாடுகளும் இல்லாமல் எழுதப்படும் கவிதைகளே புதுக்கவிதைகள் ஆகும்.

➔ புதுக்கவிதைகள் இதைத்தான் எழுத வேண்டும். இப்படித்தான் எழுத வேண்டும் என்று எந்தவித வரையறையும் கிடையாது.

➔ தன் உள்ளத்தில் தோன்றும் கருத்துகளை அப்படியே பதிவு செய்துவிடலாம்.

➔ ஆழ்ந்த தமிழ் புலமை இருக்க வேண்டும் என்று கிடையாது.

➔ சமகால நிகழ்வுகளைக் கொண்டு, ஆழ்ந்த பொருள்தரும்படி கவிதை இயற்றப்பட வேண்டும்.

மாதிரிக் கவிதை

ஹைக்கூ கவிதைகள்

ஓ! குயிலே
பாடுவதை ஏன் நிறுத்திவிட்டாய்
மழலை பேசுகிறது

அந்தரத்தில்
அஜந்தா குகை
தூக்கணாங் குருவிக்கூடு

ஐந்தில் வளைப்பதற்கோ?
பிஞ்சு முதுகில்
புத்தக மூட்டைகள்

இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்

சாவே இல்லாத
சரித்திர வாத்தியார்
புத்தகம்

மனிதனை மனிதனாக்கும்
உயர்ந்த சக்தி
கல்வி

புதுக்கவிதைகள்

அம்மா (அ) **அன்னை**

உயிருக்குள் அடைக்காத்து
உதிரத்தைப் பாலாக்கி
பாசத்தில் தாலாட்டி
பல இரவுகள்
தூக்கத்தைத் தொலைத்து
நமக்காகவே
வாழும் அன்பு
தெய்வம் அம்மா!

தமிழ்மொழி (அ) **தாய்மொழி**

தென்பொதிகை பிறந்த மொழி!
தென்பாண்டி வளர்ந்த மொழி!
தேனினும் இனிய மொழி!
தெவிட்டாத செந்தமிழ் மொழி!
அமிழ்தினும் இனிய மொழி!
ஆண்டாண்டுகளாய் வாழும் மொழி!
அன்னை மடியை விஞ்சும் மொழி!
அனைத்து என்னை மகிழும் மொழி!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயற்கை

அலைக்கரம் நீட்டும் கடலாக நீ!
ஆர்ப்பரித்து வீழும் அருவியாக நீ!
உயர்ந்து நிற்கும் மலையாக நீ!
ஐம்பூதங்களின் தாயாக நீ!
குளிர்ச்சி தரும் நிலவாக நீ!
பசுமைக் கொஞ்சும் வயலாக நீ!
தென்றல் வீசும் காற்றாக நீ!
இயற்கை என்னும் இறைவனாக நீ!

அழகு

உலகை இயக்கும் இயற்கை அழகு!
புல்மேல் படரும் பனித்துளி அழகு!
மண் மணம்வீசும் மழைச்சாரல் அழகு!
குயில்கள் பாடும் குரலிசை அழகு!
மழைக்காலத்தில் தோன்றும் வானவில் அழகு!
வண்ண வண்ணமாய் பூக்கும் பூக்கள் அழகு!
பூவில் தேன் உண்ணும் தேனீக்கள் அழகு!
தரணி போற்றிடும் தமிழ்நாடு அழகு!

நட்பு

எத்தனை உறவுகள்
நம்மை விட்டு பிரிந்தாலும்
வலிக்காத இதயம் ஏன்
வலிக்கிறது ஒரு நட்பின்
பிரிவின்போது?
ஏனென்றால் நட்பு
என்பது உறவல்ல...
இரத்தத்தில் ஊற்றெடுத்து
உயிரோடு உறவாடும்
உண்மையான உணர்வு...

நம்பிக்கை

சிறகை நம்பும் பறவை
சிகரத்தையும் தாண்டி பறக்கிறது
சிந்தனையுள்ள மனிதா
உன்னையே நீ நம்பி
தடைகளைத் தாண்டு
சாதனையாளன் பட்டமும்
சரித்திரம் படைக்கும் சுவடும்
உலகம் உன்னை அறியும் நாளும்
அனைத்தும் உன் கையில்
அதுதான் உன் நம்பிக்கை!

அனைத்துக்கும் பொதுவான கவிதை

(**அம்மா, தமிழ்மொழி, இயற்கை, தாய்நாடு**- இவற்றில் ஏதேனும் ஒன்றைக் கோடிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்ளவும்)

அன்பு தந்தவள் .....
ஆசை தந்தவள் .....
இன்பம் தந்தவள் .....
ஈகை வளர்த்தவள் .....
உண்மை உரைத்தவள் .....
ஊர்போற்ற இருப்பவள் .....
என்றும் நிலைப்பவள் .....
ஏற்றம் தருபவள் .....
ஐயம் தீர்த்தவள் .....
ஒற்றுமை வளர்த்தவள் .....
ஓதி உணர்த்தியவள் .....
ஔவை போற்றியவள் .....

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்க

இயல் 1

1. Learning is a treasure that will follow its owner everywhere.

   ➔ **கற்றோரைப் பின்பற்றும் புதையல் கல்வி**

2. A new language is a new life.

   ➔ **ஒரு புதுமொழி புது வாழ்வாகும்.**

3. If you want people to understand you. Speak their language.

   ➔ **மக்கள் உங்களைப் புரிந்துகொள்ள, அவர்களின் மொழியில் பேசுங்கள்.**

4. Knowledge of languages is the doorway to wisdom.

   ➔ **மொழிகளின் அறிவு ஞானத்தின் நுழைவாயில்.**

5. The limits of my language are the limits of my world.

   ➔ **என் மொழியின் எல்லையே என் உலகத்தின் எல்லை.**

இயல் 2

மொழிபெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக.

In 1977 shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years the movement has enabled many women to plant trees in their regions providing them with food fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenyas first fully democratic elections in a generation. In the election Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformend the lives of tens of thousands of women through sustainable social forestry schemes.

1977ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யா நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி வங்காரி மத்தாய் பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள் தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அதன் வழியாகத் தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல் ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமாவதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல் முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தேர்தலில் வங்காரி மத்தாய் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி, மூன்றுகோடி மரங்களை நட்டு வளர்த்ததால் அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்மூலம் பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(எ.கா.) Green Belt Movement - **பசுமை வளாக இயக்கம்**

- ➔ Environmental Devastation - **சுற்றுச்சூழல் பேரழிவு**
- ➔ Deforestation - **காடுகள் அழிக்கப்படுதல்**
- ➔ Green Belt Movement - **பசுமை வளாக இயக்கம்**
- ➔ Founded - **தோற்றுவித்தல்**
- ➔ Thirty Years - **முப்பது ஆண்டுகள்**
- ➔ Women - **பெண்கள்**
- ➔ Food - **உணவு**
- ➔ Fuel - **எரிபொருள்**
- ➔ Soil erosion - **மண் அரிப்பு ஏற்படுதல்**
- ➔ Desertification -**பாலைவனமாதல்**
- ➔ Democracy - **மக்களாட்சி**
- ➔ Election - **தேர்தல்**
- ➔ Representative - **பிரதிநிதி**
- ➔ Generation - **தலைமுறை**
- ➔ Parliament - **நாடாளுமன்றம்**
- ➔ Minister - **அமைச்சர்**
- ➔ Environment - **சுற்றுச்சூழல்**
- ➔ Movement - **இயக்கம்**
- ➔ Social forestry scheme - **சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்**
- ➔ Success - **வெற்றி**

இயல் 3

In terms of human development objectives education is an end in itself not just a means of an end. Education is a basic human right. It is also the key which opens many economic social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of tis chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself irrespective of the economic rates of return.

மனித வளர்ச்சி நோக்கத்தின் அடிப்படையில் கல்வி என்பது நிறைவான ஒன்றாகும். வேறு முடிவிற்கான வழி அல்ல. கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை மட்டுமன்றி, மக்களின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாதைக்கான திறவுக்கோலாகவும் உள்ளது. கல்வியே வேலைவாய்ப்பை அதிகரித்து, வருமான த்தை உயர்த்துகின்றது. வாழ்வில் சிறந்த வாய்ப்புகளை உருவாக்குவதே கல்வியின் பொதுவான நோக்கமாக இருக்கிறது என்று பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். என்றாலும், எந்தப் பொருளாதாரப் பிரதிபலனும் எதிர்பாராமல் கல்வியைப் பொதுவாக எல்லோருக்கும் புகட்டுவதன்மூலம் ஒருநாட்டின் வசதி வாய்ப்புகளையும் வருவாயையும் அதிகரிக்க முடியும் என்பதே கல்வியை ஆராய்ந்த பொருளாதார வல்லுநர்களின் கருத்தாகும்.

இயல் 4

The Serious dearth of library facilities in this country is scarcely keeping with India's status in the international community of nations or with her educational and social needs. In this matter. India compares unfavourably not only with other independent Dominions of the commonwealth but even with certain British colonies. She possesses only one public ibrary on any considerable size and even this institution is inadequate to serve the need of the capital city. Only a few towns can boast of possessing any library at all. The rural population is completely neglected. There are no travelling libraries to reach them of kind that are to be found even is some backward countries.

The growth of libraries has lagged. Far behind the increase in the number of schools and the rise in the rate of lieracy. The great mass of the people in India do not have the means to buy books or even magazines and news papers in the absence of sufficient public libraries and reading room, most of them cannot attain regular reading habits.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நாட்டில் நூலக வசதிகளின் கடுமையான பற்றாக்குறை, கல்வி மற்றும் சமுதாய தேவைகளுக்கு ஏற்ப, நூலக வசதிகள் இந்தியாவில் இல்லை. இந்த விஷயத்தில் இந்தியாவின் நூலக வசதிகள், காமன்வெல்த் அமைப்பிலுள்ள சில சுதந்திர நாடுகளையும், பிரிட்டனின் காலனி அமைப்பில் உள்ள சில குடியிருப்புகளை விடவும் சாதகமற்ற நிலையில் உள்ளன. ஒரு பொது நூலகத்தைக் கணிசமான அளவில் நாடு பெற்றிருந்தாலும், அது தலைநகருக்கான தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. ஒரு சில நகரங்கள் மட்டுமே நூலகங்களைப் பெற்றிருப்பதாகப் பெருமைபட்டுக் கொள்ளலாம். கிராமப்புற மக்கள் முற்றிலும் புறக்கணிக் கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களை நாடிச் செல்லும் நடமாடும் நூலகங்களும் இல்லை. ஆனால், இந்த வசதிகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட நாடுகளில்கூட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நூலகங்களின் வளர்ச்சி மிகவும் பின்தங்கியுள்ளது. அதிகரிக்கும் பள்ளிகளுக்கும், கல்வி கற்போர் எண்ணிக்கைக்கும் ஏற்ப நூலகங்களின் வளர்ச்சி இந்தியாவில் இல்லை. புத்தகங்களையும், பத்திரிகைகளையும், செய்தித்தாள்களையும் வாங்கிப் படிக்க வசதியில்லாதோர்க்கும் பொது நூலகங்கள் தகுந்த அளவில் இருந்தால் தான் படிக்கும் பழக்கம் வளரும். அது இல்லாத பட்சத்தில் படிக்கும் பழக்கம் நிறைய பேருக்கு இல்லாது போய்விடும்.

இயல் 5

Periyar was not only a great social revolutionary@ he was something more than that. He is known as a great champion of the underprivileged even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

பெரியார் சிறந்த சமூக சீர்திருத்தவாதி மட்டுமல்ல. அதற்குமேல் சிறப்பான இயல்புடையவர். அவர் ஒடுக்கப்பட்டோரின் சிறந்த தலைவர் எனக் கருதப்படுகிறார். அவர் சீர்திருத்தப்பணிகளில் அதிக கவனம் செலுத்தினார். அவருடைய சிந்தனைகளும் செயல்களும் மிகவும் ஆழமானதாகவும் பரந்த மனப்பான்மை உடையதாகவும் காணப்பட்டது. எந்த ஒரு செயல்பாட்டையும் ஆழ்ந்து சிந்தித்து அதனைப் புரிந்து அதன்படி அனைத்து பிரச்சனைகளுக்கும் நிரந்தர தீர்வு காணும்வரை உழைப்பார். பெரியார் இந்த சமூக காட்சியின் திரையில் வரும்வரை சமூகம் ஏற்றத்தாழ்வு நிறைந்த ஒரு சமுதாயமாகவே இருந்தது.

இயல் 6

Popular as the Cultural Capital of India Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominenece primarily because of its well-known and out standing Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces pearls semi-precious stones and gold and other vibrant colours. In the modern times Tanjore paintings look up to human figures animals floral motifs and irds as muses.

இந்தியாவின் கலாச்சார தலைநகரம் என்றழைக்கப்படும் தமிழ்நாட்டில் சிறந்த கோயில்களும், கட்டடக்கலை சின்னங்களும் உள்ளன. தஞ்சாவூரில் சோழர் காலத்தில் தழைத்து வளர்ந்த தஞ்சாவூர் ஓவியங்கள் மாநிலத்திற்கு பெரும் புகழைத் தேடித் தந்தன. இவைப் பாரம்பரிய கலை முறையில், அலங்காரக்கற்கள் பதிக்கப்பட்ட கடவுளர்களின் புனித ஓவியங்களில் கண்ணாடி துண்டுகள், முத்துகள், வண்ண கற்கள், தங்கம் மற்றும் பல வண்ணங்களை ஒட்ட வைத்து தயாரிக்கப்படுகின்றன. தற்காலத்தில் இந்த ஓவியங்கள் மனித உருவங்களிலும், விலங்குகள், பூக்கள், பறவைகள் போன்றவற்றிலும் செய்யப்படுகின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 7

A White woman about 50 years old was seated next to a black man. Obviously disturbed by this, she called the airhostess.

"Madam what is the matter?" the hostess asked.

"you placed me next to a black man. Give me an alternative seat"

The hostess replied. "Almost all the places on this flight are taken. I will go to see if another place is available." The hostess went away and came back a few minutes later. "Madam just as I thought there are no other available seats in the economy class. We still have one place in the first class."

Before the woman could say anything the hostess continued. "It would be scandalous to make someone sit next to someone so disgusting"

She turned to the black guy and said "Sir a seat awaits you in the first class."

At the moment the other passengers who were shocked by what they had just witnessed stood up and applauded.

Take a lesson from the sun who shines his light on everyone.

Or the rain tha falls on every single shore.

No distinction of our race or the colour of our face.

Nautres gifts are there for all men rich or poor. (Courtesy: S.S.S. Bal Vikas)

ஐம்பது வயதுடைய ஒரு வெள்ளைக்கார பெண்மணி விமானத்தில் தன் அருகில் ஒரு கறுப்பர் இன ஆண் அமர்ந்திருந்ததைக் கண்டு பொறுக்காமல் தனக்கு ஒரு மாற்று இருக்கை ஏற்பாடு செய்யும்படி விமானப் பணிப் பெண்ணிடம் கேட்டாள்.

விமானப் பணிப்பெண், தேடிப் பார்த்து திரும்பி வந்து "சாதாரண வகுப்பில் எந்த இருக்கையும் காலியில்லை" எனக்கூறி, "முதல் வகுப்பில் ஒன்று உள்ளது" என்றாள்.

அந்த வெள்ளைக்கார பெண்மணி அவளுக்கு பதிலளிக்குமுன், விமான பணிப்பெண் முந்திக்கொண்டு "பிடிக்காத ஒருவரின் அருகில் மற்றவரை அமர வைப்பது வெறுக்கத்தக்கதாகும்" எனக் கூறிக்கொண்டே கறுப்பின மனிதரிடம் "ஐயா, முதல் வகுப்பில் உங்கள் இருக்கை, தங்களை எதிர்பார்க்கிறது" எனக் கூறினாள்.

அந்த நிமிடத்தில், மற்ற பயணிகள் அனைவரும் அங்கு இதற்கு முன்னர் நடந்ததை அறிந்திருந்ததால், எழுந்து நின்று கை தட்டினர்.

ஒவ்வொருவரின் மீதும் தன் ஒளியைப் பிரகாசிக்கச் செய்யும் சூரியனிடமிருந்தும், அல்லது ஒவ்வொரு கடற்கரையிலும் பொழிகிற மழையிடமிருந்தும் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நமது இனத்திலோ, நமது முகத்தின் நிறத்திலோ எந்த வித்தியாசத்தையும் பார்க்கக்கூடாது. பணக்காரரோ, ஏழையோ, எல்லா மனிதருக்குமே இயற்கையின் பரிசுகள் கிடைக்கின்றன.

இயல் 8

I make sure I have the basic good habits which include respecting my elders greeting people when I meet them wishing them well when departing etc. Other than this observing the law serving the poor and downtrodden, helping the sick and needy giving shelter to the homeless assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life I develop other good habits writing listening to music dancing singing etc. are other such habits which fulfil the needs of my soul.

நான் நல்ல பழக்கங்களான பெரியவர்களை மதித்தல், பிறரைச் சந்திக்கும்போது வணக்கம் செலுத்துதல், பிரியும்போது வாழ்த்துதல் போன்றவற்றை வளர்த்து கொள்வதில் உறுதியாக இருக்கின்றேன். மேலும், சட்டத்தைப் பின்பற்றுதல், ஏழை பாமரர்களுக்கும் நோயாளிகளுக்கும் உதவுதல், ஆதரவற்றோருக்குத் தங்குமிட வசதி ஏற்படுத்துதல், உடல் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுதல் போன்ற நல்ல பழக்கங்கள் என்னுடைய - தாகும். அமைதியான வாழ்க்கை நடத்துவதற்குப் பிற நல்ல பழக்கங்களான இசை, எழுத்து, பாடல், நடனம் போன்றவற்றைக் கற்று என் ஆன்மத் தேவையைப் பூர்த்திச் செய்து கொள்கிறேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

➔ **A crying child will get milk.**	அழுகின்ற குழந்தைதான் பால் குடிக்கும்.
➔ **Act is stronger than fiction**	கற்பனையை விட உண்மை விசித்திரமானது
➔ **A bold attempt is half success.**	கடின முயற்சியே பாதி வெற்றி.
➔ **Eagles do not catch flies**	புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
➔ **Take time by the fore lock**	காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
➔ **A theif knows a theif as a wolf know a wolf.**	பாம்பின் கால் பாம்பு அறியும்.
➔ **After death the doctor.**	கண் கெட்டபின்னே சூரிய நமஸ்காரம்.
➔ **All are not saints that go to the church.**	வெளுத்ததெல்லாம் பாலாகுமா?
➔ **As is the king, so all his subjects.**	மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி.
➔ **A guilty conscience need no accuser.**	குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
➔ **A hasty man never wants woe.**	ஆத்திரக்காரன் அறிவை இழப்பான்.
➔ **Blue are the hills that are far away**	இக்கரைக்கு அக்கரை பச்சை.
➔ **Too much of anything is food for nothing.**	அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு.
➔ **Do what you can with what you have where you are**	வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
➔ **Eat to live: do not live to eat**	வாழ்வதற்காகச் சாப்பிடு; சாப்பிடுவதற்காக வாழாதே.
➔ **No news is good news**	செய்தி ஏதும்இல்லை என்பது நல்ல செய்தியே.
➔ **Penury pinches all**	பசிவந்தால் பத்தும் பறந்து போகும்.
➔ **A lamb at home and lion at chase.**	பார்த்தால் பூனை, பாய்ந்தால் புலி.
➔ **A law maker should not be a law breaker.**	வேலியே பயிரை மேயலாமா?
➔ **A little learning is a dangerous thing**	அரைகுறை படிப்பு ஆபத்தானது.
➔ **A little stream will drive a light nill.**	சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
➔ **A man of courage never wars weapons.**	வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
➔ **A Penny saved is a penny gained.**	சிறுதுளி பெருவெள்ளம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **Birds of the same feather flock together.**	இனம் இனத்தோடு சேரும்.
➔ **Barking dogs seldom bite.**	குரைக்கிற நாய் கடிக்காது.
➔ **Be first at a feast and the last to slander**	பந்திக்கு முந்து, படைக்கு பிந்து
➔ **Behave Courteously.**	மரியாதையுடன் நடந்துகொள்.
➔ **Bend the twig bend the tree**	ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?
➔ **Blessings are not valued till they are gone**	நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
➔ **Calm before storm**	புயலுக்கு முன் அமைதி.
➔ **Calms after the storm.**	புயலுக்கு பின் அமைதி.
➔ **Convet all. lose all.**	பேராசை பெருநஷ்டம்.
➔ **Charity begins at home**	தனக்குப் போகத்தான் தானமும் தர்மமும்.
➔ **Child is the father of the man.**	விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.
➔ **Cleanliness is next to godliness**	தூய்மை கடவுள் தன்மைக்கு அடுத்த பண்பு.
➔ **Constant dripping wears away the stone**	எறும்பு ஊர கல்லும் தேயும்.
➔ **Death keeps no calendar**	ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
➔ **Delay of justice is injustice**	தாமதிக்கப்பட்ட நீதி அநீதிக்குச் சமமாகும்.
➔ **Diamond cuts diamond**	முள்ளை முள்ளால் எடு.
➔ **Diligence is the mother of good fortune**	முயற்சி திருவினையாக்கும்.
➔ **Distance lends enchantment to the view**	இக்கரைக்கு அக்கரை பச்சை.
➔ **Do as Romans do when you are in rome.**	ஊருடன் ஒத்து வாழ்.
➔ **Do not add fuel to the flame.**	எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே.
➔ **Work is worship**	செய்யும் தொழிலே தெய்வம்.
➔ **Work more, talk less.**	பேச்சைக் குறை; உழைப்பைப் பெருக்கு.
➔ **Work while your work, play while you play**	காலத்தை பயிர் செய்.
➔ **Your Actions will nail You**	தன்வினை தன்னைச் சுடும்.
➔ **Youth must have its flying.**	இளம் கன்று பயமறியாது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **Where there is a will there is a way.**	மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.
➔ **Wealth is best known by want.**	நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
➔ **Well begun is half-done.**	நல்ல தொடக்கமே பாதி வெற்றி.
➔ **Time is gold.**	காலம் பொன் போன்றது.
➔ **Truth alone triumphs**	வாய்மையே வெல்லும்.
➔ **Union is strength**	ஒற்றுமையே பலம்.
➔ **Walls have ears**	சுவற்றுக்கும் காது உண்டு.
➔ **Think before you act**	எண்ணித் துணிக கருமம்.
➔ **Think before you speak.**	சிந்தித்துப் பேசு; பேசியபின் சிந்திக்காதே!
➔ **Think every body alike**	தன்னைப்போல பிறரை நினை.
➔ **To the good people world appears good.**	நல்லவர்களுக்கு நல்லதே நடக்கும்.
➔ **Do well what you have to do.**	செய்வன திருந்தச் செய்.
➔ **Double charge will break even a cannon**	அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
➔ **East or west. home is best.**	எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
➔ **Empty vessels make the greatest noise**	குறைகுடம் கூத்தாடும்.
➔ **Even homer nods**	யானைக்கும் அடி சறுக்கும்.
➔ **Everything is good for something.**	எல்லாம் நன்மைக்கே!
➔ **Excess of delight palls the appetite.**	அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
➔ **Experience is the best teacher**	அனுபவமே சிறந்த ஆசான்.
➔ **Face is the index of the mind.**	அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
➔ **Failure is the stepping stone to success.**	தோல்வியே வெற்றிக்கு முதற்படி.
➔ **Familiarity breeds contempt**	பழக பழக பாலும் புளிக்கும்.
➔ **God is love**	அன்பே கடவுள்.
➔ **Good and Bad are not due others**	நன்றும் தீதும் பிறர் தர வாரா.
➔ **Haste makes waste**	பதறிய காரியம் சிதறிப் போகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **He who hunts two hares loses both**	பேராசை பெரு நட்டம்.
➔ **Health is wealth**	நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
➔ **Hoist your sail when the wind is fair**	காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
➔ **Habits die hard**	தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்.
➔ **Knowledge is power**	அறிவே ஆற்றல்.
➔ **Lamp at home and a lion at chase**	பார்த்தால் பூனை, பாய்ந்தால் புலி.
➔ **Little drops of water make the mighty ocean**	சிறு துளி பெரு வெள்ளம்.
➔ **Live and get live.**	வாழு; வாழ விடு.
➔ **Look before you leap**	ஆழம் தெரியாமல் காலை விடாதே.
➔ **The law maker should not be a law breaker.**	வேலியே பயிரை மேயலாமா?
➔ **The old fox is caught at last**	பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்.
➔ **The pot call the kettle black**	ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை.
➔ **The proof of the pudding is in the eating**	அப்பம் என்றால் பிட்டுக் காட்ட வேண்டும்.
➔ **The wearer knows where the shoe pinches**	பாம்பின் கால் பாம்பறியும்.
➔ **There are two sides for every coin**	நாணயத்துக்கு இரு பக்கம் உண்டு.
➔ **There is no smoke without fire**	நெருப்பில்லாமல் புகையாது.
➔ **The face is the index of mind**	அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
➔ **Tha blind can not lead the blind**	குருடனுக்கு குருடன் வழி காட்ட முடியுமா?
➔ **Strike the iron while it is hot**	காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
➔ **Single tree makes no forest**	தனி மரம் தோப்பாகாது.
➔ **No pain, No gain.**	உழைப்பின்றி ஊதியம் இல்லை.
➔ **Nothing is impossible to a willing heart**	மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.
➔ **Many hands make work light**	கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
➔ **Blood is thicker than water**	தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்.
➔ **For the busy man time passes quickly.**	சுறுசுறுப்புடையோருக்குக் காலம் விரைவாகச் செல்கிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **God stays long but strikes at last** அரசன் அன்று கொல்வான; தெய்வம் நின்று கொல்லும்.

➔ **Mother and Motherland are greater than heaven** தாயும், தாய் நாடும் சொர்க்கத்தை விடச் சிறந்தவை.

➔ **Speech is silver silence is golden.** பேச்சு வெள்ளி போன்றது; மௌனம் பொன் போன்றது.

➔ **The hand that rocks the cradle rules the world** தொட்டிலை ஆட்டும் கை தொல்லுகை ஆளும் கை.

➔ **The mills of God grind slow but sure** அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.

➔ **The pen is mightier than the sword** பேனாவின் முனை வாள் முனையிலும் வலிமையானது.

➔ **Do not look at gift horse in the mouth** தானம் கொடுத்த மாட்டை பல் பிடித்துப் பார்க்காதே.

➔ **A young twig is easier twisted than an old tree.** ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

➔ **Be friendly but not familiar** அனைவருக்கும் நண்பனாக இரு. ஆனால் நெருங்கி பழகாதே

➔ **Be slow to promise but quick to perform** ஆலோசித்து வாக்கு கொடு விரைந்து நிறைவேற்று.

➔ **Beter pay the cook than the doctor** வைத்தியனுக்கு கொடுப்பதை விட வாணிகனுக்குக் கொடு.

➔ **Coming events cast their shadow before** ஆனை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே.

➔ **Contentment is more than a kingdom** போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.

➔ **Cowards die many times before their death** வீரனுக்கு ஒருமுறை சாவு; கோழைக்கு தினந்தோறும் சாவு.

➔ **Do not lock the stable door when the horse is gone** கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்யதே.

பொன்மொழிகள்

➔ **"Make each day your masterpiece."** **- John Wooden**

★ ஒவ்வொரு நாளையும், உங்களின் தலைசிறந்த நாளாக்குங்கள். - ஜான் உட்டன்

➔ **"If there is no struggle, there is no progress."** **- Frederick Douglass**

★ "போராட்டம் இல்லை என்றால், எந்த முன்னேற்றமும் இல்லை." - பிரடெரிக் டக்லஸ்

➔ **Only I can change my life. No one can do it for me.** **- Carol Burnett**

★ என் வாழ்க்கையை என்னால் மாற்ற முடியும். என்னை தவிர யாரும் அதை செய்ய முடியாது
- காரல் பர்னெட்

➔ **Poverty was the greatest motivating factor in my life.** **- Jimmy dean**

★ வறுமையே என் வாழ்வின் மிகப்பெரிய ஊக்குவிப்புக் காரணியாக இருந்தது. - ஜிம்மி டீன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

➔ **Pleasure in the job puts perfection in the work.** **- Aristotle**

★ நேர்த்தியான பணியே மகிழ்ச்சியான நிறைவைத் தருகிறது. - அரிஸ்டாட்டில்

➔ **Don't find fault, find a remedy.** **- Henry Ford**

★ தவறுகளைக் காணாதே, அதற்கான தீர்வுகளைக் காண் - ஹென்றி ∴போர்ட்

➔ **Attitude is a little thing that makes a big difference.** **- Winston Churchill**

★ மனநிலை என்பது மிகவும் சிறியதுதான். அதனால் ஏற்படும் மாற்றம் மிகப் பெரியது.
- வின்ஸ்டண்ட் சர்ச்சில்

➔ **Life is really simple, but we insist on making it complicated.** **- Confucius**

★ வாழ்க்கை மிகவும் எளியது. நாம்தான் அதை சிக்கலாக்கிக் கொள்கிறோம் - கன்∴பூசியஸ்

➔ **To succeed in life, you need two things: ignorance and confidence.** **- Mark Twain**

★ வாழ்வில் வெற்றிபெற இரண்டு கூறுகள் தேவை. அவை, அறியாமையை அறிதல், நம்பிக்கை.
- மார்க் வைன்

➔ **Honesty is the best policy.** **- Benjamin Franklin**

★ நேர்மையே சிறந்த கொள்கை. - பெஞ்சமின் ∴பிராங்களின்

➔ **Impossible is a word to be found only in the dictionary of fools.** **- Napoleon Bonaparte**

★ முடியாது என்ற வார்த்தையை முட்டாள்களின் அகராதியில் மட்டுமே காணமுடியும்.
- நெப்போலினன் போனபர்ட்

➔ **Experience is a good school. But the fees are high.** **- Heinrich Heine**

★ அனுபவம் நல்ல பள்ளிக்கூடம். ஆனால் அதன் கட்டணம் அதிகம். - ஹென்ரிச் ஹெயின்

➔ **"If you can dream it, you can do it."** **- Walt Disney**

★ உங்களால் கனவு காணமுடியும் என்றால் கண்ட கனவை நனவாக்கவும் உங்களால் முடியும்.
- வால்ட் டிஷ்னி

➔ **"A person who never made a mistake never tried anything new."** **- Albert Einstein**

★ ஒரு மனிதன் தவறுகளே செய்யவில்லை என்றால் அவர் புதிதாக எதையும் முயற்சிக்கவில்லை என்று பொருள் - ஆல்பர்ட் ஐன்ஸ்டியன்

➔ **"Change your thoughts and you change your world."** **- Norman Vincent Peale**

★ உங்கள் எண்ணங்களால் உங்கள் உலகை மாற்றிக்கொள்ளுங்கள். - நார்மன் வின்செண்ட் பீலே.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சான்றோர் சித்திரம்

ஆறுமுக நாவலர்

வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். தமிழறிஞர், சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட்டார். அவர் உடனே 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர் திணறிப் போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட அவர் மறுத்துத் தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கினார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர்க் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்ட-போது' என்பது அவர் கூறியதற்குப் பொருள். இத்தகைய மொழித்திறன் கைவரப்பெற்றவர்தான் ஆறுமுக நாவலர்.

'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் - சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன. புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

மாதிரி வினாக்கள்

1. 'ஆழிவரம்' என்னும் சொல்லின் பொருள் யாது?

★ 'ஆழிவரம்' என்னும் சொல்லின் பொருள் **கடற்கரை**

2.பின்வரும் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக.

★ பூமி சாஸ்திரம் - **புவியியல்** ★ புராண நூல்கள் - **தொன்ம நூல்கள்**

3.உதவினார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

★ உதவினார் = உதவு + இன் + ஆர்

★ உதவு - **பகுதி** ★ இன் - **இறந்தகால இடைநிலை** ★ ஆர் - **பலர்பால் வினைமுற்று விகுதி**

4.ஆறுமுக நாவலர் புலமை பெற்றிருந்த மொழிகள் எத்தனை? அவை யாவை?

★ ஆறுமுக நாவலர் **மும்மொழிப் புலமை** பெற்றிருந்தார். அவை -

★ தமிழ் ★ வடமொழி ★ ஆங்கிலம்

5. 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர் - இரண்டு தொடர்களாக மாற்றுக.

★ 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் புகழப்படுபவர் ஆறுமுக நாவலர்.

★ ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மாயூரம் வேதநாயகம்



பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876-1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக்கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷி மேரு' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். அவர், மொழி பெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகரமன்றத் தலை-வராகவும் பணியாற்றிய அவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கி இருந்தார்; கி.பி.1805 முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். அவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். அவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன்சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக் கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறி விட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என் கண்மணியே, நீ சொல்வது எள்ளளவுஞ் சரியல்ல. கல்வி என்கிற பிரசக்தியே இல்லாதவர்களான சாமானிய பாமர ஜனங்களைப் பார். அவர்களுடைய செய்கைகளுக்கும் மிருகங்களுடைய செய்கைகளுக்கும் என்ன பேதமிருக்கிறது? நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப் பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?" என்றார்.

மாதிரி வினாக்கள்

1. தென்னிந்தியப் பகுதியில் மிகக்கொடிய பஞ்சம் ஏற்பட்ட ஆண்டு எது?

★ தென்னிந்தியப் பகுதியில் மிகக்கொடிய பஞ்சம் ஏற்பட்ட ஆண்டு **1876 - 1878**

2.பத்தியில் உள்ள எண்ணும்மை சொற்களை எடுத்தெழுதுக.

★ மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும்

★ நூல்களையும் பல தனிப்பாடல்களையும் ★ இசையிலும் வீணை வாசிப்பதிலும்

3.மாயூரம் வேதநாயகனாருடன் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் யாவர்?

★ மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார் ★ இராமலிங்க வள்ளலார்

★ சுப்பிரமணிய தேசிகர்

4.தமிழில் வெளிவந்த முதல் நாவல் எது?

★ பிரதாப முதலியார் சரித்திரம்

5.பார்த்தாள் - பகுபத உறுப்பிலணக்கம் தருக.

➔ பார்த்தாள் = பார் + த் + த் + ஆள்

★ பார் - **பகுதி** ★ த் - **சந்தி** ★ த் - **இறந்தகால இடைநிலை**

★ ஆள் - **பெண்பால் வினைமுற்று விகுதி**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பரிதிமாற் கலைஞர்

வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் பேராசிரியர். பாடத்தில் மனம் ஒட்டாது கவனமின்றி இருந்த மாணவர் ஒருவரிடம், "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இங்கிருந்து எழுவாய், நீ இங்கிருப்பதால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை, இங்கிருந்த உன்னால் செயப்படுபொருள் இல்லை, ஆதலால் வகுப்பில் இருந்து வெளியேறுக" என நயம்பட உரைத்து வெளியேற்றினார். அவர் தான் 'திராவிட சாஸ்திரி' என்று சி.வை. தாமோதரனாரால் போற்றப்பட்ட பரிதிமாற் கலைஞர். அவர் தந்தையாரிடம் வடமொழியையும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்; எப்.ஏ (F.A. - First Examination in Arts) தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பி.ஏ பயின்று, தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1893ஆம் ஆண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களையும் களவழி நாற்பது நூலைத் தழுவி மான விஜயம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு நாடக வியல் என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார். இவரது தனிப்பாசுரத் தொகை என்னும் நூல் ஜி.யு. போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மு.சி. பூர்ணலிங்கனாருடன் இணைந்து இவர் நடத்திய ஞானபோதினி அக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த அறிவியல் இதழாகத் திகழ்ந்தது. தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் இவரே. பின்னாளில் 2004ஆம் ஆண்டு நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்தது. பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயணர் என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர்மாற்றம் செய்து கொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்த இவர் தம் 33ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழைச் செம்மொழியென்று நிறுவி, அவர் எழுதிய கட்டுரையின் கீழ்வரும் சில வரிகள் அவருடைய உரைநடை ஆற்றலைத் தெரிவிக்கும்.

உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரையிலிருந்து

"பலமொழிகட்குத் தலைமையும், மிக்க மேதமையும் உடைய மொழி, உயர்மொழி, தனித்து இயங்க வல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தாய்மொழி, செம்மொழி. ஆயின் தமிழ் உயர் தனிச் செம்மொழியாம்."

மாதிரி வினாகள்

1. பரிதிமாற் கலைஞரின் இயற்பெயர் என்ன?

★ பரிதிமால் கலைஞரின் இயற்பெயர் **சூரிய நாராயண சாஸ்திரி** என்பதாகும்.

2. சி. வை. தாமோதரனார் பரிதிமாற்கலைஞரை எவ்வாறு போற்றினார்?

★ சி. வை. தாமோதரனார் பரிதிமாற்கலைஞரை **திராவிட சாஸ்திரி** எனப் போற்றினார்.

3. பரிதிமாற் கலைஞர் இயற்றிய நாடகங்கள் யாவை?

★ பரிதிமால் கலைஞர் இயற்றிய நாடகங்கள் **ரூபாவதி, கலாவதி** என்பனவாகும்.

4. பரிதிமாற் கலைஞர் வகுப்பில் பொருந்தா மாணவனை எவ்வகைச் சொற்றொடர் அமைப்பைக் கொண்டு வெளியேற்றினார்.

★ **எழுவாய்பயனிலைசெயப்படுபொருள்** என்னும் சொற்றொடர் அமைப்பைக் கொண்டு வெளியேற்றினார்.

5. பரிதிமாற் கலைஞர் கற்ற மொழிகள் யாவை? யாவரிடம் கற்றார்?

★ பரிதிமாற் கலைஞர் கற்ற மொழிகள் **தமிழ், வடமொழி**

★ தமிழ்மொழியைத் **தமிழாசிரியர் சபாபதி**யிடம் கற்றார்.

★ வடமொழியைத் **பரிதிமால் கலைஞர்தம் தந்தை**யிடமே கற்றார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மறைமலையடிகள்

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிக்குநேர்காணலுக்குச் சென்றார் ஒருவர். அந்தக் கல்லூரியின் பேராசிரியர் பரிதிமாற்கலைஞர், "'குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டுச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அவர் "'அ்.து எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். 'நீங்கள் தேர்வு செய்யப்பட்டு விட்டீர்கள்' என்றார் பரிதிமாற்கலைஞர். 'தெரியாது' என்று சொன்னவரை, 'எப்படித் தேர்வு செய்யலாம்?' என்று பிறர் கேட்டபோது, 'அ்.து' என்பது ஆய்தத் தொடர் குற்றி யலுகரம், 'எனக்கு' என்பது வன்தொடர்க் குற்றியலுகரம் 'தெரியாது' என்பது உயிர்த்தொடர் குற்றியலுகரம் என்று விளக்கினார் பரிதிமாற்கலைஞர். இந்நிகழ்வில் பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் மறைமலையடிகள்.

பரிதிமாற்கலைஞருடனான அவருடனான நட்பு 'தனித்தமிழ்' மீதான அடிகளாரின் பற்றை மிகுதியாக்குகிறது. பிறமொழிக் கலப்பு இன்றி இனிய, எளிய தமிழ்ச் சொற்களைக் கொண்டே பேசவும் எழுதவும் இயலும் என்று நடைமுறைப்படுத்தினார். 'சுவாமி வேதாசலம்' எனும் தன்பெயரை 'மறைமலை யடிகள்' என மாற்றிக்கொண்டதோடு தம் மக்களின் பெயரையும் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றினார். இளம்வயதில் பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதிவந்த அடிகளார் ஞானசாகரம் *(1902)*, Oriental Mystic Myna *(1908)*, Ocean Of Wisdom *(1935)* முதலான இதழ்களை நடத்திச் சிறந்த இதழாளராகத் திகழ்ந்தார். முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சாகுந்தல நாடகம், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதலான பல நூல்களை எழுதியுள்ளார். முறையான பள்ளிக்கல்வியை முடித்திராத மறைமலையடிகள் ஆக்கிய நூல்களும் ஆற்றிய சொற்பொழிவுகளும் அவர் ஓர் அறிவுக் கடல் என்பதை நமக்கு உணர்த்தும்.

மாதிரி வினாக்கள்

1. மறைமலை அடிகளாரின் இயற்பெயர் என்ன ?

★ மறைமலை அடிகளாரின் இயற்பெயர் **சுவாமி வேதாச்சலம்**

2. குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டு சொல்லுங்கள் என்று பரிதிமால் கலைஞர் கேட்டதற்கு மறைமலையார் சொன்ன விடை யாது?

★ **அ்.து எனக்குத் தெரியாது**

3. மறைமலையடிகள் தெரியாது என்று கூறியும் எவ்வாறு வெற்றி பெற்றார்?

★ மறைமலை அடிகள் அ்.து எனக்குத் தெரியாது என்று சொன்ன சொற்றொடரிலேயே விடை இருந்ததால் வெற்றி பெற்றார்.

4. மறைமலையார் எழுதிய நூல்கள் யாவை?

★ முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை ★ பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை

★ சாகுந்தல நாடகம் ★ மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்

5. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள குற்றியலுகரச் சொற்கள் எவையேனும் ஐந்தினை எழுதி அதன் வகைகளை எழுதுக.

★ நேர்க்காணலுக்கு - வன்தொடர் குற்றியலுகரம்

★ அ்.து - ஆய்தத் தொடர் குற்றியலுகரம் ★ எனக்கு - வன்தொடர் குற்றியலுகரம்

★ தெரியாது - உயிர்த்தொடர் குற்றியலுகரம் ★ குற்றியலுகரத்திற்கு - வன்தொடர் குற்றியலுகரம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சோமசுந்தர பாரதியார்



ஒருமுறை எட்டயபுரம் அரண்மனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புலவர் வந்திருந்தார். அரண்மனை அவையில் நடந்த புலவர் கூட்டத்தில் ஈற்றடி ஒன்றைக் கொடுத்துப் பாடல் ஒன்றை இயற்றித்தருமாறு வேண்டினார். அக்கூட்டத்திற்கு இரண்டு நண்பர்கள் சென்றிருந்தனர். பலரும் பாடல் இயற்றிக் கொடுக்க அனைத்துப் பாடல்களிலும் நண்பர்கள் இருவரின் பாடல்களே சிறந்ததெனத் தேர்ந்தெடுத்த அப்புலவர், இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தார். அவ்விருவரில் ஒருவர் சுப்பிரமணிய பாரதியார், மற்றொருவர் சோமசுந்தர பாரதியார்.

பேச்சாளர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலைப் போராட்ட வீரர், இலக்கிய ஆய்வாளர் எனப் பன்முக ஆளுமைகொண்ட நாவலர் சோமசுந்தர பாரதியார் சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்தார். வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு வ.உ.சி. யின் அழைப்பை ஏற்று ரூ.100 சம்பளத்தில் சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். 'என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது' என்று வ.உ.சி. பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிடுவார். இவர் தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய வற்றுக்கு உரை எழுதியுள்ளார். இவர் சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடுகொண்டு சடங்குகள் இல்லா திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார். வ.உ.சி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் அவர்களுக்காக இவர் வாதாடியது குறிப்பிடத்தகுந்தது. அவருடைய தீந்தமிழுக்குச் சான்று.

"கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு, எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது. இயல் வழக்கில்லா அருஞ்சொற்களும் பொருள் பல குறித்து மருளவைக்கும் பொதுச் சொற்களும் விரவும் நடையைச் செய்யுள் வழக்கில் ஒருவரும் விரும்பார். எளிமையும் தெளிவும் எழுத்திலும் பேச்சிலும் எம்மொழி நடைக்கும் இனிமையும் எழிலும் என்றும் உதவும் என்பது எல்லார்க்கும் உடன்பாடு."
(நாவலர் சோமசுந்தர பாரதியின் நூற்தொகுதி 4 - 'நற்றமிழ்' என்னும் கட்டுரையிலிருந்து)

மாதிரி வினாக்கள்

1. எட்டையபுரத்தில் சிறந்த பாடல் எழுதிப் பரிசு பெற்ற நண்பர்கள் இருவர் யாவர்?

★ எட்டையபுரத்தில் சிறந்த பாடல் எழுதிப் பரிசு பெற்ற நண்பர்கள் இருவர்
★ சுப்பரமணிய பாரதியார் ★ சோமசுந்தர பாரதியார்

2. சோமசுந்தர பாரதியாரின் பன்முக ஆளுமைகளைக் அடுக்குக.

★ பேச்சாளார் ★ சமூக சீர்திருத்தவாதி ★ விடுதலைப் போராட்ட வீரர்
★ இலக்கிய ஆர்வலர் ★ வழக்கறிஞர்

3. சோமசுந்தர பாரதியார் ஆற்றிய பணிகள் யாவை?

★ வழக்கறிஞர் ★ வ.உ.சியின் சுதேச கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பாளார்.
★ அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர்

4. சோமசுந்தர பாரதியார் எழுதிய நூல்கள் யாவை?

★ தசரதன் குறையும் கைகேயி நிறையும் ★ திருவள்ளுவர்
★ சேரர் தாயமுறை ★ தமிழும் தமிழரும்

5. மேற்கண்ட உரைப்பத்தி எடுக்கப் பட்ட நூலின் பெயர்?

★ நாவலர் சோமசுந்தர பாரதியின் நூற்தொகுதி 4 - 'நற்றமிழ்' என்னும் கட்டுரையிலிருந்து மேற்கண்ட உரைப்பத்தி எடுக்கப் பட்டது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வை.மு. கோதைநாயகி

ஐந்தரை வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் ஒருவர், தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றார். கதை கூறுவதில் ஆர்வம் கொண்டிருந்த அவர் தன் கற்பனை ஆற்றலால் தோழியர்களுக்கும் புதிய கதைகளை உருவாக்கிக் கூறினார். அதைக் கண்ட அவரது கணவர் அப்பெண்ணின் படைப்பாற்றலை ஊக்குவிக்கப் பல நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பெண்ணுக்கு நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் ஓரளவு மட்டும் எழுதத் தெரிந்த தன்னால் நாடகம் எப்படி எழுத முடியும் என்று அவர் வருந்தியபோது, அவரது தோழி, நாடகத்தை அவர் சொல்லச் சொல்லத் தான் எழுதுவதாகக் கூறி ஊக்கப்படுத்தினார். இப்படித்தான் அப்பெண் தன்னுடைய முதல் நூலான 'இந்திர மோகனா' என்ற நாடக நூலை வெளியிட்டார். அவர்தான் 'நாவல் ராணி', 'கதா மோகினி', 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் அழைக்கப்பட்ட வை.மு.கோ. 'வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள்' ஆவார்.

இவர் 'ஜகன் மோகினி' என்ற இதழை முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். பெண் எழுத்தாளர்களையும், வாசகர் வட்டத்தையும் உருவாக்கினார்.

காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்த இவர் தம் எழுத்துகளால் மட்டுமன்றி மேடைப்பேச்சின் மூலமும் காந்தியக் கொள்கைகளைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைக்கும் சென்றார். தமிழகப் பெண் வரலாற்றில் தனித்து அடையாளம் காட்டப்பட வேண்டிய சிறப்புக்குரியவரான வை.மு.கோ. அவர்கள் 115 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'குடும்பமே உலகம்' என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில், வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதைப் பெண்களுக்குத் தன் வாழ்வின்மூலம் இனம் காட்டிய பெருமைக்கு உரியவர் வை.மு.கோ. அம்மையார்.

அவருடைய எழுத்தாற்றலுக்கொரு சான்று:

"என்ன வேடிக்கை! அடிக்கடி பாட்டி 'உலகானுபவம், உலகம் பலவிதம்' என்றெல்லாம் சொன்னதைக் கேட்டபோது எனக்கு ஒண்ணுமே புரியாது விழித்தேனே பாட்டி சொல்லிய வசனங்களைவிடக் கடிதங்கள் பலவற்றைப் படித்தால் அதுவே மகத்தான லோகானுபவங்களை உண்டாக்கிவிடும் போலிருக்கிறதே! பாவம்! பேசுவது போலவே தன்னுடைய மனத்தினுள்ளதைக் கொட்டி அளந்துவிட்டாள் நான் கிராமத்தை வெறுத்துச் சண்டையிட்டு வீணாக அவர் மனதை நோவடிக்கிறேன். இவள் பட்டணத்தை வெறுத்துத் தன் கொச்சை பாஷையில் அதன் உண்மை ஸ்வரூபத்தை படம் பிடித்துக் காட்டி விட்டாளே!... என்ன உலக விசித்திரம்!... என்று கட்டுமீறிய வியப்பில் சித்ரா மூழ்கினாள்." ('தபால் வினோதம்' குறுநாவலில் இருந்து)

மாதிரி வினாக்கள்

1. வை.மு. கோ வின் முழுமையான பெயர் என்ன?

★ வை.மு. கோ வின் முழுமையான பெயர் **வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி**

2. வை. மு. கோதைநாயகி அம்மையார் நடத்திவந்த இதழின் பெயர் என்ன?

★ வை. மு. கோதைநாயகி அம்மையார் நடத்திவந்த இதழின் பெயர் **ஜகன் மோகினி**

3. வை. மு. கோதைநாயகி அம்மையார் எத்தனை நாவல்களை எழுதியுள்ளார்?

★ வை. மு. கோதைநாயகி அம்மையார் **115** நாவல்களை எழுதியுள்ளார்

4. வை. மு. கோதைநாயகி அம்மையார் எவ்வாறெல்லாம் போற்றப்பட்டார்?

★ 'நாவல் ராணி' ★ 'கதா மோகினி' ★ 'ஏக அரசி'

5. வை. மு. கோதைநாயகி அம்மையாருக்கு எத்தனை வயதில் திருமணம் நிகழ்ந்தது?

★ வை. மு. கோதைநாயகி அம்மையாருக்கு **ஐந்தரை** வயதில் திருமணம் நிகழ்ந்தது

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மா. இராசமாணிக்கனார்

இவரின் தந்தை அரசுப் பணியாளர் என்பதால் பல ஊர்களில் பணியாற்ற வேண்டியிருந்தது. எனவே தற்போதைய ஆந்திர மாநிலம் கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் நான்காம் வகுப்பு வரை தெலுங்கு மொழியையே பயின்றார். இளம்வயதில் தந்தையை இழந்து தமையனாரால் வளர்க்கப்பட்டார். பதினைந்து வயதை அடைந்த நிலையில் 'இனி இவன் எங்கே படிக்கப் போகிறான்? ' என்று முடிவெடுத்து ஒரு தையல் கடையில் அவரது தமையனாரால் வேலைக்குச் சேர்க்கப்பட்டார். 'நான் பதினைந்து நாட்கள் வேலை கற்றுக்கொண்டேன்; காஜா எடுக்கக் கற்றுக்கொண்டேன். சிறிய பைகளைத் தையல் இயந்திரத்தில் தைக்கக் கற்றுக்கொண்டேன். நாள்தோறும் இரவில் வீடு திரும்புகையில் கடை உரிமையாளர் எனக்குக் காலணா கொடுப்பார்' என்று பின்னாளில் பதிவு செய்த அவரால் அத்தொழில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை.

தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளித் தலைமையாசிரியரின் பேருதவியால் தனது பதினைந்தாவது வயதில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். மிகுந்த பொருளாதார நெருக்கடியில் கல்வி பயின்ற அவர் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த் தேர்விலும் முதல் மாணவராகத் தேர்ச்சியடைந்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். பின்பு எழுத்தர், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக ஆசிரியர் என வளர்ந்தார். அவர்தான் இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு போன்ற துறைகளில் மிளிர்ந்த தமிழறிஞர் மா.இராசமாணிக்கனார்.

ஆய்வு நெறிமுறைகளிலும் அணுகுமுறைகளிலும் புதிய சிந்தனைகளைக் கையாண்ட இவர், சங்க காலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர்; சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் முதன்முதலில் 'மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்' என்ற நூலை இயற்றியவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே. உமாமகேசுவரன், ந.மு. வேங்கட சாமி, ஆகியோராலும் உ.வே.சாமிநாதர் போன்ற தமிழறிஞர்களாலும் நெறிப்படுத்தப்பட்ட இவர் சோழர் வரலாறு, பல்லவர் வரலாறு, பெரிய புராண ஆராய்ச்சி, தமிழ்நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். 2006-2007 ஆம் ஆண்டு இவருடைய நூல்கள் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மாதிரி வினாக்கள்

1. மா. இராசமாணிக்கனார் எத்தனையாவது வயதில் ஆறாம் வகுப்பு பயிலத் தொடங்கினார் எங்குத் தொடங்கினார் ?

★ இராசமாணிக்கனார் தமது பதினைந்தாம் வயதில் தஞ்சை செயிண்ட் பீட்டர்ஸ் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து பயிலத் தொடங்கினார்.

2. மா. இராசமாணிக்கனார் இளம் வயதில் கற்றுக்கொண்ட தொழில் யாது?

★ இராசமாணிக்கனார் இளம் வயதில் கற்றுக்கொண்ட தொழில் தையல்தொழில் ஆகும்.

3. சிந்து சமவெளி நாகரிம் பற்றி தமிழில் முதன்முதலில் வெளிவந்த நூல் எது?

★ சிந்து சமவெளி நாகரிம் பற்றி தமிழில் முதன்முதலில் வெளிவந்த நூல் **'மொஹெஞ்சொ-தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்'** ★ நூலாசிரியர் - **திரு. மா. இராசமாணிக்கனார்** ஆவார்.

4. மா. இராசமாணிக்கனார் யாவரால் நெறிபடுத்தப்பட்டார்?

★ கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே. உமாமகேசுவரன், ந.மு. வேங்கடசாமி

5. மா. இராசமாணிக்கனார் எழுதிய நூல்கள் எவையேனும் நான்கினை எழுதுக?

★ சோழர் வரலாறு ★ பல்லவர் வரலாறு
★ பெரியபுராண ஆராய்ச்சி ★ பத்துப்பாட்டு ஆராய்ச்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வ. சுப. மாணிக்கம்

பர்மாவில் ரங்கூன் நகரில் உள்ளவொரு கடையில் அடிப்பையனாகப் (உதவியாள்) பணியாற்றினான் ஒரு சிறுவன். அவனிடம், கடை முதலாளி ஒரு பெயரைக் குறிப்பிட்டு, அந்த நபர் வந்து தன்னை எங்கே என்று கேட்டால், 'முதலாளி இல்லை'என்று சொல்லுமாறு வற்புறுத்தினார். அந்தச் சிறுவனோ, "நீங்கள் வெளியிலிருந்தால் அவ்வாறு கூறலாம். இல்லாதபோது எப்படிப் பொய் சொல்வது? சொல்ல மாட்டேன்" என்று பிடிவாதமாகக் கூறினார். அவர், வ.சுப. மாணிக்கம்.

தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் 'தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சுப. மாணிக்கம். 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'என்ற கொள்கையைப் பறை சாற்றுவதற்காகத் 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச்சுற்றுலா மேற்கொண்டவர். அழகப்பா கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சிறப்புடன் செயலாற்றியபோது பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன் அங்குத் தமிழாய்வு நடைபெறவும் வழிவகுத்தார். திருவனந்தபுரத்தின் திராவிட மொழியியல் கழகத்தில் முதுபேராய்வாளராகப் பணிபுரிந்தபோது தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

சங்கப் பாடல்களின் நுட்பங்களைக் கட்டுரைகளாக எழுதுவதில் ஆற்றல் மிக்கவரான இவர் தமிழ்க்காதல், வள்ளுவம், கம்பர், சங்கநெறி உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர். தமிழுக்குப் புதிய சொல்லாக்கங்களையும் உவமைகளையும் உருவாக்கித் தருவதில் தனி ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தவர். ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமையான அவருக்குத் தமிழக அரசு அவருடைய மறைவிற்குப் பிறகு, திருவள்ளுவர் விருது வழங்கியதுடன் 2006ஆம் ஆண்டு அவருடைய நூல்களை நாட்டுடமையாக்கிச் சிறப்புச் செய்தது.

அவருடைய தமிழ்த்திறத்துக்கு ஒரு பதம்

"ஐந்து கோடித் தமிழர் தொகை இருந்தும், ஆயிரம் படிகள் விற்பதற்கு மாமாங்கம் ஆகின்றது. வாங்காற்றல் மக்களிடம் இல்லை என்று சொல்லுதற்கில்லை. எத்துணையோ புதுக்கோலங்கட்கும் கேளிக்கைகட்கும் தலைகால் தெரியாமல் செலவு செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். நூல்கள் வாங்கும் அறிவுப் பழக்கத்தை மக்களிடம் பரப்ப வேண்டும்."

மாதிரி வினாக்கள்

1. இளம் வயதிலேயே வ. சுப. மாணிக்கனாரிடமிருந்த சிறந்த நற்பழக்கம் எது?

★ வ. சுப. மாணிக்கனாரிடமிருந்த சிறந்த நற்பழக்கம் **பொய்சொல்லாமை**.

2. வ. சுப. மாணிக்கனார் உருவாக்கிய இயக்கத்தின் பெயர் என்ன?

★ வ. சுப. மாணிக்கனார் உருவாக்கிய இயக்கத்தின் பெயர் - **தமிழ்வழிக் கல்வி இயக்கம்**

3. வ. சுப. மாணிக்கனார் எந்தப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகப் பணியாற்றினார்?

★ வ. சுப. மாணிக்கனார் **மதுரைப் பல்கலைக் கழகத்தில்** துணைவேந்தராகப் பணியாற்றினார்.

4. வ. சுப. மாணிக்கனாரின் இறப்புக்குப் பிறகு தமிழக அரசு கொடுத்த விருது யாது?

★ வ. சுப. மாணிக்கனாரின் இறப்புக்குப் பிறகு கொடுத்த விருது **திருவள்ளுவர் விருது**.

5. வ. சுப. மாணிக்கனார் பன்முக ஆற்றல் கொண்ட துறைகள் யாவை?

★ ஆராய்ச்சி ★ கட்டுரை ★ நாடகம் ★ கவிதை ★ உரை ★ கடித இலக்கியம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
மொழியோடு விளையாடு

எண்ணங்களை எழுத்தாக்குக

இயல் 1

ஓவிய எழுத்து

கற்கால மனிதன்
சொற்கலை வடிக்கிறான் - இவன்
கல்லும் உளியும்
கதைகளைச் சொல்லும் - நல்ல
ஓவிய எழுத்தில்
காவியம் புனையும் - கடும்
உதிரம்சிந்தும் எழுத்தை
எதிர்காலம் புரிந்திடும் . - உளியில்
எழுத்தாய் விழுந்தவை
விழுதாய் வளர்ந்திடும்.

ஓவிய எழுத்துமொழி - (PICTOGRAPHY)

1. இந்தப்படம் முற்காலத்தில் இருந்த ஓர் எழுத்துவடிவமான ஓவிய எழுத்தைப் பற்றிக் கூறுகின்றது.
2. அக்கால செய்திகளையும் உருவங்களையும் ஓவியமாக வடிக்கின்ற பழக்கம் நம் முன்னோர்களிடம் இருந்தது.
3. ஓவியம் போன்றே எழுத்துகளும் எழுதப் பெற்றமையால் அவற்றை ஓவிய எழுத்துகள் என்று குறிப்பிடுகின்றோம்
4. ஓவிய எழுத்துகள் கற்களின் மீதும் மலைகளின் மீதும் எழுதப்பட்டன.
5. ஓவிய எழுத்துக்களை எழுதுவதற்குக் கல்லுளிகளும் கற்களும் பயன்படுத்தப்பட்டன.
6. இந்த எழுத்து முறையில் மலையைக் குறிப்பிட, என்று எழுதப் பெறுகின்றது.
7. கிணற்றைக் குறிப்பிட என்று எழுதப் பெறுகின்றது.
7. அன்றைய ஓவிய எழுத்தே இன்றைய எழுத்துமுறைகளுக்கு வடிவம் தந்தது.

இயல் 2

மரம் நம் வரம்

மரங்களை மட்டுமா அழிக்கின்றான்?
மனிதன் தன்னைத்தானே அழிக்கிறான் - நித்தம்
நெகிழியைப் பயன்படுத்தி வருகின்றான்
நெருங்காத எமனை அழைக்கிறான் - நல்ல
ஓசோனை ஓட்டையிட செய்கின்றான்
ஓவென்று குமுறி அழுகின்றான்.- நேற்று
மறந்தும் இருந்துவிட்டாய் மனிதனே!
மரம்நட்டு வளர்இனிநீ புனிதனே!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உலகம் வெப்பமயமாகிக்கொண்டிருக்கின்றது

1. உலகம் வெப்பத்தால் உருகுகின்றதைக் காட்டுகின்றது இப்படம்.
2. மரங்கள் அழிப்பு, மனிதக் கழிவுகள் எரிப்பு, நெகிழிப் (பிளாஸ்டிக்)பயன்பாடு.
3. ஓசோன் படலமும் ஓட்டையாகி ஒழுகுகின்றது உலகின் நீராதாரம்.
4. சில நாள்களில் இந்நில உலகமும் நிலாவாக மாறிவிடும்.
5. மனிதன் மரத்தை மட்டும் அழிக்கவில்லை. மனித இனத்தையும் அழிக்கின்றான்.
6. மனித இனம் மட்டும்தான் தன்னைத் தானே அழித்துக் கொண்ட பேரினம் எனக்கூறப்படும்.

இயல் 3

தொலைந்துபோன உறவுமுறை

தொலைக்காட்சிப் பெட்டியின் நிகழ்ச்சியில்
தொலைந்துபோனது தந்தையின் அறிவுரை
கைப்பேசியில் காலத்தைக் கழிப்பதில்
கரைந்துபோனது அன்னையின் அன்புரை
கண்ணசையா கணினி விளையாட்டுகளில்
காணாமல்போனது மகனின் வாழ்க்கை
தொழில்நுட்பத்தால் தொலைந்து போனவர்களே
தொன்றுதொட்ட உறவுமுறை எங்கே? எங்கே?

தொழில் நுட்பத்தால் தொலைந்த குடும்பம்

1. தொலைக்காட்சியில் நிகழ்ச்சியைக் காண்கிறார் தந்தை.
2. கைபேசியில் காலத்தைக் கழிக்கிறாள் அன்னை.
3. கணினியில் கண்ணசையாமல் விளையாடுகின்றான் மகன்.
4. திசைக்கு ஒருவரென திரும்பி இருக்கிறது குடும்பம்.
5. தொழில்நுட்பதால் தொலைந்த குடும்பம் இனி மீள்வது எப்போது?

இயல் 4

கல்வியின் சிறப்பு

கல்வியொன்றே காலத்தை முன்பே
கடுகிக் காட்டும் கண்ணாடி
கற்றவனே உலகின் பயனைப்
முற்றிலும் பெற்றவன் ஆவான்.
பூவுலகில் புதுமையைப் படைத்து
புதுபுதுப் புகழுற்றவர் எல்லோரும்
புத்தகத்தில் புரண்டு நெளிந்து
புழுவாய் திரிந்து வாழ்ந்தோரே!

கல்வியின் பெருமை

1. கல்வியால் உயர்ந்தவர்களைக் கண்ணாடிபோல் காட்டும் படம்.
2. பொறியியல் வல்லுநர், மருத்துவர்கள், நீதியரசர், காவல்துறை அதிகாரி, ஆசிரியர், தொழிலதிபர் என எல்லோரும் உயர்ந்தது கல்வியால் மட்டுமே.
3. கல்வி ஒன்றே மாய உலகைக் காட்டும் மருத்துவக் கண்ணாடி போன்றது.
4. கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு; அவர் இருந்தாலும் இறந்தாலும் புகழிருக்கும்.
5. இவர்களைப்போல நானும் சிறந்த கல்வியைக் கற்று முன்னேறுவேன்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 5

தமிழர் வணிகத்தின் தலைசிறப்பு

1. இடம் - சிதம்பரம்
2. காலம் - 17 ஆம் நூற்றாண்டு
3. உள் நாட்டுச் சந்தைக்குப் பொருள்களை எடுத்துச் செல்லும் சிறு வணிகர் கூட்டம்.
4. வரிசைபட செல்லும் வாணிபர் கூட்டம். வழித்துணைக்கு வரும் வாலிபர்கள்.
5. பொதிசுமக்கும் கழுதைகள், போய்வர வசதியாய் குதிரைகள்.
6. "கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைபடாது" பொருள்களைப் பெற்றும், தந்தும் வாணிபம் செய்தார் எம் தமிழர்.

இயல் 6

முகம் பார்க்கும் பெண்ணே

அகம் பாரடி கண்ணே! - என்றுமே
முகமும் நகமும் அழகில்லை
அகமும் அறிவுமே அழகடி! - பெண்ணே!
மானமும் ஒழுக்கமும் உயர்வாகும்
காலமும் உனக்கு பொன்னாகும் - நாளுமே
கண்ணாடி பொழுதை வீணாக்கும்
கல்வியுன் வாழ்க்கையை அழகாக்கும்

முகம் பார்க்கும் பெண்

★ எப்பொழுதும் கண்ணாடியில் முகம் பார்க்கின்றாள் இளம்பெண்.
★ உண்மையில் உலகிலுள்ள அனைத்துப் பெண்களும் அழகானவர்களே!
★ பெண்கள் முகத்தையும் நகத்தையும் அழகாக்குகின்றார்கள்.
★ அகத்தையும்(மனதையும்) அறிவையும் அழகாக்கினால் வாழ்வில் உயரலாம்.
★ மனிதர்களுக்கு முகங்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் 7

காலக் கணிதன் நீ

அன்புள்ள மாணவனே!
அறிவுச்சுடர் சூரியனே! - என்றும்
காலமுனது கையிலுண்டு
கல்வியுனது மனதிலுண்டு - ஓடும்
காலச்சக்கரம் வேகமானது
கணக்காயிருப்பது விவேகமானது - நாளும்
தேவைக்கேற்ப பிரித்துடுவாய்
தெளிவாயதனைப் பயன்படுத்துவாய்!

காலம் கண் போன்றது - கல்வி பொன் போன்றது

1. கல்வி பயிலும் மாணவன் தன் மாணவப் பருவத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்பதையே இப்படம் நமக்குக் காட்டுகின்றது.
2. வைகறைப் பொழுதில் உடற்பயிற்சி, யோகா, தியானம் செய்யவேண்டும்.
3. கல்வி கற்க கல்விக்கூடம் செல்ல வேண்டும். பெற்றோர் சொற்படி நடக்க வேண்டும்
4. நண்பர்களுடனும் உறவினர்களுடனும் பெற்றோருடனும் கைப்பேசியில் குறைந்த மணித்துளிகளே பேசுதல் வேண்டும்.
5. பெற்றோருடன் கல்வி கற்க வேண்டும; மாலை முழுவதும் விளையாட வேண்டும்.
6. தொலைக்காட்சியில் நல்ல நிகழ்ச்சிகளைக் காணவேண்டும்.
7. திட்டமிட்ட காலம் தெவிட்டாத இன்பம் தரும்.

இயல் 8

ஓடி விளையாடு பாப்பா

ஓடியும்பாடியும் ஆடிடுவோம்
ஒற்றுமையுடனே கூடிடுவோம் - நாளும்
கூடியாடித் திரிந்திடுவோம்
கும்மியடித்துப் பாடிடுவோம் - நாங்கள்
ஆனைசவாரி போயிடுவோம்!
ஆயிரம்முத்தம் கொடுத்திடுவோம் - என்றும்
அம்மாசொல்லைக் கேட்டிடுவோம்
அன்பையெல்லாம் பெற்றிடுவோம்

ஓடி விளையாடு பாப்பா

1. அம்மாவின் அன்பில் விளையாடும் குழந்தைகள்.
2. ஒற்றுமையையும் ஒழுக்கத்தையும் கற்றுத்தருபவள் அம்மா.
3. வேற்றுமையை நோயை நீக்குபவள் அம்மா!
4. குழந்தைகளுடன் ஓடியாடி விளையாடுபவள் அம்மா!
5. பாடத்துடன் பண்பையும் கற்றுத்தருபவள் அம்மா அம்மா!

மொழியோடு விளையாடு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக

எட்டுத்தொகை		
அகம்	புறம்	அகமும் புறமும்
நற்றிணை	புறநானூறு	பரிபாடல்
குறுந்தொகை	பதிற்றுப்பத்து	
ஐங்குறுநூறு		
அகநானூறு		
கலித்தொகை		

பத்துப்பாட்டு	
அகம்	புறம்
குறிஞ்சிப்பாட்டு	மதுரைக்காஞ்சி
முல்லைப்பாட்டு	திருமுருகாற்றுப்படை
நெடுநல்வாடை	பொருநராற்றுப்படை
பட்டினப்பாலை	பெரும்பாணாற்றுப்படை
	சிறுபாணாற்றுப்படை
	கூத்தராற்றுப்படை

★ தமிழின் தொன்மையான இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியங்கள் ஓர் ஒழுங்குபட, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும், அகம், புறம் என்னும் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

★ எட்டுத்தொகையில், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகியவை அகப்பொருள் சார்ந்த நூல்களாகும். புறநானூறும் பதிற்றுப்பத்தும் புறப்பொருள் சார்ந்த நூல்களாகும். பரிபாடல் அகமும் புறமும் கலந்த நூலாகும்.

★ பத்துப்பாட்டில், குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகியவை அகப்பொருள் சார்ந்த நூல்களாகும். மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகியவைப் புறப்பொருள் சார்ந்த நூல்களாகும்.

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.



பொருள் இலக்கணம் இரு வகைப்படும் அவை: அகப்பொருள், புறப்பொருள். அகப்பொருள் இலக்கணம் மூன்று வகைப்படும். அவை: முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள். நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும். பொழுது, சிறுபொழுது, பெரும்பொழுது என இரு வகைப்படும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பத்தியைப் படித்து வினாக்களை உருவாக்குக

கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சை கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

- மொழி வரலாறு (மு. வரதராசனார்)

வினாக்கள்

1. **மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை எது?**
2. **ஒரு தாய் அடையும் பெரிய மகிழ்ச்சி எது?**
3. **குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?**
4. **மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?**
5. **மக்களுக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு யாது?**

அந்தாதி

அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
உயிரின் ஒலியில் குழந்தையின் புன்னகை
குழந்தையின் புன்னகையே இறைவன்.

திரிகோணாசனம்

- **மூளைக்கு இரத்த ஓட்டத்தைச் செலுத்தி, நினைவாற்றலை அதிகரிக்கும்.**
- **உடலுக்கு நல்ல சுறுசுறுப்பைத் தரும்.**
- **உடல் வலிகள் குறையும்.**
- **உடல் வளர்ச்சிக்கு உதவும்.**
- **மூச்சினை நுரையீரலுக்கு ஆழமாகக் கொண்டுச் செல்லும்.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கட்டுரை எழுதுக

தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்

எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் - இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை - அறிஞர்களின் பார்வை - கற்கும் திறன் - பயன் - இன்றைய நிலை

முன்னுரை:

★ தாய்மொழியில் கல்வி என்பது பழமைவாதமாக, குறுகிய கண்ணோட்டத்துடன் நோக்கப்படுகிறது.

★ தாய்மொழியில் கல்வி என்பதை நாம் மொழியின் பாதுகாப்பு, வளர்ச்சி என்ற எண்ணத்திலேயே பார்க்கிறோம்.

★ உலகமயமாக்கல் நிலவும் இந்தக் காலகட்டத்தில் தாய்மொழியில் கல்வி தங்கள் குழந்தைகளுக்கு வளமான எதிர்காலத்தை ஏற்படுத்தி கொடுக்குமா? என்ற கேள்வி பெற்றோர்களிடத்தில் எழுகிறது.

★ எனவே, தாய்மொழியில் கல்வி கற்பதன் தேவையை இக்கட்டுரையில் காண்போம்.

தாய்மொழிக் கல்வி:

★ தாய்மொழியில் கல்வி கற்பதன் மூலம் குழந்தைகள் கற்பதைத் தாங்கள் பேசுவதுடன் ஒப்பிட்டுப் பார்க்கமுடியும். அதனால் அவர்களின் கற்றல் எளிமையாகின்றது.

★ தாய்மொழியில் கல்வி கற்பவர்கள் ஒரு வி'யத்தை நோக்கும் விதம் வேற்றுமொழியில் கற்பவர் களைவிட மேம்படுகிறது. இவை அனைத்தும் கற்கும் திறனை நாளடைவில் அதிகரிக்கச் செய்கின்றன.

★ தாய்மொழிவழி கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், தாங்கள் சொல்ல வருவதை மிக துல்லியமாக மாணவர்களுக்குப் புரிய வைக்கின்றனர். இதனால் மாணவர்களின் தன்னம்பிக்கை கூடுகிறது, பேச்சாற்றல் வளர்கிறது, ஆக்கத்திறன் கூடுகிறது.

★ இதனை உணர்ந்துதான் தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன் மூலம் ஆக்கப்பூர்வ சிந்தனையைக் குழந்தைகள் மத்தியில் கொண்டுவர முடியும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கூறியுள்ளார்.

★ தாய்மொழி வழியில் கல்வி கற்பவர் தான் படிப்பதைப் புரிந்து படிக்க இயலும். இவ்வாறு புரிந்து படிப்பவரால்தான் வாழ்வில் வெற்றி பெற இயலும்.

★ இந்தியாவின் குடியரசுத்தலைவராக விளங்கிய அப்துல்கலாம் அவர்கள் உட்பட மேலைநாட்டைச் சேர்ந்த பலரும் தம் தாய்மொழி வழியில் கல்வி கற்று மேம்பட்டவர்களே ஆவர்.

தாய்மொழிக் கல்வி பற்றி யுனெஸ்கோ (UNESCO) அமைப்பு:

★ தாய்மொழிவழி கல்வி பற்றி ஐ.நா. சபையின் யுனெஸ்கோ அமைப்பு பல்லாண்டு காலமாக ஆராய்ச்சி செய்து வருகிறது. அந்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் சில தகவல்கள் மற்றும் வழிமுறைகளை வெளியிட்டுள்ளது.

★ முதலாவதாக, தாய்மொழியில் கல்வி பயிலும் குழந்தைகளே மிகவும் ஆழமாகக் கல்வி கற்கின்றனர். இது அனைத்து வயதினருக்கும் அளிக்கப்படும் கல்விக்கும் பொருந்தும்.

★ யுனெஸ்கோ தன் நிலைப்பாடான தாய்மொழியில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்த பல கூட்டங்களை நடத்தி அதன்மூலம் பல தீர்மானங்களை அறிவித்துள்ளது. அவை:

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ கல்வியின் தரத்தை உயர்த்த தாய் மொழியில் கல்வியை ஆதரிப்பது மற்றும் மேம்படுத்துவது.

★ பள்ளிகளில் அனைத்து நிலைகளிலும் இரு மொழிகளில் அல்லது பன்மொழிகளில் கல்வியைக் கற்றுத்தர ஊக்கப்படுத்துவது.

★ கலாச்சாரப் பரிமாற்றக் கல்வியில் மொழியை முன்னிறுத்துவது.

தாய்மொழிக் கல்வியும் கலைச் செல்வங்களும்:

★ ஒரு வளமான நாட்டுக்கு அடிப்படை வளம் தாய்மொழிக் கல்வி முறையே ஆகும். உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் இந்தியா உள்பட ஒரு சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைத் தவிர, தாய்மொழி மூலமாகவே கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

★ மனித ஆற்றலை வளமையாக்கவும், ஒருவரது படைப்பாற்றலை அதிகப்படுத்தவும் தாய்மொழிக் கல்வியால் மட்டுமே முடியும். இது அறிவியல் பூர்வமாக நிரூபணமான உண்மை.

★ மனிதனது சிந்தனைத் திறனுக்கும் தாய்மொழிக்கும் தொடர்பு இருக்கிறது. தாய்மொழியிலேயே ஒருவர் அதிகம் சிந்திக்க முடியும்.

★ சிந்தனை ஆற்றலை வளர்ப்பதும், படைப்புத் தன்மையை உருவாக்குவதும், நாகரிகமான சமூக மனிதராக மாற்றுவதும் சமூகப் பண்பாட்டைக் காப்பாற்றிக் கொண்டே அதை மேம்படுத்துவதும் சிறந்த கல்வியின் நோக்கம்.

★ நம் நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி அவசியத்தைப் பற்றி பலரும் பேசிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நடைமுறையில் அது முடியாமல் போய்க்கொண்டிருக்கிறது.

★ மிகுந்த படைப்பாற்றலோடு பள்ளிக்குச் செல்லும் ஒரு குழந்தையை, மொழி, கலாச்சாரத்தில் இந்தியத் தன்மையுடன் 3 வயது வரை நல்ல நிலையில் இருந்த குழந்தையை, ஆங்கில வழிக் கல்வி என்று, புரியாத, சிந்தனைத் திறனற்ற, மனனம் செய்யும் கல்வி முறையில் விடுவது என்பது உண்மையான திறமையை அழிப்பது அல்லாமல் வேறு என்ன?

சிந்தனைத் திறனின் திறவுகோல் தாய்மொழி:

★ பிப்ரவரி 21, உலகத் தாய்மொழி தினம்.

★ யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்ட அத்தினம் உலகம் முழுவதும் 2000 ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

★ தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும், எத்தனை மொழிகளைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான்.

★ தாய்மொழிக் கல்வி கற்பதனால் தொழில்துறை மற்றும் பொருளாதாரம் போன்றவற்றில் வெற்றி பெற முடியுமா என்ற கேள்வி தவறான கருத்தாகும். ஏனெனில் தாய்மொழிக் கல்வி வாழ்க்கையை செம்மைப்படுத்துகிறது.

★ தாய்மொழிக் கல்வி போதனையில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியதுடன் அதன் மேம்பாட்டில் அக்கறை கொள்ள வேண்டும்.

புத்தகங்கள்தான் அரண்கள்:

★ யுனெஸ்கோ (UNESCO) தாய்மொழி கல்வி வளர்ச்சிக்கும், பயன்பாட்டிற்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. அதற்குக் காரணம் தாய்மொழி கல்வி பல்லினப் பண்பாடு மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை உருவாக வழி வகுப்பதாகும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ தாய்மொழிக் கல்வியின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் புத்தகங்கள்தான் அடித்தளம்.

★ தாய்மொழிக் கல்வி மற்றும் பண்பாடுகளின் மேம்பாட்டிற்கும் அனைத்துலக மக்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கும் புத்தகங்கள் தான் அடித்தளமாக அமைகின்றன.

★ தாய்மொழியில் புத்தகங்கள் இருக்க வேண்டும், அவற்றை படிக்க வேண்டும், பயன்படுத்த வேண்டும். இல்லையேல், இவ்வுலகிலுள்ள 6,000 மொழிகளில் 50 விழுக்காடு இந்நூற்றாண்டின் இறுதிக்குள் காணாமல் போய்விடும்.

★ அம்மா என்ற சொல் தாய்மொழியின் முதற்சொல். அதுவே கல்விக்கு அடிப்படையாக இருக்க வேண்டும்.

★ தாய்மொழியில் தொடக்க கல்வியை அரசு எல்லா பள்ளிகளிலும் அமல்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மேலே குறிப்பிட்டது போல் தாய் மொழியில் கல்வி கற்பதே குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு உதவும் என்ற கருத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.

★ முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தாய் மொழியில் கல்வி அமைய வேண்டும்.

★ இன்றையச் சூழலில் உலகளாவிய தொடர்புகளுக்கு ஆங்கிலக் கல்வி தேவை என்பதால் ஆரம்பக் கல்வியில் தொடர்புத் திறனை மேம்படுத்தும் ஆங்கில மொழி கல்வியைப் பள்ளிகளில் ஆழமாகக் கற்பிக்க வேண்டும்.

★ உயர் கல்வியில் பயிலும் எல்லா புத்தகங்களையும் தாய்மொழியில் மொழிப்பெயர்ப்பது சாத்தியமில்லை என்பதால் உயர் கல்வியில் ஆங்கிலத்தை பிரதானமாக வைக்கலாம். அதற்காகத் தாய் மொழியில் உயர்கல்வியை முழுவதுமாக புறக்கணிக்கத் தேவை இல்லை.

மன்னிக்க முடியாத குற்றம்:

★ தங்களுடைய இளமைக் காலத்தில் தாய்மொழியில் கல்வி கற்கும் குழந்தைகள், இதர மொழிகளையும், இதரப் பாடங்களையும், தாய்மொழியில் கல்வி கற்காத குழந்தைகளை விட சிறப்பாக கற்றுத் தேருகின்றனர்.

★ தமிழ்மொழியை நம் குழந்தைகள் சிறப்பாகக் கற்று சான்றோர்களாக வாழ வழி அமைப்பது நமது முக்கிய கடமையாகும். குழந்தைப் பருவத்திலேயே தமிழைக் கற்பதன் மூலம் நம் குழந்தைகள் பாடங்களையும், மொழிகளையும் கசடறக் கற்பதிலே வல்லவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் ஐயமே இல்லை.

★ தாய்மொழிக் கல்விக்கு எதிரான அனைத்து வேறுபாடுகளும் அகற்றப்பட வேண்டும்:

★ தாய்மொழிக் கல்வி சிறார்களின் ஆற்றலை வளர்த்திடவும், பல்லின மக்களிடையே அவர்வர்களின் பண்பாடுகளைப் புரிந்து கொள்ளவும் வேறுபாடுகளை உணர்ந்து போற்றவும் அவற்றினால் வளப்பமடையவும் உதவுகிறது.

★ தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவும், அதன் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கவும், அதனை போதனை முறையில் நடைமுறைப் படுத்த வேண்டும்.

முடிவுரை:

★ மொழி என்பது வெறும் கருத்து பரிமாற்றங்களுக்கான ஒரு கருவி என்பதைத் தாண்டி அது மக்களின் கலாச்சாரங்களைத் தாங்கி நிற்கும் சாதனமாக உள்ளது.

★ மொழி மக்களின் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்துள்ளது. தாய்மொழிக் கல்வியால் கலாச்சாரங்களை ஒட்டி கல்வி கற்க முடிகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உங்கள் கனவு ஆசிரியர் குறித்துக் கட்டுரை எழுதுக.

முன்னுரை

★ இன்றைய ஆசிரியர்கள் அனைவரும் தங்களுடைய கனவு ஆசிரியராகத் திகழ வேண்டுமென மாணவர்களும், பெற்றோர்களும் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறே நான் விரும்பும் கனவு ஆசிரியர் குறித்து இக்கட்டுரையில்கூறுகின்றேன்.

கனவு ஆசிரியர்

★ கனவு ஆசிரியர் என்பவர் ஆசிரியர் சமுதாயத்தில் அனைவருக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டியவராவார்.

★ மாணவர்களைத் தன்னுடைய பிள்ளையாகக் கருதி அந்த மாணவர்களின் சுக, துக்கங்களில் பங்கேற்று அவர்களுக்குத் தேவையான கல்வியை வழங்கி, அவர்களுடைய தேடல்களுக்கு வடிகாலாக அமைந்திருப்பவரே கனவு ஆசிரியர்.

★ கல்வித்துறை போன்று வேறு எந்த துறைக்கும் ஒரு சமூகத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடிய பொறுப்பும், கடமையும் இல்லை.

★ நாட்டின் எதிர்காலம் வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. ஒரு நல்ல ஆசிரியரால்தான் நல்ல சமூகத்தை உருவாக்க முடியும்.

★ குடும்பமும், பள்ளியும் மாணவர்களுக்குத் நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தரும்போதுதான் அவர்கள் கல்வியில் சிறந்த நிலையை அடைய முடியும்.

★ வகுப்பறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நிலவும் நல்லிணக்கச் சூழலே மாணவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும்.

★ தமது குடும்பத்தில் ஒருவராக மாணவரைக் கருதும் ஆசிரியரால்தான் அந்த மாணவருக்குத் தேவையான கல்வியைச் சரியாக வழங்க முடியும்.

★ தவறு செய்வது மனித இயல்பு. பல சூழல்களில் இருந்து மாணவர்கள் வருவதால் வகுப்பிலும், பள்ளி வளாகத்திலும் தவறுகள் நடைபெற வாய்ப்புள்ளது. அவ்வாறு மாணவர்கள் தவறு செய்யும்போது அதை அவர்களுக்கு உணர்த்தி அவர்களைத் திருத்த வேண்டும்.

★ சிறிய குற்றங்களைப் பெரிதாக சுட்டிக் காட்டி விமர்சனம் செய்தால் விளைவுகள் வேறுவிதமாக மாறிவிடும். அதே சமயம் மாணவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டும் காணாமலும் இருந்துவிட முடியாது, கூடவும் கூடாது.

★ மாணவர் சமுதாயம் நல்ல, உயர்ந்த நிலை அடைந்திருந்தால் நிச்சயமாக அதற்கு காரணமாக இருப்பது ஆசிரியர் சமுதாயமே ஆகும். சிறந்த ஆசிரியர்கள் என்பவர்கள் செயலுக்கும் சொல்லுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பவர்களாக இருக்க வேண்டும்.

★ பெற்றோர்கள் ஒரு குழந்தையை இந்த உலகத்திற்குத் தருகிறார்கள். ஆனால் உலகத்தையே மாணவர்களுக்குத் தருகிறார் ஆசிரியர். இறந்த பிறகும் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வரிசையில் ஆசிரியர்களுக்கு முதல் இடம் உண்டு.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

★ இன்றைய திரைப்படங்கள், சமூக ஊடகங்களால் மாணவர்கள் அழிவுப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் காலகட்டத்தில் மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வி மிகவும் அவசியமானதாக உள்ளது.

★ தற்போதைய கல்வி முறையில் ஒழுக்கக் கல்வியைச் சேர்த்து மாணவர்களுக்கு போதிக்கப்பட வேண்டும்.

★ வாழ்க்கைக் கற்றலில் மாணவர்கள் ஆசிரியர்களின் நடத்தை, செயல்பாடுகளின் மூலம் கற்றுக் கொள்கின்றனர்.

★ புத்தகக் கல்வி மட்டுமல்லாமல், சிறந்த பண்பாடு, ஒழுக்கம், சமூகத் தொடர்புகள் போன்ற அத்தனை துறைகளிலும் மாணவர்களை வழிகாட்ட வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.

★ கற்பித்தல் என்பது ஒரு வகையில் கண்டறியும் கலையாகும். பலருக்குத் தங்களின் பலம் எதுவென்று கூடத் தெரிவதில்லை.

★ நல்ல ஆசிரியர்கள், மாணவர்களின் தனித்திறனை, பலத்தைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தி, நம்பிக்கையை விதைத்து வாழ்க்கையில் முன்னேற உதவுகிறார்கள்.

★ ஆசிரியர்கள் அறிவுக் கதவுகளைத் தட்டித் திறப்பவர்கள். சமூகத்தில் அனுபவம் என்ற வெளிக்காற்றை மாணவர்களுக்கு சுவாசிக்க கற்றுத் தருபவர்கள்.

★ அறியாமை இருட்டைத் திறந்து அறிவு என்ற ஒளி தருபவர்கள். ஆசிரியர்கள் தங்களுடைய பெரும் கடமையை உணர்ந்து செயல்பட்டு மாணவர்களின் கனவு ஆசிரியர்களாகத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

வீட்டின் பின்புலம்...

★ ஆசிரியர்கள் பள்ளி மாணவர்களுடைய வீட்டின் சூழலையும், அவர்களின் பின்புலத்தையும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

★ ஒரு ஆசிரியர் குயவர் போன்று செயல்பட வேண்டும். குயவர் எவ்வாறு தன் கையில் கிடைத்த களிமண்ணை கொண்டு அழகான பொருட்களை செய்கிறாரோ அது போல் நல்ல மாணவர்களை உருவாக்க வேண்டும்.

★ கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கு, மாணவர்கள் அனைவரும் ஒன்றுதான். எனவே ஆசிரியர், மாணவர்கள் அனைவரையும் ஒழுக்கம், கல்வி, இவற்றில் சிறந்தவர்களாக மாற்ற வேண்டும். மாணவர்களின் லட்சியம் நிறைவேற ஆசிரியர்களின் பங்கு முதன்மையானது.

முடிவுரை

★ ஆசிரியர்கள் மாணவனுக்குத் தோழனாகவும், மாணவிகளுக்குத் தோழியாகவும் இருந்தால், எப்போதும் மாணவர்கள் கண்களுக்குத் தெய்வமாகப் புலப்படுவார்கள்.

★ எல்லோரிடமும் மலர்ந்த முகத்துடன் இருக்க வேண்டும். எங்களுடைய சூழ்நிலையைப் புரிந்து கொள்ளும் தேவதையாக இருக்க வேண்டும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உரை எழுதுக

கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக

"எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க
ஓணான்கள் முட்டையிட
கள்ளிகள் பிழைத்திருக்க
பிள்ளைகள் விளையாட
பன்றிகள் மேய்ந்திருக்க
வானத்தில் மேகமுண்டு
சூரியனில் மழையுண்டு
காகமோ குருவியோ
நிழல் ஒதுங்க
ஆறெங்கும் முள்மரமுண்டு
எங்களுக்கும் ஓர் ஆறுண்டு
ஆற்றுக்கோர் ஊருண்டு
ஊருக்கோர் சனமுண்டு
வாழ்வைப்போல் ஒன்றுண்டு."

- இளங்கோ கிருஷ்ணன்

இக் கவிதை எழுப்பும் விழிப்புணர்வு உரை

★ ஆற்றில் தண்ணீரைத் தவிர மற்ற அனைத்தும் உண்டு.

★ பறவைகளாவது நிழலுக்கு ஒதுங்குகின்றன. ஆனால், மக்களுக்கு ஆறு எவ்வகையிலும் பயன்படவில்லை.

★ ஆற்றங்கரையில் வாழும் மக்கள் வாழ்க்கை ஏதுமற்ற பறவைகள் வாழ்க்கைப்போல் உள்ளது.

★ மரங்களை அழித்த மானுடச் சமூகம் வாழும்போதே வாழ்விழந்து போனது.

★ இனி ஆற்றைக் கடக்க ஓடங்கள் வேண்டாம் ஒட்டகங்களே போதும்.

இப்படிப் படித்தால், வெற்றி பெறுவது எளிது

➔ ஆர்வம் இருந்தால் எந்த ஒரு செயலும் வெற்றி பெறுவது எளிது.

➔ படிப்பதை வெறும் கடமையாக நினைக்காமல், ஆர்வத்துடன் கற்க முயற்சிசெய்யுங்கள்.

➔ படிக்கும் இடத்தை விட, படிக்கும் போது உங்கள் மனம் தெளிவாகவும் குழப்பமின்றியும் இருப்பதே முக்கியம்.

➔ படிக்கும் போது முக்கிய குறிப்புகளைத் தனியாக ஒரு குறிப்பேட்டில் பாடத் தலைப்பு வாரியாகக் குறித்துக் கொள்ளுங்கள்.

➔ படித்தவற்றை அடிக்கடி மனத்திரையில் ஓடவிட்டு பயிற்சி செய்வது நினைவுத்திறனை அதிகப்படுத்தும் வழிகளில் முக்கியமானது.

➔ வகுப்பில் நடத்தும் பாடங்களை அன்றே படிப்பது நன்று.

➔ பலமுறை படிப்பதைக் காட்டிலும் இருமுறை எழுதிப் பார்ப்பது சாலச் சிறந்தது.

➔ பள்ளிப்பாடங்களைப் புரிந்து படித்தால், கல்லூரிக் கல்வி கரும்பாய் இனிக்கும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உரை எழுதுவோம்

உங்கள் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் தற்பொழுது மாவட்ட ஆட்சியராகப் பணியாற்றுகிறார். நடைபெற இருக்கும் பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக வர இருக்கும் அவரைப் பள்ளியின் சார்பாக வரவேற்கும் விதமாக ஒரு பக்க அளவில் வரவேற்புரை ஒன்றை எழுதுக.

அன்புடன் வழங்கும் வரவேற்பு மடல்

ஆண்டுவிழாவிற்கு வருகைதந்து அவை நிறைந்த ஆன்றோர்களே சான்றோர்களே அன்பிற்கு இனிய பெற்றோர்களே பழகுதற்கினிய பாசமிகு பள்ளித் தோழர்களே! உங்கள் சார்ப்பாகவும் திருவள்ளுவர் இலக்கிய மன்றத்தின் சார்ப்பாகவும் நம் மாவட்ட ஆட்சியருக்கு வாசிக்கும் வரவேற்பு கவிதை மடல்!

எமது பள்ளியின் ஆண்டு விழாவிற்கு வருகை தந்துள்ள மாவட்ட ஆட்சியருக்கு வாசித்தளிக்கும் வரவேற்புரை கவிதை மடல்

சிங்காரச் சென்னையின் பள்ளியாம் - நம்
சீர்மிகு நற்றமிழ்நகர் மேனிலைப்பள்ளியின்
முன்னாள் மாணவரே! முதல் விருந்திரனரே! - எம்
முன்னோடிகளின் முன்னோடியே
தலைநகரைத் தன்விரல் நுனியால் - நித்தம்
ஆட்சி செய்யும் தலைமை யானவரே!
நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து - இன்று
நகரின் ஆட்சியாளாரான நாயகரே!
தவமாய் தவமிருந்து பெற்றாரோ? - நம்
தரணியே போற்றும் தவப்புதல்வரானீரே!
கூர்மையான அறிவால் வளர்ந்து - பணியில்
நேர்மையாய் வாழும் வள்ளுவரே!
தேடிவந்து உதவி கேட்போருக்கு - உடனே
ஓடிவந்து உதவும் உத்தமரே!
உம் மேசையில் கோப்புகள் - என்றுமே
எதுவும் நிலுவையில் இல்லை!
உம் புகழைப்பாட எங்களிடம் - மேலும்
சொற் சிலுவையும் இல்லை
வாழும் போதே வரலாறான - எங்கள்
வாழ்வின் வழிகாட்டியே உம்மை
வருக வருகவென மனம்குளிர்ந்து - நல்
வரவேற்பு நல்குகின்றோம் ! வருக வருக!
வாய்மணக்க நற்றமிழ் உரையை - எமக்கு
தருக தருகவெ வேண்டுகின்றோம்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கடிதம் எழுதுக

மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லா திருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளி தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.

அனுப்புநர்

வ. நறுமுகை,
அரசு மேல்நிலைப்பள்ளி,
திருநெல்வேலி.

பெறுநர்

பள்ளி தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
திருநெல்வேலி.

மதிப்பிற்குரியீர் வணக்கம்,

பொருள்: மாணவர்களுக்கு மழைக்காலம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தல் - தொடர்பாக.

'ஐப்பசி மாதம் அடைமழை' என்பார்கள். அடுத்த வாரம் மழைக்காலம் தொடங்க உள்ளது. இந்நிலையில், இந்த ஆண்டு கூடுதலாக மழைப் பொழிவதற்கு வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நேரத்தில் மழைக்காலங்களில் பல்வேறு வகையான சிக்கலகளை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது குறித்து மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அனைவரின் கடமையாகும்.

மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நம் பள்ளி மாணவர்களுக்கு ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த வேண்டும்.

இவ்வாறு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துவதன்மூலம் மாணவர்கள் விழிப்பாக இருப்பதுடன், தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும் தங்கள் உறவினர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள். இதனால், நாம் மழைக்காலப் பாதிப்புகளிலிருந்து நம்மை நாமே தற்காத்துக் கொள்ளலாம்.

எனவே, நம் பள்ளியில் மழைக்கால விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பள்ளி நிர்வாகத்திடமும் ஆசிரியர்களிடமும் கலந்தாய்ந்து ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினால் நன்றாக இருக்கும். அவ்வாறு, நிகழ்ச்சி நடக்கும் நிலையில் நானே முன்னின்று சிறப்பான முறையில் நடத்தித் தருவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

இப்படிக்கு
தங்கள் கீழ்ப்படிந்துள்ள
மாணவன்
வ. நறுமுகை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அண்மையில் நீங்கள் பார்த்த சமூகக் கருத்துள்ள திரைப்படம் ஒன்றின் திரைவிமர்சனத்தை அப்படத்தின் இயக்குநருக்குக் கடிதமாக எழுதுக.

★ அண்மையில் நான் பார்த்த சமூகக் கருத்துள்ள திரைப்படம் **அடுத்த சாட்டை**.

அன்புள்ள இயக்குநர் எம். அன்பழகன் அவர்களுக்கு,

வணக்கம்!

★ எந்நேரமும் பாக்கெட்டில் நீதிக்கதைகளையும், காலண்டர் பொன்மொழிகளையும், உத்வேக வார்த்தைகளையும் வைத்திருக்கும் கல்லூரி விரிவுரையாளராக கதைத்தலைவர் வலம்வருவது எங்கள் தமிழாசிரியை எனக்கு நினைவூட்டியது.

★ கையில் சாதிக் கயிற்றையும், மூளையில் சாதி வெறியையும் நிரப்பிக்கொண்டு அலையும் அதே கல்லூரியின் முதல்வர். இந்த இருவரால் கல்லூரிக்குள் நடக்கும் தர்ம, அதர்ம யுத்தத்தில், மாணவர்களுடன் கைகோத்து, அதர்மத்தைத் துடைத்தெறிந்து, கதைத்தலைவர் இந்த அமைப்பை எப்படி சரிசெய்கிறார் என்பதே கதையாக இருந்தது அருமை.

★ திரையில் தோன்றும் நேரமெல்லாம் திறன்மேம்பாட்டு வகுப்பெடுப்பவர்போல் அறிவுரைகளை அள்ளித் தெளிக்கிறார் கதைத்தலைவர். சினிமாவில் அறிவுரைகள், நற்கருத்துகள் சொல்வது வரவேற்கத்தக்கது. ஆனால், அதை மட்டுமே படம் முழுக்கச் செய்வது நிச்சயம் வரவேற்கத்தக்கதன்று. கல்லூரி முதல்வர் எதுகை மோனையாகப் பேசிப் பல இடங்களில் சிரிக்கவும் வைக்கிறார்.

★ கல்லூரிக்குள் தலைவிரித்தாடும் சாதிக்கொடுமை, மாணவனின் பிணத்தை வைத்துப் பணம் பறிக்கும் சாதிய இயக்கங்களின் அரசியல், கேள்வித்தாளில் நடக்கும் குளறுபடிகள் என இன்றைய கல்வி நிலையங்களில் நடக்கும் பிரச்சனைகளைக் கடைசித்தமிழனுக்கும் கொண்டுசேர்க்கும் வகையில் பேசியதற்காக 'அடுத்த சாட்டை'க்குப் பெரிய பூங்கொத்து கொடுத்து வாழ்த்துகிறேன்.

★ மாணவர்களாக நடித்தவர்களின் நடிப்பு அற்புதம். எனக்கும் அவர்களைப்போல நேர்மையான மாணவராக இருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

★ கல்விமுறையில் உள்ள குளறுபடிகளுக்குத் தீர்வு சொல்லும் முயற்சியாக 'சாட்டை', 'அடுத்த சாட்டை' என அடுத்தடுத்து சாட்டையைச் சுழற்றும், இயக்குநர் எம்.அன்பழகனுக்கு மனம்நிறைந்த பாராட்டுகள்.

★ ஆனால், அனைத்தையுமே காட்சி மொழியில் சொல்லாமல் வசனங்களாக மட்டுமே கடத்துவதுதான் படத்தின் பலவீனம். வெறும் அறிவுரைகளால் மட்டுமே எல்லோரையும் திருத்திவிடுவதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்பதாக நான் உணர்கின்றேன்.

★ குறைகள் குறைந்த, நிறைகள் நிறைந்த இத்திரைப்படம் மேன்மேலும் இதுபோன்ற பல படங்களை எடுத்து வெற்றிபெற மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துகளுடன்

ச. வளவன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க

(எ.கா.) கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் - கவிமணி

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்.

2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும்.

3. சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம்.

4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம்.

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

விடை ★ மறைமலை அடிகள் ★ தமிழ்ஒளி ★ புதுமைப்பித்தன் ★ அசோகமித்திரன்

அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக

கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக.

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

நாள் : **அக்டோபர் 2** நேரம் : **காலை 10 மணி**

இடம் : **கலைவாணர் அரங்கம், சென்னை**

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை: **திருமதி அரசி, செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்**

முன்னிலை: **திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்**

தலைமையுரை: **திரு. இமயவரம்பன், பேரிடர் மேலாண்மை இயக்குநர்**

கருத்தரங்கத் தலைப்புகள்

★ இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்

★ பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் - திரு. முகிலன்

★ நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் - திருமதி பாத்திமா

★ பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் - திரு.வின்சென்ட்

★ நன்றிரை: பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்

நாட்டுப்பண்

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அக்டோபர் 2ஆம் நாள் காலை 10 மணிக்கு பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. கருத்தரங்கம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கும். செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர், திருமதி. அரசி அவர்கள் வரவேற்புரை வழங்குகிறார். இயற்கை வேளாண் உழவர், திரு. அமுதன் அவர்கள் முன்னிலை வகிக்கிறார். பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு. இமயவரம்பன் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்.

கருத்தரங்கில், 'இயற்கை சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும்' என்னும் தலைப்பில், முனைவர் செங்குட்டுவன் அவர்களும், 'பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும்' என்னும் தலைப்பில், திரு. முகிலன் அவர்களும், 'நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல்' என்னும் தலைப்பில், திருமதி. பாத்திமா அவர்களும், 'பேரிடர் காலங்களில் செய்யக் கூடியதும் செய்யக் கூடாததும்' என்னும் தலைப்பில் திரு. வின்சென்ட் அவர்களும் தங்களது கருத்துகளை வழங்குகிறார்கள். பசுமைப்படை மாணவர் தலைவர், பர்வீன் நன்றியுரையாற்ற, நாட்டுப்பண்ணுடன் கருத்தரங்கம் நிறைவடையும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

செய்தி உருவாக்குக

கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக

வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே - 5, 2019

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் - பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே - 5ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது. உறவினர் கூட்டத்தில் தங்கவேல் - பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள் கொள்ளுப் பேத்திகள் சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.

வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா

வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள்

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு

நாள்: **05-05-2019** இடம்: **அன்பு நகர், உறையூர், திருச்சி.**

தங்கவேல் - பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை

வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு

நிகழ்வு: தங்கவேல் - பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன் - பேத்திகள், கொள்ளுப் பேரன் - கொள்ளுப் பேத்திகள் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுதல்

ஒருங்கிணைப்பாளர்: செல்வி. கண்மணி (தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி)

கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து நாளிதழுக்கான செய்தியை உருவாக்குக

செய்தி:-

சென்னை டிசம்பர் 7, தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் சார்பில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரியில் புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது. ஜனவரி 04 - 01 - 2019 முதல் 20 - 01 - 2019 வரை நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் 800க்கும் மேற்பட்ட அரங்குகளில், 12,00,000த்திற்கும் மேற்பட்ட தலைப்புகளிலான புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளன. 20,00,000 வாசகர்களும் 30,00,000 பார்வையாளர்களும் பங்கேற்கும் கண்காட்சி அனைத்து வயதினரும் கொண்டாடும் ஆனந்தத் திருவிழாவாக நடைபெறுகிறது. புத்தகக் கண்காட்சிக்கு நுழைவுக் கட்டணமாக ரூபாய் 10 வசூலிக்கப்படுகிறது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சுழி குளம்

★ சுழி குளம் என்பது சித்திரக்கவிகளில் ஒரு வகையாகும்.

★ சுழி குளம் எட்டெழுத்துக் கொண்ட நான்கு அடிச் செய்யுளாய், மேலிருந்து கீழேயும்,

★ கீழிருந்து மேலேறியும் புறம் சென்றும் முடியும்படி படிக்கத் தக்க வகையில் பாடப்படுவதாகும்.

★ கிடைமட்டமாக செய்யுளின் நான்கு அடிகளும் வருவதை முதலில் காணலாம். பின்னர் எட்டு செங்குத்தான வரிசைகளில் மேலிருந்து கீழாக முதல் வரிசையிலும் அடுத்து கீழிருந்து மேலாக எட்டாம் வரிசையிலும் இப்படி மாறி மாறி 2,7,3,6,4,5 ஆகிய வரிசைகளில் செய்யுள் அமைவதைக் கண்டு இன்புறலாம்.

➔ "தெழித்தெழு நீர்குளத் தினுட்செறிந் ததைக்கொடு
சுழித்தடங் குவபோன் றடங்குதல் சுழிகுளம்" - மாறனலங்காரம்



"நவமதி மேவிடவே
வசிகுற ளுடனட
மகுடன ருளடவி
திறனறி வருளுமே!"

பொருள்:-

★ புதிய ஒளிமிக்க அறிவினைப் பெற வேண்டுமென்றால், அறிவுச்சுரங்கமாக விளங்கும் திருக்குறளைக் கற்று அதன்வழி வாழ்க்கையை மேற்கொள்வாய்! மேலும், சிறந்த தலைவர்களின் வாழ்த்துகளையும் பெற்றுத் திறன்மிக்க பல்துறை அறிவினையும் பெறலாம்.

"பொதுமதி பலமேவு
துணிதரம் தரமே
மததவிர முதல
திரவிய நிரம்ப"

பொருள்:-

★ பல துறைகளிலும் பொது அறிவை வளர்த்துக்கொள். அது நல்லதொரு துணிச்சலைத் தரும். முனைப்பு தவிர்ந்தால் முதன்மைப் படுத்தப்படுவாய். செல்வமும் நிரம்பும்.

"கவிமுதி யார்பாவே
விலையரு மாநற்பா
முயல்வ துறுநர்
திருவழிந்து மாயா"

பொருள்:-

★ செய்யுள் இயற்றுவதில் முதிர்ச்சி அடைந்தவர் பாடல்களே விலை மதித்தற்கு அரிய பெருமை வாய்ந்த நல்ல பாடல்களாகும்; முயற்சி செய்வதில் நன்கு பொருந்தினவர் தம் செல்வம் சிதைந்து தொலையாது.

"சதிதகனடனாடி
திததிதிகாண்ஞானா
ததிதாகார்கண்ட
கதிகாகிளர்கான"

பொருள்:-

★ தாளவொத்துக்குப் பொருந்தக் கூத்தாட நின்றவனே! உண்மையான காவல் தொழிலை உனதாகக் கொண்டவனே! தயிரைத் தாகித்துண்ட கண்டத்தை உடையவனே! கிளர்ந்த கானத்தை உடையவனே! நீயே கதி, காப்பாயாக!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தோஸ்த் தமிழ் உரை +2

நான்காரைச் சக்கர வடிவம்

★ நான்காரைச் சக்கரம் என்பது சித்திரக் கவிகளுள் ஒன்று.

★ சக்கர வடிவில், ஏதேனும் ஒரு சுழற்சி முறையில் பாடலை அமைப்பது சக்கர பந்தம் என்னும் சித்திரகவியாகும்.

★ இது நான்காரைச் சக்கரம், ஆறாரைச் சக்கரம், எட்டாரைச்சக்கரம் என மூவகைப்படும்.

★ நான்கு + ஆரை + சக்கரம் = நான்காரைச் சக்கரம்



"மேனி திடமே விருமே
மேரு விளையா டுவமே
மேவ ருவோட சாருமே
மேரு சாதுதூ தினிமே"

பொருள்:-

★ காடு மேடு என்று பாராமல் நன்றாக விளையாடுவோம். அதனால், நம் உடம்பு (மேனி) திடமாகும். மேவிவரும் நோய்களும் (வடு) ஓட, இமயமலை (மேரு) போன்ற சான்றோர் பாராட்டும்படியான செய்தியும் (தூது) இனி மேவிவரும்.

"மேரு சாபமு மேவுமே
மேவு மேயுண வாலமே
மேல வாமவ னாயமே
மேய னானடி சாருமே"

பொருள்:-

★ மேருமலையையே வில்லாகக் கொள்பவன். நஞ்சையே உணவாக விரும்புபவன். உயர்ந்த உருவத்தை உடையவன். அவன் விளையாடுதற்கு இனமாய்ப் பேயைக் கொள்பவன். அத்தன்மைகளை உடைய சிவபெருமான் அடிகளைச் சேருவீர்களாக!

"வேட மாமலை நாடவே
வேட நாயக னாடவே
வேட னாரடி பாடவே
வேட பாவையு மாடவே"

பொருள்:-

★ வேடர்கள் வாழ்கின்ற திருத்தணிகை மலையினை நீ நாடிச் சென்றால், அங்கே அழகு மயிலில், வேட நாயகனான முருகப் பெருமானின் எழில் மிகுந்த நாட்டியத்தைக் காணும் பாக்கியம் நேரலாம் ! மேலும் வேடர் குலத்து மருமகனாகிய முருகனின் திருவடிகளை அங்கே கண்டு நீ போற்றிப் பாடினால், வேடர்களில் அழகுப் பாவையான குற வள்ளியும் முருகனுடன் சேர்ந்து ஆடுகின்ற காட்சியினைக் காண நேரலம் !

"வாடி தேன்பா நாடி..வா
வாடி நாளும் பாடி..வா
வாடி பார்வை யாடி..வா
வாடி யாழ்.. நீ தேடி..வா"

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பத்தியைச் சுருக்கி எழுதுக

கீழ்க்காணும் பத்தியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கென்று குறிப்பிட்ட தொகையை ஒதுக்கும் அளவிற்கு உடல் நிலையைக் கவனத்தில் கொள்ளாமல், ஓர் இயந்திர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

ருசிக்காக, சாப்பிடக் கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும் தான் பிணிகளுக்குக் காரணம். சாதாரணமாக உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. பொதுவாகவே உணவை நன்றாக மென்று விழுங்க வேண்டும். இதனால் மாவுப்பொருள் செரிமான மாதற்கு உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும். உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றிய தெளிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும்.

நமது எடை மற்றும் உயரத்தினை அவ்வப்போது சோதித்து நினைவில் வைத்தக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானது. பிறகு தங்களது எடை மற்றும் உயரத்தினைப் பொறுத்து ஆரோக்கியமான உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் முடிவெடுக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும் இடம், பருவ நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஊட்டச்சத்துகளின் தேவை மாறுபடும்.

தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

விடை

ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் போன்றவற்றால் ஒருவரின் உடல்நலம் பாதிப்படைகிறது. ருசிக்காக, சாப்பிடக் கூடாத பொருள்களைச் சாப்பிடுவதும், பசிக்காக அளவுக்கு மீறிச் சாப்பிடுவதும்தான் பிணிகளுக்குக் காரணம். புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்த உணவே சமச்சீர் உணவாகும். உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகளை அறிந்து ஆரோக்கியமான உணவினை உண்ண வேண்டும். தங்கள் உடலின் எடைக்கும் உயரத்திற்கும் ஏற்ற உணவுமுறையையும் உடற்பயிற்சியையும் பின்பற்ற வேண்டும். ஊட்டச்சத்திற்குத் தேவையான தானியங்கள், பருப்பு, பயறு வகைகள், காய் கறி, பழங்களுடன் கூடிய உணவு முறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

வல்லாரைக் கீரையும்
வடக்கு நோக்கிய தியானமும்
வாழும்வரை
நினைவாற்றலைத் தரும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடி

போ	ஏ	யா	ழ்	சு	வி	ந	க	ரு	ஞ
க்	டு	பா	டு	தே	ல்	டை	வி	ர	ளி
கு	தி	ரை	பா	ச	க	மே	தை	ம்	ச்
வ	அ	வெ	வ	மி	பா	டை	வே	க	சே
ர	ன்	ற்	டி	த்	டா	ஔ	ங்	மு	ர்
த்	பு	றி	வ	தி	ண்	வை	கை	றை	க்
து	ரு	வ	ம்	ர	தி	ஓ	லை	து	கை
ம	ன	ன	ம்	ன்	ணை	ப	ய	ணி	த
கா	வ	ல	ர்	ஒ	த	ற்	பி	ரி	வு

1. போக்குவரத்து 2. ஏடு 3. யாழ் 4. சுதேசமித்திரன் 5. கல்வி 6. நடைமேடை
7. கவிதை 8. பாடு 9. தேடு 10. விடை 11. திரை 12. மேதை
13. அன்பு 14. வெற்றி 15. வடிவம் 16. முறை 17. வைகறை 18. வடிவம்
19. துருவம் 20. மனனம் 21. பயணி 22. காவலர் 23. ஒதற்பிரிவு

துளிப்பா

ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க

(எ.கா.)

பூட்டிய
வீட்டிலும்
பூத்துச் சிரிக்கிறது
முல்லை

1. விழும்
மரங்கள்
அழியும் காடு
காட்டுத்தீ

2. அப்படியென்ன
சொல்லியது காற்று
குதித்தாடுகிறது மேகம்
தென்றல்

3. பூத்த
மலரொன்று
பறக்கிறது
வண்ணத்துப்பூச்சி

4. வானம்
அழுகிறது
பூமி சிரிக்கிறது
மழை

சுயசிந்தனை மற்றும் உயர்சிந்தனை வினாக்கள்

1. அழித்து அழித்துப் போட்டாலும்
நேராய் வராத கோடு
மின்னல்

2. அந்தரத்தில் தொங்கும்
அஜந்தா குகை
தூக்கணாங்குருவி கூடு

3. சாவே இல்லாத
சரித்திர வாத்தியார்
புத்தகம்

4. காற்றைச் சுத்திகரிக்கும்
பூமியின் நுரையீரல்
மரம்

5. வெயிலில் காய்ந்துகொண்டே
நிற்கின்றன
தண்ணீர் குடங்களுடன்
தென்னை மரம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வெட்டியும் ஒட்டியும் பேசுதல்

(ஆதரித்தும் மறுத்தும் பேசுதல்)

கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியா? **கிராமங்கள் நகரமாவது வீழ்ச்சியா?**

கிராமங்கள் நகரமாவது வீழ்ச்சியே!

★ ஒரு மனிதன் மன நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கு ஆரோக்கியமான உணவு, தூய காற்று, சுத்தமான குடிநீர், அமைதியான சூழல் போன்றவை அடிப்படை தேவைகளாகும்.

★ இவை அனைத்தும் நகர்ப்புற மக்களைக் காட்டிலும், கிராமப்புற மக்களுக்கே அதிக அளவு கிடைக்கின்றது.

★ எங்கும் இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், காடுகள், வயல்கள் இவற்றிற்கு இடையில் அமைந்த கிராமங்கள் மக்களின் மனங்களில் அமைதியான ஒரு சூழலை ஏற்படுத்துகின்றன.

★ நாட்டின் முதுகெலும்பாக விளங்கக் கூடிய விவசாய் தொழிலை மேற்கொள்ளும் உழவர்கள் கிராமப்பகுதிகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

★ நம் நாட்டின் பாரம்பரியம், பண்பாடு, பழக்க வழக்கம் போன்றவற்றைக் கிராமப்புறங்களே பாதுகாத்து வருகின்றன.

★ அன்பு, பாசம், அரவணைப்பு, விருந்தோம்பல் போன்ற உயரிய குணங்கள் கிராமப்புற மக்களிடமே அதிகமாகக் காணப்படுகின்றது.

★ இந்நிலையில், கிராமங்கள் நகரமயமாக்கப்படுவதால், காடுகளும் மலைகளும் அழிகின்றன.

★ நீர்நிலைகளை அழித்து நகரமாக்கி, பின்னர் குடிநீருக்காக குடத்தோடு தெருத்தெருவாக அலையும் நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

★ கிராமப்புறத்தின் முதன்மையான தொழிலான விவசாயம் நசுக்கப்படுகிறது.

★ இதனால், நம் நாடு கொடிய உணவு பஞ்சத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படக் கூடும்.

★ நம் நாட்டின் பாரம்பரியம் பண்பாடு, பழக்க வழக்கம் போன்றவை முற்றிலுமாக அழிவுற்றுப் போகும்.

★ வளர்ச்சி என்ற பெயரில் கிராமங்களை நகரங்களாக மாற்றிவிட்டு, மன அமைதியற்ற எந்திரத்தனமாக வாழ்க்கையையே நாம் வாழ்ந்து வருகின்றோம்.

★ எனவே, கிராமங்கள் நகரமாவது மனிதக்குலத்தின் வீழ்ச்சியே அன்றி வளர்ச்சியில்லை.

கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியே!

★ கிராமங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் விவசாயத்தைத் தவிர வேறு தொழில்களில் ஈடுபடுவதில்லை.

★ ஒரே தொழிலையே நம்பி இருப்பது ஆபத்தில் முடியும்.

★ கிராமங்கள் நகரமாக வளர்ச்சி அடையும்போது பல தொழில்கள் பெருகுகின்றன.

★ வேலைவாய்ப்பு பெருகுகின்றது.

★ மக்கள் வேலைக்குச் சென்று வருமானத்தை ஈட்டுகின்றனர்.

★ வறுமையை விரட்டுகின்றனர். மக்கள் அனைவரும் வசதியாக வாழ்கின்றனர்.

★ இன்று உலகமயமாகி வரும் நிலையில், கிராமத்தில் வாழும் மக்கள் தனித்துவிடப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள்.

★ கிராமங்கள் நகரமாக வளர்ச்சி அடையும்போது மக்களுக்கு மின்சாரம், குடிநீர், போக்குவரத்து, சாலைவசதி, இணையம், வேலைவாய்ப்பு போன்ற வசதிகள் எளியதாக கிடைக்கின்றன.

★ இதனால் மக்கள் எந்தச் சிரமமும் இன்றி வாழ்கிறார்கள். எனவே கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியே!

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

விண்ணப்பத்தை நிரப்புக

விண்ணப்ப எண் _____ மைய எண் _____

திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

இளநிலை/முதுநிலை/பட்டயம்/சான்றிதழ்/முதுநிலைப்பட்டயம்/அடிப்படைப்படிப்பு/அறிமுகநிலைப்படிப்பு/
தொழில்முறை மற்றும் இதர படிப்புக்கான விண்ணப்பம்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

கல்வியாண்டு 2019 - 2020 நாள்காட்டி ஆண்டு 2019 - 2020

க _____ நா _____

(கற்போர் தாங்களே விண்ணப்பத்தினை நிறைவு செய்தல் வேண்டும். அனைத்து விவரங்களும் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.)

விண்ணப்பிக்க விரும்பும் பாடப்பிரிவு

இளநிலை	முதுநிலை	பட்டயம்	சான்றிதழ்	முதுநிலைப் பட்டயம்	அடிப்படை நிலை	அறிமுக நிலை	பாடப்பிரிவு: தமிழ்
✓							

கட்டணம் செலுத்திய விவரம்

வரைவோலை	வங்கிச் செலுத்துச்சீட்டு	நிதிப்பிரிவு இரசீது	கணினி இரசீது
✓			

எண்: 36005 நாள்: 02-06-2019 தொகை: 5,000

1. பெயர் (தமிழில்) மு. கயல்விழி
(ஆங்கிலத்தில்) M. KAYALVIZHI

2. முகவரி
22/11, மாசிலாமணி தெரு,
திருநாகர்,
சென்னை

அஞ்சல் எண் 600017

3. தொலைபேசி எண் _____
கைபேசி எண் 8900980010

1. நகர்ப்புறம்	✓	2. கிராமப்புறம்	
3. பணிபுரிபவர்		4. பணியில் இல்லாதவர்	
5. திருமணமானவர்		6. திருமணமாகாதவர்	
7. மாற்றுத்திறனாளி			
8. அரசு ஊழியர்		9. முன்னாள் மாணவர்	

மின் அஞ்சல் முகவரி kayal03@gmail.com

4. பிறந்த நாள் 25 03 2003

5. பாலினம் ஆ பெ ✓ மூன்றாம் பாலினம்

6. தேசியம் இந்தியர்

7. தந்தை/காப்பாளர்/கணவர் பெயர்: வே. முல்லைவேந்தன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. கல்வித் தகுதி தேர்ச்சிப் பெற்ற விவரம்:

பத்தாம்/மேனிலைப்பள்ளி வகுப்பு	பதிவு எண்	தேர்ச்சி பெற்ற நாள்	அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண்கள்		பயின்ற பள்ளி
			மொத்தம்	பெற்றது	
தமிழ்	1001293	2019	100	95	
ஆங்கிலம்	1001293	2019	100	90	
வணிகக் கணிதம்	1001293	2019	100	98	
கணக்குப் பதிவியல்	1001293	2019	100	100	
வணிகவியல்	1001293	2019	100	100	
பொருளியல்	1001293	2019	100	96	

இளநிலைப் பாடம்	பதிவு எண்	தேர்ச்சி பெற்ற நாள்	அனைத்துப் பாடங்களிலும் பெற்ற மதிப்பெண்கள்		பயின்ற கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம்
			மொத்தம்	பெற்றது	
-	-	-			

உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றும், ஏதேனும் தவறு இருப்பின் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு உட்படுவேன் என்றும் இதன்வழி உறுதி கூறுகின்றேன்.

இடம்: *சென்னை - 17*
நாள்: *03-06-2019*

மு. கயல்விழி

விண்ணப்பதாரரின் கையொப்பம்

குறிப்பு:

விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட படிகள் இணைக்கப்பெற வேண்டும்.

1. மதிப்பெண் பட்டியல் (10ஆம் வகுப்பு/10+2/10+3/11+1+3/இளநிலை வரிசையில்),

2. மாற்றுச் சான்றிதழ்

3. தற்காலிகச் சான்றிதழ் (Provisional Certificate) **அல்லது பட்டச் சான்றிதழ்** (Degree Certificate)

விண்ணப்பங்களைப் பூர்த்திச் செய்யும்போது, முதலில் ஒளிப்படி எடுத்து, நிறைவு செய்யவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
மொழியோடு விளையாடு

விண்ணப்ப எண்:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113.

22542992, 9500012272 Website: www.ulakaththamizh.org Mail: iits@tn.nic.in

2020-2021ஆம் ஆண்டு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டயப் படிப்பு

விண்ணப்பம்

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் நிறுவனத்தில் சேர வேண்டிய கடைசி நாள்: 20.12.2019

விண்ணப்பதாரின் நிழற்படம்

1. பெயர் (தமிழில்) : க. வெற்றிவேல்

ஆங்கிலத்தில் (பெரிய எழுத்தில்) : K. VEETRIVEL

2. தந்தை / காப்பாளர் பெயர் : ச. கந்தன்

தந்தை / காப்பாளர் தொழில் : ஆசிரியர்

3. தொடர்பு முகவரி (தொலைப்பேசி எண்ணுடன்) :

12/7, கதிர்வேலன் தெரு,
இராயபுரம்,
சென்னை

அஞ்சல் குறியீட்டு எண்: 6 0 0 0 1 3

நிலையான முகவரி :

12/7, கதிர்வேலன் தெரு,
இராயபுரம்,
சென்னை

அஞ்சல் குறியீட்டு எண்: 6 0 0 0 1 3

4. பிறந்த நாள் :

நாள்	மாதம்	ஆண்டு
22	04	2003

5. பாலினம் :

✓ ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்

6. தேசிய இனம் :

✓ இந்தியர்	பிறர்

7. வகுப்பு :

பிற வகுப்பு	பிற்பட்ட வகுப்பு	மிகவும் பிற்பட்ட வகுப்பு	தாழ்த்தப்பட்ட வகுப்பு	மலையினம்
	✓			

விண்ணப்பப்படிவத்துடன்பத்தாம்வகுப்புமதிப்பெண்பட்டியல்/மாற்றுச்சான்றிதழ்படிகள்இணைக்கப்பெறவேண்டும்.

நாள்: 15/12/2019

இடம்: சென்னை - 13.

க. வெற்றிவேல்

விண்ணப்பதாரரின் கையொப்பம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கதையை நிறைவு செய்க

வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும்...

இயற்கையை வாழ விடுங்கள்

வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன் மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும். ஒருநாள், நான் பொம்மையிடம் ஏன் நீ அழுகின்றாய் ? எனக் கேட்டேன். அதற்கு மரப்பாச்சி சொன்ன பதில் என்னை மளைக்க வைத்தது. "தோழியே! நான் அழகாய் வேர்விட்டு வளர்ந்த வேப்பமரம். பெரிய கிளைகள் அழகிய கிளிகள், கரைந்து திரியும் காகம் என என் உறவுகளோடு வாழ்ந்து வந்தேன். இயற்கையாய் இருந்த என்னை வெட்டி பொம்மையாக்கி, செயற்கைச் சாந்துகளையும், வாசனைத் திரவியங்களையும் பூசி என் இயல்பை மாற்றிச் செயல்பட வைப்பது சரியா? என்னை நானாக இருக்க விடுங்கள்! நான் மீண்டும் மண்ணில் மலர வேண்டும்". என்றழுதது அன்றுமுதல் நான் இயற்கையைக் கெடுப்பதில்லை! செயற்கையைத் தொடுவதில்லை என முடிவெடுத்தேன். நண்பர்களே நீங்களும்தானே?

நீதி - இயற்கை இயற்கையாக இருந்தால்தான் இறைவன் நம்முடன் இருப்பான்.

படித்துப் பார்த்துப் படைக்க

மென்பறவைக் கூடு மின்றி
தின்பதற்குத் தீனியின்றி
தன் சிறிய குஞ்சுகளை
பொன் சிறகில் மூடி நின்று
நிற்கதியாம் நிலைதனிலே
நிற்க ஒரு நிழல் தேடி
பற்பலவாய் எண்ணமிட்டு
பக்கம் ஒரு மரம் கண்டு
தருவின் நிழல் கண்டு
தானியத்தின் மணி கண்டு
அருகில் தன் குஞ்சுகளை
அணைத்தங்கு சென்றதுவே
நெருங்கி வந்து பார்க்கையிலே
நிழலில்லை மணியில்லை
நெருஞ்சி முள்ளை நெல்மணியாய்
நினைத்து விட்ட பரிதாபம்
பச்சையற்ற மரத்தருகே
படர்வதுண்டோ நிழலதுவும்
பசையற்ற நெஞ்சினுள்ளே
பாசமெனும் நிழலுண்டோ? - பூரணி

தெருநாய்

மூலையிலே சுருண்டு படுத்திருக்கும்
மூன்றுகுட்டியுடன் எங்கள் தெருநாய்
ஒவ்வொரு குட்டியும் தனியழகு
ஓடியும் ஆடியும் விளையாடும்
தட்டுத் தடுமாறி நடைபழகும்
முட்டியும் மோதியும் சண்டையிடும்
கட்டிப்பிடிக்க நமக்கு ஆசைவரும்
கிட்டப்போனால் எட்டிப்போ! எனும்
தாயிக்கு மிகவும் கோபம்வரும்
நாயிக்கு பாசமும் மிக அதிகம்
பசிவந்திடும் நேரத்தில் தாய்க்கு
பாவம் முகமும் சிவந்திடுமே!
எலும்புக் கடைகளில் ஏங்கிநிற்கும்
எவரிடத்தும் பாலுக்கு பார்த்திருக்கும்
உதவும் எண்ணமும் எனக்குண்டு
உறுப்படி பணமோ ஏதுமில்லை!
ஊரில் உதவுமுள்ளங்கள் ஏதுமில்லை
ஊமைபோல் என்மனம் வாடிடுமே!

- ஜீவகாருண்யன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

புதிர்களுக்கான சரியான விடையை எழுதுக

அ) அடைமழை பெய்த அடுத்த நாள்
படைபடையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் - என்ன? **விடை** - ஈசல்

ஆ) தண்ணீரும் மழையும் இல்லாமல்
பயிர் பச்சையாய் இருக்கிறது
பாக்கு வெற்றிலை போடாமல்
வாய் சிவப்பாய் இருக்கிறது - என்ன? **விடை** - பச்சைக்கிளி

குறுக்கெழுத்துப் புதிர்

1. கு	டி	ய	ர	6. சு			ண்		ம்
ம	ட்			க	டு	ட்	21. பா		ய
ண	ஊ	14 ம	ழை	ந்			று	18. இ	19. வை
ன்		ன்	க	தி	4. அ	ஞ்	11. சி	றை	
9. ம	லை	நா	டு			ம்	10. ஜா	ம	17. ச
ர்	ந	ளு	12 ஆ	றை	3.கொ	ட	ன்	க	ர
16. வ	ள	ம	லை	து	ல்	ளி	ப	ன்	க
தி	15 க			ந்	லி	க	ன்		ம்
ந்	ட		டு	லா	5. ம	க்	ய		
ந	ல்	லி		13. ஆ	லை	20. ம	ன்	ரா	2. பி

இடமிருந்து வலம்

1. மயிலையார் கட்டுரை எழுதிய இதழ்களில் ஒன்று (5)
4. தகடூர் மன்னன் பெயரின் பின்பகுதி (3)
8. ஓய்மா நாட்டு மன்னன் பெயரின் முதல் மூன்றெழுத்து (3)
9. பொதினி மலையின் வேறுபெயர் (4)
16. பொதினி மலை இவ்வாறும் அழைக்கப்படும் (4)
14. சாந்தா தத் கதையின் பின்பாதிப் பெயர் (2)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வலமிருந்து இடம்

2. பறம்பு மலையின் இன்றைய பெயர் (5)

4. தகடூரை ஆட்சி செய்தவன் (4)

5. காரியின் நாடு எவ்வாறு மருவி உள்ளது (3)

12. போந்தியு பிலாந்து என்பவரின் பதவி (4)

21. செய்யுளின் பெயர்களில் ஒன்று (3)

மேலிருந்து கீழ்

3. வல்வில் ஓரி ஆட்சி செய்த பகுதி (5)

6. முகம் கவிதை ஆசிரியரின் முன்பாதிப் பெயர் (4)

1. தமிழுக்குத் தலை கொடுத்தவன் (4)

10. இரட்சணிய யாத்திரிகத்தின் மூலநூல் ஆசிரியர் பெயர் (6)

15. நீர்நிலையின் பெயர் (3)

17. வண்டின் வேறு பெயர் (4)

18. இயேசு பிரானை இவ்வாறும் அழைப்பர் (5)

கீழிருந்து மேல்

7. நல்லியின் நாட்டுக்கு இன்று வழங்கும் பெயர் (3)

8. மயிலையார் ஆய்வு செய்த பல்லவ மன்னன் பற்றிய நூல் (7)

13. முகம் கவிதையின் ஆசிரியர் பிறந்த ஊர் (5)

11. ஆற்றுப்படை நூல் ஒன்றின் முன்பாதிப் பெயர் (4)

19. உலகம் என்பதன் வேறு பெயர் (3)

20. நூல்களை வாங்கும் ஆற்றல் ---------- இல்லை என்று சொல்வதற்கில்லை (6)

பட்டிமன்றம்

தலைப்பு: தனி மனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? நண்பர்களா?

தலைவர் - **சாலமன் பாப்பையா**

உறவினர்களே என்னும் தலைப்பில் பேச விருப்பவர்கள் - *1. பிரியதர்ஷினி 2. கோவர்த்தனன்*

நண்பர்களே என்னும் தலைப்பில் பேச விருப்பவர்கள் - *1. பவித்ரா 2. வளவன்*

நடுவர் உரை

நம் சமுதாயத்தில் எத்தனையோ நல்லவர்கள் இருக்கின்றனர். ஆனால் நம் ஒவ்வொருவருக்கும் அவர்கள் உறவின்மூலமோ அல்லது நட்பின்மூலமோ கிட்டுகின்றனர். அந்த உறவைப் பொறுத்து அந்த மனிதனின் முன்னேற்றம் பன்படங்கு உயரும்! இப்பொழுது அந்த நல்லவர்கள் உறவினரா? அல்லது நண்பர்களா? என்பதை இச் சொற்போரில் தெளிவோம்.

முதற்கண் நண்பர்களே என்னும் அணியில் செல்வி. பவித்ரா பேச வருகிறார்!

பவித்ரா அவர்களே வருக தங்கள் பல்சுவை விருந்தினைத் தருக!

பவித்ரா - மதிப்பிற்குரிய நடுவர் அவர்களே! அன்பிற்கினிய ஆசிரிய பெருமக்களே! பாசத்திற்குரிய பெற்றோர்களே! பண்பிற்குரிய பெரியோர்களே! அன்பு பண்பும் பாசமும் நேசமும் கொண்ட அன்பு நண்பர்களே! (கைத்தட்டல் ஒலி கேட்கிறது.)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நம் வீட்டில் ஒரு நிகழ்ச்சி என்றால்உறவினர்கள் வருவார்கள் நடுவீட்டில் அமர்ந்துகொண்டு நாலு அறிவுரைகள் சொல்வார்கள் நல்லவற்றிலும் குறைகளைக் காண்பார்கள்! அதைப் பெரிதுபடுத்துவார்கள்!

இதே நிகழ்ச்சிக்கு நண்பனை அழைத்துப் பாருங்கள் ! நள்ளிரவு ஆனாலும் துணையிருப்பான். தூக்கத்தில் சாய்ந்துகொள்ள தூணாக இருப்பான். ஓடியாடி வேலைசெய்வான். எந்தக் குறையிருந்தாலும் அது ஒன்றுமில்லை என்பான்.

என் நிலையறிந்து எனக்கும் உதவி என் முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணைபுரிபவர்கள்! நண்பர்களே நண்பர்களே! நண்பர்களே எனக் கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி வணங்குகின்றேன்.

நடுவர் - அருமை ! பவித்ரா தனக்கு ஏற்பட்ட பாதிப்பையும் தன்வீட்டுச் சோகத்தை எடுத்துச் சொல்லி நட்பை உயர்த்தியிருக்கிறார்! வாழ்க வளமுடன்!

(கரவொலியும் சிரிப்பொலியும் கேட்கின்றது)

இப்பொழுது உறவே என்னும் தலைப்பில் பேசவிருக்கின்றார். செல்வி பிரியதர்ஷினி பிரியதர்ஷினியே வருக! உன் உறவுகளின் சிறப்புகளை உரையாகத் தருக!

பிரியதர்ஷினி - மதிப்பிற்குரிய நடுவர் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம்

எதிரணியில் பேசிய பவித்ரா அவர்களுக்கு ஒன்று சொல்ல விழைகிறேன். மனிதன் பிறந்தவுடனேயே நட்பு வந்துவிடுவதில்லை. உறவுகள்தாம் முதலில் வரும்! அம்மா அப்பா தாத்தா பாட்டி சித்தப்பா பெரியப்பா! போன்ற உறவுகள் நம்மைப் பாராட்டி சீராட்டி உணவூட்டி உணர்வூட்டி இன்று அழகாக மலர்ந்திருக்கின்றோம்.

அன்புக்கு அன்னை! அறிவுக்குத் தந்தை! பாசத்திற்குப் பாட்டி! நேசத்திற்குத் தாத்தா!
சின்ன சின்ன சண்டைக்குத் தங்கை, தம்பி! அழகான அதட்டலுக்கு அக்கா!
ஆபத்தில் அடிஉதைக்கு அண்ணன் தம்பி!

பெரியப்பா, சித்தப்பா, மாமா, மாமி மற்றும் நம் உறவுகளெல்லாம் மிச்சம் உள்ள உணர்விற்கு உரியவர்களே!

பிறகுதான் நட்பு மலர்கின்றது நடுவர் அவர்களே! பிறப்புமுதல் இறப்புவரை உடனிருந்து உதவுபவர்கள் உறவுகளே! உறவுகளே! என்று கூறி விடைபெறுகின்றேன். நன்றி!

நடுவர் - ஆம் உறவுகளின் மேன்மை இதுதான்.அருமை! அருமை! அடுத்தவராக செல்வன் வளவன் நண்பர்களே என்னும் அணியில் பேச வருகின்றார்.

வளவனே வருக! உம் வளமான கருத்துரையைத் தருக!

வளவன் - நடுவரையும் அவையோரையும் கருத்தின் சுவை உணர வந்துள்ள சுவைஞர்களையும் அத்தகைய நண்பர்களையும் வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

நடுவர் அவர்களே! தோழி பிரியதர்ஷினி உறவுகளைப் பற்றி உன்னதமாக எடுத்துச் சொன்னார்கள். நான் சொல்கிறேன் நடுவர் அவர்களே உலகில் எத்தனை உறவுகள் நமக்கிருந்தாலும் ஒற்றை உறவு நண்பன் இருந்தால் எந்த உறவும் நம் கண்முன் இருப்பதில்லை அந்த உறவுதான் நட்பு.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நண்பன் என்பவன் சோகத்தில் தோள் சாய்க்க தோழனாக! ஆபத்தில் ஓடிவரும் உதவியாளனாக ஆறுதல் சொல்ல அறிஞனாக! இன்பத்தை உருவாக்கும் இனியவனாக துன்பத்தில் பங்கெடுக்கும் துணைவனாக! சிரிப்பைத் தந்து மனதை ஈர்க்கும் நடிகனாக புதுமையைச் சிந்திக்க கற்றுத்தரும் சாக்ரடீஸாக! மனதின் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும் மன்னனாக மாலையிடும் நேரத்தில் மாப்பிள்ளைத் தோழனாக! என் மழலை களுக்கு நல்ல மாமனாக நான் மண்ணுக்குள் சென்றாலும் இடுகாடுவரை! வரும் இணக்கமான உறவு நட்பு! நட்பு! நட்பு! என்றுகூறி விடைபெறுகின்றேன் நன்றி! நன்றி! நட்புக்குக் கோடானகோடி நன்றி!

நடுவர் - அருமை அருமை அருமை எல்லா உறவுகளுமே உள்ளடங்கிய ஓர் உறவு அது நட்பு என்பதை அருமையாக பதிவு செய்தார் . அடுத்தவராக உறவுகளே என்னும் தலைப்பில் பேச தம்பி கோவர்த்தனன் வருகின்றார்.

கோவர்த்தனரே வருக உம் கோவையான தமிழுரையைத் தருக!

கோவர்த்தனன் - அவையோரையும் சுவைஞர்களையும் அன்பான உறவுகளையும் நல்ல நண்பர்களையும் வணங்கி என் உரையைத்தொடங்குகின்றேன்.

நடுவர் அவர்களே! பவித்ராவும் வளவனும் நண்பர்களைத் தவிர வேறு உறவுகளின் அன்பையும் ஆதரவையும் பண்பையும் பாசத்தையும் பார்த்தவர்கள் இல்லை என்று கருதுகின்றேன். நடுவரே உதிரம் கொடுத்தவள் அன்னை! நாம் உயிர்ப்புடன் இருப்பதற்குத் தந்தை!

நம் தாத்தாவைப்போலவே குணாதிசியங்களில் ஒன்றியிருப்போம் அதனால்தான் நம்மை பெயரன் என்று அழைக்கின்றனர் ! பாட்டியைப் போல் குணாதிசியங்களில் இருப்பாள் நம் தங்கை! தாயில்லாத வீட்டிற்கு ஒரு தாய்மாமன் அம்மா இல்லையெனில் மாமியோ சித்தியோ பெரியம்மாவோ நமக்குத் தாயாவர்கள். தந்தையில்லையெனில் தாய்மாமனோ, பெரியப்பாவோ, சிற்றப்பாவோ, நமக்குத் தந்தையாக இருந்து காப்பார்கள்! நண்பன் காத்திடுவானா? அவன் குடும்பத்தில் ஒன்றிவிட முடியுமா? ஊரும் பேரும் நாடும் நகரமும் எங்கும் எதிலும் சிறக்க நமக்கு என்றும் துணையிருந்து தூணகா அருகிலிருக்கும் அரணாக இருப்பது இரத்த பந்தங்களான உறவுகளே என்று கூறி என் உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

நடுவர் - அருமை! தெளிவான உரை! திகட்டாது உறவு என்பதை பதிவு செய்திருக்கின்றார். உறவோ நட்போ நாம் உயர எது துணையாக இருக்கின்றதோ? அதுவே உயர்ந்தது. சிலர் உயர்வுக்கு உறவும் சிலர் உயர்வுக்கு நட்பும் காரணமாக இருந்திருக்கும். முடிவை தொலைபேசி மூலம் 6475648 என்ற எண்ணுக்குப் பதிவு செய்ய சுவைஞர்களை வேண்டுகின்றேன். முடிவு உங்கள் கையில்.

வாழ்க வளத்துடன்! வாழ்க உறவும் நட்பும்! வாழ்க வையகம்!

அனைவரும் தொலைபேசியில் தங்கள் சார்பில் வாக்களித்து உறுதி செய்கின்றனர்.

தீர்ப்பு மக்கள் கை(பேசி)யில்

www.Padasalai.Net

நிற்க அதற்குத் தக

கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.

செயல்பாடு	சரி - காரணம்	தவறு - மாற்றம்
பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல்	**சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும்.**	-
பொதுவிடத்தில் எச்சில் துப்புதல்	-	**தவறு. குளியலறை, கழிவறை, கழிவுநீர் கால்வாய்களில் துப்பலாம்.**
வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல்	-	**தவறு. முடிந்தவரை காகிதங்களைக் கிழிப்பதைத் தவிர்க்க வேண்டும். கட்டாயம் கிழிக்க வேண்டும் என்றால், கிழித்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும்.**
இருக்கை, மேசைகளில் கிறுக்குதல்	-	**தவறு. தேவையில்லாமல் கிறுக்குவதைவிட்டு, தாளில் வரைந்துப் பார்க்கலாம்.**

அது ஒரு மழைக்காலம், அதிகளவு மழையினால் வெள்ளம் வரக்கூடிய நிலை குறித்து அரசு அறிவிப்பு வெளியாகிறது. அரசின் துண்டறிக்கை உங்கள் கைகளில்

அ) எச்சரிக்கை நடவடிக்கைகள்	ஆ) சுகாதார நடவடிக்கைகள்
வெள்ள நீருக்கு அருகே வரவோ, வெள்ளநீரில் விளையாடவோ கூடாது.	கொதிக்க வைத்த நீரையே அருந்துங்கள்.
ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்.	மூடிவைக்கப்பட்டுள்ள, சமைத்த சூடான உணவுகளையே உண்ணுங்கள்.
சாக்கடை நீர் ஓட அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள், வாய்க்கால்கள், கழிவுநீர்த் தொட்டிகள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.	சமைத்த உணவு, சமைக்கத் தேவையில்லாத உணவுகளையே உட்கொள்ளுங்கள்.
வெள்ளநீரில் பாம்புகள் மிதந்து வரும் அபாயம் இருப்பதால், முன்னெச்சரிக்கையாய்க் கைகளில் கொம்புடன் (தடி) இருங்கள்.	வயிற்றுப்போக்கு இருந்தால், அரிசிக்கஞ்சி, இளநீர், பால் கலக்காத தேநீர், மோர் பருகலாம்.
உங்கள் வீட்டில் உள்ள கழிப்பிடத் துளை மற்றும் குளியலறைத் துளை மீது மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து, தெருவில் ஓடும் வெள்ள நீர் மற்றும் கழிவுநீர் வீட்டிற்குள் புகாதபடி செய்யுங்கள்.	அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களை அணுகி உப்பு, சர்க்கரைக் கரைசல் பொட்டலங்களை வாங்கி அதைக் குடிக்கலாம்.
அறுந்த மின்கம்பிகள் மீது காலை வைக்காதீர்கள். மின் சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுது பட்டிருந்தால் அவற்றைப் பயன்படுத்தாதீர்கள். ஏனெனில் அவற்றின் வழியாக மின்சாரம் தாக்கி மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது.	சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க பிளீச்சிங்பவுடர், சுண்ணாம்புத்தூளைப் பயன்படுத்தவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறிப்புகளைப் படித்த நீங்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?

★ **பொதுமக்கள், உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவேன்.**

சூழல்	**தவிர்க்க வேண்டிய ஆடம்பரச் செலவுகள் என நீவிர் கருதுவனவற்றைப் பட்டியலிடுக**	**பொறுப்புள்ள மகனாக/மகளாக உங்கள் பெற்றோர்க்கு என்னென்ன உதவி செய்வீர்கள்?**
உங்கள் பெற்றோர், வேலைக்குச் செல்பவர்கள். அவர்களின் மாத ஊதியம் குடும்பச் செலவிற்கும் படிப்புச் செலவிற்கும் தாத்தா பாட்டியைக் கவனித்துக் கொள்வ தற்கும் மட்டும் போதுமானதாக உள்ளது. இச்சூழலில் பொறுப்புள்ள ஒரு மகனாக / மகளாகப் பெற்றோர்க்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்?	**அழகு சாதனப் பொருட்கள் வாங்குவதைத் தவிர்ப்பேன்.** **கைப்பேசி, ஈருளி வாங்கி தரச் சொல்லித் தொல்லைச் செய்யமாட்டேன்.**	**மாலை நேரங்களில், இரண்டு மணி நேரம் மருந்தகத்திலோ மருத்துவமனையிலோ பகுதிநேர வேலைக்குச் செல்வேன்.**

கீழ்க்கண்ட இடங்களில் உங்கள் செயல்பாடு எவ்வாறு இருக்கும்?

கூட்டம் நிரம்பிய பேருந்தில், நீங்கள் அமர்ந்திருக்க, உங்கள் அருகில் பெரியவர் ஒருவர் நிற்கிறார்.	**உடனே எழுந்து அந்தப் பெரியவருக்கு இடம் கொடுப்பேன்.**
பள்ளியில் உங்களுடைய தோழர் பசியுடன் அமர்ந்திருக்கிறார்.	**என்னுடைய உணவை அவனுடன் பகிர்ந்து உண்பேன்.**
கடற்கரையில் பெற்றோரிடமிருந்து பிரிந்து வழி தவறிய சிறுமி கண்ணீர்விட்டுக் கலங்குகிறாள்.	**காவலர்களிடம் தொடர்புகொண்டு, சிறுமியைப் பெற்றோரிடம் ஒப்படைக்க செய்வேன்.**

(ஆளுமைத்திறன் என்பது ஒருவரது ஒழுங்கமைந்த இயங்கியல் நடத்தை, உணர்வு, சிந்தனை ஆகியவற்றைக் குறிக்கிறது. தன்னம்பிக்கை, நேர்மறைச் சிந்தனைகள், அடிப்படை ஒழுக்கம், உடற்பயிற்சி ஆகிய அனைத்துமே ஆளுமைப் பண்புகளுள் அடங்கும்.)

இமயா இருசக்கர வாகனம் ஓட்டப் பழகுகிறாள். ஓட்டுகையில் இடையில் தடுமாறிக் கீழே விழுகிறாள் கற்றுக்கொடுக்கும் அவளுடைய அண்ணன், "உன்னால் இருசக்கர வாகனம் ஓட்ட இயலாது" என்கிறான் நீங்கள் இமயாவாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

★ கடினப்பட்டு மிதிவண்டி ஓட்டக் கற்றுக்கொண்டு, என்னால் முடியும் என்பதை நிரூபிப்பேன்.

பள்ளி ஆண்டுவிழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினருக்கு நன்றியுரை நிகழ்த்த ஆசிரியர் அழைக்கின்றார். அந்நிலையில் நீவிர் என்ன செய்வீர்?

★ உடனடியாக ஆசிரியரிடம் கேட்டு, நன்றியுரை குறிப்பைத் தயாரித்து, சிறப்பாக நன்றியுரை ஆற்றுவேன்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறிப்பேடுகள் உருவாக்குதல், சேகரிப்பு, ஏதேனும் கலை பயிலல்

கலைகளில் உங்களுக்குப் பிடித்த வடிவங்கள் எவை? காரணம் என்ன?	**சிலம்பம். உடலிற்கும் மூளைக்கும் சுறுசுறுப்பைக் கொடுப்பதால் எனக்கு சிலம்பம் பிடிக்கும்.**
நீங்கள் எந்தக் கலையில் வல்லவர்?	**சிலம்பம்**
ஏதேனும் கலை பயில நினைத்தால் உங்கள் தேர்வு எதுவாக இருக்கும்?	**ஓவியம்**
பொழுதுபோக்காகப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உண்டா? ஆம் எனில் எவையெவை எனக் குறிப்பிடுக. எ.கா. அஞ்சல் தலை, நாணயங்கள்	**ஆம். பலவகை பறவைகளின் இறகுகளைச் சேகரிக்கின்றேன்.**
பொன்மொழிகள், குறிப்புகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதிக் குறிப்பேடு தயாரிக்கும் வழக்கம் உண்டா? ஆம் எனில் அவை எத்தகையவை எனக் குறிப்பிடுக.	**ஆம். வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில் உள்ள தன்னம்பிக்கை வழங்கக் கூடியவற்றைக் குறிப்பு எடுப்பேன்.**
நாட்குறிப்பு எழுதுவீர்களா? ஆம் எனில் எத்தகைய குறிப்புகளை எழுதுவீர்கள்?	**ஆம். நாள்தோறும் நடக்கும் நிகழ்வுகளில் முக்கியமானவற்றை எழுதுவேன்.**

பொதுச்சொத்துகளைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நீவிர் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிடுக.

(நம்முடைய வீட்டின்மீது நமக்கு இருக்கும் பொறுப்பினைப்போலவே பொதுச்சொத்துகளின் மீதும் நமக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. எவையெல்லாம் பொதுச்சொத்துகள் எனப் பட்டியலிட்டு அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் கூறுக)

பொதுச்சொத்துகள்	அவற்றைப் பாதுகாக்கும் முறைகள்
அரசுப் பேருந்து	**பேருந்தின் பாகங்களை உடைத்தல், பேருந்தில் கிறுக்குதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது.**
வழிபாட்டுத் தலங்கள்	**கோவிலில் உள்ள சிலைகளைச் சேதப்படுத்தக் கூடாது. நெகிழி பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.**
பள்ளிக்கூடங்கள்	**பள்ளிக்கூடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். பள்ளிப் பொருட்களைச் சேதப்படுத்தக் கூடாது.**
மருத்துவமனைகள்	**சுகாதாரமற்ற செயல்களில் ஈடுபடக் கூடாது.**

நீவிர் செல்லும் வழியில் விபத்தினைக் காண்கிறீர்கள். விபத்திற்கான காரணங்கள் என்ன? பட்டியலிடுக. பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் எவ்விதம் உதவலாம்?

விபத்திற்கான காரணங்கள்	பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதம் உதவலாம்?
அனுமதித்த அளவைவிட வேகமாக ஓட்டுதல்.	**முதலுதவி செய்தபின் வேகமாக ஓட்டக்கூடாது என்று அறிவுரை கூறுவேன்.**
போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாததால்	**போக்குவரத்து விதிமுறைகளைக் கூறி புரிய வைப்பேன்.**
செல்போன் பேசிக்கொண்டு வண்டி ஓட்டுதல்	**வண்டி ஓட்டும்போது செல்போன் பயன்படுத்துவதைத் தவிர்க்கச் சொல்லுவேன்.**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அறிவை விரிவு செய்

இயல் 1	
பாரதியின் கடிதங்கள்	**ரா.அ. பத்மநாபன்**
இலக்கண உலகில் புதிய பார்வை	**டாக்டர் பொற்கோ**
தமிழ் அழகியல்	**தி.சு. நடராசன்**
பாரதி கட்டுரைகள்	**பாரதி**
பாரதி கதைகள்	**பாரதி**
காட்டுவாத்து	**ந. பிச்சமூர்த்தி**
நெல்லூர் அரிசி	**அகிலன்**
சுவரொட்டிகள்	**ந. முத்துசாமி**
இயல் 2	
பத்துப்பாட்டு ஆராய்ச்சி	**மா.இராச மாணிக்கனார்**
இயற்கைக்கு திரும்பும் பாதை	**மசானா /புகோகா**
சுற்றுச்சூழல் கல்வி	**ப.ரவி**
கருப்பு மலர்கள்	**நா. காமராசன்**
வானம் வசப்படும்	**பிரபஞ்சன்**
இயல் 3	
கம்பர் யார்?	**வ. சுப. மாணிக்கம்**
சக்கரவர்த்தி திருமகன்	**இராஜாஜி**
ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகள்	**ஜலாலுத்தீன் ரூமி**
வயிறுகள்	**பூமணி (சிறுகதைத் தொகுப்பு)**
சிறை	**அனுராதா ரமணன்**
புளிய மரத்தின் கதை	**சுந்தர ராமசாமி**
இயல் 4	
நீங்களும் கவிபாடலாம்	**கி.வா. ஜகந்நாதன்**
படைப்புக்கலை	**மு. சுதந்திரமுத்து**
துறைமுகம்	**சுரதா**
கவிஞராக	**அ.கி. பரந்தாமனார்**
இதுவரை	**சி. மணி**
இயல் 5	
ஒரு குட்டித்தீவின் வரைபடம் (சிறுகதைத் தொகுப்பு)	**தோப்பில் முகமது மீரான்**
ஒரு பார்வையில் சென்னை நகரம்	**அசோகமித்திரன்**
சென்னைப் பட்டணம்	**ராமச்சந்திர வைத்தியநாத்**
இராமலிங்க அடிகள் வரலாறு	**ஊரன் அடிகள்**
இயல் 6	
எனது சுயசரிதை	**சிவாஜி கணேசன்**
மெய்ப்பாடு	**தமிழண்ணல்**
காப்பியத்தமிழ்	**இரா. காசிராசன்**
அஜயன்பாலா	**உலகத் திரைப்பட வரலாறு** I, II, III
செழியன்	**உலக சினிமா** I, II, **பேசும் படம்**
அம்ஷன்குமார்	**சினிமா இரசனை**
கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்	**புதுமைப்பித்தன்**
இயல் 7	
தொல்தமிழ் எழுத்துக்கள் ஓர் அறிமுகம்	**செந்தீ நடராசன்**
முச்சந்தி இலக்கியம்	**ஆ.இரா.வெங்கடாசலபதி**
கல்வெட்டு	**(இதழ்)**
கல்வெட்டுகள் சொல்லும் கோயில் கதைகள்	**குடவாயில் பாலசுப்ரமணியன்**
நீர்க்குமிழி	**கே. பாலசந்தர்**
வெள்ளை இருட்டு	**இன்குலாப்**
முள்ளும் மலரும்	**உமா சந்திரன்**
இயல் 8	
தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்	**மயிலை சீனி. வேங்கடசாமி**
மாறுபட்டுச் சிந்திக்கலாமா?	**சிபி கே. சாலமன்**
எழு பெருவள்ளல்கள்	**கி.வ. ஜகந்நாதன்**
இரட்சணிய யாத்திரிகம்	**புலவர் சே. சுந்தரராசன்**
இயேசு காவியம்	**கண்ணதாசன்**
கோபல்ல கிராமம்	**கி. ராஜநாராயணன்**
பால்வீதி	**அப்துல் ரகுமான்**
வீரபாண்டிய கட்டபொம்மன்	**அரு. ராமநாதன்**

மொழியோடு விளையாடு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தோஸ்த் தமிழ் உரை +2

புத்தகத்திலுள்ள அனைத்து விரைவுக் குறியீட்டுச் (QR Code) செய்திகளையும் காண இங்கே ஸ்கேன் செய்யவும்.

பொதுத்தேர்வுக்கான நேர மேலாண்மை

☞ மொத்த கால அளவு **15** நிமிடங்கள் + **180** நிமிடங்கள்

☞ வினாத்தாள் முழுவதையும் படிப்பதற்கு **15** நிமிடங்கள்

வினாப் பகுதிகள்	விடைகளின் அளவு	நேரம் ஒதுக்கீடு
ஒரு மதிப்பெண் பகுதி **14 x 1 = 14**	ஒற்றைச் சொல்	**14** நிமிடங்கள்
இரண்டு மதிப்பெண் பகுதி **3+3+7 = 12 12X 2 = 24**	மூன்று வரிகள் (**18** சொற்கள் முதல் **22** சொற்கள் வரை)	ஒவ்வொரு விடைக்கும் **4** நிமிடங்கள் ஆகும். **12X4 = 48** நிமிடங்கள்
நான்கு மதிப்பெண் பகுதி **2+2+3 = 7**	ஆறு வரிகள் (**36** சொற்கள் முதல் **48** சொற்கள் வரை)	ஒவ்வொரு விடைக்கும் **8** நிமிடங்கள் ஆகும் **7x8 = 56** நிமிடங்கள்
ஆறு மதிப்பெண் பகுதி **1 + 1 + 1 =3**	இருபது வரிகள் (**80** சொற்கள் முதல் **120** சொற்கள் வரை)	ஒவ்வொரு விடைக்கும் **15** நிமிடங்கள் ஆகும் **15X3= 45**
மனப்பாடப்பகுதி **1 + 1 = 2**	செய்யுள் பகுதி **4** அல்லது **6** வரிகள் திருக்குறள் **2** வரிகள் நூல்- ஆசிரியர் பெயர்கள் பாவகை குறிப்பிடவும்	4 வரிப்பாடலுக்கு **6** நிமிடம் 2 வரித்திருக்குறளுக்கு **4** நிமிடம் பெயர்கள் பாவகைக்கு **2** நிமிடங்கள்

☞ விடைகளைச் சரிபார்க்க **5** நிமிடங்கள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தோஸ்த் தமிழ் உரை +2

பொதுத்தேர்வு வினாத்தாள் - 2019 - 2020

காலம் -15 3.00 **பொதுத்தமிழ்** **மதிப்பெண் - 90**

அறிவுரைகள்: *(1)* அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா? என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) நீலம் அல்லது கருப்புமையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14 x 1 = 14**

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல்
அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சன் ஈ) துறைமுகம்

2. காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இந்தத் தொடரில் 'கலன்' என்ற சொல்லின் பொருள்
அ) வேளாண் கருவி ஆ) போர்க் கருவி இ) தச்சுக் கருவி ஈ) இசைக் கருவி

3. மாதவி பெற்ற பட்டம்
அ) நாட்டியப் பேரொளி ஆ) நர்த்தகி இ) தலைக்கோலி ஈ) நாட்டியமயூரி

4. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள்
அ) பத்து நாடுகள் ஆ) எட்டு நாடுகள் இ) ஐந்து நாடுகள் ஈ) பதினெட்டு நாடுகள்

5. த.ந. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்
அ) கிறித்தவமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும் இ) இசுலாமும் தமிழும் ஈ) சமணமும் தமிழும்

6. இராமலிங்க அடிகள் இயற்றிய நூல்
அ) திருவருட்பா ஆ) திருவாசகம் இ) திருக்குறள் ஈ) திருமந்திரம்

7. 'காய்நெல்' - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு
அ) உம்மைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை

8. முதல் கல் - என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) குலோத்துங்கச் சோழன் ஆ) உத்தம சோழன் இ) இராசராச சோழன் ஈ) இராசேந்திர சோழன்

9. பிழையற்ற தொடரைக் கண்டறிக.
அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான். ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது
இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது
ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

10. சுரதா நடத்திய கவிதை இதழ்
அ) விண்மீன் ஆ) இலக்கியம் இ) காவியம் ஈ) ஊர்வலம்

11. 'பொய்யா வானம்' - இலக்கணக் குறிப்பு தருக.
அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) வினைத்தொகை
இ) உரிச்சொல் தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்

12. அருங்கானம் - புணர்ச்சி விதி தருக.
அ) ஈறுபோதல், தன் ஒற்று இரட்டல் ஆ) ஈறுபோதல்
இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்

13. மறைத்துச்சொல்லவும்,மிகுத்துச்சொல்லவும்,அழுத்திச்சொல்லவும்பயன்படுத்தியஇலக்கியஉத்திஎது?
அ) தொன்மம் ஆ) குறியீடு இ) படிமம் ஈ) அங்கதம்

14. காப்பியம் எத்தனை வகைப்படும்?
அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஐந்து

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3 x 2 = 6**

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16. விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு நடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார்?

17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.

18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 x 2 = 4**

19. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.

20. சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக.

21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

பிரிவு - 3

22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.

ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கோயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?

23. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும், சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

அ) முன் ஆ) தானே

24. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.

தின்மை - திண்மை

25. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) பனைமட்டையில் கூரை வைத்திருந்தனர்.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

26. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.

அ) அச்சாணி இல்லாத தேர் போல ஆ) நகமும் சதையும் போல

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.

ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) அமர்ந்தனன் ஆ) செய்த

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) எத்திசை ஆ) செந்தமிழே

30. ஈரசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தோஸ்த் தமிழ் உரை +2

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 x 4 = 8**

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. அதிசயமலரில் பூச்செடி எவ்வாறு முளைத்துள்ளதாக தமிழ்நதி கூறுகிறார்?

33. அதியமானின் ஈகைப் பண்பை சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. **2 x 4 = 8**

35. கலைமுழுமை என்றால் என்ன? விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை வாரியம் - விளக்குக.

37. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3 x 4 = 12**

39. ஏகதேச உருவக அணி (அல்லது) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் (அல்லது) ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

43. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

பகுதி - IV **3 x 6 = 18**

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

(அல்லது) ஆ) எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) சங்ககால கல்வெட்டை அறிந்துகொள்ள புகழூர் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது) ஆ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என்பதை நிறுவுக.

பகுதி V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. **4 + 2 = 6**

அ) "துன்பு உளது..." எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "செயல்" என முடியும் குறள்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தமிழ்க்குறிப்புகள்

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com